VISIT…

Read Adobe Acrobat 4.0 & More

Konal Pages Part 2

கூவாகம்

கூவாகத்தில் ஆண்டுதோறும் நடக்கும் அலிகள் திருவிழாவுக்குச் செல்ல வேண்டும் என்று பல ஆண்டுகளாக நினைத்து வந்தது இப்போது தான் நிறைவேறியது.

மகாபாரதத்தில் பாரதப் போரில் பாண்டவர்கள் வெற்றிபெற 32 சாமுத்ரிகா லட்சணங்களும் பொருந்திய ஒரு ராஜகுமாரனை களப்பலி இட வேண்டும் என்று சாஸ்திர விற்பன்னர்கள் கூறினர். அதன்படி பார்த்தபோது பாண்டவர் தரப்பில் இரண்டு பேர் மட்டுமே களப்பலிக்குத் தகுதியானவர்களாக இருந்தனர். ஒருவன் கிருஷ்ணன். மற்றொருவன்,அர்ச்சுனனுக்கும், நாக கன்னிகைக்கும் பிறந்த அரவான். 'என்னையே களப்பலி கொடுங்கள்' என முன் வந்தான் அரவான்.

களப்பலி கொடுப்பதற்கு முன்பு, 'உனக்கு ஏதேனும் இறுதி ஆசை இருந்தால் சொல்' என்று அரவானிடம் கேட்கிறான் கிருஷ்ணன்.

அதற்கு அரவான் ஸ்திரீ இன்பம் என்றால் என்னவென்றே தெரியாது எனவும், தான் பலியாவதற்கு முன்பு ஒரு ஸ்திரீயுடன் போகம் கொள்ள வேண்டும் எனவும் கூறுகிறான். களப்பலியாகப் போகும் அரவானை மணந்து கொள்ள எந்தப் பெண்ணும் முன்வரவில்லை. அதனால் கிருஷ்ணன் பெண் ரூபம் கொண்டு அரவானை மணம் செய்து கொள்கிறான். மறுநாள் அரவான் பலியிடப்படுகிறான். பெண் ரூபம் கொண்ட கிருஷ்ணன் தாலியறுக்கிறான்.

இந்தியா முழுவதும் உள்ள அலிகள் சித்ரா பௌர்ணமியை ஒட்டி கூவாகத்தில் கூடுகிறார்கள். தங்களை கிருஷ்ணனின் வாரிசாகக் கருதி இங்குள்ள கூத்தாண்டவர் கோவில் பூசாரியின் கைகளால் தாலி கட்டிக் கொள்கிறார்கள்.

மொத்தம் பதினைந்து நாட்கள் நடக்கும் கூவாகம் திருவிழாவில் தாலி கட்டிக் கொள்ளும் நிகழ்ச்சியே முக்கியமானது. கொடியேற்றம் நடந்த பதினான்காம் நாள் இரவு இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. அலிகள் புது மணப் பெண்களைப் போல் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். பட்டுப்புடவை, கை நிறைய வளைகள், தலை கொள்ளாத பூ.

பூசாரி கையால் தாலி கட்டிக் கொண்டவுடன் ஒரே கூத்தும் கும்மாளமுமாக கும்மியடித்து ஆடிப்பாடுகிறார்கள்.இரவு முழுதும் கொண்டாட்டம் தொடர்கிறது.

விழுப்புரத்திலிருந்து சுமார் 30 கி.மீ. தூரத்திலுள்ள ஒரு குக்கிராமம் கூவாகம். பத்து குடிசைகள் கூட இல்லை. அவ்வளவு சிறிய கிராமத்தில் ஒரு லட்சம் பேர் கூடியிருக்கிறார்கள். அதில் பாதிப்பேர் அலிகள். மற்றவர்கள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து வந்த மக்கள்.

வயல் வரப்புகள் எங்கும் அலிகள் கூட்டம் கூட்டமாக ஆடிப்பாடிக் கொண்டிருக்கிறார்கள். பல அலிகள் பெண்களை விடவும் அழகாக இருக்கிறார்கள். முந்தின நாள் நடந்த அழகிப்

போட்டியில் முதலிடம் பெற்ற பெங்களூர் ரஞ்சிதாவும், இரண்டாவதாக வந்த ஈரோடு மதுமிதாவும் உலகின் நம்பர் ஒன் மாடல் நோமி கேம்பெல்லை விடவும் அழகாக இருந்தனர்.

பலரிடமும் பேசிக் கொண்டிருந்தேன். எல்லாமே ஒரு நாவல் அளவு விரியக் கூடிய கதைகள்.

செக்ஸ் பற்றிய எந்தக் கூச்சமுமின்றிப் பேசினார்கள். மிகவும் நட்பாக இருந்தார்கள். கை குலுக்கியும் தோள் மீது கை வைத்தும், வெகு நாட்கள் பழகியது போல் பேசினார்கள்.

ஒரு அலி சொன்னார், தனக்கு ஒன்பதாவது வயதில் பெண்ணைப் போன்ற உணர்வுகள் தோன்றியதாகவும் அதற்கு மேல் பள்ளிக்குச் செல்வது தடை பட்டதாகவும், எல்லா அலிகளுமே பொதுவாகச் சொன்ன ஒரு விஷயம். சமூகத்தில் தங்களுக்கு எவ்வித மரியாதையும் இல்லை என்பது, ஈவ் டீசிங் காரணமாக வாரம் ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ளும் தமிழ்நாட்டில் அலிகளின் நிலையைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

வாடகைக்கு வீடு கிடைப்பதில்லை, பேருந்துகளில் செல்ல முடியவில்லை, தனியாக நடமாட முடிவதில்லை, ரேஷன் கார்டு இல்லை, கிண்டல் செய்பவர்களைப் பற்றி போலீசிடம் புகார் செய்ய முடிவதில்லை (செய்தால், போலீசாரே சிரிக்கின்றனர்), வேலை கிடைப்பதில்லை, மூன்று வேளை உணவுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இதனால் வேறு வழியின்றி விபச்சாரத்திற்குத் தள்ளப்படுகிறோம் என்கிறார்கள் பலர்.

ரஞ்சினி என்ற அலி மும்பையில் ஒரு இரவு விடுதியில் நடனமாடுவதாகச் சொன்னார். அவருடைய வாழ்க்கை தனிக்கதை.

அலிகள் தாலி கட்டிக்கொள்ளும் நிகழ்ச்சியில் அலிகள் மட்டுமே பங்கேற்பதில்லை. சுற்றுப்புற கிராமங்களிலுள்ள ஆயிரக்கணக்கான ஆண்களும் நேர்த்திக் கடனுக்காக தாலி கட்டிக் கொள்கிறார்கள். கைகளில் வளையல் அணிந்து கொள்கிறார்கள். பல இடங்களில் பெண்கள் தத்தம் கணவன்மார்களுக்கு புடவை கட்டி விடுவதைப் பார்த்தேன். ஒரே ஒரு நாள் அந்த ஆண்கள் பெண்களாக மாறுகிறார்கள். கூத்தாண்டவர் கோவில் வாசலில் அரவானின் உருவச்சிலையை அமைக்கும் பணி இரவு முழுவதும் நடைபெறுகிறது. மரத்தாலான பதினெட்டு அடி சிலை இது. தனித்தனி பாகங்களாகச் செய்யப்பட்டு இணைக்கப்பட்ட அந்தச் சிலை பூக்களால் அலங்கரிக்கப்பட்டு தேரில் வைக்கப்படுகிறது.

காலை ஏழு மணி அளவில் தேர் அழிகளம் நோக்கிப் புறப்படுகிறது. அதுவரை-அதாவது இரவு முழுதும் தேரின் எதிரே அம்பாரமாய்க் குவிந்து கிடக்கும் கற்பூரத்தை ஏற்றி, அதைச் சுற்றிலும் கும்மியடித்து ஆடிப்பாடிக் கொண்டிருந்த அலிகள், தேர் புறப்பட்டதும் ஒப்பாரி வைத்து அழ ஆரம்பிக்கின்றனர். 'போறாரே போறாரே எங்க சாமி அழிகளம் நோக்கிப் போறாரே' என்று கதறிய படி தேரின் பின்னால் ஓடுகின்றனர்.

கோவிலில் இருந்து அழிகளம் ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. வயல் வரப்புகளைத் தாண்டி குறுக்கு வழியில் அழிகளம் நோக்கிச் செல்கிறேன். அரவான் வந்துசேர மதியத்திற்கு மேலாகிவிடும் என்கின்றனர்.

அழிகளத்தில் பெரியதொரு ஆலமரம் நிற்கிறது. அதன் கீழே ஒரு பூசாரி.அங்கே வந்து சேரும் அலிகளின் கை வளையல்களை உடைத்து தாலியை அறுக்கிறார். அறுபட்ட தாலிகள் ஒரு கொடிமரத்தில் குவிகின்றன. பூக்களையும் மாலைகளையும் அறுத்து எறிகின்றனர். அலிகள் கூந்தலை விரித்துப் போடுகின்றனர். அவர்களையும் மீறி அழுகை

வெடிக்கிறது. வாழ்வில் ஒரு இரவு மட்டுமே பெண்ணாக வாழ முடிந்த அவர்கள் தங்கள் கணவனை இழந்து, வாழ்வை இழந்து மீளாத் துயரில் மூழ்குகின்றனர்.

ஒப்பாரிப் பாடல்கள் அந்தப் பிராந்தியமெங்கும் காற்றின் அலைகளில் பரவுகின்றன. மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு மிக நீண்ட ஒப்பாரிப் பாடல்களைப் பாடியபடி வட்டமாகச் சுற்றிச் சுற்றி ஓலமிடுகின்றனர்.

நேர்த்திக் கடனுக்காக தாலி கட்டி, புடவை கட்டி, வளையல் போட்ட ஆண்களும் தாலியறுத்து வளையலை உடைத்துவிட்டு மலங்க மலங்க விழித்தபடி ஒன்றும் புரியாமல் நிற்கின்றனர்.

ஒரு லட்சம் பேர் பங்கேற்ற கிரேக்கத் துன்பவியல் நாடகம் ஒன்றைப் பார்த்தது போன்ற பிரமையில் வயல் வரப்புகளினூடே திரும்பி நடக்க ஆரம்பிக்கிறேன் நான்...

தமிழ் இலக்கியச் சூழலும் தமிழக அரசியலைப் போலவே மாசுபட்டுக் கிடக்கிறது. இது ஒரு சமீபத்திய உதாரணம். ஒரு பத்திரிகையில் சமகாலத்திய தமிழ்ச் சிறுகதைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக ஒரு மாதம் இரவு பகலாகப் படிக்க வேண்டியிருந்தது. ஆனால் கட்டுரை வெளிவந்ததும் என் மீது ஒரே அம்பு மழை! (கணினியில் அன்பு மழை என்று தட்டி விடாதீர்கள் நண்பரே!) எல்லாத் திசைகளிலிருந்தும் அம்புகள்...

ஒரு பத்திரிகையில் என் கட்டுரைக்காக மூன்று பக்கங்களை ஒதுக்கி-ஆனால் மறதியாக கட்டுரையை விட்டுவிட்டு என் மீது கடும் தாக்குதல். அதன் சாரம் என்னவென்றால் நான் ஒரு அலி! அதாவது, **sexual impotence** காரணமாகத்தான் பாலியல் கதைகளாக எழுதி வருகிறேனாம்! இதையே விரிவாக விளக்கி மூன்று பக்கங்கள். அவந்திகாவிடம் வருத்தமாகச் சொன்னேன். 'நானிருக்க பயமேன் கண்ணே!' என்று ஆறுதல் சொன்னாள்.

மற்றொரு இணைய தள பத்திரிகையில், குறிப்பிட்ட என் கட்டுரையை முன் வைத்து என் மீது கடும் வசைகள், அவதூறுகள். இதைச் செய்திருப்பவர் தமிழின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர். அவர் என்னைப் பற்றி அவதானித்துக் குறிப்பிட்டிருக்கும் ஒரு கருத்து-நான் எந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறேனோ அந்தப் பத்திரிகையை சிலாகித்து, அந்தப் பத்திரிகைக்கு ஏற்றாற்போல் எழுதுவேன் என்பது.

இந்த இடத்தில் நான் ஒரு உண்மையைச் சொல்லிவிட விரும்புகிறேன். நான் எழுதி வரும் இந்தக் கோணல் பக்கங்களைப் பலரும் நேரில் பாராட்டிச் சொல்கின்றனர். ஆனால் ஈ-மெயிலில் இதை விமர்சித்தே கடிதங்கள் வருகின்றன. ஒருவர் இந்தப் பக்கங்களை நிறுத்திவிடச் சொல்லி ஆசிரியருக்கு சிபாரிசு செய்திருந்தார்.

நிலமை இப்படியிருக்கிறது. பொதுவாகவே நான் **mainstream** கருத்துக்களுக்கு எந்தவிதத்திலும் ஒத்துப் போகாதவன். இந்தப் பக்கங்களை வாசிப்பவர்கள் இதை மிக எளிதில் புரிந்துகொள்ள முடியும்.

இதேபோல் மற்றொரு சம்பவம். எனக்கு வாஸந்தியின் சிறுகதைகள், குறுநாவல்கள் மிகவும் பிடிக்கும். குறிப்பாக அவர் இந்தியா டுடேவில் எழுதிய கதைகள். அசோகமித்திரனுக்கு அடுத்தபடியாக, பெண்களைப் பற்றிய மிக முக்கியமான கதைகள் அவை. அம்பையின் கதைகளைவிட இலக்கிய ரீதியாக வெற்றி பெற்றவை.அதிலும் குறிப்பாக அம்பையின் கதைகளில் தெரியும் துவேஷம் வாஸந்தியின் கதைகளில்

கிடையாது. என்றாலும் வாஸந்தியின் கதைகளைப் பற்றி யாரும் குறிப்பிடுவதில்லை. காரணம். அவர் சிறு பத்திரிகைகளில் புழங்கியதில்லை. நான் குறிப்பிடும் அவரது கதைகள் வெகுஜனப் பத்திரிகையான இந்தியா டுடேவில் வெளிவந்தவை.

வாஸந்தியின் கதைகள் பற்றி நேர்ப் பேச்சில் நண்பர்களிடம் நான் பலமுறை குறிப்பிட்டதுண்டு. ஆனாலும் சம காலத்து சிறுகதைகள் பற்றிய என் கட்டுரையில் வாஸந்தி பற்றிக் குறிப்பிடவில்லை. இதுபற்றி என் நண்பர் ஒருவர் கேட்டார். வருத்தப்பட்டார். எனக்கும் வருத்தம்தான். 'என்ன செய்வது? சூழல் அப்படி' என்றேன்.

என் கட்டுரை வெளியான பத்திரிகையில் தான் வாஸந்தி வெகுகாலம் ஆசிரியராக இருந்தார். அதுமட்டுமல்ல, அதே பத்திரிகையில் தான் நானும் ஒரு வேலைக்கு விண்ணப்பித்திருந்தேன். இந்தச் சூழ்நிலையில் வாஸந்தியின் பெயரை என் கட்டுரையில் குறிப்பிட நான் உண்மையிலேயே தயங்கினேன். பாருங்கள், ஒரு கட்டுரை எழுத எதைப் பற்றியெல்லாம் பயப்பட வேண்டியிருக்கிறது! இன்னொரு வேடிக்கை-அதே பத்திரிகையில் சம காலத்துச் சிறுகதைகள் பற்றி ரவிக்குமாரின் கட்டுரையும் வந்திருந்தது. 'கட்டுரை படித்தீர்களா?' என்று கேட்டார் ரவிக்குமார். 'அது கட்டுரையே அல்ல; டெலிஃபோன் டைரக்டரி' என்றேன் நான். அந்த அளவுக்கு தமிழில் எழுதுகிற அத்தனை பேரின் பெயரும் அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் அப்படிப்பட்ட டைரக்டரியில் கூட '**V**' வரிசையில் வாஸந்தியின் பெயர் மிஸ்ஸிங். ஏனென்று கேட்டனர் நண்பர்கள். 'இளந்தலைமுறையினர் பற்றிய கட்டுரை ஆயிற்றே' என்றார் ரவிக்குமார். 'அப்படியானால் ராஜம் கிருஷ்ணன் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்களே, அவர் இளம் தலைமுறையா?' என்று மடக்கினார் நண்பர்.

''சரி, அப்படியானால் ஒன்று செய்வோம். '**Writers Who's Who**' என்று ஒரு பட்டியல் தயாரிப்போம். கட்டுரையை மட்டும் எழுதிவிட்டு பின்னால் அனுபந்தமாக இந்த **Writers Who's Who**வை அப்படியே பிரசுரித்து விடுவோம், பிரச்னையே இருக்காது'' என்றார் ரவிக்குமார்.

'அருமையான யோசனை' என்றேன்.

நரேந்திர மோடியும் நாஜி ஜெர்மனியும்

நாடாளுமன்றத்தில் நடந்து வரும் அமளி துமளி பற்றி சமீபத்தில் இரண்டு பேர் மிகவும் கவலைப்பட்டிருக்கின்றனர். ஒருவர் சோ. இவரது கவலைகள் பற்றி எனக்கு அக்கறையில்லை. ஆனால் அந்த இரண்டாவது நபரின் கவலை பற்றி நாம் கவலைப்பட வேண்டியுள்ளது. காரணம் அவர் தமிழ் இலக்கிய உலகில் 50 ஆண்டு காலமாக விமர்சகர் என அறியப்படுபவர். பெயர்: வெங்கட் சாமிநாதன். இவர்தான் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினர் செய்து வரும் ரகளை பற்றி மிகவும் விசனப்பட்டிருக்கிறார். பல கோடி ரூபாய்கள் வீணாய்ப் போகிறதாம்.த்சொ.த்சொ.

‘ரகளை செய்பவர்களை அவைத் தலைவர் ஏன் மன்றத்தை விட்டு வெளியேற்றக் கூடாது? ஏன் குண்டுக்கட்டாகத் தூக்கி சபைக்கு வெளியே போடக்கூடாது?‘ என்று நாடாளுமன்ற அவைத்தலைவருக்கு அரிய யோசனையெல்லாம் வழங்கியிருக்கிறார் வெ.சா. கலை இலக்கியக் காவலராக இருந்த அவர் திடீரென்று இன்று நாடாளுமன்றக் காவலராக மாறியிருப்பதற்கு நம்முடைய வாழ்த்துக்கள்.

ஆனால் நாடாளுமன்றத்தில் இவ்வளவு கூச்சல் குழப்பத்திற்கும் காரணம் என்ன என்று பார்த்தால் அங்கே தான் வேறொரு பூதம் கிளம்புகிறது. குஜராத் முதல்வர் நரேந்திரமோடி பதவி விலக வேண்டும் என்பதற்காகத் தான் இவ்வளவு கூச்சலும் குழப்பமும்!

ஒரு அரசு ஊழியர் நூறு ரூபாய் லஞ்சம் வாங்கினால் அவரை வேலையை விட்டுத் தூக்க முடியும். சட்டம் அத்தனை கடுமையாக உள்ளது. ஆனால் குஜராத்தில் கடந்த இரண்டு மாதங்களில் நடந்த கலவரத்தில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டோர் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கின்றனர்(இன்றைய தேதியில் எண்ணிக்கை மூவாயிரத்தை எட்டியுள்ளது).ஆயிரக்கணக்கான பெண்கள் பாலியல் வன்புணர்ச்சி செய்யப்பட்டிருக்கின்றனர். ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் அகதிகளாகியிருக்கின்றனர். சொந்த ஊரில் சொந்த நாட்டில் வாழமுடியாத நிலைமை!

இக்பால் ஜாஃப்ரி ஒரு முன்னாள் காங்கிரஸ் எம்.பி. அவர் வீட்டில் ஒரு கும்பல் நுழைந்திருக்கிறது. அவர் வீட்டுக்குப் பாதுகாப்பாக அங்கே வேன்களில் இருந்த போலீஸ்காரர்கள் இதைக் கண்டுகொள்ளவில்லை. எம்.பி.யின் கண் முன்பாகவே அவரது பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டு பின்னர் கொளுத்தப்பட்டுள்ளனர். பிறகு இக்பால் ஜாஃப்ரியின் தலை வெட்டப்பட்டு அவரது உடலும் துண்டாடப்பட்டிருக்கிறது.

கலவரக்காரர்களெல்லாம் வெறும் ரவுடிகளோ காலிகளோ அல்ல. மத்திய தர வர்க்கத்தினர். கையில் செல்போன்களுடன் கலவரத்தை 'ஒருங்கிணைத்திருக்கின்றனர்'. முஸ்லீம்களின் வியாபார ஸ்தலங்களுக்கு கேஸ் சிலிண்டர்கள் நிரப்பப்பட்ட லாரிகளுடன் வந்து கொளுத்தியிருக்கின்றனர். இதற்காக அவர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு!

'கோத்ரா ரயில் பெட்டியில் 69 பேர் உயிரோடு எரிக்கப்பட்டதற்கான எதிர்வினையே இது' என்கிறார் மோடி. ஆனால் இரண்டுக்கும் அடிப்படையில் வித்தியாசம் இருக்கிறது. கோத்ரா சம்பவம் திடீரென்று நடந்த ஒன்று. ஆனால் அதற்குப் பிறகு நடப்பதெல்லாம் அரசாங்கத்தின் உதவியோடு நடக்கும் திட்டமிட்ட படுகொலை **(State Sponsored Pogrom)**.

நாஜி ஜெர்மனியில் யூதர்களுக்கு நேர்ந்த கொடுமை தான் ஞாபகம் வருகிறது.

ஒரு சம்பவம். மதிய வேளையில் ஒரு தம்பதி ஸ்கூட்டரில் வந்து கொண்டிருக்கின்றனர். அப்போது ஐம்பது பேர் கொண்ட கும்பல் ஸ்கூட்டரை நிறுத்துகிறது. கும்பலின் கைகளில் வாள், அரிவாள், திரிசூலம், கத்தி போன்ற ஆயுதங்கள். ஸ்கூட்டரை ஓட்டி வந்த நபரின் பெயரைக் கேட்கிறது கும்பல். அந்த நபர் ஏதோ ஒரு இந்து பெயரைச் சொல்கிறார். கும்பலுக்கு நம்பிக்கையில்லை. ''பேண்ட்டைக் கழற்று'' அடுத்த கணம் அந்த நபரின் மீது பாய்கிறது திரிசூலம்.

அவர் பெயர் முன்னா பாய். வயது 28. சந்தர்ப்பவசமாகப் பிழைத்து விட்டதால் இப்போது மருத்துவமனையில் கிடக்கிறார். ஆனால் அவர் மனைவி மும்தாஜ் பானுவுக்கு அந்த அதிர்ஷ்டம் இல்லை. அந்தக் கும்பல் அவரை நிர்வாணமாக்கி அவரது பிறப்புறுப்பில் தொடர்ந்து கத்தியால் குத்திக் கொன்று விட்டது.

மற்றொரு இடம். 5000 பேர் கொண்ட கும்பல். அவர்களுக்கு நடுவே ஒரு பெண். அத்தனை பேருக்கும் எதிரே அப்பெண் பலராலும் தொடர்ந்து வன்புணர்ச்சி செய்யப்பட்டு தீயில் தூக்கியெறியப்படுகிறாள்.

இந்தக் கலவரத்தில் மாட்டிக்கொண்டு அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்து சென்னை திரும்பிய என் நண்பர் ஒருவர் சொன்ன சம்பவம். சுற்றிவர பெட்ரோல் கேன்களுடன் கலவரக்காரர்கள். நடுவில் உயிர்ப் பீதியில் நண்பர். 'நீ யார்? பேர் என்ன?' என்று கேட்டிருக்கின்றனர். பெயரைச் சொல்லியிருக்கிறார் நண்பர். அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. வழக்கம் போல் பிறப்புறுப்பை பரிசோதித்த பிறகே அவரை விட்டுச் சென்றிருக்கிறது கலவரக் கூட்டம். இதைக் கேட்டதும் நான் நடுங்கிப் போனேன். ஏனென்றால் மருத்துவக் காரணங்களுக்காக நான் **circumcission** செய்து கொண்டவன். நண்பரின் இடத்தில் நான் இருந்திருந்தால்... நினைத்தாலே குலை நடுங்குகிறது.

இதுபோல் ஒன்றல்ல, இரண்டல்ல, ஆயிரக்கணக்கான சம்பவங்கள். எல்லாவற்றுக்கும் சான்றுகளும் ஆதாரங்களும் இருக்கின்றன. சில டாக்யுமென்ட்ரி படங்கள் கூட எடுக்கப்பட்டுள்ளன. மனித உரிமை கமிஷனைச் சேர்ந்தவர்களும் நேரில் பார்த்துவிட்டு இதைத்தான் உறுதிப்படுத்தியிருக்கின்றனர்.

நான்கு தினங்கள் ஒரு பொந்தில் ஒளிந்து கிடந்து தப்பித்து தில்லிக்கு அகதியாக ஓடி வந்துள்ள ரேஷ்மா பென் என்ற பெண் சொல்லியிருக்கும் சம்பவம் இது:

முதலில் அவர்கள் ஒரு பத்து வயதுப் பெண்ணைக் கற்பழித்தார்கள். பிறகு எனக்குத் தெரிந்த கௌஸர் பானு என்ற கர்ப்பிணிப் பெண்ணை மாற்றி மாற்றி ஒரு கும்பலே

கற்பழித்தது. பிறகு அவள் வயிற்றை அரிவாளால் வெட்டினார்கள். வெளியில் வந்து விழுந்த குறைமாதக் கருவை எரியும் தீயில் தூக்கிப் போட்டார்கள். பிறகு அவளையும் கண்டதுண்டமாக வெட்டி தீயில் போட்டார்கள்.

தப்பிப் பிழைத்து ஓடி வரும் அகதிகள் சொல்லும் சம்பவங்கள் அனைத்தும் ஒரே மாதிரி இருக்கிறது. பெண்களின் வயிற்றைக் கத்தியால் கிழித்து எரியும் துணிப் பந்தை அதற்குள் திணிப்பது; கத்தியால் முஸ்லீம்களின் நெற்றியில் 'ஓம்' போடுவது... இதையெல்லாம் முன்னின்று நடத்துவது எம்.எல்.ஏ.க்கள், மந்திரிகள். உதவி செய்வது போலீஸ்.

எங்கு பார்த்தாலும் கரிக்கட்டையாய் எரிந்து கிடக்கும் சிறுவர்களின் உடல்கள், தலை துண்டிக்கப்பட்ட உடல்கள், எரிந்து போன வாகனங்கள், வீடுகள், கடைகள், மசூதிகள்...

குவியல் குவியலாக மனித உடல்கள் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன.

நிலைமையை நேரில் கண்ட மனித உரிமை ஆணையத்தின் தலைவர் 'வார்த்தைகளால் விவரிக்க முடியாத பயங்கரம்' என்று சொல்லியிருக்கிறார்.

ஆனால் பிரதம மந்திரிக்கோ, கலவரம் துவங்கி ஒரு மாதம் வரை நேரில் வர நேரமில்லை. இடையில் கவிதை எழுத வேண்டிய அவசரமான இலக்கியப் பணி. என்ன செய்ய?

ஒரு மாதம் கழித்து வந்து பார்த்தார். உணர்ச்சி வசப்பட்டு அழுதே விட்டார். ஆனால் மறுநாள் கோவாவுக்குச் சென்றவர் பால்கோவா சாப்பிட்டது போல் போட்டோவுக்கு போஸ் கொடுத்து முஸ்லீம்களைப் பற்றியும் திருவாய் மலர்ந்தார். ''இந்த முஸ்லீம்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் அவர்கள் அமைதியாக வாழ விரும்புவதில்லை!''

இரண்டு மாதங்களாகியும் இன்னும் குஜராத்தில் கலவரங்கள் அடங்கினபாடில்லை. இவ்வளவுக்குப் பிறகும் குஜ்ராத் முதல்வர் பதவி விலக வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் அமளி துமளி. இந்த அமளியால் வீணாகும் பணத்தைப் பற்றியும், பாராளுமன்றத்தின் புனிதத்தைப் பற்றியும் கவலைப்படும் விமர்சகர்கள்.

'குஜராத் முதல்வர் பதவி விலக வேண்டும்' என்ற கோரிக்கையைப் பார்த்தால் எனக்கு என்ன எழுதுவதென்றே தெரியவில்லை. ஹிட்லரை உலக நாடுகள் ராஜினாமா செய்யச் சொல்லியா கோரிக்கை விடுத்தன?

குஜராத்தின் இப்போதைய நிலைமை நாஜி ஜெர்மனியுடன் மட்டுமே ஒப்பிடக் கூடியது என்பதில் சந்தேகமேயில்லை.

இவ்வளவுக்குப் பிறகும் ஏன் ஒன்றுமே நடக்காதது போல் இருக்கிறது இந்தியச் சமூகம்?

காரணம், மும்தாஜ் பானுவும், கௌஸர் பானுவும் நமக்கு சகோதரிகளோ மகள்களோ அல்ல. கௌஸர் பானுவின் வயிற்றிலிருந்த கருவிற்கும் நமக்கும் எந்த உறவும் இல்லை.

தீவட்டியும் திரிசூலமும் நம் வீட்டுக் கதவைத் தட்டாதவரை நாம் நாடாளுமன்றக் கூச்சலைப் பற்றியும் அதற்காக ஆகும் மின்சார செலவைப் பற்றியும் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கலாம்.

குஜராத் பற்றி நினைக்கும்போது எனக்கு 1984-ஆம் ஆண்டு தில்லி-திர்லோக்புரி படுகொலைகள் ஞாபகம் வருகிறது. அதை நான் நேரில் கண்டவன். அதற்குக் காரணமாக இருந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர். இதுபற்றி ராஜீவ் காந்தி அலட்டிக் கொள்ளாமல் சொன்னது; ஒரு பெரிய மரம் விழும்போது பூமி அதிரத்தான் செய்யும்!

இதுபற்றி அருந்ததி ராய் சொல்கிறார் அரசியல் கட்சியினர் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை. காங்கிரஸ்காரர்கள் இதே விஷயத்தை (படுகொலைகள்) பயந்து கொண்டு இரவில் செய்தார்கள். பி.ஜே.பி. அதையே கர்வத்துடன் பகலில் செய்கிறது!ன

மத அடிப்படைவாதம் பற்றியும் அருந்ததி ராய் சொல்வது கவனிக்கத் தக்கது:

The more the two sides(Hindus and Muslims) try and call attention to their religious differences by slaughtering each other, the less there is to distinguish them from one another. They worship at the same altar. They are both apostles of the same murderous god, whoever he is.

‘கடவுளிடம் பேசினேன்‘

நான் ஒரு அதீதன் என நினைக்கிறேன். யோகமும் சரி, போகமும் சரி, அதீதமாகவே இருக்கிறது. உடல், மன அமைப்பும் அதற்கேற்றாற்போல் தான் உள்ளது. ஸம்போகமெனில் காலம் அதீதம். லௌகீகமாகச் சொல்ல வேண்டுமானால் மூன்று மணி நேரம். தீரா வேட்கையுடன் அலையும் உடல், மனம். இப்படியும் ஒரு சிருஷ்டி வினோதமென உள்ளுக்குள் சிரித்துக் கொள்வேன்.

உணவிலும் இதே கதை தான். சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் தில்லியில் நடந்த சம்பவம். ‘படிகள்‘ ஆசிரியர் குழுவில் இருந்த சிவராமன் தில்லி வந்திருந்தார். ரயில் நிலையத்துக்கு எதிரே பகாட் கஞ்ஜ் ஏரியாவில் ஒரு ரெஸ்டாரண்டில் சாப்பிட உட்கார்ந்தோம். இரண்டு சிக்கன் சொன்னேன். வந்தது இரண்டு முழுக் கோழி. தந்தூரி வறுவல். மிரண்டு போய் விட்டார் சிவராமன். இன்றைக்கும் என்னைப் பார்த்தால் அந்தக் கோழி சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்க மாட்டார்.

இட்லி என்றால் இரண்டு ஈடு. ஒரு ஈட்டுக்கு பதினைந்து இட்லிகள். தோசை என்றால் கணக்கே இல்லை. வேர்த்து விறுவிறுத்துப் போகும் அவந்திகாவைப் பார்த்து ஒரு மனிதாபிமானத்தில்தான் போதும் என்று சொல்வேன்.

கீரை என்றால் இரண்டு கட்டு. (பச்சையாக அல்ல, சமைத்துத்தான்) மணியுடன் சேலம் சென்ற போது அங்கே சமையலுக்கு உதவியாக பிரகாஷ் என்பவர் உண்டு. அவரிடம் மதியம் கீரை செய்து விடுங்கள் என்றேன். பார்த்தால் நெய் விட்டுக் கொள்வது போல் கீரையை ஸ்பூனில் தான் எடுத்துக் கொள்ள வேண்டும் போல் அவ்வளவு கம்மியாக இருந்தது. அந்த அளவுதான் எல்லோரும் கீரை சாப்பிடுவார்கள் போல. எனக்கு கீரை தான் முழுச் சாப்பாடு!

கோடையில் மனிதர்களும் மிருகங்களும் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர். பார்ப்பதற்கே பரிதாபமாக உள்ளது. ஆனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை. 45 டிகிரி அக்னி நட்சத்திர உச்சி வெய்யிலில் நண்பரை பார்க்க நடந்தே சென்றேன். பதறிப் போய் விட்டார் நண்பர். எனக்கும் வெய்யில் உறைக்கும். ஆனால் 50 டிகிரிக்கு மேலே போக

வேண்டும். ராஜஸ்தான் வெய்யில்தான் எனக்கு வெய்யில். ஒரு மனிதாபிமானத்தில்தான் இங்குள்ளவர்களின் கஷ்டத்தை பகிர்ந்து கொள்வது. 'ஸ்ஸ்... அடடா என்ன கொடுமையான வெய்யில்' என்றால் நானும் அதே வார்த்தைகளை திருப்பிச் சொல்லும்போது அந்த வார்த்தைகளில் 'பா'வம் சற்று கம்மியாகத்தான் இருக்கும் என்பதை நீங்கள் கெட்டிக்காரராக இருந்தால் கண்டுபிடித்து விடலாம்.

சென்ற ஆண்டு டிசம்பர் ஜனவரியில் பாரிஸில் இருந்தபோது அங்கே குளிர் 0 டிகிரியிலிருந்து ஐந்து டிகிரி வரை இருந்தது. எனக்கோ குளிரே தெரியவில்லை. தெரியாதது மட்டுமல்ல, வேர்த்துக் கொட்டியது! ரெஸ்டாரண்டுகளில் சாப்பிடும்போது வியர்வை கொட்டுவதைப் பார்த்து என்னை ஒரு வினோத ஜந்துவைப் போல் வியப்புடன் பார்த்தனர் மக்கள். அந்த அளவுக்கு பிழியப்பிழிய வேர்த்தது. பிறகு பெர்லினுக்குச் சென்ற போது தான் ஓரளவு குளிர் தெரிந்தது. காரணம், அங்கே குளிர் மைனஸில் இருந்தது. மேலும், ஸ்நோவும் கொட்டியது. பாரிஸ் நண்பர்கள் பரிவுடன் சொன்னார்கள், என் உடம்பில் ஏதோ குறையுள்ளது என்றும் மருத்துவரிடம் காண்பிக்கச் சொல்லியும்.

சென்னை திரும்பியதும் என் மருத்துவரிடம் சொன்னேன். அவரை வேடிக்கையாக கடவுள் என்றுதான் குறிப்பிடுவேன். அவரால் தீர்க்க முடியாத வியாதியே இல்லை என்பதால் அந்தப் பட்டப்பெயர். மேற்கொண்டு ஒரு விபரம்-முன்னாள் முதல்வரின் மருத்துவ ஆலோசகரும் இவர்தான்.

பாரிஸில் வேர்த்துக் கொட்டிய கதையைக் கேட்டதும் டாக்டர் சிரித்தார். பிறகு 'கனடா உங்களை அழைக்கிறது' என்றார். ஒன்றுமில்லை. கனடாவில்தான் எனக்கு குளிர் தெரியுமாம். 'மைனஸ் முப்பது, மைனஸ் நாற்பது என்று சென்று வாருங்கள், தெரியும்' என்றார். சிலரது உடல் அமைப்பு அப்படியாம். மற்றபடி என் பாரிஸ் நண்பர்கள் பயந்தவாறு ஒன்றுமில்லை என்று தெரிந்தது.

இவ்வளவும் எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் - இதுதான்... கோடை என்றாலே எனக்கு குஷி பிறந்துவிடும். அப்போதுதான் இரவுகளில் நிறைய படிக்க முடியும் என்பதே காரணம். அதேபோல் சென்ற ஆண்டு கோடையிலும் நிறைய படித்தேன். ஒரு சமயம் நான்கைந்து இரவுகள் ஒரு மணி நேரம் கூட தூங்காமல் தொடர்ந்து இரவு பகலாகப் படித்துக் கொண்டிருந்தேன். ஒரு நாள் இரவு திடீரென்று தலைவலி. எனக்கு அதற்கு முன் தலைவலி வந்ததேயில்லை. பெண்களுக்குத் தான் அடிக்கடி தலைவலி வருவதைப் பார்த்திருக்கிறேன். அதிலும் மாத விலக்கு தினங்களில் அவர்கள் தலைவலியால் துடிப்பது மிகவும் கொடுமை. நேரம் ஆக ஆக தலைவலி கூடிக்கொண்டே போனது. ஒரு கட்டத்தில் தாங்கவே முடியாத நிலையை அடைந்தது.

என்ன செய்வதென்று புரியாமல், ஆழ்ந்த உறக்கத்திலிருந்த அவந்திகாவை தயக்கத்துடன் எழுப்பினேன். அவள் எழுந்து தலையைப் பிடித்துவிட்ட போதும், தைலம் தடவிய போதும் வலி மிகவும் கூடி, கிட்டத்தட்ட அலறுகிற நிலைமைக்குச் சென்றேன். ஆயிரம் சம்மட்டி கொண்டு தலையைப் பிளப்பது போல் இருந்தது. ரத்த நாளங்கள் வெடித்துச் சிதறுவது போன்ற வலி. 'ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து மருத்துவமனைக்குச் சென்று விடலாம்' என்றாள் அவந்திகா. முக்கியமான விஷயம் என்னவென்றால், ஆபத்பாந்தவனாக எப்போதும் கை கொடுக்கும் என்னுடைய டாக்டர் அப்போது ப்ரான்ஸ் சென்றிருந்தார் என்பதுதான். அவரது ஆலோசனை இல்லாமல் ஏதாவது மருத்துவமனைக்குச் சென்று தலைவலி போய் திருகுவலி வந்துவிட்டால் என்ன செய்வது என்று எனக்குப் பயம். மருத்துவமனை வேண்டாம் என்றதும் அவந்திகா ஒரு காரியம் செய்தாள். தன் கையை என் நெற்றியின் மீது வைத்து கண்களை மூடினாள். அவள் உதடுகள் ஏதோ முணு முணுப்பதைக் கவனித்தேன். நான்தான் நாஸ்திகன் ஆயிற்றே....

‘என்ன, மந்திரம் போடுகிறாயா?‘ என்று அந்த நிலையிலும் அவளைக் கிண்டல் செய்தேன்.

ஆனால் ஆச்சரியம்.... அவள் கண்களைத் திறந்தபோது என் வலி போயிருந்தது.

‘என்ன செய்தாய்?‘

‘ஏதோ செய்தேன்‘

‘ப்ளீஸ்.. என்ன செய்தாய் என்று சொல் கண்ணே‘

‘கடவுளிடம் பேசினேன்‘

அவந்திகா இரண்டாவது நபர். கண்ணை மூடினால் கடவுளிடம் பேசக்கூடிய வேறொரு நண்பரை எனக்குத் தெரியும். அவர் பேசுவது கிறிஸ்துவிடம்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவம் - அந்த நண்பனுக்கு என்னைவிட இருபது வயது குறைவாக இருக்கலாம். அவன் கல்லூரி முதல் ஆண்டு படிக்கும்போது எனக்கு நண்பனானான். பிறகு நட்பு இறுகியது. அவனுக்காக நானும் எனக்காக அவனும் எங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் இழக்கத் தயாராக இருந்தோம். ஒரே தட்டில் உண்போம். ஒரே குடிசையில் உறங்குவோம். ஈருடல் ஓருயிர் என்று பழகினோம். அவன் எனக்கு எழுதிய கடிதங்கள் இன்றும் என்னிடம் உள்ளன. சுமார் இரண்டாயிரம் பக்கங்கள் வரும்.

அவந்திகாவை ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நான் திடீர் திருமணம் செய்து கொண்ட பிறகு ஒரு நாள் அவன் என் வீட்டுக்கு வந்தான். (அவன் வசிப்பது வெளியூரில்) அவன் அவந்திகாவிடம் சகஜமாக இல்லை என்பதை உணர்ந்தேன். சற்றே பயந்தது போலவும் தெரிந்தது. ‘சரி, புதிதாகப் பார்ப்பதால் இருக்கலாம், போகப்போக சரியாகிவிடும்‘ என்று எண்ணினேன். வழக்கமாக சென்னைக்கு வந்தால் என்னுடன் இரண்டு மூன்று தினங்கள் தங்குபவன் அன்றைய தினம் சாப்பிடக் கூட மறுத்துவிட்டு உடனே கிளம்பிவிட்டான்.

அவந்திகாவிடம் விளையாட்டாகச் சொன்னேன்.. ‘என்னம்மா இது.. **Father** கிட்ட ட்ராகுலா பயப்படற மாதிரி உன்னைப் பார்த்து இப்படி பயப்படுகிறான்‘

‘உண்மை தான்... உங்கள் நண்பர் நீங்கள் நினைப்பதைப் போன்ற மனிதர் அல்ல. அவர் ஒரு ட்ராகுலாவைப் போன்றவர். அவரிடம் கவனமாக இருங்கள். அல்லது அவரிடம் பழகாமலே இருப்பது உங்களுக்கு நல்லது‘ என்றாள் அவந்திகா.

எனக்கு கோபம் வந்துவிட்டது. ‘என்னுடைய உயிரே அவன்தான். தமிழ் சினிமா மனைவி மாதிரி எங்களைப் பிரிக்கப் பார்க்காதே‘ என்றேன். ‘எப்படியாவது போங்கள். நான் சொல்வதைச் சொல்லிவிட்டேன்‘ என்று அதை அத்தோடு விட்டுவிட்டாள் அவந்திகா.

எனக்குச் சற்று வருத்தம். என் உயிருக்குயிரான நண்பன் மீது அவந்திகா தீது சொல்லி விட்டாளே என்று.

ஒரு வருடம் ஓடியிருக்கும். அதற்குள் எப்படி ஒரு அதிர்ச்சி! யூதாஸ் செய்த காரியத்தை, ப்ரூடஸ் செய்த காரியத்தை அந்த நண்பன் எனக்குச் செய்து அவந்திகாவின் வார்த்தைகளை உண்மையாக்கினான்.

இப்போதும் அந்த விஷயம் எனக்கு ஆச்சரியமாகவே இருக்கிறது. ஒருவரின் முகத்தைப் பார்த்து எப்படி அவரை அனுமானிக்க முடியும்?

எனக்குப் புரியாத பல விஷயங்களில் இதுவும் ஒன்று!

இந்தப் பக்கங்களைப் பாராட்டியும் திட்டியும் சில ஈ-மெயில்கள் வந்துள்ளன. விசேஷமாக எழுதியிருப்பவர்கள் சரவணகுமார் (வாஷிங்டன்), ஹரி சரவணன் (போரூர்) மற்றும் புவன கங்காதரன். 'தன்னிஷ்டம் போல் ஓடும் காட்டு அருவி போல்' உள்ளதாக எழுதியிருப்பவர் ஹரி. மற்ற இருவரும் இப்பக்கங்களின் வெளிப்படையான தன்மையை சிலாகிக்கின்றனர். பாசாங்கும் பாவனையும் அற்ற வெளிப்படைத்தன்மை எனக்கு மிகப்பிடித்த ஒரு குணம்.

ஒரு நட்சத்திர ஓட்டலில் நண்பருடன் சாப்பிடச் சென்றேன். என் நண்பரை வந்து பார்த்து முகமன் கூறினார் செஃப். ஒரு மெக்ஸிகன் உணவு வகையைப்பற்றிக் கூறி அதன் செய்முறையை செஃப்பிடமிருந்து கேட்டறிந்து அதை ஆர்டர் செய்தார் நண்பர். எனக்கோ அன்றைய தினம் அவ்வளவு பொறுமை இல்லை. நல்ல பசி. 'பசிக்குதுங்க... எனக்கு முதல்ல ஏதாவது சாப்பிடக் கொடுங்க' என்று கேட்டேன் செஃப்பிடம்.

செஃப் ஆச்சரியப்பட்டுச் சொன்னார் - அவரது 25 ஆண்டு அனுபவத்தில் இதுவரை யாருமே அப்படிச் சொன்னதில்லையாம். அதாவது 'பசிக்கிறது' என்று. 'ஒரு வேளை பணக்காரர்களுக்கு பசிக்காது போல' என்றேன்.

அன்புடன் என் கைகளைப் பற்றி முத்தமிட்டார் அந்த செஃப்.

அந்தச் சம்பவம் தான் இப்போது நண்பர்களின் கடிதத்தைப் படிக்கும்போது ஞாபகம் வருகிறது. ஆம் நண்பர்களே.. நமது பயணத்தில் நாம் எதையெதையோ தொலைத்துவிட்டோம்.. அப்படித் தொலைத்துவிட்ட விஷயங்களில் ஒன்று - நம்முடைய வெளிப்படைத்தன்மை. கண்ணாடியையும் தண்ணீரையும் ஒத்த நிர்வாணத் தன்மை!

மீண்டும் எழுதுங்கள்... என் ஈ-மெயில் முகவரி: **charunivedita@hotmail.com**

''தூக்கம் வருகிறது நண்பா..''

சமீபத்தில் ட்ராவலர் பத்திரிகையில் பெரூ பற்றிய கட்டுரை ஒன்றைப் படித்தேன். லீமா பற்றி எழுதியிருக்கும் கட்டுரையாளர் மாரியோ வார்காஸ் லோசா பற்றிக் குறிப்பிடவில்லை. மச்சு பிச்சு பற்றி எழுதியிருப்பவர் பாப்லோ நெரூதாவின் புகழ்பெற்ற 'மச்சு பிச்சு' கவிதை பற்றிக் குறிப்பிடவில்லை. பயணச் செலவுக்கான வவுச்சரை சமர்ப்பிப்பது போல் ஒரு கட்டுரை!

அக்கட்டுரையைப் படித்தபோது இரவு இரண்டு மணி. அதற்கு மேல் என்னால் உறங்க முடியவில்லை. லோசாவின் நினைவிலேயே அதிகாலை வரை மூழ்கியிருந்தேன்.

லோசாவின் பரம ரசிகன் நான் என்று சொல்லிக்கொள்ள எனக்குத் தயக்கமேயில்லை. லோசா என்றால் பெரூ. பெரூ என்றால் லோசா. காரணம், லோசாவின் எழுத்து அப்படிப்பட்டது. அவ்வளவு வசீகரம் கொண்டது. அவருடைய நாவல் **The War of the End of the World** என்ற நாவல் சுமார் ஆயிரம் பக்கங்கள் இருக்கும். ஆனால் ஊண் உறக்கமின்றி நீங்கள் ஒரே அமர்வில் படித்துவிடலாம். என் வாசிப்பு வேகம் மிகவும் கம்மி என்பதால் எனக்கு ஒரு வாரம் ஆயிற்று. ஒரு வாரமும் நான் அலுவலகம் செல்லவில்லை, தூங்கவில்லை, வேறு எந்த வேலையும் செய்யவில்லை.

லோசாவின் ஒரு டஜன் நாவல்களும் அப்படிப்பட்டவை தான். ரயிலிலோ பஸ்ஸிலோ பயணம் செய்யும் போது படிக்கலாம். எந்த இடத்திலும் எந்த நிலையிலும் படிக்கக் கூடியவை அவை. அந்த அளவுக்கு ஈர்க்கக் கூடியது, வாசிப்பவரை வசியப்படுத்தக் கூடியது-லோசாவின் எழுத்து.

வாழ்வில் இதுவரை இரண்டு முறை லோசாவின் நாவல்களைப் படித்திருக்கிறேன். இன்னும் ஒருமுறை படிக்க வேண்டும் என்ற திட்டம் இருக்கிறது.

லோசா ஒரு வலதுசாரி. உலகில் வலதுசாரி எழுத்தாளர் என்று லோசா ஒருவர் தான் உண்டு என்று நினைக்கிறேன். தீவிர கம்யூனிச எதிர்ப்பாளர். கார்லோஸ் ஃபுயெந்தெஸ் மாதிரியோ, கொர்த்தஸார் மாதிரியோ புத்தி ஜீவி அல்ல. அரசியலைப் பொறுத்துவரை மிக முட்டாள்தனமான **naive** ஆன கருத்துக்களைக் கொண்டவர். எல்லாம் சரி. ஆனாலும் நான் லோசாவின் எழுத்துக்கு அடிமை.

எனக்கு பல தாய் நாடுகள் உண்டு. முதலில் ஃப்ரான்ஸ். அடுத்து, சுவிஸ் அதிலும் குறிப்பாக நீட்ஷே வாழ்ந்த சில்ஸ் மரியா. பிறகு, அர்ஜென்டினா (சே குவேரா, போர்ஹேஸ், மரடோனா, புவனோஸ் அய்ரஸ்), ப்ரஸீல் (பீலே, ரியோ தி ஹனைரோ), சிலே (டாக்டர் அலெண்டே, பாப்லோ நெரூதா), கொலம்பியா (மார்க்வெஸ்), மெக்ஸிகோ, உருகுவே, பராகுவே, க்யூபா, நிகாராகுவா, எல் சால்வதோர் என்று ஏராளமான தாய் நாடுகள். இந்தப் பட்டியலில் விசேஷமான ஒரு நாடு பெரூ.

தலைநகர் லீமா, அதை ஒட்டியுள்ள துபாக் அமாரு என்ற சேரிப்பகுதி, மீராஃப்ளோரெஸ் போன்ற ஊர்களெல்லாம் என் சொந்த ஊரைப் போலவும், வாழ்ந்த ஊரைப் போலவும் ஆகிவிட்டன.

லோசாவை அடுத்து பெரூவின் முக்கியமான மற்றொரு விசேஷம் மச்சு பிச்சு.

ஆந்தேஸ் (Andes) மலைத் தொடரில் உருபாம்பா நதிப்பள்ளத்தாக்கில் 1450 ஆம் ஆண்டு **Inca** அரசன் பச்சக்குட்டியால் (**Pachacuti**) கட்டப்பட்ட நகரம் மச்சு பிச்சு. 1911 ஆம் ஆண்டு இந்த நகரின் அழிவுகளை முதன்முதலாகக் கண்டவர் **Hiram Bingham**.

மச்சு பிச்சு ஓர் உலக அதிசயம் என்றே எனக்குத் தோன்றுகிறது. 7000 அடி உயரத்தில், சக்கரங்களையே கண்டு பிடிக்காத ஒரு நிலையில் மிகப்பெரும் கற்களால் அமைந்த நகரை உருவாக்கியிருக்கின்றனர். மச்சு பிச்சு பற்றியை கதைகளைப் போலவே அந்த நகரமும் அமானுஷ்யமான ஒன்றாகவே எனக்குத் தோன்றுகிறது.

ஒரு நாள் இரவு இரண்டு மணிக்கு தொலைபேசி அழைப்பு. அப்போதுதான் உறங்கச் சென்றிருந்தேன். உறக்கம் இமைகளை அழுந்தத் துவங்கியிருந்த நேரம். தொலைபேசி அழைப்பிலிருந்து அது வெளியூர் அல்லது வெளிநாட்டு அழைப்பு என்று தெரிந்தது.

உள்ளூர் அழைப்பு இல்லை. பொதுவாக இரவு எந்த நேரத்திலும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் நண்பர்கள் அழைப்பது வழக்கம். அதனால் எழுந்து வந்து எடுத்தேன்.

திண்டுக்கல்லில் இருந்து என் நண்பர். தத்துவத்தை முறையாகப் பயின்றவர். அதனால் தானோ என்னவோ அதிகம் எழுதாதவர். ஒரு **recluse**. நிலை கொள்ளாத போதையில் இருந்தார்.

''சரி, காலையில் பேசிக் கொள்ளலாம் நண்பா'' என்றேன்.

''டேய் சாரு, இந்த மிடில் க்ளாஸ் புளிப்பு வேண்டாம்டா இப்பவே பேசணும்ங்கிறதுக்காகத்தானே வேலமெனக்கெட்டு இந்த ராத்திரில கூப்பிடுறேன்'' நண்பருக்கு என்னைவிட 20 வயது கம்மியாக இருக்கும். இருந்தாலும் பிரச்னையில்லை. பானம் அருந்தியிருக்கிறார். அவர் என்னை மிடில் க்ளாஸ் என்று சொன்னதன் அர்த்தம், அவருக்கு இன்னும் அதற்கான வாய்ப்பு கிட்டவில்லை என்பதுதான். நண்பர் திருமணம் ஆகாதவர்.

நீட்ஷேவைப் பிடித்தார் நண்பர். நீட்ஷே என்றால் எனக்கு உயிர். உலகின் தத்துவவாதிகளிலேயே என்னை மிகவும் கவர்ந்தவர்.

அதிகளவு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டவரும் நீட்ஷேதான்.

நீட்ஷே பற்றி நண்பர் பாடமே எடுக்க ஆரம்பித்து விட்டார்.

அதுமட்டுமல்ல, ''டேய் சாரு.. ஒரு நிமிஷம் இரு. இதோ சரக்கை கிளாஸில் ஊற்றிக்கொண்டு வருகிறேன்''

நான் பதில் சொல்வதற்கு நண்பர் வாய்ப்பே தரவில்லை. ஒரு நிமிடம் என்றது ஐந்து நிமிடம் ஆகியது.

வாழ்வின் இந்த அபத்தமான தருணத்தைப் பற்றி வியந்தபடி, போனை வைத்து விடலாமா வேண்டாமா என்று குழம்பியவாறு நின்று கொண்டிருந்தேன் நான்.

ஆனால் யோசிப்பதற்கே வழியில்லை, 'நீ போனை வைத்தால் நான் மறுபடியும் கூப்பிடுவேன்' என்று எச்சரித்திருந்தார் நண்பர்.

மீண்டும் விட்ட இடத்திலிருந்து துவங்கியது நீட்ஷே பற்றிய உரையாடல். உரையாடலா அது? இல்லை. **soliloquy**. ஜாரதுஷ்ட்ராவின் இரவுப் பாடல்.

Night has come; now all fountains speak more loudly.

And my soul, too, is a fountain.

Night has come; only now all the songs of lovers awaken. And my soul, too, is a song of a lover.

Something unstilled, unstillabe is within me; it wants to be voiced. A craving for love is within me; it speaks the language of love.

Light am I; ah, that I were night! But this is my loneliness that I am girt with light.

நண்பருக்கு நீட்ஷே முழுவதும் மனப்பாடம் போலிருக்கிறது. அப்படியே பொழிந்து கொண்டிருந்தார்.

இந்த உலகின் முதன்மையான கவிஞன் நீட்ஷே என்று அந்தக் கணத்தில் எனக்குத் தோன்றியது.

நீட்ஷேவின் எழுத்து கவிதை... கவிதை...

I do not want to be a saint; sooner even a buffoon - Perhaps I am a buffoon...

'க்ளிங்' என்ற சத்தம் கேட்டது.

''டேய் சாரு... க்ளாஸ் விழுந்து உடைஞ்சிடுச்சு.. கொஞ்சம் இரு.. வச்சிடாதே.. திரும்பப் பண்ணுவேன்''

இந்த முறை ஐந்து நிமிடத்திற்கு மேல் ஆகியது. ஏதேதோ கடாமுடா சப்தங்கள் கேட்டது. தரையைச் சுத்தம் செய்கிறார் போலிருக்கிறது.

மணியைப் பார்த்தேன். நான்கு. மை காட்! இரண்டு மணி நேரமா பேசிக் கொண்டிருக்கிறோம்!

நண்பர் வந்தார். சொன்னேன். ''தூக்கம் வருகிறது நண்பா.. நாளை பேசிக் கொள்ளலாமே?''

நண்பருக்கு கோபம் வந்துவிட்டது.

''என்னது.. தூக்கமா? டேய் சாரு.. நான் என் வாழ்க்கை பூரா படிச்சதை உனக்கு தானமா வழங்கிக் கிட்டிருக்கேன்.. அதுக்காக நீ எனக்கு நன்றி சொல்லணும்.. அதை விட்டுட்டு நீ என்னடான்னா தூக்கம் வருதுங்கிறே.. உன்கிட்ட எனக்குப் பிடிக்காதது இந்த மிடில் கிளாஸ் புளிப்புத்தான்டா.. சரி.. கேள்..''

I am no man, I am dynamite. There is nothing in me of a founder of a religion - religions are affairs of the rabble; I want no believers. I think I am too malicious to believe in myself. I never speak to masses.....

''இருடா சாரு.. ஒரு பெக் போட்டுக்கிட்டு வந்திடுறேன்..''

இப்போது மணியைப் பார்த்தேன்.. ஐந்து. மூன்று மணி நேரமா..? இப்படியே விட்டால் எவ்வளவு நேரம் போகும் இந்தப் பேச்சு?

நண்பர் வந்ததும் சொன்னேன்?

''டேய் சாரு.. உனக்கோ ரெண்டு பொண்டாட்டி. நானோ ஒரு பேச்சுலர். உனக்கு எதைப் பத்தி கவலை? **Sexual Starvation** னா உனக்கு என்னான்னு தெரியுமா?''

''ஐயோ என்ன இது அபாண்டம்? எனக்கு ரெண்டு பொண்டாட்டியா? அவந்திகாவுக்கு தெரிஞ்சா என்னைத் தொலைச்சுக் கட்டிப்பிடுவாளே?'' அப்புறம்தான் நண்பர் விளக்கம் சொன்னார்.

''டேய்.. உனக்கு ஏற்கனவே ஒரு கல்யாணம் ஆகி டிவோர்ஸ் ஆயிருக்குல்ல?''

''ப்ச்ச.. அதைச் சொல்றீங்களா?''

''பின்ன எதைச் சொல்றேன்? எனக்கு இதோ இருவத்தஞ்சு வயசாவுது.. ஒரு கல்யாணம் கூட ஆக மாட்டேங்குது.. உனக்கு ரெண்டு ஆயிடுச்சே?''

''என்னது, உங்க வயசு இருவத்தஞ்சா?''

''ஆமாம்.. ஏன்?''

பேசிக் கொண்டிருக்கும் போதே ரிசீவரை தனியே வைத்துவிட்டு வந்து படுத்துவிட்டேன். இனிமேல் எப்படி நீ போன் பண்ண முடியும்?

வயதைப் பற்றி நான் என்றுமே யோசித்ததில்லை. அந்த ஒரே ஒரு தருணத்தைத் தவிர.

டேய் நண்பா.. நீ மூன்று மணி நேரம் என்ன, முப்பது மணி நேரம் கூட பேசலாம்.. வயதும் தெம்பும் இருக்கிறது. எனக்கோ வேலைகள் அதிகம்....

அதிகாலை ஐந்து மணிக்கு மேல் ஆகிவிட்டது... அன்றைய தினம் உறக்கம் கொள்ள....

தேவை சுயபரிசோதனை.

சிறு பத்திரிகைகள் நிறைய வந்து கொண்டிருக்கின்றன. சந்தோஷம். ஆனால் இவ்வளவு சிறு பத்திரிகைகள் வந்தாலும், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால்-ஒவ்வொரு பத்திரிகையும் ஒரு எழுத்தாளரையே முன்னிலைப்படுத்தி அவரது ஒளி வட்டத்துக்குள் மட்டுமே இயங்குவதாக உள்ளது. அவரே அதன் ஆசிரியராகவும் இருக்கிறார். அல்லது ஆலோசகராக. அவரது வீட்டு விலாசம் மற்றும் தொலைபேசி எண் மாறுவதைக் கூட கட்டம் கட்டி வெளியிடுகிறார்கள். கிட்டத்தட்ட ஒரு எழுத்தாளரின் தற்கொலைப் படையாகவே அந்தச் சிறு பத்திரிகையும் அதன் குழுவினரும் செயல்படுகின்றனர். புது எழுத்து, தலித் போன்ற ஒருசில விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. இருந்தாலும் பொதுவாகத் தென்படும் குணாம்சம் தற்கொலைப் படை மனோபாவம்தான்.

சமீபத்தில் பெரும் தொகை கொடுத்து எல்லா சிறு பத்திரிகைகளையும் வாங்கிக் கொண்டு வந்தேன். படித்து முடித்த பிறகு மனதில் ஒரு பட்டியல் தோன்றியது. அது இதோ:

பன்முகம் - குடிசைத் தொழில் (சுயவேலை வாய்ப்புத்திட்டம்)

அட்சரம் - விஜய் ரசிகன்

புனைகளம் - முதியோர் இல்லம்

காலச்சுவடு - பர்மா பஜார்

கல்குதிரை - காயலாங்கடை

ஆரண்யம் - திருமண விபத்து (அதாவது, சிறு பத்திரிகை ஆசிரியருக்கு திருமணம் நடந்து விட்டால் பத்திரிகை நின்றுவிடும்!)

விசை - அமரர் ஊர்தி நிலையம்

புது எழுத்து - **Browsing Centre**

எக்ஸில் - மல்யுத்த சங்கம்

நிறப்பிரிகை - சாராயக்கடை **(banned)**

புதிய கோடாங்கி - **Suzuki & yamahito**

கதை சொல்லி - கிளி ஜோசியம்

சொல் புதிது - குடும்பப் பத்திரிகை

கவிதா சரண் - **Ex-Servicemen's Club**

தலித் - அகதிகள் முகாம்

மற்ற சிறு பத்திரிகைகளை விட தலித் என்ற பத்திரிகை எனக்குப் பிடித்திருந்தது. அதன் தலையங்கத்திலிருந்து ஒரு பகுதி:

''வெளிறிப் போன ஆன்மீகம் படைப்புகளின் பின்புலமாவதும், சாமியார்கள் அறிவுலகிலும் அதிசயங்களாக முன் வைக்கப்படுவதும் எவ்வித எதிர்ப்புமில்லாமல் நடந்தேறுகின்றன.''

அதே பத்திரிகையில் ஹர்ஷ் மந்தர் என்பவர் குஜராத் படுகொலைகள் பற்றி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அதிலிருந்து சில பகுதிகள்:

''எட்டு மாத கர்ப்பிணிப் பெண் ஒருத்தி தன்னை கொல்லாமல் விட்டு விடுமாறு உங்களிடம் கெஞ்சிக் கேட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்? அவரைத் தாக்க வந்தவர்களோ அவரது வயிற்றை கத்தியால் குத்திக் கிழித்து அவர் வயிற்றிலிருந்த சிசுவை வெளியே உருவி அவர் கண் முன்னாலேயே அதைக் கொலை செய்தார்கள். பத்தொன்பது பேருள்ள ஒரு குடும்பத்தை அவர்களின் வீட்டுக்குள் ளேயே வைத்துப் பூட்டி வீட்டை நீரால் நிரப்பி பின் அதில் உயர் அழுத்த மின்சாரத்தை செலுத்தி அவர்களைக் கொன்றது பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்? உங்களால் என்ன சொல்ல முடியும்?

தன் தாயும் உடன்பிறப்புகள் ஆறு பேரும் தன் கண் முன்னாலேயே அடித்தே கொல்லப்பட்டதை விவரித்தான் ஜுஹபரா முகாமைச் சேர்ந்த ஆறு வயது சிறுவன்

ஒருவன். மயங்கி விழுந்த அவனை இறந்துவிட்டான் என்று நினைத்து கொலைகாரர்கள் விட்டு விட்டதால்தான் அவன்கூட உயிர் பிழைத்தான்.

பெண்களை பாலியல் ரீதியாக கீழ்மைப்படுத்துவது என்பது அண்மையில் குஜராத்தில் பெருமளவில் நடத்தப்பட்ட காட்டு மிராண்டித்தனத்தில் பயன்படுத்தப்பட்ட அளவுக்கு, வேறு எந்தக் கலவரத்திலும் நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. சிறுமிகளையும், பெண்களையும் பெரும்பாலும் அவர்களின் குடும்பத்தினர் முன்னிலையிலேயே வைத்து கூட்டாக வன்புணர்ச்சி செய்வது, பின்னர் அவர்களை உயிரோடு எரித்துக் கொல்வது அல்லது சுத்தியால் அடித்துக் கொல்வது போன்ற செய்திகள் எல்லா இடங்களிலிருந்தும் வருகின்றன. ஒரு இடத்தில் ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்ச்சிக்கு உட்படுத்திய கும்பல் பின் அவளை ஒரு ஸ்க்ரூ டிரைவரால் குத்திக் கொலை செய்துள்ளது. இதைக் கண்டு மிரண்டு போன பெண்கள் கூட்டத்தை மேலும் கூனிக் குறுகச் செய்வதற்காக ஆயுதமேந்திய ஆண்கள் அப்பெண்களின் முன்னே தம் ஆடைகளை அவிழ்த்துக் காட்டினார்கள் என்பது போன்ற அதிர்ச்சியான செய்திகளை அமன்சவுக் முகாமிலிருந்து வந்த பெண்கள் சொன்னார்கள்.

ஏராளமான காஸ் சிலிண்டர்களைச் சுமந்தபடி பாரவண்டிகள் வந்தன. பணக்கார முஸ்லீம் வீடுகளும், வணிக நிறுவனங்களும் முதலில் முறைப்படி கொள்ளையிடப்பட்டன. அங்கிருந்த விலை மதிப்பு மிக்க பொருட்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. பிறகு, சிலிண்டர்களிலிருந்து சமையல் வாயு கட்டிடங்களுக்குள் பல நிமிடங்கள் செலுத்தப்பட்டது. பின்னர் அதற்கு, கும்பலைச் சேர்ந்த பயிற்சி பெற்ற ஒருவன் தீ மூட்டுவான். கட்டிடத்தை நெருப்பு முழுமையாகச் சூழ்ந்து கொள்ளும். சில இடங்களில் காங்க்ரீட் கட்டிடங்களைத் தகர்க்க, இரும்பை உருக்கி இணைக்க பயன்படுத்தப்படும் அசிட்டிலின் வாயு உபயோகிக்கப்பட்டது. மசூதிகளும், தர்காக்களும் இடிக்கப்பட்டன. அந்த இடங்களில் அனுமார் சிலைகளும், காவிக் கொடிகளும் நாட்டப்பட்டன. அகமதாபாத் நகரின் முக்கிய சந்திப்புகளில் இருந்த சில தர்காக்கள் இரவோடு இரவாக தகர்த்து தரைமட்டம் ஆக்கப்பட்டன. அந்த இடங்களில் சாலை போடுவதற்கான பொருள்களைப் பரப்பி மூடப்பட்டு, சாலையின் மற்ற பகுதிக்கும் அவற்றுக்கும் எந்த வேறுபாடும் கண்டுபிடிக்க முடியாதபடி திறம்பட நிரவப்பட்டு விட்டன. முன்பு தர்காக்கள் இருந்த அதே இடத்தின் மேல்-ஏதோ எந்தக் காலத்திலும் அவ்விடத்தில் தர்காக்கள் இருந்ததே இல்லை என்று சொல்லும் அளவுக்கு இப்போது போக்குவரத்து சுறுசுறுப்பாக நடந்து வருகிறது.

அரசின் போலீஸ் படையும் நிர்வாக எந்திரமும் குஜராத்தில் நடந்துள்ள இனப் படுகொலைக்கு மிகப்பெரிய அளவில் துணை போயிருப்பது இப்போது பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. நேராக கலவரக் கும்பல்களின் கைகளில் போய் அகப்படுமாறு மக்களுக்கு போலீசார் தவறாக வழிகாட்டி உள்ளது தெரியவந்துள்ளது. கொலை, கொள்ளை, தீ வைப்பு, பாலியல் வன்முறை போன்றவற்றில் கலவரக் கும்பல்கள் மும்முரமாக ஈடுபட்டபோது அவர்களுக்கு போலீசார் பாதுகாப்பு கவசமாக செயல்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட முஸ்லீம்கள் பெரும்பாலும் பெண்களும் குழந்தைகளும் கையறு நிலையில் கதறிய கதறல்களை போலீஸ்காரர்கள் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. வன்முறைக் கும்பலின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்த சிறுபான்மை சமூகத்தின் மீதே பெரும்பாலும் போலீசாரும் நேரடியாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பல அறிக்கைகள் வந்துள்ளன.

காவல்துறை மற்றும் சிவில் அதிகாரிகள்தான் இந்த இனப் படுகொலைக்கு காரணமே தவிர, அவர்களின் உத்தரவுக்குக் கீழ்ப்படியுமாறு பயிற்றுவிக்கப்பட்டுள்ள சீருடை அணிந்த கீழ்நிலை ஊழியர்கள் அல்ல.''

இக்கட்டுரையை எழுதியிருக்கும் ஹர்ஷ் மந்தர் கடந்த 22 ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ். பதவியில் இருந்தவர். தற்போது குஜராத் படுகொலைகளைக் கண்டு தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டார்.

ஹர்ஷ் மந்தர் தன் கட்டுரையில் குறிப்பிடும் மற்றொரு வேதனையான விஷயம்- கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களுக்காக நடத்தப்படும் அனைத்து முகாம்களுமே முஸ்லீம் அமைப்புகளால் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது. ஏதோ முஸ்லீம் மக்களின் வேதனையில் நமக்கு எந்தப் பங்கும் இல்லை என்பது போல இருக்கிறது இது என்கிறார். சபர்மதி ஆசிரமக் கதவுகள் கூட மூடிக்கொண்டு விட்டன என்று சொல்லும் ஹர்ஷ் மந்தரின் கட்டுரை ஒவ்வொரு இந்தியரும் படித்து சுய பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

(தலித், எண்: 28, வீரபத்திரசாமி கோவில் தெரு, லாஸ்பேட்டை, பாண்டிச்சேரி - 605 008. விலை ரூ.30/-)

''மகாகவி பாரதியார்''

படிக்கும்போது படித்த வரிகளுக்கு கீழே கோடு போட்டு விடுவது என் சுபாவம். பேனாவும் கையுமாகத்தான் புத்தகத்தையே படிப்பேன். இதுவே கடன் வாங்கிய புத்தகமாக இருந்தால் கைகளைக் கட்டிப் போட்டுவிட்டது போல் இருக்கும். துறுதுறு என பரபரக்கும் கைகள்.

ஒரே ஒரு புத்தகத்தில் அதன் அத்தனை வரிகளிலும் அடிக்கோடு போட்டுவிட்டேன். மார்த்தா த்ராபா (**Marta Traba**) எழுதிய **Mothers and Shadows** என்ற நாவல். பைபிளைப் போல் பாதுகாத்த அந்தப் புத்தகம் இப்போது என்னிடமில்லை.

அந்த அளவுக்கு திளைத்துப் படித்த வேறு சில நூல்களும் உண்டு. மிலோராத் பாவிக் (**Milorad Pavic**) எழுதிய ஸெர்பிய நாவல் -**The Dictionary of Kazars.**

இதேபோல் சமீபத்தில் படித்த ஒரு புத்தகத்திலும் நடந்தது. அத்தனை வரிகளுக்கும் அண்டர்லைன் அபிஷேகம். ஆச்சரியகரமாக, அது ஒரு தமிழ்ப்புத்தகம்.

நானும் சில வாழ்க்கை வரலாறுகளையும், சுயசரிதைகளையும் படித்திருக்கிறேன். சத்திய சோதனை, உ.வே.சா.வின் என் சரித்திரம், சே குவேராவின் பொலிவியன் டயரி, ஸ்பைக் லீ எழுதிய மால்கம் எக்ஸ், **Barthes on Barthes** என்று ஒருசில பெயர்கள் ஞாபகம் வருகின்றன. ஆனால் எதுவுமே இந்த வாழ்க்கை வரலாற்று நூலுக்கு ஈடாகாது என்று தோன்றுகிறது. அப்படி ஒரு நூலைப் படித்துத் திளைத்தேன் என்று சொல்ல வேண்டும். இந்த திளைப்புக்கு உதாரணத்தையும் இந்த நூலிலிருந்தே எடுத்துச் சொல்லலாம்.

''ரயில் வண்டி காலை சுமார் ஐந்தரை மணிக்குப் புதுச்சேரி போய்ச் சேர்ந்தது, வழியில் யார் என் மீது 'கண் வீசினார், கண் வீசவில்லை' என்ற கவலையே எனக்குக் கிடையாது. மலரிலிருக்கும் தேனைக் குடித்து விட்டு, மதிமயங்கி, மதோன்மஸ்தாய் ரீங்காரம் செய்துகொண்டு ஆகாயத்தில் விசையுடன் விர்ரென்று பறக்கும் வண்டைப் போல நான் இருந்தேன் என்றால், அது கற்பனையே அல்ல. இத்தகைய உணர்ச்சி, ஒவ்வொருவர் வாழ்விலும் ஒரு தரமாகிலும் ஏற்பட்டிருக்கும்'' இது பாரதியைப் பார்க்க வ.ரா. புதுச்சேரிக்குச் சென்ற அனுபவத்தைப் பற்றி எழுதியிருப்பது. இதே போன்றதொரு

உணர்ச்சிதான் எனக்கு வ.ரா.வின் முழுநூலையும் படித்தபோது ஏற்பட்டது. 'மகாகவி பாரதியார்' என்பது அந்த நூலின் பெயர்.

உலகில் தமிழ் தெரிந்த அத்தனை பேரும் படித்துத் திளைக்க வேண்டிய புத்தகம் இது. அக்கிரகாரத்து அதிசய மனிதர் என்று புகழப்பட்ட வ.ராமஸ்வாமி அய்யங்கார் பாரதியோடு நெருங்கிப் பழகியவர். அதை வைத்து பாரதியின் வாழ்க்கைச் சரிதத்தை மிகச் சுருக்கமாக எழுதியிருக்கிறார். வ.ராவின் மொழி நடை பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அதற்கு இந்த நூலும் ஒரு சான்று.

பாரதி ஒரு **legend** ஆக வாழ்ந்திருக்கிறான் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். ஆனால் அதை வ.ரா. சொல்லும்போது பாரதியை நேரிலேயே பார்ப்பதுபோல் இருக்கிறது. பாரதி பாடுவதை நாமே கேட்பதுபோல் இருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றிரண்டு சொல்லலாம் என்று நினைத்தால் முடியவில்லை. எதைச் சொல்வது, எதை விடுவது என்றே தெரியவில்லை. அந்த அளவிற்கு பாரதியின் வாழ்க்கை நம்மை திகைக்க வைக்கிறது.

பாரதி சீமையிலே படித்து கலெக்டர் துரையாகி குவியல் குவியலாய் பணம் சம்பாதிக்க வேண்டுமென்று அவர் தந்தைக்கு ஆசை. அதனால் பாரதியை கணக்குப் போடக் கூப்பிட்டால் அவர் 'கணக்கு, பிணக்கு, வணக்கு, மணக்கு, ஆமணக்கு' என்று அடுக்கிக் கொண்டே போவாராம்.

ஏதோ ஒரு சமயம், கணக்குப் போடாமல் பாரதியார் விழித்துக் கொண்டிருந்ததை தகப்பனார் கண்டார். ''இது என்ன விழி?'' என்றார். உடனே பாரதியார் உரக்கவே, 'விழி, பழி, குழி, வழி, பிழி, சுழி'' என்று கூறிக் கணக்கிலே 'சுழி' போட்டு விட்டாராம். பையனுக்கு சித்தப் பிரமையோ என்று எண்ணித் தகப்பனார் மனம் ஏங்கிப் போனார்.

பாரதி காந்தியைச் சந்திக்கும் சம்பவத்தைப் படித்தபோது ஒரு கவியின் கர்வத்தைக் காண முடிந்தது.

ராஜாஜியின் பங்களாவில் வந்து தங்கியிருக்கிறார் காந்தி. ஒரு நாள் மத்தியான நேரம். காந்தி, ராஜாஜி, சத்தியமூர்த்தி, ஏ.ரங்கசாமி அய்யங்கார் முதலியோர் ஒரு அறையில் ஏதோ அரசியல் சம்பாஷணையில் ஈடுபட்டுள்ளனர். வாயில் காப்போனாக வ.ரா. இனி வ.ரா. சொல்வதைக் கேளுங்கள்.

''அறைக்குள்ளே பேச்சு நடந்து கொண்டிருக்கிற சமயத்தில் பாரதியார் மடமடவென்று வந்தார். 'என்ன ஓய்!' என்று சொல்லிக் கொண்டே, அறைக்குள்ளே நுழைந்து விட்டார்....

பாரதியார் காந்தியை வணங்கிவிட்டு, அவர் பக்கத்தில் மெத்தையில் உட்கார்ந்து கொண்டார். அப்புறம் பேச்சுவார்த்தை ஆரம்பித்தது.

பாரதியார்: மிஸ்டர் காந்தி, இன்றைக்குச் சாயங்காலம் ஐந்தரை மணிக்கு நான் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப் போகிறேன். அந்தக் கூட்டத்துக்குத் தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?

காந்தி: மகாதேவ் பாய்! இன்றைக்கு மாலையில் நமது அலுவல்கள் என்ன?

மகாதேவ்: இன்றைக்கு மாலை ஐந்தரை மணிக்கு, நாம் வேறோர் இடத்தில் இருக்க வேண்டும்.

காந்தி: அப்படியானால், இன்றைக்குத் தோதுப்படாது. தங்களுடைய கூட்டத்தை நாளைக்கு ஒத்திப் போட முடியுமா?

பாரதியார்: முடியாது. நான் போய் வருகிறேன், மிஸ்டர் காந்தி! தாங்கள் ஆரம்பிக்கப் போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்.

பாரதியார் போய்விட்டார். நானும் வாயில்படிக்குப் போய் விட்டேன். பாரதியார் வெளியே போனதும், 'இவர் யார்?' என்று காந்தி கேட்டார். தாம் ஆதரித்து வரும் பாரதியாரைப் புகழ்ந்து சொல்வது நாகரிகம் அல்ல என்று நினைத்தோ என்னவோ, ரங்கசாமி அய்யங்கார் பதில் சொல்லவில்லை. காந்தியின் மெத்தையில் மரியாதை தெரியாமல் பாரதியார் உட்கார்ந்து கொண்டார் என்று கோபங்கொண்டோ என்னவோ சத்தியமூர்த்தி வாய் திறக்கவில்லை. ராஜாஜி தான், 'அவர் எங்கள் தமிழ் நாட்டுக் கவி' என்று சொன்னார்.

அதைக் கேட்டதும், 'இவரைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும். இதற்குத் தமிழ்நாட்டில் ஒருவரும் இல்லையா?' என்றார் காந்தி. எல்லோரும் மௌனமாக இருந்துவிட்டார்கள்''

ஒரு விஷயம் எனக்கு இன்னமும் குழப்பமாகவே உள்ளது. பாரதியைப் பத்திரமாகப் பாதுகாக்க அப்போது எத்தனையோ பேர் இருந்துள்ளனர். செல்வந்தர்கள், அதிகாரிகள், சராசரி மனிதர்கள் என அவருடைய அருமை தெரிந்த ஏராளமான பேர் அவரைக் கொண்டாடி இருக்கின்றனர். குறிப்பாக எஸ்.துரைசாமி அய்யர், சுரேந்திரநாத் ஆர்யா, வி.சர்க்கரைச் செட்டியார் (இவர் சென்னை மேயராக இருந்தவர்), மண்டையம் எஸ்.என்.திருமலாச்சாரியார், மண்டையம் சீனுவாஸாச்சாரியார், டாக்டர் எம்.ஸி.நஞ்சுண்ட ராவ் - இன்னும் இதுபோல் எத்தனையோ பேர். வ.ரா.வே சொல்கிறார்....

''இன்னும் ஒரே ஒரு நண்பர். வயதில் பாரதியாருக்கு ரொம்ப மூத்தவர். அவர் பெயரைச் சொன்னால், போலீசார் இப்பொழுது திகைத்துத் திடுக்கிடவும் கூடும். அவர் பெயர் கிருஷ்ணசாமி அய்யர். அவர் சென்னையில் போலீஸ் டெபுடி கமிஷனராக இருந்தவர். கனம் நீதிபதி கிருஷ்ணசாமி அய்யருக்கு உயிர்த்தோழர்''

இவர்கள் மட்டுமல்ல. சாமான்ய மனிதர்கள் கூட பாரதியின் மீது உயிரையே வைத்திருந்திருக்கிறார்கள்.

உதாரணமாக, பாரதி வீட்டில் வேலை செய்த அம்மாக்கண்ணு என்ற மூதாட்டி. சம்பளமே இல்லாமல் பாரதிக்கு எத்தனையோ சேவை செய்தவள். படிப்பறிவு அற்ற அந்த மூதாட்டிக்கு பாரதியின் மேன்மை எப்படித் தெரியும்? அவள் சக்தி சொரூபம் என்கிறார் வ.ரா. ''அவளுக்குக் கல்வியில்லாமலிருக்கலாம். இயற்கை அறிவுகூட இல்லாமல் போய்விட்டதா? இயற்கை அறிவு, இயற்கை உணர்ச்சி இவற்றைக்கொண்டு பாரதியாரை அவள் எடை போட்டுப் பார்த்திருக்க வேண்டும். பாரதியாரின் இயற்கையான மேன்மைக் குணங்களைக் கண்டு அவள் பரவசமாகியிருக்க வேண்டும்''

இந்த மூதாட்டி மட்டுமல்ல. பாரதி புதுச்சேரியில் வாழ்ந்த போது, அவரது வீட்டுக்குப் பக்கத்திலிருந்த பொன்னு முருகேசன் பிள்ளையின் மனைவியாரும் பாரதியை தன் மூத்த மகனாகவே கருதித் தொண்டு செய்திருக்கிறார்.

''காலையில் பாரதியார் எழுந்திருந்தால், பல் விளக்குவதற்குப் பல்பொடியும் தண்ணீரும் தயாராக மெத்தையில் காத்துக் கொண்டிருக்கும். பாரதியார் பல் தேய்த்து முகம் கழுவியது, வீட்டின் அடுப்பங்கரையிலிருக்கும் அந்த அம்மாளுக்கு எப்படித் தெரியுமோ, உடனே காபி, இட்டிலி அல்லது ஏதாவது தின்பண்டம் வந்துவிடும். குழந்தையின் முகம் பார்த்து உணவு ஊட்டும் தாயைப் போல நடந்துகொண்டு வந்தாள் அந்த அம்மாள்''

இன்னும் பாரதியின் மெய்க்காப்பாளராகவே வாழ்ந்த குவளைக் கண்ணனைப் பற்றிப் பேசினால், அது ஒரு நீண்ட சரிதையாகும்.

இப்படி இவ்வளவு பேர் இருந்தும் பாரதி எப்படி அற்பாயுளில் செத்தார்? எனக்குப் புதிராகவே உள்ளது. வ.ரா. சொல்வது போல், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவில் யானையைத் தன் தம்பியைப் போல் பாவித்து பழகி வந்திருக்கிறார் பாரதி. இந்த சகோதரத்துவத்துக்கு கோவில் யானை துரோகம் இழைத்து பாரதியைத் தாக்கிவிட்டது அவர் மனதை பெரிதும் பாதித்திருக்கும். காயம் ஒன்றும் அதிகமில்லை. மெய்க்காப்பாளன் குவளைக் கண்ணன் ஓடி வந்து பாரதியைக் காப்பாற்றி விட்டார். ஆனால், மனதில் பட்ட காயம் தான் அவரை நிலை குலையச் செய்துவிட்டது போலும்!

''கல் தூண்

பிளந்துஇறுவ தல்லால் பெரும்பாரம் தாங்கின்

தளர்ந்து வளையுமோ தான்''

''பெரும் பாரம் தாங்கின், தளர்ந்து வளைந்து கொடுக்கும் சுபாவம் பாரதியாரிடம் கிடையாது. எனவே, பிறர் கண்ணுக்குப் படாதபடி, அவருடைய மனம் உடைந்து போயிருக்க வேண்டும். அதனால்தான் அவ்வளவு விரைவில் பாரதியார் மறைந்து போனார்''

பாரதியின் குழந்தைத் தனம், கவித்துவ ஆளுமை, ரௌத்ரம், எல்லையற்ற காருண்யம் என்று எல்லா குணாம்சங்களையும் வ.ரா. இந்த நூலில் சொல்லிச் செல்கிறார். இப்படிப்பட்ட நூலை நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்பே படித்திருக்க வேண்டும். ஆனால் பள்ளியிலும், கல்லூரியிலும் இதையா சொல்லித் தருகிறார்கள்? மிக அவமானகரமான கல்விமுறை நம்முடையது.

பாரதியின் மற்றொரு விசேஷமான அம்சம்-அவரது உரைநடை. உரைநடையைப் பொறுத்தவரை அவரே எனது ஆசான் என்று உறுதியாகச் சொல்லுவேன்.

சமீபத்தில் நான் படித்த யுவன் சந்திரசேகரின் 'விருந்தாளி' என்ற சிறுகதை (காலச்சுவடு, மே-ஜூன் 2002) இப்படித் துவங்குகிறது.

''பாரதியாரைத் தெரிந்தவர்களில் முக்கால்வாசிப் பேருக்கு அவர் கவிஞர் என்பதாகத்தான் தெரிந்திருக்கும். புனைகதையில் சில சிகரங்களை எட்டியவர் அவர் என்பதை அறிந்த கால்வாசிப் பேரில் நானும் ஒருவன்''

''மகாகவி பாரதியார்'' என்ற வ.ரா.வின் நூலை சந்தியா பதிப்பகம் சமீபத்தில் வெளியிட்டுள்ளது. ஆனால் வ.ரா. பற்றிய குறிப்போ, இந்த நூலின் முந்திய பதிப்புகள் பற்றிய விவரமோ எதுவுமே இந்த நூலில் காணப்படவில்லை என்பது மிகவும் வருத்தத்திற்குரிய விஷயம்.

இங்கே எனக்கு எந்த அடையாளமும் இல்லை

இலக்கியவாதிகள் இரவு நேரங்களில் கூடும்போது அது தவிர்க்கவே முடியாமல் மதுபானக் கேளிக்கை இரவுகளாக மாறுவதுண்டு. ஒரு கட்டத்தில் பேச்சு இலக்கியத்திலிருந்து தடம் மாறி சினிமாப் பாடல்களுக்கு வந்து சேரும். ஒருவர் பாட ஆரம்பிக்க, பிறகு அது தொடர் ஆட்டமாக மாறும். என் முறை வரும்போது நான் மறுத்துவிடுவேன். தொடர்ச்சி அறுந்தாலும் முடிச்சுப் போட்டுக்கொண்டு தொடரும் கச்சேரி-அதிகாலை வரை.

அங்கே நான் ஒரு அந்நியனாகவே அமர்ந்திருப்பேன். தில்லியில் பத்து ஆண்டுகள் இருந்தபோது எனக்கு இந்த அனுபவம் ஏற்பட்டதில்லை. அங்கே இருந்த எழுத்தாளர்களுக்கு கலைத்துறைகளில் அனுபவம் அதிகம். தமிழ்நாட்டுக்கு வந்த பிறகு கடந்த பத்தாண்டுகளாகத்தான் எனக்கு இந்த துன்பம்.

இதனால், சினிமாப் பாடல்களுக்கு நான் எதிரி என்று அர்த்தமல்ல. விஸ்வநாதன்-ராமமூர்த்தி ஜோடியை எனக்கு மிகவும் பிடிக்கும். சென்ற வாரம் தொலைக்காட்சியில் 'புதிய பறவை' திரையிடப்பட இருக்கிறது என்றதும் டி.வி. பெட்டியின் பக்கமே செல்லாத நான் மிகுந்த ஆர்வத்துடன் படத்தை போட்டேன். படம் மகா 'போர்'. பார்க்கவே முடியவில்லை. ஆனால் பாடல்கள் இன்றைக்கும் நவீனமாகவே இருந்தன. இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் அதன் வசீகரம் குன்றாது என்பதில் சந்தேகமில்லை. 'உன்னை ஒன்று கேட்பேன், உண்மை சொல்ல வேண்டும், என்னைப் பாடச் சொன்னால், என்ன பாடத் தோன்றும்?' 'பார்த்த ஞாபகம் இல்லையோ', 'எங்கே நிம்மதி?' போன்ற அற்புதமான பாடல்கள் என்றுமே மறக்க முடியாதவை. 'எங்கே நிம்மதி' என்ற பாடலில் நூறு வயலினிஸ்டுகளை அமரச் செய்வதற்கு ஸ்டுடியோவில் இடமின்றி ஏ.வி.எம்.மில் ஒரு தளத்தையே ஏற்பாடு செய்தனர் என்பது அந்தக் காலக்கட்டத்தில் மிகப்பெரிய செய்தி.

விஸ்வநாதன்-ராமமூர்த்தி இரட்டையர் மட்டுமல்ல; கே.வி.மகாதேவன், ஜி.ராமநாதன் (உத்தமபுத்திரன்), எஸ்.வி. வெங்கட்ராமன் (பராசக்தி), சலபதி ராவ், சுதர்ஸன் (நாம் இருவர்) என்று அத்தனை பேரும் என் பிரியத்துக்குரியவர்கள். எம்.கே.தியாகராஜ பாகவதர் என்றால் எனக்கு உயிர். எல்லாம் சரி. இருந்தும் நான் இலக்கியவாதிகளின் பாட்டுக் கச்சேரியில் அந்நியனாக உணர்வதன் காரணங்கள் இரண்டு. ஒன்று, இவர்கள் அத்தனை பேரும் இந்தப் பட்டியலில் இளையராஜாவையும் சேர்த்துக் கொள்வது. இரண்டாவது இசை என்பதற்கு இவர்கள் பூகோள வரையறை வகுத்துவிடுவது.

நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஹொகனேக்கல்லில் பிரம்மராஜன் கவிதைப் பட்டறை ஒன்றை ஒழுங்கு செய்தபோது நானும் அதில் கலந்து கொண்டேன். மூன்று தினங்கள். குளிர்காலம். இரவில் **bon fire** போட்டு சுற்றி அமர்ந்து பாட்டுக் கச்சேரி. எம்.யுவன் மிக நன்றாகப் பாடுவார். ஆயிரம் பாடல்கள் அவருக்கு அத்துப்படி. ஆனாலும் இளையராஜா காரணமாக என்னால் அந்த இரவை ரசிக்க முடியவில்லை. (இளையராஜா ரசிகர்கள் மன்னிக்கவும்).

மேற்கத்திய இசையை எடுத்துக்கொண்டால் பீத்தோவன், வாக்னர், மொஸார்ட் என்ற பெயர்களெல்லாம் இங்கே வெறும் பெயர்களோடு சரி. பிரம்மராஜன் விதிவிலக்கு. நிலைமை இப்படியிருக்கும் போது நான் ஜாஸ், ப்ளூஸ் என்று சொன்னால் அடிக்கத்தான் வருகிறார்கள். பாப் இசை பற்றிப் பேசினாலோ குப்பை என்கிறார்கள்.

ஆனால் 'குப்பை ரோஜா' என்ற பெயரில் ஒருவர் ஆல்பம் வெளியிட்டார். பச்சாத்தா ரோஸா (**Bachata Rosa**) என்றால் ஸ்பானிஷில் குப்பை ரோஜா. **Bachata** என்பது

டொமினிகன் ரிபப்ளிக் நாட்டின் இசை வடிவம். (யாராவது டொமினிகன் ரிபப்ளிக் போயிருக்கிறீர்களா? க்யூபாவுக்கும் புவெர்த்தோ ரீக்கோவுக்கும் இடையிலுள்ள சிறு தீவு டொமினிகன் ரிபப்ளிக். ஹெய்த்தியோடு ஒட்டியது) **bachata** என்ற ஸ்பானிஷ் வார்த்தையின் பொருள் குப்பை.

Bachata Rosa என்ற ஆல்பத்தை சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு வெளியிட்டவர் **Juan Luis Guerra**. வெளியிடப்பட்ட போது 50 லட்சம் காப்பிகள் விற்பனை ஆயின.

Merengue, bachata மற்றும் க்யூபாவின் ஸல்ஸா மூன்றையும் இணைத்த இசை வடிவம் குவெர்ராவினுடையது. மெரிங்கே என்றால் இரண்டு பொருள். ஒன்று முட்டையின் வெள்ளைக் கருவோடு சர்க்கரை கலந்து வறுத்த ஒரு பதார்த்தம். மற்றொன்று-மெரிங்கே இசை. **Bachata**வைப் போல் டொமினிகன் ரிபப்ளிக் நாட்டுக்கு உரியது. லத்தீன் அமெரிக்க இசையின் ஆப்ரிக்க மற்றும் ஸ்பானிஷ் வேர்களைத் தேடும் முயற்சியே குவெர்ராவின் இசை என்று சொல்லலாம். குவெர்ரா ஆங்கிலத்தில் பாடுவதில்லை. ஸ்பானிஷ் மட்டும்தான். ஸ்பானிஷ் புரியாவிட்டாலும் குவெர்ராவை ரசிக்க முடியும். ஏனென்றால், அவரது இசை நமது நாடி நரம்புகளுக்குள்ளும் ஊடுருவி நம்மை நடனமாடச் செய்யும் வலிமை கொண்டது. ஸ்பானிஷ் தெரிந்தால் கூடுதலாக, டொமினிகன் ரிபப்ளிக் மக்களின் சோகத்தையும் நாம் தெரிந்து கொள்ளலாம். **Ojala que Llueva Cafe** என்ற குவெர்ராவின் பாடல் அதற்கு ஒரு உதாரணம். பொருள்: காஃபி மழையாகப் பொழியட்டும்! இதுபற்றி குவெர்ரா சொல்கிறார்; ''நான் ஒரு நாள் வயல்வெளிகளில் நடந்து கொண்டிருந்தபோது ஒரு விவசாயி இந்தப் பாடலைப் பாடுவதைக் கேட்டேன். எங்கள் நாட்டில் எத்தனையோ கவிஞர்கள் தாங்கள் கவிஞர்கள் என்பதே தெரியாமல் வாழ்ந்து இறந்து போகிறார்கள். அப்படி ஒரு கவிஞன் வறுமை தாங்க முடியாமல், காஃபியும் ப்ரெட்டும் இன்னும் அவனுக்கு என்னவெல்லாம் தேவையோ அது எல்லாம் மழையாகப் பொழிவதாகப் பாடியதைக் கேட்டேன். அதுவே இந்தப் பாடல்!''

தில்லியில் இருந்தபோது ஸ்பானிஷ் கற்றுக் கொள்ள முயன்றேன். தமிழிலிருந்து மாறி ஸ்பானிஷில் எழுதலாம் என்பது என் திட்டமாக இருந்தது. ஆனால் இடையில் தமிழ்நாட்டுக்கு வந்து விட்டதால் அந்த முயற்சி பாதியிலேயே நின்றுபோனது. ஸ்பானிஷ் மொழியே இசை... அதில் குவெர்ராவின் இசை.. என்ன சொல்ல... இசையின் இசை!

குவெர்ராவை ரசித்தவர்கள் எனக்கு எழுதுங்கள்.

ஆச்சரியமாக உள்ளது. காண்பது கனவா நனவா என்றே தெரியவில்லை. இரண்டே தினங்களில் இருபத்தைந்து ஈ-மெயில்கள்! சமீபத்தில் பாண்டிச்சேரி சென்றிருந்தபோது வெங்கடேஷின் கணினியில் 'எட்டிப் பார்த்த' போது ஏகப்பட்ட ஈ-மெயில்கள் வந்திருப்பது கண்டு சென்னை திரும்பியதும் ப்ரௌசிங் சென்டர் போனேன். அங்கே பார்த்தால் செம க்யூ. நண்பிகளோடு **Chat** பண்ணுவதற்காக காத்திருக்கும் இளைஞர் கூட்டம். பேசாமல் வீட்டுக்குத் திரும்பி விட்டேன். இன்று காலை என்னுடைய நேரத்தில் சென்றேன். (வீ.ஆர்.நேரம் பத்திலிருந்து ஐந்து!)

சுடலை மணி, பாலகிருஷ்ணன், ஸ்ரீகணேஷ், லஷ்மி நாராயணன், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியன், சரவண பாண்டி ராமையன். பாலாஜி ராமகிருஷ்ணன், ராஜா, பி.எஸ்.நாதன், தியாகராஜன், செல்லதுரை, கந்தசாமி, கே.ராஜாராமன், ரங்கராமன், ஏ.ரமேஷ், செந்தில்குமரன், ஷங்கர் ப்ரதாப் இத்தனை பேரும் யு.எஸ்ஸிலிருந்து எழுதியிருக்கின்றனர். இவர்கள் தவிர சாம்ராஜ் ஆண்ட்ரூஸ் மலேஷியாவிலிருந்து. பற்பநாத பலவேச முத்து-குவைத்.

பல கடிதங்கள் மிக நீண்டவை. குறிப்புகள் எடுத்தபடி படித்துக் கொண்டிருந்தேன். இன்னும் ஐந்தாறு கடிதங்கள் இருந்தன. டக்கென்று மின்சாரம் நின்று போனது. மூன்றாம் உலக நாடு என்பதும் ஞாபகம் வந்தது. மணியைப் பார்த்தேன். இரண்டு மணி நேரம் ஆகியிருந்தது!

இவ்வளவு கடிதங்களிலும் சில பொதுவான அம்சங்கள் இருந்தன. அவை நிச்சயமாக இங்கே குறிப்பிடத் தகுந்தவை. எல்லாக் கடிதங்களுமே அநேகமாகப் பாராட்டியிருக்கும் ஒரு அம்சம், கோணல் பக்கங்களில் தென்படும் வெளிப்படைத் தன்மை. அதன் நேர்மை (**honesty**).

எனக்கு இது மகிழ்ச்சியைத் தருவதற்கு பதிலாக வருத்தத்தையே அளித்தது என்று சொல்லலாம். இத்தனைபேர் பாராட்டுகிற அளவுக்கு வெளிப்படைத் தன்மை என்பது அவ்வளவு அரிதான விஷயமாகவா போய் விட்டது?

அடுத்து, அக்கடிதங்களின் பொதுத்தன்மை-அவற்றை எழுதிய அனைவருமே-ஒருவர் நீங்கலாக-என்னுடைய மற்ற எழுத்துக்கள் எதையுமே படித்ததில்லை என்பதும், இவர்கள் யாரும் இலக்கியச் சிறுபத்திரிகை வட்டத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதும். இது மிகவும் சந்தோஷத்துக்குரிய விஷயம்.

ஒரு மொழியின் இலக்கிய வளர்ச்சி என்பது அதன் இலக்கியவாதிகளின் கையில் மட்டுமே இல்லை. அதற்குச் சூழலும் ஒரு காரணம். சமகாலத் தமிழ் இலக்கியம் வளராமல் இருப்பதற்கு நான் அவதானிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்று இங்கே வாசிப்பவர்களே இல்லை என்பது. திரும்பத் திரும்ப இங்கே எழுத்தாளர்களே வாசகர்களாகவும், விமர்சகர்களாகவும், சிறுபத்திரிகை ஆசிரியர்களாகவும் இருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்து வருகிறது.

ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்றிருந்தேன். கன்னட மொழிக்காரர். பல்கலைக் கழகப் பேராசிரியர். கணிதத்துறை. எனக்கு கணிதம் என்றால் அலர்ஜி. அவர் வீட்டில் பெரிய நூலகம் ஒன்று இருந்தது. கணிதப் புத்தகங்கள்தானே என்று அசட்டையுடன் கண்களை ஓட்டிய எனக்குப் பெரியதோர் அதிர்ச்சி. எனக்குப் பிடித்த அத்தனை புத்தகங்களும் எப்படி ஒரே இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கின்றன?

உதாரணத்திற்கு ஒரு சில பெயர்கள். **Che Guerra, Gabriel Garcia Marquez, Carlos fuentes, Mario Varges Llosa, Regis Debrey, Friedrich Nietzsche, Kierkegaard, William Burroughs, Sadat Hasan Manto, Salman Rushdie, Ronald Sukenick, Jean Genet, Rilke, Julio Cortazar, Donald Barthelme** தொடரும் மிக நீண்ட பட்டியல் அது. எப்படி இது சாத்தியம்? ஏதோ புதையலைக் கண்டவனைப் போல் விழி பிதுங்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். என் வியப்பைப் பார்த்துவிட்டு அந்த கணிதப் பேராசிரியர் 'எனக்குக் கொஞ்சம் படிப்பதில் விருப்பமுண்டு' என்றார்.

இதுதான் வேண்டும். இலக்கியத்தை இலக்கியம் சாராத வேறு துறையினரும் மிகச் சாதாரணமாக வாசிக்கும் நிலை ஏற்பட வேண்டும். ஒரு விமானி, விஞ்ஞானி, தொழிலாளி, மருத்துவர், ஆசிரியர், மந்திரி, செக்ஸ் ஒர்க்கர், நர்ஸ், பாதிரி என்று பல்வேறு தரப்பட்டவரும் இலக்கியப் புத்தகங்களை வாசிக்கக் கூடிய நிலை உருவாக வேண்டும். அதற்கு இது நல்லதொரு துவக்கம் என்று நினைக்கிறேன்.

எனக்குப் பிடித்த எழுத்தாளர்களின் பெயர்ப் பட்டியலை ஆங்கிலத்திலேயே கொடுத்திருக்கும் காரணம்-நீட்ஷே என்ற பெயரை ஆங்கிலத்தில் **Nietzsche** என்று

கண்டுபிடிப்பதற்குள் அரை மணி நேரம் ஆகிவிட்டது என்கிறார் கலிஃபோர்னியாவிலிருந்து கே.ராஜாராமன். கல்லூரி நாட்களில் முதலில் நீட்ஷே என்ற பெயரை ஒரு தொடர்கதையில்தான் பார்த்தேன். அதுவும் தொடர்கதை எழுத்தாளர் நியாட்ஷே என்று தவறுதலாக எழுதியிருந்தார். எனக்கும் அப்போது என்ஸைக்ளோபீடியாவில் கண்டுபிடிக்க அரை மணிநேரம் ஆயிற்று.

ஹூஸ்டன் நகரிலிருந்து செல்லதுரை கந்தசாமி கேட்கிறார், ''எப்படி சாரு நீங்கள் தமிழ்நாட்டில் நடமாடுறீங்க?'' ஸல்மான் ருஷ்டி மாதிரி, தஸ்லீமா நஸ்ரீன் மாதிரி அல்லது குறைந்தபட்சம் அருந்ததிராய் மாதிரி உங்களை ஏன் தண்டிக்கவில்லை என்பது நண்பரின் ஆச்சரியம்.

இதற்கு நீண்டதொரு விளக்கம் அளிக்க வேண்டும். சமீபத்தில் திரைப்பட விழாவுக்காக திருவனந்தபுரம் சென்றிருந்தேன். அங்கே ஒரு ரெஸ்டாரண்டில் எனக்கு எதிரே சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருவர் 'நீங்கள் சாரு நிவேதிதாதானே?' என்று மலையாளத்தில் கேட்டார். ''உங்களுக்கு எப்படி தெரியும்?'' ''பத்திரிகையில் உங்கள் புகைப்படத்தைப் பார்த்திருக்கிறேன்''.

அப்புறம் பேசிக் கொண்டிருந்தபோது தெரிந்தது. அவர் மலையாளத்தில் வெளிவந்திருக்கும் என் ஸீரோ டிகிரி நாவலைக் கூட படித்திருக்கவில்லை. என் பேட்டியை மட்டுமே படித்திருக்கிறார்.

இதுபோல் தமிழ்நாட்டில் இதுவரை எனக்கு நடந்ததேயில்லை. காரணம்-அங்கே சாகித்யக்காரர் என்றால் அவ்வளவு மரியாதை. ஸீரோ டிகிரி மலையாளப் பதிப்பு வெளியீட்டிற்காக சென்ற ஆண்டு கோழிக்கோடு சென்ற போது இதை நான் நேரிலேயே அனுபவித்தேன்.

கோழிக்கோடு பல்கலைக் கழகத்தில் ஒரு சொற்பொழிவு. பின்னர் ஆராய்ச்சி மாணவர்களோடு ஒரு பேட்டி. அவர்களின் கேள்வி மிகவும் அறிவுபூர்வமாக இருந்தது. இந்த இடத்தில் ஒரு இடைச் செருகல். ஒரு தொலைக்காட்சி சேனலில் இலக்கியவாதி ஒருவரை ஒரு பெண் பேட்டி காண்கிறார். இலக்கியவாதி சொல்கிறார், நான் இளவயதில் கையெழுத்துப் பிரதி நடத்தியிருக்கிறேன் என்று, உடனே பேட்டியாளர் இளித்துக் கொண்டே கேட்ட கேள்வி-எத்தனை பிரதிகள் அச்சிட்டீர்கள் என்று! தமிழ்நாட்டின் மௌடீகத்துக்கு இது ஒரு சிறு உதாரணம். இம்மாதிரி ஒரு சேனலில் என்னை பேட்டிக்கு அழைத்தார்கள். நான் சொன்னேன்-முதலில் திரு ரஜினிகாந்தை இந்தக் காலை நேரத்தில் பேட்டி காணுங்கள். பிறகு அது பற்றி நான் ஆலோசிக்கிறேன் என்று.

எழுத்தாளன் என்றால் அவ்வளவு இளக்காரமாகப் போயிற்றா என்று ஒரு சின்ன கோபம். சரி, கோழிக்கோடு விஷயத்துக்கு வருகிறேன். ஒரு மாணவர் என் நாவலை கையெழுத்துப் பிரதியிலேயே படித்திருந்தார். அவர் கேட்டார்-நீட்ஷே கூறும் **Dionysian characteristics**க்கும் உங்கள் நாவலுக்கும் நிறைய பொருத்தங்கள் இருந்தன. உங்களிடம் நீட்ஷேயின் செல்வாக்கு உண்டா?

(இப்படி ஒரு கேள்வியை தமிழ்நாட்டு மாணவனிடம் நான் கனவில் கூட எதிர்பார்க்க முடியுமா?) இதையடுத்து ஏஷியா நெட் டி.வி.யில் ஒரு பேட்டி. அங்கே என்னைப் பேட்டி கண்டவர்- அப்போதுதான் முதல்முதலாக ஸீரோ டிகிரி மலையாளப் பிரதியை என்னிடமிருந்து வாங்கிப் பார்க்கிறார். லேசாகப் புரட்டிப் பார்த்துவிட்டு ''இந்த நாவலின்

அமைப்பும் வடிவமும் ஜூலியோ கொர்த்தஸாரின் **Hopscotch** நாவலை எனக்கு ஞாபகப்படுத்துகிறது'' என்றார்.(அந்த நண்பரின் பெயர்: மாங்காடு ரத்னாகரன்)

நான் மயக்கம் போட்டு விழாத குறை. இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் தமிழ்நாட்டில் ஒரு டி.வி. ஊழியர் இப்படி ஒரு வாசகத்தை சொல்லப் போவதில்லை. இது சத்தியம்.

இந்தப் பேட்டி மறுநாள் ஒளிபரப்பானது. மாலையில் ஸீரோ டிகிரி வெளியீட்டு விழாவில் இதுபோல் இன்னும் மூன்று புத்தகங்களும் அன்றைய தினம் வெளியிடப்பட்டன. நானும் பேசுவதாக இருந்தது. அந்த இடத்துக்கு சென்றேன். கூட்டம் தொடங்க அரை மணி இருந்தது. ஆளாளுக்கு என்னைப் புகைப்படம் எடுத்தார்கள். டி.வி. மற்றும் பத்திரிகைக்காரர்கள். இது எனக்குப் புதிது என்பதால் மிகவும் லஜ்ஜையாகப் போயிற்று. அதனால் ரகசியமாக ஒரு இடத்தைக் கண்டுபிடித்து அங்கே போய் உட்கார்ந்து ஒன்றும் செய்யத் தோன்றாமல் வானத்தை வெறித்துக் கொண்டிருந்தேன். அப்போதும் சுற்றிவர முளைத்தார்கள் புகைப்படக்காரர்கள்.

சிறிது கூட உயர்வு நவிற்சியில் சொல்லவில்லை. இந்தப்படியேதான் நடந்தது. பிறகு கூட்டம். பேச்சு. முடிந்ததும் மற்றொரு டி.வி.யிலிருந்து பேட்டிக்காக அங்கே வருவதாகச் சொல்லியிருந்தனர். ஆனால் கம்யூனிஸ்டு கட்சி ஊர்வலம் காரணமாக அவர்களால் வர இயலவில்லை.

அன்றைய இரவு முழுவதும் ஒரு நீண்ட பேட்டி. காலை ஐந்து மணிக்குத்தான் முடிந்தது. இந்தப் பேட்டி மலையாளம் மற்றும் கலா கௌமுதியில் வெளிவந்தது. இரண்டும் இலக்கியப் பத்திரிகைகள். மலையாளம் பத்திரிகை-வாராந்தரி-சர்க்குலேஷன் ஒரு லட்சம். தமிழ்நாட்டு இலக்கியப் பத்திரிகை சர்க்குலேஷன் வெறும் 500 என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

காலையில் தினசரிகளைப் புரட்டினால் ஒரு இன்ப அதிர்ச்சி! ஏழு தினசரிகளில் முந்தைய தினம் கோழிக்கோடு பல்கலைக்கழகத்தில் நான் ஆற்றிய சொற்பொழிவு வெளியாகியிருந்தது. அவற்றில் இரண்டு ஆங்கில தினசரிகள். ஐந்து மலையாள தினசரிகள்.

இதுபற்றி என் மலையாள நண்பர்களிடம் ஆச்சரியமாகப் பேசிக் கொண்டிருந்தேன். தமிழ்நாட்டில் ஒரு சினிமா நடிகருக்குத்தான் இப்படிப்பட்ட மரியாதை கிடைக்கும் என்றேன்.

என் நண்பர் என்னை ஆதரித்தார். ''சாரு சொல்வது சரிதான். நான் ஒருமுறை சென்னை சென்றிருந்த போது குஷ்புவுக்கு குழந்தை பிறந்தது என்று தமிழ் தினசரியில் தலைப்புச் செய்தி போட்டிருந்தது'' என்று சொன்னார் நான் தலையில் அடித்துக் கொண்டேன்.

எனவே செல்லதுரை, இங்கே தமிழ்நாட்டில் நான் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். யாரும் கவனிக்க மாட்டார்கள்- ஏனென்றால் இங்கே எனக்கு எந்த அடையாளமும் இல்லை. **I am a nobody here**.

இதையே ஸீரோ டிகிரியில் வேறு மாதிரி சொல்லியிருக்கிறேன்-I am a goldsmith among beggars!

செல்லதுரை கேட்பது போல் பாரிஸில் ஒரு பெண் கேட்டாள்.

பாரிஸில் இருக்கும் என் நண்பர் அர்விந்த் அப்பாதுரையின் பங்க்கர். வீட்டுக்குக் கீழே பூமிக்கடியில் உள்ள அவருக்கான பிரத்தியேக அறை. தவழ்ந்து தான் உள்ளே நுழைய வேண்டும். உள்ளே போய் விட்டால், பெரிய அறை. நூற்றுக்கணக்கான இசைத்தட்டுகள். மங்கலான ஸர்ரியல் தன்மை கொண்ட இருளைப் போர்த்திக் கொண்டிருக்கும் வெளிச்சம். இருபது பேர் இருக்கலாம். அர்விந்த், கலாமோகன், கற்சுறா, நான் - எங்கள் நால்வரைத் தவிர மற்றவர்கள் ஃப்ரெஞ்சுக்காரர்கள். நேரம் கூடக்கூட ஆட்கள் வந்து கொண்டேயிருந்தார்கள்.

கைகளில் ஒயின் போத்தல்கள். நிறைய பேர் பெண்கள். (இங்கே தமிழ்நாட்டில் என்றால் ஒரு பெண்ணைக் கூட பார்க்க முடியாது. **Gay Club** மாதிரி நூற்றுக்கு நூறு ஆண்களாகவே இருப்பர்!) எல்லோரும் நடனமாடிக் கொண்டிருந்தனர். வட்டத்தினுள்ளே சுழன்று ஆடியபடி நான். சற்றே களைத்ததும் நான் வட்டத்துக்கு வந்துவிட, வட்டத்திலிருந்து ஒரு ஆணோ பெண்ணோ மையத்துக்கு வந்து ஆடுவார்கள். இப்படியாக உற்சாகம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்த அந்த இரவில் கலாமோகன் 'ஒரு நிமிடம்' என்று சொல்லி, அனைவரிடமும் எனக்கு அன்று பிறந்தநாள் என்பதை அறிவித்தார். எல்லோரும் ப்ரெஞ்சில் வாழ்த்துப் பாடல் பாடி, என்னைப் பேசுவதற்கு அழைத்தனர். 'என்ன பேசுவது?' 'உங்கள் எழுத்தைப் பற்றிப் பேசுங்கள்' என்றார்கள் கோரஸாக. வந்திருந்தவர்கள் அத்தனை பேரும் கலைஞர்கள். ஸ்டீஃபானி என்ற பெண் நாவலாசிரியை. சிலர் ஓவியர்கள். நாடகக்காரர்கள். நடனக் கலைஞர்கள்.

என் எழுத்தைப் பற்றிப் பேசினேன். **Marquis de Sade, Luis Ferdinand Celine, Jean Genet, George Bataille, George Perec** போன்றவர்களின் பாதிப்பை என் எழுத்தில் பார்க்கலாம் என்றேன். ஒரு பத்து நிமிடம் என் ப்ரோக்கன் ஆங்கிலத்தில் பேசினேன். கலாமோகன் 'மொழி பெயர்க்கவா?' என்று கேட்டார். 'எங்களுக்குப் புரிந்துவிட்டது' என்றார்கள் அவர்கள். (கலாமோகன் ஃப்ரெஞ்சில் நிபுணர். தமிழிலும் ஃப்ரெஞ்சிலும் எழுதுபவர்).

ஒரு பெண் ஆச்சரியத்துடன் சொன்னாள்-நீங்கள் சொல்லும் எழுத்தாளர்களை நாங்களே முழுமையாகப் படிக்கவில்லை. கேள்விப் பட்டிருக்கிறோம். விதிவிலக்கு என்று ஜெனேயை மட்டும் சொல்லலாம். ஆச்சரியம் என்னவென்றால்-நீங்கள் சொன்ன எழுத்தாளர்களையெல்லாம் படித்தவர்கள் இங்கேயும் உண்டு. ஆனால் அவர்களுக்கு 70 வயது இருக்கும். **Sorbonne**இல் பேராசிரியர்களாக மட்டுமே அவர்களை நாங்கள் அறிவோம். இப்படி ஒரு இளைஞராக அல்ல!

(ஒரு இடைச்செருகல்-நம் ஊரில்தான் நாற்பதை நெருங்கினாலே முதுமை என்று சொல்லிவிடுகிறார்கள். அங்கே அறுபது வரை இளைஞன் தான்)

ஸ்டீஃபானி கேட்டாள்-அதெல்லாம் சரி சாரு, உங்கள் தமிழ்நாட்டில் உங்களை எப்படி வெளியில் விட்டு வைத்திருக்கிறார்கள்?

எதுவுமே கற்பனை அல்ல

✸ஏழாவது உலகத் திரைப்பட விழா -திருவனந்தபுரம்✸

‘நல்ல கதை கிடைக்கவில்லை‘ என்பது நமது சினிமாத் துறையில் அடிக்கடி சொல்லப்படும் ஒரு விஷயம். கதை கிடைத்தாலும் அதை வைத்துக்கொண்டு நாள் கணக்கில், மாதக் கணக்கில் நட்சத்திர ஓட்டலில் ‘டிஸ்கஷன்‘ என்று ஒரு சடங்கு. இவ்வளவு நடந்தும் தமிழ் சினிமா, உலக சினிமா அரங்கில் இடம்பிடிக்க முடியவில்லை.

ஆனால் உலக சினிமா எப்படி இருக்கிறது? கடந்த ஏப்ரல் மாதம் திருவனந்தபுரத்தில் நடந்த ஏழாவது திரைப்பட விழாவுக்குச் சென்றபோது அதைத் தெரிந்துகொள்ள மேலும் ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதிலும் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளிலிருந்து வந்த படங்களுக்கு முதலிடம் கொடுத்து பார்த்தேன். என் எதிர்பார்ப்பு வீண்போகவில்லை.

The day I became a woman என்று ஒரு ஈரானியப் படம். அதன் கதை என்ன தெரியுமா?

அகர் என்று ஒரு சிறுமி. அவளுக்கு அன்றைய தினம் ஒன்பதாவது வயது ஆரம்பிக்கிறது. ஈரானில் பெண்ணுக்கு ஒன்பது வயது ஆகிவிட்டால் பருவமடைந்து விட்டதாக அர்த்தம். அன்றிலிருந்து பர்தா அணிய வேண்டும். ஆண் பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடக் கூடாது.

அகரை பர்தா அணியச் சொல்கிறார்கள் அம்மாவும், பாட்டியும். அவளுக்கோ தன் தோழனுடன் தெருவில் சென்று விளையாட வேண்டும். சிறுவன் அகர் வீட்டு வாசலில் நின்று கூப்பிட்டுப் பார்த்துவிட்டு போய் விடுகிறான். ‘‘12 மணிக்குத் தானே பெரியவளாகிறேன். இப்போது மணி 11. இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறது. விளையாடி விட்டு வருகிறேன்‘‘ என்கிறாள் அகர்.

அம்மா சம்மதித்தாலும் பாட்டி விடுவதாக இல்லை. சிறுமிக்கும் பாட்டிக்கும் விவாதம்.

‘‘இப்படிப் பேசியே என் ஒரு மணி நேரத்தில் பத்து நிமிடம் போய்விட்டது‘‘ என்று சிணுங்குகிறாள் சிறுமி.

‘‘சரி, போ. ஆனால் பனிரண்டு மணி ஆகிவிட்டது என்று உனக்கு எப்படித் தெரியும்?‘‘

‘‘கடிகாரத்தை எடுத்துக் கொண்டு போகிறேன்‘‘

கடிகாரத்துக்கு பதிலாக ஒரு குச்சியைக் கொடுக்கிறாள் பாட்டி. குச்சியை வெயிலில் வைத்துக் காண்பிக்கிறாள். நீண்ட நிழல் விழுகிறது. நிழலே விழவில்லை என்றால் மணி பனிரண்டு.

‘இன்னும் முக்கால் மணி நேரம் விளையாடலாம்‘ என்று தோழனைத் தேடுகிறாள் அகர். குச்சியை தரையில் வைத்து வைத்துப் பார்த்தபடியே சிறுவனின் வீட்டுக்கு வருகிறாள். ஆனால் ஹோம் ஒர்க் செய்ய வேண்டுமென்று சிறுவன் விளையாடுவதற்குத் தடை விதித்து விடுகிறாள் அவன் அம்மா.

மிட்டாய் வாங்கி வரச் சொல்லி, தன் வீட்டின் ஜன்னலிலிருந்து அகரிடம் காசு தருகிறான் சிறுவன்.

அகர் கடிகாரக் குச்சியை தரையில் வைத்துப் பார்க்கிறாள். நிழல் மிகவும் நெருங்கி வருகிறது. பரபரப்புடன் ஓடிப்போய் குச்சி மிட்டாய் வாங்கிக் கொண்டு வருகிறாள்.

இவள் ஒரு வாய். சிறுவன் ஒரு வாய். ஜன்னலின் உயரம் எட்டவில்லை என்பதால் எக்கி எக்கித் தருகிறாள். இந்தக் காட்சி மட்டும் படத்தில் ஐந்து நிமிடங்களுக்கு மேல் செல்கிறது. மிட்டாய் தீர்ந்து போகிறது. அகரின் அம்மா வந்து அவளுக்கு பர்தாவைப் போட்டு அழைத்துச் செல்கிறாள். முப்பது நிமிடம் ஓடும் முதல் பகுதி இது.

இதே படத்தின் அடுத்த கதையில் இரண்டு டஜன் பெண்கள் சைக்கிளில் வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றனர். கடற்கரையை ஒட்டிய சாலை. அது ஒரு சைக்கிள் ரேஸ். படத்தில் 25 நிமிடம் வரும் இந்தக் கதை முழுவதும் சைக்கிள் ரேஸ் மூலமாகவே சொல்லப்படுகிறது.

கதாநாயகி தலோயை குதிரையில் துரத்தியபடி வருகிறான் அவள் கணவன். அவள் ரேஸில் கலந்து கொள்வதில் அவனுக்கு விருப்பமில்லை. உடனே திரும்பி வரச் சொல்கிறான். 'வராவிட்டால் தலாக் செய்துவிடுவேன்.' அப்போதும் அவள் வரவில்லை. தலாக் சொல்லிவிட்டுப் போய்விடுகிறான்.

சைக்கிள் ரேஸ் தொடர்ந்தபடியே இருக்கிறது. பிறகு அவளுடைய சகோதரர்கள் வந்து அவளை அடித்து உதைத்து சைக்கிளை உடைத்துப் போட்டு விட்டுப் போகிறார்கள். தலோய் நடந்தே நகரத்துக்கு வந்து சேர்கிறாள்.



இதை அடுத்து ஒரு மூதாட்டியின் கதை. இப்படி மூன்று பகுதிகளைக் கொண்ட படம் இது. குறைவான வசனங்களால் மிக வலுவாக உருவாக்கப்பட்ட இந்தப் டத்தின் இயக்குனர் **Marziyeh Meshkini** என்ற முப்பத்து மூன்று வயதுப் பெண்.

Jafar Panahi

மற்றொரு ஈரானியப் படம்-வட்டம். மகப்பேறு மருத்துவமனையில் படம் துவங்குகிறது. தன் பேத்திக்கு மகள் பிறந்திருக்கிறாள் என்றதும் மரணச் செய்தியைக் கேள்வியுற்றது போல் அதிர்ச்சி அடைகிறாள் ஒரு மூதாட்டி. எல்லாப் பெண்களின் முகத்திலும் திகில். ''ஸ்கேன் டெஸ்டில் ஆண் குழந்தை என்று சொன்னார்களே?'' என்று நர்ஸிடம் கேட்கிறாள் கிழவி. மாப்பிள்ளை வீட்டுக்கு இப்போது என்ன பதில் சொல்வது என்று கவலைப்படுகிறாள் மற்றொரு பெண்.

அடுத்த காட்சியில் மூன்று பெண்கள் சிறையிலிருந்து பரோலில் வருகிறார்கள். முறையான அடையாள அட்டை இல்லாததால் ஒரு பெண்ணால் வெளியூருக்கு செல்ல முடியவில்லை. பெண்கள் வெளியூர் செல்ல வேண்டுமானால், ஒன்று, ஆண் துணை இருக்க வேண்டும். அல்லது, முறையான அடையாள அட்டை வேண்டும்.

சிறையில் இருக்கும் ஒரு பெண் கர்ப்பமாகிவிடுகிறாள். திருமணம் ஆகாதவள். அபார்ஷன் செய்து கொள்வதற்காக சிறையிலிருந்து தப்பி வீட்டுக்கு வருகிறாள். வீட்டில் அவளை அடித்துத் துரத்தி விடுகின்றனர். அபார்ஷன் செய்து கொள்வதற்காக யார் யாரையோ உதவி கேட்கிறாள். நெருங்கிய தோழி ஒருத்தியிடம் செல்கிறாள். அவள் ஒரு சினிமா தியேட்டரில் டிக்கெட் விற்பவள். அப்போது அங்கே வரும் இன்னொரு பெண்ணை அறிமுகப்படுத்துகிறாள் நம்பர் டூ என்று.

''அப்படியென்றால்?''

''நான் ஜெயிலில் இருக்கும்போது குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்காக என் கணவன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டான்''

ஒரு பெண் தன்னுடைய இரண்டு வயது மகளை சாலையில் அனாதையாக விட்டுவிட்டு ஓடி மறைகிறாள். அந்தக் குழந்தை தனியாக அழுதுகொண்டிருக்கிறது.

லிஃப்ட் கேட்ட ஒரு செக்ஸ் ஒர்க்கரை தன் காரில் ஏற்றிச் சென்ற ஒரு தொழிலாளியை போலீஸ் பிடித்துக் கொள்கிறது. நெருங்கிய உறவினரைத் தவிர அந்நியப் பெண்களை காரில் அழைத்துச் செல்வது குற்றம். தொழிலாளி போலீஸ்காரர்களின் கால்களில் விழுந்து கெஞ்சிக் கூத்தாடி ஓடி விடுகிறான். ஆனால் அந்தப் பெண் சிறைக்கு கொண்டு செல்லப்படுகிறாள். வேனுக்குள் ஏறியவுடன் சிகரெட்டைப் பற்ற வைக்கிறாள். 'இங்கே சிகரெட் குடிக்கக்கூடாது' என்று கத்துகிறான் ஒரு போலீஸ்காரன்.

ஒரு இடைச்செருகல்-படத்திலேயே இந்த செக்ஸ் ஒர்க்கர் மட்டும்தான் மற்ற பெண்களைப் போல் அஞ்சி நடுங்காமல் தன்னம்பிக்கையுடனும் தைரியமாகவும் இருக்கிறாள்.

வேனுக்குள் இருக்கும் மற்றொரு கைதி சிகரெட் பிடிப்பதற்காக அந்தப் போலீஸ்காரர்களை கெஞ்சி, தாஜா செய்து, அவர்களுக்கும் சிகரெட் கொடுத்து தானும் குடிக்கிறான். அடுத்த கணம் அந்த செக்ஸ் ஒர்க்கர் அலட்சியமாக காலின் மேல் கால் போட்டு தன் சிகரெட்டைப் பற்றை வைக்கிறாள். (படத்தின் இறுதிக் காட்சியில் அத்தனை பெண்களும் சிறையின் ஒரே அறையில் ஒடுங்கிக் கிடக்கிறார்கள்.)

எது குற்றம் என்றே தெரியவில்லை. எல்லாமே குற்றம். குற்றம் செய்தால் சிறை. பெண்கள்தான் தீவிரமான கண்காணிப்புக்கு உள்ளாகிறார்கள். சிறு குழந்தையிலிருந்து கிழவி வரையிலும் பயந்து நடுங்குகின்றனர். படம் முழுவதும் போலீஸ்தான் எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருக்கின்றனர்.

ஈரானிய சமுதாயம் முழுக்க முழுக்க ஆண்களின் உலகமாகவே இருப்பது இப்படத்தில் மிக வலுவாகப் பதிவாகியுள்ளது. ஆனால் ஒரு ஆச்சரியம். பணியிடங்களில் பெண்களை சர்வசாதாரணமாகக் காண முடிகிறது. ஆண்களைவிட பெண்கள்தான் அதிகமாக கார் ஓட்டுகிறார்கள். முக்கால்வாசிப் பெண்கள் புகைக்கிறார்கள். ஆனால் சாலையில் புகைக்கக்கூடாது. ஆண்கள் எங்கே வேண்டுமானாலும் புகைக்கலாம். அதேபோல் பெண்கள் சிறைக்குச் செல்வதும் சர்வசகஜமாக உள்ளது. சிறைக்குச் செல்லாத பெண்களே இல்லையோ என்று எண்ண வைக்கிறது.

ஆண்களைப் போலவே பெண்களையும் வெளியிடங்களில் காண முடிந்தாலும் அதே அளவு ஈவ் டீசிங்கும் பரவலாக இருக்கிறது. தெருவில் நடந்து செல்லும் பெண்களை மோட்டார் சைக்கிளில் செல்பவன் 'பின்னால் ஏறிக்கொள்கிறாயா?' என நக்கலாகக் கேட்கிறான். அவளது பிருஷ்டத்தில் தட்டுகிறான். பஸ்ஸில் நடுத்தர வயதுடைய ஒருவன் ஒரு பெண்ணை இடிக்கிறான். பதிலுக்கு அவள் திட்டுகிறாள். அரபி மொழியில் (ஈரானில் அரபி தானே?) இத்தனை வசை வார்த்தைகள் உண்டா என்று ஆச்சரியமாக இருக்கிறது. இப்படத்தின் இயக்குனர்: **Jafar Panahi**

°°பாத்திமா என்ற துனீஷியப் படம். துனீஷியா முந்தைய ஃப்ரெஞ்ச் காலனி என்பதால் ஃப்ரான்ஸைப் போலவே இருக்கிறது. மினி ஸ்கர்ட், ஸீ த்ரூ ஆடைகள், நிர்வாண குளியல் காட்சிகள், பார்ட்டியில் வெள்ளமாய் ஓடும் ஒயின் என்று ஏகதேசம்.. ஆஃப்கனுக்கும் துனீஷியாவுக்கும்தான் எத்தனை பெரிய வித்தியாசம்! சொல்ல மறந்து விட்டேனே... துனீஷியா ஒரு இஸ்லாமிய நாடு!

ஃபாத்திமாவுக்கு வயது 17. அம்மா இறந்துவிடுகிறாள். ஒரு நாள் ஃபாத்திமாவை அவளுடைய உறவினன் ஒருவன் கற்பழித்து விடுகிறான். அவள் தந்தை இரண்டாவது திருமணம் செய்து கொள்கிறார். தலைநகர் துனிசுக்குச் சென்று மேற்படிப்பு படிக்க ஃபாத்திமாவுக்கு விருப்பம். அப்பா மறுக்கிறார். எப்படியோ அவரை வற்புறுத்தி அனுமதி பெற்று துனிஸ் செல்கிறாள்.

அங்கே ஃபாத்திமாவுக்கும் முராத் என்ற மாணவனுக்கும் உறவு ஏற்படுகிறது. படிப்பு முடிந்து ஒரு கிராமத்துக்கு ஆசிரியையாக வேலைக்குச் செல்கிறாள் ஃபாத்திமா. அங்கே அஸிஸ் என்ற டாக்டருடன் காதல். இருவரும் திருமணம் செய்துகொள்ள முடிவெடுக்கின்றனர்.

திருமணத்துக்கு முன்பு ஃபாத்திமா ஒரு டாக்டரைப் பார்த்து தன் ஹைமனை தைத்துக் கொண்டு விடுகிறாள். இதுபற்றிய குற்றவுணர்வுடன் டாக்டரிடம் ஆலோசனை கேட்க ''இதுபோல் இங்கே பல பெண்கள் வந்து தைத்துக் கொண்டு போகிறார்கள். நீ ஒன்றும் கவலைப்படாதே. இந்த விஷயத்தை இதோடு மறந்துவிட்டு சந்தோஷமாக இரு'' என்று அறிவுரை சொல்கிறார்.

Khaled Ghorbal.

ஃபாத்திமா-அஸிஸ் மணவாழ்க்கை இனிதே செல்கிறது. ஒரு நாள் ஒரு பார்ட்டியில் அந்த டாக்டரைப் பார்த்து விடுகிறாள் ஃபாத்திமா. அவரும் அஸீஸும் நண்பர்கள். குற்றவுணர்வு தாங்க முடியாமல் கணவனிடம் உண்மையைச் சொல்லிவிடுகிறாள்.

அஸிஸ் அதிர்ச்சி அடைகிறான். அவன் ஃபாத்திமாவை வர்ஜின் என்றல்லவா நினைத்திருந்தான்? 'நீ வர்ஜினா? முதலில் அதைச் சொல்' என்று கேட்கிறாள் ஃபாத்திமா. ''அது வேறு விஷயம்'' என்று சொல்லி தலாக் கொடுத்து விடுகிறான் அஸிஸ்.

''நாம் என்ன கற்காலத்திலா வாழ்ந்து கொண்டிருக்கிறோம்?'' என்று ஆக்ரோஷத்துடன் கேட்டுவிட்டு வீட்டைவிட்டு வெளியேறுகிறாள் ஃபாத்திமா. இப்படத்தின் இயக்குனர்: Khaled Ghorbal.

'ஒரு கவிஞன்' என்ற இந்தோனேஷியப் படம். இதன் இயக்குனர் **Garin Nugroho**. இப்படத்தின் கதை கற்பனை அல்ல. நிஜம். 1960-களில் இந்தோனேஷியாவில் நடந்த மாபெரும் படுகொலைகளை நேரில் கண்டவர் இப்ரஹீம் காதிர் என்ற கவிஞர். இவரேதான் இப்படத்தில் தன் சொந்தப் பெயருடன் நடித்திருக்கிறார். நடிப்பு என்று இதைச் சொல்ல முடியாது. 35 ஆண்டுகளுக்கு முன்பு தான் கண்டதை மறு உருவாக்கம் செய்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். சரித்திரத்தின் அந்தக் கால கட்டத்தை திரும்பவும் வாழ்ந்திருக்கிறார் காதிர்.

Garin Nugroho

தான் கண்ட கொடுமைகளை கவிதையாய்ச் சொல்லுகிறார் இப்ரஹீம் காதிர். அவர் சொல்லச் சொல்ல அறுபதுகளின் காட்சிகள் அரங்கேறுகின்றன. கொல்லப்பட்ட அப்பாவி மக்களின் மொத்த எண்ணிக்கை இருபது லட்சம். இப்படுகொலைக்கு காரணமாக அமைந்த சம்பவம்- ஜாகர்த்தாவில் 1965 ஆம் ஆண்டு அக்டோபர் 12 ஆம் தேதி ஏழு ராணுவ ஜெனரல்கள் கொல்லப்பட்டது. இந்தக் கொலையைச் செய்தது கம்யூனிஸ்டுகள் என்று முடிவு கட்டிய அரசு பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களைக் கைது செய்தது. கைது செய்யப்பட்டவர்களில் ஓரிருவரைத் தவிர வேறு யாரும் வீடு திரும்பவில்லை. அவர்கள் விசாரணையின்றி கொல்லப்பட்டார்கள். எனவே போலீஸ் யாரைத் தேடி வருகிறதோ அது மரணத்திற்கான அழைப்பாகவே கருதப்பட்டது. பயத்தில் கதறக்கதற மக்கள்

போலீசாரால் இழுத்துச் செல்லப்பட்டார்கள். அப்படிக் கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர்தான் இப்ரஹீம் காதிர் என்ற கவிஞர்.

படம் முழுவதும் சிறைக் கூடத்திலேயே எடுக்கப்பட்டுள்ளது. ஒரே ஒரு காட்சி மட்டும் ஒரு வீட்டின் உட்புறம். படத்தில் 'வெளி' என்பதே இல்லை. ஆகாயம் இல்லை. சாலைகள் இல்லை. வாகனங்கள் இல்லை. அருவிகள் இல்லை. காடுகளோ மரங்களோ இல்லை. எதுவுமே இல்லை. இருப்பதெல்லாம் வெறும் சிறைச் சுவர்கள். அதற்குள் அடைபட்டுக் கிடக்கும் மனிதர்கள்.

இப்ரஹீம் காதிர் படம் முழுக்க ஒரு நீண்ட கவிதையைப் பாடுகிறார். இந்தோனேஷியாவின் பாரம்பரியக் கவிதை வடிவமான **Didong** இல் அமைந்த அந்தக் கவிதையின் மூலம், தான் கண்ட துயரக் காட்சிகளை விளக்குகிறார் காதிர். அந்த மிக நீண்ட கவிதையை அவர் பாடி முடிக்க ஒரு வாரம் ஆகிறது. அந்த ஒரே வாரத்தில் எடுக்கப்பட்டதுதான் இந்தப் படமும். படத்தில் எதுவுமே கற்பனை அல்ல.

ஒரு கம்யூனிஸ்ட் அனுதாபியை ராணுவத்தினர் கைது செய்கின்றனர். அப்போது அவன் சொல்லுகிறான்... சித்தாந்தம் மனிதர்களைக் காப்பாற்றும் என்று நம்பினேன். ஆனால் இப்போதுதான் புரிகிறது, சித்தாந்தம் மனிதர்களைக் கொல்லும் என்பது!

படம் நெடுகிலும்-மனிதர்களின் துயர ஓலமும், துப்பாக்கிச் சத்தமும், அடியும், அலறலும், பூட்ஸ் கால்களின் ஓசையும், துருப்பிடித்த சிறைக்கதவுகளின் கிறீச்சிட்ட சப்தங்களும், இது எல்லாவற்றுக்கும் ஊடாக இப்ரஹீம் காதிரின் கவிதையும்...

சிறையில் அடைக்கப்படும் மனிதர்களின் பெயர்களை அவ்வப்போது ஒருவன் வந்து அறிவிக்கிறான். அழைக்கப்பட்டவர்கள் முன்னே வருகிறார்கள். (எல்லோரும் லுங்கியும் சட்டையும்தான் அணிந்திருக்கின்றனர்.) அவர்களின் கைகளைக் கயிற்றால் கட்டுகிறான் ஒருவன். மற்றொருவன் அவர்களின் முகத்தை மறைப்பதற்காக சாக்குப் பையை தலையின் மேல் போட்டு மூடுகிறான். இந்த மற்றொருவன்தான் இப்ரஹீம் காதிர். அவருக்கு சிறையில் கொடுக்கப்பட்ட வேலை இதுதான். தூக்கில் தொங்கப் போகிறவர்களுக்கு சாக்கு போடுவது.

ஒரு கட்டத்தில் சாக்குகள் போதவில்லை. சந்தையிலிருந்து சாக்குகளை வாங்கி வரும் பெண் சொல்கிறாள்... ''இந்தக் காரணத்துக்காகத்தான் சாக்கு வாங்குகிறேன் என்று தெரிந்ததும் வியாபாரிகள் சாக்குகளை விற்க மறுக்கிறார்கள்.''

''போ... போ... வேறு எங்கிருந்தாவது சாக்குகளை வாங்கி வா. இல்லாவிட்டால் உனக்கும் சாக்குதான்'' என்று அவளை விரட்டி அடிக்கிறான் சிறைக்காவலாளி. அப்போது இப்ரஹீம் காதிரின் கவிதை கேட்கிறது....

''சாக்குகள் என்பதை நாங்கள் தானியம் சேகரிப்பதற்காக அல்லவா வைத்திருந்தோம்...

கயிறுகள் என்பதை நாங்கள் மாடுகளைப் பிணைப்பதற்காக அல்லவா வைத்திருந்தோம்...

மானிடனே!

நீ எப்போது சாக்கையும் கயிறையும் கொலைக் கருவிகளாய் மாற்றினாய்?

மனிதன் என்பவன் இறைவனின் உன்னத சிருஷ்டி அல்லவா? அப்படியிருக்கும் போது நீ ஏன் அவனைக் கொலை செய்து இறைவனை அவமதிக்கிறாய்?''

37 ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததை எண்ணி கவிதையில் உருகுகிறார் இப்ரஹீம் காதிர்.

கம்யூனிஸ்ட் புரட்சிக்காரர் என்று குற்றம்சாட்டப்பட்டு எந்த விசாரணையும் இல்லாமல் சிறையில் அடைக்கப்பட்ட காதிர் பின்னர் 22 தினங்கள் கழித்து விடுதலை செய்யப்பட்டார். 'தவறுதலாக கைது செய்துவிட்டோம்' என்றது ராணுவம்.

இந்தப் படத்தில் நடித்திருப்பவர்களும் இப்ரஹீம் காதிருடன் சிறையில் இருந்து கொல்லப்பட்டவர்கள் போக, எஞ்சியவர்கள்தான்.

சிறைக் கூடத்தில் ஒரு காட்சி-அது மிகச் சிறிய ஒரு அறை. இப்ரஹீம் காதிரும் அவரது நண்பர்களும் படுத்துக் கிடக்கின்றனர். ஒருவர் மீது ஒருவராக. ஒருவர் தலையில் ஒருவர் கால் என்று தாறுமாறாகக் கிடக்கின்றனர். அப்போது ஒவ்வொருவரும் தங்கள் மனைவியை முதன்முதலாகச் சந்தித்தது பற்றிச் சொல்ல வேண்டும். ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமாகச் சொல்ல ஒரே கும்மாளமும் கூத்துமாகக் கிடக்கிறது அறை. 'இப்ரஹீம், உங்கள் கதையைச் சொல்லுங்கள், என்ன தப்பி விடலாம் என்று பார்க்கிறீர்களா?''-ஒரு குரல் கேட்கிறது. ''அது என்ன கதை, பெரிய கதை! அவளை முதன் முதலாகப் பார்த்த போது எனக்கு வேறொரு விஷயத்தைப் பற்றித் தான் பெரிய ஆச்சரியம்.. இவ்வளவு நாள் வானத்தில் கிடந்த அந்த நிலா எப்படி என் மடிக்கு வந்தது என்று!'' எல்லோரும் கொல்லென்று சிரிக்கிறார்கள்.

திடீரென்று ஒரு மௌனம் சூழ்கிறது. இனிமேல் தங்களின் அன்புக்குரிய மனைவிமார்களைப் பார்க்க முடியாதே என்ற துயரத்தின் மெல்லிய காலடி அங்கே கேட்கத் துவங்குகிறது.

படத்தின் இறுதிக் காட்சியில்-எல்லோரும் வட்டமாகச் சுற்றி அமர்ந்து பாடுகின்றனர். பத்து நிமிடம் ஓடும் இந்தக் காட்சியை எப்படி விளக்குவது என்றே தெரியவில்லை. இந்தோனேஷியாவின் இஸ்லாமியக் கலாச்சாரத்தில் இசையின் முக்கியத்துவம் எவ்வளவு ஆழமானது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

காட்சியமைப்பு, நடிப்பு, ஒளி, இசை, வசனம் போன்றவற்றில் உச்சங்களைத் தொட்டிருக்கும்-கறுப்பு வெள்ளையில் தொண்ணூறு நிமிடங்கள் ஓடும் இத்திரைப்படம் வாழ்நாள் முழுதும் மறக்க முடியாத ஒரு காவியம் என்றுதான் சொல்ல வேண்டும். படத்தில் மற்றொரு காட்சியில்-இப்ரஹீம் காதிரை நீண்ட காலம் கழித்து தற்செயலாகச் சந்திக்க நேரும் ஒரு ராணுவ அதிகாரி ''என்ன இப்ரஹீம்.. உன் அரசியல் எப்படி இருக்கிறது?'' என்று விசாரிக்கிறார். அதற்கு இப்ரஹீம் காதிர் ''எனக்கு வேறு வேலை இருக்கிறது. சின்ன வயதிலிருந்தே செய்துகொண்டிருக்கும் வேலை'' என்கிறார்.

''என்ன வேலை?''

''மீன் பிடிப்பது'' என்று சொல்லிவிட்டு தூண்டிலோடு குளத்தை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறார் காதிர்.

இந்தோனேஷியாவில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நிறைய தமிழர்கள் வாழ்ந்தனர். எங்கள் ஊரிலிருந்து கூட (நாகூர்) நிறைய பேர் அங்கே 'ஸபர்' சென்றதுண்டு. எல்லாம் முந்திய தலைமுறை. இப்போது வளைகுடா நாடுகளுக்குத்தான் செல்கின்றனர். நிற்க.

இப்போதும் இந்தோனேஷியாவில் தமிழர்கள் உண்டா? உண்டெனில், அவர்களால்தான் கீழ்க்கண்ட என் சந்தேகங்களை விளக்க முடியும்.

Atjeh என்ற பகுதி இந்தோனேஷியாவில் எங்கே உள்ளது? இப்ரஹீம் காதிர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். இப்போதும் அவர் **Atjeh**வில் தான் இருக்கிறாரா? அவரது கவிதைகளை நீங்கள் யாரேனும் படித்ததுண்டா? இப்படத்தின் இயக்குனர் **Garin Nugroho**வை உங்களுக்குத் தெரியுமா? அந்த 40 வயது இளைஞர் இந்தோனேஷியப் பத்திரிகைகளில் நிறைய சினிமா விமர்சனம் எழுதுபவர். அவரையோ இப்ரஹீம் காதிரையே வாழ்நாளில் ஒருமுறை சந்திக்க விரும்புகிறேன். கையில் தூண்டில், இடுப்பில் லுங்கியோடு எங்கேனும் ஒரு குளக்கரையில் மீன் பிடித்தபடி நின்று கொண்டிருக்கும் அந்தக் கவிஞரை நீங்கள் பார்த்தால் என் 'ஸலாமை' அவருக்குச் சொல்லுங்கள்.. இன்ஷா அல்லாஹ்!

Majid Majidi

பரான் என்றால் மழை. மஜீத் மஜீதி (**Majid Majidi**) இயக்கிய படம். ஆஃப்கானிஸ்தானிலிருந்து பிழைப்புக்காக ஈரான் வரும் கூலியாட்களைப் பற்றிய படம். படத்தின் பெரும் பகுதி ஒரு கட்டிடம் கட்டும் இடத்தில்தான் படமாக்கப்பட்டுள்ளது.

லத்தீஃப் ஒரு டீன் ஏஜ் பையன். ஈரானைச் சேர்ந்தவன். கட்டிடம் கட்டும் இடத்தில் வேலை செய்கிறான். கட்டிடத் தொழிலாளர்களுக்கு சமைத்து கொடுப்பது, டீ கொடுப்பது போன்றவை அவன் வேலை.

ஆஃப்கன் கூலிகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று ஈரானின் சட்டம். அதனால் அரசு அதிகாரிகள் வந்தால் அங்கே வேலை செய்யும் ஆஃப்கன் கூலிகளை ஓடி ஒளிந்து கொள்ளச் சொல்கிறான் காண்ட்ராக்டர் மெமார்.

ஒருநாள் கட்டிட வேலையின்போது நான்காவது மாடியிலிருந்து விழுந்துவிடுகிறான் ஒரு தொழிலாளி. கால் ஊனமாகி விடுவதால் அவனால் மேற்கொண்டு வேலைக்குச் செல்ல முடியவில்லை. அவன் ஒரு ஆஃப்கன் அகதி. பிழைப்புக்காக என்ன செய்வதென்று தெரியாமல் தன் மகளுக்கு ஆண் வேடமிட்டு தனக்குப் பதிலாக அதே கட்டிட வேலைக்கு அனுப்புகிறான். அவள் பெயர் ரஹ்மத். அவளால் அந்தக் கடினமான கட்டிட வேலையைச் செய்ய முடியவில்லை. அப்போது மெமாருக்கும் லத்தீஃபுக்கும் ஒத்துவராமல் போகிறது. இருவருக்குமிடையே அடிக்கடி சிறுசிறு சச்சரவுகள்.

இங்கே ஒரு இடைச்செருகல்: படத்தின் ஒரு முக்கியமான அம்சம், லத்தீஃபின் நக்கலும் குறும்பும். 'நான்காவது மாடியிலிருந்து விழுந்து விட்டான்' என்று பரபரப்புடன் சொல்லிக்கொண்டே விழுந்துவிட்ட தொழிலாளியைத் தூக்கிக் கொண்டு ஓடுகிறார்கள். அப்போது லத்தீஃப் அவர்களைப் பார்த்து ''பாராசூட் இல்லாமல் எப்படி இவன் நான்காவது மாடியிலிருந்து குதித்தான்?'' என்று கேட்கிறான்.

லத்தீஃபை கட்டிட வேலைக்குத் தள்ளிவிட்டு ரஹ்மத்தை சமையல் வேலைக்கு அமர்த்தி

விடுகிறான் மெமார். ரஹ்மத் சுவையாகச் சமைக்கிறாள். அருமையாக தேநீர் போடுகிறாள். எல்லாத் தொழிலாளர்களுக்கும் அவளைப் பிடித்துப் போகிறது. லத்தீஃப்புக்கு அவளைப் பிடிக்கவில்லை. வெறுக்கிறான். ஆனால் திடீரென்று ஒரு நாள் ரஹ்மத் பெண் என்பதை தற்செயலாக அறிகிறான். அந்தக் கணத்திலிருந்து லத்தீஃப் அவளைக் காதலிக்கத் துவங்கி அவளுக்குப் பாதுகாப்பாகவும் இருந்து வருகிறான். தான் பெண் என்பதை லத்தீஃப் கண்டு கொண்டுவிட்டான் என்பதை ரஹ்மத்தும் உணர்ந்து கொள்கிறாள்.

ஒருநாள் அரசாங்க அதிகாரிகள் இந்த ஆஃப்கன் கூலிகளைக் கண்டுபிடித்து விரட்டி விடுகின்றனர். ரஹ்மத்தை எங்கெங்கோ தேடி அலைகிறான் லத்தீஃப். கடைசியில் எங்கோ ஓரிடத்தில் அவள் கல் சுமக்கும் வேலையைச் செய்து வருவதைக் கண்டுபிடிக்கிறான். அரபு நாடுகளில் கூலி வேலை செய்பவர்களின் **inhuman** நிலை மிகக் கடுமையான தொனியில் படத்தில் காண்பிக்கப்படுகிறது.

இடையில் ரஹ்மத்தின் தந்தையின் உறவினர்கள் ஆஃப்கனில் தாலிபான்களால் கொல்லப்படும் செய்தி கிடைக்கிறது. ''எல்லாமே போய்விட்டது. நாங்கள் அனாதை. எங்கள் தனிமையின் சுமையை இந்த உலகத்தில் யாராலும் புரிந்துகொள்ள முடியாது'' என்று கதறுகிறார் அந்த ஆஃப்கன் கிழவர்.

தன் ஒரு ஆண்டு சம்பளப் பணத்தை அவரிடம் கொடுத்து அவர்கள் திரும்பவும் ஆஃப்கன் செல்வதற்கு உதவுகிறான் லத்தீஃப்.

தான் உயிருக்குயிராய் காதலித்த ரஹ்மத்தை இனி பார்க்கவே முடியாது என்ற நிலையில்-அவள் வண்டியில் ஏறிச் செல்வதை கண்கலங்கப் பார்த்துக் கொண்டிருக்கிறான் லத்தீஃப். ரஹ்மத்தின் கால்கள் தரையில் பதிந்த இடத்தில் மழைத்துளிகள் விழுகின்றன.

என் ஞாபகத்தில் சொல்வதானால் ரஹ்மத்துக்கு இந்தப் படத்தில் வசனமே இல்லை. இந்தப் பக்கங்களில் நான் ஏற்கனவே எழுதியிருந்த ஆஃப்கன் பெண் ஷர்பத் குலாவின் மௌனத்தோடு ஒப்பிடக் கூடியதே ரஹ்மத்தின் மௌனம். படத்தில் அவளது கண்கள் மட்டுமே பேசுகின்றன-ஷர்பத் குலாவைப் போல். ஆஃப்கன் அகதியாக நடித்திருக்கும் இந்தப் பெண் உண்மையிலேயே ஆஃப்கன் அகதி என்பதும் மேற்கொண்டு ஒரு தகவல்.

தாலிபான்கள் செய்த காரியங்களைப் பற்றி இப்போது உலகுக்கே தெரியும். ஆஃப்கனிலிருந்து ஈரானுக்கு அகதிகளாக வந்தவர்களின் எண்ணிக்கை 15 லட்சம் என்கிறது அரசாங்கப் புள்ளி விபரம். ஆனால் உண்மையான எண்ணிக்கை அதைவிட இரண்டு மடங்கு. ஈராக்கிலிருந்து ஈரானுக்கு அகதிகளாய் வந்தவர்களையும் சேர்த்தால் அநேகமாக இந்த உலகிலேயே அகதிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள நாடு ஈரானாகத்தான் இருக்கும் என்கிறார் இப்படத்தின் இயக்குனர் மஜீத் மஜீதி. இவரது படங்கள் உலக அளவில் பேசப்பட்டவை என்பதால் நீங்களும் இவர் படங்களைப் பார்த்திருக்கக் கூடும்.

மேற்கண்ட படங்களையெல்லாம் பார்த்து முடித்தபோது ஒரு விஷயம் தெளிவாகிறது. இஸ்லாமியக் கலாச்சாரம் என்பது ஒற்றை அடையாளம் அல்ல. எல்லா நாடுகளிலும் அது

ஒரே மாதிரியாக இல்லை. ஈரானுக்கும் இந்தோனேஷியாவுக்கும், துனீஷியாவுக்கும் மலேஷியாவுக்கும் இடையே கலாச்சார அளவில் கடல் அளவு வித்தியாசம் உள்ளது.

மேலும், இந்தப் படங்கள் மசாலா படங்கள் அல்ல. சீரியஸ் ரகம். ஆனால் இந்தியாவின் கலைப்படங்களைப் போல் இவை சலிப்பை தருவதில்லை. பொழுதுபோக்கு சினிமா அளவுக்கு விறுவிறுப்பாக இருந்த இந்தப் படங்களில் பாட்டு இல்லை, காமெடி இல்லை, ஃபைட் இல்லை. இருந்தாலும் திரும்பத் திரும்ப பார்க்கக் கூடியதாக இருந்தன.

ஈரான் என்றால் நமக்கு ஞாபகம் வருவது அயோத்துல்லா கொமேய்னியும் ஃபத்வாவும். ஆனால் அதே ஈரானிலிருந்துதான் இப்படிப்பட்ட படங்களும் வருகின்றன. அரசையும் ஆணாதிக்கச் சமூகத்தையும் கடுமையாக விமர்சிக்கும் ஈரான் படங்கள் ஒவ்வொரு திரைப்பட விழாவிலும் பெரும் வரவேற்பைப் பெற்றுவருகின்றன.

இது ஒருபுறமிருக்க, நம் ஜனநாயக நாட்டைப் பற்றி நினைக்கும்போது ஒரு விஷயம் மனதை நெருடுகிறது. வாட்டர் என்ற படத்தை எடுக்க மீரா நாயரும் அவர் குழுவினரும் வாரணாசிக்குச் சென்றபோது அங்கே அவர்கள் தாக்கப்பட்டனர். படப்பிடிப்புச் சாதனங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. அந்தப் படம் எடுக்கப்பட முடியாமலேயே நின்று போனது. கருத்துச் சுதந்திரத்திற்கு நாம் கொடுக்கும் மரியாதை இது!

தற் கொலை கீதம்

திரைப்பட விழாவில் பார்த்த மற்றொரு முக்கியமான திரைப்படம் **Gloomy Sunday**. ஒரு அற்புதமான ஹங்கேரியப் படம். இயக்குனர்-**Rolf Schubel**

Herr Szabo Andrez Llona

நடுவில்: ஜெர்மானியன் (நாஜி)

புடாபெஸ்ட் நகரில் **Herr Szabo** என்ற யூதனின் விடுதி. அந்த விடுதியில் பணிபுரியும் **Llona** என்ற அவனுடைய காதலி. (இந்த நடிகை ஒரு பேரழகி. வெகு அபூர்வமாகவே இப்படிப்பட்ட அழகிகள் சிருஷ்டிக்கப்படுகின்றனர் என்பது என் கருத்து) இருவரும் அந்த விடுதியில் ஆந்த்ரேஸ் என்ற பியானிஸ்டை வேலைக்கு அமர்த்துகின்றனர். ஆனால் லோனா அவனது இசையில் மயங்கி அவனையும் காதலிக்க ஆரம்பித்து விடுகிறாள். ஸாபோ, ஆந்த்ரேஸ் இருவருடனும் அவள் வாழ்கிறாள். இருவருடனும் உறவு கொள்கிறாள். லோனாவிடம் ஸாபோ சொல்கிறான்... ''உன்னை முழுமையாக இழந்துவிடுவதை விட ஆந்த்ரேஸோடு உன்னைப் பங்கு போட்டுக் கொள்வதில் எனக்கு வருத்தமில்லை.'' மற்றொரு சமயம் சொல்கிறான்.. ''உனக்கென்ன, ஒன்றுக்கு ரெண்டு பேர். எங்களைப் பார்.. ஆளுக்குப் பாதி பெண்''.

ஸாபோவின் விடுதிக்கு ஒரு நாள் ஒரு ஜெர்மானியன் வருகிறான். லோனாவின் பேரழகில் மயங்கி அவளிடம் தன் காதலைத் தெரிவிக்கிறான். ''என்னுடன் ஜெர்மனிக்கு வந்துவிடு. உனக்கு அங்கே சொர்க்கத்தை காட்டுகிறேன். இங்கே இந்த ரெஸ்டாரண்டில் பணிப் பெண்ணாக வாழ வேண்டியவள் அல்ல நீ. உன் அழகுக்கு ஒரு அரசியைப் போல் இருக்க வேண்டியவள்'' என்கிறான்.

''எனக்கு உன்னுடைய ஜெர்மானிய சொர்க்கம் வேண்டியதில்லை. இங்கே இந்த விடுதியில் இரண்டு பேருடன் வாழ்வதே எனக்கு சொர்க்கமாகத்தான் இருக்கிறது'' என்று மறுத்துவிடுகிறாள் லோனா.

ஆந்த்ரேஸ் ஸாபோவைப் போல் மென்மையானவன் அல்ல. ஒரு முரடன். லோனா ஜெர்மானியனுடன் வெளியே செல்வதைப் பார்த்து ''உனக்கு ரெண்டு பேர் போதவில்லையா?'' என்று கேட்கிறான்.

ஆனாலும் லோனாவின் மீதான அவனுடைய காதல் வெறித்தனமானது. அவளுடைய பிறந்த நாளன்று தான் கம்போஸ் செய்த **Gloomy Sunday** என்ற பாடலை அவளுக்குப் பரிசாக அளிக்கிறான். **Gloomy Sunday** உடனடியாகப் பிரபலமாகிறது. விடுதிக்கு முக்கிய புள்ளிகள் வரத்துவங்குகின்றனர்.

இதற்கு இடையில் லோனா தன் காதலை ஏற்காததால் மனமுடைந்து டன்யூப் நதியில் குதித்து விடுகிறான் ஜெர்மானியன். அதிர்ஷ்டவசமாக அப்போது அவனைக் காப்பாற்றுகிறான் ஸாபோ. நன்றியுணர்வுடன் ''என்றைக்காவது நீ செய்த இந்த உதவிக்கு நான் கைம்மாறு செய்வேன்'' என்கிறான் ஜெர்மானியன்.

கதை நடப்பது முப்பதுகளின் இறுதி. அந்தக் காலக்கட்டத்தில் **Gloomy Sunday**யைக் கேட்டு பல பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர். **BBC** வானொலி அந்தப் பாடலைத் தடை செய்கிறது. தற்கொலை கீதம் என்றே கருதப்பட்ட இந்தப் பாடலைக் கேட்டு தற்கொலை செய்து கொண்டவர்கள் ஒருவர் இரண்டு பேர் அல்ல, நூற்றுக்கணக்கான பேர். இன்றைக்கும் இந்தப் பாடல் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ளது. இதெல்லாம் நிஜமான வரலாற்றுச் சம்பவங்கள்.

நாற்பதுகளின் துவக்கம். ஜெர்மானியன் நாஜி அதிகாரியாக புடாபெஸ்டுக்குத் திரும்பவும் வருகிறான். யூதர்களின் உயிர் நாஜிகளின் கையில். பல ஆயிரக்கணக்கான யூதர்கள் கைது செய்யப்பட்டு **Aushwitz** வதைமுகாமுக்கு அனுப்பப்படுகின்றனர். எங்கு பார்த்தாலும் நாஜி சிப்பாய்கள்.

ஒரு நாள் தனது சக நாஜி அதிகாரிகளுடன் ஸாபோவின் விடுதிக்கு வருகிறான் ஜெர்மானியன். ஸாபோவை தன் சகாக்களுக்கு அறிமுகப்படுத்துகிறான். ஸாபோவுக்கு

உள்ளுக்குள் பயம். அப்போது ஸாபோவை நாஜிகளைப் பற்றி ஒரு மோசமான ஜோக் சொல்லச் சொல்கிறான் ஒரு அதிகாரி.

இயக்குனர்-**Rolf Schubel**.

இதைவிட அவலமான நிலமை ஒன்று உண்டா? நாஜிகளைப் பற்றிய மோசமான ஜோக்கை நாஜிகளிடமே சொல்ல வேண்டுமா? நடுங்குகிறான் ஸாபோ.

''பயப்படாமல் சொல்'' என்று தைரியப்படுத்துகிறார்கள். ஜோக்கை சொல்கிறான் ஸாபோ. (சொல்லாவிட்டால் கொன்றுவிடுவார்களே?)

''ஒரு நாஜி அதிகாரி இருந்தான். அவனுடைய இரண்டு கண்களில் ஒன்று செயற்கைக் கண். ஒரு கண்தான் இயற்கைக் கண். அவன் யூதக் கைதியிடம் கேட்டான், ''என் இரண்டு கண்ணில் எது செயற்கைக் கண்?'' என்று. கைதி யோசிக்கவேயில்லை. சட்டென்று சொன்னான் ''இடது கண்''. ''எப்படி சரியாகக் கண்டுபிடித்தாய்?'' ''அந்த இடது கண்ணில்தான் கொஞ்சமாவது உணர்ச்சி ஒட்டிக் கொண்டிருந்தது.''

ஜோக்கை சொல்லி முடித்ததும் விடுதியில் மயான அமைதி. சட்டென்று அந்த அமைதியைக் கலைத்து ஒரு நாஜி அதிகாரி பலமாகச் சிரிக்கிறான். உடனே எல்லோரையும் அந்தச் சிரிப்பு தொற்றிக் கொள்கிறது.

பிறகு அவர்கள் அந்தப் புகழ் பெற்ற **Gloomy Sunday**யை இசைக்கச் சொல்கின்றனர். ஆந்த்ரேஸ் மறுத்துவிடுகிறான். ஸாபோவிடம் உள்ள நெளிவுசுளிவு ஆந்த்ரேஸிடம் கிடையாது. அவன் ஒரு கலைஞன். அந்த நாஜிகள் ஆந்த்ரேஸை அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்கின்றனர்.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிறது. 'விடுதியை விற்றுவிட்டு வெளிநாடு சென்று விடலாம்' என்கிறாள் லோனா. ஸாபோவுக்கு அந்த விடுதிதான் உயிர். அவன் அந்த விடுதியைத் துவக்கிய நாளிலிருந்து அன்றைய தினம் வரை அதற்கு ஒரு நாள் கூட விடுமுறை விட்டதில்லை. 'இங்கே இருந்தால் மரணம்தான்' என்பதை ஸாபோவுக்கு மெல்ல மெல்லப் புரிய வைக்கிறாள் லோனா.

ஆனால் வெளிநாடு செல்ல வேண்டுமானால் அதற்கு நாஜிகளின் அனுமதி அட்டை வேண்டும். ஸாபோவுக்கு ஜெர்மானியன் தனக்குக் கொடுத்த வாக்கு ஞாபகம் வருகிறது. அவனிடம் ஓடுகிறான். 'எனக்கு உயிர்ப் பிச்சை கொடு' என்று மன்றாடுகிறான். ஆனால் ஜெர்மானியனோ அவனுக்கு உதவுவதாகச் சொல்லி நம்ப வைத்து பிறகு ஏமாற்றி விடுகிறான். ஆஷ்விட்ஸுக்கு அனுப்பப்படும் யூதர்களின் பட்டியலில் ஸாபோவின்

பெயரும் இருக்கிறது. பட்டியலோடு ஸாபோவைத் தேடி விடுதிக்கு வருகின்றனர் நாஜிகள். பதறியடித்துக் கொண்டு ஜெர்மானியனிடம் ஓடி வருகிறாள் லோனா. ஸாபோவின் உயிரைக் காப்பாற்றும்படி கெஞ்சுகிறாள். ஜெர்மானியனோ அந்த நேரத்திலும் அவளிடம் பேரம் பேசுகிறான். ''காப்பாற்றினால் என்ன தருவாய்?'' ''என்ன வேண்டுமானாலும்'' ''ஒரே ஒரு முறை உன்னை நான் அனுபவிக்க வேண்டும்''.

அந்த உடலுறவுக் காட்சியைப் போன்றதொரு துயரமான காட்சியைக் காண்பது அரிது என்றே சொல்ல வேண்டும். பனிக்கட்டியில் விறைத்த சவமாகக் கிடக்கிறாள் லோனா. ஸாபோவை நாஜிகள் இந்நேரம் இழுத்துக்கொண்டு போயிருப்பார்களோ... விறைத்த அந்த சடலம் லேசாய் நடுங்குகிறது.

ஆனால் கடைசியில் லோனாவையும் ஏமாற்றி விடுகிறான் அந்த ஜெர்மானியன். அவன் தன் சகாக்களுக்கு அனுப்பி வைக்கும் பெயர் ஸாபோவினுடையது அல்ல. வேறு ஒரு யூதனுடையது. ஸாபோ ஆஷ்விட்ஸுக்கு ரயிலில் அனுப்பப்படுவதை குரூரமாகப் பார்த்து ரசிக்கிறான் ஜெர்மானியன்.

காதல், குரூரம், துரோகம், அன்பு, பயம், காமம் என்று பல்வேறு மனித உணர்வுகளுக்கிடையே ஊடாடும் ஓர் அபூர்வமான திரைப்படம் இது.

பின்குறிப்பு: Gloomy Sunday பாடலை யாரேனும் கேட்டிருக்கிறீர்களா? படம் முழுதும் இந்தப் பாடல்தான் பியானோவின் வழியே நம்மை ஆட்கொள்ளுகிறது. உண்மையில் ஒரு அமானுஷ்யமான இசை என்றே சொல்ல வேண்டும்.

இளையராஜாவின் இசை ஏன் எனக்கு பிடிக்கவில்லை!

எதிர்பார்க்கவேயில்லை. தேன் கூடு என்று. தெரியாமல் கை வைத்துவிட்டேன். ஏகப்பட்ட தேனீக்கள் கொட்டி விட்டன. இளையராஜா விஷயத்தைத் தான் சொல்கிறேன்.

I do not agree with a word of what you say; But I will defend to the death your right to say it.

ஜனநாயகத்தின் அடிப்படை பற்றி வால்டேர் கூறிய உலகப் பிரசித்த பெற்ற கூற்று இது.

தமிழ் மக்களுக்கு இளையராஜாவைப் பிடித்திருக்கிறது. இசைஞானி என்றே பட்டம் கொடுத்து கொண்டாடுகின்றனர். இசைஞானி. இசைக்கடவுள். எப்படியும் இருக்கட்டும். எனக்கு ஒரு ஆட்சேபனையும் இல்லை. ஐயா, எனக்கு இளையராஜாவின் இசை பிடிக்கவில்லை. இதைச் சொல்ல எனக்கு உரிமையில்லையா?

இளையராஜாவின் இசை என்பது ஒரு படைப்பு. பொது வெளியில் வைக்கப்பட்டுள்ள படைப்பு. இதை விமர்சிக்கவோ, பிடித்திருக்கிறது அல்லது பிடிக்கவில்லை என்று சொல்வதற்கோ ஒருவருக்கு முழு உரிமையும் இருக்கிறது. என்னுடைய கருத்தைச் சொல்வது எனது பிறப்புரிமை. இது உங்களைப் புண்படுத்த வேண்டிய அவசியமில்லை. புண்படுத்துகிறது என்றால் அடுத்த மனிதரின் கருத்துச் சுதந்திரத்தை நீங்கள் மறுக்கிறீர்கள் என்று பொருள். ஒருவருடைய கருத்தை நான் துளிக்கூட ஒப்புக் கொள்ளாவிட்டாலும் அவருடைய கருத்தை அவர் சொல்வதற்கான உரிமைக்காக என் உயிரையும் தர நான் சித்தமாக இருக்கிறேன். இதுவே வால்டேரிடமிருந்து நான் கற்றுக்கொண்டது.

ஆனால் பொதுவாக பலரும் **fanatics** ஆக இருக்கின்றனர். இளையராஜாவின் இசையைப் பிடிக்கவில்லை என்று சொன்னவுடனேயே கொமெய்னியாக மாறி ஃபத்வா கொடுக்கத் துடிக்கின்றனர்.

நான் இளையராஜாவின் இசையை விமர்சிக்கவில்லை. அதற்கு எனக்குப் போதுமான தகுதியோ பயிற்சியோ கிடையாது. அவரது இசை பற்றி விவாதிக்க கூட இல்லை. எனக்குப் பிடிக்கவில்லை என்று மட்டுமே சொல்கிறேன். இது என் அபிப்பிராயம்.

இது ஒரு வேளை **nostalgia**வாகக் கூட இருக்கலாம். என் இசை ரசனை விஸ்வநாதன்-ராமமூர்த்தியோடு நின்று போயிருக்கலாம். நான் சொல்வது தவறாகவும் இருக்கலாம். ஆனால் இதற்கெல்லாம் ஒரு மனிதனுக்கு உரிமை இருக்கிறது.

மீரா நாயரின் **Monsoon Wedding**. பஞ்சாபி **Tappa** இசையின் **Carnival** என்று இந்தப் படத்தைச் சொல்லலாம். இது வெனிஸ் திரைப்பட விழாவில் திரையிடப் பட்டபோது ஐரோப்பியப் பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நின்று நடனமாடினர் என்பது செய்தி. ஒரு **ecstatic** நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய, நாடி நரம்புகளையெல்லாம் துடிதுடிக்க வைக்கக் கூடிய இசை கார்னிவல் மான்சூன் வெட்டிங்.

இந்தியாவில் பஞ்சாபிகளிடம் மட்டுமே காணக்கூடிய பண்பு அது. கொண்டாட்டம், நடனம், திருமண வைபவத்தில் எழுபது வயது மூதாட்டி கூட டீன் ஏஜ் பையனுடன் சேர்ந்து நடனமாடுவாள்-சாலையில்.. ஊர்வலத்தில். துளிக்கூட வெட்கப்பட மாட்டார்கள்.

மான்சூன் வெட்டிங் படம் பஞ்சாபி கலாச்சாரத்தை வெகு நுட்பத்துடன் நமக்குச் சொல்லுகிறது.

மற்றொரு படம்-சில ஆண்டுகளுக்கு முன்பு வந்த **Bandit Queen**. இதற்கு இசையமைத்தது பாகிஸ்தானின் நுஸ்ரத் ஃபத்தே அலி கான். சூஃபி இசையின் மிகச் சிறந்த கலைஞன். ஃபூலான் தேவியை முப்பது பேர் ஒருவர் பின் ஒருவராகக் கற்பழிக்கும் போது நுஸ்ரத்தின் அடிவயிற்றிலிருந்து கிளம்பும் ஒரு ஓலம். என் சினிமா அனுபவத்தில் இப்படி ஒரு இசையைக் கேட்டதில்லை. இந்தியப் பெண்களின் அவலத்தையெல்லாம் ஒன்று திரட்டி ஒரே குரலில் கொடுத்தான் நுஸ்ரத். அந்தப் படத்தைப் பார்த்து ஒரு வாரம் காய்ச்சலில் படுத்துக் கிடந்தேன். சூஃபி இசையின் கடவுள் நுஸ்ரத்.

யோசித்துப் பார்த்தால் இந்திய சினிமாவில் இதுபோல் இன்னும் சில சினிமாக்களைச் சொல்ல முடியும். சிவகவியை நிச்சயமாகச் சொல்லுவேன். ஆனால் இளையராஜா இந்த அளவுக்கு என்னை ஈர்க்கவில்லை.

தமிழ்நாடு உருவாக்கிய சமகாலத்திய இசைக் கலைஞர்களில் என்னை வெகுவாகக் கவர்ந்தவர் எல்.சுப்ரமணியன்.

நான்-வெஜ் சாப்பிடுகிறவர்கள் பொதுவாக கவனித்திருக்கலாம். சாப்பாடு என்று சொன்னவுடன் ஒரு பெரிய வட்டமான தட்டைக் கொண்டு வருவார்கள். மூளை, ஈரல், குடல், காடை, மீன் என்று விதவிதமாக சிறுசிறு தட்டுகளில் இருக்கும். அதை உங்கள் முகத்துக்கு நேரே நீட்டி 'எது வேண்டும்?' என்று கேட்பார்கள். 'எதுவும் வேண்டாம், வெறும் சாப்பாடு மட்டும் போதும்' என்று சொன்னீர்களோ தொலைந்தது. உங்களைப்

பிச்சைக்காரனைப் போல் பார்ப்பார்கள். லோட்டாவை கொண்டு வந்து வைக்கும் போது தண்ணீர் உங்கள் ஆடையில் சிந்தும். அப்போதும் உங்களை விடாமல் ''ஆம்லேட்?'' என்று மிரட்டுகிற தொனியில் கேட்பார்கள். கடன் வாங்கி விட்டு நீண்ட காலமாக இழுக்கடித்தால், கடன் கொடுத்தவரின் பேச்சும் பாணியும் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் அந்த சர்வர்களின் பேச்சு. ஆம்லெட்டாவது சொல்லித்தான் ஆகவேண்டும் என்ற நிலைக்கு உங்களைக் கொண்டு வந்து தள்ளி விடுவார்கள். நம் கையிலோ எப்போதும் பணப்புழக்கம் தாராளம்! 'சிங்கிள் ஆம்லெட்' என்பேன். அதற்கும் ஒரு முறை முறைப்பார்கள். டபுள் ஆம்லெட்டுக்கு காசு இருந்தால் அட்டகாசமாக ஈரல் வறுவலோ மூளை பொரியலோ சாப்பிட்டு விடலாமே?

ஆனால் உடுப்பி ஓட்டலுக்கு செல்லுங்கள். ஒரே ஒரு காஃபி ஐந்து ரூபாய். அந்த ஐந்து ரூபாய் காஃபிக்காக அவர்கள் உங்களுக்கு ராஜ உபசாரம் செய்வதைக் காணலாம். ஆனாலும், இந்த நாக்கு இருக்கிறதே, அதற்கு சூடு சொரணை கிடையாது, அது பாட்டுக்கு கொஞ்சம் கூட லஜ்ஜையில்லாமல் முனியாண்டி விலாஸ் பக்கம் தான் நடத்திக் கொண்டு போகும் கால்களை.

ஆனால் அண்ணா சாலையில் உள்ள பழமையான, புகழ்பெற்ற அந்த நான்-வெஜ் ஓட்டலில் இம்மாதிரி பிரச்னைகள் ஏதும் இல்லை. ஒரு மணி நேரம் கூட உட்கார்ந்திருந்து வெறும் நாலு ரூபாய்க்கு டீ குடித்து விட்டு வரலாம். டீ மட்டுமல்ல, எல்லா அய்ட்டங்களுமே படுசுவையாக இருக்கும். விலையும் மிகக்குறைவு.

ஒரு நாள் மதிய வேளை. இரண்டரை மணி இருக்கும். எக்மோர் ரயில் நிலையம் எதிரேயுள்ள பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தேன். கடுமையான பசி. அசோக் பில்லர் அருகேயிருக்கும் ரஞ்சனைப் பார்க்க வேண்டுமென்று திட்டம். அங்கே போய் சாப்பிட்டுக் கொள்ளலாமா, பசி தாங்க முடியுமா என யோசித்தபடி பஸ்ஸுக்காக காத்திருக்கையில் தற்செயலாக அந்த ஓட்டலைப் பார்த்தேன். அண்ணா சாலையில் உள்ள ஓட்டலின் பெயரே இதிலும் எழுதியிருந்தது. 'அந்த ஓட்டலின் பிராஞ்ச் போலிருக்கிறது' என்று நினைத்தபடி உள்ளே நுழைந்தேன். ஒரு வாய் ருசி பார்த்ததுமே தெரிந்துவிட்டது இது டுப்ளிகேட் என்று. மற்ற ஓட்டல்களைப் போல் அந்த வட்டமான பெரிய தட்டைக் கொண்டு வந்து மூஞ்சிக்கு முன்னே நீட்டவில்லை. அதற்கு அவசியமே இல்லாமல் சாப்பாட்டின் கூடவே மீனையும் சேர்த்திருந்தனர். (சிங்கிள் ஆம்லெட்டோடு கிளம்பப் பார்க்கிறாயா, படவா?) நோ சாய்ஸ். ஆனால் சாப்பிட்டு முடித்தபிறகு தான் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அறுபது ரூபாய்க்கு பில். கடவுளே, கொஞ்சம் சோறும் ஒரு துண்டு மீனும் அறுபது ரூபாயா? இனிமேல் பெயரைப் பார்த்து ஏமாந்துவிடக் கூடாது என்று எண்ணியபடியே டிப்ஸ் கொடுக்காமல் வெளியே வந்தேன்!

ஞான திருஷ்டியும் ஜோசியமும்.

தமிழ்நாட்டில் நகைச்சுவைக்குப் பஞ்சமில்லை என்று ஏற்கனவே எழுதியிருந்தேன். அதற்கு சமீபத்திய உதாரணம் ஒன்று-கோட்டையில் பத்து மனோதத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.எதற்கு? முதல்வரிடம் மனு கொடுக்க கோட்டைக்கு வருபவர்கள் பலர் அங்கேயே தற்கொலை செய்து கொண்டு விடுகின்றனர். இவர்களை தற்கொலையிலிருந்து தடுப்பதுதான் இனி மனோதத்துவ நிபுணர்களின் பணி!

கார்த்திக் படு அமைதியான பையன். வம்பு தும்பு கிடையாது. கலாட்டா கிடையாது. அதிர்ந்து பேச மாட்டான். நான் எழுதிக் கொண்டிருக்கும் போது தேநீர் போட்டுக் கொடுப்பான். காகிதம், ரீஃபில் எல்லாம் வாங்கிக் கொடுப்பான். என் கையில் பைசா இல்லாவிட்டால் இரண்டையும் கடனுக்குக் கூட வாங்கிக் கொண்டு வந்து கொடுப்பான். அமைதி என்றால் அப்படி ஒரு அமைதி. அவனுடைய பதினைந்து வயதில் நான் அடிக்காத லூட்டி கிடையாது. டீச்சருக்கே லவ் லட்டர் கொடுத்து பதினைந்து நாள் ஸ்கூல் பக்கமே தலைகாட்டவில்லை. வீட்டிலும் தெரிந்துவிட்டது. 'என்ன பெரிசா பண்ணிட்டான், ஊர்ல யாரும் பண்ணாத தப்பை? ஆம்பளைப் பசங்கன்னா அப்படித்தான் இருக்கும்' என்று அம்மா எனக்காக சிபாரிசு செய்த பிறகுதான் அப்பாவிடமிருந்து தப்பினேன். திருமணமாகாமல் முதிர்கன்னியாக இருந்த அந்த டீச்சரும் சந்தோஷமே அடைந்திருக்கக் கூடும் என்பது என் யூகம். அவரது அழகுக்குக் கிடைத்த அங்கீகாரம்!

இப்படியெல்லாம் கார்த்திக்கிடம் எந்த அறிகுறியும் காணோம். என் நண்பர்களே இதுபற்றி என்னிடம் விசாரிக்கிற அளவுக்கு அவனுடைய விழுமிய பண்பாடு என்னை அச்சுறுத்தியது.

ஒரு நாள் ஆர்வம் தாங்க மாட்டாமல் அவனிடமே நேரடியாகக் கேட்டு விட்டேன் 'என்ன.. வயசுக்குத் தகுந்த ரவுடித்தனமே உன்கிட்ட இல்லியே?'

அதற்கு அவன் தந்த பதில்- 'ஒரு வீட்ல ஒரு ரவுடிதான் இருக்க முடியும் டாடி'

ஸ்ரீவில்லிப்புத்தூர் ராகவன் என்று எனக்கு ஒரு நண்பர் உண்டு. ஆழ்வார் பாசுரங்களையெல்லாம் பாடி அதன் மேல் எனக்குத் தீராக் காதல் ஏற்படக் காரணமாக இருந்தவர். நிறைய புராணக் கதைகள் சொல்லுவார். அவரை ஒரு கதைக் களஞ்சியம் என்றே சொல்லலாம்.

திடீரென்று அவர் எனக்கு போன் செய்து ''என்ன சாரு போர் வந்து விடுமா?'' என்று ஆர்வத்துடன் கேட்டார்.

''வந்து விடும்'' என்று பதில் சொன்னேன். ''அப்பாடா.. நல்லது'' என்று ஆசுவாசமடைந்தார் ராகவன். ''என்ன ஸ்வாமி.. இப்படி சொல்கிறீர்? போர் வந்தால் இந்தப்பக்கம் 15 லட்சம் அந்தப் பக்கம் 15 லட்சம் பேர் செத்து விடுவார்களே?''

''என்ன இது ரொம்பக் குறைச்சலா இருக்கே? ரெண்டு பக்கமும் ரெண்டு கோடியாவது போனாத்தான் நல்லது''

''என்னது ரெண்டு கோடியா? குண்டு நம்ம தலையிலல்ல வந்து விழும் போல்ருக்கு''

''விழட்டுமே.. நமக்கென்ன வீடா வாசலா?''

ராகவன் சளைக்க மாட்டார் போல் தெரிந்தது. பெரும்பான்மை இந்தியர்களின் மனோநிலை இப்படித்தான் இருக்கிறது.

இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளுமே இன்றைய தினத்தில் மிகவும் பின்தங்கிக் கிடக்கின்றன. மக்கள் நடப்பதற்கு சரியான சாலை வசதிகள் கூட கிடையாது. வறுமை கற்பனை செய்ய முடியாத அளவுக்கு தீவிரமாகிவிட்டது. காரணம், இந்த இரு நாடுகளின்

ஆட்சியாளர்கள். இப்போது அவர்கள் தங்கள் நாட்டுக் குடிமக்களை ஒரேயடியாகக் கொல்வதற்கும் தயார் செய்து கொண்டிருக்கின்றனர்.

நானும் இன்டர்நெட்டுக்கு **addict** ஆகிவிட்டேன். பிறகென்ன? மஜீத் மஜீதி என்ற ஈரானிய இயக்குனர் பற்றிய விபரம் தெரியாமல் முழித்துக் கொண்டிருந்தால் 'இந்தா பிடி, அவருடைய பேட்டியே என்னிடம் இருக்கிறது' என்று கை மேல் தருகிறது இன்டர்நெட். இதேபோல் இந்தோனேஷிய இயக்குனர் நுக்ரஹோ பற்றி, இன்னும் எனக்கு வேண்டிய அத்தனை விபரங்களும் விரல் நுனியில் கிடைக்கிறது. இதையடுத்து - நூறு மெயில்கள்! படிக்கவும் பதில் எழுதவும் காலையில் பத்து மணிக்கு உட்கார்ந்தேன். எழுந்து கொள்ளும்போது இரவு ஏழு மணி. அப்படியும் வேலை முடியவில்லை. இன்னும் பதில் எழுத வேண்டிய மெயில்கள் 25 இருந்தன.

ப்ரெளசிங் சென்டர் என்றால் நன்றாக தீட்டியிருப்பார்கள். அங்கே போகவில்லை. நண்பர் மணியின் அலுவலகத்தில் தான் இவ்வளவு நேரம் பார்த்தேன்.

ஏழு மணிக்கு வந்த மணி என் முதுகில் ஒரு தட்டு தட்டியதும் தான் எனக்கு நேரத்தைப் பற்றிய பிரக்ஞையே வந்தது.

பிறகு பீச்சுக்குப் போனோம். அங்கே அண்ணாச்சி தனது ஐரோப்பிய பயணத்தைப் பற்றிச் சொல்லி எல்லோரையும் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார்.

'ஆம்ஸ்டெர்டாம் அனுபவத்தைச் சொல்லுங்கள்' என்று கேட்டுக் கொண்டேன்.

சொன்னார். ஆனால் இங்கே எழுத இயலாது.

என் மீது அக்கறை கொண்ட பல நண்பர்கள் 'கம்யூட்டர் வாங்கி விடுங்கள்' என்று அன்புடன் ஆலோசனை சொல்கின்றனர்.

இதற்கு பதில் சொல்வதற்கோ அது பற்றி எழுதுவதற்கோ எனக்கு சங்கோஜமாக உள்ளது. காரணம்-சுய இரக்கம் எனக்குப் பிடிக்காத ஒன்று.

எனவே பாரதியின் வாழ்விலிருந்து ஒரு உதாரணம் தருகிறேன்.

''பல் தேய்த்துக் கொண்டிருக்கிற சமயத்தில் ஒரு கிழவர் வந்தார். 'வாரும் விளக்கெண்ணெய்ச் செட்டியாரே' என்றார் பாரதியார். எவ்வளவு வரவேற்பு அளித்தாலும், செட்டியாரின் உடம்பு பட்ட பாட்டை நான் எவ்வாறு வர்ணிப்பது! செட்டியார் யார் தெரியுமா? பாரதியார் குடியிருந்த வீட்டுக்கு உடையவர். அவர் வாடகைப் பணம் பாக்கி. என்றாலும், கேட்பதற்கு நடுக்கம்! விளக்கெண்ணெய்ச் செட்டியார் என்பது பாரதியார் கொடுத்த செல்லப் பெயர்!

'செட்டியாரே! என்ன அவசரம்! நல்ல பதவிக்காக ஜன்மம் ஜனமமாய்ப் பிறக்கலாம் என்ற ஹிந்து பரம்பரையிலே பிறந்து வளர்ந்த உமக்கு, ஏன் வாடகைக்கு அவசரம்? இன்னும் பத்து வருஷத்துக்குள் சுயராஜ்யம் வரப் போகிறது. அந்த ராஜாங்க கஜானாவுக்கு ஒரு 'செக்' கொடுக்கிறேன் வாங்கிக் கொள்ளுமே!' என்று சொல்லிவிட்டு, வெண்கலத்தை இடைவிடாமல் தட்டியது போலக் கலகலவென்று சிரித்தார். தரித்திரத்தை நிந்தனை செய்யும் நகைப்பு!

செட்டியார் என்ன செய்கிறார் என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். 'மகான்! உங்கள் உண்டியல் ஏன் செல்லாது? கூசாமல் கொடுங்கள். வாங்கிக் கொள்கிறேன்' என்று செட்டியார் முணுமுணுத்தார். 'செட்டியாரே, உமக்கு நூறு வயது. போம். பணம் வந்தவுடன் ஒரு விநாடி கூடத் தாமதிக்காமல் அனுப்பி வைக்கிறேன்' என்றார். செட்டியார் வணக்கத்துடன் மறைந்தார்''.

இது வ.ரா. பாரதியைப் பற்றி எழுதியுள்ளது. பாரதியின் நிலைமையிலிருந்து இன்னும் ஒரு இஞ்ச் கூட முன்னேறவில்லை தமிழ் எழுத்தாளனின் நிலைமை. இன்னும் மோசமாகியிருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம். பாரதிக்காவது அவரை 'மகான்' என்று அழைக்கும் வீட்டுக்காரர் இருந்தார். பாரதியின் புகழும் செல்வாக்கும் அவ்வளவு தூரம் பரவியிருந்தது. இன்றைய எழுத்தாளனின் நிலை மிகவும் அவலமானது. குரூரமானது. ஒரு குப்பையான மசாலா சினிமாவில் நடிக்கும் நடிகனுக்கு முன்னே பவ்யமாக கூனிக் குறுகி நின்று கொண்டிருக்கிறார் ஒரு எழுத்தாளர். அவர் பெயருக்குப் பின்னே நான்கு புத்தகங்கள்!

நல்லவேளை நான் தப்பினேன். பாரதியைப் போன்ற தரித்திர நிலைதான் என்றாலும் மேலே குறிப்பிட்ட எழுத்தாளரின் நிலைமையில் என்னை நான் வைத்துக் கொண்டதில்லை.

இயக்குனர் ராஜேஷ்வர் என் நண்பர் என்பதால் அவரோடு சில சமயங்களில் ஷூட்டிங் நடக்கும் இடத்துக்குச் செல்வதுண்டு. ஒரு நாள் - நடிகர் லிவிங்ஸ்டன் என் அருகே அமர்ந்திருந்தார். ஏற்கனவே என்னை அவருக்கு ராஜேஷ்வர் அறிமுகம் செய்து வைத்திருந்தார். வேறு ஏதோ காட்சியை ஷூட் செய்து கொண்டிருந்ததால் லிவிங்ஸ்டன் வெறுமனே உட்கார்ந்திருந்தார். நான் ஏதோ பராக்கு பார்த்துக் கொண்டிருந்தேன். காட்சி முடிந்ததும் ராஜேஷ்வர் எங்களருகே வந்தார். அப்போது லிவிங்ஸ்டன் அவரைப் பார்த்து ''என்ன பாஸ், உங்கள் எழுத்தாள நண்பர் ஒன்றுமே பேச மாட்டேன் என்கிறார்'' என்றார். உடனே ராஜேஷ்குமார் சட்டென்று ''அவர் பேசினால் உங்களுக்குப் புரியாதே'' என்று சொன்னார். அது.

எனக்கு வந்த மெயில்களில் சிலவற்றைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன். எல்லா கடிதங்களுமே முழுதாக வெளியிடப்பட்டு விவாதிக்கப்பட வேண்டியவை தான். இருப்பினும், வசதி கருதி ஒரு சில.

மணிவண்ணனின் நீண்ட கடிதத்தின் சுருக்கம்-நீங்கள் ஏன் நல்ல புத்தகங்களைப் பற்றி மக்களுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை **educate** செய்யக் கூடாது? அதைவிட்டு விட்டு தமிழர்களுக்கு இலக்கியம் தெரியவில்லை என்று ஏன் புலம்புகிறீர்கள்?

மக்களை இலக்கியத்தின் பக்கம் திருப்புவது என் வேலை அல்ல. நான் ஒரு பொற்கொல்லன். விதவிதமான நகைகளையும் ஆபரணங்களையும் செய்து வைத்திருக்கிறேன்.இதை அள்ளியும் செல்லலாம். தள்ளியும் செல்லலாம். அவரவர் இஷ்டம்.

கேரளாவில் ஒரு பேட்டியின் போது ''ஏன் எழுதுகிறீர்கள்?'' என்று கேட்டார்கள்.

''**I write as a bird flies**'' என்றேன்.

அதையே இப்போதும் கூற விரும்புகிறேன்.

அடுத்து, மணிவண்ணனின் ஏவுகணை. 'ஒரு இலக்கியவாதியான நீங்கள் எப்படி வர்த்தகப் பத்திரிகையிலெல்லாம் எழுதலாம்? மிகவும் வருத்தப்பட்டேன்' என்கிறார்.

மை டியர் மணிவண்ணன், இலக்கியப் பத்திரிகையில் மட்டும் எழுதினால் மூன்றே நாளில் பட்டினி கிடந்து செத்துவிட வேண்டியது தான்.

இலக்கியப் பத்திரிகைகள் கோவில் கொடை மாதிரி உண்டியல் வசூலித்து நடத்தப்பட்டு வருபவை. முன்பெல்லாம் இது கூட இல்லை. பெண்டாட்டியின் நகையை விற்றும், நிலத்தை விற்றும் தான் இலக்கியப் பத்திரிகைகள் நடத்தப்பட்டன. (சி.சு. செல்லப்பா எழுத்து பத்திரிகைக்காக தன் சொத்து முழுவதையும் இழந்தவர்) இவர்களிடம் கதை அனுப்பி விட்டு 'என் கதைக்கு பைசா கொடு' என்று கேட்க முடியாது. கேட்பது அதர்மம்.

மேலும், வர்த்தகப் பத்திரிகையில் எழுதினால் கூட இந்த உலகிலேயே மிகக்குறைந்த கூலி வாங்கும் ஒரு ஜீவன் தமிழ் எழுத்தாளன் தான்.

இதைவிட அவலம் என்னவென்றால்-தமிழ்நாட்டில் மட்டும்தான் ஒரு எழுத்தாளன் தன் ஜீவனோபாயத்துக்காக வேறொரு அடிமை வேலையைச் செய்கிறான். அநேகமாக, ஒரு குமாஸ்தா வேலை. மணிவண்ணனின் 'லாஸ்ட் பஞ்ச்' எனக்குப் பிடித்திருந்தது. 'என் வயது 29 தான். எனவே ஏதோ ஒரு கழண்ட கேசின் புலம்பல் என்று நினைக்க வேண்டாம்'.

அது சரி, **Mi** என்றால் என்ன இடம்? மிச்சிகனா? மிஸிஸிபியா?

சான்ஃப்ரான்ஸிஸ்கோவிலிருந்து ஜக்தீஷ் இந்தப் பக்கங்களில் தெரியும் **honesty** பற்றி சிலாகித்து விட்டு, இது ஏன் சமூக வாழ்வில் தொலைந்து போயிற்று என்று கேட்கிறார். ஒரு காரணம்-நமது கல்வி முறை சரியில்லை என்பது ஜக்தீஷின் கருத்து. அவர் படித்த பள்ளியில் பையன்கள் தவறு செய்தால் 'முண்டக் கட்டையாக' பெஞ்சின் மீது ஏற்றுவாராம் வாத்தியார்-மாணவிகளுக்கு முன்பாக! ஐயகோ.. நினைக்கவே பயமாக இருக்கிறதே.. அது எந்த ஊர் பள்ளி? நல்ல வேளை, தன் குழந்தைகளுக்கும் இந்த நிலமை வரவேண்டாம் என்று தான் சான்ஃப்ரான்ஸிஸ்கோ சென்றுவிட்டார் போலும்.

லண்டனிலிருந்து ரெங்கராமன் சங்கரநாராயணன்... லகானின் அருமை பெருமைகளை விளக்கி இரண்டு பக்க கடிதம்! அதுவும் ஆங்கில லிபியில் தமிழ்க் கடிதம்! படிப்பதற்கு இது மகா சிரமம். அதனால் நான் கவலையே படாமல் என் 'உடைந்த' ஆங்கிலத்திலேயே எழுதி விடுவது வழக்கம்.

லகான் பற்றிய விவாதம் வீண். அது இந்தி மசாலா சினிமா ஃபார்முலாவை ஒட்டி எடுக்கப்பட்ட மற்றொரு குப்பை. இந்தியில் தரமான இயக்குனர்கள் கேதான் மேத்தாவைப் போல் பலர் இருக்கிறார்கள். சினிமா என்பது அற்புதமான ஒரு கலை வடிவம். ஆனால் அதற்காக சாதாரண மக்களுக்குப் புரியாது என்று பொருள் அல்ல. அர்த் சத்யா, மிர்ச் மசாலா, பவானி பவாய், மாச்சிஸ் போன்ற திரைப்படங்களெல்லாம் மக்களால் பெரிதும் வரவேற்கப்பட்டவை தான்.

ஆப்ரிக்க சினிமாவைத் தவிர உலகின் அத்தனை தேசத்துப் படங்களையும் பார்த்திருக்கிறேன். மாதத்தில் 25 சினிமா என்று பத்து வருடங்கள் பார்த்த அனுபவம்

உண்டு. இப்போது திரைப்பட விழாக்களுக்கு மட்டும் போவது என்று குறைத்துக் கொண்டுள்ளேன். விழாவில் ஒரு நாளில் ஐந்து படங்கள்.

அந்தத் தகுதியில் சொல்கிறேன்-லகான் போன்ற குப்பைகள் ஆஸ்காருக்குச் செல்வது நமக்கு அவமானம். மீரா நாயரின் மான்சூன் வெட்டிங் ஒரு **Classic**. அதுதான் ஆஸ்காருக்கு சென்றிருக்க வேண்டும்.

அடுத்து ஒரு சுவாரசியமான கடிதம் நடராஜனுடையது (கலிஃபோர்னியா) சுய அறிமுகத்துடன் துவங்குகிறது கடிதம். மற்றவர்களின் 'ஹாபி'க்கு மதிப்புக் கொடுப்பதே என்னுடைய ஹாபி. என் மனைவியின் ஹாபி-பேசுவது. என் மகளின் ஹாபி-பந்து விளையாட்டு. என் நண்பர்களின் ஹாபி- பங்குச் சந்தையிலிருந்து தமிழ் சினிமா வரை பலவிதமாக வேறுபடுகிறது. இவர்கள் எல்லோருக்கும் 'கம்பெனி' கொடுப்பதிலேயே என் பெரும்பாலான நேரம் செலவாகி விடுகிறது என்று படுஜோராகப் போகிறது இவருடைய கடிதம். இடையில் சோதிடத்தைப் பற்றி என் கருத்தை கேட்டிருக்கிறார் நடராஜன். சோதிடர்களைப் பற்றி பல கதைகள் எழுதியிருக்கிறேன். எங்கள் குடும்பத்தைக் காப்பாற்றியவர்களே சோதிடர்கள் தான். இல்லாவிட்டால் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொண்ட கேஸ்களில் எங்களுடையதும் ஒன்றாக இருந்திருக்கும்.

இந்தியாவில் அந்தக் காலத்தில் வாத்தியார்களுக்கு இருந்த ஒரே பொழுதுபோக்கு அவர்களின் மனைவி. அதனால் ஒண்ணாங் கிளாஸ் வாத்தியாரான என் தந்தைக்கு ஆறு குழந்தைகள். கொடிய வறுமை என்று சொல்ல வேண்டியதில்லை. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வீட்டுக்கு வரும் சோதிடர் தான் எங்கள் குடும்பத்திற்கான நற்செய்தியைக் கொண்டு வந்து சேர்த்து என் அன்னையாரை தற்கொலை முயற்சியிலிருந்து தடுப்பார்.

நற்செய்தி என்ன தெரியுமா? பையன் பிரமாதமாகப் படிப்பான். வெகு சீக்கிரத்திலேயே உங்கள் வீட்டில் பாலாறும் தேனாறும் ஓடும்!

கடைசியில் பாலாறும் தேனாறும் ஓடுவதற்குப் பதிலாக நாங்கள் தான் ஊரைவிட்டு ஓட வேண்டி வந்தது. என் தங்கை விட்டை விட்டு ஓடிவிட்டதால்.பொதுவாக, எங்கள் ஊரில் யாராவது ஒரு பெண் வீட்டை விட்டு ஓடிவிட்டால் அந்த வீட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பவர் அதற்கான தார்மீகப் பொறுப்பேற்று தற்கொலை செய்து கொள்வது வழக்கம். என் தந்தையார் திராவிடக் கட்சியைச் சேர்ந்தவர். ஆதனால் இம்மாதிரி சலசலப்புக்கெல்லாம் அஞ்சாமல் வேறு ஊருக்குச் சென்றுவிட்டார்.

பின்னாளில் ஒரு அம்மையாருடன் வாழ்ந்து கொண்டிருந்தேன். வீட்டுக்கு வந்த சோதிடர் ஒருவர்-அவர் என் நண்பரும் கூட-நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ முடியாது என்று கணிதம் சொல்கிறது என்று சொல்லி அதற்கான பரிகாரமும் கூறினார். அந்த அம்மையாரைப் பிரியப் போகிறேன் என்பதற்கான ஒரு சிறு அறிகுறிகூட அப்போது எங்களுக்குப் புலப்பட்டதில்லை. வெகு அன்னியோன்யம்.

''பரிகாரமெல்லாம் செய்ய முடியாது. பிரிந்தால் பிரிய வேண்டியதுதான். வேறு வழியில்லை. காலத்தின் போக்கில் நடப்பது நடக்கட்டும்'' என்று சொல்லிவிட்டேன்.

நான் ஆழ்வார்களின் மனப்போக்கில் லயிக்கக் கூடியவன். முழுச் சரணாகதி. பொற்காசுகளை அள்ளித் தருகிற நீ அதை எடுத்துச் செல்லக் கூடிய சாக்கு மூட்டையையும் வழங்க மாட்டாயா என்று கேட்கும் ஆழ்வாரின் மனோ நிலை.

பரிகாரமெல்லாம் செய்து என் வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ள வேண்டியது என் வேலையல்ல. அது பெருமாளின் வேலை. சாரு **care of** பெருமாள். இதற் கிடையில் நான் பக்கா நாஸ்திகன் வேறு. ஏகப்பட்ட குளறுபடி.

அந்த அம்மையாரும் நானும் என் நண்பரின் கணிப்பை மெய்யாக்கினோம். பிரிந்தோம்.

ஒரே நாளில் சாரு **care of** பெருமாள் என்று இருந்தது சாரு **care of platform** என்று மாறியது. கவலைப்படவில்லை. நாவல் எழுதுவதற் குக் கிடைத்த விடுமுறை.

சுக்கிரனை எனக்கு மிகவும் பிடிக்கும். **Dionysian character**. பெருங்குடிகாரன். ஆதிகவி. மகள் மீது மிகுந்த பாசம் கொண்டவன். இந்தப் பாசமே அவன் மரணத்திற் கும் காரணமாக அமைந்தது. சுக்கிரன் சோதிடக் கலையின் தந்தை. சுக்கிரனே அப்போது எனக்கு வாழ்வதற் கான பலத்தைக் கொடுத்தவன்.

அப்போது வாழ்க்கை ஒரு மர்ம நாவலின் பக்கங்களைப் போல் திடுக்கிடச் செய்யும்படி நாளுக்கு நாள் திருப்பங்கள் கூடியதாக இருந்தது. கடைசிப் பக்கத்தைப் புரட்டும் ஆர்வம் மிகுந்தது. திருநெல்வேலியில் ஒரு சோதிடரைச் சந்தித்தேன். சொன்னேன். சஸ்பென்ஸ் கூடுதலாக உள்ளது. மீளா அவஸ்தை. ஆறுமாதமாக வேலைக்கே போகவில்லை.என்னவாகும் வாழ்க்கை?

'சென்னைக்குத் திரும்புங்கள், அடுத்த மாதம் உங்களுக்குத் திருமணம்' என்றார் சோதிடர்.

திரும்பினேன். ஆறு மாதமாக அட்ரஸ் இல்லாவிட்டாலும் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை. வேறு ஒரு அலுவலகத்துக்கு மாற் றினார்கள்.

அங்கே டயானாவைப் போல் ஒரு பெண் (பெயர்-அவந்திகா).போயும் போயும் இந்தியத் தபால் துறையில், அதுவும் குமாஸ்தா வேலையில் இப்படி ஒரு அழகியா என ஆச்சரியம். அவளுக்கு என்னைப் பார்த்து இப்படியும் ஒரு பரிசுத்த ஆத்மாவா என ஆச்சரியம் (மன்னிக்கவும். இது அவளுடைய கருத்து. நான் பொறுப்பு அல்ல) இரண்டு ஆச்சரியங்களும் இரண்டே வாரத்தில் திருமணம் செய்து கொண்டன. ஏப்ரல் 2 ஆம் தேதி திருமணம். ஏப்ரல் ஃபூல் பண்ணுகிறேன் என்று நினைத்து திருமணத்துக்கு யாருமே வரவில்லை!

பிறகு நானும் அவந்திகாவும் ஒரு சோதிடரை சந்திக்க நேர்ந்தது. சோதிடர் என்பதைவிட **clairvoyant** என்று சொல்லலாம். எழுபது வயது அம்மா. கண்களை மூடி தியானித்து வருங்காலத்தையும் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் காணக் கூடியவர்.

''விரைவில் நீங்கள் ஒரு வீடு வாங்குவீர்கள். அதன் அருகே ஒரு நதியும் தெரிகிறது'' என்றார்.

'நிச்சயமாக இல்லை' என்று நினைத்துக் கொண்டேன். அதிலும் நதிக்கருகில் வீடா? அப்படியானால் அடையாறு தான். அடையாறில் வீடு வாங்க வேண்டுமானால் அதற் கு வைர வியாபாரியாக அல்லவா இருக்க வேண்டும்?

ஆனால் அந்த அம்மா சொன்னது மிக விரைவில் பலிதமாயிற் று. அடையாறு அல்ல. சின்மயா நகர். நதி? என்ன செய்வது? வீட்டுக்கு எதிரும் புதிரும் திரும்பின இடமெல்லாம் கூவம் தான் வளைந்து நெளிந்து ஓடுகிறது.

உலகின் மிக அழகிய ஸெய்ன் நதியை நினைத்து பொறாமை தான் கொள்ள வேண்டியிருக்கிறது.

இங்கே ஒரு விஷயத்தை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. மதம் என்பதற்கும் ஆன்மீகம் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசம் உண்டோ அத்தனை வித்தியாசம் தான் நான் சொல்லும் சோதிடம் என்பதற்கும் கையில் சூலம் ஏந்தியவர்கள் சொல்லும் சோதிடத்திற்கும் உள்ளது.

சூஃபிகள், ஞானிகள், கவிஞர்கள் போன்றவர்களின் ஞான திருஷ்டியே நான் சொல்வது. சூலாயுதபாணிகள் சொல்வது வேறு. இரண்டையும் போட்டு குழப்பிக் கொள்ளக் கூடாது.

உண்டியலைத் தவிர வேறு வழியில்லை

ஓய் கடவுளே.. நீர் உம்முடைய பக்தர்களிடம் பிள்ளைகளையெல்லம் வாங்கிச் சாப்பிடுகிற மகா **sadist** என்றல்லவா நினைத்திருந்தேன்.. எப்போதய்யா நல்ல பிள்ளையானீர்? அல்லது ஒருவேளை நாஸ்திகர்கள் மீது ஏதேனும் அன்பு வைத்திருக்கிறீரா? நம்பவே முடியவில்லை! பிச்சைக்காரனுக்கு கோடி ரூபாய் லாட்டரி அடித்த மாதிரியல்லவா இருக்கிறது!

வேறு என்ன, 250 மெயில்கள் வந்துள்ளன! பெங்களூர் செந்தாமரை கோணல் பக்கங்களை சேகரித்து வைத்துள்ளாராம். விரைவில் தன் வருங்காலக் கணவருக்கு அதைப் பரிசாக அளிக்க இருக்கிறாராம். ஒரு லத்தீன் அமெரிக்க எழுத்தாளருக்குத்தான் இத்தகைய மரியாதையெல்லாம் கிடைக்கும். இப்போது இங்கே நடக்கிறது. 3000 கி.மீ தூரத்திலிருந்து ஒரு வாசகர் என்னை தொலைபேசியில் அழைத்து அரை மணிநேரம் பேசிக் கொண்டிருந்தார். ஆழ்வார் பாசுரங்களை இனிமையான குரலில் பாடிக் காண்பித்தார். உருகிப்போனேன். ஹானலூலூவிலிருந்து (ஹவாய்) சந்திரமதி கந்தசாமியும், வாஷிங்டனிலிருந்து செண்பக் ராஜாமணியும் **Gloomy Sunday**யின் பாடல் வரிகளை அனுப்பியிருக்கின்றனர்.

(இதையெல்லாம் அவந்திகாவிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது 'அலட்டல் தாங்க முடியவில்லை, நானே கோணலைத் திட்டி ஒரு மெயில் அனுப்பப் போகிறேன்' என்றான் கார்த்திக்-பின்னாலிருந்து)

இதோ அந்த அற்புதமான பாடல்:

Sunday is gloomy, my hours are slumberless. Dearest, the shadow I live with are numberless. Little white flowers will never awaken you, not where the black coach of sorrow has taken you. Angels have no thought of ever returning you. Would they be angry if I thought of joining you?

Gloomy Sunday.

Gloomy is sunday, with shadows I spend it all. My heart and I have decided to end it all. Soon there will be candles and prayers that are sad, I know. But let them not weep, let them know that I am glad to go. Death is no dream, for in death I'm caressing you. With the last breath of my soul I'll be blessing you.

Gloomy Sunday.

Dreaming, I was only dreaming. I wake and I find you asleep in the deep of my heart, dear. Darling, I hope that my dream never haunted you. My heart is telling you how much I wanted you.

Gloomy Sunday.

பாடலை எழுதியவர் **Rezso Seress**. புகழ்பெற்ற ஹங்கேரிய பியானிஸ்ட். செரஸ் இந்தப் பாடலை தன்னுடைய காதலிக்காக இயற்றினார். பாடல் வெளி வந்ததும் அவள் தற்கொலை செய்து கொண்டாள். செரஸும் தற்கொலை செய்து கொண்டார். இவை செண்பக் ராஜாமணி அனுப்பியுள்ள தகவல்கள். அவர் அனுப்பியுள்ள மேலும் ஒரு தகவல்-ஈரானின் பெரும்பான்மையான பேச்சுமொழி: பெர்ஷியன்.

இனிமேல் ஒரு மாதத்திற்கு ஐயாவைக் கையிலேயே பிடிக்க முடியாது. ஆமாம், நான் ஒரு ஃபுட்பால் **fanatic.**

கடவுளின் சிருஷ்டியில் பெண் ஒரு அற்புதம் என்றால் மனிதனின் சிருஷ்டியில் கால்பந்தாட்டம் ஒரு அற்புதம். இந்த ஆட்டத்தை மற்ற விளையாட்டுகளுடன் ஒப்பிட முடியாது. இது ஒரு **Carnival.**

துவக்க ஆட்டமாக ஃப்ரான்ஸும், செனகலும் மோதப் போகின்றன என்றதும் 'செனகல் தான் வெல்லும்' என்றேன். ரஞ்சன் சிரித்தார். ரஞ்சனும் என்னைப்போல் ஒரு ஃபுட்பால் வெறியர். 'செனகலாவது ஜெயிப்பதாவது?' என்றார்.

நான் சொன்னது போலவே செனகல் வென்றது. ஆனால் நான் ஏன் அப்படிச் சொன்னேன்? ஒரு சில அனுமானங்கள். 1990 ஆம் ஆண்டு அப்போதைய நடப்பு சேம்பியனான அர்ஜென்டினாவை துவக்க ஆட்டத்தில் கேமரூன் அணி வென்றது ஞாபகக் கிடங்கில் இருந்ததால் சொல்லியிருக்கலாம்.

மேலும், **Ousman Sembene** என்ற அற்புதமான இயக்குனரைக் கொடுத்தது செனகல். அந்த நாடு வெல்ல வேண்டாமா? மட்டுமல்ல, கால்பந்தாட்டத்தில் ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கம் முறியடிக்கப்பட வேண்டும்.

செனகல் நாட்டு ஆட்டக்காரர் கோல் போட்டதும் அவருடைய டி-ஷர்ட்டை கழற்றிப் போட்டு அதைச் சுற்றி வந்து அந்த ஆட்டக்காரர்கள் ஒரு நடனம் ஆடினார்களே... அதைக் காணக் கண் கோடி வேண்டும். அதுதான் **Dionysian spirit**. அதற்காகத்தான் செனகல் வெல்லும் என்று சொன்னேன்.

இந்த முறை ஐரோப்பிய நாடு எதுவும் உலகக் கோப்பையை வெல்ல முடியாது என்பது என் யூகம். அதிலும் குறிப்பாக ஜெர்மன் வெல்லக் கூடாது என்பது என் பிரார்த்தனை. உலக நாடுகள் முழுதுமே ஜெர்மன் டீம் என்றால் ஒரு வெறுப்பு உண்டு. காரணம், அந்த அளவுக்கு ஃபௌல் செய்யக் கூடியவர்கள். ஒருமுறை, நடுவருக்குத் தெரியாமல் எதிரணியின் கோலியை அடித்து காயப்படுத்தியவர்கள். இதில் எனக்கு ஒன்றும் ஆச்சரியமில்லை. பெர்லினில் சாலைகளில் என்னைத் தனியாக நடப்பதற்கே என் நண்பர்கள் அனுமதிக்கவில்லை. அந்த அளவுக்கு அங்கே **Xenophobia.** (ஜெர்மன் அனுபவம் பற்றி தனியாக எழுதி இருப்பதால் இங்கே விரிவாக எழுதவில்லை.)

கால்பந்தாட்டம்பற்றி யோசிக்கும்போது தவிர்க்கவே முடியாமல் ஒரு கேள்வி எழுகிறது. 50 லட்சம் பேரை ஜனத் தொகையாகக் கொண்ட உருகுவே என்ற சிறியதொரு நாடு (சென்னை நகரின் ஜனத்தொகையையே 50 லட்சம்!) இரண்டு முறை சேம்பியனாகியிருக்கிறது-1930 மற்றும் 1950 ஆம் ஆண்டுகளில். ஆனால் இந்தியா சேம்பியனாவது கிடக்கட்டும், உலகக் கோப்பை போட்டிகளில் கலந்து கொள்வதற்குக் கூட இன்னும் 200 ஆண்டுகள் ஆனாலும் தகுதி பெற முடியாது என்று தோன்றுகிறது. காரணம், கிரிக்கெட்.

நம்மாழ்வாரின் திருவாய்மொழி வரிகள் தான் ஞாபகம் வருகிறது. சொன்னால் விரோதம் இது ஆகிலும் சொல்லுவேன்... கிரிக்கெட் ரசிகர்கள் என் மேல் விரோதம் கொள்வார்கள்.. இருந்தாலும் சொல்லித்தான் ஆக வேண்டும்.

கிரிக்கெட் இந்தியாவில் மற்ற விளையாட்டுகளை அழித்தொழித்து விட்டது. அப்படி அழித்த விளையாட்டில் ஒன்று தான் கால்பந்தாட்டம். மிகச்சிறந்த ஆட்டக்காரர்கள் இங்கு ஷூ வாங்கக் கூட வழி தெரியாமல் வெறும் காலில் ஆடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது ஒரு அவமானகரமான உண்மை.

ஒரு வீதியில் ஒரு வீட்டின் மாத வருமானம் ஒரு கோடி ரூபாய். அதே வீதியின் கடைசியில் இருக்கும் குடிசையில் வாழும் ரிக்ஷாக்காரரின் மாத வருமானம் ஆயிரம் ரூபாய். இந்தியாவில் காணப்படும் மலைக்கும் மடுவுக்குமான இந்த வித்தியாசத்தைப் பார்த்து என் வெளிநாட்டு நண்பர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். இதே போன்ற வித்தியாசம்தான் இந்தியாவில் கிரிக்கெட்டுக்கும் கால்பந்தாட்டத்திற்கும் இடையே உள்ளது.

இதனால் என்னை கிரிக்கெட்டின் விரோதி என எண்ணிவிட வேண்டாம். எனக்கும் கிரிக்கெட் பிடிக்கும். அநேகமாக கிரிக்கெட் பற்றி தமிழில் கிடைக்கக் கூடிய ஒரே ஒரு சிறுகதையை அடியேன் தான் எழுதியிருக்கிறேன். (தலைப்பு: கிரிக்கெட்டை முன் வைத்து புத்தி ஜீவிகளுக்கு ஒரு முட்டாள் சொல்லிக் கொண்டது-எழுதிய ஆண்டு 1987) பிரச்னை அது அல்ல-கால்பந்தாட்டம் இந்தியாவில் வளராததற்குக் காரணம் என்ன என்பதுதான்.

பாரிஸில் ஷோபா சக்தியுடன் சுற்றிக் கொண்டிருந்தேன். ஜனவரி மாதம். ஐந்து டிகிரி செல்ஷியஸ். ஸ்வெட்டர், மஃப்ளர், தொப்பி என்று ஏகப்பட்ட பாதுகாப்பு. ஆனால் ஒரு மணி நேரம் சென்றதும் திடீரென்று வெயில். வேர்க்கத் துவங்கி விட்டது. இந்த **paraphernalia**வையெல்லாம் வைப்பதற்கே ஒரு தள்ளு வண்டி வேண்டும் என்கிற நிலைமை உண்டாகி விட்டது. விஷயம் இதோடு போகவில்லை. மேலும், ஒரு மணி நேரம் சென்றதும் திடீரென்று மழை! ஷோபாவிடம் சொன்னேன்.. 'என்ன இது இப்படி திடீர் திடீர் என்று மாறுகிறது' என்று. அதற்கு ஷோபா சொன்ன பதில்-இங்கே பாரிஸில் மூன்று W-க்களை முன் கூட்டியே யூகம் பண்ண முடியாது. அது பாட்டுக்கு வரும். போகும். மாறிக் கொண்டே இருக்கும். அந்த மூன்று **W**-க்கள்... **work, women & weather**.

ஷோபாவின் இந்த வாசகம் எனக்கு மூன்று தினங்களுக்கு முன்னால் ஞாபகம் வந்தது. காலை வேளை - எழுத வேண்டியது எக்கச்சக்கமாக இருந்தது. ஆனால் காகிதம் தீர்த்து விட்டது. ரீஃபிளும் காலி. மோட்டு வளையை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தேன். கையில் ஒரு பைசா இல்லை. அப்போது கார்த்திக் கேட்டான் என்ன விஷயம் என்று. சொன்னேன். 'ப்பூ, இதுதானா?' என்ற படி கிளம்பினான். 'ஏய், எங்கே கிளம்புகிறாய்? உன்னிடம் பணம் இருக்கிறதா என்ன?' 'பணம் எதுக்கு? கடனுக்கு வாங்கிக் கொண்டால் போயிற்று'

ஆகா.. தாயைக் காத்த தனயனைத்தான் கேள்விப் பட்டிருக்கிறோம். சின்ன வயதில் பார்த்தும் இருக்கிறோம். (கண்ணாம்பாவின் அழுத முகம் இப்போதும் ஞாபகம் வருகிறது!) இவன் தந்தையைக் காத்த தனயன் போலும் என நினைத்துக் கொண்டேன்.

மதியம் மணியிடமிருந்து தொலைபேசி அழைப்பு. 'மாலையில் சந்திக்கலாமா?'

'எங்கே, நம்பர் ஒன் ஆர் நம்பர் டூ?'

நம்பர் ஒன் என்றால் மெரீனா பீச். நம்பர் டூ-எட்வர்ட் எலியர்ட்ஸ் பீச்.

'இரண்டும் இல்லை. சோழா ஷெரட்டன்' என்றார் மணி. 'சரி, வருகிறேன்' என்று சொல்லி விட்டேன்.

ஆனால் கிளம்பும்போது தான் ஞாபகம் வந்தது-கையில் ஒரு பைசா கூட இல்லை என்பது. எப்படிப் போவது? அவந்திகா வைத்திருக்கும் உண்டியலைத் தவிர வேறு வழியில்லை. சுட்ட மண்ணால் செய்த அழகிய உண்டியல் அது. குலுக்கிக் குலுக்கிப் பார்த்தேன். துளை வழியே காசுகள் விழுகிற வழியைக் காணோம். சின்ன வயதில் அம்மாவும் இதேபோல் ஒரு உண்டியல் வைத்திருந்தார். அதிலிருந்து காசுகளை எடுக்க விளக்குமாற்றுக் குச்சியைப் பயன்படுத்துவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இப்போது அந்தக் குச்சிக்கு எங்கே போவது? கால மாறுதலில் தென்னந்துடைப்பத்துக்குப் பதிலாக பிளாஸ்டிக் துடைப்பம் வந்துவிட்டது என்று கவலைப்பட்டு ஒரு **folklore** பத்திரிகையில் ஆய்வாளர் ஒருவர் கட்டுரை எழுதியிருந்தது ஞாபகம் வந்தது. நம் வீட்டில் என்ன இருக்கும் என்று தேடினேன். நல்ல வேளை, தென்னங்குச்சிகளால் கட்டப்பட்ட துடைப்பம் இருந்தது. ஒரு குச்சியை எடுத்து வந்து உண்டியலின் துளையில் விட்டேன். அப்போது ஒரு சிறிய பயம். பூஜையறையில் இருக்கும் இந்த உண்டியலில் துடைப்பக்குச்சியை விடலாமா? சரி, ஆபத்துக்குப் பாவமில்லை. நாணயங்கள் ஒவ்வொன்றாய் விழுந்தன. எடுத்துக்கொண்டு கிளம்பினேன்.

கதீட்ரல் சாலையிலுள்ள நட்சத்திர ஓட்டல் சோழா ஷெரட்டன். ஒரு பெக்கின் விலை ரூ.300. கோபால கிருஷ்ணனும் வந்திருந்தார். மூவருக்கும் ஆன பில் தொலை ரூ.6000/- ஷோபா சக்தி பாரிஸில் சொல்லிய மூன்று W-க்கள் ஞாபகம் வந்தது!

என்.ஓ.சி.

இந்தக் கதையை யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று எனக்கு நீண்ட நாளாக ஆசை. கதை என்றால் கதை அல்ல. நிஜம். இப்போதுதான் அதற்குச் சந்தர்ப்பம் வந்துள்ளது.

வெளிநாடு செல்ல வேண்டுமானால் இங்கே அரசு ஊழியர்கள் தங்கள் துறையின் தலைமை அலுவலகத்திலிருந்து என்.ஓ.சி. வாங்க வேண்டும். (நோ அப்ஜெக்ஷன் சர்டிஃபிகேட்) இதைக் காண்பித்தால்தான் தூதரகத்தில் வீசா தருவார்கள்.

2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரிஸ் வரும்படி நண்பர் ஷோபா சக்தி எழுதியிருந்தார். கடிதம் எனக்கு ஏப்ரல் மாதமே வந்துவிட்டது.

நான் வேலை பார்த்தது தபால்துறை. 'சும்மா ஊர் சுற்றிப் பார்க்கப் போகிறேன்' என்றால் என்.ஓ.சி. தரமாட்டார்கள். ஏதேனும் குறிப்பிட்ட காரணம் சொல்ல வேண்டும். அதனால்

பாரிஸிலிருந்து வந்து கொண்டிருந்த 'எக்ஸில்' என்ற தமிழ் சஞ்சிகையின் சார்பாக ஒரு இலக்கியக் கூட்டத்தில் 'சமகாலத் தமிழ் இலக்கியம்' பற்றி விரிவுரை ஆற்றவேண்டும் என்பதை காரணமாகக் குறிப்பிட்டேன். இதற்கு அத்தாட்சியாக எக்ஸில் சஞ்சிகையிலிருந்து வந்த கடிதத்தையும் என் விண்ணப்பத்துடன் இணைத்து என் அதிகாரியிடம் கொடுத்தேன். என்னுடைய கேஸை என் அதிகாரி சிபாரிசு செய்தால்தான் தலைமை அலுவலகத்தில் விண்ணப்பத்தை பரிசீலனைக்கே எடுத்துக் கொள்வார்கள். இல்லாவிட்டால் உடனடி நிராகரிப்புதான்.

இப்படி ஒரு விஷயத்தில் அல்ல. எந்தக் காரியமாக இருந்தாலும் மேலதிகாரியின் சிபாரிசுக் கையெழுத்து அவசியம்.அரசு அலுவலகங்களில் ஜால்ரா அடிப்பதும் முறைவாசல் செய்வதும் பிரதானமாகப் போய், அரசாங்க அலுவலைச் செய்வது பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதற்கும் காரணம் இதுதான் . எக்காரணம் கொண்டும் உங்கள் மேலதிகாரியை நீங்கள் பகைத்துக் கொண்டிருக்கக் கூடாது. பகைத்தால் உங்களுடைய எந்தக் காரியமும் நடக்காது.

அதிர்ஷ்டவசமாக அப்போது என் அதிகாரியாக இருந்தவர் என் மீது மிகுந்த மரியாதை கொண்டவர். பெயர் தேவநாதன். வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர். மிகத் தேர்ந்த உபந்யாசகர். தினமும் அரைமணி நேரமாகிலும் எனக்கு ஆழ்வார் பாசுரங்களைப் பாடி விளக்கம் சொல்லுவார். காரணம், என் எழுத்தின் மீது அவருக்கு ஆர்வமும் விருப்பமும் உண்டு. இதையும் விட முக்கியமான காரணம்-அவந்திகா.

ஒரு விதவை பெண்ணை அவளுடைய பத்து வயது பையனோடு திருமணம் செய்து கொண்டது அபூர்வமான விஷயமாம். சமூக மதிப்பீடுகளை கேள்வி கேட்கும் என்னைப் போன்ற ஒரு எழுத்தாளனுக்கு இதில் என்ன அபூர்வம் இருக்க முடியும்? மேலும், அவந்திகாவே ஒரு அபூர்வம். அவளை மணந்து கொள்ள ஒருவன் தவமல்லவா செய்திருக்க வேண்டும்?

அவந்திகா பற்றிய மற்றும் ஒரு தகவல்-அவள் கணிதமேதை ராமானுஜத்தின் கொள்ளுப் பேத்தியின் மகள்.

இந்தப் பின்னணியில் தேவநாதன் எனக்கு சுலபத்தில் சிபாரிசு செய்து விட்டார் என்றாலும் ஒரு பெரிய தடங்கல் இருந்தது. என்.ஓ.சி. கொடுப்பதாக இருந்தால் ஒரு அரசு ஊழியரின் மேல் சமீப சில ஆண்டுகளில் எந்த ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கக் கூடாது. ஆனால் என் மீதோ ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்பட்டு தண்டனையும் அளிக்கப்பட்டிருந்தது. ஒரு பத்திரிகையில்
நான் எழுதியிருந்த கதைக்காக அளிக்கப்பட்ட தண்டனை அது!.

என் அதிகாரி சளைக்கவில்லை. விண்ணப்பத்தில் இந்தக் கேள்விக்கு 'எந்தத் தண்டனையும் அளிக்கப்படவில்லை' என்று எழுதி அனுப்பி விட்டார்.

ஆகஸ்ட் மாதவாக்கில் என்.ஓ.சி. வந்து சேர்ந்தது. மகிழ்ச்சியுடன் பிரித்து படித்த எனக்கு அதிர்ச்சி! வீசா வாங்குவதற்கும், வெளிநாடு செல்வதற்கும் கொடுக்கப்பட வேண்டிய என்.ஓ.சி. பாஸ்போர்ட் வாங்குவதற்கான என்.ஓ.சி.யாக இருந்தது.

பாரிஸ் செல்வதை நவம்பருக்கு ஒத்திப் போட்டு விட்டு பிழையைச் சுட்டிக்காட்டி தலைமையகத்துக்கு எழுதினேன். ஆனால் அங்கேயிருந்த எனக்குத் தெரிந்த அதிகாரி மாறி விட்டார். புதிய அதிகாரிக்கு **Exil** என்ற பெயர் பீதியை ஏற்படுத்தி விட்டது. எக்ஸைல்-நாடு கடத்தப்படுதல்-ஆக, என்னை அழைத்தவர்கள் நாடு கடத்தப்பட்டவர்களா? நாடு

கடத்தப் பட்டவர்கள் என்னை அழைக்கிறார்கள் என்றால் நான் ஒரு தீவிரவாதியா? தீவிரவாதியை நாட்டை விட்டுத் தப்ப விட அனுமதிக்கலாமா? என்றெல்லாம் யோசித்த அந்த அதிகாரிக்கு என் பயணத்தின் நோக்கமே இந்தியாவின் மேலாண்மைக்கு ஊறு விளைவிப்பதுதான் என்ற தேசப்பற்று மிக்க சந்தேகம் கிளம்பி விட்டது.

இந்த விஷயத்தை தில்லியிலுள்ள மந்திரிசபை தான் தீர்மானிக்க வேண்டும் என்று கருதிய அவர் என் விண்ணப்பத்தை தில்லிக்கு அனுப்பி விட்டார்.

இப்படி ஒரு சந்தேகம் எழுந்தால் தில்லி தலைமையகம் என்ன செய்யும்? ஃப்ரான்ஸ் அரசுக்கு எழுதிக் கேட்கும். அல்லது அந்தக் காகிதங்களைக் கிழித்துக் குப்பைத் தொட்டியில் போடும்.

நான் ஒரு ஆள் பாரிஸ் போவது **Interpol** அளவில் விசாரிக்கப்பட்டு அகில உலகப் பிரச்னையாக மாறுவதை விரும்பாத நான் மணியை அணுகினேன். அவருக்கு மத்திய மந்திரிகள் பலரையும் நேரடியாகத் தெரியும் என்பதால் தபால்துறை மந்திரியின் உதவியாளரிடம் பேசினார். மந்திரியின் உதவியாளர் எங்கள் இலாகாவின் முதன்மை அதிகாரியிடம் பேசினார். அந்த அதிகாரிதான் இந்தியத் தபால் துறைக்கே தலைவர்! உடனே அந்த அதிகாரியின் உதவியாளர் என்னைத் தொலைபேசியில் அழைத்தார்.

''நீங்கள் க்ரூப் **A** யா? க்ரூப் **B** யா?'' என்று கேட்டார்.

க்ரூப்-ஏ என்பது ஐ.ஏ.எஸ். எனக்குப் புரிந்து விட்டது. விஷயம் மந்திரி அளவுக்குப் போய் விட்டதால் நான் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியாகத்தான் இருக்க வேண்டும் என்று அவர் நினைத்து விட்டார். நான் சொன்னேன்.. ''ஐயா.. கேட் கீப்பருக்கு அடுத்த லெவலில் உள்ள ஒரு ஸ்டெனோ தான் நான். தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்''

நான் சொன்னதைக் கேட்டு அவர் சிரித்து விட்டார். ''இந்த மாதிரி கீழ் மட்டத்தில் உள்ள ஊழியர்களின் விண்ணப்பத்தையெல்லாம் தில்லிக்கு அனுப்பி எங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டாம்'' என்ற குறிப்புடன் தில்லி நிர்வாகம் என் விண்ணப்பத்தை சென்னைக்குத் திருப்பி அனுப்பியது.

அப்போது எங்கள் துறைத் தலைவர் ரிட்டயர் ஆகிவிட்டதால் அவருக்கு அடுத்த அதிகாரியிடம் சென்று கையெழுத்திட்டு தருமாறு முறையிட்டேன்.

'முறையிட்டேன்' என்பது நாகரீகமான பிரயோகம். கெஞ்சினேன் என்பதுதான் உண்மை. காரணம்-அப்போது நவம்பர் 18 ஆம் தேதி. 25 ஆம் தேதிக்கு ஷோபா டிக்கட் அனுப்பியிருந்தார். ஏதேனும் குளறுபடி நேர்ந்தால் 35 ஆயிரம் ரூபாய் விலையுள்ள டிக்கட் வீணாகிவிடும். அதுவே என் பதற்றத்திற்குக் காரணம். மேலும் இந்தப் பணம், ஷோபா சக்தி பாரிஸில் ஒரு கஃபேயில் கோப்பை கழுவி சம்பாதித்தது. இனிமேல் இவர்கள் என்.ஓ.சி. கொடுத்த பிறகு தான் வீசா எடுப்பதற்காக பாண்டிச்சேரி செல்ல வேண்டும். ஒரே ஒரு வாரம்தான் உள்ளது.

எதற்கும் அந்த அதிகாரி அசையவில்லை. இறுகிய முகத்துடன் ''தலைவர்தான் கையெழுத்துப் போட வேண்டும். நான் போட்டால் என் வேலை காலி'' என்றார். கர்னாடகா தபால் துறையின் தலைவர்தான் அப்போது எங்களுக்கும் தலைவராக இருந்தவர். சென்னையில் புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை இரண்டு மாநிலங்களுக்கும் ஒரே தலைவர்தான்.

இப்போது என்ன செய்வது?

பல அதிகாரிகளைப் பிடித்து காலில் விழுந்து கெஞ்சி பெங்களூருக்கு ஃபேக்ஸ் அனுப்பினோம். பெங்களூர் தலைவர் படு சுறுசுறுப்பு. உடனே பதில் ஃபேக்ஸ் வந்தது.

''அந்த ஆள் செப்டம்பர் மாதத்தில் நடக்க இருக்கும் கூட்டத்திற்குத்தானே அனுமதி கேட்டுள்ளார்? ஆனால் இப்போது நடப்பது நவம்பர் மாதமாயிற்றே? காலம் கடந்துவிட்டது. இனிமேல் என்.ஓ.சி. கொடுப்பதில் அர்த்தமில்லை என்பதால் விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது''

ஆக, இனிமேல் நான் ஷோபாவுக்கு எழுதி அடுத்தக் கூட்டத்துக்கான கடிதத்தை வாங்கிக் கொடுத்து, அதற்குள் மற்றொரு அதிகாரி வந்து அதை அவர் ஐ.நா. சபைக்கு அனுப்பி வைத்து... ஆங்கிலத்தில் உள்ள ஒரு வசை வார்த்தையைச் சொல்லி விட்டு என்.ஓ.சி. இல்லாமலேயே பாண்டிச்சேரி கிளம்பினேன்.

பாண்டிச்சேரியில் என் நண்பரிடம் விஷயத்தைச் சொன்னேன். ''அரசு ஊழியர் என்பதை அப்படியே அமுக்கி விடுங்கள். இதோ நான் ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொன்ன அவர் ஐந்தே நிமிடத்தில் அவருடைய பத்திரிகையில் நான் வேலை செய்வதாகவும், வெளிநாடு செல்ல என்.ஓ.சி. தருவதாகவும் சான்றிதழ் கொடுத்தார். (அவர்தான் அப்பத்திரிகையின் உரிமையாளர்).

உடனே வீசா கிடைத்துவிட்டது. வாங்கிக் கொண்டு சென்னை திரும்பி, பயண ஏற்பாடுகளை முடித்துக் கொண்டு விமான நிலையம் வந்தேன். இந்திய இமிக்ரேஷன் அதிகாரிகள் என்னைப் பற்றிய விபரங்களைக் கேட்டனர். சொன்னேன். ''நீங்கள் பாரிஸ் செல்ல முடியாது'' என்று கூறிவிட்டனர்.

''அரசு ஊழியர் என்கிறீர்கள். அதே சமயம் இலக்கிய விஷயமாக பயணம் என்கிறீர்கள். நம்ப முடியவில்லை''. என்னுடைய தவறுதான். பாண்டிச்சேரியில் சொன்ன பொய்யையே இங்கேயும் சொல்லியிருக்க வேண்டும்.

அப்போது சில இமிக்ரேஷன் அதிகாரிகள் ஒருவரிடம் ஆட்டோகிராஃப் வாங்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். அவரோ என்னைப் பார்த்து கையசைத்தபடி என்னிடம் வந்தார்.

''இவரை உங்களுக்குத் தெரியுமா?'' என்று அவரிடம் கேட்டனர் அதிகாரிகள். ''ஐயோ தெரியுமாவா? இவர் பெரிய எழுத்தாளர். இவரை ஏன் நிறுத்தி வைத்திருக்கிறீர்கள்?'' என்றார் அவர்.

அவர்தான் திரைப்படப் பாடலாசிரியர் அறிவுமதி!

அவர் சொன்ன பிறகுதான் என்னை விமானம் ஏற அனுமதித்தனர் அந்த அதிகாரிகள்.

என் கண்டுபிடிப்புகள்.

இந்திய சாஸ்திரீய சங்கீதம் **Apollonian** தன்மை கொண்டது; ஆஃப்ரிக்க இசை- **Dionysian**.

Planet என்ற தலைப்புள்ள **C.D.** ஒன்றை கேட்டுக் கொண்டிருந்த போது இதை நான் கண்டுபிடித்தேன்.

3000 கி.மீ. தூரத்திலிருந்து போன் செய்து அரை மணி நேரம் ஆழ்வார் பாசுரங்களை பாடிய வாசகர் தான் அந்த **C.D.**யை அனுப்பியிருந்தார். 'பெயர் வேண்டாம்' என்று சொல்லியிருப்பதால் வாசகர் என்று குறிப்பிடுகிறேன்.

என் கண்டுபிடிப்பைப் பற்றி நண்பர் விஜயனிடம் கூறியபோது 'இதே விஷயத்தை வேறு ஒரு ஆளும் கண்டுபிடித்து நிறப்பிரிகை பத்திரிகையில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எழுதியுள்ளார்' என்றார். அந்த ஆள் வேறு யாருமல்ல; விஜயன் தான்.

எனக்கு வருத்தமாகப் போய்விட்டது- நான் கண்டுபிடித்த ஒரு விஷயத்தை ஏற்கனவே ஒருவர் கண்டுபிடித்திருந்தது. 'கவலைப்படாதீர்கள், **Small men think alike**' என்று ஆறுதல் சொன்னார் விஜயன்.

நம்முடைய பறையை **Dionysian** இசை என்று சொல்லலாம். கேட்கும்போது நாடி நரம்புகள் துள்ள வேண்டும். குதியாட்டம் போட வேண்டும். மெய் மறக்கச் செய்யும் இசை என்று சொல்வார்கள். மெய் மறக்கச் செய்தால் அது **Apollonian** இசை. மெய் என்பது உடம்பு. மெய்யை மறக்கச் செய்யலாகாது. மெய் மைதுன உச்சத்துக்குச் செல்ல வேண்டும். கதற வேண்டும். கோவில் பூசாரி உடுக்கையை அடிக்கும் போது சாமி வந்து ஆடுவார்களே-அது போல. அதுதான் **Dionysian** இசை.

பறை இசையில் இந்தப் பிரபஞ்சமே துள்ளி ஆடும். வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிக்கும் இந்த உடல். தலித் சமூகத்தின் இதுவரைக்குமான வரலாற்றை பறையின் அதிர்வில் நீங்கள் கேட்க முடியும். மரண ஊர்வலத்தில் பறை அடித்துக் கொண்டு செல்வதை பஸ்ஸிலிருந்து பார்க்கும்போது, குதித்து இறங்கி அவர்களோடு ஆட வேண்டும் என்று தோன்றும்.

பறை பற்றி எழுத வேண்டும் என்பது என் நீண்ட நாள் கனவு. ஆனால் பறையின் உக்கிரத்தை எழுத்தில் கொண்டு வர முடியுமா என்றும் சந்தேகம். இனி கவலையில்லை. அழகிய பெரியவன் அதைச் செய்கிறார். தமிழில் யாரையேனும் பார்த்து பொறாமைப் படுகிறேன் என்றால் அது அழகிய பெரியவன்தான்.

'அவர் வாழும் பேர்ணாம்பட்டுக்கு நடந்தே செல்லப் போகிறேன்' என்று ரவிக்குமாரிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது அவர் பயந்து போனார். நடந்து செல்வது பற்றியல்ல. அழகிய பெரியவன் பற்றி. 'அவர் இப்போது நன்றாக எழுதிக் கொண்டிருக்கிறார். நீங்கள் போய் பார்த்து அதைக் கெடுத்துவிடாதீர்கள்' என்றார் ரவிக்குமார்.

Werner Herzog என்ற ஜெர்மன் இயக்குனர் ஒருவர் இருக்கிறார். ஜெர்மனியின் மிகச் சிறந்த மூன்று இயக்குனர்கள் என்று பார்த்தால் அதில் ஹெர்ஸாக் நிச்சயம் இருப்பார். மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் இவர் படத்தைப் பார்க்க வேண்டும்.

இல்லாவிட்டால் நாம் எதையோ இழந்திருக்கிறோம் என்று பொருள். இவரது படங்களில் நடித்த **Klaus Kinski** என்ற நடிகருக்கு ஈடு இணையே உலகில் எவரும் இல்லை.

ஹெர்ஸாக்கின் நண்பர் ஒருவர் அடிக்கடி அவரிடம் 'படம் எடுப்பது சுலபமான வேலை' என்று சொல்லிக் கொண்டிருப்பாராம். 'அப்படியானால் நீ எடுத்துப் பாரேன்'- இது ஹெர்ஸாக்.

''எடுத்தால் நீ என்ன செய்வாய், பெட்''

''நீ மட்டும் எடுத்துவிட்டால் நான் என்னுடைய ஷூவையே சாப்பிட்டுக் காட்டுகிறேன்''

ஹெர்ஸாக்கின் நண்பர் பந்தயம் கட்டியபடி படம் எடுத்து விட்டார்.

இப்போது ஹெர்ஸாக் ஷூவை சாப்பிட வேண்டும். துரதிருஷ்டம், ஹெர்ஸாக் ஷூ போடுவதில்லை. பூட்ஸ்தான்.

ஹெர்ஸாக் சற்றும் அசரவில்லை. பூட்ஸைக் கழற்றி கொதிக்கும் வெந்நீரில் போட்டார். ஆறு மணி நேரம் வெந்நீரில் வெந்த பூட்ஸை எடுத்து மேஜையில் வைத்து கத்தி மற்றும் முள் கரண்டி போட்டு வெட்டி எடுத்துச் சாப்பிட்டார். இரண்டு பூட்ஸையும் அவர் சாப்பிட்டு முடிக்க இரண்டு மணி நேரம் ஆயிற்று. இச்சம்பவத்தை முழுதுமாக படமாகவும் எடுத்தார்கள் ஹெர்ஸாக்கின் நண்பர்கள். '**Herzog eats his own shoes**' என்ற அந்தப் படத்தை தேடிப் பிடித்து பாருங்கள்.

ஆனால் நான் சொல்ல வந்தது இது அல்ல. ஹெர்ஸாக்கின் தோழி ஒருத்திக்கு லண்டனில் சுகக்கேடு வந்து விட்டது. மரணத்தின் விளிம்பில் நிற்கிறாள். அப்போது ஹெர்ஸாக் பாரிஸில் இருக்கிறார். என்ன செய்வது? விமானத்தைப் பிடித்து ஓடிப்போய்ப் பார்க்க வேண்டும். ஆனால் ஹெர்ஸாக் என்ன செய்தார் தெரியுமா?

பாரிஸிலிருந்து லண்டனுக்கு நடந்தே சென்றார்.

நண்பர்கள் பரிகசித்தார்கள். 'நீ போய்ச் சேரும்வரை அவள் உயிரோடு இருப்பாளா?' என்று கேட்டார்கள். எதைப் பற்றியும் ஹெர்ஸாக் கவலைப்படவில்லை.

ஜனவரி மாதம். நல்ல கடுமையான குளிர்காலம் வேறு. ஆனாலும் ஹெர்ஸாக் அசாத்தியமான மனிதர். லண்டன் சென்று தன் தோழியைப் பார்த்தார். தோழியும் உயிரோடு தான் இருந்தாள்.

பேர்ணாம்பட்டுக்குச் செல்வது அவ்வளவு கடினமல்ல. காலையில் கிளம்பினால் மாலையில் போய்ச் சேர்ந்து விடலாம்.

அழகிய பெரியவனின் எழுத்துக்கு நான் அடிமை என்று சொல்லலாம். என் வருத்தம் என்னவென்றால் அழகிய பெரியவன் எழுத்தில் சாதித்ததை இளையராஜா இசையில் சாதிக்கவில்லையே என்பதுதான். (அடப்பாவி, இளையராஜாவை விட மாட்டேங்கிறான்யா!) இளையராஜாவின் இசை **Apollonian** தன்மை கொண்டது. ஆனால் அவரது மூத்த சகோதரர் பாவலர் வரதராசனை எனக்குப் பிடிக்கும். ஆசுகவியான அவர்தான் உண்மையான இசைஞானி. அற்பாயுளில் அவர் மறைந்தது தமிழ்நாட்டின் துரதிர்ஷ்டம்.

இந்திய சாஸ்திரீய சங்கீதம் **Apollonian** தன்மை கொண்டதாக இருப்பதன் காரணம் - இந்திய வாழ்வும் தத்துவமும் உடலை மறுப்பதாக இருப்பதுதான் என்கிறார் விஜயன். எனக்கு இதில் முழு உடன்பாடு.

ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். பாரிஸில் தங்கிய போது என் உணவு-காலையில் வியட்நாம் சூப். மதியம், ஐரோப்பிய உணவு. இரவில் பழம். ஷோபா சக்தி கூட என் இரவு உணவு பற்றி கிண்டல் செய்தார். 'என்ன சாரு, காந்தி மாதிரி ஆகி விட்டீர்கள்?' என்று. வேறு என்ன செய்வது? அங்கே சூப் என்று சொன்னால் அதில் அரை கிலோ மாமிசம் இருக்கிறது. பீட்ஸா என்றால் நான்கு பேர் சாப்பிடும் அளவுக்கு தருகிறார்கள். நமக்கு அப்படிச் சாப்பிட்டுப் பழக்கமில்லையே! அரை கிலோ மாமிசம் வாங்கினால் அதை ஒன்பது பேர் சாப்பிட வேண்டும். ஆளுக்கு ஒரு துண்டு கிடப்பதே அரிது.

பாரிஸில் நான் தமிழ் உணவே அவ்வளவாகக் சாப்பிடவில்லை. மோர்க் குழம்பு சாப்பிடவா இவ்வளவு தூரம் வந்திருக்கிறோம்? பாரிஸிலிருந்து பெர்லின் சென்றேன். நண்பர் சுசீந்திரன்-இன்பா தம்பதியினரின் இல்லம். இன்பா, சுசீந்திரன் இருவருமே சமையல் கலை வல்லுநர்கள். (ஒரு ஆச்சரியம்-இதை எழுதிக் கொண்டிருக்கும்போது சுசீந்திரனிடமிருந்து தொலைபேசி அழைப்பு! சென்னை வந்துள்ளேன்-சந்திக்க வேண்டும் என்று. நூறு வயசு என்பார்களே, அது சுசிக்கு உண்டு.) ஒரு மாத காலம் தமிழ் உணவு-அதிலும் குறிப்பாக ரசம் சாப்பிடாததால் 'ரசம் சாப்பிடலாம்' என்றேன். பொதுவாக ஈழத் தமிழர்களுக்கு ரசம் வைக்கத் தெரியாது. மற்றபடி சமையலில் கில்லாடிகள். அதுவேறு. என் நண்பர் ஒருவர் ரசம் சாப்பிடுவதற்கென்றே பாரிஸிலிருந்து ஆண்டுதோறும் தமிழ்நாட்டுக்கு வருகிறார்.

ஆனால் அன்றைய தினம் இன்பா வைத்த ரசம்-காவிய ரசம். ரசித்துச் சாப்பிட்டேன். பிறகு வெளியே கிளம்பும்போது இன்பா சொன்னார்-'பல் துலக்கி விட்டு கிளம்புங்கள்' என்று. 'ஏன்?' 'இங்கே ஜெர்மன்காரர்களுக்கு பூண்டு வாசம் பிடிக்காது'

''புரட்சி என்றால் கூட ஜெர்மன்காரர்கள் டிக்கட் எடுத்துக் கொண்டுதான் புரட்சி செய்ய வருவார்கள்''-இதைச் சொன்னவர் லெனின். ஆக, ஜெர்மன்காரர்கள் உலகப் பிரசித்தம்.

இது தான் **Apollonian character**. ஃப்ரான்ஸ் **Dionysian** என்றால் ஜெர்மன் **Apollonian**. ஆனால் ஒரு விஷயம் எனக்கு ஆச்சரியமாகவும் விளங்காத புதிராகவும் உள்ளது. ஹெகல், கீர்க்கேகார்ட், கார்ல் மார்க்ஸ், நீட்ஷே, ஹேடெக்கர் என்று பலப்பல தத்துவவாதிகள் இந்த இறுகிய தேசத்திலிருந்து எப்படி உருவானார்கள்? ஒரு நூற்றாண்டுக்கு இரண்டு மூன்று தத்துவ மேதைகள் இந்தப் பூமியிலிருந்து எங்ஙனம் சாத்தியம்? தத்துவம் மட்டுமல்ல. இசைத்துறையிலும் **Handel**, செபாஸ்டியன் பாக்ஹ், **Hayden**, மொஸார்ட், பீத்தோவன், வாக்னர், ஷோபனேர் என்று வரிசையாக இசை மேதைகளை இந்த தேசம் எப்படி உருவாக்கியது?

இந்தியாவுக்கு வருவோம். இந்திய சாஸ்திரீய சங்கீதம் மெய்யை மறக்கச் செய்கிறது. ஆப்ரிக்க இசையும், நம்முடைய பறையும் மெய்யைக் கொண்டாடுகிறது. சங்கீதம் மட்டுமல்லாமல், இந்தியச் சமூகமே மெய்யை மறுக்கிறது. ஒதுக்குகிறது. கண்காணிக்கிறது. **(rejecting, controlling and policing)** பூண்டு, வெங்காயம் என்று ஆரம்பித்து எத்தனையோ நூற்றுக்கணக்கான உணவுப் பொருட்களை கூடாது என்று சொல்லி ஒதுக்கி வைத்துள்ளது இந்தியச் சமூகம். இப்படிப்பட்ட சமூகத்தில் கால்பந்தாட்டம் எப்படி சாத்தியம்? இன்னும் இருநூறு ஆண்டுகளானாலும் முடியாது.

அடியேனின் மற்றொரு கண்டுபிடிப்பு பாலியல் பற்றியது.

Male Sexuality - Apollonian;

Femal Sexuality - Dionysian

யோசித்துப் பாருங்கள்-ஆணின் பாலியல் - ஆரம்பம், உச்சம், முடிவு என்ற தன்மை கொண்டது. கூம்பு வடிவம் என்று சொல்லலாம்.



எனவே ஒற்றைத் தன்மையானது. ஆனால், பெண்ணின் பாலியல் பன்முகத்தன்மை வாய்ந்தது. ஆணின் பாலியலுக்கு ஒரு மையம் உண்டு. **Phallocentric**. பெண்ணின் உடல் முழுதுமே பாலியல் வெளிதான். உள்ளங்காலிலிருந்து உச்சந்தலைவரை படர்ந்து படர்ந்து செல்லும் வெளி அது. ஆரம்பம், முடிவு என்ற புள்ளிகள் இல்லாதது. மையம் இல்லாதது. **Spiral** தன்மை கொண்டது.



புதிரானது, மர்மமானது, அதிர்வுகளை ஏற்படுத்தக் கூடியது. எனவே பெண்ணின் பாலியல் **Dionysian.**

பெயர் சொல்ல விரும்பாத அந்த தொலைதூரத்து வாசகர் அனுப்பிய இ.ஈ. யைக் கேட்டுக் கொண்டிருந்தபோது இவ்வளவும் தோன்றியது. அந்த வாசகருக்கு நன்றி! மேலும் ஒன்று-ஆழ்வார் பாசுரங்களைப் பாடுகிறவர் இந்திய இசையோடு நிறுத்தி விடுவார் என்று நினைத்துவிட்டேன். அதுவும் தவறாகி விட்டது. அந்த இ.ஈ.யில் அவர் குறிப்பிட்டுக் கேட்கச் சொன்னது மொராக்கோ இசையை! அவர் ஒரு உண்மையான இசை ரசிகர் என்பதைப் புரிந்து கொண்டேன். அராபிய இசைபற்றித் தனியாகவே எழுத வேண்டும்

ஜப்பான் டிக்கட்?

ஜப்பானிலிருந்து எஸ்.முத்தையா எழுதியிருக்கிறார்.. ''நீங்கள் ஏன் ஜப்பான் பக்கம் வரக்கூடாது? வந்தால் உங்களுக்கு ஸாகேவையும் (அரிசியிலிருந்து தயாரிக்கபடும் தேவ பானம்) ஷுஷியையும் ஸஸீமேவையும் அறிமுகப்படுத்தி வைக்கிறேன். ஸஸீமே என்பது சமைக்கப்படாத பச்சை மீன். என்னைப் பொறுத்தவரை உலகத்திலேயே சிறந்த உணவு அதுதான்''

முத்தையா சொல்வது மிகவும் சரி. உலகத்திலேயே சிறந்த உணவு சமைக்கப்படாத ஜப்பானிய மீன்தான். இதைத் தயக்கமின்றி சொல்லுவேன். (பாரிஸில் ஒரு ஜப்பானிய விடுதியில் சாப்பிட்டிருக்கிறேன்) கடிதத்தின் இறுதியில் முத்தையா குறிப்பிடுகிறார்.''உங்கள்

செலவில் டிக்கட்டை வாங்கிக் கொண்டு வந்து சேருங்கள். இங்கே ஊர் சுற்றிக்காட்டும் பொறுப்பையும் செலவையும் நான் ஏற்றுக்கொள்கிறேன்''

பச்சையான, சமைக்கப்படாத மீனை சாப்பிடுவதற்காகவாவது ஜப்பான் செல்ல வேண்டாமா என ஆர்வம் எழ, ப்ரௌசிங் சென்டரை விட்டு உற்சாகத்துடனும் சற்று குழப்பத்துடனும் வெளியே வந்தேன்.

குழப்பத்திற்கு காரணம்-டிக்கட். காலம்தான் எத்தனை மாறிவிட்டது? சீனாவிலிருந்து யுவான் சுவாங் டிக்கட் வாங்கிக்கொண்டா இந்தியா வந்தார்?

மணியிடம் கேட்கலாமா? வேண்டாம். எல்லாவற்றுக்கும் ஒரு மனிதரையே படுத்தியெடுத்தால் அவருக்கும் சலிப்பாக இருக்காதா?

யோசனை இந்த ரீதியில் சென்று கொண்டிருந்தபோது அந்த மனிதர் என் எதிரே தோன்றினார். யெஸ்.தோன்றினார் என்றுதான் சொல்ல வேண்டும். குறுக்குச் சந்திலிருந்து திடீரென்று திரும்பி என் பக்கம் வந்தார் அவர்.

மேலே சட்டை இல்லை. மார்பில் ஏகப்பட்ட மணிகள். தலையில் முண்டாசு. ஜமுக்காளத்தையே முண்டாசாகக் கட்டியிருந்தார். பார்த்ததுமே தெரிந்து விட்டது-தெலுங்கு ஜோசியர்.

சரி, ஜப்பானியப் பயணம் பற்றிக் கேட்டு விடலாம் என்று பக்கத்திலிருந்த மரத்தடியில் அவருடன் அமர்ந்தேன். ''ஒரு பூவை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்றார். நான் என்ன நினைக்கிறேன் என்பதை அவர் சொல்லி விடுவாராம்.

அப்படியானால் யாருமே நினைக்க முடியாத பூவைத்தான் நினைத்துக் கொள்ள வேண்டும்.

நிச்சயமாக மல்லிகைப் பூ வேண்டாம். வட இந்தியாவில் அந்தப் பழக்கம் கிடையாது. இங்கே தென்னிந்தியாவில் மட்டும்தான். ஒரு கூடை மல்லிகைப் பூவை தலையில் வைத்துக்கொண்டு வெளியே கிளம்புகிறார்கள் பெண்கள்! அது கூடப் பரவாயில்லை. அலுவலகங்களில், குளிரூட்டப்பட்ட அறைகளில், கம்ப்யூட்டர் எதிரே அருகருகே அமரும்போது பாவையின் தலையிலுள்ள பூவுக்கும் நமது நாசிக்கும் இரண்டு இஞ்ச் இடைவெளி கூட இருக்காது போலிருக்கிறது. படு சிரமத்துடன் புலனடக்கப் பயிற்சியில் ஈடுபட வேண்டியுள்ளது. வட இந்தியாவில் மல்லிகை **erotic** தன்மை கொண்டதாக மட்டுமே கருதப்படுகிறது.

தாழம்பூவை நினைக்கலாம். சிறுவயதில் ஊரில் பார்த்திருக்கிறேன். பெண்கள் நீண்ட ஜடையில் தாழம்பூ வைத்துப் பின்னிக் கொள்வார்கள். வாசனை ஊரைத் தூக்கும் என்று சொல்வார்கள். எனக்குத் தெரியாது. வீட்டுக்குப் பக்கத்திலேயே சுடுகாடு இருந்ததால் பிண நாற்றத்தை முகர்ந்து முகர்ந்து நாசி தனது நுகரும் தன்மையை இழந்து சுவாசத்துக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது. பிறகு ஊரை விட்டு வெளியேறிய பின், தாழம்பூவுக்கும் எனக்கும் விட்டுப் போயிருந்த தொடர்பு இப்போது தான் மீண்டும் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

காரணம்-நல்ல பாம்பு. இங்கே நான் வசிக்கும் சின்மயா நகரில் நல்ல பாம்புகள் அதிகம். நல்ல பாம்புக்கு தாழம்பூ வாசனை உண்டாம். அவந்திகாவுக்கு கூர்மையான முகரும் திறனுண்டு. ''தாழம்பூ வாசனை அடிக்கிறது. இங்கே பக்கத்தில்தான் எங்கோ நாகம் வந்திருக்கிறது'' என்பாள். விரைவிலேயே அந்த நாகம் எங்களுக்குத் தென்படும்.

நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. அந்த சோதிடர் ''தாழம்பூ'' என்று மிகச் சரியாகச் சொல்லி என்னை அசத்தினார். இதேபோல் ஏழெட்டு விஷயங்களைச் சொன்னார்.

''சரி, ஜப்பான் டிக்கட்?''

''உங்கள் பாக்கெட்டில் ஐநூறு ரூபாய் இருக்கிறது. அதை என்னுடைய பூஜைக்காகத் தந்து விடுங்கள். உங்களுக்கு டிக்கட் கிடைக்கச் செய்கிறேன்''

'அடப்பாவி, சரியான ஜேப்படியாக அல்லவா இருக்கிறது? பாக்கெட்டில் ஐநூறு இருப்பது உண்மை. ஆனால் அது மளிகைக் கடைக்குக் கொடுக்க வேண்டியதாயிற்றே?'

''டிக்கட்டும் வேண்டாம். ஒண்ணும் வேண்டாம். போய்யா'' என்று சொல்லி ஐம்பது ரூபாயைக் கொடுத்து அனுப்பி விட்டேன்.

ஐம்பது அதிகம்தான்.

ஆனால், என்ன இருந்தாலும் அவன் ஒரு ஒரு கலைஞன். கலைஞனை கலைஞனே மதிக்காவிட்டால் எப்படி?

அழகான ஒரு கடிதத்தை எழுதியிருக்கிற செந்தில்நாதன் (**Florida**) கடைசியில் நச்சென்று ஒரு குட்டு வைத்திருக்கிறார்... 'நீங்கள் உங்களுடைய ஏழ்மையைப் பற்றிக் குறிப்பிடும்போது அதில் தந்திரம் தெரிகிறது...'

மந்திரத்தால் மாங்காய் வரவழைக்க முடியாது என்பார்கள். வரவழைக்கத் தெரிந்தால் இதுபோன்ற அசூயையான மேட்டர்களை எழுதாமல் தவிர்க்கலாம். என்ன செய்ய, பாரதிக்கே அந்த மந்திரம் தெரியவில்லையே?

நான் கூறுவது யாவும் தனிநபர் பிரச்னை அல்ல. சல்மான் ருஷ்டி என்ற எழுத்தாளன் தன் தேவைக்காக பிச்சையெடுத்துக் கொண்டிருக்கவில்லை. கேரளத்தில் நான் சந்தித்த எழுத்தாளர்கள் எவரும் தங்கள் ஜீவனோபாயத்திற்காக யாரிடமும் கையேந்தி வாழவில்லை. தமிழ்நாட்டில் மட்டுமே இது காலங்காலமாகத் தொடர்ந்து வருவதாகத் தெரிகிறது.

பாரதியின் வாழ்விலிருந்து ஒரு சம்பவம்:

''ஒரு சமயம் பணத்துக்கு ரொம்ப முடை. வீட்டில் உணவுச் சாமான்கள் இல்லை. ஐந்து ரூபாய் வேண்டுமென்று ஒரு நண்பருக்குக் கடிதம் எழுதி அனுப்பினார் பாரதியார். கடிதத்துக்குப் பதில் இல்லை. சாயங்காலம் அந்த நண்பரைச் சந்திக்க நேர்ந்தது. 'பாரதி! உங்களுக்கு நான் அனுப்பியிருப்பேன். இந்த ஒத்தாசை நான் செய்திருந்தால், உங்களுக்கு மனச்சமாதானம் ஏற்பட்டு, உங்களுடைய மேதையின் கூர்மை மழுங்கிப் போயிருக்கும். உங்கள் மேதையை அழித்துவிட எனக்குச் சம்மதமில்லை' என்று முந்திக்கொண்டு நண்பர் சொன்னார்.

பாரதியாருக்குத் தாங்க முடியாத ஆத்திரம். 'ஓய்! அளப்பை நிறுத்தும். மேதைக்குத் தரித்திரம் மட்டும் போதாதா? அதோடு, நீர் ஏளனம் வேறு செய்ய வேண்டுமா? உம்முடைய மனப்பான்மையைச் சீர்திருத்தம் செய்ய முடியாது. அதை அடியோடு தலைகுப்புற அடிக்கும் புரட்சித் தத்துவம் இந்த நாட்டுக்குத் தேவை' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

(வ.ராவின் மகாகவி பாரதியார் நூலிலிருந்து)

வறுமை கொடிது. அதை ஏளனம் செய்வது அதனினும் கொடிது.

சுய இரக்கம் எனக்குப் பிடிக்காத ஒன்று. அது என் எழுத்தில் லவலேசமும் இல்லாதபடி கவனமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். ஆனால் சுய எள்ளலும் சுய நையாண்டியும் (**self pardoy**) தேவையான ஒன்றல்லவா?

சரி, இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து விடுவோம். ஔவையார் கூட ஆத்திச் சூடியில் ''தோழனோடு ஏழைமை பேசேல்'' என்று பாடியிருக்கிறாராம். நண்பர் ரமேஷ் வைத்யா சொன்னார். எனவே, இனிமேல் சுய இரக்கமோ சுய எள்ளலோ எப்படியோ போகட்டும், அது இந்தப் பக்கங்களில் தலை காட்டாது. சர்வம் ஸந்தோஷ மயம் ஜகத்!

கம்பனுக்கு சடையப்ப வள்ளலைப் போல் எனக்கு வெங்கடேஷ், அப்படிப்பட்டவருக்கு திடீரென்று என் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. இரண்டு மாதத்து முரசொலி இதழ்களை அனுப்பி படித்துப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்.

பெயர் கேள்விப் பட்டிருக்கிறேனே தவிர இதுவரை அவ்விதழை நான் காண நேர்ந்ததில்லை. இப்போதுதான் முதல் முதலாகப் பார்க்கிறேன்.

கடவுளே, நான் செய்த தவறு இன்னதென்று சொல்லாமல் இப்படி ஒரு தண்டனையா? வேறென்ன சொல்வதென்று புரியவில்லை. **Philistine** என்ற வார்த்தை ஞாபகம் வருகிறது. ஆனால் சொல்லத்தான் பயமாக இருக்கிறது.

க்யூபாவிலிருந்து ஒரு கட்சிப் பத்திரிகை வெளி வந்து கொண்டிருந்தது. இப்போதும் வருகிறதா எனத் தெரியவில்லை. ஏழெட்டு ஆண்டுகள் அதன் தீவிர வாசகனாக இருந்தேன். **Alejo Carpentier** இலிருந்து **Julio Cortazar** வரை தென்னமெரிக்க இலக்கிய மேதைகள் அத்தனை பேரும் எனக்குப் பரிச்சயமானது அந்தக் கட்சிப் பத்திரிகையின் வாயிலாகத்தான். அதன் பெயர் **Granma.**

சில பிரார்த்தனைகள் பலித்தன. சில பலிக்கவில்லை. 7 ஆம் தேதி நடந்த அர்ஜென்டினா-இங்கிலாந்து போட்டியில் அர்ஜென்டினா வென்று விடும் என்று எதிர்பார்த்த கோடிக்கணக்கான பேரில் நானும் ஒருவன். கிட்டத்தட்ட இரண்டு சூறைப் புயல்கள் (**tornadoes**) மோதிக்கொண்டது போல இருந்தது. இருந்தாலும் அர்ஜென்டினா தோற்றுவிட்டது. அடுத்த நம்பிக்கை ப்ரஸீல்-வீண் போகவில்லை. முன்னணியிலேயே இருக்கிறது. உலகக் கோப்பையைக் கைப்பற்றிவிடும் என நம்புகிறேன்.

Bill Shankly என்ற பி.பி.சி. வர்ணனையாளர் 1981 ஆம் ஆண்டு சொன்னது இது:

''Some people think football is a matter of life and death. I don't like that attitude. I can assure them it is much more than that''

என் கண்டுபிடிப்புகள்.

அவ்வப்போது எனக்கு ஆபாச வசைக் கடிதங்களும் மிரட்டல் போன்களும் வருவதுண்டு. அநேகமாக அக்கடிதங்களை எழுதுபவர்கள் பத்தாங்கிளாசைத் தாண்டாதவர்கள் என்பது கடிதத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே தெரிந்துபோகும்.

இப்போது விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக மின்னஞ்சலிலும் அத்தகைய கடிதங்கள் வரத்துவங்கிவிட்டன. ஒரு முக்கியமான வித்தியாசம்-இக்கடிதங்களை எழுதுபவர்கள் நன்கு படித்தவர்கள்; ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவர்கள்; உயர்ந்த உத்தியோகத்தில் இருப்பவர்கள்.

மற்ற வாசகர்கள் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நூறு அஞ்சல் வந்தால் அதில் ஒன்று ஆபாச அஞ்சலாக உள்ளது. அவ்வளவுதான்.

மற்றொரு வித்தியாசம்-இவை மொட்டைக் கடுதாசிகள் அல்ல. முழு விலாசத்துடன் மின்னஞ்சல் முகவரியுடனே அனுப்பப்படுபவை. (என்ன ஒரு எதிர்பார்ப்பு! வசைகளுக்கெல்லாம் பதில் எழுதுவதா ஒரு எழுத்தாளனின் வேலை?)

இந்த வல்கர் கடிதங்களைப் பற்றி அனுதாபத்துடன் யோசித்தேன். ப்ரஸீல் நாட்டு நாடக இயக்குனர் **Augusto Boal**-இன் ஞாபகம் வந்தது. '**Cop in the head**' என்று சொல்லுவார் அவர். நம்முடைய மண்டைக்குள்ளேயே உட்கார்ந்திருக்கிறார் போலீஸ்காரர்-கையில் தடியுடன். உங்களுக்கு ஒவ்வாத கருத்தை யாரேனும் சொல்கிறார்களா-போடு அவர்கள் மண்டையில். இப்படித்தான் போலீஸ், ராணுவம் எல்லாம் நம் மண்டையில் உட்கார்ந்து கொண்டு தடியடிப் பிரயோகம் செய்து கொண்டிருக்கிறது. காரணம் சகிப்புத்தன்மை யின்மை.

ஆனால், எனக்கு வரும் மின்னஞ்சல்களில் நூற்றுக்குத் தொண்ணூறு மிகவும் ரசமானவை. சில கடிதங்கள் சிறுகதை போலவே உள்ளன. அதிலும் குறிப்பாக தியாகராஜனின் (அமெரிக்கா) நீண்ட கடிதங்கள்.

3000 கி.மீ. தூரத்திலிருந்து என்னை அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் பெயர் சொல்ல விரும்பாத வாசகருக்கு நானே ஒரு புனைபெயரை வைத்துவிட்டேன்-ரவீந்திரன். அவர் என்னை அழைத்து 'உங்கள் மின்னஞ்சல் பெட்டி நிரம்பி வழிகிறது.

நான் அனுப்பிய மின்னஞ்சல் திரும்பி வந்துவிட்டது. கவனியுங்கள்‘ என்றார். உடனே ப்ரௌசிங் சென்டருக்குப் பறந்தேன். பல கடிதங்களை மனசே இல்லாமல் அழித்தேன்.

ரவீந்திரன் சொன்னார்-‘இத்தனை கடிதங்கள் வருகிறது என்றால்-ஒன்று, நீங்கள் அந்த அளவு பிரசித்தி பெற்று விட்டீர்கள், அல்லது, மெயில் படிப்பதே இல்லை.‘

இரண்டுமே இல்லை. கடிதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் சுவாரசியமாக இருந்தபடியால் நான் அழிக்காமல் விட்டு வைத்திருந்தேன் என்பதுதான் உண்மை.

இப்போது மேலும் இரண்டு பெட்டிகளைத் திறந்துள்ளேன். அந்த முகவரிகளுக்கும் நீங்கள் அஞ்சல்களை அனுப்பி வைக்கலாம்.

writercharunivedita@hotmail.com

writercharunivedita@yahoo.comசிங்கப்பூரில் சேவியர் என்று ஒரு வாசகர் இருக்கிறார். ‘வால் பையன்‘ என்பது அவருக்கு நான் வைத்திருக்கும் பட்டப் பெயர். அந்தப் பெயருக்குத் தகுந்தாற் போல் சமீபத்தில் ஒரு மெயில் அனுப்பியுள்ளார். சந்திரபாபு நாயுடு தகவல் தொடர்புத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளதால்தான் அவர் செல்வாக்கு அமெரிக்கா வரை பரவியிருக்கிறது என்பதால் மற்ற கட்சிகளும் அவரைப் பின்பற்றி தங்கள் பெயரை மாற்றிக் கொண்டால் எப்படியிருக்கும் என்று ஒரு கற்பனை.

DMK - Digital Munnetra Kazhagam

ADMK - Advanced Digital Munnetra Kazhagam

MDMK - Microsoft Developers Munnetra Kazhagam

TDP - Technology Development Party

BJP - Basic & Java Programmers

Congress (I) - Congress (Infotech)

CPI - Computer Party of India

CPI (M) - Computer Party of India (Mac)

CPI (MC) - Computer Party of India (Mac & Linux)

PMK - Programming Maintenance Katchi

PT - Puthia Technologists

SFI - Software Federation of India

ABVP - Advanced Bharatiya Visual Basic Programming

மண்டைக்குள் அமர்ந்திருக்கும் போலீஸ் பற்றிக் குறிப்பிட்டேன். இது பற்றிய மிஷேல் ஃபூக்கோவின் (**Michael Foucault**) மிக முக்கியமான கட்டுரை ஒன்று உள்ளது.

ஃபூக்கோ இருபதாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த சிந்தனையாளர்களுள் ஒருவர். இவர் தெல்யூஸ்-க்வத்தாரி (**Deleuz - Guattari**) என்ற இரட்டையர் எழுதிய **Anti-Oedipus** நூலுக்கு எழுதிய முன்னுரைதான் அது. (ஃபூக்கோவுக்குப் பிறகு உலக அளவில் பேசப்பட்ட சிந்தனையாளர்கள் தெல்யூஸ்-க்வத்தாரி). அதில் ஃபூக்கோ கூறுகிறார்: ''ஃபாசிசம் என்பது, மக்களின் வேட்கையை மிகவும் வன்மையாகத் திரட்டி ஒருங்கிணைத்த ஹிட்லர்-முசோலினியின் வரலாற்று ரீதியான ஃபாசிசம் மட்டுமல்ல; அது நம் எல்லோரிடமும் கூட குடி கொண்டுள்ளது. நமது அன்றாட நடவடிக்கைகளிலும் குடிகொண்டு அதிகாரத்தின் (**Power**) மீது நம்மை நாட்டம் கொள்ளச் செய்கிறது. நம் மீது ஆதிக்கம் செலுத்தி நம்மைச் சுரண்டுகிற ஒன்றின் மீதே நம்மை வேட்கை கொள்ள வைக்கிறது

நானும் மணியும் மற்ற சில நண்பர்களும் கூடும் பீச் மீட்டிங்குக்கு சில சமயம் சில திடீர் விருந்தாளிகள் வருவதுண்டு. அப்படி ஓரிரு முறை வந்தவர்தான் அந்தப் பெண்மணி. அரசாங்கத்தின் மிக உயர்ந்த பதவியில் இருப்பதால் பெயர் சொல்லக் கூடாது. அவந்திகாவின் உடன் பிறவா சகோதரி என்பதால் நானும் அவரை அக்கா என்றே அழைப்பது வழக்கம்.

அவர் ஒருமுறை சொன்னார்-''பீச் வேண்டாம். சந்திப்பதற்கு ஏற்ற இடமாக அது தெரியவில்லை''.

அதற்கு இரண்டு காரணங்களை அவர் சொன்னார்.

1. நீங்களெல்லாம் குடித்திருப்பதால் சீரியஸாகப் பேசுகிறீர்களா அல்லது உளறுகிறீர்களா என்பதை அனுமானிக்க முடியவில்லை.

2. இருட்டாக இருப்பதால் உங்களின் முகம் தெரிவதில்லை. முகத்தைக் கூட பார்க்க முடியாமல், அப்படி என்ன சந்திப்பு?

முதல் காரணத்தை எங்களால் ஏற்க முடியவில்லை. இந்தியப் பெண்கள் பெரும்பாலும் **teetotallers** என்பதால் (விதிவிலக்கு: பஞ்சாப்) அவர்களுக்கு அப்படித்தான் தோன்றும். ஆனால் இரண்டாம் காரணம் சரியாக இருந்தது. ஏனென்றால், எங்களுக்கே அது ஒரு பிரச்னையாகத்தான் இருந்தது. முக்கியமாக, சகோதரிக்கு செக்கோஸ்லோவாகியப் பெண்களைப் போல் பச்சை நிறக் கண்கள். அப்படிப்பட்ட அபூர்வமான கண்களைப் பார்த்துப் பேச முடியாமல் இது என்ன சந்திப்பு?

அடுத்த முறை வேறு இடத்தில் சந்திக்கலாம் என்று முடிவாயிற்று. கதீட்ரல் சாலையிலுள்ள ஐந்து நட்சத்திர ஓட்டலில் இரவு எட்டு மணிக்கு சந்திப்பு.

ஆனால் அன்றைய தினம்தான் ரவீந்திரன் அனுப்பியிருந்த **C.D.** வந்திருந்தது. அதைக் கேட்டு இன்புறுவதற்காக ரஞ்சனும் வந்திருந்தார். கேட்டுக் கொண்டிருக்கும்போதே ரஞ்சன் சொன்னார்.. 'ஒரு பியர்கூட அருந்தாமல் இந்த அற்புத இசையைக் கேட்பது சரியல்லவே?'

மாலையிலுள்ள சந்திப்பு பற்றிச் சொன்னேன். பொதுவாக என் விஷயங்களில் தலையிடாத அவந்திகாவும் உறுதியாகச் சொன்னாள்.. ''இன்று அக்கா உங்களை வெளியிடத்தில் பார்ப்பதே நன்றாகப் பேசிக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காகத்தான். எனவே பியர் வேண்டாம்.''

'பியர்தானே, என்ன ஆகிவிடப் போகிறது' என்று கிளம்பினால் அன்றைய தினம் **dry day**. அதுமட்டுமல்ல. ஒரு வாரமாக **dry day** தான். காரணம்-சைதாப்பேட்டை தேர்தல். ஒரு வாரமாகவா தேர்தல் நடக்கும்? நம் நாட்டில் நடக்கும்.அடிதடி, ரகளை, வன்முறை, மறுவாக்குப்பதிவு. ஒரு வாரம் என்ன? ஒரு மாத காலத்துக்குக் கூட தேர்தலை நடத்திக் கொண்டு போகலாம்! ஆனால் தான் போடும் சட்டத்தை தானே கேலிக் கூத்து ஆக்குவதில் நமது அரசு நிர்வாகத்தை மிஞ்ச யாரால் முடியும்? கடைகளில் பக்கவாட்டுக் கதவுகளின் வழியே வியாபாரம் கனஜோராக நடந்து கொண்டிருந்தது. ஆனால் விலைதான் அதிகம்.

மதியம் உட்கொண்ட பானத்தைப் பற்றிய எந்தச் சுவடும் மாலையில் தெரியவில்லை. இருந்தாலும் எதற்கும் இருக்கட்டுமென்று மூலிகைப் பற்பொடி போட்டு பல் துலக்கி விட்டே கிளம்பினேன். ஆனால், பாம்பின் கால் பாம்பு அறியாதா? பார்த்ததுமே கேட்டு விட்டார் மணி. விஷயத்தைச் சொன்னேன். 'தனக்கும் அன்றைய மதியம் அப்படித்தான் சந்தர்ப்பம் அமைந்துவிட்டது' என்றார். சொல்லிவிட்டு **Sonata**வில் ஏறி அமர்ந்ததும் உடனடியாக தம்ளர்களை எடுத்தார்.

ஏழு மணிக்கு மேல் நாங்கள் சந்தித்தால் தவறாமல் தாக சாந்தி நடக்கும் என்றாலும் 'இப்படி காருக்குள் அமர்ந்தா?' என ஆச்சரியப்பட்டேன்.

'அந்த நட்சத்திர ஓட்டலிலும் **dry day** தான்' என்றார் மணி.

என்னால் நம்ப முடியவில்லை. ஆனால், இந்தியாவில் என்னமும் நடக்கும்.

அப்போது மணி 7.50 பத்து நிமிடத்தில் ஓட்டலில் இருக்க வேண்டும்.எதற்கும் இருக்கட்டுமென்று மடக் மடக்கென்று ஒரே கல்ப்பில் இரண்டு லார்ஜ் ஸ்காட்சை ஏற்றிக் கொண்டு சரியாக எட்டு மணிக்கு ஓட்டலுக்கு வந்து சேர்ந்தோம்.

அவந்திகாவும் சகோதரியும் வந்தனர். மேலே டைனிங் ஹால் சென்றோம். சிறிது நேரம் அளவளாவிக் கொண்டிருந்தோம். பிறகு சகோதரி இறைச்சி சொல்ல, அவந்திகா தயிர் சாதம் என்றாள். ஜீவகாருண்யம் காரணமாக அவள் சைவம். நானும் மணியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். இருப்புக் கொள்ளவில்லை.

'கீழே போய் டக்கென்று ஒரு ரவுண்ட் போட்டுக் கொண்டு வந்து விடலாமா?' என்று காதைக் கடித்தார் மணி.

'இதோ நொடியில் வந்து விடுகிறோம்' என்று சொல்லி விட்டு கீழே காருக்கு வந்தோம்.

ஒன்றா, இரண்டா, மூன்றா-எத்தனை ரவுண்டு என ஞாபகமில்லை. ஆனால் அவசர அவசரமாக திருடர்களைப் போல் 'முழுங்க' வேண்டியிருந்தது. நட்சத்திர ஓட்டலுக்கு வந்தும் இந்த நிலைமையா என்று நொந்து கொண்டே மேலே வந்தோம்.

இவ்வளவு அவசரம் எனக்குப் பழக்கமில்லாதது. அதனால்தான் மறுநாள் காலையில் அவந்திகாவிடம் கேட்டேன்-யார் நம்மை வீட்டில் கொண்டு வந்துவிட்டது?

''கடைசியில் இப்படியா ஆக வேண்டும்? இதற்கு பீச்சே பரவாயில்லை'' என்றாள் அவந்திகா.

''என்னம்மா செய்வது? நாம் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று நினைக்கிறது'' என்றேன்.

அவந்திகா மேலும் ஒரு தகவல் சொன்னாள்- தயிர்சாதம் மகா புளிப்பாம்!

தமிழால்தானே?

ஹாய் சாரு,

ஆரம்பத்திலேயே சொல்லி விடுகிறேன்.. என் கடிதத்தில் ஏதேனும் தவறுகள் இருந்தால் பொறுத்துக் கொள்ளவும். முதல் முறையாக ஒரு எழுத்தாளருக்கு எழுதுகிறேன் என்பதால் சற்று 'நெர்வஸாக' உணர்கிறேன்.

உங்களுடைய கட்டுரைகளை மிக விருப்பத்துடன் படித்து வருகிறேன். தினந்தோறும் விகடன் இணைய தளத்தை திறந்து முதல்முதலாக நான் தேடுவது கோணல் பக்கங்களைத் தான்.

ஹவாய் வெகு அழகு. இங்கே நான் **Oahu** என்ற தீவில் வசிக்கிறேன். இது மிக மிக அழகான ஒரு தீவு. இங்குள்ள மக்கள் சிநேகமுடன் பழகுபவர்கள். தென் கிழக்கு ஆசியர்கள் இங்கே நிறைய உண்டு. சீனர்கள், ஜப்பானியர்கள், ஃபிலிப்பைன்காரர்கள், கொரியர், வியட்நாமியர். இந்தத் தீவுகள் அமெரிக்க ஆட்சியின் கீழ் வந்தாலும் இங்குள்ள பூர்வீக மக்கள் வெள்ளையரை **Haole** என்று தான் அழைக்கின்றனர். **Haole** என்றால் அந்நியர் என்று பொருள்.

ஆனால் 1999 ஆம் ஆண்டு இங்கே வந்ததுமுதல் ஒரு விஷயத்தை நான் 'மிஸ்' பண்ணுகிறேன். அது- தமிழ். அதிர்ஷ்டவசமாக இங்கே வந்தபோது சில தமிழ்ப் புத்தகங்களையும் (கவிதைகள் உட்பட), சில கர்நாடக இசை கேசட்டுகளையும் எடுத்து வந்தேன். தினமும் தமிழில் ஏதேனும் படித்தே ஆகவேண்டும் எனக்கு. அப்படிப் பழகி விட்டேன். எதுவுமே கிடைக்காவிட்டால் குறைந்தபட்சம் தினமணி. இல்லாவிட்டால் கஷ்டமாகி விடுகிறது. நான் இங்கே ஒரு மாணவியாக வந்திருக்கிறேன். வந்தபின் சில மாதங்களில் ஒரு கம்ப்யூட்டரை வாங்கி அதில் எல்லா தமிழ் தினசரிகளையும் படிக்கிறேன். அதற்குப் பிறகுதான் வாழ்க்கை ஒரு வழிக்கு வந்தது. தமிழில் படிக்காவிட்டால் பைத்தியம் பிடித்ததுபோல் ஆகிவிடுகிறது என்று சென்னையிலும் அமெரிக்காவிலும் உள்ள என் நண்பர்களிடம் சொல்லும்போது அவர்களால் அதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. சிலர் என்னை 'தெய்வமே!' என்று பரிகசித்தார்கள். சென்ற வருடம் நான் சென்னை வந்தபோது என் சூட்கேஸ் நிறைய தமிழ்ப் புத்தகங்களையும் கம்பராமாயணத்தையும்தான் நிரப்பிக் கொண்டு திரும்பினேன். இப்போது நிலைமை பரவாயில்லை. புத்தகங்கள் இருப்பதால் மட்டும் அல்ல; நிறைய தமிழ் இணைய தளங்களும் கிடைத்துள்ளன.

தமிழ் பற்றிய என்னுடைய இந்த நீண்ட புராணத்தையும் என் நிலைமையையும் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படலாம். ஆனால் ஒரு முக்கியமான விஷயம்-நான் சமீபத்தில் மான்ட்ரியலுக்குப் (கனடா) போயிருந்தேன். அங்கே பல இலங்கை தமிழர்களைச் சந்தித்தேன். நானும் இலங்கைத் தமிழ்தான் என்றாலும் இலங்கையில் இருந்ததை விட சென்னையில் இருந்ததுதான் அதிகம். எனவே கிட்டத்தட்ட என்னை இலங்கை-இந்தியர்

என்று சொல்லலாம். மான்ட்ரியலில் (அதே போல் உலகின் மற்ற இடங்களிலும்) குழந்தைகள் தங்களை தமிழர் என்று சொல்லிக் கொள்ளவே கூச்சப்படுகின்றன. எனது ஒன்றுவிட்ட சகோதர சகோதரிகள் ஆங்கிலத்தில்தான் பேசிக்கொள்கின்றனர். தங்கள் பெற்றோருடன் பேசும்போது மட்டும்தான் அவர்கள் தமிழில் பேசுகின்றனர். அவர்களுக்குத் தமிழ் எழுதவும் தெரியாது. ஒரு இந்து கோவிலில் நடத்தப்படும் தமிழ் வகுப்புகளுக்குப் போகிறாள் என் கஸின். பையன்கள் போகமாட்டேன் என்று மறுத்துவிட்டார்கள். பெண்கள் மட்டுமே போகிறார்கள். அவர்களுக்கும்கூட அதில் இஷ்டமில்லை. பெற்றோரின் பேச்சை தட்ட முடியாமல்தான் சென்று கொண்டிருக்கிறார்கள். நான் பல குழந்தைகளிடம் பேசிப் பார்த்தேன். அவர்கள் எல்லோரும் ஒரே விஷயத்தைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். நாங்கள் தமிழ் படிப்பதால் என்ன பயன்? தமிழை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது? நான் ஒரு கனடியன்-தமிழ் எனக்கு எதற்குத் தேவை?

நான் அவர்களிடம் நமது கலாச்சாரம் பற்றியும் தமிழின் சிறப்பு பற்றியும் சொன்னேன். ஆனால் பயனில்லை. என் ஒன்றுவிட்ட சகோதரி ஒருத்தி இங்கிலாந்தில் இருக்கிறாள். இப்போது அவள் தமிழ் கற்றுக்கொள்ளாமல் போய்விட்டோமே என்று வருத்தப்படுகிறாள். தன் பெற்றோர்கூட தமிழ் கற்றுக் கொடுக்காமல் விட்டு விட்டார்களே என்கிறாள். அதே சமயம் ஜெர்மனியில் இருக்கும் என் உறவினர்கள் என்னைப் போலவே தமிழின் மீது மிகுந்த பற்றுடையவர்களாக இருக்கின்றனர். அவர்களில் ஒருவன் ஒரு தமிழ் நிகழ்ச்சியைக் கூட விடாமல் போய்க் கொண்டிருக்கிறான். பாரிஸில் நடந்த இலக்கிய விழாவுக்குக்கூட சென்றான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மற்றொருவன் ஜெர்மனியிலிருந்து வரும் தமிழ்ப் பத்திரிகையில் எழுதுகிறான்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் சாரு? நாம் என்ன செய்ய முடியும்? இது பற்றி வாசகர்களுடன் நாம் விவாதிக்க வேண்டும்.

உங்களுடைய நேரத்தையும் மெயில் பெட்டியின் இடத்தையும் அதிகம் எடுத்துக்கொள்ள விரும்பாததால் இத்துடன் முடிக்கிறேன்.

அன்புடன்
சந்திரமதி

எனக்கு வரும் கடிதங்களுக்கு இது ஒரு சான்று. மற்ற கடிதங்கள் இதைவிடவும் பெரிது என்றுதான் சொல்ல வேண்டும்.

Gloomy Sunday பாடல் வரிகளை சந்திரமதி-என்ன ஒரு அழகான பெயர் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை-எனக்கு அனுப்பி வைத்த போது என் அட்லஸை எடுத்து ஹவாய் தீவுகளைத் தேடினேன். எவ்வளவு தேடியும் கிடைக்கவில்லை என்றதும் 'அட்லஸில் கூட அச்சுப்பிழையா' என்று நினைத்துக்கொண்டு விட்டு விட்டேன். பிறகு தான் ரஞ்சன் காண்பித்தார்-அமெரிக்காவின் இடது பக்கத்தில் இருக்கிறது ஹவாய். நான் தேடியது வலது பக்கம்! சரியாக மெக்ஸிகோவிலிருந்து நேர் இடப்பக்கத்தில் வட அட்லாண்டிக் பெருங்கடலில் புள்ளி புள்ளியாகத் தெரிகிறது ஹவாய் தீவுகள். அதில் ஒரு புள்ளி **Oahu**. 'ஏழு கடல் ஏழு மலை தாண்டி ஒரு அரசகுமாரி இருந்தாள்' என்று என் அவ்வா கதையை ஆரம்பிப்பார்கள், அந்தக் காலத்தில். அதுதான் இப்போது என் நினைவுக்கு வருகிறது.

சந்திரமதி தன் கடிதத்தில் கவலைப்படுவது மிகவும் நியாயமானது. இது பற்றி எனக்கும் கொஞ்சம் சொல்ல இருக்கிறது. அதற்கு முன்னால் ஒரு ஆச்சரியம். இந்தப் பக்கங்களில் அவ்வப்போது தலைகாட்டும் கதாபாத்திரங்களான வுப்பர்ட்டாலைச் சேர்ந்த (ஜெர்மனி) ஜேம்ஸ், அவரது தம்பி அலெக்ஸ் இருவரும் தான் பாரிஸில் நடக்கும் இலக்கிய விழாவில் கலந்து கொண்ட மாணவர்கள். அவர்கள் தான் காரில் என்னை வுப்பர்ட்டால்வரை அழைத்து வந்து மூன்று நாட்கள் அந்த நகரைச் சுற்றிக் காண்பித்து, பிறகு பெர்லின்வரை காரிலேயே கொண்டு வந்துவிட்டார்கள். சந்திரமதி தன் கடிதத்தில் குறிப்பிடுவது இவர்களைத்தானா? பார்ப்போம்.

முதலில் தமிழில் பேசுவது பற்றி. இங்கே தமிழ்நாட்டிலேயே தமிழில் பேசுவதற்கு கூச்சப்படுகிறார்கள். வட இந்தியர்கள் தங்கள் தாய்மொழியில் பேசுவதற்கு சற்றும் கூச்சப்படுவதில்லை என்பதை நான் பலமுறை கவனித்திருக்கிறேன். அமெரிக்காவில் வாழும் ஒரு சீக்கியப் பெண் மற்றொரு சீக்கியப் பெண்ணிடம் பஞ்சாபியில்தான் பேசுகிறாள். ஆனால் தமிழருக்கோ ஆங்கிலம் தான். பிரபலமான நடிகர்கள் 'தங்கள் குழந்தைகளுக்கு தமிழ் தெரியாது' என்று சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்ல அவர்கள் கூச்சப்படுவதில்லை. இதுவே ஃப்ரான்ஸாக இருந்தால்-ஒரு ஃப்ரெஞ்சுக்காரர் தன் குழந்தைக்கு ஃப்ரெஞ்சு தெரியாது என்று சொன்னால் 'தயது செய்து நீங்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறி விடுங்கள்' என்று சொல்லி நாடு கடத்தி விடுவார்கள். ஃப்ரான்ஸில் யாருமே ஆங்கிலம் பேசுவதில்லை. ஆங்கில வார்த்தைகளையே பார்க்க முடியவில்லை. ''எதற்கு ஆங்கிலம்? லண்டனில் ஃப்ரெஞ்சு பேசுகிறார்களா என்ன?'' என்று கேட்கிறார்கள்.

பாரிஸ் கிளம்புவதற்கு முன் ஒரு புகழ்பெற்ற ட்ராவல் நிறுவனத்துக்குச் சென்றிருந்தேன். கொஞ்சம் இந்தியப் பணத்தை ஃப்ராங்க்காக மாற்ற வேண்டியிருந்தது. தமிழில் பேசினால் அங்கே கவுண்டரில் இருந்த பெண் என்னை ஏதோ ஒரு ஜந்துவைப்போல் பார்த்தாள். எனக்கோ ஆங்கிலத்தில் சரளமாகப் பேசவோ எழுதவோ தெரியாது. நான் தமிழில் பேசப்பேச அவள் ஆங்கிலத்திலேயே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஒருவேளை இவளுக்குத் தமிழ் தெரியாதோ என்று பார்த்தால்-இடையிடையே அடுத்த கவுண்டரில் இருந்தவனிடம் பக்கா சென்னைத் தமிழில் பேசினாள்.

தமிழில் பேசுவது தமிழ்நாட்டிலேயே அகௌரவமாகக் கருதப்படுகிறது. ஆங்கிலத்தில் பேசினால் அவர்கள் அறிவாளிகள், உயர்ந்தவர்கள் என்ற நினைப்பு இங்கே உள்ளவர்களிடம் காணப்படுகிறது. இதுபோன்ற அவலம் உலகில் வேறு எங்கேனும் இருக்குமா என்று தெரியவில்லை.

ஃப்ரான்ஸில் வேறு தேசத்தவர்கள் -அகதிகள்- ஃப்ரெஞ்சு படித்தால் 3000 ஃப்ராங்க் உதவித் தொகை வழங்குகிறார்கள். அந்தத் தொகை ஒருவரின் மாத வருமானம் என்பது

குறிப்பிடத்தக்கது. இது பற்றி பாரிஸில் உள்ள ஈழத் தமிழ் நண்பர் ஒருவர் ஒரு ஜோக் அடித்தார். ''பாவம், ஜெயவர்த்தனேவுக்கு விஷயம் தெரியவில்லை. சிங்களம் படித்தால் 3000 ரூபாய் தரப்படும் என்று அறிவித்திருந்தால் யாழ் நூலகத்தை எரித்திருக்க வேண்டிய அவசியமே சிங்களர்களுக்கு ஏற்பட்டிருக்காது. சண்டையும் வந்திருக்காது. எல்லாத் தமிழர்களும் சிங்களம் படிக்கப் போயிருப்பார்கள்!''

மனம் வருத்தப்படாமல் இதிலுள்ள உண்மை பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். சந்திரமதி கூறியிருப்பது போல் பாரிஸில் உள்ள பல தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழ் அறவே தெரியவில்லை.

பாரிஸ் வாழ் ஈழத் தமிழர் ஒருவர் சொன்னார்.. ''தமிழ் என்னோடு போகட்டும். என் குழந்தைகளுக்கு வேண்டாம். என் தாயை, தகப்பனை, சகோதரிகளை எல்லாரையும் பலி கொடுத்துவிட்டு இங்கே அனாதையாக ஓடி வந்திருக்கிறேன். எல்லாம் தமிழால்தானே? வேண்டாம். என் குழந்தைகளுக்கு இந்த நிலைமை வரக்கூடாது. அவர்கள் ஃப்ரெஞ்ச்தான் படிப்பார்கள்''

இதைத் சொன்னபோது அவர் கண்கள் கலங்கியிருந்தன. இதை எழுதும் போது எனது கண்களும் கலங்குகின்றன.

ஆனால் விதி விலக்குகளும் உள்ளன. ஜேம்ஸ், அலெக்ஸ், காந்தன், லிவி என்று பல மாணவர்கள். இவர்களெல்லாம் மிகச் சிறிய வயதிலேயே தன் பெற்றோருடன் ஜெர்மனி வந்து விட்டவர்கள். சிலர் ஜெர்மனியிலேயே பிறந்து வளர்ந்தவர்கள். என்றாலும் தமிழை விடவில்லை.

ஒரு நாள்-ஹ்பர்ட்டாலில் இருந்து பெர்லினுக்கு சென்று கொண்டிருந்தோம். வண்டியை ஜேம்ஸும் லிவியும் மாற்றி மாற்றி ஓட்டிக் கொண்டிருக்கின்றனர். லிவி ஓட்டும்போது மட்டும் ஜேம்ஸ் 'பார்த்து ஓட்டு' என்கிறார். 'பயப்படாதே, என் வீரமெல்லாம் பாரிஸிலேயே போய்விட்டது' என்கிறார் லிவி. பாரிஸ் இலக்கிய விழாவுக்குச் சென்றபோது பென்ஸ் காரை 200 கி.மீ. வேகத்தில் ஓட்டி 5000 ஃப்ராங்க் தண்டம் கட்டியவர் லிவி. அங்கே நகரத்துக்குள் கார்களை வேகமாக ஓட்டக் கூடாது. சரி, ரெஸ்டாரண்ட் விஷயத்துக்கு வருகிறேன்.

எனக்கு சீனத்துக் குச்சியில்கூட சாப்பிடத் தெரிந்து விட்டது. ஃபோர்க்தான் பிரச்னை. ஆனால் அதை ஒன்றும் ஜெர்மன்காரர்கள் பெரிய விஷயமாகப் பொருட்படுத்துவதில்லை என்று தெரிந்தது. ஏப்பம் விடுவது, சலக் புலக் என்று சத்தம் போட்டுச் சாப்பிடுவது, மணிக்கட்டு வரை கையை நக்குவது போன்ற விஷயங்களுக்குத் தான் அவர்கள் முகத்தைச் சுளிக்கிறார்கள். (இதிலேயே ஒரு சிறிய முரண்பாடு. ஏப்பத்துக்கு முகம் சுளிப்பவர்கள் அபான வாயுவைக் கண்டு கொள்வதில்லை!)

வான் கோழிக் கறி ஆர்டர் பண்ணினோம். அதைக் கத்தியால் வெட்டி ஃபோர்க்கினால் எடுத்துச் சாப்பிடுவது இயலாது எனத் தோன்றியது. ''கையாலேயே சாப்பிட்டு விடலாமா?'' என்று கேட்டேன். 'பூந்து விளையாடுங்க' என்றார் ஜேம்ஸ்.

ஒன்பது வயது இருக்கும்போது இலங்கையிலிருந்து பெற்றோருடன் ஜெர்மனி வந்தவர் ஜேம்ஸ். இப்போது இருபது வயது இருக்கும். படித்ததெல்லாம் ஜெர்மனில்தான். நண்பர்களுடனும் பெற்றோருடனும் பேசுவது கூட ஜெர்மன் மொழியில் தான்.

''உங்களுக்கு எப்படி இந்த ஸ்லாங்கெல்லாம் தெரிகிறது?'' என்று கேட்டேன்.

''தமிழ் சினிமா'' என்றார் ஜேம்ஸ்.

-இன்னும் உண்டு. ஒரு நாள் பொறுத்து.

புகைப்படங்கள்:

1, 2 பாரிஸிலிருந்து வூப்பர்ட்டால் செல்லும் வழியில் பெல்ஜியம். பனிமழை. காரை ஒரு ரெஸ்டாரண்டில் நிறுத்திவிட்டு ஜேம்ஸும் நானும் பனிக்கட்டியை உருட்டிப் போட்டு விளையாடினோம்.

3. காந்தன், லிவி, ஜேம்ஸ், அவர் தந்தை.

அத்திம்பேருக்கும் நாத்தனாருக்கும் திருமணம்

பொதுவாக தமிழ் சினிமா எனக்குப் பிடிக்காது (விதிவிலக்குகள்: ஜெயகாந்தன், மகேந்திரன், பாரதிராஜா). ஆனால் தமிழ் சினிமாகூட தமிழ் வளர்ச்சிக்கு இவ்வளவு தூரம் பங்காற்றுவது அறிந்து ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைந்தேன். தமிழ் சினிமா மட்டும் இருந்திராவிட்டால் அந்த ஐரோப்பியத் தமிழ் இளைஞர்களுக்கு இவ்வளவு தமிழ் தெரிந்திருக்குமா என்பது சந்தேகம்தான்.

வூப்பர்ட்டாலுக்கு (ஜெர்மனி) அருகேயுள்ள **Dusseldorf** நகரில் ஆதித்யன் வருகிறார் என்று ஒரு நோட்டீஸைக் காண்பித்தார் ஜேம்ஸ். எனக்குப் பொதுவாக இம்மாதிரி சினிமா இசை நிகழ்ச்சிகள் பிடிக்காது என்ற போதிலும் ஆதித்யனை ஒரு சில பார்ட்டிகளின்போது சந்தித்திருக்கிறேன். அமரன் படத்தில் அவர் அடித்த லூட்டி எனக்குப் பிடிக்கும். (ஸ்ரீவித்யாவின் டப்பாங்குத்துப் பாடல்: சண்ட பஜாரு மாமா கொஞ்சம் உஷாரு) பெரிய அளவில் முன்னுக்கு வராவிட்டாலும் தமிழ் சினிமாவில் சற்றே வித்தியாசமானவர். சில வருடங்களுக்கு முன்னால் எனக்கும் அவரைப் போலவேதான் முடியலங்காரம் இருந்தது.

ஜேம்ஸும் மற்ற நண்பர்களும் அன்றிரவு **Dusseldorf** சென்றோம். வூப்பர்ட்டாலிலிருந்து 200 கி.மீ. மைனஸ் ஐந்து டிகிரி குளிர். டுஸல்டார்ஃபை நெருங்கியபோது ஒரு இளைஞர் லிஃப்ட் கேட்டு கை காண்பித்தார். நாங்கள் தமிழில் பேசுவதைக்கேட்டு தமிழா என்றார். அவரும் தமிழ். பதினேழு வயது இருக்கலாம். தங்கநிற தலைச்சாயம். அமெரிக்க ஃபங்க் ஸ்டைல். 'பாப்' பாடகர்களை ஒத்த ஆடை அலங்காரம். கடுமையாகக் குடித்திருந்தார். சிகரெட் பற்ற வைத்தார். நானும் ஒன்று கேட்கலாமா என்று நினைத்தேன். ஆனால் இயல்பான கூச்ச சுபாவத்தினால் கேட்கவில்லை. சில நாட்களாகவே நான் புகைத்திருக்கவில்லை என்பது ஞாபகம் வந்தது. காரணம்-ஜேம்ஸும் அவரது நண்பர்களும் புகைப்பதில்லை. குடிப்பதும் இல்லை. (மலேஷியா ஆண்ட்ரூஸ் அவர்களே.. பார்த்துக் கொள்ளுங்கள். ஜேம்ஸ் போன்ற மாணவர்கள் எந்த இடத்திலும் உண்டு!)

உள்ளே போய் டிக்கட் எடுத்தோம். பதினைந்து மார்க். ஒரு மார்க் இருபது ரூபாய். டிக்கட் வாங்கியதும்தான் தெரிந்தது ஆதித்யன் வரவில்லை என்பது. நோட்டீஸைப் பார்த்தோம். அப்புறம்தான் விளங்கியது. ஆதித்யன் பெயரை பெரிதாகப் போட்டு அதன் கீழே ஒரு பெயர் சிறிதாக அச்சிடப்பட்டிருந்தது. அதாவது, ஆதித்யன் இசையமைத்த படத்தில் கிடார் வாசித்தவர்!

நல்ல கூட்டம். எல்லோரும் தமிழர்கள். தமிழ் சினிமா பாடல்கள். எனக்குப் பின்னால் ஒரு ஜெர்மன் பெண் நன்றாக இலங்கைத் தமிழ் பேசிக் கொண்டிருந்தார். கணவர்-இலங்கைத் தமிழர். இவர் ஜெர்மன். 'இப்படி பல தம்பதிகள் உண்டு' என்றார் ஜேம்ஸ்.

பாடல்கள் முடிந்ததும்தான் அன்றைய ஸ்பெஷல் நிகழ்ச்சி. எகிப்திய பெல்லி டான்ஸ். கிட்டத்தட்ட 99 சதவிகித நிர்வாணம். மேலே ஒரு ரிப்பன். கீழே-அரசிலை! 45 இருக்கும். (வயது அல்ல) சிலிக்கானா நிஜமா என்று தெரியவில்லை. ஒரு கிழவியைப் பிடித்து வந்து ஆட வைப்பார்கள் என்று பார்த்தால் மிக இளமையான ஒரு பெண்.

எங்களிடம் லிஃப்ட் கேட்டு வந்த இளைஞனும் அந்தப் பெண்ணோடு சேர்ந்து ஆடினான். பெண்ணின் பாதுகாப்புக்காக வந்த பயில்வானைப் போன்றிருந்தவன் அந்த இளைஞனை இருக்கையில் பிடித்து உட்கார்த்தி வைத்தான். இளைஞன் திமிறிக் கொண்டு ஆடினான். 'பரவாயில்லை ஆடட்டும்' என்று சொல்லி விட்டாள் அந்தப் பெண்.

பாம்பைப் போல் வளைந்து நெளிந்து ஆடினாள் அவள். சினிமாவில் மட்டுமே பார்த்திருந்த எகிப்திய பெல்லி டான்ஸை நேரில் பார்த்தது ஒரு வினோத அனுபவம். அதிலும் அந்தச் சூழல்! தமிழ்க் குடும்பங்கள், குழந்தை குட்டிகளுடன் எகிப்திய பெல்லி டான்ஸ்!

ஜேம்ஸின் அப்பா ஆதித்யனைப் பற்றி விசாரித்தார். விஷயத்தைச் சொன்னோம். 'அடடா' என வருத்தப்பட்டார்.

'பரவால்லப்பா.. செம குட்டிங்க.. நிகழ்ச்சி நல்லாத்தான் இருந்தது' என்றார் ஜேம்ஸ்!

கனடாவில் வசிக்கும் நண்பர் சக்ரவர்த்தி சொன்ன ஒரு விஷயம் இங்கே ஞாபகம் வருகிறது. அவருடைய மகள் எல்.கே.ஜி. என்று நினைக்கிறேன். மூன்று நான்கு வயது இருக்கலாம். ''அதற்குள்ளாகவே '**---- off**' என்றெல்லாம் பேசுகிறாள். பயமாக இருக்கிறது'' என்றார் சக்ரவர்த்தி. இன்னும் பல வார்த்தைகள் சொன்னார். மறந்துவிட்டேன்.

''லோ ஹிப்பில் தான் டிரஸ் போடுவேன்'' என்று வேறு அடம் பிடிக்கிறாளாம். விரல் சூப்பும் பழக்கமும் உண்டு.

'லோ ஹிப்பெல்லாம் இப்போது போடக் கூடாது; விரல் சூப்பக் கூடாது' என்று சொல்லியிருக்கிறார் சக்ரவர்த்தி.

உடனே குழந்தை சொன்ன பதில்: ''அப்படியானால் அப்பா.. இரண்டில் ஒன்றைத்தான் விட முடியும். லோ ஹிப்பா? விரல் சூப்புவதா? எது என்று நீயே முடிவு செய்து சொல்''

சக்ரவர்த்தி வேறு ஒரு முடிவு செய்து குழந்தையை மதுரையில் கொண்டு வந்துவிட்டு விட்டார் மாமனார் வீட்டில்.

ஆனால் எல்லோராலும் அது முடியாது. கனடாவின் **Ontario** மாநிலத்திலிருந்து ரஞ்சன் எழுதுகிறார். 1,50,000 தமிழர்கள் இங்கே வசிக்கிறார்கள். (அப்படியானால் மொத்த கனடாவிலும் எத்தனை லட்சம்?) 25 தமிழ்க் கோவில்கள். பத்து பெரிய தமிழ் நூலகங்கள். உலகில் முதல் முதலாக நிறுவப்பட்ட 24 மணி நேர தமிழ் வானொலி. மதறாஸ் தோசைக் கடை. சுடச் சுட இட்லி. சிக்கன் பிரியாணி. தந்தூரி சிக்கன். எல்லாம் உண்டு.

இதே போல் பாரிஸிலும் பல இடங்கள் உள்ளன. அப்படியே சைதாப்பேட்டையை பெயர்த்து எடுத்து வைத்தது போன்ற இடங்கள். அதில் ஒரு இடம் லாச்சப்பல்.

கலாச்சாரம் என்றால் என்ன என்ற ஒரு அடிப்படைக் கேள்வியை இங்கே கேட்டுக் கொள்ள வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டில் திருமண விளம்பரங்களில் காணக்கூடிய அத்தனை ஆபாசத்தையும் நாம் ஐரோப்பியத் தமிழ் சஞ்சிகைகளின் திருமண விளம்பரங்களிலும் காண முடிகிறது. அதில் முக்கியமானது ஜாதி. இவ்வளவு போருக்குப் பிறகும், உற்றார் உறவினரை இழந்து அகதிகளாக வெகுதூரம் கடந்து வந்து ஐரோப்பிய நகரங்களில் ஆங்காங்கே சிதறிக் கிடக்கிற போதும் அவர்கள் தங்களின் ஜாதிய அடையாளங்களைத் தவிர்க்கவோ சுய விமர்சனம் செய்து கொள்ளவோ தயாராக இல்லை என்பது வேதனையான விஷயம்.

பாரிஸில் நடந்த ஒரு தேர்த்திருவிழாவை வீடியோவில் பார்த்தேன். இது பாரிஸா மைலாப்பூரா என்றே சந்தேகம் வந்துவிட்டது. இம்மாதிரி கொண்டாட்டங்களின் மீது ஆட்சேபணை இல்லை. ஆனால், ஜாதி?

பொம்பிதூ (**Pompidou**) நூலகம் எங்கே இருக்கிறது என்று கூடத் தெரியாமல் லட்சக்கணக்கான தமிழர்கள் பாரிஸில் தமிழ் டி.வி. சேனல்களின் முன்னே அமர்ந்திருக்கின்றனர். இதில் எனக்கு உடன்பாடு இல்லை.

இந்த சேனல்கள் பற்றியும், இதில் வரும் சீரியல்கள் பற்றியும் கொஞ்சம் பேசியாக வேண்டும். இவற்றைக் கேட்டாலே என் மண்டையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போலவும், நூறாயிரம் கரப்பான் பூச்சிகள் மூளைக்குள் ஓடுவது போலவும் தோன்றும். ஒரு நிமிடம் கூட தாங்க முடியாத மிகக் கொடுமையான ஆக்கினை அது.

பட்டிமன்றம் என்றால் என்ன, அதில் என்னதான் நடக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு நாள்-பொங்கல் தினமோ புத்தாண்டு தினமோ ஏதோ ஒன்று-டிவியில் பார்த்தேன்.

ஒரு பேராசிரியை அம்மாள் கட்டைக் குரலில் கத்திக் கொண்டிருந்தார்-''அந்த மங்கையர்க்கரசி மட்டும் படித்தவள் இல்லையா? படித்தவள்தான். எம்.பி.ஏ. படித்தவள். கல்லூரியில் எத்தனையோ பரிசுகள் வாங்கியவள். அவள் ஏன் தன் கணவன் சின்ன வீடு வைத்துக் கொள்வதை அனுமதித்தாள்?''

என்ன இது அவலம்? ஏன் இந்த ஆபாசம்? சின்ன வீடு வைத்துக் கொள்வதா? அது சட்டப்படி குற்றம் ஆயிற்றே? நாம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? ஏதோ கால யந்திரத்தில் உட்கார்ந்து பின்னுக்குப் போய்விட்டோமா?

பேரிடி விழுந்தது போல் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருந்த என்னிடம் வந்து ஆதூரத்துடன் கேட்டாள் அவந்திகா 'என்ன சாரு?' என்று.

''இந்த மங்கையர்க்கரசி என்றால் யாரம்மா?''

''அத்திம்பேர் தொடரில் வரும் கதாநாயகி''

அடப்பாவிகளா.. ஏதோ ஷேக்ஸ்பியரின் கதாபாத்திரங்களைப் பற்றிக் குறிப்பிடுவது போல் அல்லவா குறிப்பிட்டுப் பேசுகிறார்கள் பட்டிமன்றத்தில்!

ஒரு நாள் நான் முன்பு வேலை பார்த்த அலுவலகத்தில் ஒரு அன்பர் காலையில் வணக்கம் சொன்ன கையோடு ''இந்த அத்திம்பேர் சீரியல்ல பாருங்க சார்... ''என்று ஆரம்பித்தார். உடனே நான் அவரிடம் ''உங்கள் காலில் வேண்டுமானாலும் விழுகிறேன். இது பற்றி மட்டும் பேச வேண்டாம்'' என்று அழாக்குறையாகச் சொன்னேன்.

இடையில் அத்திம்பேருக்கும் நாத்தனாருக்கும் திருமணம் என்று பத்திரிகையில் தலைப்புச் செய்தி! அது எப்படி அத்திம்பேருக்கும் நாத்தனாருக்கும் திருமணம் நடக்க முடியும் என விசாரித்தால் அத்திம்பேர் தொடரில் அத்திம்பேராக நடிக்கும் நடிகருக்கும் அதே தொடரில் நாத்தனாராக நடிக்கும் நடிகைக்கும்**..... Oh my goodness..!**

சரி, ஊரெல்லாம் ஒரே பேச்சாகக் கிடக்கிறதே இது என்னதான் விஷயமென்று பார்த்து விடுவோம் என்று டி.வி. பெட்டியின் முன்னே உட்கார்ந்தேன். கேமரா கோணம் என்று எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் கேமரா கோணம் என்கிற விஷயமே ஒருவரை மனநோயாளியாக ஆக்கிவிட முடியும் என்று அப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

ஒரு நடிகர் பேசுகிறார். பவுடர் அப்பிய அவர் முகத்தையே காட்டுகிறது கேமரா. அவர் வசனத்தை மனப்பாடம் பண்ணியபடி ஒப்பிக்கிறார். பிறகு அவருக்கு எதிரே அமர்ந்திருப்பவரின் முகத்துக்கு நேரே கேமரா நிறுத்தப்படுகிறது. இப்போது அந்த நடிகரின் பவுடர் அப்பிய முகம் நெட்டுரு போட்ட வசனத்தை ஒப்பிக்கிறது. இரண்டு நிமிடத்துக்கு மேல் இந்தக் கொடுமையை அனுபவித்தால் சட்டையைக் கிழித்துக் கொண்டு ஓடி விடுவேன் என்று தோன்றியது.

இதோடு இன்னும் பல வேடிக்கைகள் வேறு. அத்திம்பேர் தொடரைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் ஒரு பெண். அவள் கணவன் சேனலை மாற்றியிருக்கிறான். அதைத் தொடர்ந்து சண்டை. அன்று இரவு அந்தப் பெண் தூக்கு மாட்டிக் கொண்டு விடுகிறாள். இது ஒரு பத்திரிக்கைச் செய்தி. இம்மாதிரி தமிழ்த் தற்கொலைகள் பற்றியே ஒரு ஆய்வு நடத்தலாம் போல் உள்ளது.

பாரிஸில் நான் சென்ற தமிழ் வீடுகளில் எனக்கு உபசாரம் செய்வதாக எண்ணிக் கொண்டு இம்மாதிரி சீரியல்களை டிவி-யில் போட்டு என்னை மண்டை காய வைத்தனர்.

கற்சுறாவின் வீடு மிகவும் சிறியது. அங்கே அவரது உறவுக்காரப் பையன்களும் இரண்டு பேர் தங்கியிருந்தனர். காலையில் எழுந்ததும் சுப்ரபாதத்தைப் போட்டு விட்டுத்தான் பல்லே துலக்குவார்கள். இது வேறு சுப்ரபாதம். தமிழ் சினிமாப் பாடல்கள். காலையில் முதல் வேலையாக செவிப்பறையைக் கிழிப்பதுதான் அங்கே வழக்கமாக இருந்தது.

இது போதாது என்று ஒரு நாள் இரவு 'அழகே உன்னை ஆராதிக்கிறேன்' என்ற படத்தை டெக்கில் போட்டார்கள். காதலைத் தெரிவிப்பதற்கு வேறு எதுவும் கிடைக்கவில்லையா? பலூன்தானா கிடைத்தது? அதுவும் ஒரு பலூன் விட்டால் போதாதா? இரவில் மொட்டை மாடியில் கண் விழித்து நூறு பலூன்கள் விடுகிறாள் ஹீரோயின். ஜுரம் வந்து விடுகிறது! நம் ஊராக இருந்தால் மின் தடை ஏற்படும் வாய்ப்பாவது இருக்கிறது. அங்கே பாரிஸில் அதற்கெல்லாம் வழியே இல்லை. படம் ஓட ஓட அந்த ஹீரோயினுக்கு வந்தது போல் எனக்கும் ஜுரம் வந்துவிடும் போல் தோன்றியது.

இதே போல் தெனாலியை பதின்மூன்று முறை பார்த்தேன். செல்லும் வீடுகளிளெல்லாம் போட்டுப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அல்லது, எனக்காகப் போடுகிறார்கள்!

அதற்குப் பிறகு தமிழர் வீடுகளுக்கே செல்வதில்லை என்று முடிவு செய்துவிட்டேன். திரும்பும்வரை அதில் உறுதியாக இருந்தேன்.

இப்போது ஹவாய் சந்திரமதியின் கடிதத்தைப் படித்தபோது இவ்வளவும் ஞாபகம் வருகிறது..!

பிணம் வசிக்க வீடு தோண்டும் வெட்டியானைப் போல..

Literature of Trash என்று ஒரு அலை அடித்தது. எழுபதுகளில் அமெரிக்காவில் எழுந்த இந்த அலைக்குக் காரணமாக இருந்தவர் **Donald Barthelme**. நியூயார்க்கர் பத்திரிகையில் தான் இந்த அலையைக் கிளப்பி விட்டார் பார்த்தெல்மே.

இந்த வகை இலக்கியம், குப்பையிலிருந்து தனது கச்சாப் பொருட்களை சேகரித்துக் கொள்கிறது. இது 'உன்னத இலக்கிய'த்துக்கும் **elitist** மனோபாவத்துக்கும் எதிரானதாக இருந்தது. உன்னத இலக்கியக்கர்த்தாக்கள் **junk** என்று கழித்துக் கட்டுவதையே கச்சாப் பொருளாக எடுத்துக் கொண்டு இலக்கியத்தை உருவாக்கினார்கள் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்.

அதுபோல் **Literature of Squalor** என்ற ஒன்று இருக்குமானால், அதன் முன்னோடிகளில் ஒருவரென அழகிய பெரியவனைச் சொல்லலாம். சமகாலத் தமிழ் இலக்கியத்தில் ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், மௌனி என பல பெயர்கள் புழங்கி வருகின்றன. ஆனால் அவர்களின் உலகிலிருந்து வெகு தூரத்துக்கு அப்பால் கிடக்கிறது அழகிய பெரியவனின் உலகம்.

சமீபத்தில் அவருடைய 'தீட்டு' என்ற சிறுகதைத் தொகுதியைப் படித்தேன். அதில் 'வீச்சம்' என்று ஒரு கதை.

காக்காசி என்று ஒருவன். கிணறு தோண்டுபவன். அவனைப் பற்றிய அறிமுகத்தைப் பாருங்கள். ''செமித்த சாராய நாற்றமுடன் பீடியின் கடும் நாற்றமும் சேர்ந்து மேலும் நாறினான் காக்காசி. மல நாற்றம், செத்த உடல்களின் நாள்பட்ட நாற்றம் என நாற்றக் கலவை காற்றிலே இமிரி, அப்பன் முன்னிருக்கும் பாமாண்டியின் நாசித்துவாரங்களில் முண்டியடித்தது.''

பாமாண்டி காக்காசியின் மகன். நகரத்தில் கல்லூரியில் படிக்கிறான். செவந்த மணி அவன் தாய்.

கிணறு தோண்டும் வேலையை விட்டுவிட்டு தோல் ஷாப்பு வேலைக்குச் செல்கிறான் காக்காசி. காரணம்-செவந்த மணி.

''பிணம் வசிக்க வீடு தோண்டும் வெட்டியானைப் போல் தினமும் காக்காசி மண்கோலி, மண்கோலி பாதாளங்களின் உட்பிரவேசித்து பிணமென மீள்வது செவந்த மணியை அவஸ்தையுறச் செய்தது. சடலத்தில் குளிர்ச்சி நிரந்தரமாய் கணவனின் உடம்பில் தங்கி விட்டதாய் உணர்ந்த ராத்திரியில் அவனை தோல் ஷாப்புக்கு போகும்படி ஏவினாள்''

கல்லூரிக் கட்டணம் செலுத்துவதற்காக பணம் வாங்கும் பொருட்டு நகரிலிருந்து தன் வீட்டுக்கு வருகிறான் பாமாண்டி. தன் அப்பனின் உடம்பிலிருந்து வரும் வீச்சம் அவனை வாந்தியெடுக்கச்செய்கிறது. அப்பனின் உடலிலிருந்து பிணவாடை வெளிப்படுகிறது.

இரவெல்லாம் இருமிக் கொண்டிருந்துவிட்டு அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து இடிசுவரின் மண்ணால் நரநரவென பல் தீட்டிக் கொண்டு பழைய கஞ்சியைக் குடித்து விட்டு தோல் ஷாப்புக்கு கிளம்புகிறான் காக்காசி.

இனி வருவது தோல் ஷாப்பு:

''சுருண்ட வேட்டியையும் சட்டையையும் உருண்டை பிடித்தது போல் ஒரு மூலையில் பத்திரப்படுத்திவிட்டு கோணிப் பையின் துண்டு ஒன்றால் கோவணத்தின் மேல் அரை கட்டிக் கொண்டான்.. பச்சைத் தோல்கள் வேதிப் பொருட்களிலும் சுண்ணாம்பிலும் புளித்து ஊறி நாற்றம் பரப்பின. சவ்வுகளும் தோல் கிழிந்த மயிர்களும் இரைந்திருக்கும் பரப்பு எங்கும் கொடூரக் கவிச்சி நாற்றம். தோல்கள் ஊறும் தொட்டிகளில் கரைசல் நீர் புளித்து, குமிழ்கட்டி, சீழ் நிறத்தில் இருந்தது.

..... வேதி நீர் கரைசல்களில், சவ்வுக் குவியலில், தோல்களின் கவிச்சி நெடியில் நாற்றம் பொதிந்த ஜடமாய் உருமாற்றம் கொண்டிருந்தான் அவன்.''

''நா போயீ துட்டு வாங்கினு வருணுமா? நா போகல அந்த நாத்தம் புடிச்ச ஷாப்புக்காவெல்லாம்'' என்று அம்மா செவந்த மணியிடம் வாதிக்கும் பாமாண்டி பிறகு அவளின் வற்புறுத்தலால் தோல் ஷாப்புக்கு வருகிறான்-கல்லூரிக் கட்டணத்திற்கான பணத்தை அப்பனிடமிருந்து வாங்குவதற்காக.

''முக்கால் நிர்வாணியாய் தன்னை நோக்கி ஓடி வரும் அப்பனைப் பார்த்ததும் பெரும் மனத்தாக்குதலுக்கு ஆளானான் பாமாண்டி. கவிச்சி வீச்சம் வாரி அடித்தபடி இருக்கும் சூழலில் நாறும் மனிதனாய் எதிரே நிற்கும் அப்பனைக் காணச் சகிக்கவில்லை அவனுக்கு'' இன்றைய தினம் தமிழ் இலக்கியத்தில் அழகிய பெரியவனின் ரௌத்திரத்துக்கு முன்னால் வேறு யாருமே ஈடு இல்லை, இணை இல்லை என்று தோன்றுகிறது. வேறு என்ன வார்த்தை சொல்வதென விளங்காமல்தான் 'ரௌத்ரம்' எனக் குறிப்பிட்டிருக்கிறேன்.

வாசிக்கும்போது நெஞ்சம் பதறுகிறது. கை கால்கள் நடுங்குகின்றன. மூச்சு சீறிச்சீறி வருகிறது. கண்கள் கலங்குகின்றன.

Bandit Queen படத்தில் இசை மேதை நுஸ்ரத் ஃபத்தே அலிகானின் கதறலைப் பற்றிக் குறிப்பிட்டேன் அல்லவா, அத்தகைய உச்சத்துக்கு செல்கிறது அழகிய பெரியவனின் எழுத்து.

'குடை' என்ற சிறுகதையிலிருந்து மேலும் ஒரே ஒரு உதாரணம் தர விரும்புகிறேன்:

''இன்னிக்கி இப்படி திடுதிப்புன்னு வந்து உனக்கு நா கீறங், கடெசி வரீக்கும் வெச்சி காப்பாத்தறன்னா நா என்ன சொல்றது? ஊரு என்னா சொல்லும்? பசங்கள என்னா பேசும்? ஆண்டவா ஏன் இப்பிடி சோதிக்கிற? அவளது எண்ணங்கள் காத்தடி கால மரங்களால் ஆடின. வெளியே வேம்பின் சத்தம். தவளைகளின் கூப்பாடு. புருசன் நினப்பு நெஞ்சை கப்பி உசுப்பியது. அங்கங்கள் எல்லாம் கூசின. திம்மன் விழுந்து நான்கைந்து மாதங்களிருக்கும். தொடு சுகமே கிடையாது. இன்று அவனே இல்லை. ஆனாலும் அவனை நினைத்தால் அவன் கை இடுப்பில் சுற்றி இழுத்து சேர்த்துக் கொள்வது போல

உணர்வு கிளம்புகிறது. அப்படியே காளியுடன் வாழத் தொடங்கினாலும் புருசனின் ஆவி என்ன நினைக்கும். இப்படி நினைப்பதே அவனுக்கு செய்யும் துரோகமா?

நினைப்பை அவளால் தடுக்க முடியவில்லை. லட்சுமி இப்படியும் அப்படியுமாக நெளிந்து எழுந்து உட்கார்ந்து கொண்டாள். மிரண்டு விழித்த படி 'அப்பா, அப்பா' என்று அழுதாள். மெதுவாய் நடுங்கியது அவள் உடல். அவளை அணைத்து படுக்க வைத்துக் கொண்டு முதுகைத் தடவினாள் செல்லா. ஒரு பாட்டம் பாடி அழ வேண்டும் போல மார்பில் கரித்துக் கொண்டு வந்தது. அப்பாவுக்கு நா எங்க போறது? தகப்பனில்லாத புள்ளைங்களா, தல ஒரு வேசமா துணி ஒரு வேசமா, கண்ணுங்க பஞ்சடச்சி, வாப்பாருக் கையேந்தி, கேப்பாருக்கு வாய் வுட்டு உன்னும் என்னாவெல்லாம் கோராமா படப் போதுங்ளோ, ஆத்தாமை கூடிக் கொண்டு போனது. மேலும் இறுக்கமாக பிள்ளைகளை அணைத்துக் கொண்டு மூன்றின் தலைகளையும் நீவினாள். விளக்கு மாடத்தில் வைத்திருந்த ரூபாய் நோட்டு காற்றிலே படபடவென சப்தம் எழுப்பிக் கொண்டிருந்தது. காளி தந்து விட்டுப் போனது. இருட்டில் உள்ளே அவன் இருப்பது போலிருந்து செல்லாவுக்கு. தூக்கம் வராது தத்தளித்துப் புரண்டாள் அவள்.''

ஒரு லத்தீன் அமெரிக்க இலக்கியவாதிக்கு நிகராக எழுதியிருக்கும் அழகிய பெரியவனை தமிழ்நாட்டில் யாருக்கும் தெரியாது.

I salute him!

அழகிய பெரியவனின் புத்தகங்கள் கிடைக்குமிடம்:

தமிழினி, 342, TTK Road, Royapettah, Chennai - 600 014.

எனக்குப் பிடித்த லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களில் ஒருவர் **Eduardo Galeano**. உருகுவே நாட்டைச் சேர்ந்தவர். அவரது மற்ற பல நாவல்களைப் படித்திருந்தாலும் அவருடைய முக்கியமான புத்தகமான **Soccer in Sun and Shadow**வை இன்னும் நான் படித்ததில்லை.

'எப்படி நீங்கள் அர்ஜென்டினா ஜெயிக்க வேண்டும் என்று எழுதலாம்? அந்த நாட்டை இங்கிலாந்து தோற்கடித்து விட்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. இனி இங்கிலாந்து உலகக் கோப்பையை வெல்லாவிட்டாலும் பரவாயில்லை' என்று எழுதுகிறார் சுபா. (ஒருவேளை இங்கிலாந்து குடிமகளோ?)

ஏன் அர்ஜென்டினா வென்றிருக்க வேண்டும்? பராகுவே, உருகுவே, ப்ரஸீல் போன்ற நாடுகள் ஏன் ஜெயிக்க வேண்டும்? காரணம். எல்லாம் அவ்வளவு ஏழை நாடுகள்.

கலியானோ எழுதுவதைப் பாருங்கள் - '**Brazil's best players... have always been blacks and mulattons. All of them came up from poverty, and some of them returned to it.**'

'**The ball is the only fairy god mother he (for the black child in the slums) can believe in**' இங்கிலாந்து இனவாதத்திற்குப் பேர்போனது. உலக நாடுகள் பலவற்றை அடிமைப்படுத்தியது. எனவேதான் இங்கிலாந்து உலகக் கோப்பையை வெல்லக்கூடாது.

அதுமட்டுமல்ல, கால்பந்தாட்டம் லத்தீன் அமெரிக்க மக்களின் ரத்த ஓட்டத்தில் கலந்திருக்கிறது.

Antonio Skarmeta என்ற சிலே நாட்டு எழுத்தாளரின் **I dreamt the snow was burning** என்ற நாவலும் கால்பந்தாட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்டதுதான்.

சமகால லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் ஒரு **classic** என்று சொல்லத்தக்க இந்த நாவலை **Readers International** என்ற பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

இந்த ஆண்டு உலகக் கோப்பை ப்ரஸீலுக்குத் தான் என்று நினைக்கிறேன். அதன் காரணம்? கலியானோ சொல்வதைப் பாருங்கள்:

'There are towns and villages in Brazil which have no church, but not one lacks a soccer field. Sunday is the day of hard labour for cardiologists across the country. On a normal Sunday people die of excitement during the Mass of the ball.'

பழத்துக்காக கப்பலையே விற் றார்கள்!

இந்தப் பக்கங்கள் குறித்த சில வாசகர்களின் எதிர்வினை என்னை நெகிழ்ச்சியடையச் செய்கிறது.

ஒரு ஆண்டுக்கு முன்பு நடந்த கதை இது - எனது நண்பர் பிரதாப் போத்தன் என்னிடம் ஒரு கதை கேட்டிருந்தார். சினிமா எடுப்பதற்காக. என் எழுத்திலுள்ள கிண்டலும் பகடியும் அவருக்குப் பிடித்திருந்தது. 'ஷ்ரி ஆலன் பாணியில் தமிழர்களுக்கு ஒரு கதை சொல்ல நீங்கள் தான் சரி' என்றார் பிரதாப். ஆனால் இப்படியெல்லாம் கேட்டால் என் மூளை வேலை செய்யாது என்று அவருக்குத் தெரியாது.

தினமும் காலை ஆறு மணிக்கு பிரதாபிடமிருந்து எனக்கு போன் வரும்.

''என்ன சாரு கதை ரெடியா?''

நான் படுக்கையிலிருந்து எழுந்து வந்து மலங்க மலங்க விழிப்பேன்.

இப்படி ஒரு மாத காலம் என்னை தூக்கத்திலிருந்து எழுப்பிக் கொண்டிருந்தார் பிரதாப் போத்தன். பிறகு விட்டு விட்டார்.

இப்போது ரவீந்திரன் அதைச் செய்கிறார். கதை கேட்டு அல்ல, கோணல் பக்கங்களைக் கேட்டு.

''ஏன் சாரு, நேற்று ஒன்றும் புதிதாக வரவில்லை?'' இதே போல் ஒவ்வொரு நாளும் கேட்பார். அதுமட்டுமல்ல; இரவு ஒன்பது மணிக்கு போன் செய்து அன்றைய கோணல் பக்கங்களை அக்குவேறு ஆணிவேறாக அலசி விடுவார்.

'இவர் என்ன, தொலைபேசித்துறை மந்திரியா, இப்படி மணிக்கணக்கில் பேசுகிறாரே?' என்று ஐயம் கொண்டேன்.

அதற்கு ஒரு நாள் விடை கிடைத்தது.

இரவு ஒன்பது மணிக்குத் துவங்கிய பேச்சு பதினொரு மணி வரை தொடர்ந்தது. இடையிடையே 'ஜல்தி கரோ பாயி.. ஜல்தி கரோ' என்ற குரல்கள் கேட்டன.

''என்ன சத்தம் ரவீந்திரன்?''

''ஒன்றுமில்லை சாரு, நின்று நின்று பார்த்து விட்டுப் போகிறார்கள்''

''என்னது?''

''அதை விடுங்கள். இந்த **Dionysian** விஷயத்தைப் பற்றிக் கேட்காவிட்டால் எனக்குத் தலையே வெடித்து விடும்..'' மறும்படியும் தொடங்கும் உரையாடல்.

இப்படியே பதினோரு மணி ஆகியது.

''அரே கதம் கரோ பாயி.. துகான் பந்த் கர் ரஹே ஹே(ங்)''

குரலை அடுத்து ஷட்டரை இறக்கும் சத்தம்.

''என்ன சத்தம் ரவீந்திரன்?''

''ஒன்றுமில்லை, கடையை அடைக்கிறார்கள். பாதகமில்லை. இன்னும் ஒரே ஒரு விஷயம் மட்டும் கேட்க வேண்டும், சாரு''

''என்னது, கடையை அடைக்கிறார்களா? என்ன கடை?''

''**STD** கடை'' என்றார் ரவீந்திரன் சாவகாசமாக.

''என்ன, **STD** கடையா? காசு கொடுத்தா பேசுகிறீர்கள்?''

''அதை விடுங்கள் சாரு. அது ஒன்றும் முக்கியமில்லை''

பல நூறு கி.மீ. தூரத்திலிருந்து இப்படி ஒரு வாசகர்!

சில வாசகர்களின் கடிதங்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்ளத்தக்கதாக உள்ளன என்று சொன்னேன்.

ஜெர்மனியிலிருந்து குமரேசனின் கடிதம்:

கோணல் பக்கங்களை விடாமல் படித்து வருகிறோம். நன்றாகப் போகிறது. இங்கே இருக்கும் என்னுடைய தமிழ் நண்பர்கள் எல்லோரும் உங்களுக்காக ஒரு 'ஓ' போட்டோம்.

இங்கே ஜெர்மனியில் **Hameln** என்ற சிறிய நகரில் இருந்து வருகிறேன். இந்த இடம் **Bagpiper** கதைக்குப் புகழ்பெற்றது. நீங்கள் உங்கள் பள்ளி நாட்களில் இந்தக் கதையைக் கேட்டிருக்கலாம்.

ஒரு Bagpiper ஒரு கிராமத்திலுள்ள எலிகளை ஒழிப்பதற்காக அங்கே வருகிறான். ஆனால் எலிகளை ஒழித்த பிறகு அவன் அந்தக் கிராமத்துத் தலைவனால் ஏமாற்றப்படுகிறான். கடைசியில் அந்த **Bagpiper** தன்னுடைய எல்லா குழந்தைகளையும் நதியில் தூக்கிப் போட்டுச் சாகடிக்கிறான்.

அந்தக் கிராமத்தின் பெயர் தான் **Hameln**-இந்த ஊர் இன்னமும் கிராமமாகவே இருக்கிறது.

எனவே இந்தக் கிராமத்தில் நீங்கள் கோதுமையால் செய்த எலியைப் பார்க்கலாம். நடைபாதைகளில் எலியின் படங்களைப் பார்க்கலாம். பேக் பைப்பர்கள் பலர் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக உலவுவதைப் பார்க்கலாம்.

நீங்கள் ஜெர்மனிக்கு வந்த போது இந்த ஊரைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன்.

அன்புடன்

குமரேசன்

-அருமையான கதை. பேக்பைப்பர் தனது குழந்தைகளை நதியில் தூக்கிப் போடும் போது எனக்கு நல்ல தங்காள் கதை ஞாபகம் வந்தது.

உலகில் எந்த மூலைக்குச் சென்றாலும் கிராமமும் கிராமத்து மக்களும் ஒன்று போலவே இருக்கின்றனர். வெங்கடேஷ் சொன்னார்... **Santa Fe**யில் ஒரு திருவிழாவில் மரக்கொம்பு ஒன்றின் மேல் உறி கட்டி கீழிருந்து மேலே ஏறுவதில் போட்டி நடக்குமாம். நம்மூர் மாரியம்மன் கோவில்களிலும் இதே விளையாட்டு உண்டல்லவா?

குமரேசன் சொல்வது போல் **Hameln** கிராமத்துக்கு நான் செல்லவில்லை. காரணம், என்னுடன் துணைக்கு வர ஆளில்லை. எல்லோருக்கும் அவரவர் வேலை அதிகம் இருந்தது. நானோ தனியாக சுற்றிப் பார்க்கும் அளவுக்கு விவரம் இல்லாதவன்.

பெர்லினில் ஜேம்ஸ், அலெக்ஸ், லீவி போன்ற மாணவ நண்பர்கள் கிடைக்காததும் ஒரு முக்கிய காரணம்.

'ஜப்பான் டிக்கட்'டில் ஸஸீமே என்ற பச்சை மீன் உணவு பற்றி எழுதியிருந்தேன் அல்லவா? அதைவிட ஒரு அற்புதமான உணவு மலேஷியாவில் கிடைக்கிறது என்கிறார் ஆண்ட்ரூஸ்.

''அது உணவு அல்ல. பழம். பெயர்-துரியான். பழங்களின் ராஜா என்று அழைக்கப்படும் பழம். பார்ப்பதற்கு கிட்டத்தட்ட ஒரு மினி சைஸ் பலாப்பழம் மாதிரி இருக்கும். ஆனால் முட்கள் இன்னும் கூர்மை. மலேஷிய விமான நிலையத்தினுள் இந்தப் பழத்தை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஏன் தெரியுமா?

இந்தப் பழத்தினொரு விசேஷமான அம்சம்-அதன் நாற்றம். இதை எங்குமே ஒளித்து வைக்க முடியாது. டாக்ஸிக்குள் நுழைந்த உடனேயே டிரைவர் கேட்டு விடுவார் 'நீங்கள் துரியான் சாப்பிட்டிருக்கிறீர்களா?' என்று. நாற்றம்தான் இந்தப் பழத்தின் பிரச்னை. என்றாலும் இதன் ருசி அலாதியானது. மருத்துவ குணம் கொண்டது.

இந்தப் பழத்தை நான் முதல் முதலாகப் பார்த்த போது பஸார் மலாமிலிருந்து (இரவு அங்காடி-ஒவ்வொரு வியாழக்கிழமையும்) ஓடி வந்து விட்டேன். என் நண்பர் இதை 'டாய்லட் பழம்' என்று குறிப்பிடுவார். ஒரு நாள் நான் இப்பழத்தின் ஒரு சிறு பகுதியை விலைக்கு வாங்கினேன். 5 **RM**. அதாவது, 100 ரூபாய். வீட்டுக்கு எடுத்துச் சென்று கண்களையும் மூக்கையும் மூடிக் கொண்டு ஒரு சிறு துண்டு எடுத்துச் சாப்பிட்டேன். பிறகு மேலும் ஒரு துண்டு. அவ்வளவு தான். குமட்டல் வருவது போல் உணர்ந்தேன். நிற்கவோ உட்காரவோ அல்லது படுக்கையில் சாயவோ முடியவில்லை. இதே போல் அரை மணி நேரம் தொடர்ந்தது. பிறகு கொட்டாவி விட வாயைத் திறந்த போதுதான் தெரிந்தது-வாயிலிருந்து நாற்றம். அந்த நாற்றம் என்னைக் கொன்று விடும்போலிருந்தது. கடைசி வரை குமட்டல் எடுக்கவில்லை.

அடுத்த அனுபவம், ஒரு பத்து நாட்கள் சென்று கிடைத்தது. ஆனால் இப்போது நான் அதனுடன் ஒரு சமரசத்துக்கு வந்து விட்டேன். **mee** சூப் என்கிற சீனத்து சூப்பை சாப்பிட்டு என் தொண்டையில் எரிச்சலாக இருந்தது. 'துரியான்' சாப்பிட்டதும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

பிறகு... இப்போதெல்லாம் ஒவ்வொரு வியாழன் அன்றும் துரியானை வாங்கி வந்து சாப்பிடாவிட்டால் உறக்கமே வருவதில்லை.

பல நோய்களுக்கு துரியான் நல்ல பலன் தரும். 'பழங்காலத்தில் சீனர்கள் துரியானுக்காக தங்கள் கப்பலையே விற்று விடுவதுண்டு' என்பார்கள். தமிழ்நாட்டில் கூட துரியான் உங்களுக்குக் கிடைக்கும்-மேட்டுப் பாளையத்தில் உள்ள அரசுப் பழத்தோட்டத்தில்.

- ஆண்ட்ரூஸ்.

துரியானைப் பற்றி ஆண்ட்ரூஸ் எழுதியிருப்பதைப் பார்த்தால் உடனடியாக அதைச் சாப்பிட்டுப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகிறது!

o
o oப்ளோரிடாவிலிருந்து ப்ரகாஷ்:

உங்களுடன் சில விஷயங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனத் தோன்றுகிறது. எனவே இந்தக் கடிதம்.

தமிழ்மொழி சிறிது சிறிதாக செத்துக் கொண்டிருக்கிறதோ என்று பயப்படுகிறேன். ஏனென்றால், இங்கே அமெரிக்காவில் என்னுடைய பல தமிழ் நண்பர்களுக்கு தமிழில் எழுதப் படிக்கத் தெரியவில்லை. ஆனால் நன்றாகப் பேசத் தெரிகிறது. நான் தமிழ் தினசரிகளையோ பத்திரிகைகளையோ படித்தால் வினோதமாகப் பார்க்கிறார்கள்.

நான் இங்கே பல்கலைக்கழக மாணவனாக இருக்கிறேன். ஆனால், அமெரிக்கர்கள் நம்மைவிட பல வகையிலும் திறமைசாலிகளாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. படிப்பிலும் அவர்கள் முன்னிலையில் இருக்கிறார்கள். எனக்குத் தோன்றுகிறது, நானும் அவர்களைப் போல் என் தாய் மொழியிலேயே ஆய்வுகளைச் செய்தால் இன்னும் செறிவாகச் செய்வேனோ என்று.

ஆங்கிலத்தை கற்றுக்கொள்வதற்கு இந்தியர்களாகிய நாம்தான் எவ்வளவு பிரயாசை எடுத்துக் கொள்கிறோம். காரணம், ஆங்கிலமே அறிவாளித்தனத்தின் குறியீடு! நாகரீகத்தின் சின்னம்! ஆனால் ஐரோப்பிய நாடுகளில் நிலமை வேறு விதமாக உள்ளது.

அவர்களுடைய தாய்மொழியில்தான் அவர்கள் கல்வி பெறுகிறார்கள். ஃப்ரான்ஸ், ஜெர்மனி அல்லது ஆசிய நாடுகளான ஜப்பான், சீனா போன்ற பல நாடுகள் இந்தியாவை விட பல மடங்கு முன்னணியில் நிற்கின்றன. காரணம்-அவர்களின் சொந்த மொழியில் கல்வி கற்கிறார்கள்.

ஆனால், நம்நாட்டில் தமிழ் மீடியத்தில் படிப்பவர்கள் மேல் படிப்புக்குச் செல்லும்போது பல்வேறு இன்னல்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆங்கில மீடியத்திலிருந்து வருபவர்களை விட பின்தங்க வேண்டியுள்ளது. இப்படியாக என்னுடைய மொழி என்னிடமிருந்து பறிக்கப்படுகிறது.

ஆங்கிலத்தை நான் எதிர்கொள்ளவில்லை. ஆனால் தாய் மொழியில் படித்தால் இன்னும் சிறக்க முடியும் என்கிறேன். இது நம்முடைய சிருஷ்டித்தன்மையுடன் (**creativity**) தொடர்புடையது. ஆங்கிலத்தில் பயிலும் எங்களைப் போன்ற மாணவர்களின் மூளையில் ஒரு இரட்டைச் செயல்பாடு நடக்கிறது. தமிழில் சிந்தித்து அதை ஆங்கிலத்துக்கு மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த இரட்டைச் செயல்பாடு அவசியமற்ற சோர்வை ஏற்படுத்துகிறது. இதைவிட தமிழிலேயே சிந்தித்து தமிழிலேயே ஆய்வுகளைச் செய்தால் நல்லது இல்லையா?

ஆனால் இப்போதைய நிலையில் தமிழில் பயில முடியுமா? பயின்றால் ஒரு மாணவன் அல்லது மாணவி ஓட்டப் பந்தயத்தின் கடைசியில்தானே வரக்கூடியதாக இருக்கிறது? தமிழுக்கு மட்டும் ஏன் இந்த கதி? தமிழில் பயின்றுவிட்டு ஒருவன் **IIT**யினுள் நுழைய முடியுமா? ஆங்கிலத்தில் பயின்று வந்தவர்களுடன் போட்டியிட முடியுமா?

இன்னமும் நம்மை ஆங்கிலேயர்தான் ஆண்டு கொண்டிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மிகவும் வேதனையாக இருக்கிறது. சென்னையில் நான் கட்டிடக்கலை மாணவனாக இருந்தபோது தமிழ் மீடியத்திலிருந்து வந்த இரண்டு மாணவர்கள் என்னுடன் படித்தார்கள். ஒருவன் மூன்றாம் ஆண்டில் படிப்பை விட்டு விட்டான். மற்றொருவன் எப்படியோ தட்டுத் தடுமாறி இரண்டாம் வகுப்பில் தேர்ச்சியடைந்தான். (பள்ளி இறுதியில் அவன் பள்ளியிலேயே முதல் மதிப்பெண் பெற்றவன்!) தேவையில்லாமல் இந்தியா இரண்டு வல்லுனர்கள் இழந்துவிட்டது.

தமிழை நாம் தொழில்நுட்ப ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் வளர்த்தெடுக்க வேண்டியுள்ளது. திரும்பவும் சொல்கிறேன், நான் ஆங்கிலத்துக்கு எதிரி அல்ல. நாம் ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்றுத் தேர்ந்து கொள்வோம்-ஆனால் பயிற்று மொழியாக அல்ல. ஆங்கிலத்தில் பயின்ற ஐ.ஐ.டி. மாணவர்கள் அனைவரும் இங்கே அமெரிக்காவுக்கு வந்து இந்த தேசத்துக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு அமெரிக்க ஆய்வறிக்கை சொல்கிறது-தொண்ணூறுகளில் இங்கே நடந்த பொருளாதார வளர்ச்சிக்குக் (**boom**) காரணம் இந்தியர்களே என்று. இதனால் பயன் பெற்றது அமெரிக்க மக்கள் தானே?

இதே நிலை தொடர்ந்து கொண்டிருக்கும்வரை நமது நாட்டின் வளர்ச்சி கேள்விக்குறிதான்! நமக்கு எல்லாத் தகுதியும் இருக்கிறது. நாம் ஏன் அடிமையாக இருக்க வேண்டும்?

பிரகாஷின் கடிதம் என்னை மிகவும் சிந்திக்க வைத்தது.

ஹுப்பர்ட்டால் காந்தன் கட்டிடக் கலை பயிலும் மாணவர். ஜெர்மனியில் கட்டிடக்கலை படிப்பே எல்லாவற்றிலும் ஆகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. நம்மூரில் மருத்துவம் மாதிரி. (நியாயம் தான், மூன்றாம் உலக நாடுகளில் குறை வளர்ச்சியும் பலவிதமான

பிணிகளும் மிக அதிக அளவில் காணப்படுவதில் என்ன ஆச்சரியம் இருக்க முடியும்? சமீபத்தில் வெங்கடேஷுடன் திண்டிவனத்திற்கு மாணவர் நிகழ்ச்சி ஒன்றுக்குச் சென்றிருந்தேன். எல்லோரும் மருத்துவப் படிப்பு, எஞ்சினியரிங் படிப்பு என்று பேசிக் கொண்டிருந்தனர். 'ஏழாம் எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கு ஏன் இதற்குள் அந்த கவலையெல்லாம்?' என்று வெங்கடேஷுடம் கேட்டேன். 'இந்தியாவின் ஏழ்மையை இப்படி நீங்கள் பரிகசிப்பதை நான் அனுமதிக்க மாட்டேன்' என்றார். 'என்ன விஷயம், ஒன்றும் புரியவில்லையே' என்றேன் அப்பாவியாக. உண்மையிலேயே அவர் சொன்னது எனக்கு விளங்கவில்லை. பிறகு தான் விஷயத்தை பிட்டு வைத்தார். அந்த மாணவ மாணவிகள் அனைவரும் ப்ளஸ் டூ முடித்தவர்களாம்! **Malnutrition**!)

சரி, போகட்டும். விஷயத்துக்கு வருகிறேன். காந்தன் உலகத்திலுள்ள பல பல்கலைக்கழகங்களின் கட்டிடக்கலை பேராசிரியர்களுடன் கடிதத் தொடர்பு வைத்திருந்தார். தாஜ்மகால், சீனத்துக்கு நெடுஞ்சுவர் போன்ற கட்டிடக்கலை அற்புதங்களைப் பார்க்க வேண்டும், ஆய்வு செய்ய வேண்டும் என்றெல்லாம் கனவுகள் கொண்டிருந்தார். அவருடன் பேசிக்கொண்டிருந்ததே அபூர்வமாக இருந்தது.

ஜேம்ஸ் மருத்துவ மாணவர். அவர் சில தகவல்களைச் சொன்னார். எந்தப் படிப்பாக இருந்தாலும் பயிற்று மொழி ஜெர்மன்தான். அதுமட்டுமல்ல; எவ்வளவு தூரம் மேற்படிப்பு படித்தாலும் தாய்மொழியையும் மற்றொரு மொழியையும் கட்டாயமாகப் பயின்றாக வேண்டும். ஜேம்ஸ் ஜெர்மன் மொழியும், லத்தீனும் படிக்கிறார்.

'லத்தீன்?'

'ஆமாம். மருத்துவப் படிப்புக்கு லத்தீன் மொழி அறிவு உபயோகமாக இருக்கும். மருத்துவத்திலுள்ள கலைச்சொற்களின் மூலம் லத்தீன் அல்லவா?'

ஆனால் இந்தியாவில் மொழிக்கல்வி என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதே இல்லை. யாருக்கும் ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியறிவும் தேவையில்லை. கல்லூரிகளில் மொழிப் பாடங்கள் ஏதோ உப்புக்குச் சப்பாணியாகத்தான் வைக்கப்பட்டுள்ளன. அதிலும் இளங்கலையில்-அதிலும் முதல் ஆண்டில் மட்டும்தான் மொழிப்பாடம். முதுகலையில் மொழிப்பாடமே கிடையாது. இதுவே இப்படியென்றால், மருத்துவம், தொழில்நுட்பம் துறைகளில் மொழிப்பாடம் என்றால் என்ன என்று கேட்கிற நிலை!

இப்படியாக தாய் மொழியில் ஞான சூன்யங்களாகவும், ஆங்கிலத்தில் அறை குறை அறிவுடனும் ஒரு இளைய சமுதாயத்தை இந்தியாவில் நாம் உருவாக்கியிருக்கிறோம்!

என்ன ஒரு ஆச்சரியம்! இந்தப் பக்கங்களை எழுதி விட்டு மின்னஞ்சலைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது சந்திரமதியின் கடிதம் சொல்கிறது-காந்தன்தான் என்னுடைய கஸின் என்று! உலகம் தான் எவ்வளவு சிறியதாகி விட்டது!

வனமே பூமியின் அரண்...

என் நண்பர் ஒருவர் திபெத் செல்ல இருக்கிறார். அதன் பொருட்டு திபெத் பற்றி பேசிக் கொண்டிருந்தோம். அதன் சுருக்கம்:

சில நாடுகளின் ஜனத்தொகை ஆச்சரியம் தருகிறது. அதில் ஒன்று திபெத். சென்னை நகரின் ஜனத்தொகை தான். 50 லட்சம்.

சீனா திபெத்தை தங்கள் நாட்டின் ஒரு பகுதி என்று சொன்னாலும் இரண்டு நாடுகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதே உண்மை. சுமார் அரை நூற்றாண்டாக திபெத் சீனாவின் ஆக்கிரமிப்பில் இருந்தாலும் இதை உலக நாடுகள் கண்டு கொள்ளாததன் காரணம் எனக்கு விளங்கவில்லை.

இப்போது சுமார் 1,30,000 திபெத்தியர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். ஒரு நாள் திபெத் விடுதலையடையும்; தலாய் லாமா திபெத்துக்குத் திரும்புவார் என்பது இவர்களின் கனவு.

ஆனால் இவர்களின் கனவு நனவாகும் சாத்தியமே இல்லை என்று தான் தோன்றுகிறது. காரணங்கள் பல-திபெத் இப்போது பழைய திபெத்தாக இல்லை.

பழைய திபெத் எப்படி இருந்தது?

வாழ்விலிருந்து மிகவும் அந்நியப்பட்டுக் கிடந்தது. எங்கு பார்த்தாலும் கொடூரமான வறுமை. ஆனால் தலாய் லாமாவோ இது பற்றி எள்ளளவும் கவலையின்றி **Potala** அரண்மனையில் 'ஓம் மணி பத்மே ஹும்' என்ற மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருந்தார்.

(இன்றைக்கும் இந்த வாசகம் எழுதப்படாத சுவர்களே திபெத்தில் இல்லை என்று சொல்லி விடலாம். இதன் பொருள்-தாமரைக்குள் இருக்கும் ரத்தினத்துக்கு வணக்கம். தாமரை, ரத்தினம் என்ற வார்த்தைகளுக்கெல்லாம் விரிவான தத்துவார்த்தமான விளக்கங்கள் உண்டு)

மக்களின் மத நம்பிக்கையும் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்குத் தீவிரமாக இருந்தது. லௌகீக வாழ்வை முற்றாக மறுதலிப்பதாக இருந்தது. திபெத்தை சீனா ஆக்கிரமித்ததற்கும் இதுவே பிரதான காரணம் என்று சொல்லலாம்.

குழந்தைகளை மூன்று வயதிலேயே மடாலயங்களில் கொண்டு போய் சேர்த்து விட்டனர் பெற்றோர். அது தான் குழந்தைகளின் மீது தாங்கள் கொண்டுள்ள அளப்பரிய அன்பின் அடையாளமென நம்பினர். இதன் காரணமாக மடாலயங்களில் மதகுருமார்களால் சிறுவர்கள் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். இதற்குப் பல பிட்சுகள் இன்றளவும் சாட்சியாய் உள்ளனர்.

திபெத்தியர்களின் மத நம்பிக்கைக்கு உதாரணமாக ஒரு சம்பவம்: மேற்கத்திய நாட்டைச் சேர்ந்த ஒரு பயணி கிழக்கு திபெத்தில் 14,000 அடி உயரத்தில் மோட்டார் பைக்கில்

சென்று கொண்டிருந்தபோது இரண்டு உருவங்களின் மீது பைக்கை ஏற்றியிருப்பாராம். சடாரென்று பைக்கை நிறுத்திப் பார்த்தபோது-இரண்டு பிட்சுகள்! என்ன விஷயம் என்று விசாரித்தபோது அவர்கள் சொன்னது: இங்கிருந்து லாசாவுக்கு உருண்டபடியே சென்று கொண்டிருக்கிறோம்.

அந்த இடத்திலிருந்து லாசா 1000 மைல். உருண்டபடியே சென்றால் லாசா போய்ச்சேர இரண்டு வருடங்கள் ஆகும்!

ஆனால், 'எது எப்படியிருந்தாலும் எங்கள் நாட்டின் மீது கால் வைக்க உங்களுக்கு உரிமை கிடையாது' என்று சொல்கிறார்கள் திபெத்திய மக்கள். சீனாவை அவர்கள் அந்நிய தேசமாகவே கருதுகின்றனர். காரணம்-இரண்டு நாடுகளுக்குமான வரலாறு அப்படிப்பட்டது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாகவே சீனாவுக்கும் திபெத்துக்கும் போர் நடந்துள்ளது.

சீனர்களுக்கும் திபெத்தியர்களுக்கும் ஆரம்பத்திலிருந்தே ஆகாது. திபெத்தியர்கள்-சோம்பேறிகள், மூடநம்பிக்கை கொண்டவர்கள், அழுக்கானவர்கள் என்பது சீனர்களின் கருத்து. சீனர்கள்-கொடூரமானவர்கள், பணத்தாசை பிடித்தவர்கள் என்பது திபெத்தியர்களின் கருத்து.

(சீனாவின் 'புகழ்பெற்ற' கலாச்சாரப் புரட்சியின் போது பத்து லட்சம் திபெத்தியர் சீன ராணுவத்தால் கொல்லப்பட்டனர் - திபெத்தின் மக்கள் தொகையை நினைவு கூர்க - ஆறாயிரம் மடாலயங்கள் அழிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் சிறையில் தள்ளப்பட்டனர். நூற்றுக்கணக்கான பேர் காணாமல் போயினர்.)

சீனாவையும் திபெத்தையும் அரசியல் ரீதியாக இணைத்து விடலாம் என்று திட்டமிட்டு சீன அரசு சீனர்களை திபெத்தில் குடியமர்த்தியது. ஆனால் என்ன துரதிர்ஷ்டம்! ஒரே வருடத்தில் அத்தனை சீனர்களும் தாயகத்துக்கு ஓடி வந்து விட்டனர். காரணம் - அந்த உயரமும் குளிரும் சீனர்களுக்கு ஒத்துக்கொள்ளவில்லை.

வெளிநாட்டுப் பயணிகளுக்காக சீன அரசு வெளியிட்டுக் கொண்டிருக்கும் திபெத் பற்றிய நூற்றுக்கணக்கான துண்டுப் பிரசுரங்களில் திபெத் ஒரு சொர்க்க பூமியாகக் காட்டப்பட்டுள்ளது. உண்மை தான். திபெத்தை உலகின் இரண்டாவது சுவிட்ஸர்லாந்து என்று நிச்சயமாகவே சொல்லலாம். அந்த அளவுக்கு இயற்கை தனது பூரண சௌந்தர்யத்துடன் இந்தப் பூமியில் தரிசனம் தருகிறது. ஆனால் மனிதர்கள் சும்மா இருப்பார்களா?

மனித வாழ்வின் அத்தனை அவலத்தையும் இங்கே ஒருவர் காண முடியும். லாசாவின் தெருக்களில் விபச்சாரம் கொடிகட்டிப் பறக்கிறது. சிறுவர் சிறுமியர் கூட இதற்கு விதி விலக்கில்லை.ரே, நைட் கிளப் எதற்கும் பஞ்சமில்லை. கிராமப் புறங்களில் சாலை வசதிகள் கிடையாது.

இயற்கையின் உச்சகட்ட அழகைக் கொண்டுள்ள இந்தப் பூமியில் டாய்லட் செல்வதற்குக் கூட தண்ணீர் வசதியை அரசு நிர்வாகம் செய்து கொடுக்கவில்லை. மொத்தத்தில் முன்னூறு ஆண்டுகள் பின்தங்கிக் கிடக்கிறது திபெத்.

முடித்து விட்டு என் நண்பரிடம் சொன்னேன் - உண்மையான திபெத்தை நீங்கள் பார்க்க வேண்டுமானால் லாஸாவை விட்டு மேலே செல்லுங்கள்.

மேலும், சந்தர்ப்பம் இருந்தால் லாஸாவின் கிழக்குப் பக்கம் பயணம் செய்யுங்கள். **Sichuan** மாநிலம் வரும். அங்கே **Chengdu** மடாலயம் உள்ளது. அந்த மடாலயத்தில் ஒரு அதிசயத்தைக் காணலாம்-ஒரு பிட்சுவின் வடிவில். முப்பது ஆண்டுகள் ஒரு குகையில் எவ்வித ஆகாரமுமின்றி தவமிருந்து இப்போது தான் வெளியே வந்துள்ளார் அந்த பிட்சு. அவரை தரிசிப்பதற்கு சீனாவிலிருந்து கூட மக்கள் வந்து கொண்டிருக்கிறார்கள்! சீன அரசு உங்களை அனுமதித்தால் அவரைச் சென்று பாருங்கள் என்றேன் என் நண்பரிடம். காரணம்-அவர் சீன அரசின் விருந்தினராகச் செல்கிறார்!

சீனாவைப் பற்றி யோசிக்கும் போது மற்றொரு விஷயம் ஞாபகம் வருகிறது - இன்றைய கால்பந்தாட்டத்தின் ஆதாரம் சீனாவில் பண்டைய காலத்தில் விளையாடிய **Cu Ju** ஆட்டம் தான் என்கிறார்கள். இன்றும் இந்த ஆட்டம் சீனாவில் உண்டு.

சீனாவுக்கும் ஹாங்காங்குக்கும் இடையில் **Long Valley** என்ற இடம் உள்ளது. இங்குள்ள ஈரமான நிலப்பகுதியின் காரணமாக 220 வகை பறவையினங்கள் இங்கே வாழ்ந்து வருகின்றன. உலகிலுள்ள ஆர்னிதாலஜிஸ்டுகளின் முக்கியத் தலங்களுள் இதுவும் ஒன்று. இந்த இடத்தில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ரயில் பாதை ஒன்றைக் கட்டுவதற்கு ஹாங்காங் அரசு முடிவெடுத்தது.

இதை எதிர்த்து குரல் கொடுத்தார் **Carrie Ma** என்ற பெண்மணி. இங்கே வாழும் இருநூறுக்கும் மேற்பட்ட அரிய வகைப் பறவையினங்கள் அழிந்து விடும் என்று உலகுக்குச் சொன்னார். உலகம் முழுவதுமிருந்து அவருக்கு ஆதரவு கிடைத்தது. ஆச்சரியப்படும் விதத்தில் ஹாங்காங் அரசு அந்த ரயில் திட்டத்தை கை விட்டது.

உலகில் பெருமளவில் பறவையினங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன. முக்கியமான காரணங்கள் -வளர்ச்சிப் பணிகள், காடுகளை அழித்தல் போன்றன. இது மிகவும் கவலைக்குரிய விஷயம்.

பறவைகளை கவனித்தல் என்பது ஏதோ ஒரு ஹாபி என்றே பலரும் கருதி வருகின்றனர். தவறு. பறவைகள் அழிந்தால் பூமி அழியும். நாமும் அழிவோம்.

காடுகளின் பெருக்கத்திற்கு பறவைகளே முக்கியக் காரணம். பற்பல அரிய வகை மரங்களின் விதைகளை பறவைகளே எச்சமிட்டு பரப்புகின்றன.

வனங்களின் வளர்ச்சி பறவைகளைப் பொறுத்தே அமைகிறது. வனமே பூமியின் அரண்...

அர்த்த நாரீஸ்வரர்

சென்ற வாரத்தில் ஒரு நாள் வெங்கடேஷ் அழைத்திருந்ததால் பாண்டிச்சேரி சென்றிருந்தேன். மாஸ் ஹோட்டலில் வழக்கமான நேரத்தில்-இரவு எட்டரை மணிக்குக் கூடினோம். கிளப் மெம்பர்கள் அனைவரும் ஆஜர்-டாக்டர் வைத்தி, கிருஷ்ணமூர்த்தி, ஆரோவில் ஆசிரியர் செந்தில், நீதிபதி, நான், வெங்கடேஷ்.

வெங்கடேஷ் வழக்கம்போல் ''என்னென்ன... சொல்லுங்கள்'' என்று மும்முரமாக ஆரம்பித்தார். நிலைமை வழக்கம்போல் இருந்திருந்தால் எனக்கு ப்ளடி மாரி, வெங்கடேஷ்-பக்கார்டி, நீதிபதி-ஜின் வித் லெமனேட், செந்தில்-காக்டெய்ல், கிருஷ்ணமூர்த்தி-பியர், டாக்டர்-**Fanta** என்று ஆர்டர் கொடுத்திருப்போம்.

'ஆனால் ஒரு பிரச்னை இருக்கிறது' என்று சொல்லிக்கொண்டே முன்னால் வந்தேன். ''அதாவது-இப்போதெல்லாம் எல்லாவற்றையுமே கோணல் பக்கங்களில் எழுதிவருவதால் இந்தப் பார்ட்டியைப்பற்றியும் எழுதியாகவேண்டும். அப்படி எழுதினால் இந்த அமுத பானங்களைப் பற்றியும் எழுத வேண்டியிருக்கும்''

''எழுது'' என்றார் செந்தில்.

''அங்கு தானே பிரச்னை.. என் வாசகர்கள் அதைத் தடை செய்திருக்கிறார்களே.. எழுத முடியாதே!''

''அப்படியானால்?''

''அதனாலென்ன? இன்றைய தினம் நான் ஆர்டர் கொடுக்கிறேன். பாருங்கள்'' என்று சொல்லி விட்டு 'பேரரை' அழைத்தேன்.

எனக்கு ப்ளடி மாரிக்கு பதிலாக தக்காளி ஜூஸ், வெங்கடேஷுக்கு கோக், நீதிபதிக்கு லைம் ஜூஸ், கிருஷ்ணமூர்த்திக்கு பியருக்கு பதிலாக காளிமார்க் சோடா, செந்திலுக்கு கோக், பெப்ஸி, ஃபாண்டா மூன்றும் (மூன்றையும் அவர் கலக்கிக் குடித்துக் கொள்ள வேண்டியது), டாக்டருக்கு- அவர் நல்ல நாளிலேயே ஃபாண்டாதான் என்பதால் இன்று வெறும் மினரல் வாட்டர்!

பேரர் திகைத்தார்!

வெங்கடேஷ் அவரிடம் ஆட்காட்டி விரலை வாயில் வைத்து 'பேசாமல் எடுத்து வா' என்று சைகை செய்தார்.

அப்போது நான் சொன்னேன்.. ''என்னுடைய புனைபெயரான சாருநிவேதிதா என்ற பெயரில் இனிமேல் எழுதப்போவத்தில்லை. பழைய பெயரான முனியாண்டி என்ற பெயரிலேயே எழுதப்போகிறேன்''

''ஏன்?''

''நாலைந்து பெண் கவிஞர்கள் பேட்டி கொடுத்திருக்கிறார்கள்-ஆண்கள் பெண்ணின் பெயரில் எழுதுவது வரலாற்று மோசடி என்று. எனக்கு அந்த மாதிரி மோசடி எண்ணமெல்லாம் கிடையாது என்பதால்...''

''நோ.. நோ... தப்பு தப்பு... சி.ஜே.யுங் என்ன சொல்கிறார் என்றால்...'' என்று டாக்டர் வைத்தி ஆரம்பித்தார்.

''அது யார் யுங்? கொரியா ஸாக்கர் ப்ளேயரா?''-இது கிருஷ்ணமூர்த்தி.

ஸாக்கர் ப்ளேயரும் இல்லை; பேட்மிண்டன் ப்ளேயரும் இல்லை. சி.ஜே.யுங்-**Carl Gustav Jung** என்பவர் ஸ்விட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு புகழ்பெற்ற உளவியலாளர்.மனம் என்பது இரண்டு **Sexual archetypes** ஐ உள்ளடக்கியது என்கிறார் அவர். (டாக்டர் வைத்தி ஒரு ஸைக்கியாட்ரிஸ்ட். ஆனால் தமிழ் அவ்வளவாக வராது. **Sexual archetypes** என்பதை பாலியல் மூலப்படிவங்கள் என்று தமிழ்ப்படுத்துகிறேன் நான். பிறகு வைத்தி தொடர்கிறார்.)ஒன்று-உணர்வுகளை உருவாக்கக் கூடிய **Eros** என்கிற பெண் தன்மை; மற்றொன்று-**Reason** ஐ உருவாக்கக் கூடிய **logos**. (மிகவும் எளிமைப்படுத்தி அன்பு, அறிவு என்று சொல்லலாமா?) யுங் சொல்வதன் விசேஷம் என்னவென்றால், இந்த இரண்டு தன்மையுமே ஒரு பெண்ணிடமும் இருக்கும்; ஆணிடமும் இருக்கும் என்பதுதான்.

ஆனால் ஆணிடம் உள்ள பெண் தன்மை உள்ளுக்குள்ளேயே அமுக்கப்பட்டு விடுகிறது. சிறுவயதிலிருந்தே சமூகக் கட்டுப்பாடுகள் என்ற பெயரில் மிகக் கடுமையான முறையில் அடக்கப்பட்டு விடுகிறது. உதாரணமாக,ஒரு சிறுவன் அவனுக்கு விருப்பம் இருந்தால் கூட பெண்ணின் பொருள்களை உபயோகித்து விடக்கூடாது. (ஒரு சிறுவன் தன் சகோதரியின் ஆடையை அணிந்து பார்த்துவிட முடியுமா, சொல்லுங்கள்..)

ஒரு சிறுவன் இப்படிப்பட்ட விருப்பங்களின்றி ஆணாகவே வளர்ந்தால் அவனது வளர்ச்சியை நார்மல் என்கிறோம். ஆனால், யுங், இது நார்மல் அல்ல என்கிறார். இப்படி வளரும் ஒரு ஆண் தன்னால் அடக்கப்பட்டு உள்ளே அமுக்கி வைக்கப்பட்ட பெண் தன்மைகளையே மற்ற பெண்களின் மீது திணிக்கிறான் என்கிறார்.

(ஆக, ஈவ் டீஸிங் செய்பவர்கள் அப்நார்மல் ஆசாமிகள் என்பதோடு மட்டுமல்ல; தன்னால் இயலாதது-தன்னால் தனக்குள் அடக்கி வைக்கப்பட்ட ஒன்று, இதோ என் கண்ணேதிரே முழு உருவமாய் நிற்கிறது-எனவே அதை 'அழிக்க' முனைகிறேன்-என்று கிளம்புகிறான்)

அதாவது, பெண்ணை ஒரு தனித்துவமான ஜீவியாகப் பார்க்காமல் தன்னுடைய-ஆணுடைய-நீட்சியாகவே (**Projection**) பார்க்கிறான். இதுவே ஆண்-பெண் உறவுச் சிக்கல்களின் அடிப்படைக் காரணம்.

எனவே ஒரு ஆண், பெண்ணின் சட்டையை அணிந்து கொண்டால் அதுதான் இயல்பானது-அவனை முழுமையான ஆணாக மாற்றுகிறது. ஒரு ஆணிடம் பெண் தன்மையும் கலந்திருந்தால்தான் அவனை முழுமையான ஆணென்று சொல்ல முடியும். இந்தக் கலவையை **harmony** என்கிறார் யுங். இந்த **harmony** இல்லாத ஆண்கள் அரை மனிதர்கள். மட்டுமல்லாமல் அவர்கள் இரட்டை வாழ்க்கை வாழ்பவர்கள்.

-என்று நீண்டதொரு விரிவுரை ஆற்றி முடித்தார் டாக்டர்.

''அப்படியானால் சாரு காதில் அணிந்திருக்கும் வளையத்திற்கு இவ்வளவு பெரிய விளக்கம் இருக்கிறதா?'' என்றார் கிருஷ்ணமூர்த்தி. அப்போது குறுக்கிட்ட நீதிபதி ''இதுதான் நம்முடைய தத்துவத்தில் கூட இருக்கிறதே.. அர்த்த நாரீஸ்வரர்'' என்று

சொன்னவுடனேயே கிருஷ்ணமூர்த்தி எழுந்து நின்றார். அடுத்ததாக அர்த்த நாரீஸ்வரர் பற்றி நீதிபதி ஒரு லெக்சர் அடித்து விடப் போகிறாரோ என்று அவருக்கு பயம்.

மணி பத்து தான் ஆகியிருந்தது. பொதுவாக நாங்கள் கிளம்பும் நேரம் இரவு இரண்டு மணி.

வெளியே வந்தபோது கிருஷ்ணமூர்த்தி வெங்கடேஷிடம் சொன்னார்... ''பிர்தர் (அவர் அப்படித்தான் அழைப்பது வழக்கம்) நம்முடைய கிளப்பை கலைத்து விடலாம் என்று தோன்றுகிறது...''

வாசகர் கடிதங்கள் மிகவும் உற்சாகமளிப்பதாக உள்ளன. இதுவரை ஆஸ்திரேலியாவிலிருந்து கடிதமே இல்லையே என்கிற விசனத்தில் இருந்தேன். இதோ கேங்ரூவின் தேசத்திலிருந்து வந்த முதல் கடிதம்:

டியர் சாருநிவேதிதா, என் பெயர் செல்வி ரஞ்சன். நான் என் கணவருடனும் மூன்று வயது மகளுடனும் ஆஸ்திரேலியாவில் வசிக்கிறேன். I am addicted to கோணல் பக்கங்கள் (இதை எப்படி மொழிபெயர்ப்பதென்று தெரியவில்லை) A to Z அதைப் படித்து விடுகிறேன். இங்கே ஈழத்தமிழர்கள்தான் தமிழன் மீது மிகுந்த ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர். நான்கு வயதிலேயே அவர்களின் குழந்தைகள் தேவாரமும் திருப்புகழும் படிக்க ஆரம்பித்துவிடுகின்றனர். ஈழத்தமிழர்கள் தான் 24 மணி நேர ரேடியோ சேனலும் வைத்துள்ளனர். சிட்னியில் அவர்கள் கட்டிய முருகன் கோவில் உள்ளது. தமிழ்நாட்டுத் தமிழர்களாகிய நாம் தமிழை கொஞ்சம் கொஞ்சமாக மறந்து வருகிறோமோ என்று தோன்றுகிறது. கோணல் பக்கங்களுக்கு என் வாழ்த்துக்கள். அன்புடன், செல்வி ரஞ்சன்.

என் பிரார்த்தனை பலித்தது...

சில மாதங்களுக்கு முன்பு சென்னை மியூசியத்திலுள்ள திறந்தவெளி அரங்கில் நிகழ்ந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தேன். வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை முதல் முறையாக அப்போதுதான் பார்க்கிறேன். அதுவரை கேள்விப்பட்டதோடு சரி. காரணம், நான் பிறந்து வளர்ந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் வில்லுப்பாட்டு கிடையாது. அது திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு கலை.

வில்லு, வில்லுப்பாட்டு, வில்லடி, வில்லடிப்பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்று பலவிதமாக அழைக்கப்படும் இக்கலை வடிவம் பற்றி நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட விறலிவிடு தூதிலும், முன்னூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட முக்கூடற்பள்ளிலும் குறிப்புகள் உள்ளன.

முதலில் அண்ணாவி பாடுகிறார். மற்றவர்கள் இசைக் கருவிகளை (உடுக்கை, தாளம், கட்டை) வாசிக்கிறார்கள். அண்ணாவி பாடி முடித்ததும் இவர்கள் பாடத் தொடங்குகின்றனர்.

முன்பு வில்லுப்பாட்டு பாடுவதற்கு பெண்கள் அனுமதிக்கப்படவில்லை. ஆனால், இப்போது பெரும்பாலும் பெண்கள்தான். நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியிலும் வேலவன் சங்கீதா தம்பதியினர் தான் பாடினர். வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் பாடப்படும் கதை-முத்துப்பட்டன் கதை. முத்துப்பட்டன் ஒரு பிராமணன். ஏழு சகோதரர்களில் கடைசியாகப் பிறந்தவன். தனது ஊரான ஆர்யநாட்டை விட்டு வேலை

தேடி கொட்டாரக்கரை என்ற ஊருக்கு வருகிறான் முத்துப்பட்டன். வேலையும் கிடைக்கிறது. ஆனால் அவன் சகோதரர்கள் வந்து அவனைத் திரும்பவும் ஊருக்கே வந்துவிடச் சொல்கின்றனர். வழியில் முத்துப்பட்டன் ஒரு தடாகத்தில் முகம் கழுவிக் கொண்டிருக்கும் போது இரண்டு சக்கிலியப் பெண்களின் பாடலைக் கேட்கிறான். அவர்களிடம் மனம் பறிகொடுத்து 'அவர்களைத்தான் திருமணம் செய்து கொள்வேன்' என்று சகோதரர்களிடம் கூறுகிறான். மிரண்டு போகும் அவர்கள் அவனை விட்டுவிட்டு ஊருக்குத் திரும்பி விடுகிறார்கள். முத்துப்பட்டன் அப்பெண்களின் தந்தை பகடையைச் சந்திக்கிறான். முதலில் மறுத்துவிடும் அவர், முத்துப்பட்டன் தீவிரமாக இருப்பதைக் கண்டு மனமிரங்கி வருகிறார். திருமணத்திற்கு ஒரு நிபந்தனை விதிக்கிறார்.

முத்துப்பட்டன் தன் சாதியைப் புறக்கணிக்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இதற்கு ஒப்புக்கொள்ளும் முத்துப்பட்டன் ஆர்யநாட்டுக்குத் திரும்பி வந்து தன் சுற்றத்தாரிடம் விஷயத்தைக் கூறுகிறான். அவர்கள் அவனை ஒரு வீட்டில் போட்டுப் பூட்டி விடுகிறார்கள். ஆனால் முத்துப்பட்டன் சாதுர்யமாக அங்கிருந்து தப்பி பகடையிடம் வந்து சேர்கிறான்.

தன் குடுமியையும் யக்ஞோபவீதத்தையும் அறுத்துவிட்டு பகடையுடன் சக்கிலியனாகவே நாற்பது தினங்கள் வாழ்ந்து காண்பிக்கிறான் முத்துப்பட்டன். இதைக் கண்டு திருப்தியுறும் பகடை முத்துப்பட்டனுக்கு தன் புத்திரிகள் இருவரையும் மணமுடித்து வைக்க ஏற்பாடுகளைச் செய்கிறான். அப்போது பகடையின் கால்நடைகளை கள்வர்கள் திருடிச் சென்றுவிட்டனர் என்ற செய்தி வருகிறது. முத்துப்பட்டன் சண்டைக்குச் சென்று திருடர்களை விரட்டியடித்து கால்நடைகளை மீட்டு வருகிறான்.

சண்டை முடிந்து ஒரு குளக்கரையில் அமர்ந்து தனது உடலிலிருக்கும் ரத்தக் கறைகளை சுத்தம் செய்து கொண்டிருக்கும் முத்துப்பட்டனை கள்வன் ஒருவன் மறைந்திருந்து முதுகில் குத்தி விடுகிறான்.

முத்துப்பட்டனின் நாய் மட்டும் தன் எஜமானன் இல்லாமல் வீட்டுக்குத் திரும்பி வருகிறது. சக்கிலியர்கள் முத்துப்பட்டனின் மரணத்தைத் தெரிந்துகொள்கிறார்கள். பகடையின் இரண்டு பெண்களும் முத்துப்பட்டனுடன் உடன்கட்டை ஏறுகின்றனர்.

முத்துப்பட்டனுக்கு அக்கிராமத்தில் கோவில் கட்டப்படுகிறது. இரண்டு பக்கமும் அவனது இரண்டு மனவியர். கீழே அவனுடைய இரண்டு நாய்கள். கோவிலின் பெயர் பட்டவராயன் கோவில். மனைவியரின் பெயர்-பொம்மக்கா, திம்மக்கா.

வில்லுப்பாட்டின் முக்கிய இசைக்கருவிகள் வில்லைத் தவிர கடமும் உடுக்கையும். எப்படி விவரிப்பது என்றே எனக்கு விளங்கவில்லை. ஒரே வார்த்தையில் சொன்னால்-க்ஷசூபீஹஷட். கடமும் உடுக்கையும் தூள் பரத்தியது என்று சொல்லலாம். பார்வையாளர்கள் பலரும் எழுந்து ஆட ஆரம்பித்து விட்டனர். மண்ணில் புரண்டு விழுந்து எழுந்து ஆடுகின்றனர். எங்கும் தூசுப்படலம். வெறிகொண்ட ஆட்டம். 'நீங்களும் ஆடுங்கள்' என்று எல்லோரும் என்னிடம் சொல்கின்றனர். நான்தான் அன்றைய நிகழ்ச்சியின் பிரதம விருந்தாளி. 'பிரதம விருந்தாளியே ஆடினால் என்ன ஒரு அட்டகாசம்!' என்கிறார் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த என் நண்பர் எம்.டி.முத்துக்குமாரசாமி. எனக்கோ உள்ளுக்குள் கிடந்து பேயாட்டம் போடுகிறது வெறி. ஆனால் கொஞ்சமேனும் தாகசாந்தி செய்யாமல் பூசாரி ஆடமாட்டார்.

இவ்வளவு கொண்டாட்டத்துடன் கூடிய-நாடி நரம்பையெல்லாம் துடிதுடிக்கச் செய்து வெறியாட்டம் போட வைக்கிற ஒரு இசைக்கூத்தைப் பார்ப்பது வெகு அபூர்வம் என்றே தோன்றியது!

இதை எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய தினம் 21-6-2002. காலை நேரம். தொடர்ந்து தொலைபேசி மணி ஒலித்தவண்ணம் இருக்கிறது. நண்பர்கள் ஒவ்வொருவராக அழைத்து பிரார்த்தனை செய்து கொள்கின்றனர்-ப்ரஸீல் வெல்ல வேண்டும்.

திடீரென்று சுபாவின் ஞாபகம் தொற்றுகிறது. இன்று வந்த மின்னஞ்சலில் சொல்கிறார். ''நான் ஒன்றும் இங்கிலாந்துக் குடிமகள் அல்ல. கும்பகோணத்தில் பிறந்த தமிழ் மகள். லண்டனிலிருந்து ஒரு மணி தூரத்திலுள்ள **Bracknell** என்ற ஊரில் வசிக்கிறேன்.''

ஆனாலும் இந்தத் தமிழ் மகள் அர்ஜென்டினாவின் தோல்வியையும் இங்கிலாந்தின் வெற்றியையும் எப்படி அவ்வளவு குதூகலமாகக் கொண்டாடினார்? விளக்கம் மின்னஞ்சலில் இருக்கிறது. இங்கிலாந்தின் கால்பந்து ரசனையும் பிரார்த்தனையும் இவரையும் தொற்றிக் கொண்டு விட்டதாம்.

ப்ரஸீல் - இங்கிலாந்து. உலகமே எதிர்பார்த்த இன்றைய ஆட்டம். ஆட்டமா அது? நெஞ்சில் கை வைத்தபடியேதான் பார்த்தேன். முதல் கோலை இங்கிலாந்தின் மைக்கேல் ஓவன் போட்டார். படு மட்டமான ஒரு கோல். யார் போட்டிருந்தாலும் நிச்சயமாக ரசிக்கக் கூடிய கோலே இல்லை. லூஸியோவின் அஜாக்கிரதையினால் விழுந்த ஒரு கோல் கொண்டாடக் கூடியதா என்ன?

என் மனம் உடைந்து போனது. நாற்பத்தைந்தாவது நிமிடம். என்னால் உட்கார்ந்து பார்க்கவே முடியவில்லை. எழுந்து வீட்டுக்கு வெளியே போய் இரண்டு நிமிடம் கண் கலங்க நிற்கிறேன். ப்ரஸீல் இங்கிலாந்திடம் தோற்கலாமா? தோற்க முடியுமா? கால்பந்தாட்டத்தை ஒரு அற்புதக் கலையாக மாற்றிவிட்ட ப்ரஸீலை இவ்வளவு சுலபமாக வீழ்த்திவிட முடியுமா? என்ன செய்வதென்று புரியாமல் பதற்றத்துடன் திரும்பவும் உள்ளே வருகிறேன். அடிஷனல் நேரம் இரண்டு நிமிடம். சரியாக நாற்பத்தேழாவது நிமிடம் ரொனால்தீன்யோ புயலைப் போல் கொண்டுவந்து கொடுத்த பந்தை ரிவால்தோ கண்ணிமைக்கும் நேரத்தில் வாங்கி உள்ளே தள்ளினார்.

அப்போதுதான் எனக்கு உயிர் வந்தது. இடைவேளை நேரம் முடிந்த பிறகு ரொனால்தீன்யோ அடித்த ஃப்ரீ கிக் அற்புதமான உயரத்தில் பறந்து சென்று நம்ப முடியாத விதத்தில் வலைக்குள் விழுந்தது. ஆனால் சிறிது நேரத்திலேயே இங்கிலாந்து அணியில் பனிரெண்டு பேர் (நடுவரையும் சேர்த்து), ப்ரஸீல் அணியில் பத்து பேர் என்று ஏடாகூடமாகிப் போனது எண்ணிக்கை. எந்தத் தவறும் செய்யாத ரொனால்தீன்யோவை சிவப்பு அட்டை காண்பித்து வெளியே துரத்தி விட்டார் நடுவர். ரொனால்தீன்யோ இனி அடுத்த ஆட்டத்திலும் ஆட முடியாது.

ஆறு கோல்களை வாங்கியிருக்க வேண்டிய இங்கிலாந்து அணி அதனோடு நடுவரும் சேர்ந்துகொண்டதால் ஓரளவு தப்பியது.

எப்படியோ என் பிரார்த்தனை பலித்தது... கடவுளுக்கு நன்றி! இனி ப்ரஸீல் அணி உலகக் கோப்பையை வெல்லாவிட்டாலும் பரவாயில்லை. கலைஞர்களுக்கு வெற்றி தோல்வியா முக்கியம்?

நான் எழுதுவது அறநூல் அல்ல

The Arts Foundation of Michigan என்ற இலக்கிய அமைப்பிலிருந்து **Sulfur** என்ற பத்திரிகை வந்து கொண்டிருந்தது - பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னால். எனக்கு மிகவும் பிடித்த சிறுபத்திரிகை என்று சொன்னால் அதைத் தான் குறிப்பிடுவேன். இப்போதும் வந்து கொண்டிருக்கிறதா என்று தெரியவில்லை. அதன் முகவரி: AFM, 542 New Centre Building, 7430 Second, Detroit, MI 48202. லத்தீன் அமெரிக்க இலக்கியத்தை எனக்கு அறிமுகப்படுத்திய சஞ்சிகைகளில் ஒன்று - **Sulfur.**

அந்தக் காலக்கட்டத்தில் நான் சில லத்தீன் அமெரிக்க சிறு கதைகளை தமிழில் மொழி பெயர்த்தேன். (இவ்வளவு காலம் கழித்து இப்போது தான் நூல் வடிவில் வர உள்ளது) இக்கதைகளோடு **The Fall** என்ற கதையையும் மொழிபெயர்க்க ஆசைப்பட்டேன். ஆனாலும், தைரியமில்லாததால் விட்டுவிட வேண்டியிருந்தது. ஸல்மான் ருஷ்டிக்குக் கொடுக்கப்பட்டிருப்பது போல் போதுமான அளவுக்கு அரசாங்கப் பாதுகாப்பு அளிக்கப்பட்டால் மட்டுமே அக்கதையை தமிழில் மொழி பெயர்க்க முடியும். கன்னி மேரியைப் பற்றிய புரட்சிகரமான ஒரு கதை அது.

எழுதியவர் உருகுவாயைச் சேர்ந்த **Armonia Somers** என்ற பெண்மணி. இவர் உருகுவாயிலேயே அதிகம் அறியப்படாதவர். ஒரு ஆசிரியை. இவரது சிறுகதைகள் அனைத்தும் புகழ்பெற்ற லத்தீன் அமெரிக்க விமர்சகர் **Angel Rama**வினால் 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. ஸோமர்ஸின் எழுத்து ஸர்ரியலிசத் தன்மை வாய்ந்தது. தேடிப் பிடித்து வாசித்துப் பாருங்கள்-குறிப்பாக **The Fall** என்ற கதையை.

உலகில் அதிகம் அறியப்படாத மிகச் சிறந்த எழுத்தாளர்களை அறிமுகம் செய்து கொண்டிருந்தது **Sulfur**. அவர்களில் ஸோமர்ஸைப் போல் மற்றொரு பெண் எழுத்தாளர் **Elena Garro**. மெக்ஸிகோவைச் சேர்ந்தவர். **Octavio Paz**ஐ திருமணம் செய்து கொண்டு பிறகு விவாகரத்து செய்தவர். ஒரு நாள் பாஸ் பல மணி நேரம் **Incest** பற்றி பேசிக் கொண்டிருந்தாராம். செவ்விந்தியர்களிடம் அதிகம் காணப்பட்ட **Incest** மெக்ஸிகோவின் இலக்கியத்தில் மிக முக்கியமான ஒரு கருப்பொருள். **Incest** பற்றிய பாஸின் நீண்ட நேரப் பேச்சில் சலிப்புற்ற எலேனா பாஸிடம் சொன்னாராம்.. ''இவ்வளவு தியரிக்கு பதிலாக நீ ஏன் இதை உன்னளவில் பரீட்சித்துப் பார்க்கக் கூடாது? **I will call your sister, and we'll all three head for the bedroom**'' முகம் சிவக்க தன் இருக்கையிலிருந்து எழுந்த பாஸ் ஒன்றும் சொல்லாமல் உள்ளே போய் விட்டாராம். உடனே எலேனா ''பாவம்.. **Incest** தன் ரத்தத்தில் இருக்கிறதா இல்லையா என்பதை தெரிந்து கொள்ளும் வாய்ப்பை இழந்து விட்டார் பாஸ்'' என்று சொல்லியிருக்கிறார். இதை உடனிருந்து பார்த்து எழுதியிருப்பவர் **Severo Sarduy** என்ற க்யூப நாவலாசிரியர்.

லத்தீன் அமெரிக்க இலக்கியத்தில் மற்றொரு முக்கியமான பெயர் **Liliana Heker.** அர்ஜென்டீனிய பெண் எழுத்தாளர்.**Those who beheld the burning bush** என்ற இவரது சிறுகதைத் தொகுப்பு இவரது டீன் ஏஜ் பருவத்திலேயே வெளியாகி விட்டது. அர்ஜென்டினாவிலிருந்து வந்த மிகச் சிறந்த சிறுகதைத் தொகுப்புகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

அர்ஜென்டினா ராணுவ ஆட்சிக்குப் பேர் போனது. ராணுவ ஆட்சியாளர்கள் ஒரு தலைமுறை எழுத்தாளர்களை எழுத விடாமலே செய்துவிட்டார்கள் என்று சொல்லலாம்.

இதனால் பல எழுத்தாளர்கள் அர்ஜென்டினாவை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் வாழ நேர்ந்தது. அப்படி வாழ்ந்தவர்களில் ஒருவர் **Julio Cortazar**. தன் வாழ்நாளில் பெரும்பகுதியை இவர் பாரிஸிலுள்ள **Latin Quarters** என்ற இடத்தில் தான் கழித்தார். ஆனால் லிலியானா ஹெக்கர் நாட்டை விட்டு வெளியேறவில்லை. இது தொடர்பாக லிலியானாவுக்கும் பாரிஸில் வசித்த கொர்த்தஸாருக்கும் நீண்டதொரு விவாதமே நடைபெற்றது. அந்த விவாதம் லிலியானா நடத்திய **El Ornitorrinco** என்ற பத்திரிகையிலேயே நடைபெற்றது. **Ornitorrinco** என்றால் **Platypus** பறவை என்று பொருள்.

லிலியானா தன் பத்திரிகைக்கு ஆஸ்திரேலியாவில் வசிக்கும் இந்தப் பறவையின் பெயரை ஏன் வைத்தார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் லிலியானாவின் பத்திரிகை ராணுவ ஜெனரல்களின் அடக்குமுறை ஆட்சியின் போது தான் வந்து கொண்டிருந்தது. ''தாய்நாடு இங்கே ராணுவ ஆட்சியில் துயருற்றுக் கொண்டிருக்கும் போது உங்களுக்கு பாரிஸில் என்ன வேலை?'' என்று கேட்டார் லிலியானா. ஆனால் கொர்த்தஸாரின் நிலை வேறு விதமானது. 'ஒரு எழுத்தாளருக்கு எந்த ஒரு குறிப்பிட்ட தேசமும் சொந்த தேசமாக இருக்க முடியாது; எழுத்தாளர்கள் தேச வரையறைகளைக் கடந்து மனித சமுதாயம் முழுமைக்குமாகப் பணியாற்ற வேண்டும்' என்றார் கொர்த்தஸார்.

லத்தீன் குவார்ட்டர்ஸ் வீதிகளில் கிடார் வாசித்து தனது அன்றாட வாழ்க்கையைத் தள்ளினார். கொர்த்தஸார் ஒரு ஜாஸ் இசைக் கலைஞரும் கூட. இவருடைய **Hopscotch** என்ற நாவலை தேடிப்பிடித்து வாசித்துப் பாருங்கள். உலகின் மிக முக்கியமான பத்து நாவல்களில் அதையும் ஒன்றெனத் தயங்காமல் கூறலாம். கொர்த்தஸார் பாரிஸில் வாழ்ந்தாலும் முழுதுமாய் தன்னை அரசியலில் ஈடுபடுத்திக் கொண்டவர். லத்தீன் அமெரிக்க சர்வாதிகாரிகளை எதிர்த்துக் குரல் கொடுத்தவர். சிலேயின் அலெந்தேவையும், க்யூபாவின் காஸ்ட்ரோவையும் ஆதரித்தவர். அதே சமயத்தில் க்யூபாவிலும், ரஷ்யாவிலும் கம்யூனிச ஆட்சிகள் எழுத்தாளர்களை சிறையில் தள்ளுவதை வெளிப்படையாக எதிர்த்தவர்.

மற்றொரு முக்கியமான அர்ஜென்டீனிய எழுத்தாளர் **Marta Lynch**. இவரும் பெண் எழுத்தாளர் தான். இவரது முதல் நாவலான **La alfombra** (சிவப்புக் கம்பளம்) அர்ஜென்டீனிய அரசியலை மையமாக வைத்து எழுதப்பட்டது. மற்றொரு நாவல்-**El cruce del rio**-நதியைக் கடக்கும் போது-மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அர்ஜென்டீனிய கெரில்லா இயக்கத்தைச் சேர்ந்த ஒரு கெரில்லா-அதுவும் இறந்து போனவன்-தங்கள் இயக்கத்தைப் பற்றிக் சொல்வதாக அமைந்தது. அர்ஜென்டீனிய ராணுவ அரசு இதை ஆபத்தான நாவலாகக் கருதி நாவல் பிரதிகளைக் கைப்பற்றித் தீயிட்டுக் கொளுத்தியது. 1985 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மார்த்தா லிஞ்ச் தற்கொலை செய்து கொண்டார்.

இவர்களையெல்லாம் இங்கே நான் நினைவு கூர்வதன் காரணம்-எழுத்து என்றால் ஏதோ கேளிக்கை என்று சிலர் நினைத்துக் கொண்டிருப்பதை மறுப்பதற்காகத் தான். நான் பஃபூன் அல்ல. சமூகம் எதை விரும்புகிறதோ அதை எழுதுவதற்கு நான் ஆள் அல்ல. நிர்பந்தங்களுக்காக நான் எழுத இயலாது. அதற்கு வேறு பலர் உளர்.

ஜனநாயகம் என்றால் என்னவென்று தெரியாத சமூகத்தில் தான் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன் என்பதை நான் உணர்ந்தே இருக்கிறேன். இதை எழுது-இதை எழுதாதே என்ற வாக்கியத்திலிருந்தே ஃபாஸிஸம் உருவாகிறது. சாக்ரடீஸ் காலத்திலிருந்து இவ்வகை அச்சுறுத்தல்கள் உருவாகி விட்டன. ஸல்மான் ருஷ்டி இன்றைய உதாரணம். நான் எழுதுவது அறநூல் அல்ல. நீதி போதனைகள் அல்ல. எனக்கு அவற்றில்

நம்பிக்கையும் கிடையாது. இவ்வளவு நீதி போதனைகளுக்குப் பிறகும் சமூக அவலம் ஒரு சிறிதும் மாறியதாகத் தெரியவில்லை.

எக்மோர் பிரசவ மருத்துவமனையில் நான் கண்ட வாசகங்களை நினைவு கூர்க. அகிம்சையை போதித்த புத்தனின் பெயரால் தான் நம் அண்டை தேசத்தில் இவ்வளவு படுகொலைகளும் நடந்தேறின. எனவே இனியேனும் பெற்றோரைப் போல், மத போதகரைப் போல் எனக்கு உபதேசம் செய்யாதீர். குடியைப் பற்றி எழுதினால் எந்நேரமும் நான் குடித்து விட்டு ரோட்டோரத்தில் மல்லாந்து கிடக்கிறேன் என்று அர்த்தமல்ல. திருவள்ளுவர் சமண சமயத்தைச் சேர்ந்தவர். அதனால் கள்ளுண்ணாமை பற்றி எழுதினார். ஆனால் தமிழ் மரபு-இந்திய மரபு அப்படிப்பட்டதல்ல. தென்னையிலிருந்து இறக்கப்படும் கள் பூமித்தாய் மனிதகுலத்துக்கு வழங்கும் பால். பலவித நோய்களை அகற்றும் பண்பு கொண்டது அந்தப் பால். ஆனால் சமூகமோ அதைத் தடை செய்து விட்டு ரசாயனக் கலவையை அருந்திக் கொண்டிருக்கிறது.

எனக்கு வாசிப்பதும் எழுதுவதுமே அளப்பரிய சந்தோஷம் அளப்பரிய போதை. மற்ற எதுவுமே இதற்கு அடுத்ததாகத் தான். தினமும் இருபது மணி நேரம் நான் உழைக்கிறேன். எனது நாள் காலை ஆறு மணிக்குத் துவங்குகிறது. ஆறிலிருந்து ஏழு-ஏரோபிக்ஸ். ஏழிலிருந்து ஒன்பது-வாசிப்பு. ஒன்பதிலிருந்து பத்து-குளியல், சாப்பாடு, இன்னபிற. பத்திலிருந்து மாலை ஆறரை வரை-எழுத்து அல்லது படிப்பு. ஆறரைக்கு அவந்திகா வந்ததும் அவளுக்கு தேநீர் போட்டுக் கொடுத்துவிட்டு, ஏழிலிருந்து எட்டரை வரை-ஜிம். இந்த ஜிம் விஷயமும் கூட வெறும் உடல்நலத்தைப் பேணுவதற்காக மட்டுமல்ல. இது என் எழுத்தோடு சம்பந்தப்பட்டது. ஒரு முறை ரஞ்சன் என் புனைகதைகள் பற்றிச் சொன்னார். '**your fiction is invoking the aesthetics of body versus mind**' என்று. நான் புனைகதைகளில் எழுதுவது பாலியல் கூட அல்ல-அதை **aesthetics of body** என்று சொல்வதே இன்னும் பொருத்தமாக இருக்கும். ஒன்பது மணிக்குத் திரும்பி வந்து அவந்திகாவுக்கு சிற்சில ஒத்தாசைகள். பதினோரு மணிக்கு அவந்திகா உறங்கச் செல்லும்போது எழுதும் பொருட்டு என் இருக்கைக்குச் செல்லுவேன். ''எப்போது பார்த்தாலும் படிப்பும் எழுத்தும் தானா? இந்தக் காட்சியைப் பார்த்தாலே ஒருவருக்குப் பைத்தியம் பிடித்து விடும்'' என்பாள் அவந்திகா பொய்க் கோபத்துடன். ''அடடா உன்னை விடவா படிப்பு முக்கியம்?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து போய் உறங்குவது போல் பாசாங்கு செய்து விட்டு-அவள் உறங்கிய பின் எழுந்து வந்து, திரும்பவும் இரண்டு மணி வரை படிப்பு, எழுத்து. இடையில் அவந்திகா எழுந்து கொண்டால் ''ராப்பிசாசு இன்னும் தூங்கலியா?'' என்று குரல் கேட்கும்.

வாரத்தில் ஒரு நாள் மாலை, மணியைச் சந்திக்கும்போது மட்டும் இதற்கெல்லாம் விடுமுறை!

சிம்ரன் வந்ததால் பாறை வெடித்தது.

நண்பரும் இயக்குனருமான ராஜேஷ்வர் நீண்ட நாட்கள் கழித்து போன் செய்தார். கோவில்பட்டி வீரலட்சுமி படப்பிடிப்பில் அவர் பிஸியாக இருந்ததால் சந்தித்து பல நாட்கள் ஆகியிருந்தன. 'சிம்ரன் எப்படி இருக்கிறார்?' என்று கேட்டேன்.

'அதை ஏன் கேட்கிறீர்கள்?' என்று அவருக்கே உரிய வெடிச்சிரிப்புடன் ஒரு சம்பவத்தைச் சொன்னார். கரடிப் பட்டியோ கரடிக் குட்டியோ-அது தான் அந்தக் கிராமத்தின் பெயர். ஒரு இரண்டு நிமிடப் படப்பிடிப்புக்காக அங்கே சென்றிருக்கின்றனர் படப்பிடிப்புக் குழுவினர். அந்த நேரம் பார்த்து ஒரு குன்றிலிருந்து பாறையொன்று உருண்டு விழ-

சிம்ரன் வந்ததால் தான் பாறை வெடித்து விட்டதென்று கிராமத்தில் செய்தி பரவிவிட்டது. ஆனால், அதன் பிறகு நடந்தது தான் வேடிக்கை-சிம்ரன் எந்த இடத்திலெல்லாம் உட்கார்ந்திருந்தாரோ, எங்கெங்கே அவர் கால் பட்டதோ அந்த இடத்திலெல்லாம் ஆடு வெட்டினார்களாம்-சாமி குத்தம் தீர. வெட்டும்போது ஆட்டின் தலை துள்ளிக்கொண்டு போய் வலது பக்கம் விழுந்தால் தீட்டு கழிந்தது-இடது பக்கம் விழுந்தால் தீட்டு கழியவில்லை என்று அர்த்தமாம்! இதே போன்றதொரு கிராமத்திலிருந்து தான் வீரலட்சுமியும் உருவானார். தமிழகத்தின் ஃபூலான்தேவி. தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் வீரலட்சுமி. ஃபூலான் தேவியைப் போல் ஏற்ற இறக்கங்கள் இல்லாத வெறும் இறக்கத்தை மட்டுமே கொண்ட வாழ்க்கை. அதிகாரத்தை எதிர்த்து உயிர் விட்ட மிகச் சிலரில் வீரலட்சுமியும் ஒருவர்.

நேற்றைய தினம் ஹரிவரதன் என்ற வாசகர் வீட்டுக்கு வந்து பேசிக் கொண்டிருந்தார். ஒரு வாசகர் என் வீடு தேடி வந்து பேசியது இதுவே முதல்முறை. அதிலும் லண்டனிலிருந்து ஐந்து நாள் விடுப்பில் தன் தாயாரையும், துணைவியாரையும் பார்ப்பதற்காக வந்தவர். கோணல் பக்கங்களின் பெரும்பாலான வாசகர்களைப் போலவே என்னுடைய மற்ற எழுத்துக்களை வாசித்தவரல்ல. (வாசித்திருந்தால் வந்திருக்க மாட்டாரோ!) மாலை ஏழு மணியிலிருந்து பதினோரு மணி வரை பேசினார். இடையில் 'சாப்பிடலாமா?' என்று கேட்டேன். 'வீட்டில் காத்திருப்பார்கள்' என்றார். லண்டன் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னார். குஜராத் படுகொலைகளைப் பற்றி ஆழ்ந்த வருத்தத்துடனும் அக்கறையுடனும் பேசினார். அப்போது ஓஷோ சொன்ன ஒரு ஜென் கதையை நினைவு கூர்ந்தார். அந்தக் கதை.

இரண்டு ஜென் துறவிகள் நடந்து சென்று கொண்டிருந்தபோது ஒரு சிற்பத்தைக் கண்டார்கள். ஒரு ஆணும் பெண்ணும் கலவியில் முயங்கிக் கிடக்கும் காட்சி.. ஒரு துறவி சொன்னார்... 'ஆகா.. என்ன ஒரு அற்புதமான சிற்பம்.. ஆனால் கலவியின் உச்சக்கட்டத்தை அனுபவிக்க முடியாதபடி சிற்பி அந்த ஜோடியை இடையிலேயே நிறுத்தி தன் சிருஷ்டியை முடித்து விட்டானே!'' உடனே மற்றொரு துறவி ''சரி.. அப்படியானால் அவர்கள் அந்த இன்பத்தை இப்போதே பெறட்டும்'' என்று சொல்லி அந்தச் சிற்பத்துக்கு உயிர் கொடுத்திருக்கிறார். சிலைகளாயிருந்து உயிர் பெற்ற அந்த ஆணும் பெண்ணும் உடனடியாக மறைவான இடம் தேடிச் சென்றிருக்கின்றனர். ஒரு துறவிக்கு நப்பாசை.. 'நம்மால் உயிர் பெற்ற அந்த ஜோடி தங்களிடமிருந்து பறிக்கப்பட்ட இன்பத்தை இப்போது துய்க்கிறார்களா?' என்று கண்டுகொள்ள ஆசை. லேசாக எட்டிப் பார்த்தார். அங்கே அவர் கண்டது ஒரு பயங்கரம். அந்த இரண்டு பேரும் ஒரு புறாவைப் பிடித்து வைத்து அதன் மேல் 'டூ பாத்ரூம்' போய்க் கொண்டிருந்தனர்! துறவியைக் கண்டதும் வெட்கப்பட்டு ஒளிந்து கொண்ட அவர்களிடம் 'ஏன் இப்படிச் செய்தீர்கள்?' என்று கோபத்துடன் கேட்டார் துறவி. ''வேறு என்ன செய்வது ஸ்வாமி? நாங்கள் சிலையாக இருந்தபோது இந்தப் பட்சிகளெல்லாம் எங்கள் மீது இட்ட எச்சம் கொஞ்சமா? நஞ்சமா? அதற்குத்தான் இப்போது பழி தீர்த்துக் கொண்டோம்'' என்றார்களாம் இருவரும்!

''இதே தான் மக்கள் கூட்டத்துக்கும்... அடக்கப்பட்ட சீற்றம்.. நியாயப்படுத்துகிறேன் என்று நினைத்துவிட வேண்டாம். மனித இயல்பைப் பற்றி ஓஷோ சொன்ன கதை ஞாபகம் வந்தது. அவ்வளவுதான்'' என்றார் ஹரி.

பிறகு இளையராஜாவின் இசை பற்றிப் பேசினார். சுமார் ஒரு மணி நேரம். சில பாடல்களைப் பாடியும் காண்பித்தார். நான் எல்லாவற்றுக்கும் தலையாட்டிய படியே அமர்ந்திருந்தேன். எதற்குமே மறுப்பு சொல்லவில்லை. அவருக்கு ஆச்சரியம். ''கோணல் பக்கங்களில் வேறு மாதிரி எழுதியிருந்தீர்களே?''

''சாப்பிட்டு பதினோரு மணி நேரம் ஆகிறது. பசி காதுகளை அடைக்கிறது. விவாதிக்க தெம்பில்லை'' என்றேன்.

''டியர் மிஸ்டர் சாரு சார், விகடனில் வரும் கோணல் பக்கங்களின் வாசகன் நான். தமிழில் எழுதப்பட்ட பல கடிதங்களை உங்களுக்காக வைத்திருக்கிறேன். விரைவில் அனுப்பி வைப்பேன். உங்களுடைய அணுகுமுறையும் எழுத்துப் பாணியும் நம்பிக்கையூட்டுவதாக உள்ளது'' என்று ஒரு கடிதம் வந்தது. எழுதியிருந்தவர் டாக்டர் கே.ஆர்.ஜஸ்டின் தாமஸ், தைவான், சீனக்குடியரசு.

சீனாவிலிருந்து கடிதமா என ஆச்சரியப்பட்டேன். அதே சமயம் தைவான் தனி நாடாயிற்றே எனவும் சந்தேகம். திபெத்தைப் போல் தைவானையும் சீனா விழுங்கி விட்டதா, நமக்கு எப்படித் தெரியாமல் போயிற்று எனக் குழம்பிய படி தாமஸுக்கு பதில் எழுதினேன். அதற்கு தாமஸ் எழுதிய பதில் பிரசுரிக்கத் தகுந்ததாகவும் இருந்ததால் கீழே தருகிறேன்.

''ஹலோ சாரு சார்.. (சார் என்று அழைப்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். எனக்கு வயதில் சிறியவர்களாயிருந்தாலும் சார் என்று அழைக்குமாறே பயிற்றுவிக்கப் பட்டிருக்கிறேன்) முதலில் ஒரு சிறு விளக்கம். நான் சீனாவில் இல்லை. நான் சீனாவில் இருக்கிறேன் என்று சொன்னால் என் சக ஊழியர்கள் என்னைத் தொலைத்துக் கட்டி விடுவார்கள். நான் இருப்பது தைவானில். ஆனால் சீனா இதை தங்கள் நாட்டின் பகுதி என்று சொல்கிறது. தைவான் இந்தியாவைப் போல் ஒரு சுதந்திரமான நாடு. சீனாவையும்-ஏன், இந்தியாவையும் விட-இங்கே சுதந்திரம் அதிகம் என்றே சொல்ல வேண்டும். ஆனால் சண்டை என்னவென்றால் எது உண்மையான சீனா என்பதைப் பற்றித் தான். தைவான் (சீனக்குடியரசு) தங்கள் நாடு தான் உண்மையான சீனா என்கிறது. ஆனால் சீன மக்கள் குடியரசு என்று அழைக்கப்படும் சீனாவோ தைவானை தங்கள் நாட்டின் பகுதி என்கிறது. 'எங்களுடன் இணையாவிட்டால் எங்கள் ராணுவ பலத்தை காட்டுவோம்' என்கிறது சீனா. ஆனால் தைவானில் உண்மையான ஆபத்து சீன ராணுவம் கூட அல்ல - பூகம்பம் தான். என்னுடைய பயங்கரமான பூகம்ப அனுபவங்களை பிறகு சொல்கிறேன்.

இந்தியாவுக்கும் தைவானுக்கும் உள்ள முக்கியமான வித்தியாசம்-தைவான் மக்களின் கடும் உழைப்பு. இங்குள்ளவர்கள் சீனர்கள் என்று அழைக்கப்படுவதை விட தைவானியர் என்று அழைக்கப்படுவதையே விரும்புகின்றனர். 40 சதவிகித மக்கள் சீனாவிலிருந்து வந்து குடியேறியவர்கள். மற்றவர்கள் பூர்வீகக் குடிகள். இங்கே மதப்பிரச்னைகள் கிடையாது. மதத்தைப் பொறுத்தவரை மிகவும் மனமுதிர்ச்சி கொண்டவர்களாக உள்ளனர். மதத்தை ஒரு அந்தரங்க விஷயமாகத் தான் கருதுகிறார்கள். மதத்தைப் பற்றி வெளியில் பேசுவதோ, வேலை செய்யுமிடங்களில் மத ரீதியான சடங்குகளைச் செய்வதோ கிடையாது. வேலைக்கு வந்துவிட்டால் இடையில் வேலையை நிறுத்துவதே கிடையாது. சாப்பிடுவதற்கு கூட முப்பது நிமிடத்திற்கு மேல் எடுத்துக் கொள்வதில்லை. தேநீர் நேரம், காப்பி நேரம் என்றெல்லாம் எதுவும் கிடையாது.

நான் இந்தியாவில் உள்ள ஒரு ஐ.ஐ.டி.யில் வேலை செய்து கொண்டிருந்த போது அங்கே முற்றிலும் வேறு மாதிரியான சூழலில் இருந்தேன். ஊழியர்கள் சாவகாசமாக ஒன்பதரை மணிக்குத்தான் வேலைக்கு வருவார்கள். பத்தரை மணிக்கு காப்பிக்குப் போய் விடுவார்கள். திரும்பும் போது மணி பதினொன்று முப்பது ஆகியிருக்கும். உடனே பனிரெண்டே காலுக்கு லஞ்ச்சுக்கு கிளம்பி விடுவார்கள். லஞ்ச்சிலிருந்து இரண்டரைக்குத் திரும்பி வந்து பிறகு மூன்றரைக்கு காப்பி. நான்கு மணிக்கு வந்து எட்டிப் பார்த்துவிட்டு அந்த வளாகத்திலேயே படிக்கும் தங்கள் குழந்தைகளை அழைத்து வரப் புறப்பட்டு

விடுவார்கள். இதுதான் நான் இந்தியாவில் பார்த்தது. நிலைமை இப்படியிருந்தால் நாம் எங்கே முன்னேறுவது?

1985 வரை தைவானில் தைவானிய மொழியே பயிற்று மொழியாக இருந்தது. அதற்கு பிறகு சீன மொழிக்கு மாறி விட்டார்கள். எல்லாமே சீன மொழிதான். ஆங்கிலம் மிகவும் குறைவு. இப்போது அரசாங்கம் மாணவர்களை ஆங்கில மொழியையும் கற்றுக்கொள்ளச் சொல்கிறது. நீண்ட காலம் சர்வாதிகார ஆட்சியில் இருந்து விட்டு இப்போது தான் இரண்டாம் முறையாக தேர்தல் நடந்துள்ளது. அதிபர்: சென்-ஷுூ-பியான்.

இங்குள்ள உணவுப் பழக்கம் மிகவும் வித்தியாசமானது. சுவாரசியமானது. இங்கே மசாலா அய்ட்டங்களை சேர்ப்பது கிடையாது. இந்தியர்கள் தான் அதிக அளவு மிளகாயும், மசாலாவும் சேர்த்துக் கொள்கிறோம் என்று நினைக்கிறேன். ஆனால் இவர்கள் எல்லா வேளைகளிலும்-காலை, மதியம், இரவு, பின்னிரவு-கொஞ்சம் இறைச்சி சாப்பிடுகிறார்கள். கோழிக்கறி, மாட்டுக்கறி அல்லது பன்றிக்கறி. பன்றிக்கறியே இவர்களுக்கு விருப்பமான உணவு. எனவே சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்களுக்கு இங்கே சிரமம் தான். வெளியே அவர்கள் எதுவுமே சாப்பிட இயலாது. பச்சைக் காய்கறிகளுக்கிடையே கூட சிறிய கருவாட்டுத் துண்டுகளை நீங்கள் பார்க்கலாம். பெரும்பாலான காய்கறிகளை இவர்கள் வேக வைத்து-உப்பு மட்டும் சேர்த்துக்கொண்டு-அப்படியே சாப்பிட்டு விடுகின்றனர். எனக்குத் தெரிந்து இது தான் நல்ல சரிவிகித உணவு என்று நினைக்கிறேன். மதிய உணவில் நிச்சயமாக இரண்டு வகை கீரை உண்டு-எண்ணெய் சேர்க்காமல் வெறுமனே வேக வைத்தது. ஒரு பெரிய மீன் அல்லது வறுத்த இறைச்சி. ஒரு கிண்ணம் சோறு அல்லது நூடுல்ஸ். இதோடு கொஞ்சம் மூங்கில் குருத்து ப்ளஸ் பன்றி இறைச்சி. இதுதவிர அதிக அளவு பழங்களும் பழரசமும் சாப்பிடுகிறார்கள். தைவானிய மக்கள் மிகவும் வலிமையானவர்கள். ஆரோக்கியமானவர்கள். நாம் நினைப்பதைப் போல் தைவானியர்கள் சீனர்களைப் போலவோ, ஜப்பானியர்களைப் போலவோ குள்ளமானவர்கள் அல்ல. என்னுடைய பரிசோதனைக் கூடத்தில் என்னோடு பணி புரிவோரின் சராசரி உயரம் ஐந்தடி ஆறு அங்குலம். மாறாக பெண்கள் சற்று குள்ளம். ஆனால் வலு ஆரோக்கியம். ஆண்களுக்கு சமமாகவே பெண்களும் சாப்பிடுகின்றனர். இந்தியாவைப் போல் இந்த விஷயத்தில் எவ்வித வித்தியாசமும் இல்லை.

இங்கே, மற்றொரு ஆச்சரியம் என்னவென்றால்-மிக மிக வயதானவர்கள் கூட-அதாவது எண்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்-தங்கள் வேலையைத் தாங்களே செய்து கொள்கின்றனர். அதன் பொருள்-தங்களுடைய உணவையும் தாங்களே தேடிக் கொள்கின்றனர். அந்த வயதிலும் அவர்களால் உழைக்க முடிகிறது. பொருளீட்ட முடிகிறது. யாரும் யாரையும் அண்டிப் பிழைப்பதில்லை. ஆனால் இந்தியாவில் ஒரு ஆள் குறைந்தபட்சம் ஐந்து பேருக்கு கஞ்சி ஊற்ற வேண்டியுள்ளது. ஆனால் இங்கே அத்தனை பேரும் உழைக்கிறார்கள். பரிசோதனைக் கூடத்தில் என்னுடன் பணிபுரிவோர் கூட மாலை நேரங்களில் ஓட்டல்களிலும் மற்ற வியாபார ஸ்தலங்களிலும் துப்புரவுப் பணியாளர்களாக வேலை செய்கின்றனர்.

உங்களுடைய அஞ்சல் பெட்டியில் பெரும் இடத்தை எடுத்துக் கொண்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். அதனால் தற்போதைக்கு முடிக்கிறேன்.

டாக்டர் கே.ஆர்.ஜஸ்டின் தாமஸின் மேற்கண்ட கடிதத்தில் காணப்படும் சில விஷயங்கள் பற்றி நான் ஏற்கனவே இந்தப் பக்கங்களில் குறிப்பிட்டிருக்கிறேன். முக்கியமாக, தமிழர்களின் உணவுப் பழக்கம். லஞ்ச் பாக்ஸைத் திறந்து பார்த்தால் மூன்று ஸ்பூன் தயிர் சாதம், ஒரு ஊறுகாய்த் துண்டு. (இப்படிச் சாப்பிட்டால் பத்தே நாளில் செத்துவிடுவேன் என்று நினைக்கிறேன்). அதனால் தான் நாற்பது வயதிலேயே கிழடு தட்டிப்

போய்விடுகிறது. சர்க்கரை வியாதி, இருதய நோய் என்று மாத்திரையும் கையுமாக எமனை எதிர்பார்த்து நடுங்க ஆரம்பித்து விடுகின்றனர். இந்த வகையில் இந்தியாவிலேயே மிக மோசமான உணவுப் பழக்கம்-தமிழர்களுடையது தான். இதில் அசைவம் தான் கெடுதல் என்ற மூட நம்பிக்கை வேறு. சைவமென்ன அசைவமென்ன.... ஒரு வண்டி மசாலாவைக் கொட்டினால் எல்லாமே விஷம் தான். ஆவக்காய் ஊறுகாயில் இல்லாத கெடுதலா ஆட்டிறைச்சியில் இருந்து விடப் போகிறது?

போதும், ஏற்கனவே இதுபற்றி வேண்டுமளவு எழுதியிருக்கிறேன்...

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்

மத்தேயுவின் சுவிசேஷத்தைப் படித்து விட்டு இதை எழுத ஆரம்பித்திருக்கிறேன். பைபிளைப் படிப்பதே ஒரு அற்புத அனுபவம். அதிலும் குறிப்பாக சில பகுதிகளை அடிக்கடி வாசிப்பேன். அதில் ஒன்று: மத்தேயு. அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஐந்தாம் அதிகாரம்-ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு நாளும் வாசிக்க வேண்டிய ஒன்று. அதில் சில வசனங்கள்:

துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.

நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப் போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்க வேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு.

நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்...

பசோலினியின் சுவிசேஷத்தில் இந்த வசனங்களெல்லாம் விடுதலை இறையியலாக மாற்றம் கொள்கிறது. அப்படியானால் இது ஒரு மார்க்சீயப் படமா?

''இந்தப் படத்தின் இயக்குனர் என்ற முறையில் அப்படிச் சொல்லத் தான் ஆசைப்படுகிறேன். ஆனால் முடியாது. மத்தேயுவின் சுவிசேஷத்தை ஒரு மார்க்சீயவாதியாகத் தான் வாசித்தேன். வேறு எப்படி அதை வாசித்திருக்க முடியும்? **Phrysesஐ** அப்போதய ஆளும் வர்க்கமாகவும் கிறிஸ்துவின் உபதேசங்களை-அந்தக் காலக் கட்டத்தைச் சேர்ந்த ஒரு புரட்சியாளன் புரட்சியைத் தோற்றுவிப்பதற்காக உண்டாக்கிய திட்டங்கள் எனவும் நான் அர்த்தப்படுத்திக் கொண்டேன். அதாவது, ஒரு கன்னத்தில் அடித்தால்-ஆயுதத்தைத் தூக்குவதை விட்டு விட்டு-மறு கன்னத்தைக் காட்டு என்பது போன்ற உபதேசங்களை அந்த வகையில் தான் நான் உள்வாங்கிக் கொண்டேன். ஆனால் கடைசியில் கிறிஸ்துவை சிலுவையில் தானே அறைந்தார்கள்?

இந்தக் காரணத்தில் தான் மத்தேயுவின் சுவிசேஷத்தைப் பற்றிய என்னுடைய படத்தை மார்க்சீய ரீதியானது என்று சொல்ல முடியாது என்கிறேன். அந்த சுவிசேஷத்திலுள்ள புனிதத் தன்மையாலும் எதிர் பகுத்தறிவுத் தன்மையாலும் நான் எப்போதுமே

ஈர்க்கப்படுகிறேன். மார்க்சீயத்தினால் விளக்க முடியாத-என்னைப் போன்ற ஒரு மார்க்சீயவாதியாலும் விளக்க முடியாத-'ஏதோ ஒன்று' அந்த சுவிசேஷத்தில் இருந்து கொண்டிருக்கிறது'' என்கிறார் பசோலினி.

இந்தப் படத்தின் இசை பற்றி எழுதினால் அது பெரியதொரு ஆராய்ச்சிக் கட்டுரையாகப் போய்விடும் என்பதால் விட்டு விடுகிறேன். ஆனால் இரண்டே இரண்டு அம்சங்களை மட்டும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. ஒன்று-கடவுளை நேரடியாக தர்சிக்கச் செய்யும் (**theophanic**) மொஸார்ட்டின் இசை. அந்த சிம்ஃபொனியின் பெயர் **Masonic Mass**. அதோடு கூட **Bach**இன் உன்னதமான இசை. இரண்டாவது-கறுப்பினப் பிச்சைக்காரர்களின் பாடல்கள், ரஷ்ய நாட்டுப்புறப்பாடல்கள், காங்கோ இனக்குழுவினரின் இசை.

1968 ஆம் ஆண்டு வெளியானது இந்தியாவைப் பற்றிய பசோலினியின் படம். **Notes for a film on India** என்பது அப்படத்தின் பெயர். அதன் பொருட்டு 1967ஆம் ஆண்டு இந்தியாவுக்கு வந்தார் பசோலினி. படத்தின் கதை இதுதான்:

ஒரு குளிர்காலத்து நாளில் ஒரு மகாராஜா தனது நில புலன்களைப் பார்த்து வருவதற்காகக் கிளம்பினார். எங்கும் ஒரே பனி. எல்லையற்ற மௌனம். அங்கே ஓரிடத்தில் ஒரு புலியும் அதனுடைய இரண்டு குட்டிகளும் பட்டினியால் செத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். மிகுந்த துயரத்துடன் அந்தப் புலிக்காகவும் அதன் குட்டிகளுக்காகவும் பிரார்த்தனை செய்தார் மகாராஜா. அந்த நீண்ட பிரார்த்தனையின் முடிவில்... அவர் தனது உடைகள் அனைத்தையும் களைந்தார். பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் அந்தப் புலிகளுக்கு தன்னையே இரையாகக் கொடுத்தார். அவரைத் தொடர்ந்து அவரது புதல்வர்களும் ஒவ்வொருவராக அப்புலிகளுக்கு இரையாயினர்.

1970 ஆம் ஆண்டு பசோலினி இயக்கிய படம்: **Notes for Oresteia in Africa**. கிரேக்க நாடகாசிரியர் **Aeschylus** எழுதி கி.மு.458 ஆம் ஆண்டு கிரேக்கத்தில் அரங்கேற்றப்பட்ட **Oresteia** என்ற நாடகத்தைத் தழுவி எடுக்கப்பட்ட படம் இது.

ஆர்கோஸ் ராஜ்ஜியத்தின் அரசனான அகமெம்னான் ட்ராய் போரின் இறுதியில் களைத்துச் சலித்து அரண்மனைக்குத் திரும்புகிறான். அவன் மனைவி க்ளிடனெஸ்ட்ரா அவனுக்காகக் காத்திருக்கிறாள். அவன் மீதான காதலால் அல்ல-அவனைக் கொல்வதற்காக. காரணம்-ஏகிஸ்தஸ் மீதான அவளுடைய காதல். இந்தச் சதியைப் பற்றி அகமெம்னானுக்கு கஸாண்ட்ரா முன் கூட்டியே எச்சரிக்கை செய்தும் க்ளிடனெஸ்ட்ரா தன் திட்டத்தை நிறைவேற்றி விடுகிறாள்.

அகமெம்னானுக்கும் க்ளிடனெஸ்ட்ராவுக்கும் இரண்டு குழந்தைகள். ஓரிஸ்டெஸ் மற்றும் எலெக்ட்ரா. (எலெக்ட்ரா காம்ப்ளெக்ஸ் என்று சொல்கிறோமே அது இந்த கிரேக்க கதாபாத்திரத்திலிருந்தே உருவானது.) கொலை நடந்த போது ஓரிஸ்டெஸ் அந்த நாட்டில் இல்லை. இருபது வயதில் தனது நாட்டுக்குத் திரும்பிய ஓரிஸ்டெஸ் தனது சகோதரி எலெக்ட்ராவுடன் தந்தையின் சமாதியின் முன்னே நின்று அவரைக் கொன்றவர்களைப் பழி வாங்குகிறேன் என சபதம் எடுத்துக் கொள்கிறான்.

பிறகு மாறுவேடத்தில் ஆர்கோஸ் நகர அரசவைக்குச் சென்று மிகத் தந்திரமான முறையில் தன் தாய் க்ளிடனெஸ்ட்ராவைக் கொல்கிறான். இச்செயல் எரின்யெஸ் என்ற தேவதையைக் கோபப்படுத்துகிறது. பயந்து ஓடும் ஓரிஸ்டெஸைக் காப்பாற்றும் அப்பல்லோ கடவுள் ஏதனா தேவதையிடம் செல்லும்படி அறிவுரை கூறுகிறார். காரணம்- ஏதனா தான் நீதியின் தேவதை. ஏதனா உதவி செய்வதாகச் சொல்கிறாள்-ஆனால் மேலே சொர்க்கத்திலிருந்து அல்ல-கீழே மக்கள் தீர்ப்பின் மூலமாக. முதன்முதலாக மக்கள் நீதிமன்றம் உலகத்தில் ஏற்பட்டது இப்படியாகத் தான். அந்த நீதிமன்றத்தில் ஓரிஸ்டெஸ் குற்றவாளி அல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டான்.

''ஆனால் எப்படி முடிப்பது? உண்மையில் முடிவு என்று அதில் ஏதுமில்லை. படம் ஒரு கேள்விக்குறியையே தந்துவிட்டுச் செல்கிறது. தீர்வுகள் ஏதுமற்ற முடிவுறாத பிரச்னைகளோடு ஒரு புதிய தேசம் உதயமாகிறது. போராட்டம் தொடர்கிறது. வாழ்க்கை மிகவும் மந்தமாகவே இருக்கிறது. எதிர்காலத்தை நோக்கிய பயணம் தொடர்ச்சியற்றதாகவே உள்ளது.

எதிர்காலம் பதற்றம் மிகுந்ததாகத் தெரிகிறது. பதற்றம் என்பது மிகத் தீவிரமான பொறுமை...''

-பசோலினி.

1971 ஆம் ஆண்டு பசோலினி 16 நிமிடப் படம் ஒன்று எடுத்தார். அது-**The Walls of Sana'a**. ஸானா வடக்கு ஏமனின் தலைநகர். வெனிஸ் நகரத்தைப் போல் அழகாக இருந்த அந்த நகரம் நாகரீகம், வளர்ச்சி என்ற பெயரால் பொலிவிழந்து போனதே இப்படத்தின் கரு. புராதனமான ஸானா நகரம் தொழில் வளர்ச்சியின் காரணமாக அதன் ஆன்மாவை இழந்து மற்றொரு காங்க்ரீட் வனமாக மாறிவிட்டதை துயரத்துடனும் ஆக்ரோஷத்துடனும் சொல்லுகிறது இப்படம். அதே சமயம் இத்தாலியிலுள்ள **Orte** என்ற சிறியதொரு நகரம் தன் புராதனத் தன்மை மாறாமல் பாதுகாக்கப்படுவதையும், ஆனால் அவ்வூரில் கட்டப்பட்டுள்ள வானளாவிய கட்டிடம் ஒன்றினால் அதன் ரூபம் குலைந்து போனதையும் சொல்லுகிறார் பசோலினி.

1961 ஆம் ஆண்டு தனது முப்பத்தொன்பதாவது வயதில் தான் திரைப்படம் எடுக்க வந்தார் பசோலினி. 1975 ஆம் ஆண்டு அவர் கொல்லப்படும் வரை 19 படங்களை இயக்கினார். இவற்றுள் எனக்குப் பார்க்க கிடைத்த ஓரிரண்டு படங்களே இவை. அவரது மிக முக்கியமான இறுதிப் படமான **Sodoma**வின் 120 நாட்கள் எனக்குப் பார்க்கக் கிடைக்கவில்லை. பார்த்தவர்கள் கதிகலங்கிப் போனதாகத் தெரிவித்தார்கள்.

பசோலினியின் சினிமாவைப் போலவே அவரது கவிதைகளும் வலுவானவை; ஆக்ரோஷமானவை. ஒரே ஒரு கவிதையுடன் முடிக்கிறேன்.

I come from the ruins, from the churches,
from the altar-piece, from the forgotten villages...
where my brothers lived.

I traverse Tuscany like a madman
And the Appia street like a stray dog...

Monstrous is the one who is born
From the womb of a dead woman.

And I, a grown foetus, wander about alone
More modern than ever,
In search of brothers that are not there.

ஆயுதமேந்தியப் பாதிரியார்கள்.

1986 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்-தில்லியின் ஒரு குளிர் காலத்து மாலை நேரம். இந்திரப்ரஸ்தா எஸ்டேட் அருகிலுள்ள ஆஸாத் பவன். **Amate** ஓவியங்களின் கண்காட்சி.

அமாத்தே என்றால் மரப்பட்டை. காகிதம் வருவதற்கு முன்னரே மெக்ஸிகோவில் மரப்பட்டைக் காகிதத்தில் ஓவியம் வரைய ஆரம்பித்து விட்டார்கள். குறிப்பாக, **Balsas** நதிக்குப் பக்கத்தில் வாழ்ந்த நஹுவாஸ் இனத்தவர். இது நடந்தது ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னால்.

ஓவியம் தீட்டுவதற்கு முன்னால் அமாத்தே காகிதங்கள் மன்னர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. மன்னர்களைப் பற்றி மட்டுமல்லாமல் மெக்ஸிகோவின் அன்றைய வாழ்வு முறை பற்றியும் இக்குறிப்புகளிலிருந்து நம்மால் தெரிந்து கொள்ள முடிகிறது என்கிறார்கள் வரலாற்று ஆசிரியர்கள்.

ஸ்பானிஷ் காலனியாதிக்கம் ஏற்பட்ட பிறகு அமாத்தே அழிந்து போனது. இப்போது மீண்டும் அதை மீட்கும் பணியில் ஈடுபட்டு வெற்றி கண்டுள்ளனர் அமாத்தே ஓவியர்கள். இந்த மரபு அழிந்து விடாமல் இன்னமும் மரப்பட்டைகளில் ஓவியம் தீட்டி வருகிறார்கள் இவர்கள்-அன்றாட வாழ்விலிருந்து பிரபஞ்சப் புதிர்கள் வரை.

அவர் பெயர் **Pier Paolo Pasolini**. திரை உலகின் மேதைகளில் ஒருவர். கவிஞர். ஓவியர். நாவலாசிரியர். புகைப்படக்கலைஞர். சிந்தனையாளர். ஐரோப்பியக் கலைஞர்கள் பலரைப் போலவும் ஒரு ***gay***.

Pier Paolo Pasolini

நீங்கள் ஒரு பெருநகரவாசியாக இருந்தால் அங்குள்ள ஃபில்ம் க்ளப்புகளில் இவரது படங்கள் காணக் கிடைக்கலாம். அல்லது இத்தாலிக்கே புனிதப் பயணம் சென்றாலும் தவறில்லை. பசோலினியின் படங்கள் 1988 ஆம் ஆண்டு தில்லியில் எனக்குப் பார்க்கக் கிடைத்தன.

பசோலினி 1922 ஆம் ஆண்டு இத்தாலியின் போலோக்னாவில் பிறந்தார். **Friuli** என்ற பகுதியிலுள்ள கொசார்ஸா என்ற ஊரில் வாழ்ந்தார். இரண்டாம் உலகப் போரில் 1945 ஆம் ஆண்டு பசோலினியின் சகோதரன் இறந்தது அவரை மிகவும் பாதித்த ஒரு சம்பவமாக அமைந்தது. பிறகு அவர் தன் அன்னையுடன் ரோமுக்கு வந்தார். பத்திரிகை துறையிலும் இலக்கியத்திலும் ஈடுபாடு கொண்டார். மிகக் கொடிய வறுமையில் கழிந்தது வாழ்க்கை. அறுபதுகளில் திரைப்படம் எடுக்கத் துவங்கியதும் பிரபலமானார். பல்வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்ததால் அவரது பெயர் பெருமளவில் விவாதிக்கப்பட்டது. சுமார் அறுபது தொகுதிகள் வரும் அளவுக்கு கட்டுரைகளும், கதைகளும், நாவல்களும், கவிதைகளும் எழுதியிருக்கிறார். கவிதைத் தொகுதிகள் மட்டுமே ஆறு.

எப்போதும் சர்ச்சைக்குரியவராகவே இருந்த பசோலினி 1975 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரோமுக்கு பக்கத்திலுள்ள ஓஸ்டியா என்ற இடத்தில் திடீரென்று மிகவும் குரூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். அதே ஆண்டில் தான் அவரது **Salo… of the hundred and twenty days of Sodoma** என்ற படம் வெளிவந்து மிகப்பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. இதே பெயரில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஃபிரான்ஸில் வாழ்ந்த **Marquis de Sade** எழுதிய நாவலையே திரைப்படமாக ஆக்கினார் பசோலினி. மார்க்கி தெ சாத் அவரது எழுத்துக்காக சுமார் நாற்பது ஆண்டுகள் சிறையில் இருந்தவர்.அந்த காலக்கட்டத்தில் ஃபிரான்ஸில் மார்க்கிகளுக்கு (பிரபு) மரண தண்டனை அளிக்க முடியாது என்ற சட்டம் நடைமுறையில் இருந்ததால் தான் **Sade**க்கு மரண தண்டனை கொடுக்காமல் விட்டார்கள். நான் மார்க்கி அல்ல என்பதால் சாத் பற்றி எழுத அச்சமாக உள்ளது.

பசோலினியின் கொலைக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை. அது பற்றிப் பலவிதமான ஹேஷ்யங்களே உலவின. ரோமில் வாழ்ந்து கொண்டே மதத்தை தீவிரமாக எதிர்த்தவர்; **Gay**யாக வாழ்ந்தவர்; இன்ன பிற.

விளிம்பு நிலை (**marginal**) மக்களைப் பற்றியும், **Subaltern** கலாச்சாரம் பற்றியும், கடவுளால் கைவிடப்பட்ட மனித வாழ்வின் இருத்தலியல் வாதை **(existential angst)** பற்றியும் இவரது படங்கள் பேசின. இது மட்டுமல்லாமல், சமூக மதிப்பீடுகள் அனைத்தையும் கடுமையான பரிசீலனைக்கு உள்ளாக்கினார் பசோலினி. 'சினிமா என்பது ஒரு மொழியியல் அனுபவம் மட்டுமல்ல-அது ஒரு மொழியியல் ஆய்வும், ஒரு தத்துவார்த்த அனுபவமும் ஆகும்' என்கிறார் பசோலினி. ஆனால் தத்துவம் என்று சொல்லிவிட்டு யதார்த்த வாழ்வை விட்டு அவர் விலகி விடவில்லை. அவரது யதார்த்தத்தில் பிரிக்க இயலாதபடி கவித்துவமும் கலந்திருந்தது.

மதத்தை இவர் தீவிரமாக எதிர்த்தாலும் அதில் எவ்வித வறட்டுத்தனமும் இல்லை. உதாரணமாக இவரது புகழ்பெற்ற படமான **The Gospel according to Matthew** (1964)வில் **Bach**இன் ஆன்மீக ரீதியான இசையைத் தான் பயன்படுத்துகிறார் பசோலினி. தெற்கு இத்தாலியில் வாழும் இடையர்களின் ஏழ்மை, எளிமையெல்லாம் நமக்கு இயேசு கிறிஸ்துவையே ஞாபகப்படுத்துகின்றன.

1961இல் பசோலினி ஆல்பர்ட்டோ மொராவியாவுடன் முதல்முதலாக இந்தியாவுக்கு வந்தார். இந்த வருகை அவரது பார்வையில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இது பற்றி **The Smell of India** என்ற புத்தகத்தை 1962இல் எழுதினார். (கிடைத்தால் கடனாகத் தாருங்கள்; படித்துவிட்டுக் கொடுத்து விடுகிறேன்.) இந்தப் புத்தகத்தின் இறுதி வாக்கியத்தைப் பாருங்கள்: வாரணாசியின் சிதைகளைப் பற்றி இப்படி எழுதுகிறார்...

''**Never, in no place, at no hour and in no act of the entire stay in India, have we experienced such a profound sense of communion, of tranquility and, almost, of joy**''

பசோலினியின் முதல் திரைப்படம்-பிச்சைக்காரன்-1961 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது. அவரது **Naughty Boys** மற்றும் **A Violent Life** என்ற இரண்டு நாவல்களையும் அடிப்படையாகக் கொண்டது இந்த படம். ரோம் நகரின் அருகிலுள்ள சேரிகளே படத்தின் பின்னணி. **Accattone** என்பவன் ஒரு விபச்சாரத் தரகன். தன் மனைவியையும் மகனையும் பிரிந்து ஒரு விபச்சாரியை வைத்துப் பிழைத்து வருகிறான். அவள் கைது செய்யப்படுகிறாள். பிறகு மற்றொரு வேசியான அமோரே என்பவளால் காட்டிக் கொடுக்கப்பட்டு அக்காத்தோனேவும் கைது செய்யப்படுகிறான்.

சிறைவாசம் முடிந்து வெளியே வந்து பிழைப்புக்கு என்ன செய்வதென்று தெரியாமல் மற்றொரு பெண்ணை விபச்சாரத்தில் ஈடுபடுத்த முனைகிறான். ஆனால் அவள் மீது அவனுக்கு காதல் ஏற்பட்டு விடுகிறது. அதன் விளைவாக அவன் தன் நண்பர்களிடமிருந்தும் சூழலிலிருந்தும் அந்நியமாக நேர்கிறது... ஒரு நாள்... அவனுக்கு வேண்டிய ஆகாரம் அன்று அவனுக்குத் தரப்படவில்லை... உணவுக்கு வழியின்றி ஒரு கடையிலிருந்து கொஞ்சம் கறித்துண்டை திருடி மாட்டிக் கொள்கிறான். தப்பியோடி வரும்போது விபத்தில் சிக்கி மரணமடைகிறான்.

''மரணத்தின் மூலமாக மட்டுமே அவனுக்கு விடுதலை கிடைக்கிறது. அவனைப் போன்ற ஆயிரக்கணக்கான மக்களைப் போல் அவனுக்கும் வேறு எந்த வழியுமில்லை.

அக்காத்தோனேயின் மூலமாக நான் ஒரு துன்பவியலை காண்பித்து இருக்கிறேன். நம்பிக்கையே அற்ற ஒரு துன்பவியல் காட்சி அது. இப்படத்தின் ஒரே ஒரு நம்பிக்கையாக இறுதிக் காட்சியில் தெரியும் சிலுவையை சிலர் அர்த்தம் கொள்ளலாம்'' என்கிறார் பசோலினி.

Mother Rome (Mamma Rome) என்ற பசோலினியின் படம் 1962 இல் எடுக்கப்பட்டது. மம்மா ரோமா ஒரு விலை மாது. அவள் மகன் எத்தோரே ரோமுக்குப் பக்கத்தில் உள்ள ஒரு அனாதை விடுதியில் வளர்கிறான். தன் மகனின் பொருட்டு மம்மா ரோமா தன் தொழிலை விட்டுவிட்டு காய்கறி வியாபாரியாக மாறுகிறாள். ஆனால் அவளை வைத்துப் பிழைத்துக் கொண்டிருந்த விபச்சாரத் தரகன் அவளை விடுவதாக இல்லை. திரும்பவும் விபச்சாரத்திலேயே ஈடுபடும்படி ப்ளாக்மெயில் செய்கிறான். மம்மா ரோமாவுக்கு வேறு வழியில்லை.

அனாதை விடுதியில் பதினாறு வருடங்கள் வளர்ந்த எத்தோரேவுக்கு மம்மா ரோமாவின் அன்போ பாசமோ புரிவதில்லை. ரவுடிகளோடு சேர்ந்திருப்பதே அவனுக்கு இயல்பானதாக இருக்கிறது. இடையில் அவன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அப்போது தான் அவனுக்கு மனித உணர்வுகள், உறவுகள் பற்றிய அறிமுகமே கிடைக்கிறது. தன் தாயைக் கண்டுபிடித்துக் கொடுத்தவளாகவே தன் காதலியைப் பற்றி கருதுகிறான் எத்தோரே. ரவுடிகள் சிநேகிதத்தை விட்டுவிட்டு ஒரு உணவு விடுதியில் கடுமையாக வேலை செய்கிறான். மம்மா ரோமா மிகுந்த நெகிழ்ச்சியுடன் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

ஒரு நாள் எத்தோரேவுக்கு தன் தாய் ஒரு விபச்சாரி என்பதும் இது ரோம் நகருக்கே தெரியும் என்பதும் தெரிய வருகிறது. உடைந்து போகிறான். தாயை விட்டுப் பிரிகிறான். திரும்பவும் பொறுக்கிகளோடு சகவாசம். ஒரு டிரான்சிஸ்டரைத் திருடும் போது கையும் களவுமாகப் பிடிபட்டு இழுத்துச் செல்லப்படுகிறான். கடுமையான ஜுரமும் ஜன்னியும் வந்து சிறைச்சாலையிலுள்ள மருத்துவமனையில் அரை மயக்க நிலையில் கிடந்து செத்துப் போகிறான்.

புனித நகரம் இது பற்றிய எவ்வித சலனமும் இன்றி எப்போதும் போல் இயங்கிக் கொண்டிருக்கிறது. சொர்க்கத்தின் வாசல்கள் இது போன்ற அடிமட்டத்து மக்களுக்கு என்றுமே திறக்கப்படுவதில்லை. மம்மா ரோமா எப்போதும் போல் தனிமையும் வேதனையும் நிறைந்த தன் வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

அடுத்ததாக பசோலினி எடுத்த படம் பகுக் **Gospel according to Matthew** (1964). அனைவருக்கும் தெரிந்த விவிலியக் கதை. வறுமையில் வாழும் ஒரு தச்சனின் மகனான இயேசு-இயேசுவின் அனுபவங்களுக்கு சாட்சியாக நிற்கும் மக்கள்-இயேசுவின் உபதேசங்கள் என்ற மூன்று தளங்களில் கதை நகர்கிறது.

என்றாலும் பசோலினியின் இயேசுவிடம் வெற்று வார்த்தைகளோ அமானுஷ்யத் தன்மைகளோ ஏதும் இல்லை. இயேசு ஒரு மானுடனாக இஸ்ரேலின் தெருக்களில் நடக்கிறார். இஸ்ரேலியர்களிடம் பேசுகிறார். முழுக்க முழுக்க மத்தேயுவின் சுவிசேஷ வரிகளின் அடிப்படையிலேயே படம் எடுக்கப்பட்டுள்ளது.

மேரியும் யோசேப்பும் நாஸரேத்தின் படுகொலைகளிலிருந்து தப்பி பெத்லஹேம் வருகிறார்கள். இயேசு பிறக்கிறார். அதிசயங்கள் நிகழ்த்துகிறார். தீர்க்கதரிசனங்களை அறிவிக்கிறார். நோயாளிகளும், பிச்சைக்காரர்களும், கூன் குருடுகளும், குழந்தைகளும் அவரைச் சூழ்ந்து கொள்கின்றனர். இயேசு அவர்களை சொஸ்தப் படுத்துகிறார்.

‘மலைப் பிரசங்கம்‘ வருகிறது. தொடர்வது யூதாஸின் முத்தம். யாரைக் கொண்டாடினார்களோ அவரையே கொல்வதற்குக் கிளம்புகிறது ஒரு கூட்டம். சிலுவையைச் சுமந்து கொண்டு சென்றபோது வழியில் தென்படும் கிராமத்து மக்கள்... யாருக்கும் எந்த அர்த்தமும் இல்லை, இயேசுவின் தனிமையும் வாதையும் துயரமும் நீண்டு கொண்டே போகிறது.

இப்படத்தின் முக்கியத்துவம்-மனித வாழ்வின் அவலம் இயேசு என்ற ஒரு ஜீவனை முன் வைத்துச் சொல்லப்படுகிறது என்பதுதான். ஒடுக்கப்பட்ட மக்களின் அவல வாழ்வு படம் முழுவதும் நீண்டு கிடக்கிறது. தேவனின் புதல்வனே தன் இறுதி மூச்சு வரை துயரப்பட்டான் ‘‘**The light of the future does not lose a single moment to wound us..**.‘‘ என்ற பசோலினியின் கவிதை வரிகள் இங்கே எனக்கு ஞாபகம் வருகிறது.

இறுதிக் காட்சியில் சில பெண்கள் சிலுவையிலுள்ள இயேசுவின் சரீரத்தை நோக்கிச் செல்கிறார்கள். (பசோலினியின் தாயார் தான் கன்னிமேரியாக நடித்திருக்கிறார்). பிறகு இயேசுவின் உயிர்த்தெழுதலில் வாழ்வை நோக்கிய நம்பிக்கையும் எழுகிறது என்பதாக படம் நிறைவடைகிறது.

(இடமிருந்து இரண்டாவதாக இருப்பவர் கன்னிமேரி-பசோலினியின் தாய்)

Liberation theology என்று லத்தீன் அமெரிக்க நாடுகளில் சொல்கிறார்கள். அதாவது, இயேசுவை சில திருச்சபைகளில் புரட்சியாளராக அவதானித்தனர். பாதிரியார்களே ஆயுதமேந்திப் போராடினர். காரணம், லத்தீன் அமெரிக்க நாடுகளில் இருந்த சர்வாதிகாரிகளின் கொடூரமான ஆட்சி கற்பனை செய்ய இயலாதபடி மக்களை சித்ரவதை செய்தது. பட்டினியால் செத்துக் கொண்டிருந்த மக்களை ராணுவமும் சேர்ந்து கொன்று குவித்தது. ஒரே ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமானால் நிகாராகுவாவின் சர்வாதிகாரியை-**Somoza** என்று நினைக்கிறேன்-எதிர்த்து ஸான்டினிஸ்டாக்கள் போராடிய போது அவர்களோடு சேர்ந்து போராடியவர் பாதிரியார் எர்னெஸ்டோ கார்டினல். ஸான்டினிஸ்டா ஆட்சியின் போது அமைச்சராகப் பொறுப்பேற்ற அவர் ஒரு கவிஞரும் கூட.

இதே போல் ஒரு மார்க்சீயவாதியான பசோலினியின் சுவிசேஷமும் மார்க்சீயப் படமாகவே அமைந்தது.

அமைதியைக் கொண்டு வருவதற்காக அல்ல... நான் இங்கே வாளுடன் வந்திருக்கிறேன் என்ற வசனமே எனக்கு இந்தப் படத்தை எடுப்பதற்குத் தூண்டுதலாக இருந்தது என்கிறார் பசோலினி.

இனி, மத்தேயுவின் சுவிசேஷத்தைப் படித்து விட்டுத் தொடர்கிறேன். (பசோலினி இன்னும் வருவார்!)

கவிதையையும், கணிதத்தையும் இணைத்த கலைஞன் ராமானுஜம்!

ஒவ்வொரு தேசத்துக்கும் ஒவ்வொரு தேசியகீதம் இருப்பது போல் உலகத்துக்கே ஒரு தேசியகீதம் இருந்தால் எப்படியிருக்கும்? அப்படி ஒரு தேசியகீதத்தை எழுதியிருக்கிறார்

பாப்லோ நெரூதா. சிலேயின் உலகப் புகழ்பெற்ற கவிஞர். 'உலகைக் காக்க ஓய்ந்திருத்தல்' என்ற தலைப்புள்ள இக்கவிதையை தமிழில் மொழி பெயர்த்துள்ளவர் ஆ.அமிர்தராஜ். நீண்ட கவிதை என்பதால் அதிலிருந்து ஒரு சில பகுதிகளை மட்டும் தருகிறேன்.

இப்போது பனிரண்டு வரை

எண்ணுவோம்

நாம் அனைவரும் அது முடிய நிச்சலனமாயிருப்போம்.

ஒரு முறையேனும் பூமியின் முகப்பரப்பில்

எந்த மொழியிலும் நாம் பேசாதிருப்போம்.

ஒரு நொடி நிற்போம்

நகராமலும்

நம் கைகளை அவ்வளவு

அசைக்காமலும்

.....

நாம் ஒருமனப்பட்டிருக்காவிடில்,

ஒரு தடவை கூட சேர்ந்து ஏதும்

செய்ய முடியாதெனில்

நம்மையே நாம் புரிந்து

கொள்ளாமலே இருப்பதும்

மரணத்தைக் கையிலேந்தி

நம்மையே அச்சுறுத்துவதும்

ஆகிய நம் துக்கத்தில்

ஒருவேளை

பெரும் அமைதியொன்று

குறுக்கிடலாம்

ஒவ்வொன்றும் இறந்து விட்டது போல் தோன்றி

பிறகு உயிரோடிருப்பதாய்

நிரூபணமாவது போல்

ஒருவேளை

பூமி நமக்குப் பாடம் புகட்டலாம்.

இப்போது பனிரண்டு வரை

எண்ணப் போகிறேன்

நீங்கள் ஓய்ந்திருங்கள்

இதோ தொடங்குகிறேன்.

இந்தக் கவிதையை ஸ்பானிஷ் மொழியிலேயே ஒருவர் சொல்லக் கேட்க வேண்டும் போல் இருக்கிறது. கவிதையின் மீது ஈடுபாடு இல்லாதவர்களுக்குக் கூட நெரூதாவின் கவிதைகளைப் படித்தால் மிகுந்த ஈடுபாடு ஏற் பட்டுவிடும்.

நெரூதாவைப் பற் றிய ஒரு சம்பவத்தை கார்லோஸ் ஃபுயந்தெஸ் விவரிக்கிறார். ஃபுயந்தெஸும் அவர் நண்பர் ஒருவரும் ஒருமுறை சிலேயின் கடற் கரையொன்றில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர். அப்போது மீன் வேட்டைக்குச் சென்றுவிட்டு கரையிறங்கும் மீனவர் சிலர் ஒரு பாடலைப் பாடியபடியே கட்டுமரங்களை தரையில் ஏற் றுகின்றனர். 'அட, இது நம்முடைய பாப்லோவின் கவிதை அல்லவா?' என ஆச்சரியமுற் ற ஃபுயந்தெஸ் எழுந்து அந்த மீனவர்களிடம் சென்று 'இந்தப் பாடலை யார் எழுதியது என்று உங்களுக்குத் தெரியுமா?' எனக் கேட்கிறார். அவர்கள் அதற் கு ''யாரோ எழுதிய பாடல்... எத்தனையோ காலமாக எங்கள் தகப்பன் காலத்திலிருந்து இதை நாங்கள் பாடி வருகிறோம்'' என்றார்களாம். ஆனால் அந்தக் கவிதை ஒரு பத்தாண்டுகளுக்குள்ளாகத் தான் நெரூதாவினால் எழுதப்பட்டிருக்கிறது என்ற விஷயம் ஃபுயந்தெஸுக்குத் தெரியும். அதுதான் அவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கிறது. இதை எழுதும்போது என் மயிர்க்கால்கள் சிலிர்க்கின்றன. ஆம். ஒரு பத்தாண்டுகளில் காலம் என்பதே அழிந்து விடுகிறது. நெரூதா ஒரு பத்தாண்டுகளுக்கிடையே எழுதிய ஒரு கவிதையை எப்படி இவர்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டு காலங்காலமாக தங்கள் வாழ்க்கையுடன் கலந்துவிட்ட ஒன்றாக நம்பிக்கை கொண்டுள்ளனர்?

சிறு பத்திரிகை எழுத்தாளன் என்றால் 'ஸினிக்கலாக'-ஒன்று மீனவர்கள் பொய் சொல்லுகிறார்கள் அல்லது ஃபுயந்தெஸ் பொய் சொல்லுகிறார் என்பான். அது பொய் அல்ல. இரண்டு பேர் சொல்வதும் உண்மை தான். பத்தாண்டுகள் என்பது மீனவர்களுக்கு காலங்காலமான ஒன்றாக அர்த்தமாகி விட்டது. அந்தக் கவிதை அந்த அளவுக்கு கடலைப் போலவும், விதவிதமான மீன்களைப் போலவும், புயலைப் போலவும், மதுவைப் போலவும் அவர்களுடைய வாழ்வோடு கலந்துவிட்டது. நெரூதா தன் வாழ்நாளிலேயே **legend** ஆக ஆகிவிட்டார்.

ஃபுயந்தெஸைப் போல் நானும் சில சமயம் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். நான் தில்லியில் இருந்தபோது அடிக்கடி மாக்ஸ் ம்யுல்லர் பவனுக்குச் செல்வதுண்டு. அங்கே அவ்வப்போது குந்த்தர் க்ராஸைப் பார்த்திருக்கிறேன். அப்போது அவர் கல்கத்தாவில்

வசித்து வந்தார் என்பதால் தில்லியும் வருவதுண்டு என்று புரிந்துகொள்வேன். ஆனால் முதல்முறையாகப் பார்த்தபோது-அது ஒரு ஓவியக் கண்காட்சி. குந்த்தர் க்ராஸ் வரைந்த ஓவியங்கள்-அவரும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்-கண்காட்சி முடிந்து கையில் மதுக்கிண்ணத்துடன் என்னருகே அவர் நிற்பதைக் கண்டபோது ஒருக்கணம் மனக்குறளிக்கு ஆட்பட்டேன். குந்த்தர் க்ராஸ் நம் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாரா? பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர் ஆயிற்றே இவர்?

பிறகு, நின்று நிதானித்து தர்க்க ரீதியாக யோசித்துப் பார்த்த போது தான் புரிந்தது... அவருடைய **Tin Drum** நாவல் நாஜி ஜெர்மனியைப் பற்றி எழுதப்பட்டது; அந்த நாவல் சினிமாவாகவும் எடுக்கப்பட்டிருக்கிறது; அதையும் நான் பார்த்திருக்கிறேன்... இருந்தாலும் குந்த்தர் க்ராஸ் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவராக என் ஞாபகத்தில் பதிந்து போனதன் காரணம் என்ன? டின் ட்ரம் ஒரு க்ளாஸிக் என்பது தான்!

ஃபுயந்தெஸ் பற்றிக் குறிப்பிட்டேன். இவரும் க்ராஸைப் போன்றவர் தான். மெக்ஸிகோவைச் சேர்ந்தவர். லத்தீன் அமெரிக்காவின் மிக முக்கியமான நாவலாசிரியர். இவரது தந்தை ஒரு தூதராக இருந்ததால் ஃபுயந்தெஸ் சிலே, அர்ஜென்டினா, அமெரிக்கா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளில் வாழ நேர்ந்தது. பிறகு அவரும் தந்தையைப் போலவே மெக்ஸிகோவின் தூதராக ஃப்ரான்ஸுக்கு அனுப்பப்பட்டார். பின்னர், வரலாற்றுப் பேராசிரியராக பல பல்கலைக்கழகங்களில் பணியாற்றினார்-ஹார்வர்ட் உட்பட. பல இலக்கிய, அரசியல் பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்தார். உலகின் முக்கியமான திரைப்பட விழாக்களில் நடுவராக இருந்துள்ளார்.

மிகப்பெரிய படிப்பாளி. மேதை. இவரது நாவல்கள் அனைத்திலும் நாம் இந்த மேதமையைக் காண முடியும். க்யூபாவின் அலெஜோ கார்ப்பெந்த்தியரைப் போல் இவரது பாணியையும் **Baroque** என்று சொல்லலாம். ஆனால் கார்ப்பெந்த்தியரிடமிருந்து ஃபுயந்தெஸ் மிகவும் வித்தியாசப்படுகிறார்- உதாரணமாக, ஃபுயந்தெஸின் படைப்புகள் பாலியல் பற்றியும், மனித இயல்பின் உள்ளார்ந்த மிருகத் தன்மை (**bestiality**) பற்றியும் பேசுபவை. இவரது நாவல் **Terra Nostra** வாசிப்பதற்கு கடினமாக இருந்தாலும் இருபதாம் நூற்றாண்டின் க்ளாஸிக்குகளில் ஒன்று எனச் சொல்லலாம்.

கணிதத்துக்கும் கவிதைக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்? இரண்டும் வெவ்வேறான, ஒன்றுக்கொன்று எதிரெதிரான குணாம்சங்களைக் கொண்டவை; ஒன்று-வறட்டுச் சமன்பாடுகளையும் சூத்திரங்களையும் அடிப்படையாகக் கொண்டது. மற்றொன்றோ கற்பனையுலகில் சஞ்சரிப்பது, சிருஷ்டிபரமானது-இப்படியெல்லாம் சிறுவயதில் நினைத்துக் கொண்டிருந்தேன். பிறகு தான் **Feynman**, ஸ்டீஃபன் ஹாகிங் போன்றவர்களைப் படித்தபோது இந்த எண்ணங்களெல்லாம் மாறின. கணிதம் மட்டுமல்ல, அறிவியலின் பல்வேறு துறைகளும் கற்பனா சக்தியோடு மிக நெருங்கிய தொடர்புடையது என்று தெரிந்து கொண்டேன். பிறகு கணிதமேதை ராமானுஜம் பற்றி அறிந்தபோது இக்கருத்து ஊர்ஜிதமாயிற்று.

ஆண்டாளை உலகக் கவிதை மரபில் கவித்துவத்தின் உச்சம் என்று சொன்னால் ராமானுஜத்தை கணித உலகின் உச்சம் என்று சொல்லலாம்.

1887 ஆம் ஆண்டு பிறந்து 1920 வரை-வெறும் 33 ஆண்டுகளே வாழ்ந்து மறைந்த ராமானுஜம் இந்தக் குறுகிய காலத்தில் உருவாக்கிய கணிதச் சமன்பாடுகளை, கண்டுபிடிப்புகளை இன்னும் சில நூறு ஆண்டுகளானால் கூட புரிந்து கொள்ள இயலாது என்று சொல்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். மற்றொரு விசேஷம் என்னவென்றால்-

இச்சமன்பாடுகளைக் கண்டடைய ராமானுஜம் வழக்கமான அணுகு முறைகளைக் கையாளவில்லை. படிப்படியாகச் செல்லவில்லை. குறுக்கும் நெடுக்குமாக, சமயங்களில் ஒரே பாய்ச்சலில் முடிவுகளை எழுதிவிட்டு, வழிமுறைகளை **labyrinth** போன்ற வலைப்பின்னலாக ஆக்கி விடுகிறார். மர்மங்களும் புதிர்களும் நிரம்பியதாகவும் அமானுஷ்யத் தன்மை கொண்டவையாகவும் உள்ளன ராமானுஜத்தில் சமன்பாடுகள். பல சூத்திரங்கள் அவருக்கு கனவில் புலப்பட்டுள்ளன. கனவிலிருந்து விழித்தே அவற்றை அவர் எழுதியுள்ளார். ஆழ்மனப் பிரக்ஞையிலிருந்து தன்னிச்சையாக சமன்பாடுகளையும் சூத்திரங்களையும் பதிவு செய்திருக்கிறார். மரணப் படுக்கையில் கிடந்தபோது கூட **Mock-theta** பற்றிய தன் கண்டுபிடிப்புகளை எழுதிக் கொண்டிருந்திருக்கிறார் ராமானுஜம்.

வாழ்வின் துவக்கம்-முடிவு-பூஜ்யம்-எல்லையற்ற தன்மை என்று தத்துவத்தையும், கவிதையையும், கணிதத்தையும் ஒன்றாக இணைத்த மாபெரும் கலைஞன் ராமானுஜம்! ஆனால் இப்படி ஒரு கலைஞன் தமிழகத்தில் வாழ்ந்தான் என்பதைக் கூட நம் சமூகம் அறிந்து கொள்ளாமல் இருப்பது..... வேண்டாம்.. ஏற்கனவே இந்த வாக்கியத்தை பலமுறை எழுதிவிட்டேன். போதும்.

'அரசாங்கத்தின் எதிரிகள்'

பசோலினியின் **Oresteia** என்ற படத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். ஏஸ்கிலஸ் எழுதிய இந்த நாடகத்தைச் சமீபத்தில் வாசித்தேன். ஸோஃபோக்ளிஸ் எழுதிய 'மெடீயா'வைப் போல் இதையும் ஒரு பெண்ணிய நாடகம் என்றே சொல்லத் தோன்றுகிறது.

இதற்கு முன்னால் மேற்கத்திய நாடக மரபு பற்றி நாம் கொஞ்சம் அறிந்து கொள்ள வேண்டும். கி.மு.ஆறாம் நூற்றாண்டில் ஏதென்ஸ் நகர மக்கள் எடுத்த விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும், சடங்குகளிலும்தான் அம்மரபின் துவக்கத்தை நாம் காண முடியும் என்கிறார்கள் நாடக ஆய்வாளர்கள். முதலில் ஆண்களோடு பெண்களும் கலந்து கொள்ளலாம் என்று இருந்த நிலை கி.மு.ஐந்தாம் நூற்றாண்டில் மாறி சிறிது சிறிதாக பெண்கள் இந்நிகழ்ச்சிகளிலிருந்து ஒதுக்கப்பட்டார்கள்.

இது எப்படி சாத்தியமாயிற்று? இதற்கான வரலாற்றுக் காரணங்கள் என்ன?

உலோகங்களின் பயன்பாடு தெரிய ஆரம்பித்து அவை புழக்கத்திற்கு வந்தன. நகரங்களை மையமாகக் கொண்ட அரசுகள் உருவாயின. பெண்களின் சமூக வாழ்வையும் சமூக வெளியையும் பெருமளவுக்கு ஒடுக்கிய குடும்ப அமைப்பு வலுவடைந்தது. அதன் அடுத்த கட்டமாக நிலங்கள் தனியுடைமையாக்கப்பட்டன. நிலத்தின் உரிமையாளர் பெண்ணல்ல, ஆண். உறவு விதிகள் உருவாக்கப்பட்டன. பெண் என்பவள் ஒரு பண்டமாக ஆக்கப்பட்டாள். பெண் கொடுக்கல்-வாங்கல் என்பதன் மூலமாக சொத்து சேகரம் உருப்பெற்றது.

இதன் மூலமாக அந்தரங்கமான, அரசியல்தன்மையற்ற, உள்வெளி **(Interior space)** ஒன்று பெண்ணுக்கு உருவானது.

வெளிப்படையான, அரசியல்தன்மை கொண்ட, வெளிப்புற வெளி **(Exterior space)** ஆணுக்கென்று உருவானது.

இந்த வரலாற்றையே கிரேக்க நாடகங்கள் பதிவு செய்கின்றன. அதில் முக்கியமானது ஏஸ்கிலஸின் ஓரிஸ்தேயா. ஆணாதிக்கத்தின் துவக்கப்புள்ளிகளை இதில் நாம் காண முடிகிறது. கருப்பையின் அபாயங்கள் பற்றி இதில் சொல்லப்படுகிறது. பூமிக்கடவுளான **Gaia**வின் கதையில் அவள் குழந்தைகள் கொல்லப்படுகின்றனர்; காயடிக்கப்படுகின்றனர். சீயஸ் தன் மனைவியை விழுங்கி விடுவதன் மூலம் குழந்தைப் பேறு (சந்ததி உருவாக்கம்) என்பதைத் தானே எடுத்துக் கொண்டு ஏதெனாவைப் பெற்றெடுக்கிறான். ஆக, ஏதெனாவுக்குத் தாய் கிடையாது. இப்படியாக, பெண்ணின் கருப்பை என்பது வெற்றி கொள்ளப்பட்டு தாய்வழிமுறை (**matriarchy**) என்பது முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது.

ஆனால் இதே காலக்கட்டத்தில், கிரேக்கத்தில் மற்றொரு மாற்று அரங்கமும் இருந்து வந்தது. இவர்கள் பெரும்பாலும் பெண்கள். ஏஸ்கிலஸ், ஸோஃபோக்ளிஸ், அரிஸ்டோஃபேன்ஸ் போன்ற பிரபலமான நாடகாசிரியர்களுக்கு மத்தியில் பெயரே தெரியாத பெண்கள் பலர் செவிவழி வந்த எழுதப்படாத நாடகங்களுக்கு முன்னோடிகளாக இருந்தனர். இவர்கள் நடிகைகளாக இருந்த காரணத்தால் தாசிகளாகவும் வாழ நேர்ந்தது.

இது 2500 ஆண்டுகளுக்கு முந்திய நிலவரம். இன்றைய நிலவரம் என்ன என்று தெரிந்து கொள்ள **TDR**இன் பக்கங்களைப் புரட்டினேன். நாடகம் பற்றி வரக்கூடிய உலகின் சிறந்த பத்திரிகை இது என்று சொல்லலாம். முழுப்பெயர்: த ட்ராமா ரெவ்யூ.

இதில் லிவிங் தியேட்டர் என்ற குழுவைப்பற்றிய செய்தி ஒன்றைப் படித்தேன். முழுத்தகவலும் கிடைக்கவில்லை. இருபது ஆண்டுகளுக்கு முன்னால் என்று நினைக்கிறேன். இந்தப் பெண்ணிய நாடகக் குழுவின் நடவடிக்கைகளுக்கு அமெரிக்காவில் அறிவிக்கப்படாத தடையும் தொந்தரவுகளும் இருந்ததால் இவர்கள் பொலிவியாவுக்குச் சென்று விட்டனர். (பொலிவியா பற்றிப் பேச ஆரம்பித்தால் கதை எங்கேயோ போய்விடும்... சே குவேரா புரட்சி செய்த புண்ணிய பூமி. இன்றைக்கும் லத்தீன் அமெரிக்காவின் ஆகக் கொடிய வறுமையான நாடு. நாட்டின் சொத்து முழுவதற்கும்- அதாவது சுரங்கங்கள்-ஒரே ஒருவர்தான் உரிமையாளர். அவரே நாட்டின் அதிபரும் கூட. பெயர் திருவாளர்: **Gonzalo Sanchez de Lozada** (இவர் பொலிவியாவில் 1993-லிருந்து 1997 வரை அதிராக இருந்தவர். இப்போதைய அதிபர் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றவர்). நாட்டின் மற்ற பிரஜைகளெல்லாம் பிச்சைக்காரர்கள்! பட்டினி நிவாரணமாக போதையூட்டும் கோக்கா இலைகளை மென்று தின்னுகின்றனர். இந்த நிலைமைகளைத் திரைப்படமாக எடுத்தவர் **Jorge Sanjines**. மேற்கத்திய நாட்டு இயக்குனர்களுக்கு இணையாகப் பேசப்பட்டவர்... சரி, நிறுத்திக் கொள்கிறேன்.. பொலிவியா பற்றி ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு விஷயங்கள் மூளை அடுக்கில் கொட்டிக் கிடக்கின்றன... எனவே அதை விட்டுவிட்டு லிவிங் தியேட்டர் பெண்களிடம் வருகிறேன்)

அப்போது பொலிவியாவில் புரட்சிகர இயக்கங்கள் தீவிரமாக இருந்த நேரம். ரஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் கம்யூனிசம் மண்ணைக் கவ்வாத காலகட்டம். க்யூபாவைப் போல் மற்றொரு கம்யூனிச சொர்க்கம் பொலிவியாவில் உருவாகப் போகிறது என்று உலகின் இடதுசாரிகள் கனவு கண்ட காலம். லிவிங் தியேட்டர் பெண்கள் பொலிவியாவில் கிராமம் கிராமமாகச் சென்றார்கள். பல்வேறு இனக்குழுக்களின் மத்தியிலும், மக்கள் மிகச்சிறிய அளவிலேயே வாழ்ந்தாலும் கூட - எளிதில் நெருங்க முடியாத மலைகளிலும் காடுகளிலும் சென்று நாடகங்களை நிகழ்த்தினார்கள். ஆனால் வெகுவிரைவிலேயே 'அரசாங்கத்தின் எதிரிகள்' என அறிவிக்கப்பட்டு கண்ட இடத்தில் சுட்டுக் கொல்லும்படி அரசு உத்தரவு வரவே, பொலிவியாவிலிருந்து தப்பி ஐரோப்பாவுக்கு வந்து சேர்ந்தார்கள். அப்போது ஈரானுக்குச் சென்று ஒரு வாரம் இவர்கள் நிகழ்த்திய நாடகம் ஒன்று நாடக உலகில் பெரிதும் பேசப்பட்டது. ஒரு பெரிய தோட்டத்தில் ஒரு வார காலம் இடைவெளியேயின்றி

தொடர்ந்து நடைபெற்றது நாடகம். ஆனால் உண்மையில் அங்கே என்ன நடந்ததென்றால்- நாடகம் என அழைக்கப்பட்ட அந்த நிகழ்வில் பார்வையாளர்களும் லிவிங் தியேட்டர் நாடகக் குழுவைச் சேர்ந்த பெண்களும் ஒரு வார காலம் சேர்ந்து வாழ்ந்தனர். 'எங்களைப் பெண்ணியவாதிகள் என்பதை விட அனார்க்கிஸ்டுகள் என்று அழைப்பதே பொருத்தமானது' என்றார்கள் இவர்கள்.

இக்குழுவினரின் தற்போதைய நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

நம்மூரிலும் சில 'புரட்சிகர' நாடகக்காரர்கள் இருந்தனர். அவர்களின் தற்போதைய நிலவரம் பற்றி ஏற்கனவே இப்பக்கங்களில் எழுதியிருக்கிறேன். மறந்துபோனவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். சினிமாவில் பூசாரிகள், கேட் கீப்பர்கள், க்ரூப் டான்ஸில் தலை காட்டுபவர்கள் என்றெல்லாம் 'நடித்து' வருகின்றனர்!

பெரூவைச் சேர்ந்த நாவலாசிரியர் மாரியோ வார்காஸ் லோசாவின் தீவிர ரசிகன் நான். அவருடைய ஒரு டஜன் நாவல்களையும் படித்திருக்கிறேன். அவற்றில் சிலவற்றை இரண்டுமுறை. ஆயிரம் பக்கங்கள் இருந்தாலும் ஒரே அமர்வில் படித்துவிடக் கோருபவை இவரது நாவல்கள். இலக்கியத்தில் துளி ஈடுபாடு இல்லாதவர்கள் கூட ஒரே அமர்வில் படித்துவிட முடியும். காரணம்-அவரது எழுத்துத் திறனும், கதை சொல்லலின் சுவாரசியமும். கூடிய விரைவில் இவருக்கு நோபல் பரிசு கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்கிறேன்.

இப்போது மீண்டும் ஒருமுறை லோசாவின் அத்தனை நாவல்களையும் படிக்க ஆரம்பித்திருக்கிறேன். முதலில்-**The real life of Alejandro Mayta**.

மாய்த்தா இன்றைய பெரூவைப் பார்த்து வேதனை அடைகிறான். இன்றைய பெரூ என்ன, நேற்றைய பெரூவின் கதையும் இதுதான். திருடர்கள், வேசிகள், மரிஜுவானா, கொகேய்ன், அழுக்கு, குப்பை, நாற்றம். சாக்கடை, சுரண்டல், ஏழ்மை, வறுமை.. இதை மாற்றுவதற்கு என்ன செய்வது? புரட்சிக்காரனாவதா? பாதிரியாராவதா? வல்லேயோஸ் என்ற அவனுடைய கம்யூனிஸ்ட் நண்பன் புரட்சியை அறிமுகப்படுத்தி வைக்கிறான். இருவரும் சேர்ந்து ஒரு கிளர்ச்சியை உருவாக்க நினைத்து தோற்றுப் போகிறார்கள். (தமிழ்நாட்டில் இரண்டு மூன்று பேர் சேர்ந்து புரட்சியில் ஈடுபடுவதை-அநேகமாக வங்கிக் கொள்ளை-இங்கே நினைவு கூறலாம்) புரட்சியில் தோல்வியுறும் மாய்த்தா தனிப்பட்ட வாழ்விலும் தோல்வியுறுகிறான்-இவனை பெரும் புரட்சிக்காரனாக நினைக்கும் ஒரு இளம் புரட்சியாளனுடன் மாய்த்தா ஓர் இரவு ஓரினச் சேர்க்கை கொள்ளும்போது 'என்னைப் பொறுத்தவரை மாய்த்தா.. நீ இன்றிரவே செத்துவிட்டாய்' என்கிறான் இளம் புரட்சியாளன்.

இக்கதை நடந்து முப்பது ஆண்டுகள் கழிந்து இச்சம்பவங்களைத் தொகுக்கும் ஒரு இளைஞனால் மாய்த்தாவின் கதை முழுவதும் சொல்லப்படுகிறது. இதுதான் லோசாவின் சிறப்பு. மாய்த்தாவின் உறவினர்களிடம் மாய்த்தா பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போதே- அச்சம்பவங்கள் அதே நேரத்தில் நடக்கின்றன. கடந்த காலமும் நிகழ்காலமும் ஒரே நேரத்தில் வெகு இயல்பாகப் பின்னிப் பிணைகிறது.

ஒரு இடத்தில் மாய்த்தா சொல்கிறான்.. ''நான் என்னவாக விரும்பினேனோ அதுவாகவே ஆனேன்.. நான் ஒரு புரட்சியாளன். அதே சமயம் நான் ஒரு ஹோமோ செக்ஷுவல். இந்தச் சமூகத்தில் விதிகளும் சட்டதிட்டங்களும் நிறைய உள்ளன. எதெல்லாம் அசாதாரணமாகத் தோன்றுகிறதோ அதெல்லாம் குற்றம் அல்லது நோய்... காரணம், சமூகம்

அந்த அளவுக்கு அழுகிக் கிடக்கிறது.. எனவேதான் இங்கே புரட்சி தேவையாய் இருக்கிறது''

கடைசியில் மாய்த்தா ஒரு ஐஸ் க்ரீம் பார்லரில் விற்பனையாளனாகிறான்!

தனது நாட்டைப் பற்றி எத்தனையோ கனவுகள் கண்ட லோசா ஐந்தாண்டுகளுக்கு முன்பு ஜனாதிபதி தேர்தலில் நின்று ஃபுஜிமோரியிடம் தோற்றுப் போனார்... இப்போது ஃபுஜிமோரியும் ஏகப்பட்ட ஊழல் வழக்குகளில் மாட்டிக் கொண்டு வீணாகிப் போனார்...

ஆன்மா என்பதை எப்படி அர்த்தப் படுத்துவது?

கொஞ்சம் அசந்தால் இந்தப் பக்கங்களை ஹவாய் சந்திரமதியும், தைவானில் விஞ்ஞானியாக இருக்கும் டாக்டர் ஜஸ்டின் தாமஸுமே எழுதி நிரப்பி விடுவார்கள் போலிருக்கிறது. அந்த அளவுக்கு சுவாரசியமான கடிதங்கள். எனக்கு அவர்கள் வாசகர்களாக இருப்பது போக அவர்களுக்கு நான் வாசகனாகி விடுவேன் போலிருக்கிறது. இன்றைய தினம் தாமஸுக்கு.

முதலில் நாம் குடிக்கும் குளிர்பானங்களில் உள்ள கெடுதிகள் பற்றி. ----------ல் (குளிர்பானத்தின் பெயர்) ஒரு எலும்புத் துண்டைப் போட்டு ஒரு வாரம் வைத்திருந்தால் எலும்புத் துண்டு முழுவதும் கரைந்து காணாமல் போகக் கூடும். அந்த அளவிற்கு அமிலத் தன்மை அதிகம். குளிர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அதில் 'எதிலின் க்ளைகால்' என்ற வேதிப்பொருளை சேர்க்கிறார்கள். இதன் பயன்பாடு என்னவென்றால்- தண்ணீர் நான்கு டிகிரியில் பனிக்கட்டியாகி விடும் என்பது அனைவருக்கும் தெரியும். தண்ணீரில் எதிலின் கிளைக்காலை சேர்ப்பதால் தண்ணீரின் 'உறைவெப்பம்' மேலும் குறைகிறது. அதாவது, ஒரு சதவிகிதம் எதிலின் க்ளைகால் சேர்க்கப்பட்ட தண்ணீர் நாலு டிகிரியில் உறையாது. இதே எதிலின் க்ளைகாலை பியரிலும் சேர்க்கிறார்கள்.

இந்தியா போன்ற தரக்கட்டுப்பாடு பேணப்படாத நாடுகளில் மிகப்பெரிய கம்பெனிகளும் சில விஷயங்களைப் பற்றி கவலைப்படுவதில்லை. ஏனென்றால் நம்மூரில் உயிரின் விலை மலிவுதானே? அதற்காக ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் போய் இளநீரும் எலுமிச்சை சாறும் குடிக்க முடியுமா? என்று உங்கள் க்ளப் நண்பர்கள் வருத்தப்படலாம். எனவே இந்த வியாக்கியானத்திற்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

நான் தைவானுக்கு வந்த புதிதில் மிளகாய் போன்ற மசாலா பொருட்கள் கிடைக்காமல் அல்லாடியிருக்கிறேன். இப்போதெல்லாம் என் குடும்பம் இந்தியா வந்துவிட்டால் நான் சைனீஸாக மாறிவிடுகிறேன். தினமும் வெறும் கொதிக்க வைத்த காய்கறிகள் தான். இங்கே பெயருக்குத் தான் புத்த மதம். அனைவரும் மூன்று வேளையும் பன்னி கறியை வெளுத்து வாங்குகிறார்கள்.

இந்தியர்களுக்கு நல்ல மரியாதை உண்டு. இதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, இந்தியா புத்தமதம் தோன்றிய புண்ணிய பூமி. மற்றபடி, இங்குள்ள இந்தியர்கள் பெரும்பாலும் விஞ்ஞானிகள் அல்லது வியாபாரிகள் (ஏற்றுமதி-இறக்குமதி தொழில்). நிறைய குஜராத்திகளும் சிந்திகளும் வியாபாரத்துறையில் இருக்கின்றனர். நான் வேலை பார்க்கும் விஞ்ஞானக் கழகத்தில் மட்டும் ஒரு எழுபது எண்பது இந்தியர்கள் இருப்பார்கள். அதிலும் தமிழர்கள் எண்ணிக்கை கணிசமானது. குறைந்தது முப்பது தமிழர்கள் இங்கே குப்பை கொட்டுகிறோம். இங்கு அதிகம் உள்ள மற்ற நாட்டவரான இந்தோனேசியர்கள்,

தாய்லாந்துக்காரர்கள், ஃபிலிப்பைன்காரர்கள் எல்லாம் கூலிவேலை செய்பவர்களாகவும் வீட்டுப் பணியாளர்களாகவும் தான் இருக்கிறார்கள்.

இங்கே வீட்டுக்கு வீடு குடிசைத் தொழில் மாதிரி கணிப்பொறி உபகரணங்களை செய்து தள்ளுகிறார்கள். அனைவருக்கும் கணிப்பொறி கடினப் பொருள் (**Hardware**) வடிவமைப்பது பற்றி நன்கு தெரிந்துள்ளது.

இங்கே வீட்டு உரிமையாளர் பெரும்பாலும் பெண்கள்தான். அதனால் அனைத்தும் அவர்கள் கட்டுப்பாட்டில்தான். நம்மூரில் தகப்பனார் சொத்து ஆண் வாரிசுக்குப் போய்ச் சேருவதைப் போல் இங்கே பெண்களுக்குத்தான் மூதாதையர் சொத்து பாத்தியதை. அதே போல் அனைவரும் பெண் குழந்தைகளையே விரும்புகிறார்கள்.

எல்லோருக்கும் அளவுக்கு அதிகமான அமெரிக்க மோகம் உண்டு. இவர்களின் முகவெட்டு மிகவும் கவர்ச்சிகரமாக இல்லாதபடியால் (அப்படி ஒரு தாழ்வு மனப்பான்மை இங்கே உண்டு, நான் பார்க்கும் இன்றைய தலைமுறை குழந்தைகள் நன்றாகத்தான் இருக்கின்றன!)-குறிப்பாக பெண் குழந்தைகளை அமெரிக்க மோகம் படாதபாடு படுத்துகிறது. அமெரிக்காவில் படிக்க வேண்டும், அமெரிக்காவில் செட்டில் ஆக வேண்டும், அமெரிக்க பாய் ஃப்ரண்ட் வேண்டும் என்றுதான் இவர்கள் கற்பனை விரிகிறது.

சராசரியாக ஒவ்வொருவரும் குறைந்தது மாதம் ஐம்பதாயிரம் தைவான் டாலர் சம்பாதிக்கிறார்கள். இது நம்மூர் பணத்திற்கு எழுபதாயிரம் வரும். ஒரு வீட்டில் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட அனைவரும் நிரந்தர சம்பாத்தியம் செய்பவர்களாகத்தான் இருக்கிறார்கள். அந்த வயதுக்குக் கீழேயுள்ள குழந்தைகள்கூட 'பகுதி நேர' சம்பாத்தியத்தின் மூலம் தங்கள் படிப்பு மற்றும் இத்தியாதி செலவுகளைப் பார்த்துக் கொள்கிறார்கள்.

குடும்பமாக சேர்ந்து சாப்பிடுவது இங்கே பண்டிகை காலங்களில் தான். தந்தையர் தினம், தாயார் தினம் என்று வந்தால் அப்பா அம்மாவைப் பார்க்க ஒரு கூடை பூவுடன் புறப்பட்டு விடுவார்கள். மற்றபடி என்றாவது ஒரு நாள் பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் விருந்து கொடுப்பது உண்டு. அப்படித் தான் இங்கே உறவு முறை இருந்து வருகிறது. என் 'பாஸ்' இரவுச் சாப்பாட்டைக் கூட அலுவலக கேண்டீனில் தான் முடித்து விட்டு வீட்டிற்குச் செல்வார். இது நான் இங்கே கண்ட 'நெகடிவ் பாயிண்ட்'!

நீங்கள் மட்டும் தான் தொடரும் போட்டு எங்களைக் காக்க வைக்க முடியுமா? இப்போது இங்கே மணி 11.38. நடு இரவு. நான் பெரும்பாலும் இரண்டு மணிக்கு மேல் தான் தூங்குவேன். இனி கொஞ்சம் ஒரு ஆராய்ச்சிக் கட்டுரையை தட்டி வெட்டி சரி செய்ய வேண்டும். அதனால் என் கழுத்தறுப்புக்கு கொஞ்சம் இடைவேளை. இன்னும் சங்கதி உண்டு. நாளையும் தொடரும். அன்புடன் ஜஸ்டின் தாமஸ்.

ஜஸ்டின் தாமஸின் கடிதத்தைப் படிக்கும்போது சாப்பாடு, கடின உழைப்பு போன்ற விஷயங்களில் எனக்கு தைவானைப் பிடிக்கிறது. ஆனாலும் ஏதோ ஒன்று குறைகிறது. என்னவென்று சொல்லத் தெரியவில்லை. ஆன்மா? இருக்கலாம். ஆன்மா என்பதை எப்படி அர்த்தப் படுத்துவது? ஸெய்ன் (பாரிஸ்) நதிக்கரையில் விட்டேற்றியாகப் படுத்துக் கிடக்கும் மனிதர்கள் இதற்குப் பதில் சொல்லக் கூடும்.

கலை, கலாச்சாரம், இலக்கியம், நாடகம், சினிமா, சிறு பத்திரிகை எல்லாம் தைவானில் எந்த நிலையில் உள்ளன? இந்தோனேஷியாவின் இப்ரஹீம் காதிர் போன்ற கவிஞன்-கரீன் நுக்ரஹோ போன்ற இயக்குனர் எல்லாம் உண்டா? அதெல்லாம் இருக்கட்டும், துறவிகளாவது உண்டா? (மடாதிபதிகள் அல்ல, உண்மையான துறவிகள்)

சின்ன வயதில் வேட்டைக்குப் போனதைப் பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன். புலிவேட்டை அல்ல. பூனை வேட்டை. காட்டுப்பூனை, பச்சைத் தவளை, பறவைகள், உடும்பு என்று ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான ஏற்பாடுகள் உண்டு. தனித்தனியான பருவங்களும் உண்டு. உதாரணமாக, மழைக்காலத்தில்தான் பறவை வேட்டை சிலாக்கியம். கோடையில் மீன் வேட்டை. பறவை வேட்டைக்கு கேட்டாபல்ட் (உண்டைவில்) அல்லது சுங்குத்தான். சுங்குத்தான் என்ற இந்தக் கருவி உலகில் வேறு எங்காவது பறவை வேட்டைக்கு உபயோகப்படுத்தப் படுகிறதா என்று தெரியவில்லை.

ஒன்பது அடி நீளமிருக்கும். ஊதுகுழலைப் போல் உள்ளே ஒரு ரவை போகும் அளவுக்கு துளையிருக்கும். பறவைகளை வீழ்த்துவதற்கென்றே நன்கு கடினமான ரவைகளைச் செய்து வைத்திருப்பார்கள். கோலி குண்டுகளைப் போல் இருக்கும் அந்த ரவைகளை வாயில் வைத்து பலங்கொண்ட மட்டும் மூச்சை இழுத்து சுங்குத்தான் வழியே பறவையின் கழுத்தைக் குறி பார்த்து அனுப்பினால் கண்ணிமைக்கும் நேரத்தில் பறவை விழுந்து விடும். கையிலேயே மிளகாய்ப் பொடியும் உப்பும் வைத்திருப்போம். பறவையின் தோலை உரித்து உப்பு மிளகாய்ப் பொடி தடவி சுட்டுத் தின்போம். உடும்பு வேட்டையென்றால் நீண்ட சுளுக்கி தான் ஆயுதம். கருவேல முட்களுக்கிடையே நீண்ட நேரம் தவமிருந்து-உடும்பு தென்படும் போது சுளுக்கியால் குத்துவோம். எத்தனையோ பாம்புகளைப் பார்த்திருக்கிறோம். எப்படித்தான் கடிபடாமல் உயிர் பிழைத்தோம் என்று இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாகவும், பயமாகவும் உள்ளது. உடும்பு கிடைத்தால் நாங்களே சுட்டுத் தின்பதில்லை. வீட்டுக்கு எடுத்து வந்து கொடுத்து விடுவேன். உடும்புக் கறி தின்று விட்டு வாந்தியெடுத்தால் மரணம் என்று சொல்வார்கள். பிறகுதான் அதெல்லாம் கப்ஸா என்று புரிந்தது. யாரோ உடும்பு இனத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்திவைத்த பொய்....

மழைக்காலத்தில் மற்றொரு வேட்டை நத்தை. சாதா நத்தை அல்ல. வயல்களில் கிடக்கும் பெரிய நத்தை. நத்தையைச் சமைப்பதற்கு முன் மண் சட்டியில் போட்டு நன்கு சுத்தம் செய்யவேண்டும். செய்யாவிட்டால் ஆண்ட்ரூஸ் அறிமுகப்படுத்திய துரியான் பழத்தைப் போல் நாறும். சுத்தம் செய்து பார்த்தால் பளிங்கைப் போல்-ஜெல்லி மீனைப் போல் இருக்கும். ருசி-ஒருமுறை சாப்பிட்டால் பிறகு 'அடிக்ட்' ஆகிவிட வேண்டும். அப்பேர்ப்பட்ட ருசி. மூல வியாதிக்கும் மருந்து என்பதால் மழைக்காலம் முழுவதும் நத்தைக் கறியுடன் நாட்கள் நகரும். மழைக்காலத்தின் மற்றொரு இன்பம்-ஆமை.

யார் அந்தப் பழமொழியைச் சொன்னதென்று தெரியவில்லை-ஆமை புகுந்த வீடும் அமீனா புகுந்த வீடும் உருப்படாது என்று. அமீனா பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் ஆமைக் கறியைச் சாப்பிடாத ஒரு ஆள்தான் அந்தப் பழமொழியைச் சொல்லியிருக்கவேண்டும்.

தைவானில் நம்மூர் மாதிரி இல்லை. ஆமை அங்கே சுபிட்சத்தின் அடையாளம். தெற்கு சீனாவிலும் தைவானிலும் ஆமையை வழிபாட்டுக்குரியதாகவே கருதுகின்றனர். ஆமையின் நீண்ட ஆயுளே இதற்குக் காரணம். பென் ஹூ தீவுக்கூட்டத்தில் ஒரு பெரும் தீவையே கடல் ஆமை வளர்ப்புக்காக ஒதுக்கியிருக்கிறது தைவான் அரசு.

ஃப்ராய்டுக்கும் பிரகாஷுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

சில வாசகர்கள் கோணல் பக்கங்களுக்கு 'அடிக்ட்' ஆகிவிட்டதாக எழுதி என்னை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறார்கள். 'காலை எழுந்தவுடன் படிப்பு' என்பதைப் போல் காலையில் கணினியின் முன்னே அமர்ந்து விகடனைத் திறந்து கோணல் பக்கங்களைப் பார்க்கிறார்களாம். 'புதிது' என்று தெரிந்தால் சந்தோஷம். இல்லாவிட்டால் மூட் அவுட். வேடிக்கை என்னவென்றால் நானும் கோ.ப.வுக்கு 'அடிக்ட்' ஆகிவிட்டேன் என்பதுதான். எத்தனையோ முடிக்கப்படாத வேலைகள் இருக்கின்றன. எத்தனையோ வாக்குறுதிகள்- மன்னித்துக்கொள்ளுங்கள், வெள்ளிக்கிழமை மாலை ஐந்து மணிக்குள் கட்டுரையைக் கொடுத்து விடுகிறேன், அந்தக் கட்டுரையைத்தான் எழுதிக் கொண்டிருக்கிறேன்-காற்றில் பறக்க விடப்படுகின்றன. ஆனால் எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு கோணல் பக்கங்களை எழுத ஆரம்பித்து விடுகிறேன்.

ஆனால் இடையிலே சில குளறுபடிகளும் நேரத்தான் செய்கின்றன. உதாரணமாக, ஒரு அன்பர் ஒவ்வொரு கோ.ப. வெளிவந்ததும் வெகு சிரத்தையாகப் படித்து தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் அறிக்கைப் போர் நிகழ்த்துவது மாதிரி உடனுக்குடன் எனக்கு வசை கடிதம் அனுப்பி விடுவார். கடிதம் என்றால் ஒருவரி இரண்டு வரி அல்ல. ஏழெட்டு பக்கங்கள். என் அஞ்சல் பெட்டியை அவர் ஒருவரே குத்தகைக்கு எடுத்தது போல் வந்து குவியும் வசை கடிதங்கள். 'பார்த்ததுமே அதைப் படிக்காமல் ரத்து செய்துவிட வேண்டியதுதானே?' என்று கேட்கிறார் தொலைதூரத்து நண்பர் ரவீந்திரன். எங்கே ஸ்வாமி முடிகிறது? நமக்குத்தான் குரங்கு புத்தி ஆயிற்றே? என்னதான் எழுதியிருக்கிறார் பார்ப்போம் என்று பார்த்தால் சூடுபட்டு விடுகிறது. கை அல்ல, மனம். ஒரு கட்டத்தில் பொறுமையிழந்து அன்னாரிடமிருந்து வரும் மின்னஞ்சல்களை நிரந்தரமாக ரத்து செய்தேன். கணினியில் இப்படியொரு வசதி உண்டு என்பதையும் சொன்னவர் ரவீந்திரன்தான். (3000 கி.மீ. தூரத்திலிருந்து கொண்டு கிட்டத்தட்ட எனக்கு கணினி வகுப்பே எடுத்துக் கொண்டிருக்கிறார் அவர்) ஆனால் வசை கடித அன்பரோ இதற்கெல்லாம் அசருகிற ஆளாகத் தெரியவில்லை. விகடனுக்கே கடிதங்களை அனுப்பத் துவங்கினார்.

நான் முப்பது ஆண்டுகளாக சிறு பத்திரிகைகளில் எழுதி வந்துள்ளேன். இப்போதுதான் சமீபகாலமாக வெகுஜன பத்திரிகைகளில் எழுதப் புகுந்துள்ளேன். அதிலும் இவ்வளவு அதிகமாக எழுதுவது இதுவே முதல்முறை. அதற்கு இப்படி ஒரு முட்டுக்கட்டையா என்று எனக்குள் ஒரு சம்சயம். முதல்முதலாக அந்த நபருக்கு பதில் எழுதத் துணிந்தேன்.

நம் ஆட்கள் போலீஸ் என்றால்தான் பயப்படுவார்கள். ஊரில் பார்த்திருக்கிறேன். தண்ணி அடித்து விட்டு வந்து ஏதோ யாரையுமே அடையாளம் தெரியாதது போல் அலம்பல் பண்ணுவார்கள். அம்மாவும், மனைவியும், குழந்தை குட்டிகளும் காலில் விழுந்து கெஞ்சிப் புலம்பினால் கூட கண்டு கொள்ளாமல்-போதை அவ்வளவு ஏறிவிட்டதாம்!- சலாம் வரிசை எடுப்பார்கள். ஆனால் போலீஸ் தலையைப் பார்த்தவுடன் அவ்வளவு போதையும் எங்கோ ஓடி ஒளிந்து விடும். சீக்குப் பிடித்த கோழியைப் போல் பம்முவார்கள்.

இப்படித்தான் ஒரு கவிஞர் குடித்துவிட்டு 'அக்குறும்பு' பண்ணிக் கொண்டிருப்பார். எப்போது என்னிடம் மாட்டுவார் என்று அவர் மீது எனக்கு ஒரு கண். அவருக்கும் அதே போல் என் மீது ஒரு கண் இருந்திருக்கிறது போலும். கேட்கும் போதெல்லாம் வீட்டு விலாசம் கொடுக்காமலேயே டபாய்த்துக் கொண்டு வந்தேன். ஆனால் கவிஞரின் ஹிட்

லிஸ்டில் என் வீடுதான் முதன்மையாக இருந்திருக்கிறது. எப்படியோ தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வந்துவிட்டார். நிறை கொள்ளாத போதையில் இருந்தார். தண்ணியடித்து விட்டு தன்னைக் கவிஞன் என்று மதிக்கும் நண்பர்களின் வீட்டுக்குப் போய் ரவுசு பண்ணுவதே கவிஞர் அறிந்த கலகம்! தள்ளாடியபடி ஏதோ உளறிக் கொண்டே வந்தார். அவிழ்ந்து விழுந்து விடும் போலிருந்தது வேஷ்டி. நான் அப்போது குடியிருந்தது ஓர் அடுக்கு மாடிக் குடியிருப்பு.

எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். கேட்பதாயில்லை கவிஞர். அக்கம்பக்கத்தில் வீடுகள் இருந்தன. வீட்டுக்காரருக்குத் தெரிந்தால் எனக்கு டின் கட்டி விடுவார். அப்படி ஒரு நடுத்தர வர்க்கச் சூழல் அப்போது.

''இங்கே பாரும் கவிஞரே.. உமக்கு நீர் பாரதி என்று நினைப்பு இருந்தால் பார்த்தசாரதி கோவில் யானை வாலைப் போய்ப் பிடியும்.. இங்கே வந்து அழிச்சாட்டியம் பண்ணினீர் என்றால்.. ஒன்றுமில்லை.. அப்படியே உம்மைத் தூக்கி இந்த மாடியிலிருந்து கீழே போட்டு விடுவேன்'' என்று அமைதியான குரலில் சொன்னேன்.

அது மூன்றாவது மாடி. கீழே விழுந்தால் கவிஞருக்கு எலும்பு கூட மிஞ்சாது. சொன்னால் நான் செய்து விடுவேன் என்பதும் கவிஞருக்குத் தெரியும். போன இடம் தெரியவில்லை போதை. பதவிசாக உள்ளே வந்து தயிர்சாதம் சாப்பிட்டு விட்டுப் போனார். அதிலிருந்து என்னைப் பார்க்கும் போதெல்லாம் எவ்வளவு போதையிலிருந்தாலும் உடம்பை ஜப்பானியர் போல் வளைத்து வலது கையைத் தொப்புளுக்கு அருகே கொண்டு சென்று ஒரு வணக்கம். தேவையா இது என்று நினைத்துக் கொள்வேன்.

இதே பாணியில் அந்த வசை கடித அன்பருக்கும் ஒரு 'இக்கு' வைத்தேன். 'போலீஸில் புகார் செய்து விடுவேன், ஜாக்கிரதை' என்பதே அந்த இக்கு. ஒரு விஷயம், அன்பர் அமெரிக்காவில் வசிப்பவர், நம் லோக்கல் போலீசுக்கா பயப்படுவார்? எனவே, இன்டர்போலுக்குப் போய் விடுவேன் என்று எழுதினேன்.

அதோடு ஆட்டம் க்ளோஸ். ஆபாச மெயில் நின்றுவிட்டது! சுய பிரதாபத்துக்கு மன்னியுங்கள். விமர்சனங்களுக்கு-அவை எவ்வளவு கடுமையாக இருந்தாலும்-நான் என்னைத் திறந்தே வைத்திருக்கிறேன். ஆனால் அவதூறுகள் வேண்டாம். உதாரணமாக, ஒரு இணைய இதழில் தொடர்ந்து என்னைப் பற்றிய அவதூறுகளைப் பரப்பி வருகின்றனர். நான் புத்தகங்களே படிப்பதில்லையாம்! அப்படியே படித்தாலும் அதற்கான அடையாளங்கள் என் எழுத்தில் தெரியவில்லையாம்-அப்படியானால் நான் என்ன படிக்காத மேதையா?

இதற்குப் பெயர் விமர்சனமா? அவதூறா? பத்திரிகை தர்மம் என்றெல்லாம் ஏதும் கிடையாதா?

-'இதைப் பற்றியெல்லாம் ஏன் சாரு கவலைப்படுகிறீர்கள்? உங்கள் காரியத்தில் மட்டும் கருத்தாக இருங்கள்' என்று அறிவுறுத்துகிறார் லண்டன் சுபா.

என்ன செய்வது? நான் என்ன முற்றும் துறந்த முனிவனா? இதற்கிடையில் வேறு சில தமாஷ்கள்! 'நீங்கள் எழுதியிருந்தது தவறு. மாமா மாமா மாமா என்ற பாடலில் நடனம் ஆடியது எம்.ஆர்.ராதா அல்ல; கள்ளப் பார்ட் நடராஜன்' என்று விகடனுக்கு ஒரு கடிதம். ஐயா, எங்க வீட்டுப்பிள்ளை எம்.ஜி.ஆர். நடித்த படம் என்று சொன்னால் 'இல்லை, நம்பியார் நடித்த படம்' என்று கடிதம் எழுதினால் என்ன அர்த்தம்? அந்தப் பாடலில்

கள்ளப் பார்ட் நடராஜனும் ஆடியிருக்கிறார். ஆனால் அது செய்தியல்ல. எம்.ஆர்.ராதா நடனம் ஆடியதுதான் செய்தி.

ஒரு நண்பர் கேட்டார், கோ.ப. எழுதுவதற்கு முக்கால் மணி நேரம் ஆகிறதா என்று. பேனாவைப் பிடித்து காகிதத்தில் எழுதுவதற்கு அவ்வளவு நேரம்தான் ஆகிறது. ஆனால் அதை எழுதத் திட்டமிடுவதற்கும், படிப்பதற்கும் நாள் கணக்கில் ஆகிறது. லோசாவின் ஒரு நாவலைப் படிக்க ஒரு வாரம், கூவாகம் அலிகள் திருவிழா சென்று வர நான்கு நாட்கள், திருவனந்தபுரம் திரைப்பட விழாவுக்காக பத்து நாட்கள்... இதோ அடுத்த வாரம் ராஜஸ்தான் செல்ல இருக்கிறேன்.. ஒட்டகத்திலேயே பாலைவனத்தைச் சுற்றிவர வேண்டும் என்பது திட்டம். இரண்டு வார காலம் எடுக்கலாம்.

எழுத்து என்பது அதிகபட்ச உழைப்பையும் ஈடுபாட்டையும் வேண்டி நிற்பது. இதே போல் விமர்சனம் எழுதுகிறவர்களும் ஓரளவேனும் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டும்.

சிங்கப்பூர் பல்கலைக்கழகத்திலிருந்து டாக்டர் ட்டி.சி.தெய்வராஜ் கோணல் பக்கங்களை வெகுவாகப் பாராட்டி எழுதி அத்துடன் ஒரு முக்கியமான கருத்தையும் தெரிவித்துள்ளார். அதாவது, திருவள்ளுவரை சமணர் என்று கூறுவது தவறு. அப்படி அவர் சமணராக இருந்தால் 'மழித்தலும் நீட்டலும் வேண்டா..' (குறள் எண்: 280) என்று எழுதியிருப்பாரா? மேலும், திருவள்ளுவரைப் போன்ற ஒருவர் சாதி மத அடையாளங்களையெல்லாம் தாண்டியவர்கள் இல்லையா? இளங்கோவையும் கம்பனையும் அவர்களது சாதிமத அடையாளங்களுடன் பார்க்கலாமா?

-இது தெய்வராஜின் கேள்வி.

தெய்வராஜின் உள்ளார்ந்த ஆத்ம சுத்தியை நான் மதிக்கிறேன். கலைஞர்கள் தேச, மத, குடும்ப எல்லைகளைக் கடந்தவர்கள்; அவர்கள் துறவிகளை ஒத்தவர்கள் என்று நான் நீண்ட காலமாக எழுதி வந்திருக்கிறேன். என் எழுத்தில் பரிச்சயம் உள்ளவர்களுக்கு இது தெரியும்.

திருவள்ளுவரை நான் சமணர் என்று கூறியது இம்மாதிரி ஜாதி மத அடையாளத்தை குறுகிய அர்த்தத்தில் போட்டுப் பார்ப்பதற்காக அல்ல. சில வரலாற்று நிகழ்வுகளை ஆய்வு செய்யும் போது எல்லாவற்றையும் நாம் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஐம்பெருங்காப்பியங்களை எழுதிய கவிஞர்கள் யாவரும் பௌத்தரும் சமணருமே ஆவர்.

சமண, பௌத்த மதத் தத்துவங்கள் பலவும் இக்காப்பியங்களின் ஊடாகக் காணக்கிடைக்கின்றன. இவற்றைச் சொல்வதால் அவர்களை சாதி மத அடையாளங்களுக்குள் குறுக்குவதாக அர்த்தமாகாது. மேலும் சமண மதம் தமிழ்நாட்டில் வேரூன்றாததற்குக் காரணம், அது தமிழர் வாழ்வுக்கு மிகவும் அந்நியமாக இருந்தது என்பதுதான். இந்து அரசர்களின் அடக்குமுறையும் ஒரு காரணம்தான், இல்லையென்று சொல்லவில்லை. 3000 சமணர்கள் கழுவில் ஏற்றப்பட்ட வரலாறும் இங்கே இருக்கிறது. ஆனாலும், சமணம் அடியோடு இல்லாமல் போனதற்குக் காரணம்-அது உடலை மறுத்ததுதான் **(Negation of body)**. உடலை-உடலின் துய்ப்பை-உடல் சார்ந்த இன்பங்களை (காமம், உணவு, நடனம், இசை, இன்னபிற) அறவே மறுத்தது சமணம். இதற்கு மாறாக அப்போதைய தமிழர் வாழ்வு முறை உடல் துய்ப்பைக் கொண்டாடியது. சங்க இலக்கியத்தில் இதற்கான ஆதாரங்கள் உள்ளன.

பிற்காலத்தில் சமணமும் பௌத்தமும் இந்தியாவில் அருகிப் போனதற்குக் காரணம் அவற்றின் உடல் மறுப்புக் கோட்பாடும்-இதற்கு மாறாக இந்து மதம் உடல் துய்ப்பை ஏற்றுக் கொண்டதும் தான் என்கின்றனர் ஆய்வாளர்கள். கோவில்களிலுள்ள காமக்களியாட்டச் சிற்பங்களை இவர்கள் தங்கள் கருத்துக்கு ஆதாரமாகக் கூறுகின்றனர்.

இது இப்படியிருக்க, நாம் **aesthetics of poetry**யோடு லௌகீக அளவுகோல்களைக் கொண்டு வந்து போடக் கூடாது. சமீபத்தில் நடந்த ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். என் நண்பர் ஒருவர் தன் இளம் மனைவியிடம் ஸீரோ டிகிரி நாவலைக் கொடுத்து படிக்கச் சொல்லியிருக்கிறார். எத்தனை பெரிய ஆபத்தில் மாட்டிக் கொள்ள இருக்கிறோம் என்பதை நண்பர் அறியவில்லை. அந்தப் பெண்ணோ பாவம்.. படு ஆசாரமான குடும்பப் பின்னணியைச் சேர்ந்தவர். ரெண்டே பக்கத்தைப் படித்து தேள் கொட்டியது போல் அலறி அழ ஆரம்பித்து விட்டார். 'ஐயோ.. நீங்களெல்லாம் அந்த செக்ஸ் டாக்டர் பிரகாஷ் கும்பல் என்று தெரியாமல் போய்விட்டதே' என்பதுதான் புலம்பலின் மையக் கருத்தாம்.

பாவம், அந்தப் பெண்மணிக்கு ஃப்ராய்டுக்கும் பிரகாஷுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. பாலியலுக்கும் பால்வினை நோய்க்கும் வித்தியாசம் தெரியவில்லை. கோவில் சிலைக்கும் நீலப்படத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

ஒரு மருத்துவ ஆராச்சியாளன் ஹ்யூமன் அனாட்டமி பற்றி அறிந்துகொள்ள பிரேதங்களைத் தான் அறுக்க வேண்டியுள்ளது. அதற்காக அந்த மருத்துவனுக்கு நெக்ரோஃபீலியா இருக்கிறது என்று சொல்ல முடியுமா?

ஹ்யூமன் அனாட்டமி தெரியாமல் ஓவியமோ சிற்பமோ இல்லை. அதற்காக அவர்கள் மனித உடலை நிர்வாணமாகக் காண வேண்டியுள்ளது. என்னுடைய சில கதைகளுக்காக நானே சில சவக்கிடங்குகளுக்குச் செல்ல வேண்டிருந்தது. உடனே லௌகீக வாதி என்னை மன நோயாளி என்று எழுதுகிறான்.

எனவே லௌகீக வாழ்வின் சட்ட திட்டங்கள் வேறு; கலையின் அழகியல் வேறு. இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

இது தொடர்பாக ஒரு நீண்ட மேற்கொள் தர விரும்புகிறேன்-ப.சிங்காரம் எழுதிய புயலிலே ஒரு தோணி என்ற நாவலிலிருந்து. இதுவே தமிழின் மிகச்சிறந்த நாவல் என்பது என் கருத்து. இதன் கதாநாயகன் பாண்டியன் பேசுகிறான்.

''அடிகாள்! பூம்புகார்த் துறவிகாள்! உங்களைத்தான், உங்களையேதான் அழைக்கிறேன்.. பூம்புகாரில் மாவன்னாக் கோவன்னா மார்க்கா கோவலன் செட்டியார் பற்றித் தங்களுக்குத் தெரிந்திருக்கும்!... ம்ஹ்ங்... கோவன்னா அவர்கள் எடுத்து வைத்திருந்த திருக்கடையூர் தாசி மாதவிக்கு ஒரு மகள் பிறந்திருப்பதாகவும்-அந்தத் தங்கச்சி பெயர் மணிமேகலை என்றார்கள்-அதுவும் பருவ வயதில் துறவறம் பூண்டு சாக்கிய மடத்தில் போய் ஒடுங்கி விட்டதாகவும் சொல்கிறார்களே, உண்மை தானா?...

இன்னொரு சங்கதி. வீடு கசந்த பின் தாங்களும் திருக்கடையூருக்குத்தான் போனீர்களோ... என்ன பெயர்? திருவுடைய நாயகி! நல்ல பெயர், மணியான பெயர்... ம்ம்? மூன்று மாதத்தில் புளித்து விட்டதாக்கும். பிறகு மாமல்லை, நாகை, கொற்கை... தொழிலைக் கவனிக்க நேரமில்லை. மேலாளும் அடுத்தாட்களும் சேர்ந்து பட்டை நாமம் போட்டார்கள். கடை நொடித்துவிட்டது. உடுத்திய வேட்டியோடு, 'ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல' என்று பரதேசம் கிளம்பிவிட்டீர்கள்... இவ்வளவுக்கு

ஆகியும் கூடப் பெண்ணாசை அடியோடு ஒழியவில்லையே. ஆமாம், சமயங்களில் நினைவு வரத்தான் செய்யும். அதற்குத்தான் ஒரு இக்கு வைத்துப் பாடியிருக்கிறீர்களே-

நினைவெழுந்தால் வீதிக்குள் நல்ல

விலை மாதருண்டிந்த மேதினியில்

-என்று. அடிகாள், என்ன முன்யோசனை, என்ன நுட்ப புத்தி!

ஏஞ்சாமி, விலைமாதர்தாம் தங்களுக்குப் பிடிக்குமாக்கும்... கொல்லைப் புற மாங்கனிகளில் விருப்பம் இல்லையோ? ஆமாம், அது சரிதான். சந்தைக் கடைச்சரக்கின் ருசியே அலாதி. அதுதான் இழுத்த இழுவைக்கெல்லாம் ஒத்து வரும். ம்ம், சாமிக்கு வயது அறுபதை அடுத்திருக்குமே? சரி, சரி, ம்ம். வயது காரணமாய் வரும் நரம்புத் தளர்ச்சி.. உடல் வலு மருந்து.. இதில் கூச்சம் என்ன, சாமி. எல்லாருக்கும் உள்ளதுதான். எனக்குத் தெரிந்த வரையில் இதற்கு ராஜமருந்து ஒன்றே ஒன்றுதான்-மதுரைத் தென்னோலைக்காரத் தெரு நொண்டி வைத்தியரின் 'மன்மத பாண லேகியம்! மூன்றே மூன்று டப்பி. நாளைக்கு மூன்று வேளை-தொண்ணூறு நாள்... யுத்த காலம் சரக்குக் கிடைக்காது. கப்பல் விட்ட பிறகுதான் ஊரிலிருந்து... ம் ம், அதற்கிடையே ஒரு கைபாக மருந்து. டொரியான் பழவாடை தங்களுக்குப் பிடிக்குமோ? சரி, டொரியான் சுளைகளைப் பிழிந்து ரசம் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்-கால்படி ரம்புத்தான், பீசாங்மாஸ், மங்குஸ்தான், வாதுமைப் பருப்பு, முந்திரிப் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, குங்குமப் பூ, கற்கண்டு, குல்கந்து, பால், நெய், தேன் இவற்றைச் சம எடையாய்-ஒரு தோலா எடுத்து விழுதுப் பதமாய் அரைத்து, டொரியான் பழச்சாற்றில் போட்டு அடுப்பில் வைத்துப் பாதியாகச் சுண்ட வைத்துக் காலையில் மாலையில் சாப்பிட வேண்டும்...''

என்று பாண்டியன் இளங்கோ அடிகளிடம் பேசிக் கொண்டே போகிறான். உடல் மறுப்பை வாழ்வின் ஆதாரமாகக் கொண்ட ஒரு பௌத்தத் துறவியிடம் உடல் துய்ப்பில் ஆழ்ந்து கிடக்கும் ஒரு இளைஞன் பேசும் பேச்சு இது... திருவள்ளுவரையும் இப்படி யாராவது 'கவனித்து' இருக்கிறார்களா என்று தெரியவில்லை!

'பறவை பாதையை மாற்றிக் கொள்ளுமா?

இன்றைய தினம் சில மின்னஞ்சல்கள். அதற்கு முன்னால் ஒரு விசாரணை. 'ஏன் நீங்கள் உங்களுக்கு வரும் பாராட்டுக் கடிதங்களை வெளியிடுகிறீர்கள்? அவை அசுவாரசியமாக உள்ளன' என்று எழுதுகிறார் ஒரு இங்கிலாந்து வாசகி. என் பெயரையோ ஊரையோ வெளியிடக் கூடாது என்று பயமுறுத்தியிருப்பதால் இவரை இ.வாசகி என்ற இனிஷியலுடன் அழைப்போம். படு சுவாரசியமான கடிதங்களை எழுதும் இந்த இ.வாசகி பாராட்டுக் கடிதங்களுக்கு மட்டும் ஏன் முகத்தைச் சுளிக்கிறார்? பாராட்டுக் கடிதங்களை வெளியிடுவது ஒரு கொண்டாட்டம். கோப்பையை வென்ற விளையாட்டுக்காரர்கள் ஷாம்பேய்னை உடைத்து ஊற்றிக் கொண்டாடுவதில்லையா? ரிவால்தோ ஆளுயர மேடை மீது ஏறி நின்று உலகக் கோப்பையை தலைக்கு மேல் உயர்த்திப் பிடித்து மகிழ்ச்சியில் திளைக்கவில்லையா? இத்தனை பேர் கொண்டாடும் போது இதை வெளியே சொல்லக் கூடாது என்பது ஒரு மாதிரி அழுகுணித்தனம் என்று தோன்றுகிறது.

இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். சில வாசகர்களின் அன்பு கற்பனைக்கும் எட்டாததாக உள்ளது. சென்ற வாரத்தில் ஒரு நாள் என் மின்னஞ்சல் பெட்டியில் ரமேஷ் அப்பாதுரை என்ற வாசகரிடமிருந்து 1200 **Kb** அளவுக்கு ஒரு கடிதம்! எனக்கு ஒரே

ஆச்சரியம். இந்த அளவுக்கு நீண்ட கடிதம் என்றால் அது நூறு பக்கமாவது இருக்க வேண்டுமே என்ற குழப்பத்துடன் உள்ளே சென்றதும் நான் கண்ட காட்சி... அதை எப்படிச் சொல்வதென்றே தெரியவில்லை. கோணல் பக்கங்கள் மீதும் என் மீதும் எவ்வளவு ஆர்வமும் அக்கறையும் இருந்திருந்தால் இந்த வாசகர் இப்படி ஒரு காரியம் செய்திருப்பார் என்று நெகிழ்ந்து போனேன். இதுவரை நான் எழுதியிருந்த கோணல் பக்கங்களிலிருந்து சுமார் இருபது கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து தனது முப்பது நண்பர்களுக்கு அனுப்பியிருந்தார் அப்பாதுரை. மிகவும் வண்ணமயமான பின்னணி கொடுத்து பலவிதங்களிலும் வடிவமைத்து மிகுந்த கலை நேர்த்தியுடன் அதை 'ஃப்ளாஷ்' செய்திருந்தார் அவர்.

பிறகு இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னர் மற்றொரு இன்ப அதிர்ச்சி. ரமேஷ் அப்பாதுரையிடமிருந்து இந்த முறை 1300 **Kb** அளவுக்கு ஒரு மின்னஞ்சல். என்னவென்று அறிவதற்கான ஆர்வத்துடன் ஒவ்வொரு படியாகக் கடந்து சென்றேன். கடைசிப் படியில் நான் அமர்ந்திருந்த கணினியில் ஏதோ கோளாறு. அதற்குள் நான் அன்றைய தினம் கணினியில் மூன்று மணி நேரம் செலவழித்திருந்தேன். பாக்கெட்டில் நோட்டுக் கற்றைகள் எக்கச்சக்கமாக இருந்ததால் (வேறு மாதிரி எழுதினால் அது ஏழ்மை பற்றி எழுதியதாகி விடும். ஏற்கனவே தோழனிடம் ஏழைமை பகரேல் என்று நாம் ஒரு உடன்பாட்டுக்கு வந்திருக்கிறோம்) எழுந்து கொள்ள வேண்டிய நிலை. என்ன செய்வதென்று புரியவில்லை. அப்படியே விட்டு விட்டும் போக முடியாது. காரணம்-**1300 Kb** என்பதால் ஏற்கனவே மின்னஞ்சல் பெட்டி தன் அளவை தாண்டியிருந்தது. வாசகர்களின் அஞ்சல் திரும்பிப் போய் விடும் என்பதால் அப்பாதுரை அனுப்பியிருந்த **Gloomy Sunday** விஷயத்தை ரவீந்திரனுக்கும் மற்றும் சில நண்பர்களுக்கும் அனுப்பி வைத்து விட்டு என்னிடம் இருந்ததை 'டெலீட்' செய்தேன்.

மிகவும் வருத்தமாக உணர்ந்தேன். ஆனால் முற்றாக அழித்து விடவில்லையே என்று ஆறுதலும் செய்து கொண்டேன். அன்றைய தினம் இரவு வழக்கம் போல் தொலை தூரத்திலிருந்து ரவீந்திரன். சந்தோஷத்தில் மனிதர் ஆகாயத்துக்கும் பூமிக்குமாகக் குதித்தார். ரமேஷ் அப்பாதுரையின் அன்பைப் பற்றியே ஒரு பத்து நிமிடம் பேசினார். எப்பேர்ப்பட்ட காரியம் இது என்று வியந்தார். உண்மை தான். அப்பாதுரை அந்த அளவுக்கு முயற்சி எடுத்திருக்கிறார். முன்பு செய்தது போலவே என் **Gloomy Sunday** கட்டுரையை முப்பது பேருக்கு மிக வண்ணமயமாக 'ஃப்ளாஷ்' செய்ததோடு மட்டுமல்ல. அக்கட்டுரை முழுவதுமே **Gloomy Sunday** பாடலை நீங்கள் கேட்கலாம்-பியானோவிலும், பாடலாகவும். அப்பாதுரை அனுப்பியிருந்த அந்த இசையை ஒரு கணினி மையத்திலிருந்து என் தொலைபேசிக்கு இணைத்துவிட்டார் ரவீந்திரன். 'ரொம்ப செலவாகுமே?' என்று நான் பதறினேன். 'உங்களுக்காகவும், அப்பாதுரை எடுத்துக் கொண்ட அக்கறைக்காகவும், இந்த இசைக்காகவும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் சார்'-இது ரவீந்திரன். (என்னை சார் என்று அழைக்கும் மூன்று பேரில் இவரும் ஒருவர்) சுமார் இருபது நிமிடம் தொலைபேசியிலேயே **Gloomy Sunday**யைக் கேட்டேன்.

இவ்வளவுக்கும் எனக்கு ரமேஷ் அப்பாதுரை எங்கே இருக்கிறார், அவர் யார், என்ன செய்கிறார் என்று ஒரு விபரமும் தெரியாது. அவர் தன்னைப் பற்றி எதுவுமே சொல்லிக் கொள்ளவில்லை.

இப்போது நாம் கடிதங்களுக்குள் செல்வோம். சுப்ரமணியன் எழுதுகிறார்.. கோணல் பக்கங்களைத் தவிர உங்களின் பிற எழுத்துக்கள் எதையும் படித்திராத உங்கள் என்.ஆர்.ஐ. வாசகர்களில் நானும் ஒருவன். ஜப்பான், கொரியா, சீனா, ஆஸ்திரேலியா, இந்தியா என்று என் வேலை நிமித்தமாக சுற்றிக் கொண்டே இருக்கிறேன்.

இதற்கிடையில்தான் உங்கள் கோணல் பக்கங்கள்... சில மாதங்களுக்கு முன்பே உங்களுக்கு எழுத வேண்டுமென்று தீர்மானித்தேன். ஆனாலும் எழுதவில்லை. காரணம்- எனக்கு எழுத்தாளர்களின் படைப்புதான் முக்கியமே தவிர அதற்குப் பின்னால் இருக்கும் படைப்பாளி அல்ல. (மட்டுமல்லாமல் எனக்கே நூறு மின்னஞ்சல்கள் வருகின்றன. எழுத்தாளருக்கு எழுத எங்கே நேரம்?)

இருந்தாலும் இப்போது இதை எழுதிக் கொண்டிருப்பதன் காரணம்-மற்ற வாசகர்களைப் போலவே எனக்கும் உங்களது நேர்மை பிடித்திருக்கிறது. வெறும் நேர்மை என்று சொல்ல மாட்டேன். மூர்க்கமான நேர்மை. அதுவும், உங்கள் வெளிப்படையான எழுத்துப் பாணியும் படைப்பு-படைப்பாளி என்ற பாகுபாட்டை மங்கலாக்கி விட்டது. இதை மிகச்சரியாகச் செய்தவர் பாரதி. உங்களை நான் அதே தளத்தில் வைக்கவில்லை என்றாலும் இதை என்னால் சொல்லாமலும் இருக்க முடியவில்லை. உங்களைப் பற்றி யோசிக்கும் போது இதெல்லாம் என் நினைவுக்கு வருகிறது. முக்கியமாக உங்கள் பாணி.

(இடையில் சில சமயங்களில் ஹிப்பாக்ரஸியும் எட்டிப் பார்க்கவே செய்கிறது. என்ன செய்வது? யாருமே முழுமையாய் அப்பழுக்கற்றவராக இருந்துவிட முடியாது தானே?)

விரைவில் இந்தியா வர இருக்கிறேன். சென்னைக்கும் வந்து போவேன். பெரும் பயணியான நீங்கள் சமீபத்தில் வெளியூர் போகும் உத்தேசம் ஏதும் உண்டா? இல்லையெனில் ஒரு நாள் மாலை நீங்கள் இந்த சராசரி வாசகனுடன் நல்ல தரமான ஸ்காட்சை பகிர்ந்து கொள்ளலாம்.

அன்புடன்
சுப்ரமணியன்.

பல கடிதங்களில் வாசகர்கள் எழுதும் பொதுவான ஒரு விஷயம்-நாங்கள் சராசரி வாசகர்கள் என்பது. இருந்தால் என்ன? ஒரு விஷயத்தை ரசிக்கக் கூடிய திறன் இருக்கிறது அல்லவா? போதும் என்கிறேன். இப்படி எழுதினால் அந்த இங்கிலாந்து அம்மணி 'பட்டர் போடாதே' என்கிறார்.

எனக்குத் தெளிவாகத் தெரிகிறது-இந்தப் பக்கங்களை லோசாவைப் படித்த ஒரு தமிழ்நாட்டு இலக்கியவாதி ரசிக்க மாட்டார். காரணம்-ஒரு 'சராசரி' வாசகருக்குக் கூட இருக்கக் கூடிய ரசனை உணர்வை அவர் இழந்து எவ்வளவோ காலம் ஆகிறது.

மற்றொரு கடிதம். எழுதியிருப்பவர் கோதாவரி. இலினாய் பல்கலைக்கழகத்தில் மென்பொருள் பொறியாளர் (எல்லா தேசிகளையும் போலவே). கணவர் அதே பல்கலைக் கழகத்தில் நியூக்ளியர் என்ஜினியரிங்கில் பி.ஹெச்டி செய்கிறார். (நியூக்ளியர் ஃபிஸிக்ஸ் கேள்விப்பட்டிருக்கிறேன். நியூக்ளியர் என்ஜினியரிங் என்றால் என்ன?) 'கோணல் பக்கங்கள் என்றால் எனக்கு அப்படி ஒரு பிரியம். இது புத்தகமாக அச்சில் வருமா?' என்று கேட்டிருக்கிறார் கோதாவரி.

'மற்றவர்களின் அபிப்பிராயங்களைப் பற்றி கவலையே படாதீர்கள். நீங்கள் உங்கள் பாணியையே பின்பற்றுங்கள். '**I write as a bird flies**' என்று எழுதி விட்டு இப்போது பின்வாங்கலாமா?' என்று கேட்டு பலரும் எழுதியுள்ளனர். முக்கியமாக, அட்லாண்டாவிலிருந்து அஷோக்: ''பறவை மற்றவர்களின் விருப்பத்திற்கேற்ப தன் பாதையை மாற்றிக் கொள்ளுமா என்ன? பக்கார்டி தக்காளி ஜூஸாக ஏன் மாறியது?

பறவை தன் ரெக்கைகளுடன் அதன் போக்கிலேயே பறக்கட்டும் என்றே ஆசைப்படுகிறேன்.''

ஸாண்டா க்ளாரா (கலிஃபோர்னியா)விலிருந்து ஜி.சீனிவாசன், ஸ்டாக்ஹோமிலிருந்து (ஸ்வீடன்) ஆர்.சுந்தரராமன், லண்டன் சுபா போன்ற பலரும் இதே கருத்தையே வலியுறுத்தியுள்ளனர். அதிலும் சுபா சற்று ஆணித்தரமாகவே எழுதியுள்ளார். (''நீங்கள் மற்றவர்களுக்கு விளக்கம் சொல்ல வேண்டியதன் அவசியம் என்ன? உங்கள் அனுபவங்களை எங்களோடு பகிர்ந்து கொள்வதற்காக நாங்கள்தான் உங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். எனவே யாருக்காவது உங்கள் எழுத்து பிடிக்காவிட்டால் படிக்காமல் இருக்கலாமே? யார் அவர்களைக் கட்டாயப்படுத்துவது? உங்கள் எழுத்தில் எனக்குப் பிடித்திருப்பது அதன் நேர்மைதான். அது இன்றைக்கு வெகு அரிதான விஷயமாகி விட்டது. எனவே உங்கள் பாணியிலேயே எழுதுங்கள். அதுதான் எங்களுக்குப் பிடித்திருக்கிறது''-சுபா) 'ஏன் பாண்டிச்சேரி க்ளப்பை கலைத்து விட்டீர்கள்?' என்று கவலையுடன் விசாரித்திருக்கிறார்கள் முத்துக்குமாரும், சங்கர் கண்ணனும். கலைக்கவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். கவலை வேண்டாம். பறவை தன் போக்கிலேயே பயணத்தைத் தொடரும்...

14.7.2002

இந்தியன் தாத்தாவினால் வந்த வினை

அமெரிக்காவிலிருந்து வந்த ஒரு சுவாரசியமான அஞ்சல்:

பின்வருவது இரவு உணவின் போது எனக்கும் என் மனைவிக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்..

''பார்த்தாயா... கலாம் இந்தியாவின் ஜனாதிபதி ஆகப் போகிறார்'' என்றேன் என் மனைவியிடம்.

''கலாம்? யார் அது?'' என்று வந்தது பதில்.

''அப்துல் கலாம்.. ராக்கெட் தயாரித்தவர்''

''அப்படியா.. எனக்கு அவரைத் தெரியாது''

''என்ன விளையாடுகிறாயா? கலாமை உனக்குத் தெரியாது? மை குட்னஸ்.. இப்போதய ஜனாதிபதியாவது யார் என்று தெரியுமா?''

''ம்.. தெரியும்''

''யார்?''

''யாரோ நாராயணசாமி''

அதற்கு மேல் நான் பேசவில்லை.

இதை என் வீட்டில் இரவு உணவின் போது அவந்திகாவிடம் சொல்லி சிரித்துக் கொண்டிருந்தேன். இடையே எனக்கு ஒரு சந்தேகம்.

''ஆமாம்.. உனக்குத் தெரியுமா இப்போதைய ஜனாதிபதி யார் என்று?''

அவந்திகாவுக்கு சற்று கோபம். 'என்ன.. இது கூடவா எனக்குத் தெரியாது?' என்பது போல் என்னை முறைத்தாள்.

''தெரியுமா?'' என்று மீண்டும் கேட்டேன்.

''தெரியும்''

''யார்?''

''ஆர்.கே.நாராயண்''

சிரித்ததில் எனக்குப் புரையேறி விட்டது.

(இங்கே ஒரு இடைச் செருகல்... எப்போதும் வெளிநாட்டு எழுத்தாளர்களைப் பற்றியே எழுதுகிறீர்களே, உங்களுக்கு தேசப்பற்று இல்லையா? ஏன் நம்முடைய இந்திய எழுத்தாளர் ஆர்.கே.நாராயண் பற்றி எழுதக் கூடாதா? என்று ஒரு வாசகர் எழுதியிருந்தார். இப்போது அந்தக் குறையை அவந்திகா நிவர்த்தி செய்து விட்டாள்..நன்றி.)

ஆனால் பிறகு யோசித்துப் பார்த்ததில் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை என்று புரிந்தது. அமெரிக்க நிலைமை பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் இந்தியாவில் பெண்களின் நிலை எப்படியிருக்கிறது?

சமூக வாழ்வில் பெண்களுக்குப் பங்கு இல்லை. குடும்பத்தைப் பராமரிப்பதும் அதோடு கூடுதலாக திரவியம் தேடுதலும் அவர்களது பணியாக இருந்து வருகிறது. இதற்கிடையில் கலாமைத் தெரியுமா நாராயணனைத் தெரியுமா என்று பொது அறிவுக் கேள்வியெல்லாம் கேட்டால் என்ன செய்வது?

அவந்திகாவுடன் வெளியே செல்வதென்றால் எனக்கு கொஞ்சம் பயம். திடீரென்று சாலையில் மாதுரி தீட்சித்தையோ ஜெயப்ரதாவையோ பார்த்து விட்டது போல் பலரும் வாயைப் பிளப்பது எனக்கு தர்ம சங்கடமாக இருக்கும். அதோடு விட்டாலாவது பரவாயில்லை. சிலர் ஆபாசமான கமெண்ட் அடிப்பார்கள். அருகில் வந்து இடிப்பார்கள். அதிலும் நான்கைந்து பேராக இருந்தால் கேட்கவே வேண்டாம். நம் ஆட்களுக்கு கூட்டமாக இருந்தால் விசேஷமான ஒரு வீரம் வந்து விடும்... அதனால் சேஷ்டைகளும் அதிகமாகி விடும். எதுவுமே செய்ய இயலாதவனாக இருப்பேன் நான். சண்டைக்குக் கிளம்பினால் எப்போதோ வெகு அரிதாக-ஆடிக்கு ஒரு முறை, அமாவாசைக்கு ஒரு முறை-வெளியே கிளம்பிய அத்தனை சந்தோஷமும் போய் அடிதடி கலாட்டா தந்த சலிப்புடன் வீட்டுக்குத் திரும்ப நேரிடும். எதிர்ப்பைத் தெரிவிக்கா விட்டால் மனசாட்சி நம்மை வறுத்து எடுத்து விடும்...

சென்ற ஆண்டு சென்னையின் பிரதான பகுதியில் நடந்த சம்பவம் ஒன்று இப்போது ஞாபகம் வருகிறது. ஒரு தம்பதி இரவு ஒன்பது மணியளவில் ஃபாஸ்ட்ஃபூட் கடைக்குச் சென்றுள்ளனர். அப்போது அங்கிருந்த கல்லூரி மாணவர் சமுதாயம் அந்தப் பெண்ணை

கிண்டல் செய்ய, அப்பெண்மணியின் கணவர் அதை எதிர்த்துக் கேட்க, மாணவர் சமுதாயம் அவரை புரட்டி எடுத்துவிட்டது. இதைக் கண்ட லோக்கல் ஏரியா ஆட்கள்- ஏற்கனவே மாணவர் சமுதாயத்தின் மீது அவர்களுக்குத் தீராத கோபம்-அதற்குள் ஓடி ஒளிந்து விட்ட மாணவர் சமுதாயத்தைத் தேடிப் பிடித்து நையப்புடைத்து விட்டனர். பின்னர் அந்தக் கல்லூரியே திரண்டெழுந்து ஒரு பக்கமும், அந்தப் பகுதி மக்கள் மற்றொரு பக்கமுமாக நின்று போர் செய்தனர். போர் முடிந்த மறுநாள் போலீசார் அங்கே பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டனர்.

இந்தச் சம்பவம் வேறு அடிக்கடி ஞாபகம் வந்து என்னைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும். இதெல்லாம் போதாது என்று போலீஸ் துறையில் உயர்ந்த பொறுப்பில் இருக்கும் அந்தப் பெண்மணி சொன்னது வேறு என் கிலியை அதிகப்படுத்தியிருந்தது. அந்தப் பெண் போலீஸ் அதிகாரிக்கு அவந்திகா நெருங்கிய தோழி. ஒருநாள் அவர்கள் இருவருமாக வெளியே செல்ல இருந்தது. அன்றைய தினம் நான் பாண்டிச்சேரியில் இருந்ததால் அவந்திகாவுடன் பேசுவதற்காக அந்த அதிகாரியை தொலைபேசியில் அழைத்தேன். 'ம்ஹூம்.. அவந்திகா இங்கே இல்லை.. வெளியே செல்வது ரத்தாகி விட்டது' என்றார் அவர்.

'ஏன்? திடீரென்று ஏதாவது வேலை வந்து விட்டதா?'

'வேலை ஒண்ணுல்ல.. அந்த அவந்திகா பொண்ணு ரொம்ப அழகாக்த்தா.. நாங்கப் பாட்டுக்க ஆம்பளைத் தொணல்லாம வெள்ளப் போய் எவ்னாது ஈவ் டீசிங் பண்ணி வச்டான்னு வச்சுங்க.. அது வேறப் பிரச்னெ..' அந்த அதிகாரி தமிழில் பேசினால் வெகு அழகாக சென்னை பாஷையில் பேசுவார்.

'ஒரு பெரிய போலீஸ் அதிகாரி பேசுகிற பேச்சா இது?' என்று கேட்டேனே ஒழிய நான் அவந்திகாவோடு செல்லும்போது ஏற்படும் தர்மசங்கடம் அப்போது என் ஞாபகத்தில் வந்தது.

திடீரென்று சென்ற சனிக்கிழமை அன்று அவந்திகா என்னிடம் 'சினிமாவுக்குப் போகலாமா?' என்ற போது 'இன்னமும் பாபா ரிலீசாகவில்லை போலிருக்கிறதே' என்றேன். மேற்கண்ட எண்ணங்களும் மனதில் ஓடி மறைந்தன.

'ஏதாவது சினிமாவுக்குப் போகலாமா' என்றாள் அவள்.

அந்த காம்ப்ளெக்ஸில் நான்கைந்து அரங்குகள் உண்டு. ஆனால் கூட்டமே இல்லை. யோசித்ததில் அன்றைய தினம் இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் இறுதி ஆட்டம் என்பது ஞாபகம் வந்தது. (மறுநாள் தினசரிகளைப் பார்த்ததில் அன்றைய ஆட்டம் கடந்த பத்தாண்டுகளில் நடந்த மிக சுவாரசியமான ஆட்டங்களில் ஒன்று என்பது தெரிந்தது. பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை)

என்ன படம் போகலாம் என்று யோசித்தோம். 'பஞ்சதந்திரம் போகலாமா?' என்று கேட்டேன். இரண்டு காரணங்கள். ஒன்று, எனக்கு கமலின் காமெடி படங்கள் பிடிக்கும். இரண்டாவது, அந்தப் படத்தின் தயாரிப்பாளர் வ.தேனப்பன் மணியின் நெருங்கிய நண்பர். இரண்டொரு முறை பீச் மீட்டிங்கில் சந்தித்திருக்கிறோம். 'இவ்வளவு பணமும் என்னுடையதல்ல. ஒரு வங்கி அதிகாரி மாதிரி இதை நான் நிர்வகிக்கிறேன். அவ்வளவு தான்' என்று சொல்பவர். இந்த மனநிலையை சினிமாத்துறையில் காண்பது அரிது. ஆனால் அவந்திகாவுக்கோ பெரும்பான்மையான தமிழ்ப் பெண்களைப் போல் கமல் படங்கள் பிடிக்காது. இருந்தாலும் வேறு படங்களைத் தேர்ந்தெடுப்பதில் அவளுக்குத்

தயக்கம் இருந்தது. ஏற்கனவே அழகி படத்திற்குப் போய் இரண்டு பேரும் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டு ஓடி வந்த அனுபவத்தை நினைவு கூர்ந்தாள். தமிழில் எப்போதுமே இம்மாதிரி 'கலை'ப்படங்கள் தான் எனக்குப் பெரும் துன்பத்தை அளித்து வந்துள்ளன. கடைசியில் பஞ்சதந்திரம் என்றே முடிவானது.

தவறான முடிவு... மைக்கேல் மதன காமராஜன், சதி லீலாவதி போன்ற படங்களில் இருந்த உற்சாகம் இந்தப் படத்தில் இல்லை. எல்லா முகங்களுமே மிகவும் களைப்புற்று இருந்தன. ஒரே தாத்தாக்களும் பாட்டிகளுமாகவே தென்பட்டனர். அதிலும் கமலின் முகம்... மிகவும் வருத்தமாக இருந்தது. எல்லாம் அந்த இந்தியன் தாத்தாவினால் வந்த வினை. தாத்தா வேஷம் போடுகிறேன் என்று ஹாலிவுட்டிலிருந்து மேக்கப் மேதைகளை வரவழைத்து ஆறு மணி நேரம் ஏழு மணி நேரம் என்று மேக்கப் போட்டு அந்த அழகான முகத்தை என்ன பாடுபடுத்தி விட்டார்! தாத்தா வேஷம் என்ன அவ்வளவு கஷ்டமா? நம் ரஜினியைப் பாருங்கள்.. ஒரே ஒரு தாடியை ஒட்ட வைத்தால்-தாத்தா. அவ்வளவு ஏன்... எம்ஜியாரின் மாறு வேடங்களெல்லாம் இல்லை? மாறுவேடம் பூண்டு வில்லன் கூட்டத்துக்கிடையே புகுந்து கலக்குவதற்கு ஒரே ஒரு மச்சம் அவருக்குப் போதுமானதாக இருந்ததே? மச்சம் இல்லாதவர் நிஜ எம்ஜியார்.. கன்னத்தில் ஒரு ஸ்டிக்கர் பொட்டை மச்சமாக ஒட்ட வைத்து விட்டால் மாறுவேட எம்ஜியார்... ஆனானப் பட்ட நம்பியாருக்கே அடையாளம் தெரியாது.. அதையெல்லாம் நாங்கள் ரசித்து விசிலடிக்க வில்லையா? இதற்குப் போய் கமல் இவ்வளவு சிரமப்பட வேண்டுமா? இப்போது பாருங்கள்.. இந்தியன் படத்துக்குப் போட்ட வேடம் இன்னமும் கலைய மறுக்கிறது. (அவருக்கு ஒரு நட்பு ரீதியான வேண்டுகோள்: இனிமேல் தாத்தா வேடங்களுக்கு நிஜ தாத்தாவையே நடிக்க வைக்கலாம்!)

படம் பார்த்து முடித்த போது ஒரு ஸ்கூல் டிராமாவைப் பார்த்த உணர்வே ஏற்பட்டது. அவந்திகாவிடம் சொன்னேன்.. 'இப்படி ஒரு படத்தைப் பார்க்க வரவேண்டுமா?'

அதற்கு அவள் சொன்ன பதில்: 'எப்போது பார்த்தாலும் எழுத்தும் படிப்புமாகவே இருக்கிறீர்கள். இந்தப் படத்தை வைத்தாவது மூன்று மணி நேரம் உங்கள் பக்கத்திலேயே இருக்க முடிந்ததே?'

நான் வசிப்பது சின்மயா நகர் என்றும் பாராமல் அவளை அந்த இடத்திலேயே முத்தமிட்டேன்...

15.7.2002

இங்கிலாந்து- தொழில்நுட்பம். ப்ரஸீல்-கலை

நமது வாசகர் ரவீந்திரனின் குரல் மிகவும் கனமாக இருக்கும். ஆறு அடிக்கு மேற்பட்ட உயரம், 90 கிலோ எடை என்பதாகத் தான் அவரது உருவத்தை கற்பனை செய்து வைத்திருந்தேன்.

நேற்று அவர் என்னிடம் பேசும்போது 'எனக்கு மறதி ஜாஸ்தியாகி விட்டது' என்று வருத்தப்பட்டார். இதை என்னிடமா சொல்வது என்று நினைத்துக் கொண்டேன்.

சமீபத்தில் நடந்த ஒரு சம்பவம். ஜெர்மனியில் **Hameln** என்ற சிற்றூரில் வசிக்கும் குமரேசன் பற்றி இந்தப் பக்கங்களில் எழுதியிருக்கிறேன். அந்த ஊரின் **Bagpiper** கதையையும் குறிப்பிட்டிருந்தேன். அவருக்கும் எனக்கும் பத்து இருபது மின்னஞ்சல்

போக்குவரத்தும் நடந்திருக்கும். திடீரென்று அவருடைய அஞ்சலுக்கு நான் இவ்வாறு பதில் எழுதினேன்..

''குமரேசன்.. நீங்கள் யார்? எந்த ஊரில் வசிக்கிறீர்கள்? அறிமுகமே இல்லாமல் அஞ்சல் அனுப்பியிருக்கிறீர்களே?''

நல்லவேளை, குமரேசன் நல்ல மனிதர். கோபித்துக் கொள்ளவில்லை. ஆனால் நக்கல் பிடித்த மனிதர் போலிருக்கிறது. 'நீங்கள் என்னுடைய அஞ்சல்களைப் படிக்காமலேயே ரத்து செய்து விடுகிறீர்கள் போலிருக்கிறது' என்று எழுதியிருக்கிறார்!

இதை ரவீந்திரனிடம் குறிப்பிட்டு ஆறுதல் சொன்னேன்.

''அது மட்டுமல்ல விஷயம். அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்து விடுகிறேன்'' என்றார் ரவீந்திரன்.

''ஏன்?''

''சாப்பிடுவதே இல்லை. நூறு கிராம் சோறு சாப்பிட்டாலே பெரிய விஷயம்''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. 90 கிலோ எடையுள்ள ஆஜானுபாகுவான ஒரு ஆளுக்கா இந்த மாதிரிப் பிரச்னை?

''ஆமா ரவீந்திரன், உங்கள் எடை என்ன?''

''நாற்பது கிலோ''

''என்னது, நாற்பது கிலோவா?''

''ஆமாம்''

''வயசு?''

''முப்பத்தாறு''

''குடிப்பிங்கிளா?''

''பதினெட்டு வருஷமா குடிக்கிறேன்''

இதற்குப் பிறகு ஆச்சரியப்படுவதை ஓரம் கட்டிவிட்டு விஷயங்களை மட்டும் கேட்டுக் கொண்டேன்.

''எப்போதாவது குடிப்பிங்கிளா, இல்ல...''

''தெனமும் குடிப்பேன்''

''தெனமுமா? எவ்வளவு... குவார்ட்டரா?''

''இல்லீங்க, அறுநூறு மில்லி''

''என்னய்யா இது.. சாராயக் கணக்கு மாதிரி சொல்றீங்க.. அறுநூறு மில்லீன்னா கிட்டத்தட்ட ஃபுல்லாச்சே?''

''அதாவது சாரு சார்.. என் கதையைக் கேட்டிங்கன்னா ஒரு பெரிய நாவல் மாதிரி எழுதலாம். மின்னாடில்லாம் ஸ்காட்ச் தான் அடிச்சுண்டிருந்தேன்.. அதிலே போதையில்லேன்னு இப்ப ஓல்ட் மாங்க் அது இதுன்னு இறங்கிட்டேன். குவார்ட்டர்லாம் அடிச்சா நமக்கு எறும்பு கடிச்சா மாதிரி கூட இருக்க மாட்டேங்கிறது.. அதனால தினமும் ஒரு ஃபுல் வாங்கிடுவேன்''

சரி.. இதை எப்போது அவர் சாப்பிடுகிறார்? பகலில் அலுவலக வேலை. இரவில் தினமும் அவர் என்னோடு பதினோரு மணி அளவில் பேசும்போது மிகவும் சாதாரணமாகத் தான் இருக்கிறார். அப்படியானால்...

''எப்போ குடிப்பிங்க ரவீந்திரன்?''

''உங்கள்ட்ட பேசிட்டு போனப்பறம் ரூம்ல உக்காண்டு ரெண்டு மூணு மணி வரைக்கும்.. ஃபுல்லையும் சாப்பிட மாட்டேன்.. கொஞ்சம் மிச்சம் வச்சிருவேன்'' என்று ஆறுதலாகச் சொன்னார்.

''புகைப்பீங்களா?''

மாட்டேன் என்று சொல்ல வேண்டுமே என மனம் பிரார்த்தித்தது.

ம்ஹூம்.. என் எதிர்பார்ப்பு வீணாயிற்று.

''ம்..'' என்றார்.

''என்ன சிகரெட்?''

''ஃபோர் ஸ்கொயர்''

''ஐயோ அதுவா? சுருட்டு மாதிரில்ல இருக்கும்?''

''ஆமாம்''

''ஒரு நாளைக்கு எத்தனை?''

''நாலு''

''நாலு தானா? பரவால்ல''

''நாலு பாக்கெட் சார்''

''நீங்க எப்படி உயிரோட இருக்கிங்க ரவீந்திரன்?''

''அப்படித்தான் சார் எல்லாரும் கேக்குறாங்க''

ஃப்ரெஞ்ச் எழுத்தாளர் **Louis Ferdinand Celine** எழுதிய **Death in Instalment Plan** என்ற நாவல் எனக்கு ஞாபகம் வந்தது. ரவீந்திரனிடம் சொன்னேன்.

குடி பற்றிய சமூகத் குற்றவுணர்வு எந்த அளவு எனக்குப் பிடிக்காதோ அதே அளவுக்கு குடியை துன்பவியல் சடங்காக மாற்றுவதும் எனக்குப் பிடிக்காது. நாம் தான் குடிக்கலாமே தவிர குடி நம்மைக் குடிக்கலாகாது.

நான் என்றுமே தனியாகக் குடித்ததே இல்லை. குளிர்சாதனப் பெட்டியில் நண்பர்கள் தரும் ஒயின் போத்தல்கள் மாதக் கணக்கில் கிடக்கும். தொட்டதே இல்லை. நண்பர்களோடு மட்டும்தான் குடிப்பது.

தனிமையின் காரணமாகவே நீங்கள் குடிக்கிறீர்கள். இசையும் இலக்கியமும் இருக்கும் போது ஏன் இப்படிக் குடித்து அழிய வேண்டும்?

-இப்படி எவ்வளவோ அறிவுரைகள் சொன்னேன். ஆனால் எல்லாம் வீண். காரணம்- ரவீந்திரனுக்கு இதெல்லாம் ஏற்கனவே தெரிந்திருந்தது.

''சரி, கடைசியில் என்ன தான் வழி?''

இமயமலைச் சாரலில் உள்ள போதை மறுவாழ்வு மையத்தில் ஒரு மாதம் தங்கி சிகிச்சை எடுத்துக் கொள்ளப் போகிறாராம்.

அதனால் என்னுடைய ராஜஸ்தான் பயணம் ஒரு மாதம் தள்ளிப் போய்விட்டது. ரவீந்திரனுடன் தான் பாலைவனத்தில் பயணம் செய்வதாக இருந்தேன்.

அது சரி, எப்படி இவருக்கு அவ்வளவு கனமான குரல்? பெருத்த சரீரம் உள்ளவர்களுக்கு தேனினும் இனிய குரலும் ஒல்லிப் பிச்சான்களுக்கு கனத்த குரலும் தான் சிருஷ்டியின் விளையாட்டு போலும்! (உதாரணம்: நுஸ்ரத் ஃபத்தே அலிகான், அத்னான் சாமி, எஸ்.பி. பாலசுப்பிரமணியன்)

கால் பந்து உலகக் கோப்பையை ப்ரஸீல் வென்றுவிட்டது பற்றி நான் எதுவுமே எழுதவில்லையே என்று சிகாகோ விஜய் மோகன் ஆச்சரியப்பட்டிருந்தார். எப்படி எழுதுவது? இந்த முறை உலகக் கோப்பை ப்ரஸீலுக்குத் தான் என்று போட்டியின் துவக்கத்திலேயே எழுதியிருந்தேன். அதே போல் ப்ரஸீல் அணியே கோப்பையை வென்று என் கணிப்பையும் நிஜமாக்கியது. இது வாசர்களுக்கு மிகச் சாதாரணமான ஒரு விஷயமாகத் தென்பட்டு விட்டது போலும்.. ஒருத்தர் கூட எனக்கு வாழ்த்து தெரிவிக்கவில்லை. அந்த வருத்தத்தினால்தான் நானும் எதுவும் எழுதவில்லை. ஒருத்தர் கூட எழுதவில்லை என்று எழுதியது தவறு. இரண்டு பேர் எழுதியிருந்தார்கள். ஒருவர் குவைத்திலிருந்து பற்பநாத பலவேச முத்து (என்ன ஒரு சுவாரசியமான பெயர்!) மற்றொருவர்-தில்லியிலிருந்து ஜெயா சுந்தர்.

இருந்தாலும் எனக்கு வருத்தம் தீரவில்லை. தொடர்ந்து எனக்கு மின்னஞ்சல் அனுப்பும் வாசகர்களின் எண்ணிக்கை-150. ப்ரஸீல் வென்றதும் வாழ்த்துக்கள் வந்து குவிந்திருக்க வேண்டாமா?

அதுகூட பரவாயில்லை. நான் எழுதியதைத் தவறாகப் புரிந்து கொண்டு ஒரு டஜன் கடிதங்கள். கடிதம் எழுதியவர்கள் வெவ்வேறு கண்டங்களில் வாழ்ந்தாலும் மிகச்சரியாக தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர்.

‘தோழனோடு ஏழைமை பகரேல்‘ என்ற உடன்படிக்கைக்கு நாம் ஏற்கனவே வந்துவிட்டோம். ஆனால் வாசர்களே அதை ஆரம்பித்தால் என்ன செய்வது? சொல்லி வைத்தாற்போல் அத்தனை கடிதங்களும் ஒரே மாதிரியுள்ளன. சில உதாரணங்கள்:

ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக மாணவர் ஒருவரின் கடிதம்:

‘‘நான் உங்கள் கோணல் பக்கங்களுக்கு அடிக்ட் ஆகிவிட்டேன். தினமும் விகடன்.காம்-ஐத் திறந்து கோ.ப. புதிதாக வந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். உங்கள் எழுத்து எனக்குப் பிடித்திருப்பதற்கு பல காரணங்கள். ஒன்று-உங்கள் எழுத்தின் வெளிப்படைத் தன்மை. இதை பல வாசகர்கள் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளார்கள் என்றாலும் இதை மீண்டும் வலியுறுத்தவே விரும்புகிறேன். காரணம்-இன்றைய சமூக வாழ்வில் இது காணாமல் போய்விட்ட விஷயம். மற்றொரு காரணம்-உங்கள் எழுத்திலுள்ள ஏராளமான தகவல்கள். இதுவரை நாங்கள் அறிந்திராத நிலவெளிகளுக்கும், இசைக்கும், கலாச்சாரத்திற்கும்-ஏன், உணவுக்கும் கூட எங்களை நீங்கள் இட்டுச் செல்கிறீர்கள். இதற்காக உங்களுக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ஏனென்றால் இதன் பொருட்டு நீங்கள் பெரும்பகுதி நேரத்தைச் செலவிட வேண்டியிருக்கும் என்பதை உணர்கிறேன். எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் இந்தப் பக்கங்களை நீங்கள் தொடர்ந்து எழுத வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது உங்கள் கருத்துக்களுடன் நான் முரண்படும் இடங்கள்.. முதலில் கால்பந்து பற்றிய உங்களின் ஒருதலைப்பட்சமான எண்ணம். நீங்கள் கால்பந்து ரசிகர் என்று சொல்லுகிறீர்கள். ஆனால் அதற்கு மாறாக ப்ரஸீல் அல்லது அர்ஜென்டினாவின் ரசிகராகவே தெரிகிறீர்கள். உங்களுடைய வாதம் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. இந்த நாடுகள்தான் வெல்ல வேண்டும் என்பதற்கு நீங்கள் தரும் காரணம், இவை ஏழை நாடுகள் என்பது. இந்த நாடுகளின் கால்பந்தாட்டத் திறமை பற்றி நீங்கள் சொல்லியிருந்தால் நான் உங்கள் கருத்தை ஒத்துக் கொண்டிருப்பேன். இவ்வளவு விஷயம் தெரிந்த ஒருவரிடமிருந்து இப்படி ஒரு ‘வீக்‘கான வாதத்தை நான் எதிர்பார்க்கவில்லை. ப்ரஸீலுக்கு எதிராக மைக்கேல் ஓவன் அடித்த கோல் சாதாரணமான கோல் என்று வேறு சொல்லியிருக்கிறீர்கள். மைக்கேல் ஓவன் ஒன்றும் நீங்கள் நினைப்பது போல் சாதாரண ஆள் இல்லை. 1998 உலகக் கோப்பையை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இங்கிலாந்து-அர்ஜென்டினா போட்டியின் போது ஓவன் ஓடிய ஓட்டம் கோலாக மாறிய அற்புதத்தை நீங்கள் பார்த்திருக்கலாம். இந்தத் தென்னமெரிக்க நாடுகள் ஏழை நாடுகளாக இருந்தாலும் இதன் ஆட்டக்காரர்கள் பணக்கார ஐரோப்பிய க்ளப்புகளுக்கு ஆடி மில்லியன் கணக்கில் சம்பாதிக்கிறார்கள்.

இறுதியாக ஒன்று-நீங்கள் வெகுஜன பத்திரிகையில் எழுதுவதை சிலர் ஆட்சேபிப்பதாக எழுதியுள்ளீர்கள். வெகுஜன பத்திரிகையில் எழுதுவதில் என்ன தவறு? இன்னும் சொல்லப்போனால் ஆங்கிலத்தில் இருப்பதைப் போல் தமிழில் தரமான ‘த்ரில்லர்‘ கூட இல்லை என்பதே என் கருத்து. அன்புடன்------

தமிழின் வெகுஜன எழுத்து பற்றி இந்த மாணவரின் கருத்துடன் எனக்கு முழு உடன்பாடு உண்டு. உதாரணமாக, இங்கிலாந்தைச் சேர்ந்த **Roald Dahl** ஒரு வெகுஜன எழுத்தாளர் தான். நான் அவருடைய கோடிக்கணக்கான ரசிகர்களுள் ஒருவன். அவருடைய **Visitor** என்ற கதையைத் தேடிப் பிடித்துப் படித்துப் பாருங்கள். அந்தக் கதையின் முடிவை யாராவது முன் கூட்டியே யூகிக்க முடிந்துவிட்டால் அவருக்கு என் வணக்கங்களும் வாழ்த்துக்களும் உரியது. சிறுவர்களுக்கான எழுத்து என்று மகா அசட்டுத்தனமாக இங்கே தமிழில் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். சிறுவர் கதை எழுதிவதிலும் **Roald Dahl** ஒரு

மேதை. அவருடைய சிறுவர் கதைகளைப் படிக்கும்போது நாமே சிறுவராகி விடுவோம். (**Roald Dahl** ஐ எனக்கு அறிமுகப்படுத்தியவர் இயக்குனர் ராஜேஷ்வர்!)

அடுத்து, சிங்கப்பூரிலிருந்து மாரியா வின்ஸன்ட் ராபின்ஸனின் கடிதம்: கால்பந்தாட்டத்தில் உங்கள் வாதத்தைப் பார்த்து (ஏழை நாடுகள் வெற்றியடைய வேண்டும்) நான் ஆச்சரியமடைந்தேன். அந்த ஏழை நாடுகளின் ஆட்டமும் 'ஏழையாக' இல்லாதவரை எனக்கு இதில் ஆட்சேபனை இல்லை. எனக்கு வேண்டியது ஆட்டத்தின் தரம். அரசியல், பொருளாதாரக் காரணங்களை விளையாட்டுடன் சேர்ப்பது பற்றி எனக்கு ஆச்சரியமும் வருத்தமும் ஏற்படுகிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி, அர்ஜென்டினாவுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான கால்பந்தாட்டம் போன்ற சமயங்களில் ஏற்படும் டென்ஷனுக்கும் இதுதான் காரணம். **Gladiator** படத்தில் பார்க்கும் போர்க் காட்சிகள் தான் என் ஞாபகத்துக்கு வருகிறது.

இந்த உலகக் கோப்பை போட்டிகளில், அர்ஜென்டினா மைய ஆடுகளத்தில் நன்றாகவே ஆடியது. பந்தையும் அதிக நேரம் தன் வசம் வைத்திருந்தது. ஆனால் கோல் போடுவதில் கோட்டை விட்டு விட்டது. இத்தாலி பெரும்பாலும் பாதுகாப்பு ஆட்டமே ஆடியதால் கொரியாவிடம் தோற்றுப் போனது. ஸ்வீடனுக்கு எதிரான ஆட்டத்துக்கு ஸெனகலுக்குப் பாராட்டுக்கள். ஃப்ரான்ஸிடம் உத்வேகமே இல்லை. முதல் சுற்றிலேயே வீட்டுக்குப் போனது சரிதான்... ராபின்ஸனின் கடிதம் இன்னும் அட்டகாசமாகத் தொடர்கிறது.

திரும்பவும் சொல்கிறேன். ஏழை நாடு என்பதால் மட்டும் ப்ரஸீல் வெல்ல வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அப்படி எண்ணியிருந்தால் இந்தியாவை விட அதற்குத் தகுதியான நாடு வேறு என்ன இருக்க முடியும்? மேலும், ரொனால்தோவா கோல் போடுவார்? சாரு நிவேதிதாவைத் தவிர கோல் போடும் தகுதி பெற்றவர் வேறு யார் உளர்?-என்று இந்த ரீதியில் அல்லவா எழுதியிருப்பேன்?

நண்பர்கள் குறிப்பிடும் அந்தக் கட்டுரையில் மேற்கொண்டு நான் எழுதியதைக் கவனியுங்கள்... அல்லது அதன் உள்ளார்ந்த வாதத்தைப் பிடியுங்கள்.

உருகுவாய் ஏழை நாடு தான். ஆனால் கால்பந்தாட்டத்தில் முதல் உலகக் கோப்பையை வென்ற நாடு உருகுவாய்.அதோடு மட்டுமல்லாமல் மீண்டும் ஒருமுறை உலகக் கோப்பையை வென்றது. இது தவிர உருகுவாயைச் சேர்ந்த எதுவார்தோ கலியானோ உலகப் புகழ்பெற்ற ஒரு இலக்கியவாதி. அவர் எழுதியுள்ள **Soccer in Sun and Shadow**வில் ப்ரஸீல் பற்றி எழுதியுள்ளவற்றை மீண்டும் வாசியுங்கள். அதுமட்டுமல்ல. சிலேயும் ஏழை நாடு தான். ஆனால் கால்பந்தாட்டம் பற்றி ஒரு க்ளாஸிக் நாவல் அங்கிருந்து வந்துள்ளது. **Antonio Skarmeta** எழுதிய **I dreamt the Snow was burning** என்ற நாவலை தயவு செய்து படித்து விட்டு எழுதுங்கள்.

நம்முடைய வாசர்களுக்கு 'ஏழை' என்ற வார்த்தையே அலர்ஜியாக உள்ளது என்று நினைக்கிறேன். என் வாதம் என்னவென்றால்-ஏழை நாடுகளாக இருந்தும் சப்பாத்துகள் வாங்கக் கூட பைசா இல்லாத நிலைமையிலும் உலகத்தரமான கால்பந்தாட்டத்தை அவர்களால் தர முடிகிறது என்பது தான்.

அதைவிட முக்கியமான விஷயம் என்னவென்றால்-கால்பந்தாட்டம் அங்கே ஒரு விளையாட்டு மட்டுமல்ல. அதுதான் அவர்களின் மதம், உயிர்மூச்சு, வாழ்க்கை, இலக்கியம், கலாச்சாரம்... எல்லாம்.. எல்லாம்.. எல்லாம்...

கால்பந்தாட்டம் ஏன் விளையாட்டாக மட்டும் நிற்கவில்லை? அதைப் பற்றி க்ளாஸிக் நாவல் ஒன்று ஏன் வெளிவருகிறது? எதுவார்தோ கலியானோ என்ற இலக்கியவாதி ஏன் கால்பந்தாட்டம் பற்றி ஒரு புத்தகமே எழுதுகிறார்?

காரணம்-தென்னமெரிக்காவில் கால்பந்தாட்ட மைதானம் என்பது விளையாட்டு மைதானமாக இல்லாமல் ஒரு கொண்டாட்ட வெளியாக மாறுகிறது. ஆனால் இங்கிலாந்திலோ மற்ற ஐரோப்பிய நாடுகளிலோ அது ஒரு தொழில்நுட்பக்களம். அவ்வளவு தான்.

கால்பந்து என்பது பற்றி இங்கிலாந்துக்கும் ப்ரஸீலுக்கும் ஒரு **epistemological** வேறுபாடு இருந்து வருகிறது. அது தொழில்நுட்பத் துல்லியத்துக்கும் **(precision)** சிருஷ்டித் தன்மைக்கும் **(creativity)** இடையிலான வேறுபாடு. ஐரோப்பியர்கள் அல்லது இங்கிலாந்துக்காரர்கள் ஏற்கனவே கற்றுத்தரப்பட்ட விதிகளை ஆடுகளத்தில் திரும்பவும் நிகழ்த்துகிறார்கள் **(relive).** ஆனால் தென்னமெரிக்கர்கள்-குறிப்பாக ப்ரஸீல்-ஆட்டத்தின் போதே ஒவ்வொரு கணத்திலும் அப்போது தான் முதன்முதலாக வாழ்கிறார்கள்-அல்லது சிருஷ்டிக்கிறார்கள். இங்கிலாந்து- தொழில்நுட்பம். ப்ரஸீல்-கலை. கால்பந்தாட்டம் ப்ரஸீலிடம் கலையாக மாறிவிட்டது. அதனால்தான் பெலேயை சிறந்த வீரர் என்று சொல்லாமல் 'கடவுள்' என்று சொல்லுகிறார்கள். சிருஷ்டியில் ஈடுபடுபவனே கடவுள். ஒரு உதாரணம்-21.6.2002 அன்று இங்கிலாந்துக்கு எதிராக ரொனால்தீன்யோ அடித்த ஃப்ரீ கிக் சிருஷ்டித்தன்மையின் உச்சம்.

இந்தப் பக்கங்களில் நான் அடிக்கடி **Dionysian spirit** பற்றிக் குறிப்பிட்டு வருகிறேன். அதை அந்தந்தக் கட்டுரையோடு ரத்து செய்துவிடாமல் இவற்றோடெல்லாம் இணைத்து வாசிக்க வேண்டும்.

ப்ரஸீலில் கால்பந்தாட்ட ஆடுகளம் **Dionysian spirit**உடன் கூடிய **carnival space.**

ஆனால் இங்கிலாந்துக்கு ஆதரவாக எழுதுபவர்கள் அனைவரும் இங்கிலாந்தில் வசிப்பவர்கள் (மாரியோ வின்ஸண்டின் கடிதம் மிகவும் 'அப்ஜெக்டிவாக' இருப்பதால் அவரை இங்கே குறிப்பிடவில்லை) நம்மிடமுள்ள காலனியாதிக்க அடிமை மனோபாவம் பற்றி சற்றே தைரியத்துடன் கூச்சமின்றி நாம் பரிசீலனை செய்தாக வேண்டும். இங்கிலாந்தில் முன்னைப்போல் இனவாதம் இல்லை என்கிறார்கள். அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். **Bend it like Beckham** என்ற படத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் வரும் கால்பந்தாட்ட வீராங்கனை இந்தியப் பெண்ணாக வருவது இங்கே கவனிக்கத் தக்கது.

எனவே ஆக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மாணவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், என்னுடைய வாதத்தில் அரசியலோ பொருளாதாரமோ இல்லை என்பது தான். நான் சொல்வது விளையாட்டு கூட இல்லை-முழுக்க முழுக்க அழகியல். ப்ரஸீல்காரர்கள் விளையாட்டை எப்படி உடல் அழகியலாக (**aesthetics of body**) மாற்றி விட்டார்கள் என்பதையும், கால்பந்தாட்ட ஆடுகளம் ப்ரஸீலில் எப்படி நடன வெளியாக மாறிவிட்டது என்பதையும் குறித்தே நான் பேசுகிறேன்.

இங்கே ஒரு சிறு விஷயம் நினைவுக்கு வந்து ஆச்சரியமளிக்கிறது.

ப்ரஸீல் வென்றது பற்றி எனக்கு வாழ்த்து தெரிவித்த பற்பநாத பலவேச முத்து (குவைத்) ப்ரஸீலில் சாவோ பாவ்லோ அருகே ஸொர்த்தாவோ ஸீன்யோ என்ற ஊரில் சில காலம் வசித்தாராம்! ப்ரஸீல்காரர்களின் கால்பந்தாட்ட **passion** பற்றி எழுதியிருக்கிறார்...

13.7.2002

''கொத்துப் பரோட்டா மொழி பெயர்ப்பு!''

காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ் ஒருமுறை சொன்னார்.. அந்த நாவல் முழுவதையும் என்னால் மனப்பாடமாகச் சொல்ல முடியும் என்று.

திவ்ய பிரபந்தத்தை மனப்பாடமாகப் பாடுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆனால் உரைநடையால் அமைந்த ஒரு நாவலை யாரேனும் மனப்பாடமாகச் சொல்ல முடியுமா? முடியும் என்கிறார் மார்க்வெஸ். மார்க்வெஸ் என்ன சாதாரண நபரா? லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் மிக முக்கியமான புள்ளி. உலகமெங்கும் கொண்டாடப்பட்ட **One Hundred Years of Solitude** நாவலை எழுதியவர். அப்பேர்ப்பட்ட ஒரு இலக்கியவாதி சொல்கிறார் 'அந்த நாவல் எனக்கு மனப்பாடமாகத் தெரியும்' என்று.

'லத்தீன் அமெரிக்க இலக்கியத்தின் மீது அந்த நாவல் அளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்திய வேறொரு நூல் கிடையாது' என்கிறார் சூஸன் ஸொன்டாக்.

இத்தனை பாராட்டுகளுக்குரிய அந்த நாவலின் பெயர்: பேத்ரோ பராமோ. எழுதியவர் யுவான் ருல்ஃபோ. மெக்ஸிகோவைச் சேர்ந்தவர். 1918 ஆம் ஆண்டு பிறந்த ருல்ஃபோ 1926-29 ஆம் ஆண்டுகளில் நடந்த கிறிஸ்தெரோக்களின் கலகத்தில் தன் தந்தையை இழந்தார். கிறிஸ்துவின் பெயரால் மதவாதிகள் கம்யூனிஸ்டுகளையும் பகுத்தறிவுவாதிகளையும் கொன்றொழித்தது தான் கிறிஸ்தெரோக்களின் கலகம் என்று சொல்லப்படுகிறது. சமீபத்தில் குஜராத்தில் பார்த்தோமே அதைப் போன்ற கொடுமைகளுக்கு கம்யூனிஸ்டுகள் ஆளாயினர். அவர்களின் காதுகளும் நாக்குகளும் அறுக்கப்பட்டன. கண்கள் பிடுங்கப்பட்டன. பெண்கள் வன்புணர்ச்சி செய்யப்பட்டனர். அதாவது நாத்திகவாதிகளுக்கு கிறிஸ்துவின் பெயரை உச்சரித்தபடி மதவாதிகள் கொடுத்த தண்டனை இது!

நாம் ருல்ஃபோவிடம் வருவோம். கம்யூனிஸ்டுகள் என்ற சந்தேகத்தின் பேரில் கிராமங்களில் நிலமற்ற ஏழை விவசாயிகள் நூற்றுக்கணக்கான பேர் இந்த மதவாதிகளால் கொல்லப்பட்டனர். இதே விதத்தில் தான் ருல்ஃபோவின் தந்தையும் கொல்லப்பட்டார். அதை சிறுவனாக இருந்த ருல்ஃபோ காண நேர்ந்தது. இந்த நிகழ்ச்சி அவரது வாழ்விலும் சிந்தனையிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இவ்வாறாக தந்தையை இழந்த ருல்ஃபோ பின்னர் தாயையும் இழந்து அனாதை விடுதிகளில் வளர்ந்தார்.

1953இல் அவரது முதல் சிறுகதைத் தொகுதி **El llano en llamas** வெளியாயிற்று. 1955இல் பேத்ரோ பராமா என்ற நாவல் வெளிவந்தது. ருல்ஃபோ எழுதியவை மிகவும் சொற்பம். பதினைந்து சிறுகதைகள். ஒரு நாவல். ஆனாலும் தன் வாழ்நாளிலேயே கொண்டாடப்பட்டவர் அவர். பேத்ரோ பராமாவுக்குப் பிறகு அவர் ஒரு நாவலை எழுதினார். ஆனால் சாகும் தறுவாயில் அதை வெளியிடாமல் அழித்து விட்டார்.

பேத்ரோ பராமோவின் ஆங்கில மொழிபெயர்ப்புக்கு சூஸன் ஸொன்டாக் எழுதிய முன்னுரையின் ஆரம்பத்தில் நாவலின் துவக்க வாக்கியங்களை மேற்கொள் காண்பித்து 'நாம் ஒரு அற்புதமான கதை சொல்லியின் கைகளில் மாட்டிக் கொண்டு விட்டோம் என்பதை இத்துவக்க வாக்கியங்களே நமக்கு உணர்த்தி விடுகின்றன' என்கிறார். ஆனால் பேத்ரோ பராமோவின் தமிழ் மொழி பெயர்ப்பை ஆவலுடன் புரட்ட ஆரம்பித்தால் நாம் ஒரு கசாப்புக் கடை மொழிபெயர்ப்பாளரிடம் வசமாக மாட்டிக் கொண்டு விட்டோம் என்பதே தெரிகிறது.

ஆட்டுக் கறியைக் கொத்துவது போல் ருல்ஃபோவை கொத்திக் குதறியிருக்கிறார் மொழி பெயர்ப்பாளர். பராமோ என்ற ஸ்பானிஷ் வார்த்தைக்கு பாழ்நிலம் என்று பொருள். அதாவது கதை நாயகனான யுவான் தன் தந்தையைத் தேடி கொமாலா என்ற ஊருக்கு வருகிறான். அந்த ஊரில் வசிப்பவர்கள் வெறும் நடமாடும் பிரேதங்கள். அது ஒரு பாழ்நிலம் என்பதாக நாவல் சொல்லுகிறது. ஆனால் மொழி பெயர்ப்பாளரோ பேத்ரோ பராமோவை பாம்பின் வால் என்று மொழி பெயர்த்துள்ளார். நல்ல வேளை, கழுதையின் வால் என்று எழுதாமல் விட்டார்! தப்பித்தார்! (கழுதையின் உதையை யாரால் தாங்க முடியும்?)

பாம்பு என்பதற்கு ஸ்பானிஷில் பொதுவாக ஸெர்ப்பியந்த்தே என்பார்கள். விஷமுள்ள பாம்பு-விபோரா. விஷமற்ற பாம்பு-குலேப்ரா.

பேத்ரோ என்பது பீட்டர் என்பதன் ஸ்பானிய வடிவம். தமிழில் விவிலியத்தில் பேதுரு என்பார்கள்.

(தமிழுக்கும் ஸ்பானிஷுக்கும் உச்சரிப்பில் பல ஒற்றுமைகள் உண்டு. தில்லியில் அர்ஜென்டீனிய தூதரகத்தில் நான் ஸ்பானிஷ் கற்றுக் கொண்டபோது-பாதியில் விட்டு விட்டேன். அது வேறு விஷயம்-அங்கே நான் ஒருவன் தான் தமிழன். மற்றவர்கள் வெளிநாட்டினர் மற்றும் இந்திக்காரர்கள். ஃப்ரெஞ்சும், ஆங்கிலமும் மட்டுமே அறிந்தவர்களுக்கு ஸ்பானிஷ் கடினமாகவும் எனக்குச் சுலபமாகவும் இருந்ததை அறிந்தேன். காரணம்-ஸ்பானிஷில் எல்லா எழுத்துக்களையும் உச்சரித்தாக வேண்டும். இதைப் பார்த்து அவர்கள் மருண்டார்கள். ஆனால் நமக்கு இது சுலபம். தமிழிலும் மற்ற பல இந்திய மொழிகளிலும் 'மௌன எழுத்துக்கள்' கிடையாது.

எல்லா எழுத்துக்களையும் உச்சரிப்பது ஸ்பானிஷின் சிறப்புகளில் ஒன்று என அம்மொழியை அறிந்தவர்கள் சொல்வார்கள். தமிழ்நாட்டில் இந்தச் சாதாரண விஷயத்தைக் கூட அறிந்து கொள்ளாமல் ஹோர்ஹே லூயிஸ் போர்ஹேஸ் **(Jorge Luis Borges)** -இன் பெயரை பல விதங்களிலும் கொலை செய்து வருகின்றனர். அவர் பெயரைக் குறிப்பிடும் அத்தனை பேருமே போர்ஹே என்றும் லூயி போர்ஹே என்றும் குறிப்பிடும் காரணம் என்ன என்பதும், ஏன் போர்ஹேஸ் என்ற பெயரை அத்தனை பேரும் சொல்லி வைத்தது போல் ஒரு எழுத்தை முழுங்கி விட்டு 'போர்ஹே' என்கிறார்கள் என்றும் சத்தியமாக எனக்குப் புரியவில்லை. இதற்கிடையில் 'ஜோர்ஜ் லூயி போர்ஹே' என்ற தலைப்பில் சினிமாப் பாட்டுப் புத்தகத்தின் தரத்தில் தமிழில் ஒரு புத்தகம் வேறு வந்துள்ளது! ஷேக்ஸ்பியரின் பெயரை 'ஷேக் பியர்' என்று எழுதினால் எத்தனை அவலமோ அத்தனை அவலமானது போர்ஹேஸின் பெயரை போர்ஹே என்று எழுதுவது! சரி, நாம் இப்போது கழுதை வாலை-ஸாரி-பாம்பின் வாலைப் பிடிப்போம்...)

பேத்ரோ பராமோ என்ற நாவலில் பேத்ரோ என்பது இரண்டு பொருள்களில் வருகிறது. ஒன்று-யுவானின் தந்தையின் பெயர் பேத்ரோ பராமோ. மற்றொரு பொருள்-தன் சொந்த

இடத்துக்கு வருதல் என்பதை இப்படிச் சொல்வார்கள்.. எந்த்ரார் கோமோ பேத்ரோ போர் ஸு காசா.. **entrar como pedro por su casa.**

நல்ல வேளையாக மொழிபெயர்ப்பாளர் பாம்பின் வால் என்று பேத்ரோ பராமோ நாவலுக்கு பெயர் வைத்து விடவில்லை. 'பெட்ரோ பராமோ' என்றே வைத்துள்ளார். இருந்தாலும் 'பெட்ரோ' என்று சொல்லும்போது ஸ்பானிஷின் தனித்துவம் கெட்டு பெட்ரோல் பங்க் ஞாபகம் தான் வருகிறது. **t, d** எல்லாம் ஸ்பானிஷில் 'த்த' 'த'வாக மாறிவிடும். ஸ்பானிஷ் அவ்வளவு மென்மை என்பார்கள். ட்ட **(t)** என்பது எதையோ உடைப்பது போல் இருக்கிறதாம்!

பாம்பின் வால் எங்கே தென்படுகிறது என்றால் 'பேத்ரோ'வில் அல்ல. எரியும் சமவெளி என்ற ருல்ஃபோவின் சிறுகதைத் தொகுப்பில். இதையும் 'பெட்ரோ' மொழிபெயர்ப்பாளரே பெயர்த்திருக்கிறார். அதில்தான் ருல்ஃபோ 'பாம்பின் வால்' என்றும் ஒரு நாவல் எழுதியிருப்பதாகக் குறிப்பிடுகிறார். ருல்ஃபோவின் ஒரு சிறுகதையை பத்து ஆண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்த்து தமிழ் உலக்குக்கு அடியேன் ருல்ஃபோவை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். (யாரும் கண்டுகொள்ளவில்லை. அது வேறு)

அந்தக் கதையின் தலைப்பு: ''என்னைக் கொல்ல வேண்டாமென்று அவர்களிடம் சொல்!''

அந்தக் கதையில் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தகராறின் போது கோபத்தில் கொலை செய்து விடுகிறான் ஒருவன். மரண தண்டனைக்குப் பயந்து வேறு ஊருக்கு வந்து தன் மகன் ஹுஸ்தினோவுடன் வாழ்ந்து வரும் போது அவனை வயதான காலத்தில் ஒரு கர்னல் பிடித்துக் கொன்று விடுகிறான். அந்தக் கர்னல் யார் என்பதைச் சொல்ல மாட்டேன். கதையைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்போது கொத்துப் பரோட்டா மொழிபெயர்ப்புக்கு வருவோம். நாம் பத்து ஆண்டுகளுக்கு முன்பு மொழிபெயர்த்த கதையாயிற்றே என்ற ஆர்வத்துடன் 'எரியும் சமவெளி' புத்தகத்தை வாங்கி அவசர அவசரமாக பக்கங்களைப் புரட்டி 'என்னைக் கொல்ல வேண்டாம்...' என்ற கதைக்கு ஓடி வந்தேன். வந்தவுடனேயே விழுந்தது ஒரு அடி.. கதையின் ஆரம்பத்திலேயே 'கசாப்பு' வேலை தான்...

''என்னைக் கொல்ல வேண்டாம் என்று அவர்களிடம் சொல், ஜஸ்டினோ! அவர்களிடம் போய்ச் சொல். ஆண்டவனுக்காக! அவர்களிடம் சொல். ஆண்டவனுக்காகத் தயவு செய்து அவர்களிடம் சொல்''

படித்து விட்டு எனக்குக் கண்ணீர் வந்து விட்டது, ருல்ஃபோ என்ற இலக்கிய மேதை தமிழில் படும்பாட்டை எண்ணி. இது மட்டுமல்ல. மொழிபெயர்ப்பு என்பது இந்த நபருக்கு குடிசைத் தொழில் மாதிரி ஆகிவிட்டது. அவர் பாட்டுக்கு மாதம் இரண்டு புத்தகங்களை விட்டுக் கொண்டேயிருக்கிறார்!

என்னிடம் இப்புத்தகத்தின் ஆங்கிலப் பிரதி இல்லை. யாரோ சுட்டுவிட்டார்கள். ஆங்கிலத்தில் கதையின் துவக்கம் இதுதான்.

''Tell them not to kill me, Justino! Go and tell them. For God's sake! Tell them. For God's sake, tell them not to kill me''

'**for God's sake'** என்பது தான் ஆண்டவனுக்காக, ஆண்டவனுக்காக என்று மாறியுள்ளது- ரஜினி ஸ்டைலில்.

நான் இதை பத்து ஆண்டுகளுக்கு முன்னால் 'புண்ணியமாகப் போகட்டும்.. என்னைக் கொல்ல வேண்டாமென்று அவர்களிடம் போய்ச் சொல்' என்று மொழி பெயர்த்திருந்தேன்.

மற்றொரு மொழிபெயர்ப்பாளர் 'அவன் நகம் நிலத்துக்குள் இறங்கியது' என்று பெயர்த்திருக்கிறார். முதலில் புரியாமல் விழித்தேன். உங்களுக்கு இதற்குள் புரிந்து விட்டதல்லவா? **Nail** என்பதற்கு அன்பர் அறிந்த ஒரே பொருள் நகம். ஆணிக்கும் அது தான் என்பது அன்பருக்குத் தெரியாததால் வந்த வினை! இப்போது தலித் இலக்கியம் பற்றிய பேச்சு தமிழில் பரவலாகியுள்ளது. இதை கவனத்தில் கொண்டு இதற்குச் சம்பந்தமேயில்லாத ஒருவர் ஒரு மொழி பெயர்ப்பைத் தந்திருக்கிறார். அவர் பெயர் சூத்ரதாரி. நூலின் பெயர்: **Narrative of the Life of Frederick Douglass, an American Slave, Written by Himself**. இந்த நூலின் ஆங்கிலத் தலைப்பைக் கூட வெளியிடாமல் 'ஒரு அடிமையின் வரலாறு' என்ற பெயரில் மொழிபெயர்த்திருக்கிறார் அன்பர்.

இதே நூலை இரா. நடராசனும் 'அமெரிக்க கறுப்பின அடிமையின் சுயசரிதை' என்ற தலைப்பில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்த இரண்டு மொழிபெயர்ப்பிலும் உள்ள கொடுமைகளை பற்றி வளர்மதி எழுதியுள்ள ஒரு கட்டுரையைச் சமீபத்தில் படித்தேன். வளர்மதி நமது பக்கங்களில் ஏற்கனவே அறிமுகமாகியிருக்கிறார்-பெயர் இல்லாமல். ஓர் இரவு இரண்டு மணியிலிருந்து காலை ஆறு மணி வரை என்னிடம் பேசிக் கொண்டிருந்தவாரே அவர்தான் வளர்மதி.

இப்போது மொழிபெயர்ப்புக் கொடுமைகள்: **Author's spirit** என்பதற்கு இரண்டு பெயர்ப்பாளர்களும் செய்திருப்பது 'மூல ஆசிரியரின் விறுவிறுப்பு' என்பதாகும். நல்லவேளை, ஆவி என்று பெயர்க்கவில்லை!

அமெரிக்காவின் தென்பகுதிகளில் அடிமை முறை அதிக அளவில் இருந்தது. ஆனால் அமெரிக்காவுக்கு பெயர் வைத்தவர்கள் ஒழுங்காக வைத்திருக்கக் கூடாதா? அமெரிக்க கண்டத்துக்கும் ஒரே பெயர், அமெரிக்க நாட்டுக்கும் ஒரே பெயர் (யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா!) என்ன செய்வார் சூத்ரதாரி? அமெரிக்காவின் தென்பகுதி என்பது தென்னமெரிக்காவாக மாறிவிட்டது. 'தென்னமெரிக்காவில் அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்கள்' என்று கண்டம் விட்டு கண்டம் தாவி விட்டார்!

different-looking people என்பது 'வித்தியாசமான பார்வையைக் கொண்டவர்கள்' என்பதாகியுள்ளது.

அடுத்து, டக்ளஸின் ''**I am going away to the Great House Farm! O, yea! O, yea! O**!''

இதன் தமிழாக்கம்: ''பெரிய வீட்டுக்கு நான் போகிறேனே.. ஓ.. யே.. ஓ'' - இது சூத்ரதாரி!

''மகா பெரும்பண்ணைக்கு போகிறேனய்யா..

நான் ஓயே.. யே.. ஓயே.. ஓ!''

Yea என்பதன் பொருள் 'ஆமாம்' என்பது கூட தெரியாமல் ஓயே, பேயே என்று ஒரு மொழி பெயர்ப்பு.. மேலும் ஒன்று, பைபிள் என்பதை வேதம் என்று மொழி

பெயர்த்திருக்கிறார் சூத்ரதாரி. அப்படியே டக்ளஸையும் சுப்பிரமணிய அய்யர் என்று மொழிபெயர்த்திருக்கலாம்!

(இந்த ஜோக்குகளை சுட்டிக்காட்டிய வளர்மதிக்கு நன்றி)

மேடையில் அவர் ஒரு கடவுள்

ஆங்கில இலக்கியத்தில் ஷேக்ஸ்பியருக்கு என்ன இடமோ அதே இடம் தான் உதய் ஷங்கருக்கு-நடனக் கலையில். கடவுளே மனித உருப்பெற்று நடனமாடினால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கும் உதய் ஷங்கரின் நடனம்.

உதய் ஷங்கரைப் பற்றி அவரது தம்பியான ரவிஷங்கர் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சிலிருந்து சில பகுதிகள்:

அல்மோராவில் தாதா (தன் அண்ணனை அப்படித்தான் குறிப்பிடுகிறார் ரவிஷங்கள்) இந்தியக் கலாச்சார மையத்தை ஸ்தாபித்த போது அவர் புகழின் உச்சியில் இருந்தார். மிகப்பெரிய கதகளி மேதையான குரு சங்கரன் நம்பூதிரியை அந்த மையத்துக்கு அழைத்து வந்திருக்கிறார். அவர் தாதாவுக்கும் எனக்கும் குருவாக இருந்தவர். பால சரஸ்வதியின் ஆசானாக இருந்த குரு கந்தப்பன் பிள்ளையை அழைத்து வந்திருக்கிறார். இது நடந்தது 1939இல். மையத்துக்கான பண உதவி வெளிநாட்டிலிருந்து வந்தது. ஆனால் அப்போது இரண்டாம் உலக யுத்தம் வந்துவிட்டதால் வெளிநாட்டு உதவி திடீரென்று நின்று போயிற்று. தாதா அரசாங்கத்தை அணுகினார். மகாராஜாக்களை அணுகினார். கிடைத்த உதவி மிகவும் சொற்பமாக இருந்ததால் மையம் நின்று போனது.

இவை அனைத்தையும் அவர் எடுத்த 'கல்பனா' படத்தில் நீங்கள் பார்க்கலாம். அது ஒரு க்ளாஸிக் சினிமா. சத்யஜித் ரே கூட அந்தப் படத்தைப் பாராட்டியிருக்கிறார்.

ஆனால் படம் ஓடவில்லை. பெருத்த நஷ்டம். தாதா கொஞ்ச காலம் சென்னையில் இருந்துவிட்டு கல்கத்தா சென்றார். அவரது குழுவும் கலைந்தது. ஆனால் அவர் மனைவி அமலா அவருக்கு எப்போதும் உறுதுணையாகவே இருந்தார். தாகூர் நூற்றாண்டு விழா வந்தது. தாகூரின் கவிதை 'சாமான்யக்ஷதி'யை நாட்டியத் தயாரிப்புக்கு எடுத்துக் கொண்டார். தாதாவின் படைப்புகளில் மிக முக்கியமான ஒன்று அது. நான் தான் அதற்கு இசையமைத்தேன்.

அவருடன் உலகத்திலுள்ள எத்தனையோ நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். அங்கெல்லாம் இந்தியா என்றால் மூன்று பெயர்கள் தான் தெரிந்திருந்தது. காந்தி, தாகூர் மற்றும் உதய் ஷங்கர்.

மேடையில் அவர் ஒரு கடவுள் (நான் உதய் ஷங்கரை கடவுள் என்று இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிட்ட போது ரவிஷங்கரின் இந்த வார்த்தைகளைப் படித்திருக்கவில்லை-சாரு) சிவனாக அவர் மேடையில் தோன்றும் போது அசல் சிவபெருமானே நேரில் வந்து ஆடுவது போல் தோன்றும்.

மக்கள் அவர் மீது பைத்தியமாகிக் கிடந்தார்கள். வெளியில் அவரால் எங்கேயுமே போக முடியவில்லை. கூட்டம் கூடி விடும். சூப்பர் ஸ்டார் என்றால் அப்படி ஒரு சூப்பர் ஸ்டார். ரஷ்ய பாலே கலைஞரான அன்னா பாவ்லோவா மாதிரி ஆட்களெல்லாம் உதய்ஷங்கரின் ரசிகைகளாக இருந்தார்கள். அவரிடம் பாடம் கற்றுக் கொண்டார்கள்.

உலகம் பூராவும் சுற்றினோம். மகாராஜாக்கள் தங்கும் ஓட்டல்களில் தான் தங்குவோம். தாதாவே ஒரு இளவரசனாகத் தான் வாழ்ந்தார். சமயங்களில் 'காந்தி' படத்தில் நீங்கள் பார்க்கும் சம்பவங்கள் மாதிரியெல்லாம் நடக்கும். உதாரணமாக, ஒரு முதல் வகுப்பு கூப்பேவில் தாதா ஏறுவார். பக்கத்திலுள்ள ஆங்கிலேயன் அதை அனுமதிக்க மாட்டான். அவ்வளவு தான், 'என் தேசத்தில் வந்து இருந்து கொண்டு என்னிடம் இதைச் சொல்கிறாயா?' என்று கத்தியபடி அவன் முகத்தில் விடுவார் ஒரு குத்து. கடைசியில் வெற்றி தாதாவுக்குத்தான்.

பெரிய ஓட்டல்களிலும் இப்படித் தான். அங்கே நீங்கள் கோட் சூட்டெல்லாம் அணிந்திருக்க வேண்டும். ஆனால் தாதாவோ வேட்டியுடன் செல்வார். யாராவது இதைப் பற்றி ஆட்சேபித்தால் அந்த நபரின் முகம் கிழிந்து போகும்.

தாதா ஒரு ஓவியனாகத் தான் தன் கலை வாழ்வைத் துவக்கினார். 1920 முதல் 1923 வரை ராயல் கல்லூரியில் ஸர் வில்லியம் ரோஸன்ஸ்டீனின் கீழ் ஓவியம் பயின்றார். அங்கே அவர் முதல் மாணவனாக வந்து தங்கப் பதக்கம் பெற்றார்.

ஸர் வில்லியம் அன்னா பாவ்லோவாவின் மிக நெருங்கிய நண்பர். அன்னா பாவ்லோவா 1921-22இல் இந்தியாவுக்கு வந்தபோது இந்திய நடனக் கலையைப் பார்த்து வியந்து இதன் கூறுகளை தன்னுடைய பாலேவிலும் கொண்டு வருவது பற்றி யோசித்துக் கொண்டிருந்தார். அப்போதுதான் அவர் உதய் ஷங்கரின் ஒரு நடன நிகழ்ச்சியைக் காண நேர்ந்தது. ஸர் வில்லியமிடம் சென்று இந்த நிகழ்ச்சியை வடிவமைத்தது யார் என்று கேட்க அவர் என்னுடைய மாணவர் உதய் ஷங்கர் என்று சொல்லியிருக்கிறார். அப்போதுதான் அன்னா பாவ்லோவா உதய்ஷங்கரிடம் 'என்னுடைய குழுவில் சேர்ந்து என்னோடு நடனமாடுங்கள்' என்று சொன்னார்.

அன்னா பாவ்லோவாவுடன் இணைந்து உதய்ஷங்கர் இரண்டு முக்கியமான படைப்புகளைக் கொடுத்தார். 1. இந்தியாவைப் பற்றிய பதிவுகள் 2. ராதாகிருஷ்ணா. அன்னாவும் உதய்யும் உலகம் பூராவும் சுற்றினார்கள். அமெரிக்கா, தென்னமெரிக்கா, ஐரோப்பா என்று அவர்கள் செல்லாத இடமே இல்லை. இரண்டு மூன்று ஆண்டுகள் இப்படிச் சென்றன. பிறகு தனியாக இயங்க வேண்டுமென முடிவு செய்தார் உதய்ஷங்கர். அதற்குள் அவர் பாலேயையும் நன்கு கற்றிருந்தார்-அதன் மூலமாக மேற்கத்திய நடனத்திலும் அதனுடைய ஒழுங்குகளிலும் அவருக்கு சிறப்பான பயிற்சி கிடைத்திருந்தது.

அப்போது அவர் லண்டனிலும் பாரிஸிலும் இருந்தார். அது ஒரு சிரமமான காலகட்டம். லண்டனை விட பாரிஸ் வாழ்க்கை மேலும் மோசமாக இருந்தது. ரேக்களிலும் இரவு விடுதிகளிலும் கூட அவர் ஆட வேண்டியிருந்தது என்பதை துயரத்துடன் நினைவு கூர்கிறேன். அங்கிருந்த பெண்களையும் அவர் சமாளிக்க வேண்டி வந்தது. நீங்கள் குடித்தே ஆக வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்துவார்கள். எவ்வளவு குடிக்கிறீர்களோ அதில் அந்தப் பெண்களுக்கு ஒரு குறிப்பிட்ட 'பர்சன்டேஜ்' போய் விடும்.

(முப்பதுகளைப் பற்றிச் சொல்கிறார் ரவிஷங்கர். ஆனால் பாரிஸில் இப்போதும் அதே நிலமை தான் உள்ளது.

செந்த் தெனியில் நானும் ஷோபாவும் அடிக்கடி இரவு நேரங்களில் உலா வருவோம். வரீசையாக இரவு விடுதிகள். பெரிய பெரிய விளம்பரங்கள். வெளியே அழகழகான இளம் பெண்கள் நின்று கொண்டு உள்ளே நடக்கப் போகும் லைவ் ஷோ காட்சிகளைப் பற்றிச் சொல்லி அழைத்தபடி இருந்தார்கள். என்னைப் பார்த்ததுமே அவர்களுக்கு இந்தியன் என்று தெரிந்துவிடும். உடனே இந்திக்கு மாறி விடுவார்கள். ''ஆவோ.. ஆவோ.. அந்தர் ஆவோ பாயி.. வெரி ப்யூட்டிஃபுல் யங் லேடீஸ்... பஹுத் சுந்தர்.. வெரி ச்சீப் லைவ் ஷோ.. ஃபிஃப்டி ஃப்ராங்க்ஸ் ஒன்லி.'' ஐம்பது ஃப்ராங்க் தானா? உண்மையிலேயே மலிவுதான். போகலாமா என்று கேட்பேன் ஷோபாவிடம். அப்போது ஷோபா சொன்னார்.. ''மலிவு தான்.. ஆனால் லைவ் ஷோ நடு நிசிக்கு மேல் இரண்டு மணிக்குத்தான் ஆரம்பிப்பார்கள். அதுவரை குடித்தே ஆகவேண்டும். குறைந்தது ஆயிரம் ஃப்ராங்க் தாளித்து விடுவார்கள்.'' அதைக் கேட்டதிலிருந்து அந்தப் பக்கமே திரும்புவதில்லை!-சாரு)

மிகவும் வேதனையுடன் தாதா என்னிடம் சொல்லுவார். இரவு விடுதிக்குச் செல்வதற்கு முன்பாக தாதா ஆலிவ் ஆயிலைக் குடித்து விட்டுத்தான் போவாராம். அதாவது அளவுக்கு மீறி அல்கஹாலைக் குடித்தாலும் போதையில் சாய்ந்துவிடாமல் இருப்பதற்கான ஒரு டெக்னிக். ஆலிவ் ஆயிலைக் குடித்துவிட்டால் அதற்கு மேல் ஆல்கஹால் அவ்வளவாக ஆட்டம் போட முடியாது. அவர் அங்கே போவதே நடனமாடி பணம் சம்பாதிப்பதற்காக... அப்படிச் சம்பாதிப்பதை அந்தப் பெண்களிடம் சேர்ந்து குடித்துவிட்டு வர முடியுமா?

பாரிஸில் அவர் என்னென்னவோ செய்து வாழ்க்கையை ஓட்டினார். இரவு விடுதிகளில் நடனம் மட்டும் ஆடவில்லை. மேஜிக் ஷோ கூட நடத்தினார். எங்கள் தந்தையிடம் கற்றுக் கொண்டது அந்த மேஜிக்.

இந்த மூன்று வருடப் போராட்டத்திற்குப் பிறகு சிம்கீயைச் சந்தித்தார். அது அவருடைய அதிர்ஷ்டம். சிம்கீ புகழ்பெற்ற பியானிஸ்ட். அதே சமயத்தில் நடனத்திலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். சிம்கீயை தனது மாணவியாக ஏற்றுக்கொண்டார் தாதா. அப்போது தான் ஆலிஸ் போனர் என்ற சுவிஸ் பெண்மணியின் நட்பும் அவருக்குக் கிடைத்தது. ஒரு தேவதையைப் போல் வந்து சேர்ந்தார் அவர். மிகப் பணக்காரப் பெண்மணி. தாதாவை விட பத்து வயது மூத்தவர். அவர் தாதாவிடம் சொன்னார்.. ''நீங்கள் இங்கே மேற்கில் இருந்து கொண்டு உங்கள் காலத்தை வீணடித்து கொண்டிருக்கிறீர்கள். இந்தியாவுக்குச் சென்று உங்கள் வேர்களைத் தேடுங்கள்''

(ஆலிஸ் போனரும் பிறகு வாரணாசிக்கு வந்துவிட்டார். பத்ம பூஷன் பட்டம் கிடைத்தது. 1982 ஆம் ஆண்டு தன் 87 ஆவது வயதில் காலமானார் அவர்)

தாதாவுக்கும் தெரிந்தே இருந்தது-தான் இந்தியாவுக்குச் செல்ல வேண்டும், தனக்கென்று ஒரு குழுவை உருவாக்க வேண்டும் என்பது. 1929இல் ஆலிஸ் போனருடன் இந்தியா திரும்பினார். நம்புங்கள்..

அப்போது தான் நான் தாதாவை என் வாழ்க்கையில் முதல் முதலாகப் பார்க்கிறேன். காரணம்-அவர் இந்தியாவை விட்டுக் கிளம்பிய போது நான் ஒரு மாதக் குழந்தையாக இருந்தேன். எனக்கும் அவருக்கும் வயது வித்தியாசம்-21 ஆண்டுகள்!

இந்தியா திரும்பியதும் உதய்யும் ஆலிஸும் நேராக கேரளாவுக்குச் சென்று ஒவ்வொரு இரவும் கதகளி நிகழ்ச்சிகளைப் பார்த்தார்கள். பிறகு சென்னைக்குச் சென்று பரத நாட்டியம் பயின்றார்கள். இதேபோல் இருவரும் இந்தியா முழுவதும் பயணம் செய்தார்கள். தாதாவிடம் ஒரு மூவி கேமரா இருந்தது. ஆலிஸ் ஒரு சிற்பி. பணமும் பிரச்னையாக இல்லை.

இறுதியாக, தாதா வாரணாசிக்கு வந்தார். நாங்கள் எங்களுடைய தாய்வழி மாமாவின் கிராமமான நஸ்ரத்பூர் சென்றோம். அங்கே சென்றதும் தாதா செய்த முதல் காரியம் என்ன தெரியுமா? ''மத்தாதின் எங்கே?'' என்று கேட்டார். மத்தாதின் சமார் ஜாதியைச் சேர்ந்த ஒரு நடனக் கலைஞர். மிகச் சிறிய வயதில் தாதாவுக்கு நடனத்தில் ஆர்வம் உண்டாவதற்குக் காரணமாக இருந்தவரே இந்த மத்தாதின் தான். மத்தாதின் வந்தார். உடனே தாதா ஓடிப் போய் மத்தாதினை கட்டித் தழுவிக் கொண்டார். அப்போது சமாரைத் தொடுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒரு விஷயம். ''என்னிடம் என்ன தவறு இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்'' என்று தாதா மத்தாதினைக் கேட்டுக் கொண்டார். மத்தாதினுக்கு கண்களில் கண்ணீர் வந்துவிட்டது.

ஒரு நாள் நடன நிகழ்ச்சிக்கு முன்னதாக உதய் மத்தாதின்னின் பாதங்களைத் தொட்டு வணங்கி விட்டு மேடையேறினார். அப்போது உதய் சொன்னார் ''நீங்களும் எனக்கு ஒரு குரு தான்.'' அந்தக் காலக்கட்டத்தில் ஒரு பிராமண இளைஞன் சமார் என்ற தீண்டத்தகாத ஜாதியைச் சேர்ந்த ஒருவரைக் கட்டித் தழுவிக் கொள்வது, அவரது கால்களில் விழுவது என்பதெல்லாம் நினைத்தே பார்க்க முடியாதது. மத்தாதினுக்கு ஒரே அதிர்ச்சி! பிறகு தாதா மணிப்பூர் சென்று மணிப்புரி நடனத்தைக் கற்றுக் கொண்டார். பின்னர் உதய்பூர் சென்றார்.

கடைசியில் கல்கத்தாவில் அசாதாரணமான இசைக் கலைஞனான திமிர் பரானைச் சந்தித்தார். அங்கே நியூ எம்பயரில் அவர் கொடுத்த நிகழ்ச்சி மாபெரும் வரவேற்பைப் பெற்றது. அந்த நிகழ்ச்சியை அவர் பத்து தடவைகள் திரும்ப நிகழ்த்த வேண்டியிருந்தது!

தாதாவின் குழுவில் அவர் எங்கள் அம்மாவையும் சேர்த்துக் கொண்டார். நாங்கள் மொத்தம் பத்துப் பேர். வாரணாசியிலிருந்து நேராக பாரிஸ் சென்றோம். எங்களோடு கிட்டத்தட்ட 150 இசைக்கருவிகள். புல்லாங்குழல், சிதார், வீணை. தில்ரூபா மற்றும் தான வாத்தியங்கள் என்று எல்லாமே இந்திய இசைக்கருவிகள்தான்.

மார்ச் 3ம் தேதி. 1931 ஆம் ஆண்டு. **Champs Elysees**வில் தான் முதல் ஷோ. விளைவு பிரம்மாண்டமாக இருந்தது. அதைத் தொடர்ந்து அமெரிக்கா சென்றோம். எனக்கு என்ன வருத்தம் என்றால் இந்தியாவில் உதய்ஷங்கரை மறந்துவிட்டார்கள். ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள், அது சச்சின் ஷங்கராக இருக்கட்டும், அல்லது தாதாவின் மகன் ஆனந்தாவாக இருக்கட்டும், மகள் மமதாவாக இருக்கட்டும், அல்லது ரவி ஷங்கராகக் கூட இருக்கட்டும், நாங்கள் அனைவரும் அவருடைய பாதையில் தான் சென்று கொண்டிருக்கிறோம். அவர் உருவாக்கிக் கொடுத்த கலை வாழ்க்கை இது. இதற்கு

முடிவே இல்லை. நடனத்தில் அவர் புரட்சிக்கரக் கண்டுபிடிப்புகளைச் செய்தார். கொஞ்சம் கதகளி, கொஞ்சம் பரத நாட்டியம், கொஞ்சம் மணிப்புரி, ஆனால் அவர் எதை எடுத்தாலும் அதை இந்த பூமித்தாயிடமிருந்தே எடுத்தார் என்று சொல்ல வேண்டும்.

நான் எனது வாழ்க்கையை ஒரு டான்ஸராகவே துவக்கினேன். பிறகு இசையில் நான் அடைந்த மகத்தான வெற்றிக்குக் காரணமும் தாதா தான். காரணம்-நான் முழுக்க முழுக்க அவருடைய பாணியையே பின்பற்றினேன்.

(நன்றி: இல்லஸ்ட்ரேடட் வீலி ஆஃப் இண்டியா 2.10.1983)

1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாத தில்லியில் சிரிஃபோர்ட் அரங்கத்தில் உதய்ஷங்கர் விழா நடைபெற்றது. ரவிஷங்கர் தனது பேச்சில் குறிப்பிடும் தாகூரின் சாமான்யக்ஷதி, உதய்ஷங்கரின் மனைவி அமலா மற்றும் உதய்ஷங்கரின் மாணவர்களால் நிகழ்த்தப்பட்டது. உதய்ஷங்கரே தயாரித்து, இயக்கி, நடித்த கல்பனா என்ற திரைப்படமும் திரையிடப்படது. அத்திரைப்படத்தில்தான் உதய்ஷங்கரின் கலாமேன்மையை, மேதமையை என்னால் விளங்கிக் கொள்ள முடிந்தது. ஒரு சர்ப்பதைப் போல் வளைந்த அவரது சரீரத்தை-அவர் கைகளை-பத்தொன்பது ஆண்டுகள் ஆகியும் என்னால் மறக்க முடியவில்லை...

எத்தனை ராமர்கள் இருந்தார்களோ?

ராமாயணம் இந்தியாவில் மட்டுமல்லாமல் இந்தோனேஷியா, வியட்நாம், கம்போடியா, தாய்லாந்து என்று பல கிழக்காசிய நாடுகளிலும் பரவியுள்ளது. இப்படி ஒன்றல்ல, இரண்டல்ல, மூவாயிரம் ராமாயணங்கள் இருப்பதாகக் கூறுகிறார் ஏ.கே.ராமானுஜன். சங்கப் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் இவர். ராமாயணம் பற்றிய இவருடைய அரிய கட்டுரையொன்றை சமீபத்தில் படித்தேன். அதிலிருந்து:

ஒரு நாள் ராமன் தன் அரியணையில் வீற்றிருக்கும் போது அவனுடைய மோதிரம் விரலிலிருந்து கழன்று கீழே விழுந்து ஒரு துளை போட்டு அதற்குள் போய் விடுகிறது. 'அந்த மோதிரத்தைத் தேடி எடுத்து வா' என்று அனுமனிடம் சொல்கிறான் ராமன்.

அனுமனால் அந்தத் துளைக்குள் நுழைய முடியும். அவனால் எவ்வளவு சிறிய வடிவமும் எவ்வளவு பெரிய வடிவமும் எடுக்க முடியும். ஒரு சிறிய வடிவத்தை எடுத்து துளைக்குள் செல்கிறான் அனுமன். சென்றவன் கீழே அதல பாதாளத்துக்குப் போய்ச் சேருகிறான். அது ஒரு பாதாள லோகம். அங்கிருந்த பெண்கள் அந்தச் சிறிய உருவத்தை எடுத்து ஒரு தட்டில் வைத்து பாதாள லோக அரசனிடம் கொடுக்கின்றனர். அவனுக்கோ விலங்குகளைச் சாப்பிடுவதென்றால் ஏக இஷ்டம். சாப்பாட்டு மேஜையில் உணவுகளுக்கிடையே அமர்ந்திருக்கிறான் அனுமன்.

மேலே இதற்கிடையே பூலோகத்தில் ராமனைப் பார்க்க வசிஷ்டரும் பிரம்மதேவனும் வருகின்றனர்.

''நாங்கள் உன்னோடு அந்தரங்கமாகப் பேச வேண்டும். அதை யாரும் கேட்கவோ இடையில் குறுக்கிடவோ கூடாது. சரியா?''

''சரி, பேசுவோம்''

''நாம் பேசிக் கொண்டிருக்கும் போது யாராவது குறுக்கே வந்தால் அவர்களின் தலையை வெட்டிவிட வேண்டும்''

ராமன் யோசித்தான். அனுமனோ கீழே போயிருக்கிறான். அவனை விட்டால் லட்சுமணன் தான். லட்சுமணனை அழைத்து வாயிலில் காவலிருக்கச் சொல்கிறான்.

அப்போது அங்கே வரும் விஸ்வாமித்திர முனிவர் ராமனை உடனடியாகப் பார்க்க வேண்டும் என்று லட்சுமணனிடம் சொல்கிறார்.

''இப்போது உள்ளே செல்ல முடியாது. சிலருடன் முக்கியமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்''

''என்னிடமிருந்து எதை மறைக்கப் போகிறான் ராமன்? நான் இப்போதே உள்ளே போக வேண்டும். என்னை விடு''

''உங்களை உள்ளே விட வேண்டுமானால் அதற்கு நான் ராமனின் அனுமதியைப் பெற வேண்டும்''

''அப்படியானால் உள்ளே போய் கேள்''

''ராமன் வெளியே வரும் வரை நான் உள்ளே போக முடியாது. நீங்கள் காத்திருக்கத் தான் வேண்டும்''

''நீ இப்போது உள்ளே சென்று நான் வந்திருப்பதைத் தெரிவிக்காவிட்டால் இந்த அயோத்தி ராஜ்ஜியத்தையே என் சாபத்தால் எரித்து விடுவேன்''

லட்சுமணன் யோசிக்கிறான். 'இப்போது நான் உள்ளே சென்றால் நான் இறந்து விடுவேன். உள்ளே போகாவிட்டால் முனிவர் இந்த ராஜ்ஜியத்தையே எரித்து விடுவார். ராஜ்ஜியத்திலுள்ள எல்லாப் பொருட்களும் எல்லா உயிர்களும் அழிந்து போகும். அதைவிட நான் ஒருவன் செத்துப் போவதே மேல்'

உள்ளே வரும் லட்சுமணனிடம் ராமன் என்ன விஷயம் என்று கேட்கிறான்.

''விஸ்வாமித்திரர் வந்திருக்கிறார்''

''அவரை உள்ளே விடு''

பிரம்மதேவனும் வசிஷ்டரும் வந்த விஷயத்தை அதற்குள் ராமனிடம் பேசி முடித்திருந்தனர். ''நீ பூலோகத்துக்கு வந்த வேலை முடிந்துவிட்டது. நீ எடுத்த ராமாவதாரத்தை இத்தோடு நீ விட வேண்டியது தான். இந்த சரீரத்தை விட்டு விட்டு எங்களோடு வந்துவிடு''. இந்த விஷயத்தைப் பேசுவதற்காகத் தான் அவர்கள் ராமனிடம் வந்திருந்தனர்.

லட்சுமணன் ராமனிடம் சொன்னான்.. ''ராமா.. என் தலையைக் கொய்துவிடு''

''நாங்கள் பேச வேண்டியதைப் பேசி முடித்தாகி விட்டது. உன்னைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை''

''ராமா.. நீ அப்படிச் செய்ய முடியாது. உன் தம்பி என்பதால் என்னை நீ விட்டுவிட முடியாது. உன் பெயருக்குக் களங்கம் உண்டாகி விடும். உன் பத்தினியையே நீ அப்படி விட்டுவிடவில்லை. அவளைக் கானகத்துக்கு அனுப்பி விட்டாய். நான் தண்டிக்கப்பட்டே ஆக வேண்டும். எனக்கு விடுதலை கொடு ராமா''

லட்சுமணன் சேஷனின் அவதாரம். விஷ்ணு உறங்கும் நாகம் சேஷன். அவனது காலமும் முடிந்துவிட்டது. ஸரயு நதிக்குள் விழுந்து அவன் உலக வாழ்வை நீத்தான்.

லட்சுமணன் தன் பூதவுடலை விட்ட பிறகு ராமன் தனக்கு
இஷ்டத்துக்குரியவர்களையெல்லாம் அழைத்து தனது புதல்வர்கள் லவனுக்கும் குசனுக்கும் முடிசூட்டி வைத்துவிட்டு அவனும் ஸரயு நதிக்குள் மூழ்கினான்.

இவ்வளவுக்கும் அனுமன் பாதாள உலகில்தான் இருக்கிறான். பாதாள அரசனின் சாப்பாட்டுத் தட்டில் அமர்ந்தபடி 'ராமா ராமா ராமா' என ஜெபித்தபடியிருக்கிறான்.

இதைக் கேட்டவுடன் அரசன் 'யார் நீ' எனக் கேட்கிறான்.

''அனுமன்''

''அனுமனா.. எங்கிருந்து வருகிறாய்?''

''ராமனுடைய மோதிரம் ஒரு துளையில் விழுந்துவிட்டது. தேடிக் கொண்டு வந்தேன்''
அரசன் அனுமனிடம் ஒரு தட்டைக் காண்பிக்கிறான். அதில் ஆயிரக்கணக்கான மோதிரங்கள் இருக்கின்றன. எல்லாமே ராமனின் மோதிரங்கள்.

அரசன் சொல்கிறான்.. ''இதிலிருந்து உன் ராமனின் மோதிரத்தை எடுத்துக்கொள்''

எல்லா மோதிரங்களும் ஒரே அச்சில் வார்த்தது போல் இருக்கின்றன.

''எனக்குத் தெரியவில்லையே'' எனத் தலையசைக்கிறான் அனுமன்.

அப்போது அரசரன் சொல்கிறான்.. ''இதில் எத்தனை மோதிரங்கள் உள்ளனவோ அத்தனை ராமர்கள் உள்ளனர். நீ பூலோகத்துக்குத் திரும்பும் போது ராமனைக் காண முடியாது. ராமனின் அவதாரம் எப்போதெல்லாம் முடிவுக்கு வருகிறதோ அப்போதெல்லாம் அவன் மோதிரம் கீழே விழும். நான் அதையெல்லாம் இந்தத் தட்டில் சேகரித்து வைத்திருக்கிறேன். நீ இப்போது போகலாம்''

எத்தனை ராமர்கள் இருந்தார்களோ அத்தனை ராமாயணங்களும் இருந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுவதற்கே இந்தக் கதை சொல்லப்படுகிறது என்கிறார் ஏ.கே.ராமானுஜன்.

பாலி, வங்காளம், கம்போடியா, சீனா, குஜராத்தி, ஜாவா, கன்னடம், காஷ்மீரம், லாவோ, மலேஷியா, மராத்தி, ஒரியா, ப்ராக்ருதம், சமஸ்கிருதம், ஸந்தால், சிங்களம், தமிழ், தெலுங்கு, தாய், திபெத் என்று ஏகப்பட்ட மொழிகளில் ராமாயணம் எழுதப்பட்டுள்ளது. சமஸ்கிருதத்தில் மட்டும் 25 விதமான ராமாயணங்கள் உள்ளன (நாட்டுப்புற வடிவங்களைச் சேர்க்காமல்).

பதினான்காம் நூற்றாண்டில் குமாரவியாசர் என்ற கன்னடக் கவிஞர் ராமாயணத்துக்குப் பதிலாக ஒரு மகாபாரதத்தை எழுதத் தீர்மானித்தாராம். காரணம்-உலகத்தைத் தூக்கிக் கொண்டிருக்கும் பிரபஞ்ச சர்ப்பம் ராமாயணக் கவிகளின் பாரம் தாங்காமல் அழுதாம்!

பல ராமாயணங்களைப் பற்றிச் சொல்லும்போது ஏ.கே.ராமானுஜன் மற்றொரு உதாரணத்தைக் குறிப்பிடுகிறார்:

பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட அத்யாத்ம ராமாயணத்தில் ஒரு கட்டம். ராமன் வனவாசம் செல்கிறான். சீதையும் தன்னோடு வந்து ஏன் துயரப்பட வேண்டும் என்பது அவன் எண்ணம். அதை மறுத்து சீதை அவனோடு விவாதிக்கிறாள். முதலில் வழக்கமான வாதம்.. நான் உங்கள் மனைவி. உங்கள் துன்பத்தில் நானும் பங்கேற்க வேண்டும். நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ அங்கே தான் நானும் இருந்தாக வேண்டும்.. இப்படி. ஆனால் ராமன் இதற்கெல்லாம் செவி மடுக்காமல் போகவே கோபமாகச் சொல்கிறாள்... ''இதுவரை எத்தனையோ ராமாயணங்கள் எழுதப்பட்டுள்ளன. எந்த ராமாயணத்திலாவது சீதை ராமனுடன் வனத்துக்குச் செல்லாமல் பிரிந்திருந்தாள் என்று நீங்கள் கேள்விப்பட்டதுண்டா?''

ராமானுஜன் தரும் இந்த உதாரணத்தைப் பார்த்து நான் ஆச்சரியமடைந்தேன். ஏனென்றால் முழுக்க முழுக்க இது ஒரு பின் நவீனத்துவப் பாணி. **Inter-textuality** என்று சொல்வார்கள். அதாவது, ஒரு பிரதிக்குள்ளிருந்து வேறு பல பிரதிகளைப் பற்றிக் குறிப்பிடுவது; மற்றும், பிரதியைப் பற்றிய பிரக்ஞையுடனேயே கதாபாத்திரங்கள் பேசுவது- பல நூற்றாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சீதை சடாரென்று ஒரே பாய்ச்சலில் பதினாறாம் நூற்றாண்டின் பிரதியொன்றிலிருந்து இவ்வளவு காலமும் எழுதப்பட்ட பிரதிகளைப் பற்றிக் குறிப்பிடுவது!

மேலும், ராமானுஜன் ஒரு சுவாரசியமான தகவலைத் தருகிறார்; கிழக்காசிய நாடுகளில் எழுதப்பட்ட ராமாயணங்களுக்கு மூலம் வால்மீகி அல்ல-கம்பன் தான் என்கிறார்.

மற்றொரு சுவாரசியமான விவாதம்... சமணர்களின் ராமாயணத்தில் ராவணன் ஒரு வில்லன் அல்ல. பிராமணர்கள்தான் ராவணனை வில்லனாக சித்தரித்து விட்டார்கள். உண்மையில் ராவணன் ஒரு சோக காவிய நாயகன். விமல சூரியின் ஜைன ராமாயணம் ஒரு பிரதிபுராணம். இங்கே பிரதி என்பதன் பொருள் 'எதிர்' அல்லது 'மாற்று'. இந்த ஜைன ராமாயணத்தில் கதை ராமனிடமிருந்து தொடங்காமல் ராவணனிடமிருந்து தொடங்குகிறது. ஏனென்றால் ராவணன் 63 சாலக புருஷர்களுள் (ஜைனத் தலைவர்கள்) ஒருவன். கற்றறிந்தவன். மேதை, தவ வலிமையும், மந்திர சக்திகளும் கொண்டவன். ஜைன குருமார்களின் சீடன். 'விருப்பமில்லாத பெண்களைத் தொட மாட்டேன்' என்று ஒரு ஜைன குருவுக்கு பிரதிக்ஞை செய்து கொடுத்தவன்.

ஒரு முறை தகர்க்க முடியாத வலிமையான கோட்டை ஒன்றை முற்றுகையிடுகிறான் ராவணன். அந்த அரசனின் மனைவி ராவணனின் மீது காதல் வயப்படுகிறாள். ஒரு தூதனை அனுப்பி வைக்கிறாள். ராவணன் அவள் மூலமாக கோட்டையின் ரகசியங்களை அறிந்து கொண்டு அதன் உள்ளே நுழைந்து அரசனை வெல்கிறான். பிறகு ராஜ்ஜியத்தை அவனிடமே திருப்பிக் கொடுத்து விட்டு ராணியையும் அவள் கணவனிடமே சென்று வாழும்படி அறிவுரை கூறி அனுப்பி விடுகிறான். பிறகு சோதிடர்கள் மூலம் சீதை என்ற பெண்ணின் காரணமாக அவன் அழிந்து போவான் என்பதை அறிந்து அதிர்ந்து போகிறான் ராவணன். அப்படி முன்கூட்டியே தெரிந்தும் விதியை அவனால் வெல்ல முடியவில்லை. சீதையின் அழகில் மயங்கி அவளைக் கவர்ந்து வந்து அவள் அன்பைப்

பெறுவதற்காக எப்படியெல்லாமோ முயற்சி செய்கிறான். முடியாமல் போய் இறுதியில் போரில் மடிகிறான்.

மற்றொரு ஜைன ராமாயணத்தில் சீதை ராவணனின் மகளாக வருகிறாள். ஆனால் அவனுக்கு அவள் தன் மகள் என்பது தெரியாது.

இந்த இரண்டு கதைகளையும் பார்க்கும்போது ராவணன் ஒரு கிரேக்க புராண வீரனைப் போல்தான் எனக்குத் தெரிகிறான். இரண்டாவது கதையிலுள்ள ஈடிபஸ் சூழ்நிலையைக் கவனியுங்கள்.

மற்றொரு ஜைனக் கதையைச் சொல்லுகிறார் ராமானுஜன். அக்கதையின்படி வாசுதேவனும், பிரதி வாசுதேவனும்-ஹீரோவும் **anti** ஹீரோவும் (**self and other**)-பிறவிகள் தோறும் சண்டையிட்டுக் கொள்ளும்படி விதிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் எட்டாவது அவதாரமே லட்சுமணனும் ராவணனும் ஆவர். ஒவ்வொரு பிறவியிலும் வாசுதேவன் தனது பிரதியான பிரதி வாசுதேவனைக் கொல்லுகிறான். சண்டையில் தன் எதிரே நிற்கும் லட்சுமணன் வாசுதேவன் தான் என்பதை ராவணன் இறுதியில்தான் அறிகிறான். தனது மந்திரச் சக்கரத்தை லட்சுமணன் மீது செலுத்துகிறான். ஆனால் அதற்கு அவன் வாசுதேவன் என்பது தெரிந்து அவனைக் கொல்லாமல் அவன் கைகளில் தஞ்சமடைகிறது. அதன் மூலமாகவே லட்சுமணன் ராவணனை வீழ்த்துகிறான்.

மேலும், ஜைனர்கள் தங்களைப் பகுத்தறிவுவாதிகள் என்று கருதுவதால் தங்களின் ராமாயணக் கதைகளில் இந்துக்களைப் போல் தெய்வீக அதிசயங்களுக்கு அதிகம் இடம் கொடுக்கவில்லை. வன்முறைக்கும் ஹிம்சைக்கும் கூட அதிக இடமில்லை. ராமனும் அவன் சகோதரர்களும் சாதாரண மனிதர்களைப் போலவே பிறக்கிறார்கள். ராவணனின் பத்து தலைகள் கூட நிஜமான பத்து தலைகள் இல்லை. ராவணன் பிறக்கும் போது அவனுடைய அம்மாவுக்கு நவரத்தின மாலை ஒன்று கிடைக்கிறது. அவனது முகம் அந்த நவரத்தினங்களிலும் பிரதிபலிக்கவே அவனை தசமுகன் என்று அழைக்கிறாள்...

ஏ.கே. ராமானுஜனின் இந்த சுவாரசியமான கட்டுரையைப் படித்தபோது எல்.கே.அத்வானியின் ஞாபகம் வந்து கொண்டேயிருந்தது. என்ன காரணம் என்று தெரியவில்லை.

வியந்தேன். ரசித்தேன்.

கோணல் பக்கங்களைக் குறித்து உலகின் எல்லா மூலையிலிருந்தும் மின்னஞ்சல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மூன்று இடங்களைத் தவிர; அண்டார்க்டிகா, ஆஃப்கானிஸ்தான், தமிழ்நாடு. இவை தவிர தென்னமெரிக்கா மற்றும் ஆஃப்ரிக்காவிலிருந்து கூட ஒரு அஞ்சலும் இல்லை. இவற்றில் குறிப்பாக தென்னாப்ரிகாவிலிருந்து வராதது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. இதுபற்றி மணியிடம் சொல்லிக் கொண்டிருந்தபோது அவர் சொன்னார்... ஆப்கனில் போர் நடந்து கொண்டிருந்த போது அவருக்கு காந்தஹாரிலிருந்து ஒரு வாசகர் மின்னஞ்சல் அனுப்பியிருந்தாராம்! அதேபோல் இப்போது ஒரு ஆச்சரியம் நடந்துள்ளது. இதோ அந்த ஆச்சரியம்:

அன்புள்ள சாரு,

பெரூவின் தெற்குப் பகுதியிலிருந்து இதை எழுதிக் கொண்டிருக்கிறேன். கோணல் பக்கங்களில் லத்தீன் அமெரிக்க இலக்கியம் பற்றி நீங்கள் அறிமுகப்படுத்துவது மிகவும் நல்ல விஷயம். நான் இங்கே மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வருகிறேன். ஸ்பானிஷையும் நன்கு பேசக் கற்றுக்கொண்டு விட்டேன். உங்கள் எழுத்தைப் படித்த பிறகு ஸ்பானிஷை இன்னும் நன்கு கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுகிறது. அதன் பிறகே மாரியோ வார்காஸ் லோஸாவையும் நீங்கள் குறிப்பிடும் மற்றும் பல தென்னமெரிக்க எழுத்தாளர்களின் படைப்புகளையும் படிக்கலாம் என்று இருக்கிறேன்.

இங்கே பெரூவில் மிகச்சில தமிழ்க்குடும்பங்களே உள்ளன.

நாடோடியாக இங்கே வந்த ஃபுஜிமோரியின் ஆட்சிக்குப் பிறகு இங்குள்ள மக்களின் சமூகப் பொருளாதார நிலைமை என்னவானது என்பது பற்றி பிறகு எழுதுகிறேன் (**Fugitive Fujimori** என்று எழுதியுள்ளார். ஃபுஜிமோரியின் குடும்பம் ஜப்பானிலிருந்து வந்து பெரூவில் குடியேறியது-சாரு) ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் டபுள் டாக்டரேட் வாங்கிய பேராசிரியர் **Alejandro Toledo Manrique**இன் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். அவர் மனைவி பெல்ஜியத்தைச் சேர்ந்தவர். ஆனால் ஒரு பெண் குழந்தை அவருடையதுதானா என்பதைக் கண்டறிய டி.என்.ஏ. சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டபோது அவர் அதற்கு உடன்படவில்லை என்ற காரணத்தால் அவரது புகழ் பெருமளவு சரிந்து விட்டது.

என் முதல் கடிதத்திலேயே உங்களை அதிகம் 'போர்' அடிக்கக் கூடாது என்பதால் இத்துடன் முடிக்கிறேன். இந்த ஊரில் வசிக்கும் 200 பாகிஸ்தானிய குடும்பங்களுக்கிடையே எங்களுடையதுதான் ஒரே இந்தியக் குடும்பம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமையடைகிறேன். ஜெய் ஹிந்த். அன்புடன், கிருஷ்ணராஜ்.

அடுத்து மாரியா வின்ஸண்ட் ராபின்சனின் (சிங்கப்பூர்) கடிதம்:

இன்று ஒரு பதிவுத் தபாலை வாங்குவதற்காக தபால் நிலையத்துக்குச் சென்றபோது பக்கத்திலுள்ள நூலகத்துக்குள் நுழைந்தேன். அங்கே எனக்கு ஒரு ஆச்சரியம்- உங்களுடைய சிறுகதைத் தொகுதி 'நேநோ' இருந்தது. (அதன் பின்பக்க அட்டையில் உங்கள் புகைப்படத்தைப் பார்த்தபோது 'ஓ.. இதுதான் நம் சாருவா?' என்று எனக்குள் கேட்டுக்கொண்டேன். நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு நமது பழைய நண்பனைச் சந்திப்பது போல் இருந்தது) அந்தப் புத்தகத்தை நான் வீட்டுக்கு எடுத்துச் செல்ல விரும்பினேன். ஆனால் ஏற்கனவே புத்தகங்களை எடுத்திருந்ததால் அதை எடுத்துச் செல்ல முடியவில்லை. எனவே மதிய உணவைக் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு நூலகத்திலேயே அதைப் படித்து விடலாமென்று உட்கார்ந்தேன்.

பௌதிகரீதியாக நான் அந்த நூலகத்தில் இருந்தேனே தவிர அதிலிருந்த சில கதைகள் என்னை தில்லியின் பல தெருக்களுக்கும் கூட்டம் நிரம்பி வழியும் பஸ்களுக்கும் இட்டுச் சென்றது. நான் அங்கேயிருந்த நாட்கள் என் நினைவுக்கு வந்தன. நூலகத்தில் இருந்த மூன்று மணி நேரத்தில் என்னால் ஐந்தாறு கதைகளைத் தான் முடிக்க முடிந்தது. சிதைவு என்ற கதை வரைக்கும் என்று நினைக்கிறேன். என் வாசிப்பு வேகம் மிகவும் குறைவு. வாசித்துக் கொண்டிருக்கும் போதே சிந்தனையில் ஆழ்ந்து விடுவேன். 'சிலுக்கு ஸ்மிதாவின் நினைவுக்கு' என்று முதல் பக்கத்தில் இருந்தது எனக்கு ஆச்சரியம் அளிக்கவில்லை.

அந்தக் கதைகளைப் படித்தபோது உங்கள் மீது நான் கொண்டிருந்த மரியாதை கூடி விட்டது. என் எதிர்பார்ப்பை மீறினதாக இருந்தன அக்கதைகள். நிச்சயம்

தமிழிலக்கியத்துக்கு குறிப்பிடத் தகுந்த பங்களிப்பு இது என்று சொல்ல வேண்டும். நாளைக்குள் புத்தகம் முழுவதையும் முடித்து விடுவேன்.

இதுவரை படித்ததிலிருந்து ஏழ்மையிலும் வறுமையிலும் கூட மனிதார்த்தம் என்பது எவ்வளவு உன்னத நிலைக்குச் செல்ல முடியும் என்பதை அக்கதைகள் காட்டுகின்றன எனப் புரிந்து கொள்கிறேன். பாரதியின் வரிகள் ஞாபகம் வருகிறது.

''இன்னல் வந்துறுத்திடும்போது அதற் கஞ்சோம் ஏழையராகி இனி மண்ணில் துஞ்சோம்''

மனித வாழ்வின் முரண்பட்ட நிலை பற்றி யோசித்தேன். இங்கேயுள்ள ஆடம்பரமான வாழ்க்கையினிடையே 'ஏழ்மை' என்பதன் உண்மையான பொருள் இவர்களில் யாருக்கேனும் தெரியுமா?

மற்றும் ஒரு விஷயம். பல கதைகளில் அவை உங்களின் நிஜமான அனுபவங்கள் என்று எண்ணத் தூண்டுகின்றன. என் அனுமானம் சரியோ தவறோ தெரியாது. ஆனால் 'பிரஸ்ஸில் இருக்கிறது' என்ற கதையில் வரும் ஒரு வாசகம் இப்போது என் நினைவில் நிற் கிறது.

''கடவுள் பெயரை துதிப்பதில்லை. கடவுள் இல்லை எனத் தெரிந்துவிட்டதால் பயமாக இருக்கிறது''

திரும்பவும் நான் யோசனையில் ஆழ்ந்து விட்டேன். டார்வின் கோட்பாடும் (அதில் சில குறைபாடுகள் இருந்தபோதும்) வான சாஸ்திரமும் கடவுளே இப்பிரபஞ்சத்தின் சிருஷ்டிகர்த்தா என்ற கருத்தாக்கத்தை தகர்த்து விட்டன. ஓஷோவின் வார்த்தைகளை ஞாபகப்படுத்திக் கொண்டேன். ''எந்த சிருஷ்டிக்குமே ஒரு சிருஷ்டிகர்த்தா உண்டு என்று வாதிப்பதில் அர்த்தமில்லை. எனவே இந்த உலகை கடவுளே சிருஷ்டித்தார் என்பதிலும் அர்த்தமில்லை. அப்படியானால்-தர்க்க ரீதியாக யோசித்தால்-முதலில் கடவுளை சிருஷ்டித்தது யார்?.... ஒரு பாதுகாப்பு உணர்வுக்காகவே கடவுள் என்ற ஒன்றை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்''

....இப்போதெல்லாம் கோணல் பக்கங்களைப் பாராட்டி நிறைய கடிதங்கள் வருகின்றன என்று நினைக்கிறேன். நல்லது. **Better late than never**.

I salute you for your contribution and works.

அன்புடன்,

ராபின்.

சொல்லத் தேவையில்லை. ராபினின் கடிதத்தைப் படித்து விட்டு மிகவும் நெகிழ்ந்துதான் போனேன்.

ஆனால் கும்மாங்குத்து கடிதங்களும் வரத் தவறுவதில்லை. சென்ற வார கும்மாங்குத்து இங்கிலாந்து வாசகியிடமிருந்து.

''மறுபடியும் ஒரே பாராட்டுக் கடிதங்கள்... ஐயோ.. என்ன இது அநியாயம்? அநேகமாக நான் ஒருத்தி தான் இது பற்றி புகார் செய்கிறேனா அல்லது இன்னும் சிலரும் இருக்கிறார்களா? (யாரும் இல்லை அம்மணி-சாரு) இது பற்றிய உங்களின் விளக்கமும்

வலுவாக இல்லை. கொண்டாட்டமாம்.. அழுகுணித்தனமாம்.. டூ மச்! எப்படியோ என் பெயரை வெளியிடாமல் இருந்ததற்கு நன்றி. வாசகர்கள் மீது நீங்கள் காட்டும் மரியாதைக்கும் நன்றி. ஆனால் இதுவே சமயங்களில் அளவுக்கு மேல் போய்விடுகிறது. அதாவது, வாசகர்களுக்கு பட்டர் போடுகிற அளவுக்கு. அதனால் இத்துடன் சுடச்சுட ஒரு தோசை அனுப்பியிருக்கிறேன். பட்டர் தடவி சாப்பிட்டால் படு ருசியாக இருக்கும். பட்டர் போடுவதில் தான் நீங்கள் வல்லவராயிற்றே! சாப்பிடுங்கள்.

பரஸீலுக்குத் தான் உலகக் கோப்பை என்று சொன்னதற்காக வாழ்த்துச் சொல்ல வேண்டுமா? என்ன கிண்டலா? இதுதான் எல்லோருக்கும் தெரிந்த விஷயமாயிற்றே? இதைச் சொல்வதில் என்ன பெரிய விஷயம் இருக்கிறது? முதல் போட்டியில் ஃப்ரான்ஸை ஸெனகல் தோற்கடிக்கும் என்று சொல்லியிருந்தால் உங்கள் 'ஞானதிருஷ்டி'யைப் பாராட்டி நூறு கடிதங்கள் வந்திருக்கும்...

(சொன்னேன் அம்மணி.. ஆனால் துரதிருஷ்டவசமாக இந்தப் பக்கங்களில் அல்ல. ரஞ்சனிடம் சொன்னேன். பிறகு அது பற்றி கோ.ப.விலும் எழுதினேன். கவனமாக வாசிக்கவும்)

எது எப்படியோ.. சென்ற வாரம் ஐந்து தினங்களாக கோ.ப.வெளிவரவில்லை. அந்த ஐந்து நாட்களும் ஒவ்வொரு மணிக்கு ஒருமுறை கணினியில் விகடன்.காமைத் திறந்து கோ.ப. புதிதாக வந்திருக்கிறதா என்று பார்த்துக் கொண்டேயிருந்தேன். (பெண் பாவம் பொல்லாதது என்பார்களே.. இனிமேல் இப்படி நேராமல் தினந்தோறும் கோ.ப. 'அப்லோட்' ஆக எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக் கொள்கிறேன்!-சாரு)

அந்த ஐந்து நாட்களும் புதிய கோ.ப.வைப் பார்க்கவே முடியவில்லை. பிறகு நினைத்தேன், எங்காவது ஊருக்குப் போய் விட்டீர்களோ என்று. மனதுக்குள் மற்றொரு எண்ணமும் ஓடியது-'ஒருவேளை சாருவை தூக்கிட்டாங்களோ!' என்று (அடப்பாவி.. இப்போது தான் ஆரம்பித்திருக்கிறேன். அதற்குள்ளாகவா!!)

இதே இ.வாசகியின் மற்றொரு கடிதம்:

இங்கே **Big Brother** விளையாட்டு என்று தொலைக்காட்சியில் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறது. போட்டியாளர்களெல்லாம் சராசரி மனிதர்கள் (அதாவது எட்டு மணி நேரம் உறங்குபவர்கள்-என்னைப் போல) அதாவது பத்து பேரை ஒரு வீட்டுக்குள் போட்டு பூட்டி விடுவார்கள். இவர்கள் செய்வதையெல்லாம் தொலைக்காட்சி ஒளிபரப்பிக் கொண்டேயிருக்கும். பார்வையாளர்களும் இவர்கள் சார்பாக வாக்களிப்பார்கள். போட்டியாளர்கள் வீட்டுக்குள்ளேயே ஒருவரையொருவர் ஜாக்கிரதையாக கவனிப்பார்கள். நாள் கணக்கில் இது தொடரும். கடைசியில் ஒற்றையாளாக மிஞ்சுபவரே போட்டியில் வென்றவர். பெரிய பரிசுத் தொகை கிடைக்கும். இந்தப் போட்டியில் நீங்கள் கலந்து கொண்டால் எப்படியிருக்கும் என்று நினைத்தாலே தமாஷாக இருக்கிறது. நடுநிசி ஒரு மணிக்கு '**I write as a bird flies**' என்று முணுமுணுத்தபடியே எழுதிக் கொண்டிருக்கும் உங்களைப் பார்த்து எல்லோரும் அலறி அடித்துக் கொண்டு ஓடி விடுவார்கள், இல்லையா? ஹஹ் ஹா...! பார்க்க எவ்வளவு தமாஷாக இருக்கும்! எனக்கு நிச்சயமாகத் தெரியும், பரிசு உங்களுக்குத்தான்.

(இந்த வரிகளை எழுதிக் கொண்டிருக்கும் போது கலிஃபோரினியாவின் சிலிகான் பள்ளத்தாக்கிலுள்ள ஸான் ஹோஸே (**San Jose**) நகரிலிருந்து-சிலிகான் என்றாலே வேறு ஞாபகம் வருகிறது!-ராதாகிருஷ்ணன் பாசிராஜன் தொலைபேசியில் அழைத்து கோ.ப. பற்றி பாராட்டினார். இது புத்தகமாக வரப்போவது குறித்து தன் மகிழ்ச்சியைத்

தெரிவித்தார். அவரிடம் நான் சொன்னேன்.. கலிஃபோர்னியாவில் தான் கோணல் பக்கங்களுக்கு நிறைய வாசகர்கள் இருக்கிறார்கள் என்று. மூன்று நாட்களுக்கு முன்பு ஸான் ஃப்ரான்ஸிஸ்கோவிலிருந்து எஸ்.கே.ஜக்தீஷ் என்ற நண்பரும் என்னை வந்து சந்தித்து விட்டுச் சென்றது பற்றியும் அவரிடம் குறிப்பிட்டேன். எழுத்தாளர்-வாசகர் சந்திப்பு அதிக அளவிலேயே நடந்து வருகிறது. மகிழ்ச்சி!)

இ.வாசகி இக்கடிதத்துடன் ஒரு பியர் விளம்பரத்தையும் இணைத்திருந்தார். வாசகி டூட்டோட்டலர் என்ற போதிலும் அது சம்பந்தமான விளம்பரங்கள் மட்டும் பிடிக்கும் போலிருக்கிறது. படு சுவாரசியமான விளம்பரம் அது. பியர் கேன்களை ஏற்றியபடி ஒரு லாரி போய்க் கொண்டிருக்கிறது. அப்போது லாரியிலிருந்து ஒரு பியர் கேன் விழுந்துவிட ஆமை ஒன்று அந்த பியரை எடுத்துக் குடிக்கிறது. லாரி டிரைவர் லாரியை நிறுத்திவிட்டு கீழே வந்து பார்க்கும் போது ஆமை பியரை குடித்துவிட்டு உற்சாகமாய் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது. **Brahma** என்ற பியரின் இந்த விளம்பரத்தில் இசையும் அட்டகாசம்.. விளம்பரங்கள் கூட இவ்வளவு கலாபூர்வமாக இருப்பதைக் கண்டு வியந்தேன். ரசித்தேன்.

23-07-2002

புன்னகை தேசம்.

19 ஆண்டுகளுக்கு முன்பு கபில்தேவ் இதே லார்ட்ஸ் ஸ்டேடியத்தில் நிகழ்த்திய சாதனை இப்போது மீண்டும் நிகழ்த்தப்பட்டுள்ளது. 13.7.2002 அன்று நிகழ்ந்த அந்த ஆச்சரியத்தைக் காணக் கொடுத்து வைக்காமல் தமிழ் சினிமாவுக்குப் போய் துன்பம் அனுபவித்தது பற்றி ஏற்கனவே எழுதி விட்டேன்.

ஆனால் அந்த லண்டன் வாசகி கொடுத்துவைத்த மகராசி. நேரிலேயே பார்த்திருக்கிறார். இதோ அவரது வர்ணனை:

டிக்கட் கிடைத்தது அதிர்ஷ்டம் தான். பத்தே முக்கால் மணி மேட்சுக்கு ஒன்பதுக்கே வந்து விட்டோம். ஒரே ஃபோட்டோ செஷன்தான் போங்க! இந்திய அணி பயிற்சி செய்து கொண்டிருந்தது. கேட்க வேண்டுமா? ஆனால் இங்கிலாந்து அணி அடித்து விளாச ஆரம்பித்ததும் எல்லா உற்சாகமும் அடங்கிப் போய்விட்டது.

25,000 பார்வையாளர்களில் 15,000 பேர் இந்தியர்கள். என்ன ஒரு ஆர்வம்! இந்தியன் இன்னிங்ஸ் படு அட்டகாசமாகத் துவங்கியது. **Edrich stand**இல் இருந்த அத்தனை பேரும் கத்திக் கும்மாள மிட்டார்கள். டான்ஸ் ஆடினார்கள். கத்திக் கத்தி எனக்கு இன்னமும் தொண்டை வலிக்கிறது. ஆனால் ஸ்கோர் போர்டு ஐந்து விக்கெட்டுக்கு 140 ரன்கள் என்று காட்டிய போது மாஸ்டர் பேட்ஸ்மேன் அவுட்! அவ்வளவுதான். ஆட்டம் முடிந்துவிட்டது என்றே முடிவு கட்டி விட்டோம். வீட்டுக்குத் திரும்பி விடலாமா என்று எண்ணினேன். முதன்முதலாக நான் ஸ்டேடியத்தில் பார்க்கும் இந்த ஆட்டத்தில் இந்தியா தோற்றுப் போவதை நேரில் காண எனக்கு விருப்பமில்லை. முழு ஆட்டத்தின் போதும் இங்கிலாந்துக்காரர்கள் வெறி பிடித்தாற்போல் கத்தியது சச்சின் அவுட் ஆன போதுதான்! என்ன ஒரு ஆர்ப்பாட்டம் (க்ர்ர்ர்ர்...) ஆனால் மளமளவென்று யுவராஜும் காயிஃப்பும் ரன்களை 250க்குக் கொண்டு வந்துவிட்டார்கள். திரும்பவும் எங்களுக்கு நம்பிக்கை பிறந்தது. திரும்பவும் கத்த ஆரம்பித்தோம். எப்பேர்ப்பட்ட வெற்றி அது! அதிலும் அந்தக் கடைசி ஓவர்... நான் எப்படிப்பட்ட ஒரு ஆஸ்திகவாதி என்பதை அப்போதுதான் தெரிந்து கொண்டேன் (நடைமுறையில் நான் ஒரு **agnostic** அல்லது ரெண்டுங்கெட்டான். கடவுள்

உண்டா இல்லையா என்பதே தெரியாத ஆள். ஆனால் அந்தப் பிரச்னைக்கு இப்போது போக வேண்டாம்) அந்தக் கடைசி இரண்டு ரன்களுக்காக எவ்வளவு பிரார்த்தனை செய்தேன் தெரியுமா? நாம் ஒரு ரன்னை எடுத்த போது எனக்குக் கிட்டத்தட்ட ஸ்மரணையே போய்விட்டது. திரும்பிக் கொண்டேன். அடுத்த ரன் எடுக்கிறோமோ இல்லையோ, அதைப் பார்க்கும் திராணி எனக்கில்லை. எடுக்கவில்லையானால் அது ஒரு 'ட்ரா'.. அவ்வளவுதான். குறைந்தபட்சம் நமக்குத் தோல்வியில்லை. இப்படி நினைத்துக் கொண்டிருக்கும்போதே ஒரு 'ஓவர் த்ரோ'.. இந்தியா அடுத்த ரன்னையும் எடுத்து விட்டது! இது எப்படி இருக்கு? அப்புறம் என்ன? ஒரே ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம்தான்!

எப்படிப்பட்ட ஒரு நாள் அது! பரிசளிப்பு நிகழ்ச்சி முடிந்ததும் கும்பல் கும்பலாக போக்குவரத்தை மறித்து தெருக்களில் நடனமாடினார்கள்! சாலைகளில் ஒரு ஊர்வலமே சென்று கொண்டிருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். பக்கத்திலுள்ள **Finchely Road** விழாக்கோலம் பூண்டிருந்தது.

அற்புதமான ஒரு அனுபவம்! இதைப் பார்க்காமல் எப்படி நீங்கள் தவற விட்டீர்கள்? நான் என் உறவினர்கள், நண்பர்கள் அனைவரிடமும் சொல்லியிருந்தேன்.. ஆட்டத்தைப் பார்க்கும் போது அவர்கள் என்னையும் பார்க்கலாம் என்று. எல்லோருமே என்னைப் பார்த்ததாகச் சொல்கிறார்கள். ஆனால் நான் அணிந்திருந்த சட்டையின் நிறத்தைத்தான் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகச் சொன்னார்கள்.. யாருமே நான் அணிந்திருந்த சட்டையின் நிறம் சிவப்பு என்பதைச் சொல்லவில்லை.

சில விரும்பத்தகாத சம்பவங்களும் உண்டு. இந்தியப் பார்வையாளர்கள் பெரும்பாலும் இங்கேயே பிறந்து வளர்ந்தவர்கள். அல்லது பத்து ஆண்டுகளாக இங்கேயே இருப்பவர்கள். அவர்களின் போக்கு எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. இங்கிலாந்து ஆட்டக்காரர்களைப் பார்த்துக் கத்தியதும், ஏளனம் செய்ததும் சகிக்க முடியவில்லை. இதோடு கோஷங்கள் வேறு! (''கலி கலி மே ஷோர் ஹே, பாகிஸ்தான் சோர் ஹே''- இங்கே பாகிஸ்தான் எங்கிருந்து வந்தது?-''கோரே கோ மாரோ'', ''காஷ்மீர் ஹமாரா ஹே'') பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பலமாக இருந்தன. ஏதேனும் தகராறு ஏற்படும் என்று எங்கள் பக்கத்திலேயே சில போலீஸ்காரர்கள் தொடர்ந்து கவனித்தபடியே இருந்தனர்! ஆனால் கும்பல் எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

இந்தியா மட்டும் அன்றைய தினம் தோல்வியடைந்திருந்தால் கும்பல் மிகப்பெரிய ரகளையில் ஈடுபட்டிருக்கும் என்பதில் எனக்குச் சந்தேகமேயில்லை. மாறாக இங்கிலாந்துக்காரர்கள் மிக நாகரிகமாக நடந்து கொண்டார்கள்.

லண்டன் வாசகியின் மேற்கண்ட கடிதத்துடன் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக மாணவரின் கடிதத்தை ஒப்பிட்டுப் பார்க்க விரும்புகிறேன். இதோ அந்தக் கடிதம்:

''உங்கள் கட்டுரையில் இனவாதம் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். இங்கே இனவாதம் மிகவும் குறைந்து விட்டதாகவே சொல்லப்படுகிறது. ஆனால் இந்த விஷயம் வெளியே சொல்லப்படாமல் மறைக்கப்படுகிறது என்றே நான் கருதுகிறேன். காரணம்-ஆசியர்களும் ஏனைய வெளிநாட்டினரும் பிரிட்டிஷ் சமூகத்துடன் இரண்டறக் கலந்து விட்டனர். மேலும், நல்ல செல்வாக்கான நிலையில் இருக்கின்றனர். ஆனால், வேலையில்லாத் திண்டாட்டமும் வறுமையும் நிலவும் இடங்களில் இனவாதம் இருந்து கொண்டுதான் இருக்கிறது.

மற்றொரு விஷயம்-**Bend it like Beckham** பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். அதாவது உங்கள் வாதம், அப்படத்தின் முக்கியப் பாத்திரமான பெண் ஒரு இந்தியன் என்பதும்,

வெளிநாட்டினர் இச்சமூகத்தில் இயல்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டனர் என்பதும்தான், இல்லையா? ஆனால் அந்தப் படம் ஒரு இந்தியப் பெண்ணால் தயாரிக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, இங்குள்ள ஆசியர்களின் வாழ்க்கை முறை பற்றிய கிண்டலே அந்தப் படத்தில் பிரதானமாக உள்ளது. ஆசியர்கள் தங்களின் பெண் குழந்தைகள் தங்கள் தாய்நாட்டின் பாரம்பரியத்தைப் பேணிக் காப்பாற்ற வேண்டும்-காலா காலத்தில் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்-அசாதாரணமான எதையும் செய்துவிடக் கூடாது என்றெல்லாம் எதிர்பார்க்கிறார்கள். எனவே அந்தப் படம் ஒன்றும் ஆசியர்களுக்கு மதிப்புக் கொடுக்கும் பெரியதொரு பிரிட்டிஷ் தயாரிப்பு அல்ல-அதன் பிரதான பாத்திரம் ஒரு இந்தியப் பெண்ணாக இருக்கிறாள்-காரணம், கதை அப்படி. உண்மையில் ஒரு ஆசிய நாட்டவர் இங்கே செம்மையாக உதை வாங்க வேண்டுமெனில் அதற்குச் சுலபமான வழி அவர் ஒரு கால்பந்தாட்டப் போட்டிக்குச் செல்ல வேண்டும். அந்த அளவுக்கு ரவுடித்தனத்தையும் இனவாதத்தையும் நீங்கள் அங்கே காணலாம். உதாரணமாக, கடந்த ஆண்டு இங்குள்ள முக்கியமான கால்பந்தாட்டக் குழுக்களில் ஒன்றான **Leeds United**இன் இரண்டு ஆட்டக்காரர்கள் ஒரு ஆசிய இளைஞனை அடித்து விட்டார்கள் என்பதால் கைது செய்யப்பட்டார்கள். (அந்த வழக்கு எப்படி நடத்தப்பட்டது, என்ன தீர்ப்பு அளிக்கப்பட்டது என்பதெல்லாம் வேறொரு சுவாரசியமான கதை!)

உங்கள் பக்கங்களில் குறிப்பிடப்படும் மற்றொரு விஷயம்-சமகாலத் தமிழ் இலக்கியத்தின் தேக்க நிலை. இதன் முக்கிய காரணமாக நான் கருதுவது-நல்ல எழுத்தாளர்கள் மக்களைச் சென்றடைவதில்லை என்பதுதான். வாசகர்கள் இல்லாததால் இளம் எழுத்தாளர்களுக்கு தங்கள் மீதே நம்பிக்கை போய் விடுகிறது.

இதற்கான தீர்வு என்று நான் கருதுவது, சீரியஸான விஷயங்கள் வாசிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும் என்பதுதான். சராசரி வாசகர்களையும் நாம் கவனத்தில் எடுத்துக் கொண்டாக வேண்டும். இப்போதுள்ள நிலையைப் பார்த்தால், ஒன்று-நூற்றுக்கு நூறு மசாலா அல்லது நூற்றுக்கு நூறு 'இலக்கியம்'. அதிலும் ஒரு சிறு குழுவினரால் மட்டுமே படிக்கக் கூடிய விஷயங்கள். எப்போது இந்த நிலைமை சீரடையும் என்று தெரியவில்லை.

வெவ்வேறாக முரண்பட்ட இரண்டு கோணங்களை இவ்விரு கடிதங்களும் நமக்குச் சுட்டுகின்றன.

எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. ஒருநாள் இரவு நானும் ஷோபா சக்தியும் பாரிஸ் மெத்ரோவில் சென்று கொண்டிருக்கிறோம். ஜனவரி மாதத்துக்குளிர். நாள் முழுதும் குடித்திருந்ததால் நல்ல வெறி. மெத்ரோவின் உள்ளே யாரும் புகைக்கலாகாது. ஆனால் நாங்கள் இருவரும் புகைத்துக் கொண்டிருந்தோம். பின்னிரவு என்பதால் மெத்ரோவில் அதிகக் கூட்டமில்லை.

அங்கே யாரும் குடித்திருப்பவர்களைப் பார்த்து முகம் சுளிப்பதில்லை. மாறாக புன்னகையுடன் உதவி செய்கிறார்கள். அதிலும் அகதிகள், கறுப்பு-பழுப்பு இனத்தவர் என்றால் இன்னும் சற்று அதிக அன்புடனேயே எதிர்கொள்கிறார்கள். உதாரணமாக, பதற்றத்துடன் ஓடி வந்து 'ஓடும் மெத்ரோவில் புகைக்கக் கூடாது என்று தெரியாத மடையர்களே?' என்று சொல்லி மென்னியில் கை வைப்பதில்லை. மாறாக, நம்முடைய தனிமையை பாதிக்காதபடி தூரத்தில் அமர்ந்திருந்து நாம் சிகரெட்டை அணைத்துப் போடுகிறோமா என கவனித்து, அணைக்காவிட்டால் வந்து மன்னிப்புக் கோரியபடி அதை அணைக்கிறார்கள் (ஆஹா.. சொர்க்க லோகம்னா இப்படிதான் இருக்கும் போல!)

சரி, சம்பவத்துக்கு வருகிறேன். எங்களுடைய கண்களையும், நடை யுடை பாவனைகளைப் பார்த்தாலே எங்கள் நிலை தெள்ளெனத் தெரிகின்றது. அப்போது அந்த மெத்ரோவில்

பாடகர் ஒருவர் கிதார் அடித்தபடி பாடிக் கொண்டிருக்கிறார். நிச்சயமாக மேடையில் பாடும் அளவுக்குத் திறமையான குரலும் இசைஞானமும் கொண்டவராகத் தெரிந்தார். பாட்டில் லயித்துக் கேட்டுக் கொண்டிருந்தேன். ''என்ன சாரு, நீங்கள் என்ன ஃப்ரெஞ்சுக்காரரா? ஃப்ரெஞ்சுப் பாடல் உங்களுக்குப் பிடிக்குமா? தமிழ்ப்பாட்டு என்றால் பிடிக்காதா?'' என்று ஷோபா சக்தி என்னை 'சத்தாய்த்துக்' கொண்டிருந்தார். பாட்டு முடிந்தது. பாடகர் பயணிகளிடம் காசு கேட்டபடி வந்து கொண்டிருந்தார்.

நம்மூர் பிச்சைக்கும் ஐரோப்பியப் பிச்சைக்கும் ஏகப்பட்ட வித்தியாசம் இருக்கிறது. ஐரோப்பியப் பிச்சையை பிச்சை என்ற வார்த்தையால் குறிப்பிடவே முடியாது.

மகப்பேறு மருத்துவமனையில் பிறந்து விழுந்து சில மணி நேரமே ஆன பச்சிளம் சிசுக்களைத் திருடிக் கொண்டுபோய் மொட்டை வெய்யிலில் ட்ராஃபிக் ஜங்ஷனில் நின்று கார்க்காரர்களிடம் 'ஐயா, அம்மா' 'ஐயா, அம்மா' என்று கேட்கும் குரூரமும் வன்முறையும் ஐரோப்பாவில் இல்லை.

அந்தப் பாடகர் எங்களை நோக்கி வந்தார். என்னிடம் சில்லறைக் காசுகள் இல்லை. இருந்த நாணயங்கள் அனைத்தும் அன்றைய தினம் கழிப்பிடங்களில் தீர்ந்துவிட்டது. (அது வேறு கதை. பிறகு சொல்கிறேன்) ஷோபா சக்தி எழுந்து நின்று தன்னுடைய கால்சராய்க்குள் கைவிட்டு நாணயங்களை எடுக்க முயன்றார். கூடவே தள்ளாடினார். எங்கள் நிலைமையைப் பார்த்து பாடகர் திரும்பிச் சென்றுவிட்டார். நாணயங்களை எடுக்கும் முயற்சியில் மும்முரமாக இருந்த ஷோபா சக்திக்கு பாடகர் திரும்பிச் செல்லும் காரணம் புரியவில்லை. அந்தப் பாடகரை சத்தமாகக் கூப்பிட்டு ''கறுப்பர்களிடமிருந்து காசு வாங்கக் கூடாது என்று திரும்பி விட்டீரா? ஆர் யு எ ராஸிஸ்ட்?'' என்று கடிந்தார். பாடகர் ஃப்ரெஞ்சுக்காரர். அவர் அதிர்ந்து போய் விட்டார். ''இல்லை உங்களுக்கு சிரமம் கொடுக்கக் கூடாது என்றுதான் திரும்பினேன். நான் ராஸிஸ்ட் இல்லை'' என்று எங்களிடம் கெஞ்சினார். பிறகு நான்தான் ஷோபாவை சமாதானம் செய்தேன்.

இப்போது நினைத்தாலும் முறுவல் பூக்க வைக்கும் நிகழ்ச்சி. ஆச்சரியமில்லை. பாரிஸ் நகரமே அப்படித்தான். **A city of smiles**!

26.7.2002

சிவப்பு நிறத்தின் சுவடே இல்லை

''சொல்லுங்கள் கிருஷ்ணராஜ், பெரூவில் நீங்கள் இருப்பது எந்த ஊர்?'' என்று ஆரம்பித்தேன்.

'நீண்ட காலத்துக்குப் பிறகு கிருஷ்ணராஜ் என்று அழைக்கப்படுகிறேன்' என்று சந்தோஷப்பட்டார். தென்னமெரிக்கா முழுதும் 'கிருஷ்ணராஹ்' தான். மேட்டுப்பாளையத்திலிருந்து பொலிவியா சென்று அங்கிருந்து பெரூவுக்குப் போய்ச் சேர்ந்த கதையைச் சொன்னார்.

பெரூவின் தெற்கு முனையிலுள்ள தாக்னா என்ற ஊரில் (ஜனத்தொகை ஒன்றரை லட்சம்) மனைவியுடனும், ஸ்வேதா, நிவேதா என்ற மகள்களுடனும் வாழ்கிறார். இடையில் ஸ்வேதா தொலைபேசியில் வந்து ஸ்பானிஷில் பேசிவிட்டுச் சென்றாள். நிவேதாவுக்கு இன்னும் சிறிது காலம் எடுக்கும். பூமிக்கு வந்து இரண்டு மாதம் தான் ஆகிறது.

‘சந்த்தியாகோவில் இருக்கும் பிரகாஷ் யார்? உங்கள் நண்பரா?‘

‘சிறுவயதிலிருந்தே ஒன்றாகப் படித்தவர்களாம். அதுமட்டுமல்ல. மேட்டுப்பாளையத்தில் கிருஷ்ணராஜின் பக்கத்து விட்டுக்காரர் பிரகாஷ்.

‘அட, அங்கே பக்கத்து வீடு.. இங்கே பக்கத்து ஊரா?‘

உண்மைதான். தாக்னாவிலிருந்து சிலே 22 கி.மீ. தூரம் தான். ‘அடிக்கடி சிலே சென்று வருவேன்‘ என்றார் கிருஷ்ணா. மாரியோ வார்காஸ் லோசாவை எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது. ஆனால் அவர் ஸ்பெய்னில் தான் இருக்கிறார் என்று தெரிகிறது. அவர் மகன் தான் இங்கே அதிபருக்கு நெருக்கமானவராக இருந்தார். இப்போது அவர் மீதும் ஏதோ வழக்கு விசாரணை நடந்து வருகிறது.

லோசாவின் நாவல்கள் இங்கே ஸ்பானிஷில் மட்டும்தான் கிடைக்கிறது. ஆங்கில மொழிபெயர்ப்புகள் அரிது. அன்றைக்குக்கூட ஒரு புத்தகக் கடைக்குப் போனேன். லோசாவின் பனிரண்டு நாவல்களை அடுக்கி வைத்திருந்தார்கள். ஆனால் எல்லாம் ஸ்பானிஷ். எனக்கும் ஸ்பானிஷ் தெரியும். இனி லோசாவை படித்துவிட வேண்டியதுதான்.

கொஞ்ச காலம் பொலிவியாவில் இருந்தேன்.‘

‘எங்கே லா பாஸிலா?‘

‘இல்லை‘

‘கொச்சபாம்பா?‘

‘இல்லை.. ஸாந்த்தா க்ரூஸ்‘

‘பொலிவியர்கள் பார்ப்பதற்கு எப்படி திபெத்தியர் மாதிரி இருக்கிறார்கள்? மலைப் பகுதி என்பதாலா?‘

‘ஆமாம். ஆனால் அவர்களில் இரண்டு விதம் உண்டு. மலைப் பகுதி மக்கள் திபெத்தியர் போலவே இருப்பார்கள். மேற்கில் இருப்பவர்கள் வேறு மாதிரி.. 7 **Years in Tibet** என்ற படத்தின் பெரும் பகுதி பொலிவியாவில் எடுக்கப்பட்டதுதான்‘

‘சிலேவுக்கும் ஜப்பானுக்கும் என்ன சம்பந்தம்? ஃபுஜிமோரி மாதிரி ஒரு ஜப்பானிய ஆள் எப்படி பெரூவின் அதிபராக முடிந்தது?‘

‘ஃபுஜிமோரியின் தாத்தா காலத்தில் ஒரு கூட்டம் ஜப்பானிலிருந்து கிளம்பி தென்னமெரிக்கா வந்து அதில் ஒரு பிரிவு பெரூவிலும் மற்றொரு பிரிவு பொலிவியாவிலும் குடியேறிவிட்டது. பொலிவியாவில் சில இடங்களில் ஊர்களின் பெயரே ஜப்பானியப் பெயர்களாக உள்ளன. ஜப்பானியர் பெரும் பணக்காரர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் நமக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம் என்னவென்றால், நாம் எங்கே வாழ்கிறோமோ அந்த இடத்தின் கலாச்சாரத்தோடு ஓரளவுக்காகவாவது நம்மைப் பிணைத்துக் கொண்டு விடுகிறோம். ஆனால் ஜப்பானியர் அப்படி இல்லை. தலைமுறை தலைமுறையாக அவர்கள் தங்கள் தனித்தன்மையை விட்டுக்கொடுக்காமல் இருந்து வருகிறார்கள். அவர்களுக்குக் கீழே தான் பொலிவியர்கள் வேலை செய்கிறார்கள்...

இந்தியா என்று சொன்னால் இங்கே உள்ளவர்களுக்கு இரண்டு பேரைத்தான் தெரிகிறது. ஒன்று, மேரா நாம் ஜோக்கர் ராஜ்கபூர். மற்றொருவர், மகாத்மா காந்தி. இதுதவிர, மதர் இண்டியா படமும் தெரியும். அந்தப் படம் வெளிவந்த காலத்தில் ஒரு வட இந்தியர் மதர் இண்டியா படப்பெட்டி ஒன்றைத் தூக்கிக்கொண்டு பெரூவுக்கு வந்து ஒவ்வொரு ஊராக அந்தப் படத்தைப் போட்டுக் காண்பித்து மிகப்பெரிய பணக்காரராகி விட்டார். இப்போது லீமாவில் நான்கைந்து தியேட்டர்களுக்கு சொந்தக்காரர்...'

'அங்கெல்லாம் மது சமாச்சாரங்கள் எப்படி?'

'**Tisco** என்று ஒரு மது உள்ளது. நம்மூர் சாராயம் மாதிரி வீரியமாக இருக்கும். ஆனால் பலரும் விரும்பிச் சாப்பிடுவது பியர் தான். இங்குள்ள வெய்யில் அப்படி. காலை நான்கு மணிக்கே ஆரம்பிக்கும் வெய்யில் இரவு எட்டு மணி வரை நீடிக்கும். (ஆனால் இப்போது குளிர்காலம். பத்து டிகிரி செல்ஷியஸ்) திங்கட்கிழமை காலையில் எல்லோரும் வீங்கிப் பழுத்த கண்களுடன் வருவார்கள். 'எத்தனை போத்தல்?' என்று கேட்பேன். 'போத்தலா? பெட்டி என்று கேள்' என்பார்கள். ஆமாம். பெட்டி பெட்டியாக காலி பண்ணுவார்கள். அதிலும் 'மார்கரீத்தோ' என்று ஒரு பியர்... ஒரு போத்தலே ஒன்றரை லிட்டர் இருக்கும். மார்கரீத்தோ என்ற பெயருக்கு ஒரு காரணம் இருக்கிறது. பெரூவில் அந்தப் பெயரில் ஒரு உயரமான ஆள் இருந்தார். உயரம் என்றால் அப்படியிப்படி இல்லை. எட்டு அடி என்கிறார்கள். அதனால் அவருடைய பெயரையே இந்த உயரமான பியர் போத்தலுக்கும் வைத்துவிட்டார்கள்.

நான் முன்பு குடித்துக் கொண்டிருந்தேன். ஸ்வேதா பிறந்ததும் புகைப்பழக்கத்தையும் மதுவையும் விட்டுவிட்டேன்.

எப்போதாவது ஒயின் குடிப்பேன். இந்த ஊர் சாப்பாட்டுக்கு ஒயின் தேவை என்று தோன்றுகிறது. ஏனென்றால் இங்கே எதிலும் கொழுப்பை நீக்குவதில்லை. கொழுப்போ இதயத்துக்கு நல்லதல்ல. சிவப்பு ஒயின் கொழுப்பைக் கரைத்து விடும் என்பதால் அதைச் சாப்பிடுகிறேன்.'

பிறகு பேச்சு தென்னமெரிக்க நடனம், இசை பற்றித் திரும்பியது.

அர்ஜென்டினாவின் டாங்கோ, பொலிவியாவின் மெரெங்கோ, பெருவீன் ஸல்ஸா, ப்ரஸீலின் ஸாம்பா... அப்போது கிருஷ்ணராஜ் குறிப்பிட்ட ஒரு விஷயம்... ப்ரஸீல் நாட்டைச் சேர்ந்த கால்பந்தாட்டக்காரர் சொன்னாராம்.. நாங்கள் மைதானத்தில் ஸாம்பா நடனத்தைத்தான் கால்பந்தாட்டமாக மாற்றுகிறோம் என்று.

'பெரூவில் கால்பந்தாட்டம் எப்படி?'

'உயிர் மூச்சே கால்பந்துதான். சுவாசமே அதுதான். உட்கார்ந்தால் கால்பந்து. நின்றால் கால்பந்து. ஐந்து நிமிடம் கிடைத்தால் கூட கால்பந்தை சுழற்றிச் சுழற்றி ஆடிக்கொண்டிருப்பார்கள். மதிய உணவு இடைவேளையின் போது கூட கால்பந்து தான். அடுத்த உலகக்கோப்பையை வென்றே தீருவது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.'

'ஸ்பானிஷ் மொழி கேட்பதற்கு அருமையாக இருக்குமே?'

'உண்மைதான். அதிலும் ஆலன் கார்ஸியா பேசி நீங்கள் கேட்க வேண்டும். மேடைப்பேச்சில் அவருக்கு நிகரே இல்லை என்று சொல்லலாம். ஒரு சமயம்-அப்போது எனக்கு ஸ்பானிஷ் அவ்வளவாகத் தெரியாது-ஆலன் கார்ஸியாவின் பேச்சைக் கேட்டு

மெய்மறந்து போனேன். நான்கு மணி நேரம் தங்கு தடையில்லாமல் மழைபோல் பொழிந்தது அவர் பேச்சு. அப்போது என் நண்பர்கள் சொன்னார்கள்.. அதற்கான முழு அர்த்தமும் விளங்கினால் அதன் அழகே தனி என்று!

ஆலன் கார்ஸியா பெரூவில் ஐந்து ஆண்டுகள் அதிபராக இருந்தவர். ஆலன் கார்ஸியாவைப் போல் ஃபிடல் காஸ்ட்ரோவின் மேடைப் பேச்சும் அற்புதமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டேன்.

பிறகு என் நீண்ட நாள் சந்தேகத்தைக் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டேன்..
'மெக்ஸிகோவை மெஹீகோ என்று தானே சொல்ல வேண்டும்?'

'ஆமாம்.'

'**Alejandro Mayta?**'

'அலெஹாந்த்ரோ மாய்த்தா'

'**Jesus**?'

'ஹேசூஸ்'

சுமார் முக்கால் மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார் கிருஷ்ணராஹ்-மன்னிக்கவும்-ராஜ்.

என்னுடைய அறை-சொல்ல வேண்டியதில்லை-புத்தகங்களாலும் பத்திரிகைகளாலும் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும். உள்ளே கால் வைக்க வேண்டுமானால் கூட புத்தகத்தின் மீதுதான் கால் வைத்து வரவேண்டியிருக்கும். அவந்திகா வந்து ஒழுங்குபடுத்தி வைத்தாலும் ஓரிரு தினங்களில் எல்லாம் பழையபடி வந்துவிடும். பிரச்னை என்னவென்றால், புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டிருந்தால் எனக்கு வேண்டிய புத்தகமோ பத்திரிகையோ கிடைக்காது. இதனால், ஒழுங்கு-ஒழுங்கின்மை பற்றி அவந்திகாவிடம் நீண்டதொரு விரிவுரை ஆற்ற வேண்டிய சந்தர்ப்பங்களும் ஏற்படுவதுண்டு. இப்படியிருக்கும் போது ஒரு நாள்-ஏதோ ஒரு புத்தகத்தை எடுக்க முனைந்தபோது வேறு சில காகிதங்கள் தபதபவென விழுந்தன. அதில் ஒரு குறிப்புப் புத்தகம். 1986 ஆம் ஆண்டு என்று அதில் கண்டிருந்தது. பக்கங்கள் பழுத்து நைந்து போயிருந்தன. வயதான குறிப்புப் புத்தகம். அப்போதெல்லாம் தில்லியில் அமெரிக்க நூலகத்தில்தான் எந்நேரமும் விழுந்து கிடப்பேன். இப்போது மாதிரி பாதுகாப்பு தடபுடலெல்லாம் அப்போது கிடையாது.

நியூயார்க்கர் பத்திரிகையிலிருந்து **Donald Barthelme** கதைகளைப் படித்து அதுபற்றி எழுதிய குறிப்புகள். விமர்சனங்கள். பற்பல லத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களைப் பற்றிய குறிப்புகள்.

Claribel Alegria - நிகாராகுவா

Isaac Goldemberg - பெரூ

பின் வருபவர்கள் பெண் எழுத்தாளர்கள்

Lucia Guerra - மெக்ஸிகோ

Cristina Peri Rossi -உருகுவாய்

Rosario Ferre -புவெர்த்தோ ரீக்கோ

Olga Savary -ப்ரஸீல்

Maria Fernandez de Tinoco - கோஸ்த்தா ரீக்கா

Carmen Lyra -கோஸ்த்தா ரீக்கா

Yolanda Oreamuno - கோஸ்த்தா ரீக்கா

அடுத்து வருவது **Mahmoud Darwish** பற்றிய குறிப்புகள். அரபி இலக்கிய உலகில் மிகவும் புகழ்பெற்றவர் தார்விஷ். ஒரு முறை பாகிஸ்தானிலிருந்து நாடு கடத்தப்பட்டவர். ஜியா-உல்-ஹக் அப்போதைய பாக்.ஜனாதிபதி.

ஈரானைச் சேர்ந்த **Said Sultanpour**-மன்னர் ஷாவின் காலத்தில் சித்ரவதைக்கு உள்ளாகி கொமெய்னியின் காலத்தில் கொல்லப்பட்டவர்.

துருக்கியக் கவிஞர் **Nazim Hikmet**.

Faiz Ahmed Faiz பற்றிய குறிப்புகள். நைந்துபோய் காகிதங்கள் ஒடிந்து விழுகின்றன. அவரது கவிதை வாசிப்புக்கு 50,000 பேர் வருவார்கள் என்கிறது குறிப்பு. பேகம் அக்தர் இவரது கஜல் பாடல்களைப் பாடியிருக்கிறார். (உயிரை அள்ளும் அந்த இசையை யாரேனும் கேட்டிருக்கிறீர்களா?)

Faizன் ஒரு கவிதை-மொழிபெயர்ப்பு என்னுடையது.

ரத்தத்தின் அறிகுறியே எங்குமில்லை, எந்த இடத்திலும் இல்லை. எல்லா இடத்திலும் தேடிப் பார்த்துவிட்டேன். கொலையாளியின் கரங்கள் சுத்தமாக உள்ளன, அவனது நகங்கள் கூட பளிச்சென்று இருக்கின்றன.

எந்தவொரு கொலையாளியின் உடையிலும் ரத்தக்கறை படியவில்லை.

எங்கேயும் இதற்கான எந்த அடையாளமும் இல்லை. சிவப்பு நிறத்தின் சுவடே இல்லை. கத்தியிலும் இல்லை.

வாளின் கூர்முனையிலும் இல்லை.

தரையிலும் கறைகள் இல்லை. விதானமும் வெண்மையாகவே இருக்கிறது.

எங்குமே ரத்தத்தின் சுவடுகள் இல்லை. எந்த இடத்திலும் இல்லை.

தன் அடையாளம் எதையுமே விட்டு வைக்காமல் மறைந்து போயிருக்கும் இந்த ரத்தம் இதுவரை எழுதப்பட்ட வரலாற்றின் பகுதியல்ல:

பேரரசர்களின் சேவைக்காக இது சிந்தப்பட்டதல்ல,

பலிச் சடங்குகளுக்காக படைக்கப்பட்டதல்ல,

போர்க்களங்களில் சொரியப்பட்டதல்ல,

இதற்கு எந்த வெகுமதியும் கிடைத்ததில்லை, எந்த விருப்பமும் நிறைவேறியதில்லை.

எந்தக் கடவுளும் இதை ஆசீர்வதித்ததில்லை. இது தியாகியின் ரத்தமும் அல்ல.

இது வெற்றிப் பதாகைகளில் பொறிக்கப்பட்டதும் அல்ல.

இன்னமும் கேட்கப்பட்டதே இல்லை; கேட்கப்பட வேண்டுமென கதறுகிறது-யாருமற்ற இந்த அனாதை ரத்தம்.

எவருக்கும் இதைக்கேட்க நேரமில்லை, விருப்பமும் இல்லை.

அது கதறிக் கொண்டே இருக்கிறது.

ஆனால் இதற்கு சாட்சியுமில்லை, ஆதாரமும் இல்லை.

வழக்கும் தொடுக்கப்படவில்லை.

முக்கியமற்றவர்களின் இந்த ரத்தம்-ஆரம்பத்திலிருந்தே புழுதியினால் வழங்கப்பட்ட இந்த ரத்தம் புழுதியினாலேயே வளர்த்தெடுக்கப்பட்டது.

முடிவில் இது புழுதிக்குள்ளேயே தன்னை மறைத்துக் கொள்கிறது-கதறிக் கொண்டே.

இந்தக் கவிதையின் கீழே என்னுடைய குறிப்பு: 1857 ஆம் ஆண்டு சிப்பாய் கலகத்தில் தில்லியின் மரக்கிளைகளில் 30,000 பேரை தூக்கில் போட்டுத் தொங்கவிட்டார்கள் பிரிட்டிஷ் ராணுவத்தினர்.

28.7.2002

பெரியாரின் சாதனையை முறியடித்தே தீருவது என்று சபதம் பூண்டிருக்கிறேன்!

பெரூவிலிருந்து கிருஷ்ணராஜ் அனுப்பியிருந்த மின்னஞ்சலை இந்தப் பக்கங்களில் வெளியிட்டிருந்தேன் அல்லவா? உடனே கிருஷ்ணராஜுக்குத் தொலைபேசி அழைப்பு. சந்த்தியாகோவிலிருந்து பிரகாஷ். கோ.ப.வில் அவர் கடிதம் வந்திருப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். கிருஷ்ணராஜுக்கு ஒன்றும் புரியவில்லை. காரணம்-பிரகாஷ் குறிப்பிடும் கோ.ப.வை கிருஷ்ணராஜ் இன்னும் பார்க்கவில்லை. பார்க்கவும் வாய்ப்பில்லை. சந்த்தியாகோவுக்கும் பெரூவுக்கும் ஒரு மணி நேர வித்தியாசம் என்பதால்

கிருஷ்ணராஜுக்கு முன்னதாகவே பிரகாஷ் அலுவலகம் சென்று கம்ப்யூட்டரைத் திறந்துவிட்டார்.

சந்த்தியாகோ சிலேயின் தலைநகர் என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் மார்க்சீயவாதிகளுக்கு அது ஒரு தலைநகர் மட்டுமல்ல. அவர்களின் உணர்வுகளுடன் கலந்துவிட்ட ஊர். சிலே மட்டுமல்ல; பொலிவியாவையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். சே குவாரா தனது கெரில்லா யுத்தத்தை நிகழ்த்தி சி.ஐ.ஏ.வினால் கொல்லப்பட்ட இடம் என்பதால்.

பொலிவியாவில் சே குவாரா. சிலேயில் டாக்டர் அலெந்தே.

எனது நினைவுகள் செப்டம்பர் 11ஐ நோக்கிப் பின்னால் நகர்கின்றன. ஆனால் ஆண்டு 2001 அல்ல; அதற்கும் பின்னால் 28 ஆண்டுகள். 1973 ஆம் ஆண்டு செப்டம்பர் 11ஆம் நாள். தேர்தல் மூலமாக ஆட்சிக்கு வந்த அதிபர் சால்வதோர் அலெந்தேயின் ஜனநாயக அரசு ராணுவ ஜெனரல் அகஸ்தோ பினோசெத்தினால் தூக்கியெறியப்பட்டது.

இந்த வரலாற்று நிகழ்வுகளை ஒரு டாக்யுமென்டரி படமாக எடுத்திருக்கிறார் **Patricio Guzman**. படத்தின் பெயர் **The Battle of Chile.**

சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இத்திரைப்படம் எனக்குக் காணக்கிடைத்தது. இப்படத்தைப் பற்றி 'லத்தீன் அமெரிக்க சினிமா-ஓர் அறிமுகம்' என்ற என்னுடைய புத்தகத்தில் விரிவாக எழுதியிருக்கிறேன். மூன்று பாகங்களாக அமைந்த இப்படத்தின் முதல் பாகம் (96 நிமிடங்கள்) டாக்டர் அலெந்தேவுக்கு எதிரான வலதுசாரிகளின் சதித்திட்டங்களையும் அலெந்தேவின் போராட்டங்களையும் விவரிக்கிறது.

அப்போது சிலே ஒரு பக்கம் கொடிய வறுமையும் மறுபக்கம் அதற்குச் சம்பந்தமே இல்லாத சொகுசு வாழ்க்கையுமாக மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு கொண்ட சமூகமாக இருந்தது. 'இந்த நிலையை மாற்றுவதே எனது குறிக்கோள்' என்று போராடினார் அலெந்தே.

டாக்டர் சால்வதோர் அலெந்தே மருத்துவராக பணிபுரிந்து கொண்டிருந்த ஒரு மார்க்சீயவாதி. 1970ஆம் ஆண்டு தேர்தலின் மூலமாக ஆட்சிக்கு வந்தார். ஆனால் ராணுவமும் வலதுசாரிகளும் அவரது ஆட்சியை மிக வன்மையாக எதிர்த்தனர். அலெந்தே மற்றும் அவரது ஆதரவாளர்களைக் கொல்வதற்கு பல முயற்சிகள் நடந்தன. 1973 செப்டம்பருக்கு முன்னதாக ஜூன் மாதம் அலெந்தேயின் ஆட்சியைக் கவிழ்க்க ஒரு ராணுவப் புரட்சியே நடந்தது. அப்போது அலெந்தே தங்கியிருந்த அதிபர் மாளிகை ராணுவத்தினரால் தாக்கப்பட்டது. ஆனால் அலெந்தேவுக்கு ஆதரவாக இருந்த சிப்பாய்களால் அந்தத் தாக்குதலிலிருந்து அவர் தப்பினார்.

ஆனால் செப்டம்பர் 11 அன்று நடந்த தாக்குதல் முயற்சியில் ராணுவம் வெற்றியடைந்தது. காரணம்-அப்போது வலதுசாரிகள் சிலேயின் அன்றாட வாழ்வில் மிகப்பெரிய குழப்பத்தை உண்டாக்கியிருந்தனர். நாடெங்கும் வியாபாரிகளின் வேலை நிறுத்தம் செப்டம்பர் 10ஆம் தேதியன்று நான்காவது நாளாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. அதோடு லாரி உரிமையாளர்களின் வேலை நிறுத்தம் 47ஆவது நாளைத் தொட்டிருந்தது. சந்த்தியாகோவின் ஜனத்தொகை அப்போது முப்பது லட்சம்.

(இப்போது 29 ஆண்டுகள் கழித்து எவ்வளவு ஜனத்தொகை? அனேகமாக அதிகம் கூடியிருக்காது என்று நினைக்கிறேன். காரணம்-பத்தாண்டுகள் தொடர்ந்த ஜெனரல்

பினோசெத்தின் சர்வாதிகார ஆட்சியில் பினோசெத் செய்த ஒரே காரியம்-மக்கள் தொகையைக் குறைத்ததுதான். அதற்காக அவர் கடைப்பிடித்த எளிய வழி-அப்பாவிகளைப் பிடித்து கம்யூனிஸ்டுகள் என்று சொல்லி சுட்டுக் கொன்றுவிடுவது! இப்போது அதற்காக ஐரோப்பிய நீதிமன்றங்களில் நடந்த வழக்கு விபரங்களும் தீர்ப்பும் அதை பினோசெத் எதிர்கொண்ட விதமும் வேறு கதை. அதை நாம் சமீபத்தில் தினசரிகளில் பார்த்தோம்)

1973ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்-வலதுசாரிகளால் தேசத்தையே ஸதம்பிக்க வைக்க முடிந்தது. அப்போதுதான் செப்டம்பர் 10ஆம் தேதி அன்று சிலே ராணுவம் டாக்டர் அலெந்தேவுக்கு மதியத்திற்குள் ராஜினாமா செய்துவிட வேண்டும் என்று கெடு விதித்தது. அலெந்தே அச்சம் கொள்ளவில்லை. ''வாக்குகளால் என்னைத் தேர்ந்தெடுத்துள்ளனர் மக்கள். அவர்களால் மட்டுமே என்னை விலகச் சொல்ல முடியும். ராணுவத்தினால் அல்ல'' என்று உணர்ச்சிகரமாக வானொலியின் மூலம் உரையாற்றினார். தங்களின் கெடு முடிந்த மறுநாள் காலை ராணுவத்தின் கடற்படை சிலேயின் துறைமுக நகரமான வால்பராய்சோவில் கலகத்தைத் துவக்கியது. அப்போது டாக்டர் அலெந்தே வானொலியின் மூலமாக மக்களுக்கு மீண்டும் செய்தி விடுத்தார்.

''நான் ராஜினாமா செய்ய மாட்டேன். என் கடைசி மூச்சு இருக்கும் வரை அது நடக்காது. என் உயிரைக் கொடுத்தாவது ராணுவத்துக்குப் பாடம் புகட்டுவேன்'' என்றார்.

கடைசியில் அலெந்தே தான் சொல்லிய படியே தன் உயிரை விட்டார்.

மேலேயிருந்து ஜெட் விமானங்கள் அதிபர் மாளிகையின் மீது குண்டுகளைப் பொழிகின்றன. தரையில் டாங்கிகள் அதிபர் மாளிகையின் மீது மோதி மாளிகை தரைமட்டமாக்கப்படுகிறது.

(இந்தக் காட்சிகளையெல்லாம் பத்ரீஸியோ குஸ்மான் படமாக்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுதான் **Battle of Chile** படத்தின் இரண்டாவது பாகம்-88 நிமிடங்கள்)

அதிபர் மாளிகை தகர்ந்து விழுகிறது. அலெந்தே அந்தத் தருணத்தில் கூட குண்டு வீச்சுகளுக்கிடையே நாட்டு மக்களிடம் வானொலியில் உரையாற்றுகிறார். அவரது கடைசி நிமிடப் பேச்சை படத்தில் நாம் கேட்கிறோம். **Venceremos** (வெற்றி நமதே) என்று உரத்த குரலில் சொல்லியபடி துப்பாக்கியை வாய்க்குள் வைத்து வெடிக்கச் செய்து உயிர் துறக்கிறார் டாக்டர் அலெந்தே.

ஆனால் 'அலெந்தே கோழைத்தனமாக தற்கொலை செய்து கொண்டார்' என்று சிலேயின் ராணுவம் சொன்னதாக நியூயார்க் டைம்ஸ் 12.9.73 அன்று எழுதியது. அலெந்தேயின் மரணத்தைத் தொடர்ந்து ஆட்சியைப் பிடித்த ஜெனரல் பினோசெத் உடனடியாக அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார். எந்த இடையூறும் இல்லாமல் பத்தாண்டுகள் தொடர்ந்தது அவருடைய ராணுவ ஆட்சி. அந்தக் காலக்கட்டத்தில் தென்னமெரிக்காவில் நான்கு நாடுகளில் மட்டுமே குடியாட்சி நடந்து கொண்டிருந்தது என்பது மற்றொரு சுவாரசியமான தகவல். அர்ஜென்டினா, கொலம்பியா, வெனிஸுவலா மற்றும் கயானா. மற்ற நாடுகள் அனைத்திலும் ராணுவ ஆட்சி தான் நடந்து கொண்டிருந்தது!

சிலேயில் பினோசெத்தின் சர்வாதிகார ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போதே தலைமறைவாக வேறொரு பெயரில் அங்கே சென்று வந்தார் உலகப் புகழ்பெற்ற

எழுத்தாளர் காப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ். அந்த அனுபவங்களை ஒரு புத்தகமாகவும் எழுதியிருக்கிறார். அப்புத்தகத்தின் பெயர் **Clandestine in Chile**.

இரண்டு காரணங்களுக்காக சிலே என்ற அந்த தேசத்தை வணங்குகிறேன்.

ஒன்று, டாக்டர் அலந்தே.

இரண்டு, சிலிக்குயில் என்று அழைக்கப்படும் பாப்லோ நெரூதா பிறந்த மண்...

ஜெர்மனியிலிருந்து குமரேசன் அனுப்பியிருக்கும் ஒரு சுவாரசியமான அஞ்சல்:

பெர்லினில் நடந்த காதல் பேரணிக்கு சென்ற வாரம் சென்றிருந்தேன். அது ஒரு வித்தியாசமான அனுபவம். சனிக்கிழமை காலை **Hameln** ஐ விட்டுக் கிளம்பினேன். பதினோரு மணியளவில் பெர்லின் வந்து சேர்ந்தேன். ஃப்ராங்க் ஃபர்ட்டிலிருந்து என்னுடைய நண்பர்கள் சிலரும் வந்திருந்தனர். இரண்டு பேர் தமிழர்கள். ஒருவர் பஞ்சாபி. நகரத்துக்குள் நுழைந்தபோது கூட்டம் அதிகமில்லை என்று தெரிந்தது. என் பஞ்சாபி நண்பனும் அதையேதான் சொன்னான்.

அவன் காதல் பேரணிக்கு இரண்டாவது முறையாக வருகிறான். தெருக்களைக் கடந்து சென்று இறுதியாக பேரணி நடக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தோம். சாலையெங்கும் ஒரே குப்பை மயம். எல்லோருடைய கையிலும் பியர் போத்தல்கள்.. போத்தல்களும் கேன்களும் அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன. (மற்ற காலங்களில் ஜெர்மன் தெருக்களில் ஒரு தூசி துரும்பைப் பார்க்க முடியாது. கழுவி விட்டதைப் போல் பளிங்கு மாதிரி இருக்கும் என்பதை ஏற்கனவே எழுதியிருக்கிறேன்-சாரு) கடைசியாக பேரணி நடக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தபோது மணி 12.45. கொஞ்சம் கொஞ்சமாக கூட்டம் சேர ஆரம்பித்தது. 2.30 மணிக்கு பேரணி துவங்கியது. லேசான மழை வேறு. பேரணி அதன் முழுவீச்சில் சென்று கொண்டிருந்த போது கூட்டத்தில் நான்கு லட்சம் பேர். எப்பேர்ப்பட்ட கூட்டம் என்பதை கற்பனை செய்து கொள்ளுங்கள். அதுவும் ஒரே இடத்தில்... எல்லோரும் குடித்துக் கொண்டும் தங்கள் தோழிகளுடன் சேர்ந்து நடனமாடிக் கொண்டும் இருந்தார்கள்-எங்களைத் தவிர. (சே.. எங்கே போனாலும் தமிழனுக்கு இதுதான் நிலைமையா!-சாரு)

இசை உச்சக்கட்டத்தில் ஒலித்துக் கொண்டிருந்தது. இடையில் அந்த பஞ்சாபி நண்பனையும் காணவில்லை. எங்கே போய் தேடுவது? சரி, எப்படியும் ரயில் நிலையத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவிட்டோம். ஆறு மணியளவில் என்னுடைய மற்ற இரண்டு நண்பர்களையும் பிரிந்தேன். பல பேர் முக்கால் நிர்வாணமாகத்தான் இருந்தனர். சிலர் முழு நிர்வாணம்.. (ஆகா.. அடுத்த முறை இந்த காதல் பேரணி நடக்கும் போது எனக்குச் சொல்லுங்கள் குமரேசன்.. அவசியம் கலந்து கொள்கிறேன். சென்றமுறை பெர்லின் வந்த போதே நினைத்தேன்.. பெரியார் உறுப்பினராக இருந்த நிர்வாண சங்கத்துக்குச் செல்ல வேண்டும் என்று. சுசீந்திரன் தான் அழைத்துச் செல்லவில்லை. இப்போதைய நிலவரப்படி நிர்வாண சங்கத்தில் சேர்ந்து நிர்வாணமாக புகைப்படம் எடுத்துக் கொண்ட ஒரே தமிழர் என்ற பெயர் பெரியாருக்குத்தான் இருக்கிறது. சரியாக 69 ஆண்டுகளாக பெரியாரின் இந்தச் சாதனையை யாரும் முறியடிக்கவில்லை. முறியடிதே தீருவது என்று சபதம் பூண்டிருக்கிறேன்!-சாரு) எங்கு பார்த்தாலும் இசை.. குடி.. சிகரெட்.. போலீசார் சும்மா வேடிக்கைதான் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. காரணம்-காதல் பேரணியின் விசேஷம் இது. பேரணி நடந்த இடங்களில்

சாலையோரங்களில் புதர்கள்.. புதர்களுக்கு அருகே சென்று பார்த்தால் ஒரே நிர்வாணக் காட்சிகள்..

செஞ்சிலுவை சங்கத்தினர்தான் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தனர்-அதிகமாகக் குடித்து விட்டவர்களை எடுத்துச் செல்வதற்காக. நான் சில புகைப்படங்கள் எடுத்தேன். உங்களுக்கு அனுப்பி வைக்கிறேன். ஆனால் கோணல் பக்கங்களில் பிரசுரிக்க முடியாது. காரணம்.. எல்லாமே நிர்வாணக் காட்சிகள்தான். ஏழரை மணியளவில் ரயில் நிலையம் நோக்கி நடக்க ஆரம்பித்தேன். போய்ச் சேர இரண்டு மணி நேரம் பிடித்தது. பேரணி நடந்த இடத்திலிருந்து நான்கு கி.மீ. தூரம் தான் இருக்கும். 12.08க்கு ரயிலைப் பிடித்தோம். பெர்லினை விட்டு நகரும்போது மேம்பாலத்திலிருந்து பார்த்தேன்.. ஒரு பக்கம் மக்கள் வெள்ளம்.. மற்றொரு பக்கம் மலைபோல் குவிந்து கிடந்த குப்பை..

குமரேசனின் கடிதம் என்னை வெகுவாக சிந்திக்க வைத்தது. இங்கே இந்தியாவில்-பிரயாகையில்-மூன்று கோடி பேர் ஒரே நாளில் கூடுகிறார்கள். காரணம்-மதம், கடவுள். இதுதவிர மரணத்தின் போதும் லட்சக்கணக்கில் கூடுகிறார்கள். உதாரணம்-அண்ணா மற்றும் எம்ஜியாரின் மரணம். ஆக, இங்கே கூடுவது-**Celebration of absence of body** - அதாவது யாக்கை நிலையாமை. அங்கே-இதற்கு மாறாக, உடலின் இருப்பிற்கான கொண்டாட்டம்-யாக்கைத் திளைப்பு.

நம் நாட்டிலும் யாக்கைத் திளைப்பு நடந்து கொண்டுதான் இருக்கிறது. பல அலுவலகங்களில் கணிப்பொறியில் நீலப்படம் பார்ப்பதை கண் கூடாகக் கண்டு வியந்திருக்கிறேன். (காலையில் பத்து மணிக்கு அலுவலக மேஜையில் எப்படி ஐயா நீலப்படம் பார்க்க முடியும்... எனக்குப் புரியாத சமாச்சாரம் இது!)

Suppression of body... வேறு என்ன?

பின்குறிப்பு: சொன்னால் நம்ப மாட்டீர்கள். என்னாலும் நம்ப முடியவில்லை. கட்டுரையை எழுதி முடித்துவிட்டு தொலைபேசி இணைப்பை மீண்டும் புதுப்பித்த போது-அதுவரை எழுதும் பொருட்டு இணைப்பைத் துண்டித்து வைத்திருந்தேன்-உடனடியாக மணி அடித்தது. எடுத்தால், பெரூவிலிருந்து கிருஷ்ணராஜ். 'இரண்டு மூன்று முறை முயற்சி செய்தேன். எங்கேஜ்டாக இருந்தது' என்றார். 'ஹி ஹி..' என்று அசடு வழிந்தபடி காரணத்தைச் சொன்னேன். முக்கால் மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார் கிருஷ்ணராஜ். என்ன பேசினார் என்பது அடுத்த கட்டுரையில்.

28.7.2002

ஊழல் செய்தவர்களைத் தூக்கி...

இன்று காலை ஏழேகால் மணியிலிருந்து ஒன்பது மணி வரை பெரூவிலிருந்து பேசினார் கிருஷ்ணராஜ். பல சந்தேகங்களைக் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டேன்.

'அங்கே சே குவாராவின் ஞாபகம் யாருக்காவது இருக்கிறதா?'

இளைய தலைமுறைக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் அர்ஜென்டினாவில் (சே குவாரா பிறந்த நாடு) அவரை யாரும் மறக்கவில்லை. பேச்சுக்கிடையே ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் 'சே' என்றுதான் சொல்லி முடிக்கிறார்கள். சே குவாராவுக்கு அவர்கள் தரும் மரியாதை இது.

சென்னைத் தமிழில் பேச்சுக்கிடையே 'ங்...' என்று சொல்வார்கள். இதையே பஞ்சாபில் 'பெஹன் தி லண்ட்' என்றும் தில்லியில் 'பெஹன் சூத்' என்றும் சொல்வார்கள். இதன் அர்த்தத்தையே உணராதது போல் சர்வசாதாரணமாக பேச்சுக்கிடையே இளைப்பாறுவது போல இவ்வார்த்தைகள் வந்து விழும். இதுபோல் அர்ஜென்டினாவில் 'சே' என்று புரிந்து கொண்டேன்.

'அங்கே சாப்பாடெல்லாம் எப்படி?'

இவர்கள் சாப்பிடுகிற மாதிரி சாப்பிட்டால் நாம் பங்களா கட்டிவிடலாம். அப்பேர்ப்பட்ட கஞ்சப் பேர்வழிகள். காலையில் இரண்டு ப்ரெட் துண்டுக்கு இடையே கொஞ்சம் கறியை வைத்துத் தின்று விடுவார்கள். மதிய உணவு தவறாமல் ஓட்டலில்தான். ஏனென்றால் வீட்டை விட ஓட்டல் மலிவு. வீடு என்றால் தண்ணீர் செலவு, எரிவாயு செலவு என்று பல செலவுகள். இரவில் ரெண்டு துண்டு ப்ரெட். ஆனால் வெளியே வரும்போது படு ஷோக்காக மினுக்கிக் கொண்டு அட்டகாசமான ஜீன்ஸ், டீ ஷர்ட், கூலிங் கிளாஸ், ஸெண்ட் சகிதமாகக் கிளம்புவார்கள். வாரம் ஒரு முறை தான் எல்லோருமாகச் சேர்ந்து...

'பெரிய அளவில் சமைப்பார்களா?'

பெரிய ஓட்டலுக்குப் போய் சாப்பிடுவார்கள். இது தவிர, நீங்கள் எழுதியிருந்தீர்களே ஜப்பானிய உணவு.. ஷுஷீ.. மீனை சமைக்காமல் பச்சையாக சாப்பிடுவது.. அது இங்கும் உண்டு. செவிச்சே என்று பெயர். பச்சை மீனில் எலுமிச்சையைப் பிழிந்து சாப்பிடுவார்கள். பொலிவியாவின் சாப்பாடு ஓரளவு கேரளா மாதிரி இருக்கும். நிறைய கிழங்கு சேர்த்துக்கொள்வார்கள். மாட்டுக்கறி உப்புக் கண்டமும் உண்டு. மலைப்பாங்கான குளிர்நாடாக இருப்பதால் உப்புக்கண்டம் இங்கே அதிகம். பானையில் போட்டு வைத்தால் பல மாதங்களுக்குச் கெடாமல் கிடக்கும். கறி மட்டுமல்ல, கிழங்கைக் கூட உப்புக் கண்டம் போட்டு வைப்பார்கள்.

சீஸ் அதிகம் சாப்பிடுவார்கள். அவர்கள் அருகில் சென்றாலே பால் வீச்சம் அடிக்கும். சீஸ் வாசனையும் சேர்ந்து கொள்ளும். உடம்பு முழுவதிலும் இருந்து சீஸ் நாற்றமடிக்கும். அதோடு, இரண்டு வாரத்திற்கு ஒரு முறைதான் குளிப்பார்கள். இங்கே பெரூவிலும்

அப்படித்தான். குளிப்பது என்றால் என்ன என்று கேட்பார்கள். காரணம்-இங்கெல்லாம் காற்றில் ஈரப்பதம் அதிகம். (எப்போதும்) ஐஸ் தண்ணீருக்குள் மூழ்கியிருப்பது போலவே இருக்கும்.

'நீங்கள்?'

நாங்களெல்லாம் தினமும் குளித்து விடுவோம். வெந்நீரில்.

(நினைத்துக் கொண்டேன். ஐரோப்பியக் குளிருக்கும் மூன்றாம் உலக நாடுகளின் குளிருக்கும் உள்ள வித்தியாசத்தை. டிசம்பரில் ஐரோப்பா கிளம்புவது பற்றி நண்பர்கள் பயமுறுத்தினார்கள். அவ்வளவு குளிரில் எப்படிக் குளிப்பது என்பது அவர்கள் கவலை. ஆனால் அங்கேதான் நான் காலையிலும், இரவிலுமாக இரண்டுமுறை குளிக்க முடிந்தது. எங்கு திரும்பினாலும் வெந்நீர் கொட்டுகிறது. வீட்டில் திரும்பின இடத்திலெல்லாம்-வரவேற்பறை, சமையலறை, படுக்கையறை, கழிப்பறை, குளியலறை என்று எல்லா இடத்திலும் ஹீட்டர் இருக்கிறது. ஹீட்டர் என்றால் தில்லியில் மின்சாரத்தில் பழுக்கக் காய்ந்த இரும்புக் கம்பிச்சுருள்கள். கொள்ளிவாய்ப் பிசாசுகளைப் போல் நம்மைப் பயமுறுத்திக் கொண்டிருக்கும். தப்பித் தவறி அதன் மேல் பட்டு விட்டால் கை மேல் சொர்க்கம். வேறு ஏதாவது விழுந்து விட்டால் வீடே பஸ்பமாகி விடும். மேற்கு ஐரோப்பிய நாடுகளில் அப்படியில்லை. வெப்பக்காற்று மட்டுமே வருகிறது. பஸ்ஸில், மெத்ரோவில், கடைகளில் என்று எங்கே சென்றாலும் வெப்பக்காற்று வீசும் ஹீட்டர். அதிலும் என்னை அசர வைத்தது என்னவென்றால், பஸ்ஸிலும் மெத்ரோவிலும் ஒவ்வொரு இருக்கைக்கு அடியிலும் ஒரு ஹீட்டர் இருந்து கொண்டு நமது கால்களில் வெப்பக் காற்றை வீசி ஒத்தடம் கொடுக்கிறது. கிட்டத்தட்ட அரசாங்கம் மக்களை செல்லக் குழந்தைகளைப் போல் போஷிக்கிறது.

ஆனால் மூன்றாம் உலக நாடுகளில்-மனிதர்கள் குளிரை இன்னமும்-இவ்வளவு தூரம் விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட நிலையிலும்-ஆதிகால மனிதர்களைப் போலவே எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஐரோப்பிய நாடுகளில் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் குளிர்ந்த நீரும் சுடு நீரும் கொட்டிக்கொண்டே இருக்கிறது.இரவு பதினோரு மணிக்கு வெந்நீரில் தேக வலி தீரக் குளித்துவிட்டு ஈர உடைகளை வெப்பக் காற்று வரும் ஹீட்டரின் மேல் போட்டால் ஒரே மணி நேரத்தில் உலர்ந்து விடுகிறது. ஆனால் தில்லியில் ஒரு நாளில் பத்து மணி நேரம் மின்வெட்டு இருக்கும். நிறையபேர் ரஜாய் இல்லாமல் குளிரில் விரைத்துச் செத்துப் போவார்கள். அதிர்ஷ்டவசமாக மின்சாரம் இருந்தால் குளிப்பதற்கு வெந்நீர் வைப்பதற்காக வாளியில் தண்ணீர் நிரப்பி மின்சாரம் பாயும் கம்பி ஒன்றைச் செருகுவார்கள். பிறகு தண்ணீர் சுட்டு விட்டதா என்று விரல் விட்டுப் பார்த்து ஷாக் அடித்துச் சாவதும் உண்டு. வீட்டில் குழந்தைகள் இருந்தால் இந்த மின் கம்பியைப் பயன்படுத்த மாட்டார்கள். உடல் விறைத்து நரம்புகள் வலிக்க 'ஐயோ, அம்மா' என்று அலறியபடி ஐஸ் தண்ணீரில்தான் குளியல் நடக்கும். கிட்டத்தட்ட கற்காலம் மாதிரிதான் குளிரை எதிர்கொள்வோம்)

கொக்கா இலைகளை பொலிவிய வறுமையின் குறியீடு என்றே சொல்லலாம். பசியை மறப்பதற்காக அவர்கள் கொக்கா இலைகளை மென்று கொண்டிருப்பார்கள்.

'இளைஞர்கள் எப்படி?'

'அதை ஏன் கேட்கிறீர்கள். எல்லோருக்கும் இன்டர்நெட் பைத்தியம் பிடித்துவிட்டது. எந்நேரமும் 'சாட்டிங்'தான். அன்றைக்கு ஒரு நாள் ப்ரௌசிங் சென்டரில் நான் பார்த்த காட்சி எனக்கு சிரிப்பை வரவழைத்துவிட்டது. இரண்டு பேர் பக்கத்துப் பக்கத்து இருக்கைகளில் உட்கார்ந்து கொண்டு 'சாட்' பண்ணிக் கொண்டிருந்தார்கள்! இப்போது

நினைத்தாலும் சிரிப்பு வருகிறது. இது போல் நடுத்தர வயதினருக்கு இந்தியாவை மாதிரியே டி.வி.தான்.'

(இதைக் கிண்டல் செய்து லோசா எழுதிய நாவல்தான் **Aunt Julia and the Script writer.** லோசாவின் ஆரம்ப கால நாவல் இது. இந்த நாவல் எழுதப்பட்ட காலத்தில் டி.வி. இல்லையாதலால் அதற்குப் பதிலாக வானொலி சீரியல்கள். அந்த சீரியல்களுக்குக் கதை வசனம் எழுதும் ஆள்தான் நாவலின் கதாநாயகன். கிட்டத்தட்ட நம்மூரில் டி.வி. சீரியல்களைப் பார்த்துக் கண்ணீர் விடும் அத்தனை பெண்மணிகளையும் லோசாவின் மேற்கண்ட நாவலில் நாம் கண்டு களிக்கலாம்)

'பெண்கள் பதினைந்து, பதினாறு வயதிலேயே குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். நீலப்படம், டிஸ்கொதே என்று பல காரணங்கள். பதினைந்து வயதுக்கு மேல் பிள்ளைகளை பெற்றோர் கட்டுப்படுத்த முடியாது. ஆனால் இவர்களைப் போல் குழந்தைகளைக் கொஞ்சுபவர்களை, சீராட்டிப் பாராட்டுபவர்களை உலகில் வேறெங்குமே பார்க்க முடியாது. அப்படிக் கொஞ்சுவார்கள். ஆனால் பதினைந்து வயதானால் போதும், விரட்டிவிடுவார்கள். அவர்களும் அதேபோல் தகப்பனுக்கு முன்னாலேயே சிகரெட்டை ஊதியபடி 'நீ யார் எங்களை கேட்பதற்கு?' என்பார்கள். விளைவு-தகப்பனின் பெயரை மட்டுமே கொண்ட-ஆனால் தகப்பனே இல்லாத பல ஆயிரக்கணக்கான குழந்தைகள் இன்றைக்குப் பெருகிவிட்டார்கள்.அதனால் அரசாங்கம் இப்போது இளைஞர்களைத் திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்துகிறது.

'இம்மாதிரி விவகாரத்தில் மாட்டிக் கொண்டவர்தான் நான் ஏற்கனவே சொன்ன அலெஹாந்த்ரோ மந்ரிகே. மிகக் கீழ்நிலையிலிருந்து மேலே வந்தவர் அவர். ஷு பாலிஷ் போட்டு படித்து முன்னேறியவர். இளம் வயதில் ஒரு பெண்ணுடன் திருமணம் செய்து கொள்ளாமல் பழகியதில் ஒரு பெண் குழந்தை பிறந்திருக்கிறது. அவர் பெயருடனேயே வளர்ந்திருக்கிறது. பிறகு மந்ரிகே ஹார்வர்ட் பல்கலைக்கழகம் போய்விட்டார். பெல்ஜியத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்து கொண்டு டபுள் டாக்டரேட் பட்டத்துடன் பெரூவுக்குத் திரும்பி அதிபர் ஆலன் கார்சியாவுக்கு ஐந்தாண்டுக் காலம் உதவியாளராக இருந்து, பிறகு அதிபர் தேர்தலுக்கு நிற்கும்போது அவருடைய மகள் வழக்குத் தொடர்ந்து விட்டாள். நீதிபதி மந்ரிகேவை **DNA** சோதனைக்கு உத்தரவிட்டார். ஆனால் மந்ரிகே அதற்கு மறுத்துவிட்டார். வழக்கு இப்போது முடிவுக்கு வராமல் நிற்கிறது.'

'டவுன் பஸ்ஸில் கூட்டம் உண்டா?'

'அதெல்லாம் லீமாவில் மட்டும்தான். மற்ற ஊர்களில் ஜப்பானிய வேன்கள் நிறைய ஓடுகின்றன. கூட்டமே கிடையாது. ஆனால் சந்த்தியாகோ தெ சீலேவில்...'

'என்ன?'

'ஆமாம்.. இந்தப் பக்கத்தில் மூன்று நான்கு சந்த்தியாகோ இருக்கிறது. அமெரிக்காவில் ஒன்று. அடுத்து கூபாவில். சந்த்தியாகோ தெ கூபா. சந்த்தியாகோ தெ சீலே... அந்த ஊரில் ஜனத்தொகை மிகவும் அதிகம். அதேபோல் பொலூஷனும் மிக அதிகம். சென்னையில் அறுபது சதவீதம் என்றால் சந்த்தியாகோ தெ சீலேவில் முந்நூறு சதவீதம். பல சமயங்களில் மக்கள் ஆக்ஸிஜன் மாஸ்க் போட்டுக் கொள்ள வேண்டிய நிலைமை வந்துவிட்டது. குழந்தைகளுக்கெல்லாம் ஆக்ஸிஜன் மாஸ்க். அதுவும் பற்றாக்குறை. நீ ஒரு ஐந்து நிமிடம், நான் ஒரு ஐந்து நிமிடம் என்று மாற்றிக் கொள்வார்கள். சாலைகளில் வாகனப் போக்குவரத்து கட்டுக்கடங்காமல் போய் விட்டதால் நீங்கள் கார்

வைத்திருந்தாலும் எடுத்து வர முடியாது. எடுத்து வரவும் கூடாது. தினமும் காலையில் தினசரியிலும், தொலைக் காட்சியிலும் அறிவிப்பு வரும். ஒன்றாம் எண்ணில் முடியும் கார்கள் இன்று வெளியே வரக்கூடாது-அடுத்த நாள், இரண்டாம் எண்ணில் முடியும் கார்கள் வெளியே வரக் கூடாது-இப்படி அறிவிக்கும் அளவுக்கு வாகனப் போக்குவரத்து அதிகரித்து விட்டது.

ஆனால் சந்த்தியாகோ தெ சீலே இன்று ஒரு ஐரோப்பிய நகரத்தைப் போல் மாறிவிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பார்த்தேன். மெத்ரோவில் (பாதாள ரயில்) இரண்டு லைன்கள் இருந்தன. இப்போது ஆறு லைன்கள் ஓடுகின்றன. எல்லாம் ஃப்ரெஞ்சுக்காரர்களுடன் போட்டுக்கொண்ட ஒப்பந்தம். சந்த்தியாகோவில் ஒரு நதி ஓடுகிறது. அந்த நதிக்கு அடியிலும் பாதாளப் பாதை போட்டு வாகனங்கள் செல்கின்றன.'

'இவ்வளவுக்கும் பணம்?'

'ஜெனரல் பினோசெத் தான். பினோசெத் பற்றி நீங்கள் சொல்வது ஒரு கோணம். அநேகமாக அது மார்க்சீயப் பார்வை. ஆனால் இங்கே மக்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? அரசியல்வாதிகளையும் ஊழலையும் ஒரேயடியாக ஒழித்துக் கட்டிய பினோசெத்துக்கு நன்றி என்கிறார்கள். ஊழல் செய்தவர்களைத் தூக்கிக் கொண்டு போய்-நிஜமாகவே நம்மூரில் சாலை விதிகளை மீறி நின்று கொண்டிருக்கும் கார்களைத் தூக்குவார்களே அதைப் போல் கிரேன் மூலமாகத் தூக்கிக் கொண்டுபோய் கடலில் போட்டு விடுவாராம் பினோசெத். அதற்குப் பிறகு எவன் ஊழல் செய்வான்? (நம் ஊரிலும் இந்த மாதிரி செய்ய வேண்டும் சாரு.) அதனால் இப்போது அரசு நிதியில் எக்கச்சக்கமான உபரி.. அதை வைத்துக் கொண்டு வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அநேகமாக, பினோசெத் சிலே தேசத்து மக்களின் எண்ணப்போக்கையே மாற்றிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். சிலே தேசத்தவரின் நாணயத்தையும் நேர்மையையும் பற்றி இப்போது லத்தீன் அமெரிக்கா பூராவும் பேச்சாகக் கிடக்கிறது. கிருஷ்ணராஜ் மேலும் ஒரு விவகாரமான விஷயம் சொன்னார். அதை நாளை சொல்கிறேன்.

29.7.2002

ஆராய்ச்சி செய்யும் கண்கள்

சிறுபத்திரிகை இலக்கியவாதிகளுடனான என்னுடைய நட்பு எப்போதும் மிக மோசமான முறையில்-சமயங்களில் மூர்க்கமாக-முறிந்து போகிறது. பத்து வருடகாலம் 'தாயாய் பிள்ளையாய்' பழகிவிட்டு ஒரே கணத்தில் அற்றுவிடுகிறது உறவு. தொடர்ந்து இப்படியே நடந்து வருவதால், இப்போது நண்பர்களாய் இருப்பவர்கள் மீது கூட சந்தேகத்தின் நிழல் படிகிறது. 'இந்த நட்பு இன்னும் எத்தனை நாளைக்கோ?' என்ற அவநம்பிக்கையுடனேயே பழக வேண்டியிருக்கிறது.

அவ்வாறாக ஒரு நட்பு முறியும்போது அதனால் ஏற்படும் வலியும் காயமும் அதிகம். அப்படி நான் அதிகமாகக் காயமுற்றது குமார் விஷயத்தில். (பெயரை மாற்றியிருக்கிறேன்) அவர் பள்ளியிறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு அறிமுகம். பிறகு பதினைந்து ஆண்டுக்காலம் தொடர்ந்தது எங்கள் நட்பு. மிகக்கொடிய வறுமையான சூழலில் வளர்ந்தார் குமார். அவர் எழுதுகிற குடிசையில் பாம்புப் புற்றுகளெல்லாம் உண்டு. நான் அப்போது தில்லியில் இருந்தேன். அவர் தமிழ்நாட்டில். அவர் எழுதிய கடிதங்கள் இன்னமும் என்னிடம் பத்திரமாக உள்ளன. கடிதங்களில் துளிக்கூட மார்ஜின்

விடாமல் நுணுக்கி நுணுக்கி எல்லா இடங்களிலும் எழுதியிருப்பார். எறும்புப் புற்றைக் கலைத்தால் எப்படியிருக்குமோ அப்படியிருக்கும் அவர் கடிதம். காகிதங்களும் நைந்து போயிருக்கும். சில சமயங்களில் சினிமா நோட்டீசின் பின் பக்கம் கூட எழுதி அனுப்புவார். 'இது அவருடைய தனிப்பட்ட வழக்கமாக்கும்' என்று நினைத்து விட்டுவிட்டேன். பிறகு கொஞ்சநாள் கழித்து இந்தத் துன்பம் தாங்க முடியாமல் கேட்டேன். அப்புறம்தான் என் புத்திக்கு உறைத்தது. அவரிடம் காகிதம் வாங்க காசு இல்லை.

தில்லியிருந்து ஊருக்கு வரும்போது காகிதம் வாங்குவதற்கென்று தனியாகப் பணம் கொண்டு வருவேன். ஆனால் அந்தப் பணத்தில் குடித்து விடுவோம். (நீண்ட நாள் கழித்துச் சந்திப்பதைக் கொண்டாட வேண்டாமா?) பிறகு திரும்பவும் சினிமா நோட்டீசிலேயே கடிதம் வரும். அதனால் ஒரு வழக்கம் செய்தேன். தில்லியிலிருந்து கிளம்பும்போது உயர்தரக் காகிதம் ஐந்து ரீம் வாங்கிக் கொண்டு வருவேன். எடை கூடி விடும். அதைச் சுமப்பதற்கு ஆள். கடைசியில் ஊர் வந்து சேரும் போது சுண்டைக் காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம் என்ற கதையாகப் போய்விடும். இதுபோல் ஆயிரக்கணக்கான சம்பவங்கள். குமாரையும் சும்மா சொல்லக் கூடாது. எனக்கு முடி வெட்டி விடுவார். செருப்பு தைத்துக் கொடுப்பார். எல்லாவற்றையும் விட ஒரு விஷயம் மறக்க முடியாது. எனக்கு சைக்கிள் விடத் தெரியாததால் தடிமாடு போன்ற என்னை எலும்பும் தோலுமாக இருக்கும் அவர் எங்கே போனாலும் பின் சீட்டில் உட்கார்த்தி வைத்தே அழைத்துக் கொண்டு போவார். 'நான் பஸ்ஸில் வந்துவிடுகிறேன் குமார். நீங்கள் சைக்கிளில் வந்து விடுங்கள்' என்பேன். கேட்க மாட்டார். 'உங்களோடு பேசிக் கொண்டு வரும் இன்பத்தை எனக்கு அளிக்க மாட்டீர்களா?' என்று அழகிய ஆங்கிலத்தில் பதில் சொல்வார். ஆனாலும் அவரால் சைக்கிள் மிதிக்க முடியாது. நெஞ்சு வலிக்கும். கொஞ்ச நேரம் சைக்கிளை நிறுத்தி விட்டு நடைபாதையோரத்தில் உட்கார்ந்து ஓய்வெடுப்பார். 'ஏன் இந்தப் பிரச்னை குமார்? நான் பஸ்ஸில்...' என்று வழக்கமான பல்லவியை ஆரம்பிப்பேன். பொறுத்துப் பொறுத்துப் பார்த்துவிட்டு ஒருநாள் சொல்லி விட்டார். 'இதோ பாருங்கள் சாரு.. உங்களோடு நான் இருப்பதால் கிடைக்கும் சந்தோஷமே எனக்குப் பிராண வாயு.. இந்த சந்தோஷத்தை வார்த்தைகளால் விளக்க முடியாது. எனக்கு எந்த வியாதியும் வராது. கவலையை விடுங்கள்.'

இப்படியிருந்த நட்பு மிக குரூரமான முறையில் முடிவுக்கு வந்தது. எந்த முகாந்திரமும் இல்லாமல் ஒரு பத்திரிகையில் என்னைத் தாக்கி எழுதினார். தாக்குதல் என்றால் எப்படி? ஒரே ஒரு உதாரணம்: சாருநிவேதிதாவுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும். பிரபலமான சிறுபத்திரிகை ஒன்றில் இதுபோன்ற தங்க வாக்கியங்கள் அவரால் எழுதப்பட்டன.

ஆனால் இலக்கியம் என்றால் என்னவென்றே தெரியாத மணியுடன் இருபது ஆண்டுகளாக நட்புடன் இருக்கிறேன். எந்தப் பிரச்னையும் இருந்ததில்லை என்பது மட்டுமல்ல. நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகவே இருந்து வருகிறது அந்த நட்பு. பீச் மீட்டிங் முடிந்து வீட்டுக்கு வந்து சட்டையைக் கழற்றினால் பாக்கெட்டில் கிடக்கும் ஒரே ஒரு சிகரெட். முதல்முறை கிடந்தபோது மணியிடம் குழப்பத்துடன் கேட்டேன். 'சரக்கு சாப்பிட்டால் நீ புகைப்பதைப் பார்த்திருக்கிறேன். வீட்டுக்குப் போன பிறகு என்ன செய்வாய் என்று நான்தான் வைத்தேன்' என்றார் மணி. எத்தனையோ ஆண்டுகளாக என் பாக்கெட்டில் விழுகிறது அந்த ஒற்றை சிகரெட்.

ஆனால் அவர் வீட்டுக்கு நான் சென்றதில்லை. என் வீட்டுக்கு அவர் வந்ததில்லை. அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று கூட எனக்குத் தெரியாது. திடீரென்று நேற்று 'டின்னருக்கு உன் வீட்டுக்கு வரப் போகிறேன்' என்று தொலைபேசியில் சொன்னார். 'வெஜ் ஆர் நான்வெஜ்?' என்று கேட்டேன். 'எனக்கு அய்யங்கார் சமையல்' என்றார்.

ஆனால், கூட வந்த அவர் நண்பருக்கோ பன்றி இறைச்சியே பிடித்த உணவு. எனக்கும் அதுவே பிடித்த உணவு என்பதால் இரண்டையுமே சமைத்து விடச் சொன்னேன் அவந்திகாவிடம். நல்ல பன்றி இறைச்சி எங்கே கிடைக்கும்? ஸ்பென்ஸர்தான். முன்பெல்லாம் உப்பு புளி மிளகாய் வாங்குவதென்றால் கூட அங்கேதான் போவேன். இப்போது செல்வந்தனாகி விட்டதால் அந்த இடம் நம் அந்தஸ்துக்கு ஆகாது என்று அந்தப் பக்கமே திரும்புவதில்லை. இப்போது பன்றி இறைச்சிக்காக அங்கேதான் செல்ல வேண்டும்.

ஸ்பென்ஸர் உள்ளே நுழைந்ததும் வழக்கமாக ஏற்படும் இன்ப அதிர்ச்சிதான் இப்போதும். ஆகா... இத்தனை அழகான பெண்களா இந்தச் சென்னையில்! ஆனால் அவந்திகாவும் உடன் வந்ததால் தலையைக் குனிந்தபடியே வலம் வந்து கொண்டிருந்தேன். ஆனாலும் கண்களோ, அதை நிர்வாகம் பண்ணும் மனமோ என் வசத்தில் இல்லையே! நான் என்ன செய்வேன்? கண்கள் தன்னிஷ்டம் போல் அலைய ஆரம்பித்தன. எவ்வளவோ அறிவுரை செய்தேன். சட்டையே செய்யவில்லை கண்கள். பிறகு சலிப்புற்று 'சரி, தொலை' என்று விட்டுவிட்டேன். ஆனால் நம் கண்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? பார்ப்பதோடு நிற்காது. ஆராய்ச்சி வேறு பண்ணித் தொலையும். அப்படி ஆராய்ச்சி செய்து கண்கள் என்னிடம் சொல்லிய தகவல் இது.

இருபது வயது வரையிலான பெண்கள் சரிவர உண்பதில்லை. எல்லாம் எலும்புப்பிச்சான்கள். குச்சி குச்சி கைகள். குச்சி குச்சி கால்கள். ஆனால் ஸ்தனங்கள் மட்டும் சாண்டியன் கதைகளில் வருகிறாற் போல!

இருபது வயதிலிருந்து முப்பது வரை எடை கூடும் பருவம். நாற்பதிலிருந்து ஒரே எகிறு எகிறி எண்பதாகி விடுகிறது எடை.

முப்பதிலிருந்து நாற்பது-கிடுகிடு வளர்ச்சி. எண்பதிலிருந்து நூற்று இருபது கிலோ.

நாற்பதுக்கு மேல்-சூமோ வீரர்களைப் போல் இருநூறு கிலோ மற்றும் அதற்கு மேல். பீப்பாய்களைப் போல் நடந்து வருகிறார்கள். எடை பற்றி கொஞ்சமும் கவலைப்படாத சந்தோஷக்களை முகத்தில் தெரிகிறது. ரஷ்ய, பல்கேரியப் பெண்களை ஞாபகப் படுத்தும் மகா உருவங்கள்...

வேலை முடித்துக் கொண்டு திரும்பும் போது வழியில் அவந்திகாவிடம் ஒரு இடத்தைக் காண்பித்து சொன்னேன்.. 'சென்னையில் எனக்கு மிகவும் பிடித்த இடம் இதுதான்' என்று. அந்த இடம் எத்திராஜ் காலேஜ்!

சமீபத்தில் துபாயிலிருந்து என்னை வந்து சந்தித்தார் பத்மனாபன் என்ற வாசகர். பேசி முடித்த பின்னர் மனிதர் பாட ஆரம்பித்து விட்டார். வேறு என்ன? அதே இளையராஜா மேட்டர்தான். இன்னும் எத்தனை பேர் வந்து பாடப் போகிறார்களோ என்று பயந்து போயிருக்கிறேன். ஆனாலும் ஒன்று.. எத்தனை பேர் வந்து பாடிக் காண்பித்தாலும் என்னைத் திருப்தி செய்ய முடியாது. இளையராஜாவின் இசையில் **Dionysian spirit** இல்லை, இல்லை, இல்லை.

31.7.2002

‘நடப்பதும் கூட ஒருவகை நடனம் தான்‘

நான் ஒரு நாஸ்திகன் என்றபோதும் அற்புதங்கள் மீது எனக்கு நம்பிக்கை உண்டு. அற்புதம் என்றதும் என் நினைவுக்கு வருவது சூஃபிகள். அவர்களில் சிலரை சந்தித்தும் இருக்கிறேன். சுமார் 650 ஆண்டுகளுக்கு முன்பு, தான் சந்தித்த சூஃபிகளைப் பற்றி இப்ன் பத்தூதா தன் பயணக் குறிப்புகளில் விரிவாக எழுதியிருக்கிறார். இந்த நூலை மேற்கொள்காட்டி வில்லியம் டால்ரிம்பிள் ஒரு பயண நூல் எழுதியிருக்கிறார். **City of Jinns** என்பது அந்த நூல். தில்லியில் சில காலம் தங்கி தன் அனுபவங்களைப் பதிவு செய்திருக்கிறார் டால்ரிம்பிள். ஆனால் அவரிடம் நான் கண்டது சமகால தில்லியை அல்ல-துக்ளக்கின் தில்லியை, பிறகு வந்த மொகலாய மன்னர்களின் தில்லியை. சூஃபிகளைப் பற்றிய பல சம்பவங்களை இப்ன் பத்தூதாவிடமிருந்து எடுத்துத் தருகிறார் டால்ரிம்பிள். அதில் ஒரு சம்பவம்.

துக்ளக் சூஃபிகளை வெறுப்பவன். அவன் காலத்தில் தில்லியில் புகழ்பெற்ற ஒரு சூஃபி இருந்தார். வீரர்களைக் கொண்டு அவரை இழுத்துக் கொண்டு வந்து தன்னை வணங்கும்படிச் சொல்கிறான் துக்ளக். சூஃபி வணங்கவில்லை. உடனே அவர் தலையை வெட்டச் சொல்கிறான். தலை வெட்டப்படுகிறது. தரையில் தனியாக உருண்டு விழுந்த தலையை அதன் முடியைப் பிடித்து கையில் எடுத்துக் கொண்டு நடந்து சென்ற தலையற்ற சூஃபி நகரத்தின் ஒதுக்குப்புறமான ஒரு இடத்தில் அமர்ந்தாராம். அங்கே மக்கள் அவருக்கு சமாதி எழுப்பியுள்ளனர். அந்த சமாதி இன்றும் தில்லியில் உள்ளது.

வில்லியம் டால்ரிம்பைப் போல் சமீபத்தில் மற்றொரு பயணியின் நூலைப் பற்றி அறிந்தேன். அவர் பெயர் ரோரி ஸ்டூவர்ட். பிரிட்டிஷ் ராணுவத்தில் கொஞ்ச காலம் இருந்து, பின்னர் ஜாகர்த்தாவிலும் மொந்த்தெனேக்ரோவிலும் தூதரகங்களில் பணிபுரிந்து, பிறகு வேலையை ராஜினாமா செய்துவிட்டு துருக்கியிலிருந்து வியட்நாம் வரை நடந்தே பயணம் செய்து தனது அனுபவங்களை **The Places In Between** என்ற நூலாக எழுதியிருக்கிறார். விரைவில் வெளிவர இருக்கும் அந்த நூலிலிருந்து ஒரு பகுதியை ‘க்ரான்ட்டா‘ இதழ் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் தான் சந்தித்த சூஃபிகள் சிலரைப் பற்றி எழுதியுள்ளார் ஸ்டூவர்ட்.

ஷாபாஸ் கலந்தர் என்ற சூஃபியின் வழிவந்த சூஃபி ஒருவரைச் சந்திக்கிறார் ஸ்டூவர்ட் ‘ஷாபாஸ் கலந்தர் பனிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஈரானிலிருந்து பாகிஸ்தான் வந்து வாழ்ந்தவர். சூஹான் ஷரீஃப் என்ற ஊரில் இவர் அடங்கியிருக்கிறார். இப்போதும் ஆண்டுக்கு ஒரு முறை இவரது தர்ஹாவில் ஐந்து லட்சம் பேர் கூடுகிறார்கள். இந்த நகரம் அலெக்சாண்டரால் நிறுவப்பட்டது. சிவப்பு நிற அங்கியே அணிந்திருந்ததால் இவர் லால் ஷாபாஸ் என்றே அழைக்கப்பட்டார். இவரது பாடல்கள் காமாத்துவத் தன்மை கொண்டவை. (ஆண்டாள் பாசுரங்கள் ஞாபகம் வருகின்றன) இவர்களைப் போன்ற சூஃபிகளால் தான் பாகிஸ்தானில் இருந்த இந்துக்கள் முஸ்லீம்களாக மதம் மாறினரே தவிர அராபிய மன்னர்களால் அல்ல. உண்மையில் சொல்லப்போனால் இதோ என் முன்னால் நிற்கும் இந்த சூஃபியின் பச்சை அங்கிக்குப் பதிலாக சிவப்பு அங்கியாக இருந்திருந்தால் இவரது தோற்றத்திற்கு-நீண்ட முடி, காதில் வளையம்-ஒரு இந்து சாது என்றே இவரை சொல்லியிருக்க முடியும்‘ என்கிறார் ஸ்டூவர்ட்.

‘சூஃபி என்றால் என்ன செய்வார்கள்?‘

‘ஏன், பாடுவதும் ஆடுவதும்தான்‘ என்று சொல்லிவிட்டு ஷாபாஸ் கலந்தர் எழுதிய கவிதை ஒன்றைப் பாடி ஆடுகிறார் அந்த சூஃபி.

அறுபது வயதான அவர் நாற்பதடி உயரமுள்ள அரசமரம் ஒன்றின் மீது கடகடவென ஏறி ஒரு தேன்கூட்டை எடுத்து வந்து ஸ்டீவர்ட் பருகுவதற்கு தேன் தருகிறார்.

‘உங்களுக்கு ஏதாவது நிலம் இருக்கிறதா?‘

‘என்னிடம் எதுவுமே இல்லை‘

‘எதுவுமே இல்லையா?‘

‘எனக்கு எதுவுமே தேவையில்லை.

ஏழ்மையே எனது கம்பீரம்‘

இறுதியில் அவரைப் பிரியும்போது ஸ்டீவர்ட் அவருக்குக் கொஞ்சம் பணம் தருகிறார். அதைப் பார்த்து அந்த சூஃபி பதறி விட்டாரம்.

‘தயவு செய்து ஏற்றுக்கொள்ளுங்கள். இங்கேயுள்ள குழந்தைகளுக்காவது பயன்படும்‘

‘இங்கே குழந்தைகள் இல்லை‘ என்று சொல்லிவிட்டு கையை தன் மார்பில் வைத்தபடி ‘கடவுள் உங்களோடு இருப்பார். நடப்பதும் கூட ஒருவகை நடனம் தான்‘ என்று ஆசீர்வதித்தாராம் அந்த சூஃபி.

ஸ்டீவர்ட்டின் புத்தகத்தைப் படிக்க மிகவும் ஆவலுடன் காத்திருக்கிறேன்.

நியூ ஜெர்ஸியிலிருந்து சாந்தி எழுதுகிறேன். உங்கள் எழுத்து நன்றாக உள்ளது. எனக்கு இலக்கியம் தெரியாது. ஆனாலும் விகடன்.காமில் உங்கள் எழுத்தை விரும்பிப் படிக்கிறேன். நீங்கள் படிக்கும் புத்தகங்கள், கதைகள், மனிதர்கள், பல்வேறு ஊர்கள், இடங்கள், உணவு என்று விவரிக்கும் உங்கள் பாணி எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் நான் உங்களுடைய புனைகதைகளைப் படித்ததில்லை. இக்கடிதத்தை எழுதுவதற்குக் கூட எனக்குச் சற்றுத் தயக்கமாகவே இருந்தது. ஏனென்றால் நான் இலக்கியப் பரிச்சயம் இல்லாத ஒரு சராசரி வாசகி. உங்கள் நேரத்தை வீணடிக்க விரும்பாததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

பின்குறிப்பு: உங்கள் நேரத்தை நான் வீணடிப்பதாக எண்ணிவிடக் கூடாது என்பதால் பல வாரங்களாக எழுத வேண்டுமென்று நினைத்து தயங்கிக் கொண்டே இருந்த நான் இறுதியாக எழுதிவிடலாம் என முடிவு செய்தேன்.

சாந்தியின் மேற்கண்ட கடிதத்தைப் போல் பல கடிதங்கள் வருகின்றன. துபாயிலிருந்து வந்து சந்தித்த பத்மநாபனும் பலமுறை திரும்பத் திரும்பக் குறிப்பிட்டார்-தான் ஒரு சராசரி வாசகன் என்றும், தனக்கு இலக்கியம் தெரியாது என்றும்.

தமிழ்ச் சமூகத்துக்கும் சீரியஸான கலாச்சாரத்துக்கும் மிகப் பெரிய இடைவெளி இருப்பது கண்கூடாகவே தெரியும் ஒரு விஷயம். அமெரிக்காவில் நியூயார்க்கர் பத்திரிகையை லட்சக்கணக்கான பேர் படிக்கிறார்கள். டொனால்ட் பார்த்தெல்மே, கர்ட் வனேகட்

போன்றவர்களின் புத்தகங்கள் லட்சக்கணக்கில் விற்பனையாகின்றன. ஆனால் தமிழில் ப.சிங்காரம் என்ற மேதையை, நாவலில் சிகர சாதனை நிகழ்த்தியிருப்பவரை யாருக்கும் தெரியாது. நாளிதழ் ஒன்றில் சாதாரண வேலையில் இருந்து யாராலும் அறியப்படாமல் செத்துப்போனார்.

இப்போது நிலைமை மாறி வருகிறது. ஏகப்பட்ட சிறுபத்திரிகைகள் வெளிவருகின்றன. இலக்கியவாதிகளின் புகைப்படங்களை பெரும் பத்திரிகைகளில் பார்க்க முடிகிறது (கொஞ்சம் சோகக்களை தெரிகிறது. இருந்தாலும் பரவாயில்லை)

தொலைக்காட்சி சீரியல்களும் கொஞ்சம் பேரை வெளியே விரட்டியடித்து விட்டது. (மக்களும் எத்தனை நாள்தான் ஒரே கதையை மில்லியன் எபிசோடுகளில் மாற்றி மாற்றிப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்?)

தமிழ் சினிமாவும் படுத்துவிட்டது. தியேட்டர் கவுண்டர்களில் ஈ ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ரிதம் எடுத்த வசந்த் படமாயிற்றே என்று 'ஏய்.. நீ ரொம்ப அழகா இருக்கே' என்ற படத்துக்குச் சென்று தொலைத்துவிட்டேன். ஏன்டா போனோம் என்று ஆகிவிட்டது. (என்ன பெரிய ரிதம்? ஒரு வெளிநாட்டுப் படத்தை-உல்ட்டா கூட பண்ணவில்லை-அப்படியே தமிழாக்கம் செய்துவிட்டார் என்கிறார் நண்பர் ரஞ்சன். அதனால் எதையும் பாராட்டக்கூட பயமாக இருக்கிறது!)

ஆக நடுத்தர வர்க்கத்துக்கு ஒரு நெருக்கடி வந்துள்ளது. இது இலக்கியத்துக்கு நல்லது.

இது இப்படியிருக்க, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் நிலை வேறு மாதிரி உள்ளது. அவர்களுக்குத் தமிழோடு உறவு வைத்துக்கொள்ள வேண்டிய கலாச்சார, உளவியல் நிர்ப்பந்தம் இருக்கிறது. இந்தச் சூழலில்தான் இணைய தளப் பத்திரிகைகள் பல வெகு விமரிசையாக ஆரம்பிக்கப்பட்டன. ஆனால் ஊடகத்தைப் புரிந்துகொள்ளாமல் ஒரு பக்கம் சலிப்பூட்டும் சிறுபத்திரிகை மொழியைக் கையாண்டதாலும் மற்றொரு பக்கம் ஒரேயடியாக Pulp மொழிநடையில் 'பல்ப்' விஷயங்களையே எழுதியதாலும் ஆரம்பித்த வேகத்திலேயே கடையை மூட வேண்டியதாகிவிட்டது.

இந்த நிலையில்தான் கம்ப்யூட்டர் பற்றியும், இன்டர்நெட் பற்றியும் எதுவுமே தெரியாத நான் கோணல் பக்கங்களை விகடன்.காமில் எழுத ஆரம்பித்தேன். வாசகர்களுடன் எந்தத் தொடர்பும் கொள்ளாமல் எங்கோ வனவாசத்திலிருந்து எழுதுவது போல் எழுதிக் கொண்டு வந்தேன். சமீப காலமாகத்தான் மின்னஞ்சல் மூலம் நமக்கிடையே ஒரு பரிவர்த்தனை ஆரம்பித்துள்ளது. இப்படி ஒரு வினோதமான சூழலில் கோணல் பக்கங்கள் இவ்வளவு தூரம் வெற்றியடைந்திருப்பதற்குக் காரணம் இலக்கியம் தெரியாத 'சராசரி' வாசகர்கள்தான். மற்றொரு காரணம்-இப்பக்கங்களின் சுவாரசியம். என் கருத்தை ஏற்கிறீர்களோ இல்லையோ-வாசிக்கிறீர்கள் என்பதே முக்கியமான விஷயம். இது மட்டுமல்லாமல்-பல வாசகர்களின் கடிதங்களைத் தொகுத்தால் அதுவே ஒரு தனிப்புத்தகமாக ஆகிவிடும் என்பதும் எனக்கு ஒரே புதிராக உள்ளது. சாதாரண வாசகர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இவர்களின் கடிதங்கள் அசாதாரணாமாக இருப்பதன் காரணம் என்ன?

எனக்குத் தெரியவில்லை!

1.8.2002

வைஷ்ணவன் என்பவன் யார்?

என் முந்தைய கட்டுரைகளில் நேர்ந்துள்ள சில தகவல் பிழைகளை ஓரிரு நண்பர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதன் விபரம்:

Gottingen (ஜெர்மனி) நகரத்திலிருந்து வாழ்த்துக்கள். நேற்று நான் **Gloomy Sunday** படத்தை ஜெர்மன் மொழியில் பார்த்தேன். **Das Lied der Liebe und Tod**-காதல் மற்றும் மரணத்தின் பாடல்! நான் என் ஜெர்மன் நண்பர்களுடன் அந்தப் படத்திற்குச் சென்றிருந்தேன். நாஜிகள் செய்த அட்டூழியங்களுக்காக அவர்கள் வருத்தப்பட்டார்கள்.

கோணல் பக்கங்களில் அந்த்ரேஸ் நாஜி அதிகாரியால் கொல்லப்பட்டதாக எழுதியிருந்தீர்கள். ஆனால் அவன் **Gloomy Sunday**யை வாசித்து விட்டு அந்த நாஜி அதிகாரியின் கைத்துப்பாக்கியால் தன்னைச் சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொள்கிறான்.

படத்தின் முக்கியமான இடம்-நீண்ட காலத்துக்குப் பிறகு அதே விடுதியில் அதே நாஜி அதிகாரி லியோனாவின் புகைப்படத்தைப் பார்த்துக் கொண்டு **Gloomy Sunday** பாடலைக் கேட்டபடி செத்துப் போவதுதான். மனித வாழ்வின் அவலமுரண் இதுதான்! இப்படி ஒரு அருமையான படத்தை அறிமுகப்படுத்தியதற்கு நன்றி.

அன்புடன், சஞ்சீவன் கிறிஸ்டோஃபர்.

சஞ்சீவன் கிறிஸ்டோஃபர் ஒரு மருத்துவ மாணவர்.

ஓ.ஆர்.பி. ராஜா என்று ஒரு நண்பர் லாஸ் ஏஞ்ஜலஸில் வசிக்கிறார். 'லாஸ் வேகாஸ், **Grand Canyon** எல்லாம் பக்கத்தில் தானே இருக்கிறது? போயிருக்கிறீர்களா?' என்று கேட்டு எழுதினேன். 'என்ன ஆச்சரியம், இந்த வாரம்தான் குடும்பத்தோடு போகலாம் என்று இருக்கிறேன். உங்களிடமிருந்து அதைப் பற்றி விசாரித்து கடிதம்!' என்றது ராஜாவின் பதில். (எல்லாம் ஐயாவின் ஞானதிருஷ்டிதான் என எழுதலாம் என்று பார்த்தால் இ.வாசகியின் ஞாபகம் வந்து தொலைக்கிறது. 'என்னது ஞானதிருஷ்டியா..' என்று ஆரம்பித்து பின்னி எடுத்து விடுவார்!)

'அப்போதே நினைத்தேன், லாஸ் வேகாசுக்கு குடும்பத்தோடு போவதா என்று. எதையுமே பார்க்க முடியவில்லை. கண்களைத் திறக்கவே பயமாக இருந்தது' என்று நான் நினைத்தபடியே எழுதியுள்ளார் ராஜா.

பிறகு **Grand Canyon** இன் அற்புத அழகு பற்றி எழுதிவிட்டு, அங்கே பார்த்த தமிழர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார். நாம் புன்னகை செய்தால் பதிலுக்கு ஒரு சிலர்தான் புன்னகை செய்கிறார்கள். மற்றவர்கள் வினோதமாக முறைத்துவிட்டு நகர்ந்து விடுகிறார்கள், ஏதோ நாம் அவர்களிடம் மில்லியன் டாலர் கடன் கேட்கப் போவதைப் போல். தமிழர்கள் என்று மட்டுமல்ல, பொதுவாக இந்தியர்களின் மனோபாவமே இப்படித்தான் இருக்கிறது. நீங்கள் அவர்களைப் பார்த்து புன்னகை புரிந்தால் அவர்கள் உங்களை மனித ஜீவியாகவே கருத மாட்டார்கள். ஆனால் அதே சமயம், ஒரு அமெரிக்கன் அவர்களைப் பார்த்து புன்னகை செய்துவிட்டால் அவர்கள் வாயிலுள்ள பற்கள் அவ்வளவையும் நீங்கள் எண்ணிவிடலாம்.

அடுத்து, அந்த கொலராடோ நதி. எனக்கு ஒரு கனவு உண்டு. ஏதாவதொரு சிவப்பிந்தியக் கிராமத்துக்குப் போய் அங்கிருந்து கொலராடோ நதியில் **rafting** செய்து கீழே வரவேண்டும்... குடும்பத்துடன் சென்றதால் அது இன்னமும் கனவாகவே இருக்கிறது. (கவலை வேண்டாம் ராஜா, நான் அங்கே வரும்போது உங்கள் கனவு நனவாகிவிடும்!)

பல வாசகர்கள் உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யார் என்று கேட்கிறார்கள்.

பெருமூச்சு தான் வருகிறது. இதோ மறுபடியும்:

மாரியோ வார்காஸ் லோசா (பெரூ) கஸான்ஸாகிஸ் (கிரீஸ்)

படு சீரியஸான எழுத்தையும் என்னால் படிக்க முடியும் என்பவர்களுக்கு இதோ எனது பட்டியல்:

ஹூலியோ கொர்த்தஸார்

கேத்தி ஆக்கர் (அமெரிக்காவில் வாழும் லெஸ்பியன் எழுத்தாளர். இருபது ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்க இலக்கிய உலகில் பெரும் சூறாவளியை ஏற் படுத்தியவர். சூறாவளியின் போது கேத்தியின் வயது 20)

கார்லோஸ் ஃபுயந்தேஸ்.

இடாலோ கால்வினோ.

'சீரியஸ் வேண்டாம், படு ஜாலியாக இருக்க வேண்டும்' என்று விரும்புகிறவர்கள் அணுக வேண்டிய எழுத்தாளர்: **Roald Dahl**.

(108 தடவை எழுதிவிட்டேன். தயைகூர்ந்து இனிமேல் கேட்காதீர்கள்)

இலங்கையிலிருந்தும் சில மின்னஞ்சல்கள் வருவதுண்டு. அவர்கள் தமிழிலேயே எழுதுகிறார்கள். உதாரணத்துக்கு ஒன்று.

அன்புடன் சாரு,

உன்னத சங்கீதம் பார்த்தேன். நான் இலங்கை வடகிழக்கில் யுத்த கோணல்களுக்குள் சிக்கி அதன் பக்கங்கள் ஒவ்வொன்றிலும் எழுத்தாகி, பின் இறந்து, இறக்காமல் பிறந்து- கொழும்பு வந்து ஏழு வருடங்கள்-யுத்த களமற்ற மத்திய அரசியல் அதிகாரமுடைய நகரில் காசில்லாமல் பஸ்ஸில் பயணம் செய்தது உட்பட நெக்ரோஃபீலியாவுடைய ஆணின் ஆணுக்குள் நானாகி, எனதுடலின் ஒவ்வொரு அணுவிலும் உன்னத சங்கீதம் ஒலிக்கும்.. இதைவிட நேரில் உங்கள் முகத்துக்கு முகமாக கூற வேண்டியவை நிறைய... (பெயரை வெளியிடலாமா கூடாதா என்று தெரியவில்லை. பொதுவாக ஈழத்தமிழர்கள் பெயர் வெளியிடுவதை விரும்புவதில்லை)

உன்னத சங்கீதம் என்பது என்னுடைய நீண்ட ஒரு சிறுகதை. பிரான்சில் உள்ள எனது நண்பர்கள் ஷோபா சக்தி மற்றும் சுகன் ஆகியோரால் தொகுக்கப்பட்ட சனதர்மபோதினி

என்ற தொகுப்பில் இக்கதை வெளிவந்துள்ளது. என் கதையின் காரணமாக தொகுப்பின் விற்பனை இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிகிறேன்.

ஓ.ஆர்.பி. ராஜா எழுதியிருப்பதைப் போலவே கிருஷ்ணராஜும் (பெரூ) சொன்னார். அவர் வசிக்கும் தாக்னாவில் இருநூறு பாகிஸ்தானி குடும்பங்கள் உள்ளன. கிருஷ்ணராஜ் ஒருவர்தான் தமிழர்-இந்தியர். இதற்கிடையில் ஒரு நாள் தற்செயலாகத் தெரிந்ததாம்... பாகிஸ்தானி என்று சொல்லிக்கொண்ட ஒரு குடும்பம் பக்கா இந்தியர்களாம். மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள். பாஸ்போர்ட்டையே பார்த்து ஊர்ஜிதம் செய்தாகிவிட்டது. இந்தி மற்றும் தோலின் நிறம் போன்ற காரணங்களால் அந்தக் குடும்பத்தினர் பாகிஸ்தான் பிரஜைகளாகி விட்டனர். இப்படியும் மனிதர்கள்!

அமெரிக்காவில் வசிக்கும் குறிப்பிட்ட இரண்டு பேர் கோணல் பக்கங்களைப் படித்து வருகிறார்களா என்று அறிந்துகொள்ள விரும்பினேன். ஒருவர், சுதர்ஸன். அவந்திகாவின் ஒன்றுவிட்ட தம்பி. நாங்கள் பத்ரி என்று அழைப்போம். பொதுவாக எனக்கு உறவினர்களின் 'படிப்பு வாசனை' பற்றி அவ்வளவாக உயர்ந்த அபிப்பிராயம் இல்லாததால் பத்ரி இந்தப் பக்கங்களைப் படிக்க வாய்ப்பில்லை என்றே நம்பினேன். ஆனால் பத்ரி விவரமான ஆள் என்பதால் மனசுக்குள் ஒரு சம்சயம்.

கடைசியில் பத்ரியிடமிருந்து மின்னஞ்சல். பொதுவாக, நம் வாழ்வில் காணும் ஆன்மீக வறட்சி பற்றி எழுதியிருந்தார் பத்ரி. ''ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக வந்ததாகச் சொல்கிறார்களே? அது உண்மையா? என் கல்லூரி நாட்களில் நான் தமிழன் என்று சொன்னால், 'இல்லை நீ ஆர்யன்' என்று சொன்னார்கள்.. இதெல்லாம் என்ன?....'' என்ற ரீதியில் போகிறது கடிதம்.

ஆரியர்கள் கைபர் கணவாய் வழியாக வந்த வரலாற்றை மறுக்க வேண்டிய அவசியமே இல்லை. அப்போதெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்து கொண்டே இருந்தார்கள். தமிழன், இந்தியன் என்ற அடையாளமெல்லாம் அப்போது கிடையாது. மோசஸின் வழித்தோன்றல்கள் மகாராஷ்ட்ரத்தில் இருப்பதாக சமீபத்தில் **DNA** ஆராய்ச்சிகள் வந்துள்ளன. ஜெர்மானியர்களைப் பார்த்தால் எனக்கு பிராமணர்களின் உடலமைப்பு ஞாபகம் வருகிறது. அதற்கென்ன இப்போது? பிராமணர்கள் ஐரோப்பாவுக்கு ஓடிவிட வேண்டுமா என்ன?

நான் சொல்ல வருவது என்னவென்றால், வரலாற்றை நாம் திரும்பவும் மறு உருவாக்கம் செய்ய இயலாது என்பதுதான். முகமது பின் துக்ளக் ஆயிரமாயிரம் இந்துக்களைக் கொன்றான் என்பதற்காகவோ, இந்துக்கள் மூவாயிரம் சமணர்களைக் கழுவில் ஏற்றினார்கள் என்பதற்காகவோ பழி தீர்த்துக்கொள்வது என்று ஆரம்பித்தால் மனித குலத்தில் ஒரு உயிர்கூட மிஞ்சியிருப்பதற்கு சாத்தியமில்லை.

என் இளம்பிராயத்தில் நான் மலம் அள்ளியிருக்கிறேன். மலம் சுமந்திருக்கிறேன். என் அனுபவத்தைச் சொன்னால் உங்களால் ஒரு வாரத்திற்கு சாப்பிட இயலாது.

'அம்மா.. உன் உடம்பு மணக்கிறது' என்கிறான் கார்த்திக்.

ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் தேகம் மணக்கும். எனக்கோ அவந்திகாவின் தேக பரிமளம் தெரியவில்லை. பிணவாடையிலும், மல நாற்றத்திலும் வாழ்ந்து இளம் வயதிலேயே நாசி தன் நுகரும் தன்மையை இழந்து சுவாசம் என்ற ஒரு காரியத்துக்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது.

வைஷ்ணவன் என்பவன் யார்?

எவனொருவன் அடுத்தவனின் வலியைத் தன் வலியாய் உணர்கிறானோ அவனே வைஷ்ணவன் என்றார் ராமானுஜர்.

தீண்டத்தகாத சாதியைச் சேர்ந்த தனது குருவுக்கு இல்லத்தில் உணவளிக்க மாட்டேன் என்று மறுத்த தர்மபத்தினியை ரத்து செய்துவிட்டு அன்றே இல்லற தர்மத்தை உதறினார் ராமானுஜர்.

Other என்ற ஒரு கருத்தாக்கம் உள்ளது. அடுத்த மனிதனாக நீ உன்னை உணர முடியுமா?

என் இளம் பிராயத்தைச் சூழ்ந்திருந்த பிணவாடையை உங்களால் உணர முடிகிறதா- ஒருக்கணமேனும்?

(இன்னும் உண்டு)
4.8.2002

இங்கே மனித உயிர் கிள்ளுக்கீரை

நேற்றைய தினசரியில் கண்டிருந்த ஒரு செய்தி: அழகம்மாள் என்ற தலித் பெண். சிவகங்கை நகருக்கருகில் உலகம்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்தவர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தன் கணவரை விவாகரத்து செய்தார். கிராமப் பஞ்சாயத்து (அதாவது, மேல்சாதியினர்) இதை எதிர்த்தது. ஆனாலும் நீதிமன்றம் மூலமாக விவாகரத்து பெற்று விட்டார் அழகம்மாள். 'அப்படியானால் குழந்தையை உன் கணவனிடம் கொடுத்துவிட வேண்டும்' என்று உத்தரவிட்டது ஊர்ப்பஞ்சாயத்து. அழகம்மாள் அதற்குச் சம்மதிக்கவில்லை. உடனே ஊர் அவரைத் தள்ளி வைத்தது. யாரும் அந்தப் பெண்ணின் நிலத்தில் வேலை செய்யக்கூடாது என்றும் தடுக்கப்பட்டனர்.

அப்படியும் அழகம்மாள் பணியவில்லை என்று தெரிந்ததும் அவருக்கு 51,000 ரூபாய் அபராதம் விதித்தது பஞ்சாயத்து. அது தன்னால் இயலாது என்று அழகம்மாள் தெரிவிக்கவே அவர் ஊர்ப்பஞ்சாயத்தின் முன்பு சாஷ்டங்கமாக விழுந்து வணங்க வேண்டும், இப்படி ஒரு 'கும்பிடு'க்கு ஒரு ஆயிரம் என்ற கணக்கில் நாற்பத்தேழு 'கும்பிடுகளைப்' போட்டார் அழகம்மாள். அபராதம் இவ்வாறாக 4 ஆயிரம் ரூபாயாகக் குறைந்தது.

அழகம்மாள் போலீசில் புகார் செய்தபோது போலீஸ் இதைக் கண்டுகொள்ளவில்லை. பிறகு அழகம்மாள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் செய்தார். உடனே ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இதை அறிந்து கோபமுற்ற உள்ளூர் போலீஸ் மஃப்டியில் அழகம்மாள் வீடு புகுந்து அவரை உண்டு இல்லை என்று ஆக்கிவிட்டது. உடம்பு எங்கிலும் எலும்பு முறிவுகளோடு மருத்துவமனையில் கிடக்கிறார் அழகம்மாள்.

இதுதான் இன்றைய இந்தியாவில் தலித்துகளின் நிலை. காலில் செருப்பு அணிந்து நடக்க முடியாது. பிணம் விழுந்தால் வீட்டிலேயே தான் புதைக்க வேண்டும். வெளியே

சம்சாரிகளின் வீதி வழியே தாழ்ந்த சாதிப் பிணம் போக முடியுமா? தேனீர் கடையில் கூட தலித்துகளுக்கு தனி கிளாஸ்தான். அச்சுறுத்தல்கள் ஏதும் இல்லாமல் வாக்கு அளிக்கவும் முடியாது.இப்படிப்பட்ட சமூக அவலத்தை மனதில் இருத்திக் கொண்டுதான் நாம் சமூக விமர்சனம் செய்யக் களத்தில் இறங்க வேண்டும். சுய பச்சாதாபங்கள் சுய இரக்கங்கள் போன்றவற்றை நாம் உதறித் தள்ளியாக வேண்டும்.

அமெரிக்காவில் வசிக்கும் இரண்டு பேர் என்று குறிப்பிட்டேன். ஒருவர் பத்ரி. மற்றொருவர், என் எழுத்தாள நண்பரின் மகள். சிகாகோ பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாணவி.

இவரை ஓரிரு முறை என் நண்பருடன் சந்தித்திருக்கிறேன். இன்றைய இளைஞர்களைப் போல் இல்லாமல் வித்தியாசமாக இருந்ததால் எனக்கு அவர் மீது நல்ல மதிப்பு உண்டு. ஒரு நாள் உம்பர்த்தோ எக்கோவின் **(Umberto Eco) Foucault's Pendulam** என்ற நாவலைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். ஒரு தமிழ்நாட்டு மாணவி ஃபூக்கோஸ் பெண்டுலம் பற்றிப் பேசுவதா என மிரண்டு போனேன்.

உம்பர்த்தோ எக்கோ **Bologna** பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக பணிபுரிகிறார். வசிப்பது மிலன் நகர். (இத்தாலி) இவரது முதல் நாவலான **The Name of the Rose** உலக அளவில் அதிக விற்பனையான மிகச்சில நாவல்களுள் ஒன்று.

ஃபூக்கோஸ் பெண்டுலம் அப்படியல்ல. சற்றே கடினமானது. அளவிலும் மிகப் பெரியது. உலகின் தலைசிறந்த நாவல்களில் ஒன்று எனக் கருதப்படுகிறது. அப்படிப்பட்ட ஒரு நாவலைப் பற்றி விஞ்ஞானத்துறை மாணவியான அந்தப் பெண் பேசியது எனக்குப் பெரும் வியப்பை அளித்தது. அவர் சிகாகோவில் கோணல் பக்கங்களை வாசிக்கிறாரா என்று அறிய எனக்குள் ஒரு ஆவல். வாசிப்பதாகச் சொன்னார் நண்பர். நேரில் பார்த்தால்தான் அவரது கருத்துக்களைக் கேட்க வேண்டும்.

பெருவெடிப்பு **(Big Bang)** பற்றியும் உபநிஷத்துக்கள் கூறும் சுழற்சி பற்றியும் எழுதியிருக்கிறார் தமிழரசன். பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் அது மறுபடியும் சுருங்கும். திரும்பவும் பெருவெடிப்பு நிகழும். உபநிஷத்துக்கள் இதையே வேறு விதமாகச் சொல்கின்றன. எல்லாம் ஒரு வட்டச் சுழற்சி. முடிவே மற்றொரு துவக்கத்தின் ஆரம்பம். மலையாளத்தில் ஒரு பழமொழி உண்டு. முதலாளி மகன் செலவாளி-செலவாளி மகன் எரவாளி-எரவாளி மகன் தொழிலாளி-தொழிலாளி மகன் முதலாளி....

பறவை வேட்டைக்கு எங்கள் ஊரில் (நாகூர்) பயன்படுத்தும் கருவி (சுங்குத்தான்) மலேஷியாவிலிருந்து வந்துள்ளது என்று தெரிகிறது. ஆச்சரியமில்லை. நாகூர்வாசிகள் அந்தக் காலத்தில் மலாயா, சிங்கப்பூர் 'சப்ர்' (ஸஃபர்-பிரயாணம்) சென்றுதான் திரவியம் தேடி வந்தனர். மலேஷியாவின் **Borneo** தீவின் ஸராவாக் மாநிலத்திலுள்ள எபான் என்னும் பழங்குடியினர் அணில், பாம்பு, வெளவால், பறவை போன்றவற்றை வேட்டையாடுவதற்காகப் பயன்படுத்தி வரும் இந்தப் பாரம்பரியக் கருவியின் பெயர் ஸம்ப்பிட் என்று தெரிவித்திருக்கிறார் கோலாலம்பூர் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருக்கும் எச். ஆண்ட்ரூஸ்.

கலிஃபோர்னியாவில் ஸான் ஹோஸே நகரிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள மில்பிடாஸ் என்ற ஊரிலிருந்து தேவி என்ற வாசகர் கோணல் பக்கங்களைப் பாராட்டி எழுதியுள்ளார்.

ஆனால் இ.வாசகியைப் போலவே பாராட்டு கடிதங்களை வெளியிட வேண்டாம் என்று எழுதியிருப்பதால் அவர் கடிதத்தை வெளியிடவில்லை.

செல்வாவின் கடிதம்: 'சிவப்பு நிறத்தின் சுவடே இல்லை' என்ற உங்கள் கட்டுரையைப் படித்தேன். அதில் மார்கரீத்தாவை பியர் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். அது பியர் அல்ல. ஒரு வகையான காக்டெய்ல்.

நான் தமிழ்நாட்டிலிருந்து யு.எஸ். வந்து மூன்று ஆண்டுகள் ஆகிறது. டல்லாஸில் (டெக்ஸஸ்) வேலை பார்த்த போது பார்களுக்கு அதிகம் போய்க் கொண்டிருந்தேன்- மெக்ஸிகன் பார் உட்பட. மெக்ஸிகன் பார்களிலும் விடுதிகளிலும் மார்கரீத்தா மிகவும் பிரபலம். டக்கீலா கலந்த காக்டெய்ல் அது. (டக்கீலா பற்றி ஏற்கனவே விலாவாரியாக எழுதியிருந்தேன். 'டூ மச்' என்று சொல்லி பொறுப்பாசிரியர் 'வெட்டி' விட்டார். இப்போது பாருங்கள், பெயரை செல்வா தட்டிக்கொண்டு போய்விட்டார்!) டக்கீலா என்பது கிட்டத்தட்ட சாராயம் மாதிரி. கோப்பையின் விளிம்பில் உப்பு தடவிக் கொண்டுதான் சாப்பிட முடியும். உப்பு இல்லாமல் சாப்பிடுவது மிகவும் சிரமம். நாங்கள் இடது கையில் (கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் இடைப்பட்ட பகுதியில் எலுமிச்சை சாறு பிழிந்து அதன்மேல் உப்பை தடவிக் கொள்ள வேண்டும்) உப்பு தடவிக் கொண்டு ஒரு ரவுண்டு முடிந்ததும் அதை நக்கிக் கொள்வோம். மார்கரீத்தா வழக்கமான கோப்பைகளில் அருந்துவதில்லை. அதற்கென்று மிகச்சிறிய கிளாஸ்கள் உண்டு. காரணம்-அதை அதிகம் உட்கொள்ள முடியாது. மூன்று கிளாஸ்களுக்கு மேல் போனால் நடக்கவே முடியாது.

எழுதுவதற்கு மறந்தே போனேன். இப்போதுதான் மது, கோப்பை, கிண்ணம் என்றதும் ஞாபகம் வருகிறது. இமாசலபிரதேசத்தில் போதையடிமைகள் மறுவாழ்வு மையத்திலிருந்து தினந்தோறும் போன் செய்கிறார் ரவீந்திரன். 'ஒவ்வொருவருடைய கதையும் ஒவ்வொரு நாவலாக எழுதலாம் போல் இருக்கிறது. இது மருத்துவமனை அல்ல, கோவில்' என்கிறார் ரவீந்திரன். 'இனிமேல் மது, சிகரெட் இரண்டையும் தொடும் சாத்தியமே இல்லை. தெளிந்துவிட்டேன்' என்கிறார். ஆனால் சிலர் மதுவைக் கூட விட்டு விடுகிறார்கள். சிகரெட்டை விட முடியவில்லை. தங்களைப் பார்க்க வரும் உறவினர்கள் மூலமாக சிகரெட் வரவழைத்து கழிப்பறைகளில் குடிக்கிறார்கள். ஆனால் இங்கே சிகரெட்டை மட்டும் அவ்வளவாகக் கண்டுகொள்வதில்லை. மற்ற போதை வஸ்துக்களின் வாசனையே இங்கு வரக்கூடாது, வரவும் முடியாது. மிகக் கடுமையான கண்காணிப்பு உண்டு. சமீபத்தில் ஒரு பெண் தன் கணவனுக்காக கமீஸுக்குள் குவார்ட்டர் பாட்டிலை ஒளித்து வைத்துக்கொண்டு வந்துவிட்டாள். வாசலிலேயே பிடித்துவிட்டார்கள். இவர்களுக்குத் தெரியாமல் தூசு துரும்பு உள்ளே வரமுடியாது. ஆனால் சூழல் மிக ரம்மியமாக உள்ளது. கண்காணிப்பு கடுமையாக இருக்கிறதே தவிர இவர்கள் மிக அற்புதமான மனிதர்கள். ஒரு மாதகாலம் தங்கிவிட்டு இங்கிருந்து கிளம்புகிறவர்கள் பிரிய மனமில்லாமல் அழுதபடியே செல்கிறார்கள்.

இங்கே நான் ஒரு ஆள் தான் தனியாளாக இருக்கிறேன்-விதிவிலக்காக. மற்றபடி, ஒருவர் இங்கே தங்கியிருந்து சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டுமெனில் அவரோடு கட்டாயம் உறவினர் ஒருவரும் தங்கியாக வேண்டும். அதன் காரணமாகவும் இங்கே ஒரு குடும்பச் சூழ்நிலை நிலவுகிறது.

ஆனால் எனக்கு ஒரு பிரச்னை. கோணல் பக்கங்களை படிக்க முடியவில்லை. இன்னும் மூன்று நாட்களுக்குள் கடந்த பதினைந்து தினங்களாக வெளிவந்த கோணல் பக்கங்களை ஸெராக்ஸ் எடுத்து எனக்கு அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். கிடைக்கவில்லையெனில் சுவரேறிக்குதித்து வெளியே வந்துவிடுவேன். அதில் சிக்கல்

என்னவென்றால், ஒருமுறை சுவரேறிக் குதித்துவிட்டால் அப்புறம் ஜென்மத்துக்கும் இங்கே நம்மை சேர்த்துக்கொள்ள மாட்டார்கள் என்பதுதான்.''

''சரி, அனுப்பி வைத்துவிடுகிறேன் ரவீந்திரன். இதற்காக நீங்கள் சுவரேறிக் குதிக்க வேண்டாம். ஆனால் ஒரு விண்ணப்பம். மூன்று நாள் கெடுவை ஐந்து நாளாகத் தளர்த்துங்களேன்''

''முடியாது சார்.. வேண்டுமானால் நான்கு நாள் என்று வைத்துக்கொள்வோம்''

''சரி, அனுப்பி விடுகிறேன்''

''இன்னொரு சிக்கலும் இருக்கிறது சார்... அப்படி நான் சுவரேறிக் குதித்தால் இங்கிருந்து திருட்டு ரயிலில்தான் போக வேண்டும். இங்கே கையில் காசு வைத்துக் கொள்ள அனுமதி இல்லை''

''திருட்டு ரயில் இல்லை ரவீந்திரன். திருட்டு பஸ் என்று சொல்லுங்கள். அங்கே இமாசலப் பிரதேசத்தில் ரயில் கிடையாது''

ரவீந்திரனிடம் சொன்னபடி கோணல் பக்கங்களை அனுப்பி வைத்து விட்டேன்.

சென்னையில் தொங்கும் ரயில் வரப்போவதாகப் பேசிக்கொள்கிறார்கள். எனக்குத் தெரிந்து ஜெர்மன் வுப்பர்ட்டாலில் தான் தொங்கும் ரயில் உள்ளது. துவக்கப்பட்டு நூறு ஆண்டுகள் ஆகிறதாம். வுப்பர்ட்டால் நகர் முழுதும் தொங்கும் ரயில்தான் மக்களின் அன்றாடப் போக்குவரத்துச் சாதனம். இரண்டு பெட்டிகள் இருக்கின்றன. தலைக்கு மேல் தொங்கிக் கொண்டே செல்கிறது. பிளாட்பாரத்தில் இறங்கும்போது தொங்கும் ரயில் பெட்டி லேசாய் ஆடுகிறது. அதில் பயணம் செய்வது வித்தியாசமான அனுபவமாகத்தான் இருந்தது.

தொங்கும் ரயில் உலகில் வேறு எங்கேனும் உள்ளதா என அறிய ஆசைப்படுகிறேன்.

ஜெர்மனியில் ஒரு நல்ல வழக்கம் உள்ளது. எல்லா விசேஷ அம்சங்களையும் தலை நகரிலேயே வைத்துக்கொண்டு மற்ற நகரங்களை 'தண்ணி தெளித்து' விட்டு விடுவதில்லை. **de-centralise** செய்து விடுகிறார்கள். பெர்லின், ஃப்ராங்க்ஃபர்ட், வுப்பர்ட்டால், எஸ்ஸென், ஸ்டுட்கார்ட், ம்யூனிச் என்று ஒவ்வொரு நகருக்கும் ஒரு விசேஷ அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது.

இங்கே இந்தியாவில் என்னதான் விஞ்ஞான வளர்ச்சியின் அடையாளங்களைக் காண முடிந்தாலும் அவை வெறும் அடையாளங்களாக மட்டும்தான் மிஞ்சுகின்றனவே தவிர மக்கள் பயன்பாட்டுக்கு முழுமையான அளவில் செயல்படவில்லை.

உதாரணமாக, கம்ப்யூட்டர். கடந்த ஒரு வாரமாக ஒரு மின்னஞ்சல் கொடுப்பதற்காக தெருத்தெருவாக அலைந்திருக்கிறேன். ஒரு மையத்தில் இன்டர்நெட்டுக்குள் நுழையவே இருபது நிமிடம் ஆகியது. தலையில் அடித்துக்கொண்டு வெளியே வந்தேன். வழக்கமாகச் செல்லும் மையத்தில் எப்போதும் மின்வெட்டு. அதிலும் துரதிர்ஷ்டம் என்னவென்றால் நான் உள்ளே நுழையும் நேரம் பார்த்துத்தான் மின்சாரம் போகும். தொடர்ந்து இப்படியே நடப்பதை பார்த்துவிட்டு மையத்திலுள்ள பெண் 'என்ன சார்.. எங்கள் பிஸினஸையே காலி செய்துவிடுவீர்கள் போலிருக்கிறதே?' என்றாள்-இப்போது இதை எழுதிக் கொண்டிருக்கும் தருணத்தில் கூட மின்சாரம் இல்லை-அப்படியே மின்சாரம் இருந்தால்,

Socket error. பிறகு நகரம் முழுவதுமே இரண்டு நாட்கள் இன்டர்நெட் வேலை செய்யவில்லை.

(ஸெய்ன் நதிக்கரையில்....)

இவ்வாறான ஒரு தேசத்தில் தொங்கும் ரயில் வந்தால் என்னவாகும்? திடிரென்று மின்வெட்டு வரும்போது பயணிகள் மேலேயிருந்து குதித்துவிட வேண்டுமா? அல்லது அரசாங்கமே இலவச ஏணி தருவார்களா?

வூப்பர்ட்டாலில் மற்றொன்றும் சொன்னார்கள். கடந்த நூறு ஆண்டுகளில் தொங்கும் ரயிலில் ஒரு விபத்து கூட நேரவில்லை. ஒருமுறை கூட மின்வெட்டு வந்து நின்றதில்லை. ஒரு நாள், இரண்டு நாள் அல்ல-கடந்த நூறு ஆண்டுகளில்.

இங்கே கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை வைத்த போது நண்பர்களிடம் சொன்னேன்... ''பாருங்கள், எத்தனை பேர் சாகப் போகிறார்கள் என்று'' அதேபோல் சாரம் சரிந்து விழுந்து மூன்று தொழிலாளிகள் மரணம். மூணு பேர் தானே என்ற ஆறுதல் வேறு! காரணம்-இங்கே மனித உயிர் என்பது கிள்ளுக்கீரை. நல்லவேளை, வள்ளுவர் 1330 குறளோடு நிறுத்திக் கொண்டார். 3330 குறள் எழுதியிருந்தாரானால் இன்னும் பலபேரை பலி கொடுத்திருப்பார்கள்!

5.8.2002

கொசு அடிக்கவே நேரமில்லை

என்னைப் பற்றி இன்டர்நெட்டில் வரும் அவதூறுகளைப் படித்து திடுக்கிட்டு எனக்குக் கடிதம் எழுதுகின்றனர் சில வாசகர்கள். சிலர் அது பற்றிய விளக்கங்களைக் கேட்கின்றனர். சிலர் அனுதாபம் தெரிவிக்கின்றனர். இது பற்றி நியூ ஜெர்ஸி ப்ரியாவின் கடிதத்தில் சிறிது பதற்றம் தெரிகிறது. ஏற்கனவே இவர் 'எழுத்தாளர்களெல்லாம் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறீர்கள்?' என்று கேட்டு எழுதியிருந்தார்.

எனக்குக் கொசு அடிக்கவே நேரமில்லை ப்ரியா, நான் எங்கே எழுத்தாளரை அடிப்பது?

விளக்கமாகச் சொல்கிறேன். இங்கே சின்மயா நகரில் தேம்ஸ் நதி ஓடுகிறது. இந்த நதி சென்னை மாநகரம் முழுவதுமே ஓடினாலும் சின்மயா நகரில் அதி சௌந்தர்யம் கூடியதாக ஓடுவதால் அதற்கேற்ப கொசுக்களின் ஜனத்தொகையும் இங்கே அதிகம். நான் எழுதிக் கொண்டிருக்கும் போது என் கழுத்தில் அமர்ந்து ரத்தத்தை உறிஞ்சும் (டிராகுலா!)

ஆனால் நானோ அதை அடிக்கக் கூட முடியாமல் எழுதிக் கொண்டிருப்பேன். அடிப்பதற்குக் கூட அங்கங்களை அசைக்க முடியாத அவசரம்.

இப்படிப்பட்ட நிலையில் என்னைப் பற்றிய அவதூறுகளையெல்லாம் படித்து அதற்கு ஆவன செய்து கொண்டிருக்க முடியுமா என்ன? மான நஷ்ட வழக்குப் போட்டு நீதிமன்றம் சென்றால் மில்லியன் டாலர் கிடைக்கும். அப்படிப்பட்ட கீழ்த்தரமான அவதூறுகளை இன்டர்நெட்டில் பரப்பி விடுகிறார்கள். அது அவ்வளவு எளிதாகவும் அதே நேரத்தில் உலகம் முழுதும் ஒரே நொடியில் பரவி விடக் கூடியதாகவும் உள்ளது. கிராஃபிக்ஸ் மூலமாக பிரபல நடிகைகளின் முகங்களை நீலப் படங்களில் சேர்ப்பது போன்ற கிரிமினல் நடவடிக்கை இது.

சமீபத்தில் ஒரு பிரபல பத்திரிகையில் என்னைப் பற்றி நாக்கூசும் வாசகங்கள் பிரசுரமாகியிருந்தன. போகிற போக்கில் அவந்திகாவின் சாதியைக் குறிப்பிட்டு ஒரு வசை! (ஒரு எழுத்தாளனைத் திருமணம் செய்து கொண்டதைத் தவிர வேறு எந்தப் பாவமும் செய்யாதவள் அவள்!)

'நீதிமன்றம் செல்' என்றார் நண்பர்.

எனக்கு நேரமில்லை. யோசித்துப் பார்த்தால் நேரமில்லை என்பது கூட ஒரு சாக்குதான். விருப்பமில்லை என்பதே உண்மை. நான் ஒரு இலக்கியவாதி. இலக்கியமும் இலக்கியம் சார்ந்த விஷயங்களுமே எனக்கு சந்துஷ்டியைத் தருகின்றன. இதுவும் தவிர, வாழ்வு தரும் அற்புதங்களும் அநேகம். இதையெல்லாம் விட்டு விட்டு கிரிமினல்களோடு மல்லுக்கு நிற்க வேண்டுமா என்ன? மற்றும் ப்ரியாவின் கடிதத்தில் ஒரு எழுத்துப் பிழை உள்ளது.

'எழுத்தாளர்களெல்லாம் ஏன் இப்படி அடித்துக் கொள்கிறீர்கள்?'

'நீ' அல்ல. 'றா' என்று இருக்க வேண்டும். நான் இம்மாதிரி மாஃபியா கலாச்சாரத்திலிருந்து விலகி நீண்ட காலம் ஆயிற்று.

காரணத்தோடுதான் மாஃபியா என்று சொல்லியிருக்கிறேன். ஒரே ஒரு உதாரணம்:

சமீபத்தில் ஒரு முக்கியஸ்தர் இலக்கியக் கூட்டம் ஒன்று கூட்டினார். பொதுவாக இலக்கியக் கூட்டங்களில் பெண்களைக் காணமுடியாது. இந்தக் கூட்டத்தில் ஒரு விதிவிலக்கு. இரண்டு பெண்கள் கலந்து கொண்டார்கள். அதில் எனக்குப் பரிச்சயமான பெண்மணியும் ஒருவர். அவர் ஒன்றும் பெரிய எழுத்தாளர் அல்ல. வாசகி மற்றும் எல்லாரையும் போல் சில கவிதைகளும் எழுதியுள்ளார்.

இந்தக் கூட்டத்தைப் பற்றி இக்கூட்டத்தில் அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்ட அன்பர் ஒருவர் பழி தீர்த்துக் கொள்ளும் எண்ணத்தில் பிட் நோட்டீஸ் தரத்தில் ஒரு சுய விளக்க அறிக்கை ஒன்றை தமிழ்நாட்டிலுள்ள எழுத்தாளர்கள் அனைவருக்கும் அனுப்பியிருந்தார். தினந்தோறும் வரும் **junk** மெயிலோடு சேர்த்து அந்த பிட் நோட்டீசையும் கிழித்துப் போட்டு விட்டேன். பிட் நோட்டீஸ் என்றாலும் அளவில் நீண்டது.

ஆனால் எனக்குத்தான் அது பிட் நோட்டீஸாகத் தெரிந்துள்ளதே தவிர மற்றவர்களுக்கு திருநெல்வேலி அல்வாவாகவே இருந்திருக்கிறது. இரண்டு பத்திரிகைகள் அதைப் பிரசுரித்து மகிழ்ந்துள்ளன.

அந்த நோட்டீஸில் என்னைப் பற்றிய அவதூறுகளும் உண்டு. அது போகட்டும். ஆனால் இலக்கியக் கூட்டத்தில் ஆர்வமுடன் கலந்துகொண்ட அந்தப் பெண்மணி குறித்தும், அவரது அறிவுத்திறன் குறித்தும் ஏகப்பட்ட நக்கலும், நையாண்டியும், அவதூறுமாக எழுதப்பட்டுள்ளது.

அந்தப் பெண்மணி என்ன செய்வார் பாவம்? இலக்கியத்துக்கே தடை போட்டு விட்டார் என் கணவர் என்று அழுதார்.

வருத்தப்படுவதைத் தவிர என்னால் வேறு எதுவும் செய்ய இயலவில்லை.

மாஃபியா கும்பல் சண்டையைப் போல் ஆகிவிட்டது சிறுபத்திரிகைச் சூழல்!

கூபாவைப் பற்றிய பயணக்கட்டுரை ஒன்றை சமீபத்தில் படித்தேன். எழுதியிருப்பவர்: ஜக் சுரையா. கூபா ஹெமிங்வேயின் காதலுக்குரிய நாடு. அமெரிக்காவில் பிறந்தாலும் கூபாவையே அதிகம் நேசித்தவர் ஹெமிங்வே. கூபாவில் வாழ்ந்தவர். நோபல் பரிசு பெற்ற அவருடைய கிழவனும் கடலும் நாவலை அவர் இங்கேதான் எழுதினார். அந்த நாவலில் வரும் கிழவன்(ர்) இந்த ஆண்டு ஜனவரி மாதம்தான் இறந்தார். இறந்தபோது அவர் வயது 104. அவர் வாழ்ந்த கொஹீமார் **(Cojimar)** கிராமத்துக்குச் சென்று குடிசை எண் 209ஐப் பார்த்ததாக எழுதுகிறார் சுரையா.

கூபாவில் ஹெமிங்வேவுக்குப் பிடித்த மதுபான விடுதி **Bodeghita del Media**. அது இப்போதும் இயங்கிக் கொண்டிருந்தாலும் ஒரு நினைவுச் சின்னத்தைப் போல் கருதப்படுகிறது. மார்க்வெஸிலிருந்து ஸால்வதோர் அலெந்தே வரை அந்த விடுதிச் சுவர்களில் கையெழுத்திடாத எழுத்தாளர்களோ தலைவர்களோ இல்லை என்கிறார் சுரையா.

இந்த விடுதி மட்டுமல்ல, ஹெமிங்வே எங்கெங்கு சென்றாரோ அந்த இடமெல்லாம் நினைவுச் சின்னமாகியிருக்கிறது. அம்போஸ் முந்தோஸ் ஓட்டலின் அறை எண் 511 உட்பட.

கிருஷ்ணராஜ் (பெரூ) குறிப்பிட்டது போல் பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் பொருளாதாரம் வீழ்ந்துவிட்டது. சென்ற மாதம் பராகுவாயில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதிபர் லூயிஸ் கொன்ஸாலஸ் மார்சியை ராஜினாமா செய்யக்கோரி அசுன்ஸியோனில் போராட்டம். துப்பாக்கிச் சூடு. மரணம்.

இது இப்படியென்றால், மூன்று தினங்களுக்கு முன்னர் மொந்த்தெ விதேயோவில் (உருகுவாய்) டிபார்ட்மென்டல் ஸ்டோர்களுக்கு போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக செய்தி. உண்ண உணவின்றி மக்கள் கூட்டமாக வந்து ஸ்டோரில் உள்ளவற்றை வாரிக் கொண்டு போய்விடுகிறார்கள். வங்கியில் போட்ட பணத்தை எடுக்க முடியவில்லை. வங்கிகள் திவாலாகி விட்டன. அர்ஜென்டினாவில் சமீபத்தில் நடந்த கதையின் ரிபீட் ஷோ.

வெனிஸுவலாவின் கதியும் இதேதான். எல்லாமே மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பல்கள்தான். கூபாவும் விதிவிலக்கல்ல.

உதாரணமாக, ஒரு டாக்ஸி டிரைவரின் கதையைச் சொல்கிறார் சுரையா. டானியல் என்பது அவர் பெயர். அவருடைய டாக்ஸி அரசுக்குச் சொந்தமானது. டானியல் அந்த டாக்ஸியை ஓட்டுவதன் மூலம் தினமும் 52 யு.எஸ். டாலர் அரசுக்குக் கட்ட வேண்டும். பதிலுக்கு அரசாங்கம் டானியலுக்கு 150 பெஸோக்கள் தரும். அதாவது, 6 டாலருக்கும் குறைவு.

கவனியுங்கள்-இது தினச் சம்பளம் அல்ல, மாதச் சம்பளம்! நம்பாதவர்கள் ஒரு நடை கூபாவுக்குச் சென்று பார்த்துவிட்டு வாருங்கள்.

ஆனால் ஒன்று, மருத்துவம், கல்வி, வீடு போன்ற அனைத்தும் இலவசம். ஒரு பெஸோ கூட கொடுக்க வேண்டாம். ஆனால் வாழ்க்கை அவ்வளவு சுலபமாக இல்லையே? டானியலுக்கும் அவர் மனைவிக்கும் விவாகரத்து ஆகிவிட்டது. இரண்டு வயது மகள் இருக்கிறாள். டானியலோடுதான் இருக்கிறாள். தினமும் ஐஸ் க்ரீம் கேட்கிறாள். இல்லாவிட்டால் மிட்டாய். கார்ல் மார்க்ஸ் இம்மாதிரி விவாகரத்து விஷயங்களையெல்லாம் பற்றி யோசிக்காமல் விட்டது துரதிர்ஷ்டவசமானதுதான்!

இப்படி தினமும் 52 டாலர் சம்பாதிப்பதற்காக டானியல் இரவு பகலாக உழைக்க வேண்டியுள்ளது. மகளை யார் பார்த்துக் கொள்கிறார்கள்? டானியலின் வேலையில்லாத தம்பி.

'நீங்கள் ஒரு கம்யூனிஸ்டா டானியல்?' வினவுகிறார் சுரையா.

'நிச்சயமாக நான் கம்யூனிஸ்ட்தான். ஒரு மனிதன் வேறு என்னவாக இருக்க முடியும்? அப்படியும் மனிதர்கள் இருக்கிறார்களா என்ன?' என்பது டானியலின் பதில். திடீர் திடீரென்று விடுமுறை அறிவித்து விடுகிறாராம் ஃபிடல். விடுமுறை என்றால் 'பந்த்' மாதிரி. எதுவுமே இருக்காது. வாகனங்கள் கூட ஓடாது. ஏன் இப்படி? கம்யூனிசம் தழைக்க இதுதான் ஒரே வழி என்று ஃபிடலிடம் யாரோ ஒரு 'கொம்ப்பாஞ்ஞேரோ' சொல்லியிருக்கிறார் போலும்!

அன்றைய தினம் 52 யு.எஸ். டாலருக்கு எங்கே போவார் டானியல்? ஒரே வழி, அமெரிக்காவுக்கு கள்ளத்தோணி ஏறுவதுதான்!

பின்குறிப்பு: கூபா பற்றி எழுதியபோது தமிழகத்தின் நினைவு ஏனோ தவிர்க்க முடியாமல் வந்தது. நெசவாளர்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருக்கிறார்கள். தி.மு.க., இலவசக் கஞ்சி ஊற்றியது. அ.தி.மு.க., முட்டை பிரியாணி போட்டது. ('முட்டை பிரியாணி என்ன, வான்கோழி பிரியாணியே போட்டிருப்போம். நாங்கள் ஆட்சியில் இருந்திருந்தால்!' என்கிறார் நண்பர் கோபால கிருஷ்ணன். அவர் ஒரு தி.மு.க. அனுதாபி) ஆனால் 'இந்த இலவசமெல்லாம் வேண்டாம். வேலை கொடுங்கள் போதும்' என்கிறார்கள் நெசவாளர்கள்.

09 08 02

கலை.. கடைச்சரக்காகி விட்டது!

வித்தியாசமான ஒரு மின்னஞ்சல் வந்து மின்னதிர்ச்சி தந்துள்ளது. இதோ அந்த அஞ்சல்:

''இத்தனை அருமையான, பல்வேறு விபரங்கள் அடங்கிய 'பக்கம்' ஒன்றைத் தருவதற்காக உங்களுக்கு என் மனமார்ந்த பாராட்டுக்கள்.

அடுத்து, இந்தக் கடிதம் கோணல் பக்கங்கள் ஒன்றில் **Juan Luis Guerra** பற்றி நீங்கள் புகழ்ந்து எழுதியிருப்பது பற்றிய ஒரு புகார்.

நான் ஒரு ஸல்ஸா டான்ஸர். மூன்று ஆண்டுகளாக டான்ஸராக இருந்து வருகிறேன். ஸல்ஸாவை நான் அமெரிக்காவிலும், வெனிஸுவலாவிலும், மிலனிலும் (இத்தாலி) கற்றுக்கொண்டேன். இப்போது இங்கே ஸுரிச்சில் (சுவிஸ்) சில கிளப்புகளில் ஸல்ஸா ஆடி வருகிறேன். கற்பித்தும் வருகிறேன். மற்ற டான்ஸர்களைப் போலவே நானும் ஸல்ஸாவை மிகவும் சிரமப்பட்டே கற்றுக்கொண்டேன். ஆசிரியர்கள் யாரிடமும் நான் இதற்காகச் செல்லவில்லை. மாறாக லத்தீன் அமெரிக்காவில் சக டான்ஸர்களுக்கு இடையே வாழ்ந்துதான் இதைக் கற்றுக்கொண்டேன். ஒரு இந்தியன் என்ற முறையில் இது சிரமமான காரியமாகவே இருந்தது. எனவே இந்த இசையைப் புரிந்து கொள்வதற்காக சில காலம் ஆராய்ச்சியும் செய்தேன்.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நியூயார்க்கின் பால்ரூம்களில் கூபாவின் மெதுவான ரிதமான ரும்பா இசைக்கத் துவங்கியபோதுதான் லத்தீன் இசை மக்களிடையே பிரபலமாயிற்று. பின்னர் உலகம் முழுதும் பரவிய போதும் நியூயார்க் நகரமே அதற்குப் பிரதான மையமாக இருந்தது. கூபா, கொலம்பியா, வெனிஸுவலா, பனாமா, புவெர்த்தோ ரீக்கோ போன்ற நாடுகளிலிருந்து பெரும் கலைஞர்கள் இங்கே வந்து தங்கள் பாணியை லத்தீன் இசையோடு இணைத்தனர்.

கூபாவின் பிரபலமான இசை வடிவங்களான **Mambo, Guaguanco, Son, Montuno,** புவெர்த்தோ ரீக்கோவின் **Bomba y Plena** மற்றும் நியூயார்க் நகரின் தெருவோரத்து இசையின் மணமும் இணைந்ததுதான் இப்போதைய ஸல்ஸா.

லத்தீன் இசையின் மூலம் - ஆப்ரிக்கா. ஆப்ரிக்க அடிமைகள் தங்களோடு கொண்டு வந்த இசை, ஐரோப்பியக் குடியேறிகளின் இசையோடு சேர்ந்து விதவிதமான இசை வடிவங்கள் உருவாயின. தென்னமெரிக்க இசையில் **tango** மற்றும் **Bossa Nova** (இதன் வரலாறு பற்றி நீங்கள் விரும்பினால் பிறகு எழுதுகிறேன்) இரண்டையும் தவிர மற்றதெல்லாம் ஆப்ரிக்க இசையை மூலமாகக் கொண்டவைதான்.

லத்தீன் அமெரிக்க இசை பல ஆண்டுகளாகப் பழக்கத்தில் இருந்து வந்தாலும் முப்பதுகளில்தான் பிரபலமாயிற்று. அறுபதுகள் மற்றும் எழுபதுகளில் ஸல்ஸா பிரதான இடத்தைப் பெற்றது.

ஸல்ஸாவின் இந்த வரலாற்றுப் பின்னணியில் இந்த இசை எதை வலியுறுத்த முயல்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்லப் போகிறேன். முன்பே கூறியதுபோல் இந்த இசை வடிவங்களை ஆப்ரிக்க அடிமைகளே பாடினர். கரும்புத் தோட்டங்களில் நாள் முழுதும் செய்த கடுமையான வேலைக்குப் பிறகு வசிப்பிடங்களுக்கு வந்து தத்தம் பெண்டிருடன் மற்ற அடிமைகள் இட்டுக்கட்டி வைத்திருக்கும் பாடல்களைப் பாடி ஆடினர். அவர்களுடைய துயரமான வாழ்வின் கேளிக்கை என்பது இது ஒன்றுதான். இவர்களின் பாடல்கள் இந்த அடிமைக் கூலிகளின் எல்லையற்ற சோகத்தையும் இவர்கள் அனுபவித்த சித்ரவதைகளையும் பேசின.

இந்த வகையில் ஸல்ஸாவில் அடிப்படையிலேயே ஒரு முரண்நகை (**irony**) உள்ளது. மிகவும் கொடுமையான வாழ்வை வாழ்ந்துகொண்டிருக்கும் அடிமைகளின் இதயத்திலிருந்து வருவது வெகு சந்தோஷமான, கொண்டாட்டமான இசை!

Ismael Rivera, Cortijo, Quintana போன்ற கலைஞர்கள் இவ்வாறு அடிமைத் தொழிலாளர்களாக இருந்து பிரபலமடைந்தவர்கள். தொடர்ந்து தங்கள் மக்களிடையே சென்று பாடினார்கள். இப்போதும் கூட **Oscar D'Leon** போன்ற கலைஞர்கள் தங்களுடைய மண்ணுக்குச் சென்று பாடத் தவறுவதேயில்லை.

Willie Colon, Hector Lavoe போன்ற கலைஞர்கள் தங்கள் பாடல்களில் அரசியல், சமூகக் கருத்துக்களையும் சேர்த்துக் கொள்கின்றனர்.

தங்கள் இதயத்தின் அடியாழத்திலிருந்து பாடி ஸல்ஸாவைப் பிரபலப்படுத்தியவர்களென சிலரைக் குறிப்பிடலாம்: **Eddie Palmieri** - லத்தீன் ஜாஸின் கடவுள் என கருதப்படுபவர்; **Johnny Pacheco**-இவர்தான் ஸல்ஸா என்ற வார்த்தையையே உருவாக்கியவர்; **Tito Puente, Ruben Blades, Larry Harlow, Richie Ray, Bobby Cruz, Celia Cruz** (இவர் ஸல்ஸாவின் ராணியாக அறியப்படுபவர்).

இவர்களுக்குப் பிறகு எண்பதுகளில் வந்தவர்கள்: **Juan Luis Guerra**, **Gilberto Santa Rosa** (சுருக்கமாக எநத என்பார்கள்), **Oscar D'Leon (El Leon)** இந்த மூவரில் ஜி.எஸ்.ஆரும் எல் லெயோனும் க்ளாஸிகல் வடிவத்தையே பின்பற்றினர். குவெர்ராவை நான் வெறுப்பதன் முக்கிய காரணம் அவர்தான் ஸல்ஸாவை ஒழித்துக்கட்டினார் என்பது மட்டுமல்ல, அவரும் அவரை ஒத்தவர்களும் சேர்ந்துதான் ஸல்ஸா ரொமாண்டிகா என்ற போக்கை ஆரம்பித்து வைத்தார்கள். மாபெரும் ஸல்ஸா கலைஞர்களின் விருப்பத்துக்கு மாறாக, குவெர்ரா, ரிக்கி மார்ட்டின், ஜெனிஃபர் லோபஸ் போன்றவர்கள்தான் ஸல்ஸாவை மலிவான **erotic** விஷயமாக மாற்றிவிட்டார்கள். மட்டுமல்லாமல், குவெர்ரா ஒரே ஒரு ஆல்பம்தான் கொடுத்திருக்கிறார். இப்போது அவர் களத்திலேயே இல்லை. லத்தீன் அமெரிக்க இசையில் அவர் பெயருக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. இவ்வளவுக்கும் மேல், சில மோசமான இசைக் கருவிகளையும் ஸல்ஸாவில் சேர்த்து அதன் தனித்தன்மையையே கெடுத்து குட்டிச்சுவராக்கி விட்டார்கள் குவெர்ராவும் அவரது சகாக்களும்.

ஆனால் நல்லவேளையாக, இப்போது ஸல்ஸாவில் ஒரு மறுமலர்ச்சி உருவாகிவருகிறது. மலிவான கடைச்சரக்காக மாற இருந்த ஸல்ஸா அதன் மூல வடிவத்தைப்பெற்று அற்புதமான கலையாக ஆக்க முயல்பவர்கள் என **Oscar D'Leon, La Sonora Carruselles, Mamborama** போன்ற கலைஞர்களைச் சொல்லலாம்.

எனவே நீங்கள் குவெர்ராவைப் பாராட்டியிருப்பது தவறானது மட்டுமல்ல, பாரதியின் பாடலை மும்தாஜின் நடனத்துக்கு ஒப்பிடுவது போலவும் ஆகும்.

மிக்க அன்புடன்,

சத்யா கிருஷ்ணமூர்த்தி.

சத்யாவின் கடிதம் எனக்குப் பெரும் உவகையை ஏற்படுத்தியது-ஸல்ஸாவைப் பற்றியும் அதிலுள்ள முக்கியமான கலைஞர்களைப் பற்றியும் அறிந்துகொள்ள அவர் கடிதம் ஒரு வழிகாட்டியாய் உள்ளது என்ற வகையில் மட்டுமல்லாமல், ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஸல்ஸா பயின்ற ஒரு ஸல்ஸா நடனக் கலைஞர் கடிதம் எழுதுவது என்பது அபூர்வமான சந்தர்ப்பம். அதற்காக சத்யாவுக்கு நன்றி.

சத்யாவின் கடிதத்தைப் படித்தபோது மேலும் சில எண்ணங்கள் என் மனதில் தோன்றின. அதாவது, சத்யாவின் கடிதத்தை ஒரே வரியில் சுருக்கினால், குவெர்ரா ரிக்கி மார்ட்டின் ஜெனிஃபர் லோபஸ் போன்றவர்கள் ஸல்ஸாவை ஜல்ஸாவாக்கி விட்டார்கள் என்பதுதான். அற்புதமான ஒரு கலை மலிவான கடைச்சரக்காகி விட்டது.

சரி. ஆனால் எனக்கோ பாரதியாரையும் பிடிக்கும், மும்தாஜையும் பிடிக்குமே என்ன செய்ய?

பாரதி-சூட்சுமம். வடிவிலி.

மும்தாஜ்-ஸ்தூல வடிவம்.

சத்யாவின் கடிதத்தில் என்னை பிரமிக்க வைத்த ஒரு இடம்: கறுப்பு அடிமைகளின் துயரமான வாழ்வைச் சொல்லும் ஸல்ஸா ஒரு கொண்டாட்டமான நடனமாகவும், இசையாகவும் இருப்பது...

இதே விஷயத்தை- இதே **irony**யைத்தான் நான் கூவாகம் அலிகள் திருவிழாவில் கண்டேன்.

அவர்களின் பாடல்கள்- நூற்றாண்டுகளாய் அவர்கள் படும் பாட்டைக் கூறுகிறது. **Absence of Phallus and Yoni** என்பதால் உண்டான உடல் வாதையைப் பற்றிப் பேசுகிறது. சமூகத்தின் புறக்கணிப்பும் சந்ததி உருவாக்கத்திற்கு **(procreation)** வழியே இல்லாத நிலையும் ஏற்படுத்தும் மீளாத் துயரமும், உடல் வேட்கையும், தாபமும் - இப்படி எல்லாம் கலந்த ஒரு கதறல்தான் அலிகளின் பாடல். ஆனால் அது அவர்களிடம் மிகப்பெரிய களியாட்டமாக வெளிப்படுகிறது. இதுதான் அந்த **irony**. இதுதான் நான் இவ்வளவு காலமும் கூறி வந்த **Dionysian spirit!**

11.8.2002

வழக்கம் போல் இங்கிலாந்து வாசகியின் கும்மாங்குத்து:

டூட்டோட்டலராக இருந்தால் பியர் விளம்பரம் பார்க்கக் கூடாது என்று யார் (எவன்!) சொன்னது? 'கப்ளிங்' என்று ஒரு நிகழ்ச்சி இங்கே டி.வி.யில் (ஸாரி, மறுபடியும் டி.வி.) வந்து கலக்கிக் கொண்டிருக்கிறது. பார்த்தால் விடவேமாட்டீர்கள். எதைப்பற்றி தெரியுமா? வேண்டாம். அது தேவையில்லை. (என் நண்பர்களிடம் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கிறேன் என்று சொல்ல எனக்கு தைரியம் வருமா என்று தெரியவில்லை!) இந்த 'கப்ளிங்' இந்திய சென்ஸாருக்குப் போனால் ஒரு ரீல்கூட திரும்பி வராது. ஆனால் இது ஒன்றும் மூன்றாந்தர விஷயம் அல்ல. மிகவும் நகைச்சுவையான ஒரு நிகழ்ச்சி.பியர் விளம்பரம் பார்ப்பதும் இதே மாதிரிதான். அது ஒரு த்ரில்... அவ்வளவு ஏன், உங்கள் கோணல் பக்கங்களை நான் படிக்கவில்லையா? அப்படித்தான்.

கொத்துப் பரோட்டா மொழிபெயர்ப்பு-நல்ல தலைப்பு. ஆனால் எனக்கு உங்கள் மொழிபெயர்ப்புத் திறமையை பார்க்க வேண்டும். பரவாயில்லை. நன்றாகத்தான் இருக்கும் என்று தோன்றுகிறது. என் கடிதங்களின் மொழிபெயர்ப்பை கோணல் பக்கங்களில் பார்க்கும்போது அப்படித்தான் தெரிகிறது. **Keep it up**. நான் ஆங்கிலத்தில் எழுதுவதை விடவும் தமிழில் நன்றாகவே வந்துள்ளது. (குறித்துக் கொள்ளவும். நான் ஒன்றும் பாக்ஸர் அல்ல. கும்மாங்குத்துக்களை மட்டுமே அள்ளித் தருவதற்கு. தாராள மனசுடன் பாராட்டவும்தான் செய்கிறேன்)

சமீபத்திய ஏமாற்றம் ஒன்று. ஏ.ஆர்.ரஹ்மானின் பாம்பே கனவுகள். ரஹ்மானின் கனவுகளைக் கலைத்துப் போட்டுவிட்டது.

விடுமுறையில் எகிப்துக்குப் போகலாம் என்று இருக்கிறேன். பாரிஸ் போகலாமா என்றும் ஒரு சம்சயம். ஆனால் பாரிஸ் ஒரு போர்! சாம்ப்ஸ் லீஸேயில் **(Champs Elysees)** ஷாப்பிங் செய்வதைவிட வீட்டிலேயே அமர்ந்திருப்பது உத்தமம். எனக்குப் பிடித்தது எகிப்துதான். ஸ்ஃபிங்ஸ், பிரமிடுகள்... அதிலும் இந்த மம்மி படங்களையெல்லாம் பார்த்து என் ஆவல் அதிகமாகிவிட்டது. அங்கே போய் உங்களுக்கு மெயில் அனுப்புகிறேன். (ஆப்ரிக்காவிலிருந்தும் எனக்கு மெயில் வந்துவிட்டது என்று நீங்கள் பீற்றிக் கொள்ளலாம்.!)

அது சரி, உங்கள் இயற்பெயர் என்னவாக இருக்கும்? முத்துக்கருப்பன்? சாமிக்கண்ணு? என்னைப் பொறுத்தவரை உங்களுக்குப் பொருத்தமான பெயர்-அய்யனார்.

இ.வாசகியின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள 'கப்ளிங்' நிகழ்ச்சி என் ஆவலைத் தூண்டுகிறது. நம் ஜென்டில்மேன் படத்தில் கவுண்டமணியும் சுபாஸ்ரீயும் ஆடுவார்களே... டிக்கிலோனா ஆட்டம் அது மாதிரியா?

மொழிபெயர்ப்பு பற்றி: உண்மையில் இ.வாசகியின் கடிதங்களை மெட்ராஸ் பாஷையில் மொழி பெயர்ப்பதுதான் சரியாக இருக்கும். எனக்கு அந்த பாஷை சரியாக வராது என்பதால்தான் இப்படி பொதுத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டி வருகிறது.

என் இயற்பெயரை ஊகிப்பதில் அம்மணி மிகவும் நெருங்கி வந்துவிட்டார் (அய்யனார்) இன்னும் ஒரே ஒரு ஸ்டெப்தான் பாக்கி. என் இயற்பெயரைப் பிடித்து விடலாம்.

ஏ.ஆர்.ரஹ்மான் பற்றி எனக்குச் சொல்வதற்கு எதுவுமே இல்லை. இளையராஜாவுடன் எந்தவிதத்திலும் ஒப்பிட முடியாத ஒரு டெக்னீஷியன்தான் ரஹ்மான்.
விமர்சிக்கப்படுவதற்குக்கூட ஒரு தகுதி வேண்டும். அந்தத் தகுதி ரஹ்மானிடம் இல்லை.

சஞ்சய் லீலா பன்ஸாலியின் முதல் படம் காமோஷி எனக்குப் பிடித்திருந்தது. காது கேளாத, வாய் பேசாத தம்பதியராக ஸீமா பிஸ்வாஸும் நாநா படேகரும் பிரமாதப் படுத்தியிருந்தார்கள். மகளாக மனீஷா கொய்ராலா.

ஆனால் அடுத்த படமான 'ஹம் தில் தே சுக்கே ஸனம்' வழக்கமான இந்திய மெலோ டிராமா.

இந்தப் பின்னணியில்தான் பன்ஸாலியின் ஐம்பது கோடி ரூபாய் தேவதாஸ் பற்றிய செய்திகள் காதில் விழுந்தன. செய்திகள் அவ்வளவு ரசமாக இல்லை. பிறகு அப்படத்திற்கு ஷோபா டே எழுதிய விமர்சனத்தைப் படித்த பிறகுதான் ஆசுவாசம் அடைந்தேன். படம் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவுக்கு குப்பை என்று எழுதியிருந்தார் ஷோபா டே.

எக்காரணத்தை முன்னிட்டும் இப்படத்தில் போய் உட்கார்ந்து விடக்கூடாது என்று முடிவு செய்தேன் நான். ஆனால் வழக்கமாக சினிமா பக்கமே தலை காட்டாத மணி எனக்கு போன் செய்து 'இன்று நைட்ஷோ தேவதாஸுக்குப் போகலாம், என் சிஸ்டரோடு வந்துவிடு' என்றார். அவந்திகாவிடம் சொன்னேன். 'என் தோழியும் வருவார்' என்றாள்.

இந்த உரையாடலெல்லாம் நடந்து முடிந்த பிறகுதான் அன்றைய தினசரியைப் பார்த்த எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சத்யம் தியேட்டரில் முந்தைய தினம் ஈவ் டீசிங் சம்பவம். ஈடுபட்டவர்கள் வழக்கம்போல் கல்லூரி மாணவர்கள். அதிலும் பட்டப் பகல்

இரண்டு மணியளவில் ஒரு பெண்ணைப் பார்த்து 'ஏய் நீ ரொம்ப அழகா இருக்கே' என்பது போன்ற தமிழ்த் திரைக் காவியங்களிலிருந்து வசனங்களை எடுத்துவிட்டுள்ளனர். பிறகு-ஏற்கனவே நான் எழுதியது போல்- கும்பலாக இருப்பதால் ஏற்படும் துணிச்சல் காரணமாக இன்னும் ஆபாசமான முறையில் 'டீஸ்' செய்யத் துவங்கியுள்ளனர். அந்தப் பெண் எதிர்க்கவே அடி உதையில் இறங்கியிருக்கிறார்கள் மாணவர்கள். பட்டப்பகலில் குறைந்தபட்சம் முன்னூறு பேர் குழுமியுள்ள ஒரு தியேட்டர் காம்ப்ளெக்ஸ் வாசலில் ஒரு பெண்ணை ஐந்தாறு மாணவர்கள் அடித்து உதைத்ததைக் கேட்பதற்கு அங்கே யாருக்கும் துணிவில்லை. இப்போது அந்தப் பெண் மருத்துவமனையில். மாணவ திலகங்கள் எப்படியும் ஜாமீனில் வெளியே வந்துவிடுவார்கள்.

இவ்வளவு அபாயங்கள் சூழ்ந்துள்ள ஒரு இடத்திற்கு பெண்களுடன் நைட் ஷோவுக்குப் போக முடியுமா என்ற பீதி வந்துவிட்டது எனக்கு. ஆனால் ஒரு விஷயம் ஆறுதலாக இருந்தது. மணியின் இடுப்பில் எப்போதும் பத்திரமாக இருக்கும் பிஸ்டல்.

பிஸ்டல், துப்பாக்கி போன்ற சாதனங்களை சினிமாவில்தான் கண்டிருக்கிறேன். அதை முதன்முதலில் நேரடியாக தரிசிக்கும் பாக்கியம் மணியின் மூலம்தான் கிடைத்தது. பிஸ்டல் என்றால் தீபாவளி சமயத்தில் 'கேப்' வெடிப்பார்களே, அது மாதிரி இருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் எடுத்துப் பார்த்தால் ஏதோ டம்பள்ஸைத் தூக்குவது போல் இருந்தது. 'விலை எவ்வளவு இருக்கும்?' என்று கேட்டேன். 'உன் யூகமென்ன?' என்று கேட்டார் மணி. 'ஐம்பது ஆயிரம்?' அவர் சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சியை அளித்தது. அந்தச் சிறிய பிஸ்டலின் விலை மூன்று லட்சம்! மணிக்கு துப்பாக்கி சுடுவதில் பிரியம் அதிகம். ரைஃபிள் கிளப்புகளிலும் உறுப்பினர்.

பிஸ்டல் கொடுத்த தைரியத்தில் கிளம்பினேன். அவந்திகாவையும் அவள் தோழியையும் எட்டு மணிக்கு சோழா ஷெரட்டனின் தரைத்தளத்தில் இருக்கும் சைனீஸ் உணவு விடுதிக்கு வரச்சொல்லிவிட்டு மணியைச் சந்திக்கும் போது ஏழு மணி.

'இன்னும் ஒரு மணி நேரம் இருக்கிறதே, என்ன செய்வது?' என்று கேட்டேன்.

ஒரு முறை முறைத்தார் மணி.

கார் போயஸ் கார்டனுக்குள் நுழைந்தது. ஆனால் அங்கே போலீஸ்காரர்கள் நிறைய பேர் நின்று கொண்டிருந்ததால் அதற்கு எதிரே இருந்த சந்தில் காரை ஒதுக்கினோம். ஏற்கனவே கார் ஓட்டிக் கொண்டே மொபைல் போனில் பேசியவகையில் ஆயிரம் ரூபாய் அபராதம் கட்டியிருந்தார் மணி. (பில் போட்ட பிறகு அந்த போலீஸ்காரர் காரை-ஸொனாடா-கொஞ்சம் சந்தேகத்துடன் பார்த்துவிட்டு 'சார், நீங்கள் யார்?' என்று கேட்க, மணி தன் அடையாளத்தைச் சொல்ல, போலீஸ்காரர் விறைப்பாக ஒரு ஸல்யூட் அடித்து 'இதை ஏன் சார் அப்போதே சொல்லவில்லை? அநியாயமாக ஆயிரம் ரூபாய் போச்சே' என்று சொல்லியிருக்கிறார். உடனே மணி அப்துல்கலாம் பாணியில் 'நீங்கள் உங்கள் கடமையைத் தானே செய்தீர்கள், பரவாயில்லை' என்று சொல்லவும் அந்தப் போலீஸ்காரர் அபூர்வ சகோதரர்கள் படத்தில் இன்ஸ்பெக்டர் ஜனகராஜை பார்த்து காமடி நடிகர் ஒருவர் சொல்லும் பாணியில் 'சார்... எங்கயோ போயிட்டிங்களே!' என வியந்திருக்கிறார்) அதனால் இப்போது மீண்டும் போலீஸ்காரர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டாம் என்ற எண்ணத்தில் டிரைவரையும் அழைத்து வந்திருந்தார் மணி. சாவகாசமாக இரண்டு ரவுண்டு ஸ்காட்ச் அடித்துவிட்டு சோழாவுக்குக் கிளம்பினோம். நானும் அவந்திகாவின் தோழியும் வழக்கம்போல் பன்றி இறைச்சி. அவந்திகாவும் மணியும் தயிர்சாதம்.

படம் துவங்கியவுடனேயே ஏன் வந்தோம் என்று ஆகிவிட்டது எனக்கு. மணிக்கு 'ஆவோ' என்றால் கூட அர்த்தம் தெரியாது. அதனால் கவலையின்றி படம் பார்த்துக் கொண்டிருந்தார். அரை மணி நேரம் கழித்து என் காதைக் கடித்து 'என்ன சாரு சுதந்திரப் போரட்டம் பற்றி ஒன்றையுமே காணம்?' என்று கேட்டார். எனக்கு ஒன்றும் புரியவில்லை.

'என்னது சுதந்திரப் போராட்டமா?'

'ஆமாம்.. பிரிட்டிஷ் அரசின் டெல்லி அஸம்ப்ளியில் குண்டு வீசினாரே பகத் சிங்.. பிறகு அவரை தூக்கில் கூட போடுவார்களே?' '

'ஆமாம்.. அது பகத் சிங். இது தேவதாஸ். பகத் சிங்கை எப்படி தேவதாஸில் பார்க்க முடியும்?''

''அடடா... மோசம் போனேனே.. இதை பகத் சிங் என்றல்லவா நினைத்துவிட்டேன்''

''தேவதாஸ் என்றுதானே சொன்னீர்கள்?''

''பகத்சிங்கைத்தான் தேவதாஸ் என்று குழப்பிக்கொண்டுவிட்டேன்''

மணியாவது பரவாயில்லை, பன்ஸாலியோ தேவதாஸை கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைக் கொட்டி குழி தோண்டிப் புதைத்து விட்டார்.

எதற்கு இந்த பிரம்மாண்டம், ஏன் இத்தனை ஆயிரக்கணக்கான விளக்குகள் என்றெல்லாம் புரியவேயில்லை. ஒவ்வொருவரும் பக்கிங்ஹாம் அரண்மனை மாதிரி மாளிகையில் வசிக்கிறார்கள். இதற்கு ஆன செலவு 50 கோடி!

தமிழ்ப் படத்தில் வரும் பாடல் காட்சியில் 'இதயம்' என்ற வார்த்தை வரும்போது இமயமலை சைஸுக்கு 'இதயம்' செட் ஒன்றைப் போட்டு ஆயிரம் பேரை ஆட வைப்பது போல் எங்கு பார்த்தாலும் ஒரே செட் மயம்!

பிரம்மாண்டம் என்றால் அர்த்தத்தோடு இருக்க வேண்டும். நான் பார்த்த ஒரு பிரம்மாண்டமான படத்தைப் பற்றி பிறகு சொல்கிறேன்.

தேவதாஸில் பகத்சிங்கைத் தேடியது போல் அன்றைய தினம் மற்றொரு விசேஷம்... இடைவேளையின் போது அவந்திகாவின் தோழி முகத்தை மூடி முக்காடு இட்டபடி அமர்ந்திருந்தார். அணிந்திருந்த ஆடை வேறு கறுப்பு நிற ஸல்வார் கமீஸ் என்றபடியால் தாலிபான் மாதிரியே இருந்தது. தாலிபான் தாலிபான் என்று கிண்டலடித்துக் கொண்டிருந்தோம். பிறகு காரணம் கேட்டபோது அவர் சொன்னது.. 'எவனாவது பத்திரிகைக்காரன் பார்த்து எழுதிட்டான்னா பிறகு பிரச்னைதானே?'

காரணம், அவர் வகிக்கும் பதவி அப்படி.. பெண் என்றால் எப்படியெல்லாம் அஞ்சி வாழ வேண்டியிருக்கிறது என்று நினைத்துக் கொண்டேன்.

12.8.2002

பஃபுனாக மாறிய பாபா!

சீனாவில் அறுபதுகளில் நடந்த கலாச்சாரப் புரட்சி இங்கே நடக்கப் போகிறதோ என்று என்னை எண்ண வைத்துவிட்டது. பாபா படமும், அது சம்பந்தமான ஒரு வருடத்திய நிகழ்வுகளும்! எங்கு பார்த்தாலும் அதே பேச்சு.. அதே செய்தி.. காற்றை சுவாசிக்கிறோமா பாபாவை சுவாசிக்கிறோமா என்ற அளவுக்கு சந்தேகம் வந்து விட்டது எனக்கு. எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார் கடவுள் என்பார்கள். தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்பார்கள். அதே மாதிரி தான் பாபா தூணிலும் இருந்தார். துரும்பிலும் இருந்தார்.

செட்டில் யாரும் ரஜினிக்கு கை தூக்கி வணக்கம் சொல்லக் கூடாது என உத்தரவு என்று ஒரு பத்திரிகைச் செய்தி. காரணம் செட்டில் இருக்கும் ஐநூறு பேர் கை தூக்கி வணக்கம் சொன்னால் பதிலுக்கு ஐநூறு பேருக்கும் கை தூக்க ரஜினிக்கு கை வலிக்காதா?

சென்ற வாரம் வெங்கடேஷ் திபெத் கிளம்பியதால் அவருக்கு டாட்டா சொல்வதற்காக பாண்டிச்சேரி சென்றிருந்தேன். பாபா பார்க்காவிட்டால் மனிதனே இல்லை என்றார்கள். அந்த அளவுக்கு தமிழ்நாடெங்கும் இதே பேச்சு. பார்க்கவில்லை என்று சொன்னால் ஒரு மாதிரியாக மேலும் கீழும் பார்த்தார்கள்.

இந்தத்தொல்லை தாங்க முடியாமல் வெங்கடேஷின் செல்வாக்கைப் பயன்படுத்தி டிக்கட் வாங்கி கொண்டு படத்தில் உட்கார்ந்தேன். விசில் சத்தத்தில் செவிச்சவ்வுகள் கிழிந்தன. ஆனால் எல்லாம் ஒரு பத்து நிமிடம்தான். அதற்கு மேல் தியேட்டரில் குண்டூசி விழுந்தால் சத்தம் கேட்கும். அப்படி ஒரு மயான அமைதி. ஆமாம், ஏதோ ஒரு துக்க வீட்டுக்கு வந்துவிட்டது போல் அப்படி ஒரு அமைதி.

எல்லாம் ஒரே 'தத்துவ' மயம். கடவுள் இருக்கிறாரா இல்லையா என்கிற ஆராய்ச்சி. நாஸ்திகனான பாபா கேட்கிறார் - 'இந்தத் தெரு ஏன் இப்படி குண்டும் குழியுமாகக் கிடக்கிறது?'

இது முனிசிபாலிட்டிகாரனிடம் கேட்க வேண்டிய கேள்வி அல்லவா? ஏன் ரஜினி கடவுளிடம் கேட்கிறார் என்று எனக்கு ஒரே குழப்பம். ஆனால் அடுத்த நொடியில் குழப்பம் தீர்ந்து போகிறது. பாபாவின் அருளால் அந்தத் தெரு சுத்தமாகி விடுகிறது. எப்படி? பாபாவே நேரில் வந்து சுத்தமாக்கி விட்டாரா? இல்லை இல்லை, அவர் ஏவினார். மானுடன் செய்து முடித்தான். அதாவது, அந்தப் பகுதிக்கு மந்திரி வர இருப்பதால் சுத்தம் செய்யப்பட்டு விடுகிறது.

பாபா யார்?

இதற்கு நாம் பாபா படத்தைப் பார்ப்பதோடு விட்டுவிடக் கூடாது. இங்கே தமிழ்நாட்டில் எது நிஜம் எது சினிமா என்றெல்லாம் பிரித்துப்பார்க்க முடியாது. ஒரு நாள் சினிமாவில் முதல் மந்திரியாக நடிப்பவர் மறுநாளே நிஜமான முதல் மந்திரியாக நமக்கு முன் தோன்றுவார். ஒரு நாள் சினிமாவில் காமெடி செய்பவர் மறுநாளே நமது நேர் வாழ்விலும் காமெடி செய்வார். வில்லன்களைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

பாபா யாரென்று ரஜினி நமக்கு ஏற்கனவே அவரது பேச்சுக்களில், பேட்டிகளில் அறிமுகப்படுத்தியிருக்கிறார். பாபா இயேசு கிறிஸ்துவுடன் கோலி விளையாடியவர். (நான் தமாஷ் பண்ணுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பாபா பால்ய காலத்தில் இயேசுவுடன்

பழகியிருக்கிறார். ஜெரூசலேமில் அல்ல. இமயமலையில்!) ஆதி சங்கரருக்கு தத்துவம் சொல்லிக் கொடுத்திருக்கிறார். கபீருக்கு கவிதை எழுதக் கற்பித்திருக்கிறார். சரி, ஒருவர் குறைகிறாரே? மூச்...! ஒசாமா பின் லாடன் ''டின்'' கட்டிவிடுவார்.. ஜாக்கிரதை!

ஆக, இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்த வருகிறார் மகா அவ்தார் பாபா. முகவரி: இமயமலை **through** போயஸ் கார்டன்!.

இந்த பாபா நிஜ ரஜினிக்கும் சினிமாவில் வரும் ரஜினிக்கும் தரிசனம் தருகிறார்.

(ஒரு இடைச்செருகல்: எனக்கும் பாபாவை தரிசிக்கும் தகுதி இருக்கிறது. நானும் ரஜினியைப் போல் **sagittarian**. மது, மாமிசம், புகை எல்லாம் உண்டு - பீடி நாறும் என்பதால் 555 சிகரெட் தான் - பாபா உலகத்துக்கே பொதுவானவர் என்பதால் வெளிநாட்டுச் சரக்கென்று கூறி என்னை ஒதுக்கிவிட மாட்டார் என்று நம்புகிறேன். எனக்கும் இமயமலை பிடிக்கும். அடுத்த முறை ரஜினி பாபாவைப் பார்க்கும் போது என்னை சிபாரிசு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்).

பாபாவிடம் பாபா (ரஜினி) கேட்கிறார்.. ''ஏன் பாபா உலகத்தில் இவ்வளவு கஷ்டம்? இவ்வளவு துன்பம்?''

இதற்கு பாபா சொல்லும் பதில்: 1. ஒவ்வொருவனும் தனது குடும்பத்தில் உள்ளவர்களை சந்தோஷமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

2. மற்றவர்களுக்கு உதவ வேண்டும் உதவ முடியாவிட்டால் உபத்திரவமாவது கொடுக்காமல் இருக்க வேண்டும்.

குடும்பத்தில் உள்ளவர்களை சந்தோஷமாக வைத்துக்கொள்வது அவ்வளவு சுலபமா என்ன? இல்லை என்பதற்கு ஆயிரம், லட்சம் உதாரணங்கள் தருவேன். எல்லாம் என் நண்பர்கள் வாழ்வில் நடந்தது. லட்சம் உதாரணங்களுக்கு இடமில்லை என்பதால் ஓரிரண்டு மட்டும்.

என் நண்பனுக்கு அவன் தாயார் அவர்கள் சாதியிலேயே பெண் பார்த்தார். நண்பனோ பாரதிப்பித்தன். ''அம்மா வேண்டாம்.. பாரதி சாதிகள் இல்லையடி பாப்பா என்று சொல்லியிருக்கிறார்'' என்றான் நண்பன். ''அட பாரதியாவது சாரதியாவது போடா அந்தண்டை'' என்று சொல்லிவிட்டார் தாயார். நண்பனும் விடுவதாக இல்லை. ஒரு தலித் பெண்ணை மணந்து கொண்டான் நண்பன். அதிர்ச்சியில் செத்தே போய்விட்டார் அவன் தாயார். ஆனால் இறுதி மூச்சு பிரியும் போது கூட 'கீழ்ச்சாதியில் பெண்ணெடுத்த இவன் எனக்கு கொள்ளி வைக்கக் கூடாது' என்று சொல்லிவிட்டுத்தான் செத்தார்.

மற்றொரு நண்பர். அல்ல, நண்பி. கணவன் பேராசைக்காரன். பல பேரிடமிருந்து பணம் பறித்து பங்களா கட்டிவிட்டான். அடுத்தவன் வயிற்றெரிச்சல் எனக்கு வேண்டாமென்று அவனை விவாகரத்து செய்துவிட்டார் நண்பி.

அடுத்து, அடுத்தவருக்கு உதவ வேண்டும், அல்லது குறைந்தபட்சம் உபத்திரவமாவது செய்யாமல் இருக்கலாம். அசட்டுக் கேள்விகள்.. அசட்டுப் பதில்கள்...!

பொதுவாகவே பல ஆண்டுகளாக எனக்கு ஒரு சந்தேகம். ஆன்மீகம் பேசுபவர்களால் சமூகத்திற்கு எப்படி அதிகபட்ச தீமையைச் செய்ய முடிகிறது?

உதாரணமாக, நாலு ரூபாய் தோசையை நாற்பது ரூபாய்க்கு விற்றால் கூட என்னால் புரிந்து கொள்ள முடியும். ஏதோ ஐந்து நட்சத்திர கலாச்சாரம் என்று. ஆனால் அதை நாலாயிரம் ரூபாய்க்கு விற்றால் அதன் பெயர் என்ன? ஆன்மீகமா?

பாபா படத்தயாரிப்பு செலவு ஒரு கோடியைத் தாண்டியிருக்க முடியாது. எல்லாமே ஒரு செட்டுக்குள் நடக்கும் ஸ்கூல் டிராமா தரத்தில் உள்ளது என்பதால் அதிக செலவில்லை. இப்படி ஒரு கோடியில் தயாரிக்கப்பட்ட சினிமா 140 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டுள்ளது என்றால் அதன் பெயர் என்ன?.

பத்து ரூபாய் செலவில் பார்க்க வேண்டிய படத்தை மக்கள் இருநூற்றைம்பது ரூபாய் கொடுத்து பார்த்தார்கள். இதுதான் இரண்டாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வரும் பாபா சொல்லும் ஆன்மீகமா?

உலகத்தில் எந்த மூலையிலும் நினைத்துப் பார்க்க முடியாத ஒரு பரபரப்பும், பேச்சும் - அதைத் தொடர்ந்த 'மகா வியாபாரமும்' நடந்ததற்கு மீடியா வகித்த பங்கையும் நாம் மறக்க முடியாது. நின்றால் ஒரு செய்தி. அமர்ந்தால் ஒரு செய்தி. கை தூக்கினால் ஒரு செய்தி. கை தூக்காவிட்டால் ஒரு செய்தி.

பாபா பற்றி கடந்த ஒரு ஆண்டில் வெளிவந்த செய்திகள், கட்டுரைகள் எத்தனை என்று பார்த்தால் நான் சொல்வது விளங்கும். இது பற்றி ராஜேஷ்வரிடம் பேசிக் கொண்டிருந்தபோது அவர் மாப்பஸான் எழுதிய **Horla** என்ற கதை பற்றிக் குறிப்பிட்டார். 1887 ஆம் ஆண்டு எழுதப்பட்ட அந்தக் கதை இப்போதைய தமிழ்நாட்டு நிலைமைக்கு மிகவும் பொருந்திவரக்கூடியது என்றார். **Collective insanity** என்பது ஒரு ஊரில் கொஞ்சம் கொஞ்சமாகப் பரவி இறுதியில் அந்த ஊர் மொத்தத்தையும் சூழ்ந்து விடுவதுதான் கதை. நான் இன்னும் அதைப் படிக்கவில்லை. ஆனால் ராஜேஷ்வர் கூறியது போல், தமிழ்நாட்டைப் பற்றிய கதையாகவும் அதை வாசிக்கலாம்.

மேலும், இது குறித்து டாக்டர் ராமதாஸின் கவலை பற்றியும் யோசித்தேன். டாக்டர் இனி இந்தக் கவலையை விட்டு விடலாம். ஏனென்றால், தமிழ்நாட்டில் சிறு பத்திரிகை எழுத்தாளர்கள் என்று ஒரு சாதி உள்ளது. மைனாரிட்டி சாதிதான். என்றாலும் வலு ஜாஸ்தி. அதில் ஒரு குழுவினர் காபாலிகர்களை ஒத்தவர்கள். அதாவது, அவர்களின் எழுத்தைச் சொல்கிறேன். உதாரணத்திற்கு இதைப் படித்துப் பாருங்கள்:

''கிளைகிளையாய் பிரிந்து கிடக்கும் வெம்பாறைகளின் உச்சியில் தொங்கிக் கொண்டிருக்கும் பாழியின் காலமற்ற மோனம் கல்ரேகை கொண்ட நடுக்கத்தில் பிறழ்வுபட்டு கோட்டி கொண்ட அம்மணர் மயிற்பிஞ்சும் கையிலேந்தி பீபிலிகை எனும் எறும்புப் பிறவிகள் மேல் விரல் படாமல் ரேகை தொடாமல் தூற்றுத்தூற்று விட்ட வழி வரைந்து செல்லும் இறகுப் பாதையில் விருவுகள் கீறல்கள்.....''

முற்றுப் புள்ளி எங்கே வரும் என்று தெரியாமல் மூச்சு வாங்கியதால் இடையில் நிறுத்திவிட்டேன். இது கோணங்கி எழுதிய பாழி என்ற நாவலில் வரும் ஒரு வாக்கியம். நாவல் முழுவதுமே இப்படித்தான். இவரது 'பள்ளி'யைச் சேர்ந்த ஒருவர்தான் பாபாவுக்கு கதை வசன உதவி! கேட்கவேண்டுமா? தமிழ் சினிமாவில் மேஜிகல் ரியலிசம், பின்நவீனத்துவம், **inter-texuality** எல்லாம் கொடிகட்டிப் பறக்கிறது.ரசிகர்கள் தலையில் துண்டைப் போட்டுக் கொண்டு வெளியே வருவதன் ரகசியம் இப்போது புரிகிறதா?

எனவே கவலையை விடுங்கள். தமிழ்ச் சிறு பத்திரிகைக்காரர்களே போதும்.. தமிழ் சினிமாவை ஒரு ''கை'' பார்த்து விடுவார்கள்!

கோவில்பட்டி சிம்ரன்.

சத்யம் தியேட்டர் வளாகத்தில் ஒரு பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை பற்றி தன் கவலையை பகிர்ந்து கொண்டுள்ளார் பத்ரி-தனது மின்னஞ்சலில். சினிமா இதற்கு ஒரு முக்கிய காரணம் என்கிறார். எனக்கும் அதில் சந்தேகம் இல்லை. ஒட்டு மொத்தமான சமூகச் சீரழிவின் அடையாளம் சினிமா. இது ஒரு புறம் இருக்க, நமது அன்றாட வாழ்வில் மனித உறவுகள் எவ்வளவு கூஷீணமடைந்துள்ளன என்பதற்கு பத்ரி சொல்லும் ஒரு சம்பவம்.

எனது நண்பன் ஒருவன் விமானத்தில் வந்த போது நடந்தது இது. அவன் நன்கு உயரமாக இருப்பான். அது மட்டுமல்லாமல் அவனுக்கு முன்னால் அமர்ந்திருந்தவர் வேறு தன் இருக்கையை அடிக்கடி பின்னுக்குத் தள்ளிக் கொண்டிருந்ததால், இவன் தன் உடல் வலியை சற்றே போக்கிக் கொள்வதற்காக கைகளை உயரே தூக்கி சோம்பல் முறித்திருக்கிறான். தவறிப் போய் அவன் கை பின்னால் அமர்ந்திருந்த பெண்மணியின் மீது பட்டுவிட்டது. துரதிர்ஷ்டவசமாக அவன் அதற்கு ''ஸாரி'' சொல்லவில்லை. அவன் சென்னை கலாச்சாரத்தில் ஊறி வளர்ந்தவன் என்பதால் அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டான். அதுதான் அவன் செய்த தவறு. அந்தப் பெண்மணி எழுந்து நின்று அவனை தூஷணை வார்த்தைகளால் திட்டியிருக்கிறார். அவன் சங்கோஜத்தின் காரணமாகவும், இதை பெரிய விவகாரமாக ஆக்க வேண்டாம் என்ற எண்ணத்திலும் மீண்டும் சும்மா இருந்துவிட்டான். அது அவன் செய்த இரண்டாவது தவறு. அந்தப் பெண் அதோடு விடவில்லை விமான அதிகாரியிடம் புகார் செய்துவிட்டார். அதுமட்டுமல்ல. விமானம் தரை இறங்கிய பின் விமான நிலைய போலீஸிடமும் புகார் கொடுத்துவிட்டார். (வேடிக்கை என்னவென்றால் அந்தப் பெண் வட இந்தியாவைச் சேர்ந்தவர்) நண்பன் கைது செய்யப்பட்டான். விசாரணைக்குப் பிறகு அன்றைய தினமே அவன் விடுதலை செய்யப்பட்டாலும் **FBI** அந்த வழக்கை எடுத்துக் கொண்டு அவனை நீதிமன்றத்தில் நிறுத்தியது. இப்போது அவன் அந்த வழக்குக்காக எக்கச்சக்கமாக செலவு செய்து கொண்டிருக்கிறான்.

அமெரிக்காவில் பெண்ணுரிமை எப்படியிருக்கிறதென்று பாருங்கள். இந்தச் சம்பவத்தோடு தமிழ்நாட்டுப் பெண்களின் நிலையை ஒப்பிட்டுப் பார்க்கிறேன்.

பெண், ஆண் என்று அல்ல-மனிதர்களின் மனோபாவம் மாறியாக வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. சரி, ஆடம் டீஸிங் சம்பவம் பற்றி அங்கே கேள்விப்பட்டிருக்கிறீர்களா? எனக்கு எப்போதுமே பெண்கள் கூட்டம் என்றால் மிகவும் பயம். ஏனென்றால் நான் மிகவும் மென்மையானவன் (என்னைப் பற்றி நல்லதாகச்சொல்ல கிடைத்தது ஒரு வாய்ப்பு!) எனவே நான் பைக்கில்தான் செல்வது வழக்கம். எப்போதும் பெண்கள் கூட்டத்தையும் தவிர்த்து விடுவேன். ஆனால் என் சகோதரி கதை கதையாகச் சொல்லுவாள். பைக்கில் செல்லும் இளைஞர்கள் எப்படியெல்லாம் அவளை பயமுறுத்துவார்கள் என்று. அதிலும் கார் என்றால் இன்னும் மோசம். இடித்து விடுவது போல் வேகமாக வந்து திடீர் பிரேக் போட்டு நிறுத்தும் போது நெஞ்சே வெடித்துவிடும் போலிருக்கும் என்று சொல்வாள். இதிலெல்லாம் என்ன 'த்ரில்' இருக்க முடியும் என்று என்னால் கற்பனையே செய்ய முடியவில்லை.

பத்ரி பார்ப்பதற்கு நடிகர் மாதவனை போல் இருப்பார் என்பதால் பயப்பட வேண்டியது அவசியம் தான். ஆனால் நம்முடைய கேஸ் அப்படியல்ல. அவந்திகாவைப் பார்ப்பதற்கு முன்பு வரை முகத்தில் வால்ரஸ் மீசை. அல்லது நீட்ஷே மீசை. பின்னால் ஒரு அடி நீல கூந்தால். அதை இறுக்கி ரப்பர்வளை போட்டிருப்பேன். கிழிந்து அழுக்கான ஜீன்ஸ். பார்ப்பதற்கு சினிமா வில்லனைப் போல் இருப்பேன். எந்தப் பெண்ணுக்கு கிண்டல் செய்ய துணிச்சல் வரும்?

ஆனால் அவந்திகா திருமணப்பரிசாக என் கூந்தலைக் கேட்டுவிட்டாள் (தஹசிக் ச்கி பீகுக் நூச்ஷநி!) அதன் விளைவுதான் மதுரை சித்திரைத் திருவிழாவில் நடந்தது. அதாவது, கூட்டத்தில் சிக்கி மூச்சு விட முடியாமல் மரண அவஸ்தையில் திணறிக் கொண்டிருந்த போது, கிட்டத்தட்ட அதே நிலைமையில் இருந்த ஒரு பெண் என்னைப் பார்த்து ''இடிக்காதீர்கள்'' என்று சொன்ன சம்பவம். இதெல்லாம் 'ப்ளாக் ஹ்யூமர்' வகையைச் சேர்ந்தது.

கடைசியில் வாசகர்களுடன் நானும் 'சாட்டிங்'கில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. புதியதொரு அனுபவமாகவே இருந்தது. ஹவாயிலிருந்து சந்திரமதியும், ஜெர்மனியிலிருந்து ப்ரியாவும் கலந்து கொண்டார்கள். இடையில் மஸ்கட்டிலிருந்து சுந்தரும், பாங்காக்கிலிருந்து சீனிவாசன், மாதையனும் வந்து சென்றார்கள். '' சீக்கிரம் முடியுங்கள், கடைசி பஸ் போய்விடும், அப்புறம் நான் நடந்தே தான் என் அறைக்குச் செல்ல வேண்டும், அதற்கு மேல் சமையல் வேறு செய்ய வேண்டும்'' என்று கதறினார் குமரேசன். ''சரி, டாட்டா.. நீங்கள் போய் சமைத்துச் சாப்பிடுங்கள். நாங்கள் சாட்டிங்கை தொடர்கிறோம்'' என்று சொன்னால் மனிதருக்கு இஷ்டமில்லை. கடைசியில் பஸ் வரும் நேரமும் தாண்டிவிட்டது. குமரேசனும் போகவில்லை இடையில் **ASL** என்ற வார்த்தை தட்டுப்பட்டது. ஏஜ், செக்ஸ், லொகேஷன் என்பதன் சுருக்கமாம். எனக்கு இந்த **ASLஇல்** ஈடுபாடு இல்லை. அதை ஏன் கேட்க வேண்டும் என்று தோன்றுகிறது. இன்னும் எனக்கு மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளும் பல வாசகர்கள் ஆணா, பெண்ணா என்றே தெரியாது. உதாரணமாக, ஸ்ல்ஸா நடனக் கலைஞர் சத்யா கிருஷ்ணமூர்த்தி. அதேபோல், வயது. இங்கிலாந்து வாசகியின் கடிதங்களைப் படிக்கும் போது அவர் வயது நிச்சயம் ஐம்பதுக்கு மேல் இருக்கும் என்று யூகித்தேன். அதை அவருக்கு எழுதவும் செய்தேன்- இந்த மாதிரி தாத்தா பாட்டிகளுடன் விவாதிக்க எனக்கு ஆர்வமில்லை என்று. ''என்னது ஐம்பது வயதா, கீசி விடுவேன் கீசி.. என் வயது இருபத்து நான்காக்கும்'' என்று பதில் வந்தது இ.வாசகியிடமிருந்து.

நேற்றைய தினம் நைஜீரியாவிலிருந்து 'சேட்டிங்'கில் என்னைப் பிடித்தார் நாகராஜன். அவர் சொன்ன ஒரு தகவல் சுவாரசியமாக இருந்தது. நைஜீரியாவில் பல தமிழர்கள் கோணல் பக்கங்களைப் படித்து வருகிறார்களாம்.

எடிட்டிங் அறையில் நேற்று ராஜேஷ்வருடன் அவர் இயக்கிய கோவில்பட்டி வீரலட்சுமி படம் பார்த்தேன். இன்னும் பாடல்கள் சேர்க்கப்படவில்லை. சிம்ரனின் மழலைத் தமிழ் மிக அழகாக இருந்தது. அவருக்கு 'டப்பிங்' கொடுப்பதாக இல்லை என்றார் ராஜேஷ்வர். டப்பிங் கொடுத்தால் பரிசுக்கான பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்கள். படம் இதே வடிவத்தில் வெளியே வந்தால் திரைப்பட விழாக்களில்கூட கலந்து கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. தணிக்கை அதிகாரிகள் விடுவார்களா என்று தெரியவில்லை.

படத்தின் இப்போதைய வடிவத்தில்-இதைப் போன்றதொரு படத்தை தமிழில் இதுவரை நான் பார்த்ததில்லை. காமெடி என்கிற பைத்தியக்காரத்தனம் இல்லை. க்ரூப் டான்ஸ் என்கிற அபத்தம் இல்லை. ஹீரோ இல்லை. ஹீரோயின் இல்லை. வில்லன் இல்லை.

அரசின் அடக்கு முறை எந்திரமான போலீசால் ஒரு தலித் குடும்பம் எவ்வாறெல்லாம் துன்புறுத்தப்பட்டு சிதைந்து சின்னாபின்னமாகிறது என்பதே கதை.

முதல் காட்சியிலேயே வீரலட்சுமி (சிம்ரன்) தன்னைத் தாக்க வரும் போலீஸ்காரனின் குறியைப்பிடித்து நசுக்கிக் கொல்வது போன்ற காட்சி. மற்றொரு காட்சியில் போலீசால் தாக்கப்பட்டு குற்றுயிராய்க்கிடக்கும் தலித் ஒருவன் ''தண்ணீர், தண்ணீர்'' என்று கேட்டுத் தவிக்கும் போது ஒரு போலீஸ்காரன் அவன் முகத்தில் சிறுநீர் கழிக்கிறான். இதெல்லாம் தமிழ்நாட்டு கிராமப்புறங்களில் இன்று அன்றாட நிகழ்வுகள். சில தினங்களுக்கு முன்பு திண்ணியம் என்ற ஊரில் தலித்துகள் சிலரை நரகல் தின்ன வைத்திருக்கிறார்கள் உயர் சாதியினர். பழுக்கக் காய்ச்சிய சூட்டுக்கோலை வைத்துக் கொண்டு தின்னாவிட்டால் சூடு போட்டு அக்காரியத்தைச் செய்திருக்கிறார்கள். செய்தவர்களுள் முக்கியமானவர் ஒரு பள்ளி ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

படத்தில் சிம்ரன் மிகவும் ஒத்துழைத்ததாகக் கூறினார் ராஜேஷ்வர். ஷூட்டிங்கில் ஒரு நாள் 'டம்மி' அரிவாள் வந்து சேரவில்லை. நிஜமான வீச்சரிவாள்தான். ஷூட்டிங்கை ரத்து செய்துவிடலாம். அல்லது நிஜ அரிவாளோடு தொடரலாம். ராஜேஷ்வர் வேண்டாம் என்று சொல்லியும் சிம்ரன் நிஜ அரிவாளுடன் அந்தக் காட்சியில் கலந்து கொண்டார் என்றார் ராஜேஷ்வர். அந்த அளவுக்கு தொழிலில் சிரத்தை இருந்தால் தமிழ் சினிமா பிழைத்துவிடும் என்று நினைத்துக்கொண்டேன்.

தலித்துகளின் வாழ்க்கைப் போராட்டத்தை உக்கிரமாகச் சொல்லும் ஒரு படம் கோவில்பட்டி வீரலட்சுமி.

21.8.2002

இங்கே செக்ஸ்
வெளிப்படையான ஒரு விஷயம்

அரட்டைக் கச்சேரி படு சுவாரசியமாகப் போய்க் கொண்டிருக்கிறது. உலகின் பல்வேறு மூலைகளில் வாழும் தமிழ் வாசகர்களுடன் பேசுவது வித்தியாசமான அனுபவமாக உள்ளது.

ஜெர்மன் குமரேசன் மகா கிண்டல் பேர்வழி என்று நினைக்கிறேன். நேற்று நடந்த உரையாடல்.

'கொஞ்ச நேரத்துக்கு முன்பு அரட்டையில் வந்தேன். ஏன் பதில் கொடுக்கவில்லை?' இது குமரேசன்.

'அடடா.. ப்ரியாவுடன் பேசிக் கொண்டிருந்தேன். கவனிக்கவில்லை'

'எந்த ப்ரியா?'

'அடப்பாவி.. எந்த ப்ரியாவா? இரு, ப்ரியாவிடம் சொல்கிறேன்'.

‘இல்லை.. நியூ ஜெர்ஸி ப்ரியாவை எனக்குத் தெரியும். ஆனால் நான் கேட்டது எதற்கென்றால்... உங்களுக்குத் தான் ஏழெட்டு ப்ரியாவை தெரியுமே... அதனால் தான் எந்த ப்ரியா என்று கேட்டேன்.

எப்படியிருக்கிறது கதை?

மற்றொறு நாள். குமரேசனிடம் ஒரு வாசகி பற்றி குறிப்பிட்டு ‘அவரது அறிவு என்னை வியக்கச் செய்கிறது. ரொம்ப நல்ல பெயர்‘ என்றேன். உடனே குமரேசன் ‘தெரியும்மா உன்னை..பொண்ணுங்கன்னா பாசம் பொங்கி வழியுமே உமக்கு‘ என்றார்.

‘அது எப்படி உங்களுக்கு தெரியும்?‘

‘பாம்பின் கால் பாம்பறியும்!‘

குமரேசனுடன் அரட்டை அடிக்கும் போது யாரும் என்னை பைத்தியம் என்று நினைத்து விடுவார்களோ என்று பயமாக உள்ளது. அந்த அளவுக்கு வாய் விட்டுச் சிரிக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் தான் இப்படிபட்ட குசும்புப் பேர்வழிகளை அதிகம் பார்த்திருக்கிறேன். அருப்புக் கோட்டையிலுமா? (குமரேசனின் சொந்த ஊர்)

நேற்றைய அரட்டையில் ஏகப்பட்ட புது நண்பர்கள் சிக்கினார்கள். டோக்யோவிலிருந்து சீனிவாசலு. டோக்யோ அனுபவங்களை விலாவாரியாகச் சொல்லி கொண்டிருந்தார். என் முதல் கேள்வி- என்ன செய்வது என்னுடைய கிரகம் அப்படி. ‘அது ஒரு பெரிய செக்ஸ் நகரம் என்கிறார்களே, உண்மையா?‘

‘உண்மை தான். இங்கே செக்ஸ் என்பது மிகவும் வெளிப்படையான ஒரு விஷயம்‘

‘பச்சை மீன் சாப்பிட்டிருக்கிறீர்களா?‘

‘சாப்பிட்டிருக்கிறேன். சுஷி என்று சொல்வார்கள்‘

‘மதம், கடவுள் விஷயமெல்லாம் எப்படி?‘

‘ம்ஹூம்.. யாருக்கும் அதைப் பற்றி கவலையில்லை. புத்தாண்டு தினத்தின் போது மட்டும் கோவிலுக்குப் போவார்கள்‘

‘அங்கே என்ன அப்படி ஒரு விலையாக இருக்கிறது?‘ எல்லோரும் மில்லியனில் பேசுகிறார்கள். காலை உணவுக்கு 2000 யென் என்கிறார்கள்?‘

அதற்கு அவர் சொன்ன பதில் சுவாரசியமாக இருந்தது. நாம் நூறு பைசா என்பதை ஒரு ரூபாய் என்கிறோம். நூறு ஒரு ரூபாயை நூறு ருபாய் என்கிறோம். ஆனால் அங்கே நூறு யென் என்றும், ஆயிரம் யென், பத்தாயிரம் யென் என்றும் தான் சொல்கிறார்கள். விலை சற்று அதிகம் தான், ஆனால் உணவு மிக மலிவாகவும் கிடைக்கும் என்றார் சீனிவாசலு.

‘அகிரா குரோசவா படம் பார்த்திருக்கிறீர்களா?‘ என்று கேட்டேன்.

‘ஜப்பானின் சீரியஸ் சினிமாவில் எனக்கு ஈடுபாடு இல்லை‘ என்றார்.

ஜப்பானிய மொழியைச் சரளமாகப் பேசுவாராம். தொடர்ந்து சவூதி அரேபியாவிலிருந்து (ரியாத்) கே.வி.ராஜா தொடர்பு கொண்டார்.

சவூதி அரேபியாவின் பெண்களைப் பற்றி விசாரித்தேன். 'அங்கே பெண்கள் ரொம்ப அழகாக இருப்பார்களாமே?'

'எவன் பார்த்தான்?'

'ஏன்?'

'ஏனா? தலையை வெட்டி விடுவார்களே? உங்களை மாதிரி ஆட்கள் இங்கே தலை காட்டவே முடியாது.. நீட்டினால் வெள்ளிக்கிழமையன்று தலையை வெட்டிவிடுவார்கள்'

'என்னய்யா இது, முடி வெட்டுவது மாதிரி பேசுகிறீர்கள்?'

'இல்லை நிஜம் தான். பல தலைகள் உருளுகின்றன'

'நேரில் பார்த்திருக்கிறீர்களா?'

'அந்தக் கண்றாவியை நேரில் வேறு பார்க்க வேண்டுமா?'

'எனக்குப் பார்க்க வேண்டும்'

'உங்கள் தலை வெட்டப்படுவதை நீங்களே எப்படிப்பார்க்க முடியும்?'

'அடப்பாவி!'

'நான் தான் சொன்னேனே.. உங்களை மாதிரி ஆட்கள் இங்கே வந்தால் தலையை வெட்டி விடுவார்கள்'

இல்லை இல்லை. நான் இங்கேயே வெட்ட வேண்டியதை வெட்டிக் கொண்ட பிறகு தான் அங்கே தலையையே காட்டுவேன். பிரச்சினை வராது ... சரி, அங்கே ஆண்கள் தானே வரதட்சணை கொடுக்க வேண்டும்?'

'ஆமாம்.. மிகப் பெரிய தொகை. அதனாலேயே பெண்களுக்கு இங்கே திருமணமாக முப்பதுக்கும் மேல் வயதாகி விடுகிறது.

'கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதுவரை அவர்களுக்கு செக்ஸ்?'

'அதற்குத் தான் வீட்டோடு டிரைவர்கள் இருக்கிறார்களே''

'அப்படியா.. அடடா.. எனக்கு அங்கே ஒரு டிரைவர் வேலை வாங்கிக் கொடும் அய்யா'

'வாங்கலாம். ஆனால் உங்களுக்குத் தான் சைக்கிளே ஓட்டத் தெரியாது என்று எழுதியிருந்தீர்களே?'

(அடப்பாவி, என்ன ஒரு ஞாபகசக்தி!)

‘சரி, இருக்கட்டும்.. அந்த டிரைவர்களின் தலைகளை வெட்டி விடமாட்டார்களா?‘

‘அதிகமாக வெளியே தெரியாது. மேலும் அந்த வேலைக்கு வெளியூர் ஆட்களை அமர்த்த மாட்டார்கள்‘

‘சரி.. உங்களுக்கு எத்தனை கேர்ள் ஃபரண்ட்ஸ்?‘

‘என்னது, கேர்ள் ஃப்ரண்ட்ஸா? ராமாயணம் பூரா கேட்டுட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாவன்னு கேக்குற மாதிரில்ல இருக்கு. இங்கே தான் சைட் அடிக்கக் கூட முடியாதே?‘

‘ஒஹோ‘

‘என்ன இருந்தாலும் நம்ம ஊர் பெண்கள் மாதிரி வராது‘

‘சீச்சீ.. ஃப்ரெஞ்ச் பொண்ணுங்க என்ன மாதிரி இருக்கிறார்கள் தெரியுமா? சாலைகளில்.. மெத்ரோவில்.. பார்க்கிற ஒவ்வொரு பெண்ணுமே ஐஸ்வர்யா ராய் ரேஞ்சில் இருக்கிறார்கள் அங்கே...‘

‘அப்படிப் பார்த்தால் இங்கே லெபனான் பெண்கள் தான் மிகவும் அழகு. கிழக்கும் மேற்கும் சரியான விகிதத்தில் கலந்த சிருஷ்டி. கொஞ்சம் ஃப்ரெஞ்ச் ‘டச்சும்‘ உண்டு. ஒன்று சொல்ல மறந்து விட்டேனே.. இங்கே யாருக்கு பெண் குழந்தைகள் அதிகம் உண்டோ அவர் நிச்சயமாக பெரும் பணக்காரராகி விடலாம்.. இது பற்றிய ஒரு ஜோக் உண்டு.

‘ப்ளீஸ்‘

‘மூன்று நண்பர்கள் ஒன்றாகப் பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். இரவு வந்தது. எங்கே தங்குவகென்று பார்த்த போது அங்கே ஒரு பண்ணை வீடு தென்பட்டது. வீட்டுக்காரரிடம் மூன்று பேரும் போய் இங்கே ஒரு இரவு தங்கிக் கொள்ள அனுமதி கேட்டனர். வீட்டுக்காரருக்கு பதினெட்டு புத்திரிகள். அவர் அந்த மூன்று பிரயாணிகளிடமும் சொன்னார்.. ‘ ஒருத்தர் என் பன்றித் தொழுவத்தில் படுத்துக் கொள்ளலாம். மற்றொருத்தர் என் மாட்டுத் தொழுவத்தில்... மூன்றாவது ஆள் என் மகள்களோடு படுத்துக் கொள்ளலாம்‘ என்றார். மறு நாள் பொழுது விடிந்து மூவரையும் கேட்டார் எப்படிக் கழிந்தது நேற்றைய பொழுது என்று. ஒருத்தன் சொன்னான்.. ஐயோ உடம்பு பூராவும் ஒரே பன்றி நாற்றம் சகிக்கவில்லை. மற்றொருவன் சொன்னான் ஐயோ என் உடம்பு பூராவும் மாட்டுச்சாணி நாற்றம் தாங்க முடியவில்லை. மூன்றாமவன் என்ன சொன்னான்? எழுதத் தயக்கமாக உள்ளது. நீங்கள் விருப்பப்பட்டால் சொல்கிறேன்.

என்ன ஒரு கொடுப்பினை!

நேற்று முன்தினம் இரவு எட்டு மணியளவில் தொலைபேசியில் பேசிய சுப்ரா சென்னை வந்திருப்பதாகச் சொன்னார். தொலை தூர தேசம் ஒன்றில் வாழ்பவர். உத்தியோக நிமித்தமாக உலகம் முழுதும் சுற்றிக் கொண்டேயிருப்பவர். அவருடனான முதல் அஞ்சலே சண்டையில் ஆரம்பித்து பிறகு நெருக்கமான நட்பாக மாறிவிட்டது. (சிலருடன் பிரியமாக ஆரம்பித்து பிறகு சண்டையில் முடிந்ததும் உண்டு) ‘ இன்று ஒரே இரவு தான்

சென்னையில் இருப்பேன். நாளை டோக்யோ. உங்களை உடனே பார்க்க முடியுமா? உங்களுக்கும் மணிக்கும் பழக்கமான சோழா ஷெரட்டனில் தான் தங்குவேன்' என்றார்.

இரவு எட்டு மணிக்கு மேல் வெளியே கிளம்புவதில் எனக்குப் பொதுவாக ஆர்வம் உண்டாவதில்லை. ஆனால் சுப்ராவை இப்போது விட்டால் பிறகு எப்போது பார்க்க முடியுமோ?

கிளம்பும் போது அவந்திகா சொன்னாள், 'இப்படி எட்டு மணிகு மேல் டீ ஷர்ட்டை மாட்டிக் கொண்டு கிளம்ப, அடுத்த ஜென்மத்திலாவது ஆணாகப் பிறக்க வேண்டும்'.

ஆனால் எனக்கோ அடுத்த ஜென்மத்தில் பெண்ணாகப் பிறக்க வேண்டுமென்பது தான் ஆசை. மடோனா மாதிரி ஒரு கலக்கு கலக்க வேண்டும். முக்கியமாக காமப் பாலையில் வெந்து கொண்டிருக்கும் சிறு பத்திரிகை எழுத்தாளர்களைக் கடைத் தேற்ற வேண்டும். இப்படிப் பல திட்டங்கள் உள்ளன.

சுப்ரா என் வயது குறித்தும் நான் அவரது தாடி பற்றியும் பரஸ்பரம் ஆச்சரியம் தெரிவித்துக் கொண்டோம். வயது தெரியாததன் காரணம் - ஏற்கனவே எழுதிய படி என் உணவுப் பழக்கமும் உடற்பயிற்சியும். இன்றைய தினம் காலை உணவு - மூன்று கொய்யாப் பழம் மற்றும் ஒரு மாதுளை. மதிய உணவு - மூன்று கட்டு மணத்தக்காளிக் கீரை (பச்சையாக அல்ல, அவித்தது) மற்றும் இரண்டு ஸ்பூன் சோறு.

சுப்ராவின் தாடி கபீர் பேடியை ஞாபகப்படுத்தியது. 'உண்மை தான். அவர் தான் இதற்கு இன்ஸ்பிரேஷன்' என்றார் சுப்ரா.

நமக்கு இப்படி ஒரு தாடி வளரவில்லையே என சுய இரக்கம் ஏற்பட்டது. எனக்கு முகத்தில் வளர்வதற்கு பதிலாக இடம் மாறி முகவாய்க்கட்டையில் வளர்வதால் (பார்க்க செம்மறியாடு மாதிரி இருக்கும்) தாடி வளர்ப்பதில் பிரியமில்லை.

எப்படித் திருப்பிச் செல்வது என்ற கவலை ஏற்பட்டது. வரும் போது ஆட்டோவில் வந்துவிட்டேன். ஆனால் நடு இரவில் திரும்பும் போது ஆட்டோவில் செல்வது வம்பை விலை கொடுத்து வாங்குவதற்குச் சமம். போலீஸ் தொல்லை அதிகம். என்ன சொன்னாலும் கேட்கமாட்டார்கள். ஸ்டேஷனிலேயே 'விருந்தினராக' உட்கார்த்தி வைத்து விட்டு கலையில் தான் விடுவார்கள். இரண்டு சக்கர வாகனம், ஆட்டோ என்றால் சந்தேகமில்லாமல் சந்தேகக் கேஸ் தான். என்ன தான் மணி பெயரையே சொன்னாலும் 'பீலா' விடுவதாகத் தான் சொல்லுவார்கள். ரொம்பவும் அனுபவப்பட்டிருக்கிறேன்.

அதிலும் போதையில் நான் எப்படி பதில் சொல்வேன் என்று அனுமானிக்கவும் முடியாது. பொதுவாக, போலீஸ் என்றாலே எனக்குத் தொடை நடுங்கும் என்றாலும் போதையின் காரணமாக அடக்கப்பட்ட சீற்றம் பீறிட்டுவிட்டால் நிச்சயம் ஆபத்து தான். பின்னியெடுத்து விடுவார்கள்.

சுப்ராவிடம் சொன்னேன். 'அதெல்லாம் கவலையில்லை. சோழாவின் காரிலேயே கொண்டு விட்டு விடுவார்கள்' என்றார்.

பார் வேண்டாமென்று சுப்ராவின் அறையிலேயே 'கச்சேரி' யைத் துவக்கினோம். மணிக்குப் பிடித்த ஜானிவாக்கர் ப்ளாக் லேபல். உடன் சாப்பிட எனக்குப் பிடித்த பன்றி இறைச்சி.

இரவு இரண்டு மணி வரை பேசிக் கொண்டிருந்தோம். இடையிடையே அவருக்கு பல நாடுகளிலிருந்தும் தொலைபேசி வந்து கொண்டேயிருந்தது. பல ரசமான தகவல்கள். பாவி மனிதர், எதையுமே எழுதக் கூடாது என்று சொல்லிவிட்டார். அதிலும் குறிப்பாக தமிழக தினசரிகளில் தலைப்புச் செய்தியாக வரக் கூடிய ஒரு தகவல். டாக்டர் ராமதாசுக்கும், குறிப்பாக தமிழக அரசியலுக்குமே உதவக் கூடிய தகவல் அது. எழுத மாட்டேன் என வாக்குக் கொடுத்துவிட்டேன். போதையில் கொடுத்த வாக்கு தான், மீறி விடலாமா என கை பரபரக்கிறது. ஆனாலும் கொடுத்த வாக்கை மீறி எனக்குப் பழக்கமில்லை.

சோழாவின் காரில் இரண்டு மணிக்கு மேல் திரும்பும் போது வழக்கம் போலவே நான் எதிர்பார்த்த இடத்தில் போலீஸ் குறுக்கிட்டது. 'சோழாவிலிருந்து வருகிறோம்' என்றதும் சல்யூட் அடித்து அனுப்பிவிட்டனர்.

இப்படி பின்னிரவு நேரத்தில் திரும்பினால் காலையில் வழக்கம் போல் ஐந்தரைக்கு எழுந்து எரோபிக்ஸிற்குச் சென்று ஆட்டம் போடுவதில்லை. சாவகாசமாக எட்டு மணிக்குத் தான் எழுந்து கொள்வேன். ஆனால் நேற்று காலை ஆறு மணிக்கெல்லாம் எழுப்பி விட்டுவிட்டாள் அவந்திகா. காரணம் - நியூ ஜெர்ஸியிலிருந்து ப்ரியாவின் தொலைபேசி.

எனக்கோ தூக்கக் கலக்கம். மயக்கம். என்ன பேசினேன் என்பது தெளிவாக ஞாபகமில்லை. ஆனால் ப்ரியாவின் குரல் சங்கீதக் குரல் என்பது மட்டும் ஞாபகம் இருக்கிறது. இவ்வளவு இனிமையான குரலுக்குரியவர் ஏன் பாடகியாக வில்லை?

'ம்.. நன்றாகப் பாடுவேன்' என்றார் ப்ரியா. அவர் அம்மாவும் சங்கீத ஆசிரியை தானாம். பிறந்தது, வளர்ந்தது, படித்தது எல்லாம் திருவையாறு (ஓஹோ.. அது தானா விஷயம்?)'.

'பொதுவாக இந்தியப் பெண்கள் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் வாயைத்திறந்தால் போச்சு ' என்பார்கள் ஐரோப்பியர்கள். ப்ரியா விதிவிலக்கு.

'ஆனால் இங்கே அமெரிக்காவில் பெண்களுக்கு டீன் ஏஜிலேயே சற்று முரட்டுக்குரல் வந்து விடுகிறது. நாம் பரவாயில்லை' என்றார் ப்ரியா.

சங்கீதக் குரல் என்றதும் எனக்கு கிஷோரி அமோங்கர், பர்வீன் சுல்தானா மற்றும் தற்போதய சபீதா பர்வீன் போன்றவர்களின் குரல் ஞாபகம் வருகிறது. மற்றொரு குரலும் கூட. பெயர் சொல்லக் கூடாது. அந்தப் பெண்ணின் குரல் அவ்வளவு வசீகரமாக இருக்கும். ஒரு நாள் அவரிடம் தொலைபேசியில் பேசிவிட்டு வந்த ரேஷ்மா சொன்னாள்: 'அப்பா, இந்த அக்காவுடன் ஹண்ட்ரட் டேஸ் பேசிக்கிட்டிருக்கணும்ணு தோணுது'

ஆச்சரியத்துடன் ஏனென்று கேட்டேன்.

'அவங்க குரல் அவ்வளவு ஸ்வீட்டா இருக்கு' என்றாள் ரேஷ்மா.

நியூ ஜெர்ஸியில் எனக்கு மிகவும் பிடித்த பாடகர் ப்ரூஸ் ஸ்ப்ரிங்ஸ்டீன் இருக்கிறார். அவரை பற்றியும் பேச்சு வந்தது. அவரை '**boss**' என்று அழைப்பார்களாம். எல்விஸ் ப்ரீஸ்லியை 'கிங்' என்று அழைப்பார்கள்.

இப்படி ஒரு மணி நேரம் பேசினோம். ஹதயோகம் பற்றியும் கடவுள் பற்றியும் நீண்ட உரையாடல். என்ன ஒரு கொடுப்பினை! ஒரு இளம் பெண்ணுடன் அரைத்தூக்கதில் கடவுள் பற்றிய பேச்சு!.

Presentation

By

Ek.Senthil

Ek_senthil@hotmail.com